

www.tamilarangam.net



223

# ஈழப் போர்முனையில் புலிகளுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழப்

# போர் முனையில் — புலிகளுடன்

பழ. நெடுமாறன், எம்.ஏ.

தமிழ்க்குலம் வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலை :ரூ. 35/-

முதற்பதிப்பு : மார்ச், 1987.

இரண்டாம் பதிப்பு: மே, 1990.

"Eela Pormunaiyil Pulikaludan"
by Nedumaran, M.A.,
© P. Nedumaran .

First Edition: March, 1987
Second Edition: May, 1990

Pages: 352
Cms: 21x14
Box Board Binding

Printed at :
**VIVEKANANDA PRESS, MADURAI.**


PUBLISHERS :
TAMIL-KULAM PUBLISHERS,
48, West masi Street,
MADURAI-625001
Price : Rs. 35/-

அச்சிட்டோர் :

விவேகானந்தா அச்சகம்

48, மேலமாசி வீதி,

மதுரை 625 001.



லிங்கம்



விக்டர்

# கண்ணீர் அஞ்சலி

**"போர்முனையில் புலிகளுடன்"** என்னும் நூலினைப்படிக்கத் தொடங்குவதற்கு முன்பாகக் கண்ணீர் அஞ்சலி செலுத்த வருமாறு உங்களை அழைக்கிறேன்.

ஈழப் பயணத்தின்போது இரவும்-பகலுமாக, ஊண்-உறக்கம் இல்லாது கண்ணினை இமை காப்பதைப்போல என்னைக் காத்த அருமைத் தம்பிகளில் பலர் இன்று இல்லை. இந்நூலினை எழுதி முடிப்பதற்குள் அவர்கள் வீரச் சாவினை அணைத்துக்கொண்டு தமது வாழ்வையே முடித்துக்கொண்டார்கள். அவர்களின் சாவை நினைக்க நினைக்க என் நெஞ்சம் குமுறுகிறது.

தமிழகத்திலிருந்து என்னை அழைத்துச் சென்று மீண்டும் பத்திரமாகத் தமிழகம் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பினையேற்றிருந்த விடுதலைப் புலிகளின் அதிரடிப் படைத் தளபதியாக விளங்கியவர் **காப்டன் லிங்கம்.** எனது சுற்றுப் பயணத்தைத் திட்டமிட்டு அவர் நடத்திய விதமும், விடுதலைப் புலிகள் இயக்கத் தோழர்கள் அவரை நேசித்த முறையும் அவரைப் பற்றிய ஓர் உயர்வான எண்ணத்தினை என் உள்ளத்தில் ஏற்படுத்தியிருந்தது. காவல் நேரத்தில் கண்டிப்பும் இதர வேளைகளில் கனிவுமாகச் சக தோழர்களிடம் அவர் நடந்துகொண்ட முறை ஓர் அபூர்வ மனிதராக அவரை அடையாளம் காட்டியது. சிங்கள வீரர்களின் கொடுங்கரங்களினால் வீழ்த்த முடியாத அவரைச் சக இயக்கம் ஒன்றினைச் சேர்ந்த தோழர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்தனர் என்பதை அறிந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பபாது நெஞ்சம் வெடிக்கும் நிலைக்கு ஆளானேன். மனிதநேயம் மிகுந்த காப்டன் லிங்கம் தம்மை முழுமையாகத் தமிழீழ விடுதலைக்கு அர்ப்பணித்தவர். தலைவர் பிரபாகரனின் வீரமிக்க தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். மதுரை ''டெசோ'' மாநாட்டுக்கு முதல்நாள் அவரின் மறைவுச் செய்தி எனக்குக் கிடைத்தபோது நான் நிலை குலைந்துபோனேன்.

எப்போதும் புன்னகை தவழும் முகத்துடன் காட்சி தந்த **அர்ச்சனாவின்** நெடிய உருவம் என் மனக்கண்முன் இன்னமும் நிற்கிறது. வீடியோ காமிராவும் கையுமாக எனது சுற்றுப்பயணத்தில் அவன் உடன்வந்தான். எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டே இருந் தான். அவன் எடுத்த வீடியோப் படங்களின் மூலம்தான் ஈழ நாட்டின் உண்மை நிலையை உலகம் உணர்ந்தது. உலகிற்கு உண்மையை உணர்த்திய அவன் இன்று இல்லை. தமிழீழச் சுற்றுப்பயணத்தின்போது ஒருநாள் அவன் அளவுகடந்த மகிழ்ச்சியில் திளைத்துக்கொண்டிருந் தான். அதைப் பற்றி அவனிடம் நான் கேட்டேன். அப்போது அவன் சொன்ன பதில் இன்னமும் என் செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டி ருக்கிறது.

''அண்ணா நாளைக்கு நாங்கள் உயிரோடு இருப்போமோ இல்லையோ! எங்களுக்குத் தெரியாது. இன்று உயிரோடு இருக் கிறோம், இருக்கும்போதே சிரித்து மகிழ்கிறோம்'' என்று குழந்தை உள்ளத்தோடு குதூகலிக்கச் சொல்லிவிட்டு அவன் மீண்டும் சிரித்தான். அந்தச் சிரிப்பு என் செவிகளில் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது. மீண்டும் சிரிக்க அவன் இன்று இல்லை.

முல்லைத் தீவுப் பகுதி விடுதலைப் புலிகளின் தளபதியான **லாரன்சு**, நெடுங்கேணிப் பகுதித்தளபதியான **சபா**, மற்றும் **லலித், ஜீவன்** ஆகிய நான்கு இளைஞர்களும் முல்லைத் தீவு, நெடுங்கேணி பகுதிகளில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது **என்னுடனேயே** இருந்து நிழல்போலத் தொடர்ந்து என்னைக் காத்தார்கள். இந்த நால்வரும் என்னை யாழ்ப்பாணம் கொண்டுவந்து பத்திரமாகச் சேர்த்து விட்டுத் திரும்பிச் செல்லும் வழியில் சிங்கள இராணுவத்தின் கொலை வெறித் தாக்குதலுக்கு இரையாகி வீரமரணமடைந்தார்கள். யாழ்ப் பாணத்தில் வைத்து இந்தச் செய்தி எனக்குக் கிடைத்தபோது அதிர்ந்து போனேன்.

அதைப்போலவே மன்னார் மாவட்டத்திலுள்ள அடர்ந்தகாடு ஒன்றில் விடுதலைப் புலிகளின் முகாமில் நான் கண்ட இளம்புலி



**ரோஸ்மன்** சிங்கள வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியும் என் நெஞ்சத்தில் என்றும் ஆறாத வடுவை ஏற்படுத்திற்று.

இந்நூலினை நான் எழுதி முடித்தவேளையில் ஈழத்திலிருந்து மற்றொரு துயரமான செய்தி கிடைத்தது. மன்னார்ப்பகுதிப்புலிப்படைத் தளபதிவிக்டர் வீரமரணமடைந்த செய்தியறிந்து துடித்துப்போனேன். வீரக்களை நிறைந்த விக்டரின் முகம் இப்போதும் என் கண்முன்நிற்கிறது. ஈழமண்ணில் நான் இறங்கியபோது என்னை எதிர்கொண்டு வரவேற்றுப் பல பகுதிகளுக்கும் என்னை அழைத்துச்சென்று காட்டியவர் அவர். அஞ்சாமையும் துணிவும் அவருடன் பிறந்தவை. சிங்கள வீரர்களுக்குச் சிம்மசொப்பனமாக அவர் விளங்கினார். அவர் தலைக்கு 5 இலட்ச ரூபாய் விலை வைத்தது சிங்கள அரசு, ஆனால் மன்னார் பகுதி மக்கள் அவரைத் தங்கள் பிள்ளைபோல நேசித்தனர். தம்பி பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய நெருங்கிய சகாவாகத் திகழ்ந்தார். 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி **லெப். கர்னல் விக்டரும் கேப்டன் லிங்கமும்** மற்றும் சில தோழர்களும் மதுரையில் எங்கள் வீட்டிற்கு வந்து விருந்துண்டு நீண்டநேரம் பேசிவிட்டுச் சென்றனர். அதுவே எங்களின் கடைசிச்சந்திப்பாக இருக்கும் என்பதை நான் அன்று உணர வில்லை.

வீரத்தளபதி விக்டரின் மரணத்தையடுத்து மற்றொரு பேரிடி போன்ற செய்தி கிடைத்தது. கிழக்கு மாநிலத்தில் மூதூர்ப்பிராந்திய விடுதலைப்புலிகளின் தளபதியாகப் பணியாற்றிய **மேஜர் கணேஷ்** 5—11—86 இல்வீரமரணமடைந்த செய்தி என்னை அதிரவைத்தது. திருகோணமலைப் பகுதிக்கு நான் சென்றிருந்தபோது இந்த வீர இளைஞனைச் சந்தித்தேன். மறைந்த **மாவீரன் ஆசீர்சீலனின்** பள்ளித் தோழன். இவனது வீரசாகசங்களை அப்பகுதி மக்கள் கூற நேரில் கேட்டேன். கிளிவெட்டி என்னும் ஊரில் இருந்து 40 தமிழ்ப் பெண் களைக் கைதுசெய்த சிங்களப்போலீஸ் கொமொண்டோக்கள் அவர் களை**த்தெகிவத்தை** என்னும் சிங்களக்கிராமத்திற்குக் கொண்டு சென்று கற்பழிக்க முயன்றபோது ஐந்தே வீரர்களுடன் அங்கு விரைந்த மேஜர் கணேஷ் சிங்கள வெறியர்களை விரட்டியடித்துத் தமிழ்ப் பெண்களைச் சிறைமீட்ட நிகழ்ச்சி மெய்சிலிர்க்கும் வரலாறாகும்.

சிங்கள ஹெலிகாப்டர் ஒன்றினை முதன்முதலாகச் சுட்டுவீழ்த் திய பெருமைக்குரியவர் கணேஷ். சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தை எனக்குக் காட்டி அதன் உடைந்த பாகம் ஒன்றினையும் எனக்குப் பரிசாக அளித்தபோது அவன் முகத்தில்தான் எவ்வளவு பெருமிதம்! அந்த வீர இளைஞன் இன்று இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழத்தில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது இரவுபகலாக என்னைப் பாதுகாத்த வீரர்களில் ஒருவனான **கிறிஸ்டி** என்னும் வீர இளைஞனின் மரணச் செய்தியும் என்னை அளவுகடந்த சோகத்தில் ஆழ்த்தியது. புன்னகை மாறாத அவனது வீரத்திருமுகம் இன்னமும் என் கண்முன் நிற்கிறது.

தமிழீழத்தில் நான் சுற்றுப்பயணம் செய்த பரபரப்பு மிகுந்த அந்த நாட்களில் தங்கள் உயிர்களைத் துச்சமாக மதித்து என்னைக் காப்பாற்றுவதே தங்கள் கடமையெனக்கொண்டு அரும்பணியாற்றிய இந்த வீர இளைஞர்களுக்கு வாழ்நாளெல்லாம் கடன்பட்டவனாக நான் ஆகிவிட்டேன். இந்தத்தியாக மறவர்களின் வீர நினைவுகளை என் நெஞ்சப்பெட்டகத்தில் என்றும் வைத்துப் பாதுகாப்பேன்.

அபூர்வமான இந்தத் தியாக மலர்கள் முழுமையாக மலர்ந்து மணம் பரப்புவதற்குள் இறைவன் அவர்களை அழைத்துக்கொண்ட விதத்தை எண்ணி எண்ணி மனங்குமைகிறேன்.

**ஓ! வீரமே ஆரமாகவும் தியாகமே அணியாகவும் பூண்ட மரனமறவர்களே! உங்கள் தியாகம் ஈடுஇணையில்லாதது. ஒப்புவமை கூறமுடியாதது. உங்களின் பாதாரவிந்தங்களில் சிரம் தாழ்த்திக்கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகிறேன்.**









# மதிப்புரை

முத்தமிழ்க்காவலர்
**டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்**
அவர்கள்

**தமிழகத்தின் வரலாற்றில்** காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் அவர்களின் **தியாகப் பயணம்** பொன் எழுத்துக்களால் குறிக்கப் பெற்றிருக்கிறது. பல்லாயிரம் பேர்களுடன் அவர் செய்த தியாகப்பயணத்தை 1983-ஆம் ஆண்டில் நான் மதுரையிலிருந்து வழியனுப்பி வைத்தேன். ஆனால் அரசு அதைத் தடுத்து நிறுத்தி விட்டது.

அதைவிட ஒரு பெருந்தியாகப் பயணம் அவர் தனித்து நடத்திய தியாகப் பயணந்தான், "போர் முனையில் புலிகளுடன்" நடந்து சென்ற இத்தியாகப் பயணத்தை இந்நூல் முழுவதும் கண்டு மகிழலாம்.

நெருப்பின்மீது நடந்து செல்வது போன்ற அவரது தியாகப் பயணம் நமக்கு அச்சத்தை விளைவிக்கிறது. பயணத்தில் அவர் கண்ட காட்சிகள் நமது நெஞ்சத்தைச் சுடுகின்றன. சிங்கள மக்களின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் ஈழத்தமிழ் மக்கள் இடும் கூக்குரல்கள் நம் காதைத் துளைக்கின்றன.

மாவீரன் திரு. ப. நெடுமாறன் அவர்களின் இத்துணிச்சலான பயணம் நமக்குப் பழந்தமிழ் மன்னன் பாண்டியன் நெடுமாறனின் பயணத்தையே நினைவூட்டுகிறது.

இப்பயணத்தில் அவர் கண்டறிந்த காட்சிகளையும் கேட்டறிந்த செய்திகளையும் சிங்கள அரசின் கொடுமைகளையும் இந்நூல் முழுவதிலும் காணலாம். ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தும் பறிபோயிருக்கின்றன. அவர்கள் உண்ண உணவும் உடுத்த உடையும் குடிக்க நீரும் இல்லாமல் தவிப்பது மட்டுமல்ல; குடியிருக்கும் வீடுகளும் பயிரிடும் நிலங்களும் விற்பனை செய்யும் கடைகளும் வேலை செய்யும் தொழிற்சாலைகளும் படிக்கும் பள்ளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும் சிகிச்சைபெறும் மருத்துவ மனைகளும் வணங்கும் திருக்கோயில் களும் கூடத் தீக்கு இரையாக்கப்படுகின்றன. கணவனை இழந்தும் குழந்தைகளை இழந்தும் கற்பை இழந்தும் உயிரை இழக்கின்ற தாய் மார்களின் கதறல் நமக்குக் கேட்கிறது. இன்னும் இதுபோன்ற செய்திகள் பலவற்றை இந்நூலின் 34-ஆம்பக்கத்திலுள்ள "ஈழமண் சிவக்கிறது" என்ற தலைப்பிலும், 47-ஆம்பக்கத்திலுள்ள "சாத்மீகர் மனமாற்றம்" என்ற தலைப்பிலும், 57-ஆம்பக்கத்திலுள்ள "வவுனியா படுகொலை" என்ற தலைப்பிலும், 153-ஆம்பக்கத்திலுள்ள "நாசம் சர்வநாசம்" என்ற தலைப்பிலும் விரிவாகக் காணலாம்.

தலைவர் திரு. ப. நெடுமாறன் அவர்களை நான் இதுவரை காமராஜரின் தொண்டர் என்றும் ஓர் அரசியல்வாதி என்றும் ஓர் உயர்ந்த பேச்சாளர் என்றும், ஒரு நல்ல தமிழ்மகன் என்றும் மட்டுமே அறிந்திருந்தேன். ஆனால் இப்போது அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்றும், புலிப்படைகளுடன் கூடிய ஒரு போர்ப் படை வீரர் என்றும் அறிந்து மகிழ்கிறேன்.

ஈழத்துத் தமிழ்மக்கள் படும் துன்பங்களையும் வேதனை களையும் இதுவரை நான் அறிந்ததைவிட இந்நூலின் மூலம் அதிக மாக அறிந்து வருந்துகிறேன். இவை அனைத்தையும் அறிந்த இந் நூலாசிரியர் படும் வேதனையைவிட நான் அதிகமாக வேதனைப் படுகிறேன். இவற்றைப் படித்து அறியும் மக்களும் வேதனைப் படுவார்கள். நாம் வேதனைப்பட்டு என்ன செய்ய? நம்முடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதனால் வேறு எதையும் செய்யமுடியவில்லை.

நமக்கென்று தமிழகத்தில் ஓர் ஆட்சி இருந்திருந்தால் ஈழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அம்மக்களின் கண்ணீரைத் துடைத்திருக்க முடியும். மத்திய அரசும் கவலைப்படுவதைத் தவிர வேறு எதுவும் செய்வதாகத் தெரியவில்லை.

உலகில் உள்ள அரபு மொழி பேசும் மக்கள் எண்ணிக்கை 6 கோடி. அவர்களுக்கென்று உலகில் 22 நாடுகளும் ஐக்கிய சபை யில் 21 இடங்களும் இருக்கின்றன. தமிழ் மொழி பேசும் மக்களாகிய நாமும் 6 கோடி. நமக்கு உலகில் ஒரு நாடும் இல்லை. ஐக்கிய நாட்டு சபையில் ஒரு இடமும் இல்லை. என் செய்வது? இந்தியாவில் இல்லாவிட்டாலும் இலங்கையிலாவது தமிழனுக்கு ஒரு நாடு இருக்கிறது என எண்ணி மகிழலாம். அதுவும் முடியவில்லை.

இவையெல்லாம் இல்லாவிட்டாலும் தமிழகத்தை உள்ளிட்ட கூட்டுச்சேரா நாடுகள் சபையும், அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாட்டு



சபையும் சிங்கள அரசின் மனிதாபிமானமற்ற செயல்களைப் பார்த்துக் கொண்டு அதைத் தடுக்க ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதே நமக்குப் பெரும் வேதனையைத் தருகிறது.

ஈழநாட்டிலுள்ள இளைஞர்களுக்கு எவருடைய ஆதரவும் இல்லை; ஆட்சியுமில்லை; அரண்மனையுமில்லை; ஆயுதங்களும் இல்லை; கடற்படையும் இல்லை; விமானப் படையும் இல்லை; ஆனால் இத்தனையும் நிறைந்துள்ள இலங்கை அரசின் முப்படை களையும் நேருக்கு நேர் சந்தித்து ஆண்டுக்கணக்கில் போராடிக்கொண் டிருக்கின்ற இப்புலிப் படை இளைஞர்களின் வீரம், புறநானூற்று மக்களின் போர் வீரம் இன்னும் தமிழ் மக்களிடம் இருக்கிறது என்ப தையே காட்டுகிறது. இது வாழ்த்துதலுக்கும் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது.

**"நியாயமான காரணத்தை முன்வைத்துப் போராடுகின்ற எவரும் வெற்றியை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதில்லை. அது அவர்களின் காலடியில் தானாகவே வந்துவிழும்"** என்பது நல்லறிஞர்களின் வாக்கு. இதைத்தான் உயிரைப் பணயம் வைத்துப் போராடும் புலிப்படை வீரர்களுக்கும், அவர்களுக்குத் துணையாக நின்று பணிபுரியும் தலைவர் நெடுமாறன் அவர்களுக்கும் நாம் இப்போது கூறமுடியும்.

"போர் முனையில் புலிகளுடன்" என்ற இந்நூலின் ஆசிரியர் திரு. ப. நெடுமாறன் எம். ஏ., அவர்கள் இன்னும் இதுபோன்ற நூல்கள் பலவற்றை எழுதித்தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கி உதவ வேண்டு மெனவும் தமிழக மக்கள் இதனைப் படித்துப் பயனடைய வேண்டு மெனவும் போராடுகின்ற ஈழமக்கள் வெற்றியை விரைந்து பெற வாழ்த்த வேண்டுமெனவும் அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவிபுரிய வேண்டுமெனவும் வேண்டிக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி-8 தங்களன்பிற்குரிய,
**10-2-1987.** **கி.ஆ.பெ. விசுவநாதம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

எனது வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகவும் எனது அரசியல் தொண்டுகளில் குறிப்பிடத்தக்க தொண்டாகவும் நான் கருதுவது ஈழநாட்டில் மேற்கொண்ட பயணமேயாகும். இதை ஒரு சாகசச் செயலாக நான் கருதவில்லை. இவ்வாறு மற்றவர்கள் கருதுவதையும் நான் விரும்பவில்லை. உள்ளார்ந்த உணர்வின் அடிப்படையில் எழுந்தது இப்பயணம். நம்மோடு இரத்த பந்தம் உடையவர்கள், நம்முடைய உறவினர்கள் படுகொலை செய்யப்படும் போது ஏற்பட்ட இயற்கையான பதைப்பின் விளைவாக எழுந்ததே இந்தப் பயணமாகும்.

1985 ஆம் ஆண்டு அக்டோபரில் இப்பயணம் நடைபெற்றது. அதற்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் அருமைத் தம்பி திரு. **பிரபாகரன்** அவர்களிடம் எனது இந்த விருப்பத்தினை வெளியிட்டபோது அவர் அவ்வளவு சுலபமாகச் சம்மதிக்கவில்லை. ஆனாலும்கூட எனது வேண்டு கோளினைப் பரிசீலனை செய்ய அவர் ஒப்புக் கொண்டது எனக்கு ஆறுதலளித்தது. இந்தப் பயணத்திற்கு அவர் ஒப்புதல் தரப்பல மாதங்களாயின. ஏன் இந்தத் தாமதம்? என்பது எனக்குப் புரிய வில்லை. நிலை கொள்ளாமல் நான் தவித்தேன். இந்தப் பயணதிற் கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் கனகச்சிதமாகச் செய்யவே அவர் இவ்வாறு தாமதித்தார் என்பது எனக்குப் பின்னர்த்தான் புரிந்தது.

இதற்கிடையில் இந்திய அரசியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. பிரதமர் இந்திராகாந்தி மறைந்து ராஜீவ்காந்தி பிரதமராகப் பொறுப்பேற்றார். அவர் பிரதமரான பிறகு **திம்புவில்** சமரசப் பேச்சுக்கு ஏற்பாடு செய்தார். இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ள விடுதலைப் போராளிகளின் இயக்கங்கள் மறுத்தபோது அவர்களை நிர்பந்தப்படுத்தி மாநாட்டில் கலந்துகொள்ள வைத்தார். சிங்கள அரசின் சூழ்ச்சியில் சிக்க மறுத்து அம்மாநாட்டிலிருந்து அவர்கள் வெளிநடப்புச் செய்தனர். ஒருபக்கம் சமரசப் பேச்சு நடத்திக் கொண்டே மறுபக்கம் தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள அரசின்மீது ராஜீவ்காந்திக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக விடுதலைப் போராளிகள் மீது அவரது கோபம் திரும்பியது. இதன் விளைவாக விடுதலைப் புலிகள் இயக்கத்தினைச், சேர்ந்த திரு. **பாலசிங்கம்** மற்றும் திரு. **சந்திரகாசன்**, திரு. **சத்தியேந்திரா** ஆகிய மூவரை இந்தியா விலிருந்து நாடு கடத்தும்படி உத்தரவிட்டார். இதுகண்டு தமிழக



மக்கள் கொதித்தெழுந்தனர். மாபெரும் போராட்டம் வெடித்தது. **''டெசோ''** அமைப்பில் அங்கம் வகிக்கும் **தி.மு.க.**, **தி.க.**, **தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்**, **தமிழ்நாடு பார்வர்டு பிளாக்** ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் இரயில் மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். நானும் சிறைசென்றேன். 15 நாட்கள் சிறைவாசத்திற்கு பிறகு அனைவரும் விடுவிக்கப்பட்டோம். ஈழத் தமிழர் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு தீர்வினை அவர்கள்மீது திணிக்க இந்திய அரசு முயலுவதைக் கண்டித்து தமிழகமெங்கும் முக்கிய நகர்களில் கண்டனப் பேரணிகள் நடத்துவதென டெசோ அமைப்பு முடிவு செய்தது. அதற்கிணங்கக் **கோவை**, **திண்டுக்கல்**, **தூத்துக்குடி**, **திருச்சி**, **சேலம்**, **வேலூர்** ஆகிய நகர்களில் பிரமாண்டமான அளவில் டெசோ பேரணிகள் நடத்தப்பட்டன.

சிறையில் இருந்தபோதே நான் தாடிவளர்க்கத் தொடங்கி யிருந்ததால் இந்தப் பேரணிகளில் நான் தாடியோடு காட்சி தந்தேன். எதற்காக இந்தத் தாடி எனப்பலரும் கேட்டபோது ஏதோ காரணங் களைச் சொல்லிச் சமாளித்தேன். **சேலம்** பேரணி முடிந்தவுடன் நான் சென்னை திரும்பினேன்.

சென்னையில் **தலைவர் திரு. பிரபாகரன்** அவர்களைச் சந்தித் தேன். எனது சுற்றுப்பயணத் திட்டம்பற்றி இறுதி முடிவெடுக்கப் பட்டது. என்னுடைய துணைவியார் திருமதி. பார்வதி, எனது அருமைத்தம்பி திரு. ஆறுமுகம், எங்கள் கட்சியின் துணைத்தலைவர் தஞ்சை திரு. அ. இராமமூர்த்தி, திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணி, டெசோ அமைப்பின் தலைவர் டாக்டர் கலைஞர் ஆகியோருக்கு எனது பயணம் குறித்துக் கடிதங்கள் எழுதி நான் இலங்கை போய்ச் சேர்ந்த பிறகு இக்கடிதங்கள் உரியவர்களிடம் சேருமாறு ஏற்பாடு செய்தேன்.

ஒருவேளை நான் திரும்பி வராமலும் போகலாம் என்ற உணர் வுடன் எங்கள் கட்சி சம்பந்தமாக நான் செய்யவேண்டியிருந்த காரியங் கள் அனைத்தையும் செய்துமுடித்து எனக்கு ஏதாவது நேர்ந்துவிடு மானால் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதையும் ஒழுங்கு படுத்தினேன். எனது சொந்தக் காரியங்களில் எவை எவற்றை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் முறைப்படுத்தி வைத்தேன். என் குடும்பத்தினரிடமோ கட்சித் தோழர்களிடமோ எனது பயணத் திட்டத்தை நான் வெளியிட விரும்பவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவரும் இதற்குச் சம்மதிக்கமாட்டார்கள் என்பதால் அதை இரகசியமாகவே வைத்தேன்.

சென்னையிலிருந்து நான் புறப்பட்டதிலிருந்து திரும்பச்சென்னை வந்து சேரும் வரையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த **காப்டன் லிங்கமும் பொட்டும்** என்னை நிழல் போலத் தொடர்ந்தார்கள். என்னுடன் வந்த பாதுகாவல் படைக்குத் தளபதிகளாக விளங்கிக்கண்ணை இமை காப்பதுபோல என்னைக் காத்தார்கள்.

இராமேஸ்வரத்திலிருந்து நான் கிளம்பும்போது என்னுடன் படகில் **லிங்கம், பொட்டு** மற்றும் **நரேஷ், தர்மர், பரண்** ஆகிய ஐவரும் வந்தனர். இவர்களில் **நரேஷ்** எனக்கு மருத்துவ சிகிச்சை செய்வதற்காக வந்தார். **தர்மர்** புகைப்பட நிபுணராகப் பணியாற்றினார். தமிழீழத்தில் **கிறிஸ்டி, சந்தமணி, ஜஸ்டின், காசி, இன்ஜினியர்** ஆகிய ஐவரும் எனது மெய்க்காவல் படையில் சேர்ந்துகொண்டனர். இறுதிவரை இவர்களும் உடனிருந்தார்கள்.

தமிழீழத்தில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது புகைப்படங்கள் எடுக்கவும், வீடியோப் படம் எடுக்கவும் நான்கு இளைஞர்கள் உடனிருந்தார்கள். **அர்ச்சனா, இரவீந்திரன், வாசன்** மற்றும் **தர்மர்**. இதைத் தவிர அந்தந்தப் பகுதிகளின் தளபதிகளான **கிட்டு, மாத்தையா, விக்டர். மாறன், லாரன்ஸ், சபா, ஜெயம், குட்டி, சந்திரன், கணேஷ், தூசை, மகேஷ்** ஆகியோரும் மற்றவர்களும் ஆங்காங்கு என்னுடன் பயணம் செய்தனர்.

எங்கள் பயணக் குழுவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், இரு வேன்கள், ஒரு லாரி ஆகியவை எப்போதும் உடன்வந்தன. மோட்டார் சைக்கிள்களில் இருவர் முன்னால் செல்வார்கள். அவர்கள் அவ்வப்போது வாக்கி - டாக்கி மூலம் கொடுக்கும் செய்திகளுக்கிணங்க எங்கள் வேன்களும், லாரியும் பின்தொடர்ந்து சென்றன. எங்களுடன் கொண்டுவரப்பட்ட வீடியோக் காமிராக்களின் பாட்டரிகளை சார்ஜ் செய்யப் பாட்டரி சார்ஜ் செய்யும் இயந்திரங்களும் எங்களுடனேயே கொண்டுவரப்பட்டன. மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான சகலமும் தயாராக இருந்தன. வாகனங்கள் பழுதானால் உடனே சரிபாக்கும் திறமைபெற்ற **இன்ஜினியர்** என அழைக்கப்படும் தோழர் எங்களுடனேயே பயணம் செய்தார்.

இதைத் தவிர வழிநெடுக முக்கிய இடங்களிலும் திருப்புமுனைகளிலும் மரத்தின் மறைவுகளிலும் பாலங்களின் அடியிலும் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த புலிகள் நின்று காவல்காத்தார்கள். வழியில் இராணுவத்தினர் கண்ணிவெடிகள் வைத்திருக்கிறார்களா? என்பதை



முன்னதாகவே சோதித்துப் பார்த்து சர்வ ஜாக்கிரதையுடன் எங்கள் வாகனங்களைச் செலுத்தினார்கள். எல்லா வகையிலும் கச்சிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததையும், இரவும் - பகலுமாக என்னை இந்த இளைஞர்கள் பாதுகாத்த விதத்தையும் நினைத்தால் எனது நெஞ்சம் நெகிழுகிறது.

இந்தப் பயணத்தை நான் எதற்காக மேற்கொண்டேன் அதற்கு அவசியம் என்ன? இந்தப் பயணத்தினால் விளைந்த பயன் என்ன? என்ற கேள்விகளைச்சிலர் எழுப்பக்கூடும்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதக் கலவரங்களுக்குப் பின்னால் இலங்கையில் தமிழர் பகுதிகளுக்குத்தமிழ்நாட்டிலிருந்து யாரும் போய் அவர்களின் அவலங்களை, துயரங்களைப் பகிர்ந்துகொள்ளவில்லை என்பது அம்மக்களின் ஆதங்கமாகும். அவர்களின் இந்த நியாயமான ஆதங்கத்தினைப் போக்கித்தமிழ்நாட்டு மக்களின் சார்பில் அவர்களுக்கு ஆறுதல் கூற இப்பயணத்தை நான் மேற்கொண்டேன்.

"திம்பு மாநாட்டின் விளைவாக இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. சமரசம் ஏற்படுத்துவதில் முதற்கட்ட வெற்றி பிரதமர் ராஜீவின் முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளது'' என இந்திய அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தது. இதன் உண்மை என்ன? என்பதை நான் அறிய விரும்பினேன். இலங்கையில் உண்மையில் போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறதா? இந்திய அரசின் சமரச முயற்சிகள் குறித்து ஈழமக்கள் என்ன நினைக்கிறார்கள்? உண்மையில் அவர்கள் எதை விரும்புகிறார்கள்?

விடுதலைப் போராளிகளின் போராட்டத்தின் தன்மை என்ன? அதனுடைய விளைவுகளும் எதிர் விளைவுகளும் என்ன? இந்தப் போரட்டத்திற்கு ஈழமக்களின் ஆதரவு உள்ளதா? விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு எவ்வாறு இருக்கிறது? என்பது போன்ற பல கேள்விகளுக்கு உண்மையில் விடை என்ன என்பதை அறிய விரும்பினேன். ''விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலுள்ள விடுதலைப் போராளிகள் இராணுவத்தை மறைந்திருந்து தாக்கிவிட்டு ஓடிவிடுகிறார்கள். இதன் விளைவாகக் கோபம் கொண்ட சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொல்கிறது'' என்று இந்தியாவில் சிலர் பிரச்சாரம் செய்வதில் எந்த அளவுக்கு உண்மையிருக்கிறது என்பதை ஆதாரப்பூர்வமாக அறிய விரும்பினேன். ஈழநாட்டு மக்களில் பலதரப்பட்டவர்களின் கருத்துக்களையும் நேரடியாகத் தெரிந்து கொள்ள விரும்பினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தைப் பற்றியும் அதனுடைய வீரஞ்செறிந்த போராட்டத்தைப் பற்றியும் மக்கள் மத்தியில் அந்த இயக்கத்திற்குள்ள செல்வாக்கைப் பற்றியும் பூரணமாக அறிந்து கொள்ள நான் விரும்பினேன்.

என்னுடைய இந்த வினாக்கள் அனைத்துக்கும் இச்சுற்றுப் பயணத்தின் மூலம் விடை கிடைத்தது. நான் அறிய விரும்பிய அனைத்தையும் ஐயந்திரிபற அறிந்து கொள்ள முடிந்தது.

தமிழீழத்தின் சகல பகுதிகளுக்கும் நான் சென்றேன். சுமார் 1,200 மைல்கள் குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றுப் பயணம் செய்து எண்ணற்ற கிராமங்களுக்குச் சென்றேன். தமிழீழத்தில் வேறுயாரும் இவ்வளவு விரிவான சுற்றுப்பயணத்தை 1983-ஆம் ஆண்டிற்குப் பிறகு இதுவரையில் மேற்கொண்டதில்லை என்று சொல்லும் அளவுக்கு எனது சுற்றுப்பயணம் அமைந்தது.

தமிழர்களில் சகல தரப்பினரையும் நான் சந்தித்தேன். பல்கலைக் கழகப் பேராசிரியர்களிலிருந்து பாமர மக்கள்வரை கண்டு பேசினேன். காடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம்களில் தங்கி அவர்களின் போராட்ட உணர்வுகளின் பின்னணியை அறிந்தேன். களத்தில் வீரமரணமடைந்த போராளிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பெற்றோரையும் உற்றோரையும் சந்தித்து ஆறுதல் கூறினேன். நாட்டிற்காகத் தங்கள் வீரப் புதல்வர்கள் உயிர்த் தியாகம்செய்திருக்கிறார்கள் என்னும் பெருமித உணர்வுடன் அவர்கள் திகழ்வதைப் பார்த்துப் பெருமைப்பட்டேன். சிங்கள இராணுவ வெறியர்களின் கொடுமைகளுக்கு இரையாகிச் சிதைக்கப்பட்ட குடும்பங்களையும் யாவற்றையும் இழந்து நிர்க்கதியாகத் தவிக்கும் மக்களையும் அகதிகள் முகாம்களில் சந்தித்தபோது அவர்கள் நிலைகண்டு கலங்கினேன். அவர்களின் விழிகளில் பெருகிய நீரைத் துடைக்க வகையறியாமல் திணறினேன்.

துயர மேகங்கள் சூழ்ந்த இந்த நிலையிலும் அவர்களின் மனஉறுதி கொஞ்சமும் சீர்குலையாததுகண்டு நான் வியந்தேன். 1982ஆம் ஆண்டில் நான் ஈழநாடு சென்றிருந்தபோது அம்மக்களிடம் அதிகமாகக் காணப்படாத ஓர் எழுச்சியினை 1985ஆம் ஆண்டில் நான் கண்டேன். ''இந்த அடிமைத்தனம் போதும். இனிச் சுதந்திர மனிதர்களாக வாழ்ந்தே தீருவது'' என்ற உறுதியோடு அம்மக்கள் விளங்குகிறார்கள். தமிழீழக் கோரிக்கைக்கு முன்பு எதிராக இருந்த படித்த வர்க்கத்தினர் கூட இப்போது தீவிர ஆதரவாளர்களாக மாறியிருப்பதைக் கண்டேன். இளைஞர்கள் நடத்தும் ஆயுதம் தாங்கிய போராட்டமே தங்களுக்கு விடுதலையைத் தேடித்தரும் என்ற நம்பிக்கை அவர்களின் உள்ளங்களில் துளிர்விட்டிருப்பதை நான் கண்டேன்.



அது மட்டுமல்ல. துன்பமும் துயரமும் சூழ்ந்த இந்த வேளையில் அச்சம் அடையாமலும் மனம் உடைந்து போகாமலும் தீரத்துடன் அம்மக்கள் விளங்குகிறார்கள். ''They rose to the Occassion'' என்னும் ஆங்கில வாசகத்திற்குச்சீரிய உதாரணமாக அவர்கள் திகழுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் **''வியட்நாமிய மக்களின் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்திற்குக் கொஞ்சமும் சளைத்ததல்ல தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம்'' என்ற பேருண்மையை நான் நேரில் கண்டேன்.**

எங்கு நான் சென்றாலும் யாரைச் சந்தித்தாலும் இழவு வீட்டில் துக்கம் கேட்க வந்திருக்கும் சொந்தச்சகோதரனாக என்னைப் பாவித்துத் தங்கள் துயரங்களைக் கொட்டித் தீர்த்த அந்த மக்களைக்கண்டு நெகிழ்ந்துபோனேன்.

மந்திகளால் சீரழிக்கப்பட்ட மலர்த் தோட்டம்போலத் தமிழீழத்தில் குடும்பங்கள் சீரழிக்கப்பட்டுள்ளதை நான் பார்த்தேன். ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரையோ இருவரையோ அதற்கு மேற்பட்டவர்களையோ இழந்திருக்கிறார்கள். தமிழர் இல்லங்களில் அழுகுரல் ஓய்ந்தபாடில்லை. எந்த நேரமும் என்ன நேரிடுமோ என்ற அச்சத்துடனேயே வாழ்கிறார்கள். மிருகங்களை வேட்டையாடுவதைப்போலத் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் சிங்கள இராணுவம் வேட்டையாடுகிறது. பகலில் ஆண்களைக் கைது செய்கிறார்கள். இரவில் வீட்டுக்குள் புகுந்து பெண்களைக் கற்பழிக்கிறார்கள். இதன் விளைவாக அங்குள்ள மக்கள் பகலில் வீடுகளிலும் இரவில் காடுகளிலும் வாழ வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். வசதியுள்ளவர்கள் குடும்பத்தோடு அந்நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்கள். அல்லது வயதானவர்கள் மட்டும் வீடுகளில் இருந்துகொண்டு இளைஞர்களையும் யுவதிகளையும், குழந்தைகளையும் இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி விடுகிறார்கள். ஏழைகள் வெளியேற முடியாமல் சாகிறார்கள். அங்குள்ள மக்களின் முகங்களில் ஏக்கமும் துக்கமும் பிரதிபலிக்கின்றன. நாடே சிறைக் கூடமாகவும் - வதைக்கூடமாகவும் ஆகியிருக்கிறது. அளவேயில்லாத அவலங்களுக்கு நடுவே அவர்கள் ஒரே ஒரு நம்பிக்கையில் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை நான் பார்த்தேன். தங்களுடைய இளைஞர்களின் வீரத்திலும், தியாகத்திலும் மட்டுமே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். **தாங்கள் பெற்றெடுத்த வீர இளைஞர்கள் நிச்சயமாகச் சுதந்திர ஈழத்தை வென்றெடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் துயரங்களைச் சகித்துக் கொண்டு, துக்கங்களை அடக்கிக் கொண்டு இன்னல்களை ஏற்றுக் கொண்டு வாழ்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர்நிறுத்தம் என்பது ஒரு மோசடி. இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஒரு போலித் தோற்றம். உண்மையில் இலங்கையில் போர் நிறுத்தம் அமுலாகவில்லை. போர் நிறுத்தக்காலத்தில்தான் 2,000-க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வீடு, வாசல்களை இழந்து அகதிகளானார்கள் என்ற உண்மையை நேரில் கண்டறிந்து இந்தியாவிற்கும் உலகத்திற்கும் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு இப்பயணத்தின் மூலம் எனக்குக் கிடைத்தது. ஈழநாடு விடுதலை பெறுவதைத் தவிர வேறு எதையும் அந்த மக்கள் விரும்பவில்லை. தங்கள் நாடு விடுதலை பெறுவதற்காகச் சகல பரித்தியாகத்திற்கும் அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்ற மகத்தான உண்மையை நான் அறிந்து வந்தேன். ஈழமக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு **விடுதலைப் புலிகளின் இயக்கம்** தலைமை தாங்கி நடத்துவதையும் அதனுடன் போராட முடியாமல் சிங்கள இராணுவம் திணறுவதையும் நான் அறிந்து வந்தேன். இலங்கையில் தமிழர்கள் வாழும் பெரும்பாலான பகுதிகளில் சிங்கள அரசின் நிர்வாகம் செயலற்றுக் கிடப்பதை நான் பார்த்தேன்.

எனது சுற்றுப் பயணத்தில் நான் அறிந்து வந்த உண்மைகளை இந்தியாவில் வந்து தெரிவித்த போது அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள். இந்தியா முழுவதிலும் உள்ள பத்திரிக்கைகள் நான் தெரிவித்த உண்மைகளைப்பக்கம் பக்கமாக வெளியிட்டன. தமிழ் நாட்டிலுள்ள அத்தனை வார இதழ்களும் நாளிதழ்களும் எனது சுற்றுப் பயணம் பற்றிய சிறப்புக் கட்டுரைகளைப் படங்களுடன் வெளியிட்டன. எனது சுற்றுப் பயணம் பற்றிய வீடியோ படம் 33 மணி நேரத்திற்கு எடுக்கப் பட்டிருந்தது. இதில் முக்கியப்பகுதிகளைச் சுருக்கிச்சுமார் 2 மணி நேரம் வரும்படியாகச் **சுதந்திர தாகம்** என்ற ஒரு படம் தயாரிக்கப்பட்டது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் இப்படத்திற்கு விளக்கவுரையும் தயாரிக்கப்பட்டது. தமிழ்ப் படத்திற்கான விளக்க உரையை உணர்ச்சிக் **கவிஞர் திரு. காசி. ஆனந்தன்** அவர்கள் எழுதிக் குரலும் கொடுத்தார். அவருக்கு எனது நன்றி. இந்தப் படம் தமிழ்நாடு எங்கும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் மக்களுக்கும் பத்திரிக்கையாளர்களுக்கும் காட்டப்பட்டது. இப்படத்தைப் பார்த்துக் கண்ணீர் சிந்தாதவர் யாரும் இல்லை. மக்கள் மத்தியில் ஒரு பேரெழுச்சியை இந்தப்படம் உருவாக்கியது.

டில்லியில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள் ஆகியோருக்கும் இப் படம் போட்டுக் காட்டப்பட்டது. அதைப் போலவே பம்பாய், பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற பல்வேறு மாநிலத் தலைநகரங்களிலும் இப்படம் போட்டுக் காட்டப்பட்டது. டில்லிப்பத்திரிகைகளும், பல்வேறு மாநிலங்களின் பத்திரிகைகளும் இதுபற்றி விரிவான செய்திகளை வெளியிட்டன. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இப்படத்தைப் பார்த்த பின்னால் தான் இலங்கையில் உண்மையில் நடப்பது என்ன? என்பதை ஓரளவுக்குத் தெரிந்து கொண்டதாகக் கூறினார்கள். ஆங்கில விளக்க உரையோடு கூடிய இந்த வீடியோ படத்தின் பிரதிகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்ற ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, மலேசியா போன்ற பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு அங்குள்ள மக்களுக்கும் காட்டப்பட்டு வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் இயக்கம் செய்துள்ளது.

## இறுதியாக ஒரு வார்த்தை

எங்கெங்குச்செல்ல வேண்டும், யார் யாரைச் சந்திக்க வேண்டும் என விரும்பினேனோ அங்கெல்லாம் எவ்விதத் தங்குதடையுமின்றி விடுதலைப் புலிகள் என்னை அழைத்துச் சென்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, மற்றப்போராளிகளின் இயக்கங்கள், பல சமூக அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவும் அவர்கள் ஏற்பாடு செய்து தந்தனர். தங்களுக்கு வேண்டியவர்கள்-வேண்டாதவர்கள் என்ற பாகுபாடின்றி யாராக இருந்தாலும் அவர்களைச் சந்திக்கவும் உண்மைகளை அறிந்து கொள்ளவும் அவர்கள் பேருதவி புரிந்தனர். விடுதலைப் புலிகளின் உதவியோ பாதுகாப்போ இல்லாமல் நான் இந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்க முடியாது என்றாலும் அவர்கள் என்னை ஒருபோதும் எந்த விஷயத்திலும் கட்டுப்படுத்தவில்லை. நான் யாரைச் சந்தித்தபோதும் எத்தகைய கேள்விகளைக் கேட்டபோதும் அவர்கள் ஒருபோதும் குறுக்கிடவில்லை. எத்தகைய சார்புமின்றிச் சுதந்திர மனிதனாக நான் செயல்பட்டு உண்மைகளை அறிய அவர்கள் உதவிபுரிந்தனர். மக்களோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒரு தேசிய விடுதலை இயக்கத்தினர் எப்படித் திறந்த மனதோடு செயல்படுவார்களோ அப்படி விடுதலைப்புலிகள் செயல்பட்ட காரணத்தினால் எவ்வித இடர்பாடுகளோ, தங்குதடைகளோ இன்றி எனது பணி வெற்றிகரமாக நிறைவேறியது.

**இதற்கான முழுப்பெருமையும் விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களையே சாரும். அவருடைய சம்மதமும் உதவியும் இல்லாமல் இப்பணியினை நான் மேற்கொண்டிருக்க முடியாது. அவருக்கு எனது இதயப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

இந்த இரகசியப்பயணத்திட்டத்தை உருவாக்கியதிலிருந்து அதை நிறைவேற்றும்வரை எல்லாக்கட்டங்களிலும் உடனிருந்து உதவிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யதோடு, சுமார் 33 மணி நேரத்திற்கு மேலாக எடுக்கப்பட்ட வீடியோப் படப்பிரதிகளைச்சலிப்பின்றி எடிட் செய்தும், பிரதிகள் எடுத்தும் உதவிய விடுதலைப்புலி திரு. சுப்ரமணியம் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி உரித்தாகுக. நண்பர் சுபா சுந்தரம் அவர்கள் இதற்காக ஸ்டுடியோவில் சகல வசதிகளும் செய்துகொடுத்தார். அவருக்கு எனது நன்றி.

வயதில் இளையவர் ஆனாலும் ஈழப்பயணத்திட்ட இரகசியத்தை இறுதிவரை கட்டிக்காத்ததோடு, இத்திட்டம் இனிது நிறைவேற பலவகையாலும் உதவிய எங்கள் இயக்கத்தின் பொதுச்செயலாளர் **திரு. இராதாகிருஷ்ணன்** அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

ஈழநாட்டில் சுற்றுப்பயணம் செய்தபோது நான் எழுதிய குறிப்புகளையும் எடுக்கப்பட்ட புகைப்படச்சுருள்களையும் வீடியோப் படங்களையும் இந்தியா திரும்பும்போது எடுத்துவரவில்லை. வழியில் எனக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டாலும் குறிப்புகளும் படங்களும் பத்திரமாகத்தமிழக மக்கள் கையில் கிடைக்க வேண்டுமென விரும்பினேன். எனவே நான் இந்தியா திரும்பிய பிறகு அவைகள் பகுதி பகுதியாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. இதன் காரணமாகவும் பல்வேறு அரசியல் பணிகள் காரணமாகவும் இந்நூலை முன்னதாகவே எழுதி முடிக்க முடியவில்லை. 1986 ஆம் ஆண்டு ஆகஸ்டில் இந்நூலை எழுதி முடித்தேன். இந்நூல் எழுத இரவும் பகலுமாக உதவிய எனது சுருக்கெழுத்தாளர் திரு. மூர்த்தி அவர்களுக்கும், இந்நூலுக்குத் தேவையான ஓவியங்களை வரைந்து உதவிய ஓவியர் அவர்களுக்கும் எனது நன்றி.


மதுரை
10—2—1987

**நெடுமாறன்**

---

*குறிப்பு*: — எனது சுற்றுப்பயணத்தில் கண்டும், கேட்டும் அறிந்த பல விவரங்களையும் உண்மையான பெயர்களையும் சம்பந்தப்பட்டவர்களின் பாதுகாப்பு நலன்கள் கருதியும் இராணுவ இரகசியம் கருதியும் வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. ஈழ மண்ணில் விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அவற்றை இப்போது வெளியிடுவது உசிதமாகவும் இருக்க முடியாது. எனவே நான் சந்தித்த பலரின் உண்மைப் பெயர்களை அவர்களின் நலன் கருதி இங்குக்குறிப்பிடாமல் மாற்றுப் பெயர்களால் குறிப்பிட்டுள்ளேன். மேலும் பல விவரங்களையும், நிகழ்ச்சிகளையும் இப்போது இந்த நூலில் நான் எழுதவில்லை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1. பயணத்தைத் தொடங்கினேன்

அலைகள் கரையில் மோதிச் சிதறும் இனிய காட்சியை ரசித்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன். அலைகளுக்கு ஓய்வே கிடையாதா? சலிப்பு என்பதே ஏற்படாதா? என வியந்தேன்.

அலைகளுடன் போட்டிபோட்டுக் கொண்டு கடற்கரையில் இளைஞர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். பல்வேறு சாமான்களைப்பிளாஸ்டிக் உறைகளில் போட்டுக் கட்டிக்கொண்டிருந் தார்கள். மற்றும் சிலர் கட்டப்பட்ட சாமான்களைப்படகில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

என் மனம் பின்னோக்கி வேகமாக நகர்ந்தது. 1983-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதி இதே இராமேஸ்வரம் கடற்கரையில் கடல் அலை களோடு மனிதத் தலைகளும் போட்டியிட்டன. கடல் கடந்து இலங்கை சென்று தமிழினம் அழியாமல் தடுக்கும் உறுதியுடன் 5000க்கு மேற்பட்ட தியாகப் படைத் தொண்டர்கள் ஆவேசத்தோடு காத்திருந் தனர். வெள்ளமெனத் திரண்டிருந்த மக்கள் உணர்ச்சி பொங்க முழக் கமிட்டனர். ஆயிரக் கணக்கில் குவிக்கப்பட்டிருந்த ஆயுதப் போலிஸ் படையினர் திகைத்துச் செயலிழந்து நின்றனர். நானும் தோழர்களும் படகிலேறிப் பயணம் புறப்பட்டோம். நடுக்கடலில் இந்தியக் கடற் காவற்படை எங்களை வழி மறித்துக் கைது செய்தது. கரைக்குத் திரும்ப அழைத்து வந்தது.

அன்று தடைப்பட்ட எனது பயணம் இன்னும் சில நிமிடங்களில் தொடரவிருப்பதை எண்ணியபோது என் மெய்சிலிர்த்தது. அதோ! என் பை! எனதுதுணைவி தனது கரத்தினால் தைத்து என் தோளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாட்டியபை. அதையும் படகில் ஏற்றுகிறார்கள். ஆம்! தியாகப் பயணத்தின்போது சுமார் 120 மைல்கள் நடந்து தோளில் சுமந்து நான் கொண்டு சென்ற அதே பை. அன்று கடல் கடந்து செல்லவிடாமல் தடுக்கப்பட்ட அதே பை! இன்று கடலைக் கடக்கப் போகிறது. பையுடன் நானும் பயணமாகப் போகிறேன்.

மாலை நேரத்துக் கதிரவன் மஞ்சள் நிறத்துடன் பிரகாசித்தான். இன்னும் சிறிது நேரத்தில் மறையப் போகிற ஆவேசத்தில் தக, தக தகவென ஜொலித்துக் கொண்டிருந்தான். கடலரசி தனது அலைக் கைகளை அகல விரித்துக் கதிரவனைத் தழுவிக்கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தாள்.

ஹோ! ஹோ! என்ற சப்தத்தில் என் சிந்தனை கலைந்தது. மணலில் புதைந்திருந்த படகைத் தண்ணீருக்குள் மெதுவாகத் தள்ளுகிறார்கள். படகும் மெல்ல மெல்ல நகர்கிறது. தளக்! தளக்! என்ற ஒலியுடன் படகு கடலில் இறங்கிவிட்டது. அலைகளால் தள்ளப்பட்டு அங்கும் இங்குமாகத் தள்ளாடுகிறது. படகின் இருபுறமும் தள்ளிய இளைஞர்கள் இடுப்புவரை நீர் வந்தவுடன் நிற்கிறார்கள். படகையும் நிறுத்துகிறார்கள்.

லிங்கமும், பொட்டும் என்னை நோக்கி வருகிறார்கள். ஓ! புறப்படும் நேரம் வந்துவிட்டது. "அண்ணா! போகலாமா!" என்றார்கள். "ஓ! தயார்" எனக் கூறியவாறு எழுகிறேன். வெண் மணற் பரப்பில் வெறுங்காலுடன் விரைந்து நடக்கிறேன். ஆம்! எனது காலணிகளைக் கூட பொட்டலம் கட்டி உள்ளே போட்டு விட்டார்கள். இடுப்பில் கட்டம் போட்ட லுங்கியும், வெறும் பனியனும் மட்டுமே அணிந்து அசல் மீனவனாகக் காட்சி தருகிறேன்.

கடலில் இறங்கி நடக்கிறேன். ஆரவாரிக்கும் அலைகள் எனது ஆடைகளை நனைக்கின்றன. படகுக்கு அருகில் செல்லுகிறேன். "அண்ணா, வலது பக்கமாக ஏறுங்கள்" என்கிறார் பொட்டு.

"மணமகனே! வலது காலை எடுத்து வை என்பது போல இது என்ன?" என்கிறேன்.

எல்லோரும் கல கலவெனச் சிரிக்கிறார்கள். அவர்களின் சிரிப்பு அலைகளின் சலசலப்பிற்கு மேலாக எழுந்து கரையில் மோதி எதிரொலிக்கிறது.

"அதில்லை அண்ணா! படகில் ஏறுபவர் யார்! கரையிலேயே தங்கப் போகிறவர் யார்! என்பதைத் தெரிந்து கொள்ளவே இந்த ஏற்பாடு! ஏறுபவர்களும் இறங்குபவர்களும் இருபுறமுமாகக் கலந்து



நின்றால் குழப்பமாகிவிடும். யார் ஏறியிருக்கிறார்கள்! யார் ஏறவில்லை என்பது புரியாமல் போய்விடும். எனவேதான் படகில் ஏறுபவர்கள் வலப்பக்கமாக ஏறுங்கள் என்று சொன்னோம்", என்றார் பொட்டு.

நானும் தாவிப்படகில் ஏறினேன். GlassFibre Boat எனச் சொல்லப்படும் மீன்பிடிப் படகு அது. உட்புறம் விசாலமாகவே இருந்தது. மோட்டார் என்ஜின்கள் பொறுத்தப்பட்டிருந்தன. அவற்றுக்கு வேண்டிய டீசல் நிறைந்த பீப்பாய்களும் உள்ளிருந்தன. படகின் நடுவில் தரையில் உட்கார்ந்தேன். மறுகணம் வலதுபுறம் நின்றவர்கள் அனைவரும் படகில் தாவி ஏறினார்கள். படகு அங்கும் இங்குமாக ஊசலாடியது. இடதுபுறம் நின்ற தம்பிகள் அதை ஆடவிடாது பிடித்துக்கொண்டார்கள்.

படகோட்டிகள் ஏறி அவரவர்கள் இடத்தில் அமர்ந்தார்கள். எல்லோரையும் எண்ணிப் பார்த்தார்கள். என்னையும் சேர்த்துச் சரியாகப் 11 பேர் இருந்தோம்.

"அண்ணா! இதை அணிந்துகொள்ளுங்கள்" என்றார் லிங்கம்.

"Life Jacket" ஒன்றினை மார்பில் அணிவித்தார்கள். தலைக்கு ரப்பர் குல்லாய் ஒன்றை அணிவித்தார்கள்.

காற்றடைக்கப்பட்டு, ரப்பரினால் செய்யப்பட்டிருந்த அந்த ஜாக்கெட் கடலில் நீந்துவதற்கு உதவும். உப்பு நீர் தலையில் படாமலிருக்க ரப்பர் குல்லாய் உதவும் என்று சொன்னார்கள்.

படகின் முன் பகுதியில் ஒருவர் உடம்பில் கறுத்த ரப்பர் உடை ரப்பர் குல்லாய் அணிந்து நின்றார். அவர்தான் படகின் வழிகாட்டி, படகோட்டிகள் இருவர் பின்பகுதியில் என்ஜின்கள் அருகே வீற்றிருந்தனர்.

என்னைச் சுற்றிப்பொட்டு, லிங்கம் உட்பட 10 இளைஞர்கள் தரையிலும் சாமான்கள் மீதும் உட்கார்ந்திருந்தனர். வெறும் லுங்கி அல்லது வெறும் ஜட்டியுடன் மட்டுமே அவர்கள் காட்சி தந்தனர். அனைவரின் கழுத்திலும் தாயத்துப் போல ஏதோ ஒன்று கருப்புக் கயிற்றில் கோர்க்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்தது.

"இது என்ன? எல்லோரும் மந்திரத் தாயத்து அணிந்திருக்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"அண்ணா! உயிர் காக்கும் தாயத்து அல்ல; உயிர் குடிக்கும் குப்பி" என்றார் லிங்கம் சர்வசாதாரணமாக.

ஒருகணம் திடுக்கிட்ட நான் வியப்புடன் அவரைப் பார்த்தேன் என் விழிகளில் காணப்பட்ட வினாக் குறியைப் புரிந்துகொண்ட அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிரித்தவாறே சொன்னார். "அண்ணா! தமிழ்நாட்டிலோ வேறு நாடுகளிலோ இருக்கும்வரை நாங்கள் இதை அணிவதில்லை. எங்கள் நாட்டுக்குப் பயணமாகும்போது இதை அணிவோம். நாங்கள் அங்கிருக்கும்வரை இதை அணிவோம். நாங்கள் அங்கிருக்கும்வரை இதைக் கழட்ட மாட்டோம். இதுதான் எங்களின் உற்ற துணைவன். எதிரிகையில் ஒருபோதும் நாங்கள் உயிரோடு சிக்கமாட்டோம். இறுதி வரை போராடிச் சாவோம். அப்படித் தப்பித் தவறி எதிரியிடம் சிக்க நேர்ந்தால் கொடிய 'சயனைட்' விஷமான இதைக் கடித்துஉடனே மாய்வோம்" என்றார் அவர்.

"அப்படியானால், எனக்கு ஒன்று கொடுங்களேன். நான் மட்டும் எதிரியிடம் உயிரோடு சிக்கலாமா?" என்றேன்,

"அண்ணா! உங்களைக் காப்பாற்ற நாங்கள் இருக்கிறோம். இன்னும் கரையில் உள்ள ஆயிரக்கணக்கான புலிகள் இருக்கிறார்கள். எங்கள் உயிர்களைக் கொடுத்தாவது உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது "தம்பியின்" கண்டிப்பான கட்டளை என்றார் பொட்டு.

**புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைத்தான் 'தம்பி" என அவர் குறிப்பிட்டார். அனைவருமே அவரை இப்படித்தான் பாசம் இழைந்தோட அழைக்கிறார்கள்.**

இதற்கிடையில் என்ஜின்கள் உறுமத் தொடங்கின. படகு புறப்படத் தயாராகிவிட்டது. இடதுபுறம் நின்ற இளைஞர்கள் ஏதோ கேட்க இவர்கள் ஏதோ பதில் கூற எல்லோரும் மறுபடியும் சிரித்தார்கள். கரையில் இருப்பவர்களுக்குப் படகில் செல்லுபவர்கள் பயணக் காசு கொடுப்பது வழக்கமாம். அதை அந்த இளைஞர்கள் கேட்க இவர்கள் ஊருக்குப் போய் அனுப்புவதாகக் கூற ஒரே சிரிப்பு! மகிழ்ச்சி.

படகு வேகமாக நகரத் தொடங்கியது. மெல்ல மெல்லக்கரையிலிருந்தவர்கள் மறையத் தொடங்கினார்கள். இராமேஸ்வரம் கோவில் கோபுரம் கம்பீரமாகக்கண்ணுக்குத் தெரிந்து, பிறகு கொஞ்சங் கொஞ்சமாக மறையத் தொடங்கியது.

வழியில் ஆங்காங்கே நமது மீனவர்களின் படகுகள் தென்பட்டன. படகில் இருந்த மீனவர்கள் எங்கள் படகை ஒருமுறை பார்த்தார்கள். பிறகு தங்கள் தொழிலில் கவனம் செலுத்தினார்கள்.

படகு முழு வேகத்துடன் நீரைக் கிழித்துக்கொண்டு செல்லத் தொடங்கியது. அலைகள் படகில் மோதி உள்ளே தெறித்து வீழ்ந்து எங்களை அவ்வப்போது குளிப்பாட்டின. வெறும் கைலி அல்லது



ஜட்டியுடன் மட்டும் ஏன் எல்லோரும் இருந்தனர் என்பது எனக்கு இப்போதுதான் புரிந்தது.

என் தலையில் ரப்பர் குல்லாய் அணிந்திருந்ததனால் தலை நனையவில்லை. உடலெல்லாம் நனைந்தது. போகப்போக அது பழகி விட்டது.

என்ஜின் சப்தத்தில் அதிகமாகப் பேச முடியவில்லை என்றாலும் அவ்வப்போது நான் கேட்பதற்கு அவர்கள் பதில் கூறிக்கொண்டு வந்தனர்.

கதிரவன் மறையும் நேரத்தில் தொலைவில் இரு மீன்பிடிப் படகுகள் எங்களை நோக்கி வருவதைக் கண்டோம். எங்கள் படகின் வேகம் குறைக்கப்பட்டது. அருகில் வந்தவுடன் ஆவலுடன் பார்த்தோம். மன்னார் பகுதியிலிருந்து தப்பிவரும் அகதிகள் அந்தப் படகில், இருந்தனர். சின்னஞ்சிறிய குழந்தைகளும் பெண்களும் அதில் வீற்றிருந்த காட்சி என்னை உருக்கிவிட்டது.

இராமேசுவரம் நோக்கிப் போவதாக் அவர்கள் கூறினார்கள். கைகளைஆட்டி விடை கொடுத்தோம்.

இதற்குள் செங்கதிரோன் முழுவதுமாக மறைந்து நாலாபுறமும் இருள் சூழ்ந்துவிட்டது. என்ஜின்களின் உறுமலும், அலைகளின் ஓசையும் தவிர வேறு சப்தம் இல்லை.

கடலில் படகில் வேகமாகப் போவது என்பது கரடுமுரடான சாலையில் கட்டைவண்டியில் போவதற்குச் சமமாக இருந்தது. அலைகளின் மேலேறியும் கீழே விழுந்தும் படகு சென்றபோது தூக்கித்தூக்கிப் போட்டதில் என தொடை எலும்புகள் முறிந்துபோகும் போல இருந்தன. அதிகமாக அடிபடாமல் எப்படி உட்கார்வது என்பதை மற்றவர்களைப் பார்த்துச் சிறிது நேரத்தில் பழகிக் கொண்டேன்.

வழிகாட்டிச் சென்ற இளைஞர் பரபரப்புடன் ஏதோ கூறினார் உடனே படகில் என்ஜின்கள் நிறுத்தப்பட்டன. தோழர்கள் அனைவரும் பிளாஸ்டிக் உறைகளிலிருந்து இயந்திரத் துப்பாக்கிகளை உருவினார்கள். ஆங்காங்கே இடம்பார்த்து முழங்காலிட்டுத் தயாரானார்கள்.

லிங்கம் சொன்னார் "அண்ணா, சிங்களக் கடற்படைப் படகு ஒன்று போகிறது. திடீரெனச்சக்தி வாய்ந்த விளக்குகளைப் போட்டுப் பார்ப்பார்கள். நமது படகு அவர்கள் கண்ணில்பட்டால் பீரங்கியால் சுடத்தொடங்குவார்கள். நாங்களும் பதிலுக்குச் சுடுவோம். சுடுகிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சப்தம் கேட்டால் குப்புறப்படுத்து விடுங்கள். எக்காரணம் கொண்டும் தலையைத் தூக்காதீர்கள்'' என்று கூறிவிட்டுப்பரபரப்புடன் தோழர்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்தார்.

சற்று நேரம் இந்தப்பரபரப்பு நீடித்தது. சிங்களப் படகு தொலை தூரத்தில் மறைந்துவிட்ட பிறகு பழைய நிலை படகில் திரும்பியது. மீண்டும் படகு முன்னேறத் தொடங்கியது.

அந்த இருட்டில் சிங்களப் படகை எப்படி அவர்கள் கண்டுபிடித்தார்கள் என்பது எனக்குப் புரியாத மர்மமாக இருந்தது. நமது இளைஞர்கள் சிறந்த கடலாடிகளாக இருப்பது குறித்துப் பெருமிதம் அடைந்தேன்.

வானத்தில் நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. கடலைக் கிழித்துக்கொண்டு படகு வேகமாகச் சென்றது. சில மணி நேரங்கள் இவ்வாறு கழிந்தபின் பொட்டு வாக்கி-டாக்கி மூலம் பேசினார். கரையிலிருந்து பதில் கிடைத்தது. ஆம்! தமிழீழக் கரையை நெருங்கிவிட்டோம்.

தொலைவில் ஒரு வெளிச்சம் தோன்றித் தோன்றி மறைந்தது அதை நோக்கிப் படகு நகர்ந்தது. பொட்டு வாக்கி-டாக்கி மூலம் தொடர்ந்து யாருடனோ பேசினார்.

சிறிது நேரம் சென்ற பிறகு எங்கள் படகு நிறுத்தப்பட்டது. படகில் இருந்தவர்கள் கடலில் குதித்தார்கள். எல்லோரும் இறங்கிய பிறகு நானும் இறங்கினேன். இடுப்பளவு ஆழத்தில் நடந்தோம். முழங்கால் அளவு ஆழம் வந்தபோது எங்களை நோக்கி விளக்கு ஒன்று நகர்ந்து வருவதைப் பார்த்தோம். யாரோ சிலர் கும்பலாக வந்து கொண்டிருந்தனர்.

ஆம்! மன்னார் பகுதிப்புலிப் படைத் **தளபதி விக்டர்**, தமது தோழர்களுடன் என்னை வரவேற்று எதிர்கொண்டு அழைத்துச் சென்றார்.

பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் நாங்கள் நடந்தோம். அக்காட்சியை வீடியோப் படம் எடுத்தார்கள். பிளாஷ் லைட் உபயோகிக்க முடியாத சூழ்நிலை. எதிரிக்கு வெளிச்சம் தெரியக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு.

கரையில் வேன், ஜீப் போன்றவை தயாராக இருந்தன அதில் அனைவரும் ஏறிக்கொண்டு புறப்பட்டோம்.

தமிழீழ மண்ணை அடைந்துவிட்ட உணர்வு என்னைப் பரிபூரணமாக ஆக்கிரமித்துக்கொள்ளச் சொல்லொண்ணாத மனக் கிளர்ச்சியுடன் அந்த மண்ணில் என் பயணத்தைத் தொடங்கினேன்.





# 2. தம்பியின் கட்டளை

காரிருளில் எங்கள் வேன் வேகமாகச் சென்றது. வேனுக்குள் மன்னார்ப்பகுதித்தளபதியான விக்டர், பொட்டு, லிங்கம் ஆகியோர் என் அருகே அமர்ந்திருந்தனர். மேலும் 10 இளைஞர்கள் முன்னும் பின்னுமாக இயந்திரத் துப்பாக்கிகளுடன் தயார் நிலையில் இருந்தனர்.

வேனுக்கு முன்னால் ஜீப் ஒன்றும் அதற்கு முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விரைந்து சென்றன. அமைதி தவழ்ந்த அந்தப் பகுதியில் எங்கள் பயணம் சலசலப்பை ஏற்படுத்தியது. வழியில் சில சிற்றூர்களைத் தாண்டி நாங்கள் சென்றோம்.

முதலில் சென்ற மோட்டார் சைக்கிள் வீரருடன் வாக்கியில் பேசிக்கொண்டும் இடையிடையே என்னுடன் பேசிக்கொண்டும் இருந்த விக்டரிடம் ''இது எந்தப்பகுதி'' என்று கேட்டேன்.

விக்டர், லிங்கத்தையும் பொட்டுவையும் பார்த்துச் சிரித்தார். ''அண்ணா! நாம் தங்குமிடத்திற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம்'' என்றார்.

அறியக்கூடாத இரகசியத்தை அறிந்துகொள்ள நான் முயன்றுவிட்டேனோ என்ற சந்தேகம் என்னுள் எழுந்தது. ஆனாலும் அவர்களின் கட்டுப்பாட்டினை மனதிற்குள் பாராட்டிக்கொண்டேன்.

திடீரென வாகனங்களின் வேகம் குறைக்கப்பட்டது. கிராமம் ஒன்றின் தெருக்கள் வழியாக வளைந்தும் திரும்பியும் செல்வதை உணர்ந்தேன். சற்று நேரத்தில் ஒரு தோட்ட வீட்டிற்குள் எங்கள் வாகனங்கள் நுழைந்து நின்றன. பெட்ரோமாக்ஸ் விளக்கு ஏந்திச் சிலர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தயாராக நின்றனர். எங்கள் வாகனத்தில் உள்ள இளைஞர்கள் தட தடவெனக் கீழே குதித்தனர். அந்த மங்கிய ஒளியில் அவர்களின் கரங்களிலிருந்த ஆயுதங்கள் மின்னின. நானும் கீழே இறங்கினேன்.

"அண்ணா! வாருங்கள்" என வீட்டிற்குள் அழைத்துச் சென்றார் விக்டர். அங்கிருந்த ஒரு அறை எனக்காகத் தயார் செய்யப்பட்டிருந்தது. ஒரு கட்டிலும் மேசையும் இருந்தன. மேசையின்மீது அரிக்கன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இதற்குள் எனது கைப் பையைப்பொட்டு எடுத்து வந்து மேசைமீது வைத்தார்.

"அண்ணா! முதலில் குளித்துவிடலாம். பிறகு சாப்பிடலாம்" என்றார் லிங்கம்.

'சரி' என்றேன். எனக்கும் குளிக்க வேண்டும் போலிருந்தது. உப்பு நீரில் ஊறி மேனியெல்லாம் பிசு பிசு என இருந்தது.

வீட்டின் பின்புறத்திலுள்ள கிணற்றுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அரிக்கன் விளக்கின் மங்கிய ஒளியில் கிணற்று நீரை இறைத்துக் குளித்தபோது உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமாக இருந்தது. ஆனாலும்கூட ஒரு காட்சியைப் பார்த்து என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. நான் குளிக்கும் இடத்தில்கூட நான்கு இளைஞர்கள் துப்பாக்கிகளோடு காவல் புரிந்துகொண்டிருந்தார்கள். அதைப் பார்த்ததும் சிரித்தேன். "ஏன்! அண்ணா, சிரிக்கிறீர்கள்!" என்றார் பொட்டு.

"இல்லை! குளிக்கும்போதுகூடப் பாதுகாவலா? என்று கேட்டேன்.

"அண்ணா! இரவும் பகலும் உண்ணும்போதும் உறங்கும் போதும் எல்லா நேரங்களிலும் உங்களைக் காவல்காப்பதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேரை 'தம்பி' நியமித்துள்ளார். உங்களை விட்டு அவர்கள் ஒருபோதும் அகலமாட்டார்கள்" என்றார்.

"இன்னும் என்ன உத்தரவு போட்டிருக்கிறார் உங்கள் தலைவர்" என்றேன்.

"சகல மருந்துகள் அடங்கிய பை உங்களுடன் எப்போதும் பயணம் செய்யும். இந்தப்பத்து பேர்களில் ஒருவனான ரமேஷ் உங்களுக்கு டாக்டராகப் பணியாற்றுவான். நீங்கள் தங்கும் இடங்கள் கவனமுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களைச் சுற்றி இரவும் பகலும் பலமான காவல் போடப்பட்டுள்ளது. ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை காவலர்கள் மாறுவார்கள். நீங்கள் தங்குமிடங்கள்



உங்களுடன் வருபவர்களுக்கே தெரியாது. போய்ச்சேரும் வரை பரம இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். நீங்கள் செல்லும் வழி நெடுக ஆங்காங்கே எங்கள் ஆட்கள் இருப்பார்கள். இவர்களை மீறி யாரும் உங்களின் அருகேகூட வந்துவிட முடியாது. கூடவே வரும் இவர்களைத் தவிர அந்தந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது ஆங்காங்கே இன்னும் பலர் உடன்வருவார்கள்" என்றார். இவர்களைத் தவிர வீடியோப்படமெடுக்கவும் புகைப்படங்கள் எடுக்கவும் 3 காமிராமேன்கள் உடன் பயணம் செய்கிறார்கள் என்றார்.

மேலும் துருவித்துருவிக்கேட்டபோது அவர் இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கூறினார்.

"எந்தக் காரணம் கொண்டும் அண்ணாவுக்கு எதுவும் நேரக்கூடாது. உடன் செல்லுபவர்கள் அத்தனை பேரும் சாக நேர்ந்தாலும் அண்ணாவைக்காப்பாற்றியேயாக வேண்டும். எக்காரணம் கொண்டும் சிங்கள இராணுவத்திடம் அவர் சிக்கிவிடக்கூடாது. அவர்மீது சிங்களர் கடுமையான கோபம் கொண்டிருக்கிறார்கள். தமது ஆத்திரத்தையெல்லாம் கொடூரமான முறையில் தீர்த்துக்கொள்வார்கள். உயிருடன் அவரை அவர்கள் சிறைப்பிடிக்க விட்டுவிடக்கூடாது. எதிர்பாராதவிதமாக ஏதேனும் நேர்ந்துவிட்டாலும் அவரது உடல்கூட அவர்களிடம் சிக்கிவிடக்கூடாது. உடலையாவது தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்துவிட வேண்டும்" என்று 'தம்பி' அவர்களுக்குக் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தார் என்பதை அறிந்தபோது சிலிர்த்துப் போனேன். அவருக்குத்தான் என்மீது எவ்வளவு அன்பு! என்னைப் பாதுகாப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை முன்யோசனையுடன் எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதை நினைத்து நினைத்து நெகிழ்ந்தேன்.

குளித்துவிட்டுச் சாப்பிடப் போனோம். சூடான இடியாப்பமும் சொதியும் காய்கறிகளும் தயாராக இருந்தன. சுவைத்துச் சாப்பிட்டேன்.

காவலுக்கு வந்த இளைஞர்களும் தயார் நிலையிலேயே அதாவது தோளில் துப்பாக்கிகளைத் தொங்கவிட்டுக் கொண்டும் கைகளில் தட்டுகளை வைத்துக்கொண்டும் உணவருந்தினர்.

அவர்களை ஒவ்வொருவராகப்பெயர் விசாரித்து அளாவளாவி விட்டுப் படுக்கப்போகும்போது நள்ளிரவாகிவிட்டது.

"அண்ணா! காலையில் சீக்கிரம் கிளம்ப வேண்டியிருக்கும். படுக்கலாம்" என்றார் லிங்கம்.

என் அறைக்கு நான் போனேன். சட்டையைக் கழற்றி அங்கிருந்த ஸ்டாண்டில் மாட்டப்போனேன். உடன் வந்த பொட்டு அதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்கி மடித்து என் பையிலேயே வைத்தார். எனது பூட்ஸ்களையும் பேப்பரில் சுற்றிப்பையில் வைத்தார்.

எல்லாவற்றையும் ஏன் பையில் வைக்கிறார் என்பது புரியாமல் திகைத்த என்னைப் பார்த்து அவர் சொன்னார்.

" அண்ணா! இரவு படுக்கப்போகுமுன் நமது சாமான்களைத் தயார் நிலையில் வைத்துவிட்டுப் படுக்க வேண்டும். எதிரிகள் சுற்றி வளைத்துக்கொண்டால் அப்போது ஒவ்வொரு சாமானாகத் தேடி எடுத்துக்கொண்டு புறப்பட முடியாது. தாமதமாகும் ஒவ்வொரு வினாடியும் நமது உயிருக்கு ஆபத்தாக வந்துசேரும். எனவே திடீரென எழுப்பப்பட்டால் உடனே புறப்படுவதற்குத் தயாராகவே படுக்க வேண்டும் " என்றார்.

அவர்களின் முன்யோசனையைக் கண்டு வியந்தேன். அதற்குப்பிறகு ஒவ்வொரு நாளும் இரவில் ஆயத்த நிலையிலேயே நான் எப்போதும் இருந்தேன்.

படுக்கையில் நான் படுத்தபோது லிங்கம் என் அருகிலேயே படுத்தார். அதுவும் கைத்துப்பாக்கி, எறிகுண்டுகள் சகிதமாக என் அறையின் வாசற்படி அருகே பொட்டு ஆயுதம் சகிதமாகப் படுத்திருந்தார். நாங்கள் தங்கியிருந்த வீட்டைச் சுற்றிலும் இளைஞர்கள் காவல் காத்தனர். அந்தக்கிராமத்திற்கு வரும் சாலைகளில்கூட இவ்விதமே காவல் போடப்பட்டிருந்தது.

இவ்வளவு கடுமையான காவலுக்கு என்ன அவசியம் என்பதைப் போகப்போக நான் புரிந்துகொண்டேன்.







# 3. பொய்யில் புழுத்த புழுக்கள்

கடல் பயணத்தால் ஏற்பட்ட களைப்பின் காரணமாக அயர்ந்து தூங்கிவிட்ட நான் காலையில் ஏதோ சப்தம் கேட்டு விழித்தேன். பக்கத்தில் படுத்திருந்தவர்களைக் காணோம். அறையைவிட்டு வெளியே வந்தபோது பொழுது பலபலவென விடிந்துகொண்டிருப்பதையும் தோழர்கள் அலைவரும் பரபரப்பாக வானை நோக்கிப் பார்த்த வண்ணம் இருப்பதையும் கண்டேன்.

அண்ணாந்து பார்த்தேன் விமானமொன்று பலத்த ஒலியை எழுப்பிய வண்ணம் பறந்துகொண்டிருந்தது.

" அண்ணா! கடல் விமானம் ரோந்து செல்கிறது " என்றார் ஒருவர்.

" அவர்களின் கண்களில் நாம் படமாட்டோமா " என்றேன்.

" இன்னும் தாழப் பறந்து வந்தால் தெரியும். சில நேரங்களில் அப்படிப் பறந்துவந்து சுடுவார்கள் " எனறார்கள்.

சிங்கள விமானம் பறந்து புள்ளியாக மாறி மறைந்தது.

நாங்களும் காலைக் கடன்களை முடித்துப் புறப்படத் தயாரானோம்.

முதலில் ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் சென்றனர். வாக்கி-டாக்கியும் ஆயுதங்களும் அவர்களிடமிருந்தன. அவர்களைத் தொடர்ந்து எங்களது வேன் சென்றது. எங்கள் வேனில் 10 பேர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவீன ஆயுதங்களுடன் வீற்றிருந்தனர். எங்களைத் தொடர்ந்து ஒரு லாரியில் ஆயுதங்களுடன் புலிகள் வந்தனர்.

வழி நெடுக கேந்திர ஸ்தானங்களில் புலிகள் காவல் காத்தபடி சமிக்ஞை காட்டி எங்களைப் போகச்செய்தனர். பல மைல்கள் பயணம் செய்த பிறகு அடர்ந்த காடு ஒன்றின் அருகே இறங்கினோம்.

தளபதி விக்டர் முன்னால் செல்ல அவரை நானும் தொடர்ந்தேன். மற்றவர்கள் எங்களைச் சூழ்ந்து வந்தார்கள்.

" அண்ணா! இந்தக் காட்டில்தான் எங்கள் முகாமை இராணுவம் தாக்கி அழித்தது. அந்த இடத்தை இப்போது பார்க்கப் போகிறோம் " என்றார்.

இலுப்பைக்கடவை - ஆத்திமுட்டை என்ற இடத்தில் இருந்த புலிகள் முகாமைத் தாக்கி முற்றிலுமாக அழித்ததாகவும் சுமார் 100 புலிகளுக்கு மேல் கொல்லப்பட்டதாகவும் ஸ்ரீலங்கா அரசு இடைவிடாமல பிரச்சாரம் செய்தது என நினைவிற்கு வந்தது. எனது சந்தேகத்தை விக்டரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டேன்.

"ஆம்! அண்ணா! அதே இடத்திற்குத்தான போகிறோம். அவர்களின் பிரச்சாரம் எவ்வளவு பொய்யானது என்பதை நீங்களே பார்க்கப் போகிறீர்கள்" என்றார்.

இதற்குள் காட்டாறு ஒன்று குறுக்கிட்டது. அதற்குள் இறங்கி நடந்து சென்றோம். நாங்கள் சென்ற வேளையில் ஆற்றில் தண்ணீர் இல்லை. வறண்டு கிடந்தது. ஆனால் வெள்ளக் காலங்களில் நீர் பெருக்கெடுத்து ஓடிய அறிகுறிகளை நான் பார்த்தேன்.

ஆற்றைக் கடந்து அக்கரை சென்றோம். சிறிது தொலைவு சென்றவுடன் ஓர் இடத்தில் எரிந்து கிடந்த முகாமைப் பார்த்தேன்.

பல கூடாரங்கள் கருகிச் சாம்பலாகிக்கிடந்தன. மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்து கிடந்தது. அதைப்போலப்பல பொருட்கள் சேதமாகிக் கிடந்ததைப் பார்த்தேன்.

மரங்களில்கூட குண்டுகள் துளைத்த அடையாளங்கள் தெளிவாகத் தெரிந்தன.

எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்த பிறகு விக்டர் சொன்னார்: 'அண்ணா! பின்புறமாக ஹெலிகாப்டரில்' சிங்கள சிப்பாய்கள் வந்திறங்கிய உடனேயே எங்களுக்குத் தகவல் கிடைத்துவிட்டது. உடனேயே



ஆயுதங்களை மட்டும் எடுத்துக்கொண்டு நாங்கள் ஒருவர் பாக்கிவிடாமல் தப்பிவிட்டோம். நாங்கள் காலி செய்து விட்டுப் போன பிறகு இங்கு வந்த அவர்கள் யாரும் சிக்காததைக் கண்டு கடுங்கோபம் அடைந்தனர். கூடாரங்களைக்கொளுத்தியும் சாமான்களைச் சேதப்படுத்தியும் மரங்களைச் சுட்டும் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர். நூறு புலிகளைக் கொன்று விட்டதாகவும் பொய்ப்பிரச்சாரம் செய்தனர்" என்றார்.

ஒவ்வொரு முறையும் சிங்கள இராணுவம் இதைத்தான் செய்கிறது. புலிகளோடு மோதித்தோற்கிறது. புலிகளைப் பிடிக்க முயன்று ஏமாறுகிறது. அந்தக்கோபத்தில் அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுத் தள்ளிவிட்டு புலிகளை ஒழித்துவிட்டதாக உலகெங்கும் பொய்ப்பிரச்சாரம் செய்கிறது.

புலிகளோடு மோதித் தோற்றும் சிங்கள இராணுவம் "பொய்யில் புழுத்த புழு" வாகவே இருக்கிறது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 4. எங்கள் தாலிகளைக் காப்பாற்றுங்கள்

மாலையில் கிராமம் ஒன்றில் குடும்பத் தலைவி ஒருவரைச் சந்தித்தேன். படித்த பெண்மணியாகத் தெரிந்தார். நாட்டின் நிலையை அவர் நன்கு அறிந்திருந்தார். கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தடுமாற்றம் இல்லாமல் தெளிவான பதில்களையே கூறினார்.

அவருடைய கணவர் ஒரு விவசாயி. படித்த நடுத்தரமான குடும்பம் என்பது அப்பெண்மணியின் பேச்சில் தெரிந்தது. ஆனால் வீட்டைப் பார்த்தால் அப்படிக் கூறமுடியாது. வீடு வெறுமையாகக் காணப்பட்டது. நடுத்தர ஈழக்குடும்பங்களில் வீடுகள் எப்போதும் செல்வச்செழிப்பைக் காட்டுவனவாக இருக்கும். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு நான் வந்தபோது பார்த்திருக்கிறேன். வீடுநிறைய வெளிநாட்டுச் சாமான்கள் இருக்கும். வரவேற்பு அறையிலேயே கண்ணாடி பீரோவில் அவற்றை அழகாக அடுக்கிக் காட்சிக்கு வைத்திருப்பார்கள். டி. வி. பெட்டி, வானொலிப் பெட்டி முதலியவை கம்பீரமாகக் காட்சி தரும். ஆனால் இந்த வீட்டில் அவை எதுவும் காணப்படாதது எனக்கு வியப்பை அளித்தது.

என்முகத்தில் காணப்பட்ட வியப்புக்குறிகளின் பொருளை அந்தப் பெண்மணி உணர்ந்து கொண்டவர் போலப்பேசத் தொடங்கினார்.

"நாங்கள் இப்போது இருக்கும் நிலையில் வீட்டைப் புதுப்பிக்க இயலாது. ஆசையாக ஒரு சாமான் வைக்க இயலாது. அப்படி வைப்பது எங்களுக்கே எமனாகிவிடும். சிங்களப்படையினர் உள்ளே புகுந்தவுடன் பொருட்களைத்தான் கொள்ளையடிப்பார்கள். நகைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், பட்டுப்புடவைகள் இவைகளைத்தான் தேடு



வார்கள். அதிலும் காஞ்சிப்பட்டு எங்கே என்றுதான் கேட்பார்கள். ஆகவேதான் வீடுகளில் ஏதுவும் வைப்பதில்லை" என்றார்.

அவர் குரலில் இழையோடிய சோகமும் இயலாமையும் என் இதயத்தைத் தொட்டன.

"இந்த அபாயத்திற்கு நடுவே எப்படித்தான் வாழ்கிறீர்கள்?" என்றேன்.

"இந்தப் பொடியன்கள் பாதுகாப்பில்தான் வாழ்கிறோம்" என்றார் அவர். அதாவது புலிகளின் பாதுகாப்பில்தான் வாழ்வதாகத் தெரிவித்தார். ஈழத்தமிழில் "**பொடியன்**" என்றால் "**இளைஞன்**" எனப் பொருள்.

அவர் மேலும் சொன்னார், "கமத் தொழில் செய்யவே முடியவில்லை. எதோ சிறிதளவு எங்கள் வயிற்றுப்பாட்டுக்காகச் செய்கிறோம்".

கமத் தொழில் என விவசாயத்தைக் குறிப்பிடுகிறார் என்பதைப் பிறகு அறிந்துகொண்டேன்.

இதற்கிடையில் 3 வயதுப்பெண் குழந்தை ஒன்று ஓடிவந்து என்னை ஆச்சரியமாகப் பார்த்தவண்ணம் தன் அம்மாவின் மடியில் ஏறி அமர்ந்தது. அந்தக் குழந்தையைச் சுட்டிக்காட்டியவண்ணம் அந்தப் பெண்மணி பேசத் தொடங்கினார்.

"எங்கள் தலைமுறை கஷ்டப்பட்டாலும் இந்தக் குழந்தையின் தலைமுறையாவது சுதந்திரமாக வாழவேண்டும். இதுதான் எங்கள் இலட்சியம்" என்றார்.

"தமிழீழம்" அமைவதைத் தவிர வேறு பரிகாரம் இல்லை என நினைக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"எங்கள் அப்பா காலத்தில் சம உரிமை கேட்டுப் போராடினார்கள். ஆனால் 30 ஆண்டுக்கால அறப்போராட்டம் தோல்வியையே அடைந்தது. நாங்கள் மேலும் மேலும் இழப்புக்கு ஆளானோம். மண்ணை இழந்தோம். மக்களை இழந்தோம். இன்னும் தொடர்ந்து இழந்துகொண்டிருக்கிறோம். எனவே எமக்குத் தமிழீழம் தவிர வேறெதும் தேவையில்லை".

"சமரசப் பேச்சுக்களில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா" என்று கேட்டபோது அவர் முதலில் சிரித்தார். பிறகு சொன்னார்: "தந்தை செல்வா காலத்திலிருந்து எத்தனையோ சமரசப் பேச்சுக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடந்துவிட்டன. ஆனால் அத்தனையும் ஏமாற்று நாடகங்களாகவே அமைந்துவிட்டன. இனி நாங்கள் அவர்களை நம்புவதற்கே இடமில்லை. நம்பினால் எங்கள் கதி அதோகதிதான்.

"அப்படியானால் சமரசத்திற்கு இனி இடமே இல்லை என்று சொல்லுகிறீர்களா."

"இந்தப் பொடியன்கள் இங்கு நிற்பதால் நான் துணிவாக உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் பகல் வேளையில்கூடக் காடையர்கள் வீடு புகுந்து அக்ரமம் செய்வார்கள். பாதி நாட்கள் நாங்கள் வீடுகளில் வாழ்வதில்லை. காடுகளிலேயே ஒளிந்து மறைந்து வாழ்கிறோம். அங்கேகூட வந்து எங்களை வேட்டையாடுகிறார்கள். இவர்களுடன் சமரசமாக போகவேண்டும் என்றா சொல்லுகிறீர்கள்" என அவர் என்னைத் திருப்பிக் கேட்டபோது என்னால் பதில் கூற முடியவில்லை.

"தமிழ் நாட்டுப் பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்" எனக் கேட்டேன்.

"தமிழ்ப் பெண்களுக்குக் கற்புதான் பெரிது. அதைக் காக்கப் போராடும் எங்களுக்கு உதவ வேண்டியது தமிழ்நாட்டுப் பெண்களின் கடமை. தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் எங்கள் பிள்ளைகளை அவர்களது பிள்ளைகளைப் போலப் பாவிக்குமாறு கூறுங்கள். எங்கள் மானம் காக்கப் போராடும் எங்கள் பிள்ளைகளுக்கு உதவும்படிக் கூறுங்கள். தமிழ்நாட்டுச் சகோதரிகள் தங்கள் சொந்த முயற்சியால் கிடைக்கும் பொருளில் ஒரு பகுதியை எங்கள் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். எங்கள் கழுத்தில் மின்னும் தாலிகளைக் காக்க வேண்டியது எங்களுடைய தமிழ்நாட்டுச் சகோதரிகளின் கடமையாகும்" என்றார். தழுதழுத்த குரலில் அவர் இவ்வாறு கூறியபோது எனது கண்கள் பனித்தன.







# 5. தியாகத் தாய்

நாங்கள் செல்லும் வழியில் அந்தோணி கிறிஸ்டியன் என்னும் விவசாயத் தொழிலாளி ஒருவரைச் சந்தித்தேன். வெளி உலகம் பற்றி அதிகமாக அறிந்திராத அசல் கிராம வாசியான அவர் அன்றாடம் கூலி வேலை செய்தால்தான் அவர் வயிற்றுக்கு உணவு கிடைக்கும். இல்லையென்றால் பட்டினிதான்,

"விவசாய வேலைகள் ஒழுங்காக நடப்பதில்லை என்று சொல்லுகிறார்களே, நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"மாதத்தில் 10 நாள் வேலை கிடைத்தால் பெரிது. சில வேளைகளில் மாதம் முழுவதுமே வேலை கிடைக்காது. வேலை கிடைத்து வயலுக்குப் போனால் மேலே பறந்து வந்து சுடுகிறார்கள். வீட்டில் பாதுகாப்பாக இருக்கமுடியவில்லை. குடும்பத்துடன் பட்டினியாகக் கிடக்கிறோம்" என்றார்.

"மன்னார் பகுதியிலிருந்து நிறையப்பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். உங்களுக்கு ஏன் அந்த எண்ணம் வரவில்லை" என்று கேட்டேன்.

"அப்படி வருவதற்குக் கொஞ்சமாவது காசு வேண்டும். படகுக்காரர்கள் சும்மா கொண்டு இறக்கமாட்டார்கள். கையில் காசு வைத்து இருந்தவர்கள் இந்தியாவுக்கு ஓடி விட்டார்கள். ஏழைகளான எங்களைப் போன்றவர்கள் இந்தியாவுக்கு ஓடிவர வழி இல்லாமல் இங்கேயே கிடக்கிறோம்" என்று அவர் சொன்னபோது பரிதாபமாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உங்கள் குடும்பத்தில் எத்தனைப் பேர்" என்று கேட்டேன். மனைவியும் மூன்று மகள்களும் இருப்பதாகச் சொன்னார். ஒரு மகளுக்குத் திருமணமாகிவிட்டது என்றும் கூறினார். மருமகன் என்ன செய்கிறார் என்று நான் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்தது.

மருமகன் புலிப்படையில் சேர்ந்துவிட்டார். திருமணமான மகள் உட்பட மூன்று புதல்விகளும் புலிப்படையில் சேரத் துடிக்கிறார்களாம்.

அந்த விவரங்களைச் சொல்லிவிட்டு அவர் மேலும் கூறினார். "ஆர்மிக்காரனின் கொடுமையிலிருந்து எங்களைப்புலிகள் தான் பாதுகாக்கிறார்கள். பட்டினிக்கொடுமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுகிறார்கள். விவசாயம் செய்யும்படி எங்களைத் தூண்டுகிறார்கள். அப்போது எங்களுக்குப் பாதுகாப்பும் தருகிறார்கள். எங்களுக்குத் தேவையான விதைகள், உரம் ஆகியவற்றைக் கொண்டுவந்து தருகிறார்கள். எங்களுக்குப்புலிகள்தான் கண்கண்ட தெய்வங்கள்" என்று அவர் உணர்ச்சிப்பூர்வமாகச் சொன்னார்.

பரப்புக்கடந்தான் என்ற ஊரில் இன்னொரு விவசாயியை நான் சந்தித்தேன். முத்துக்குமார் என்ற அந்த விவசாயி நல்ல வசதியானவர். அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்துவந்த அவரது குடும்பத்தில் திடீரெனப்புயல் வீசியது. அவருடைய மூத்த மகன் சிங்கள வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார். அடுத்த மகன் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துவிட்டார். வீட்டில் இருந்த வயதுவந்த இரண்டு புதல்விகளும் புலிகள் இயக்கத்தில் சேரப்போவதாகப்பெற்றோருக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சொல்லாமல்கொள்ளாமல் போய்விட்டார்கள். அவரும் அவரது மனைவியும் மட்டுமே இப்போது அந்த வீட்டில் வசிக்கிறார்கள்.

அவருடைய மனைவியை, வயதான அந்த பெண்மணியையும் சிங்கள வெறியர்கள் விட்டுவைக்கவில்லை. ஒருநாள் திடீரென்று வீடு புகுந்து புலிப் படையிலுள்ள அவரது மகனைப் பற்றிய விவரங்களைக் கேட்டார்கள்; அடித்தார்கள், சித்திரவதை செய்தார்கள். வீட்டிற்கு வெளியே இருந்த மரத்தடியில்தான் நாங்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அந்த மரத்தைச் சுட்டிக்காட்டி முத்துக்குமார் சொன்னார்; "இந்த மரத்தில்தான் எங்களை ஒருநாள் பூராவும் கட்டிவைத்து இருந்தார்கள். வயதானவர்கள் என்ற காரணத்தினால் எங்களுக்கு அடி கொடுத்ததோடு நிறுத்திவிட்டார்கள். வீட்டிலுள்ள விலையுயர்ந்த சாமான்கள் மீது அவர்கள் கவனம் சென்றுவிட்டதால் நாங்கள் அன்று பிழைத்தோம். சகல பொருட்களையும் கொள்ளையடித்துக்கொண்டு



போய்விட்டார்கள்" என்றார். அந்த அம்மையாரிடம் நான் கேட்டேன்: "அம்மா உங்கள் மூத்த மகனை இழந்து இருக்கிறீர்கள், இன்னொரு புதல்வனையும்; புதல்விகளையும் புலிகளின் இயக்கத்திற்குக் கொடுத்து இருக்கிறீர்கள். பெற்ற பிள்ளைகள் அனைவரையுமே உங்கள் நாட்டிற்காகத் தியாகம் செய்துவிட்டீர்களே", என்று கேட்டபோது அந்த நாட்டுப்புறப்பெண்மணி பெருமிதம் பொங்கக் கூறினார்; "ஐயா! நாங்கள் மட்டுமல்ல எங்கள் நாட்டைச் சேர்ந்த அத்தனை தாய்மார்களுமே வீட்டுக்கு ஒரு பிள்ளையை நாட்டுக்காகக் கொடுத்து இருக்கிறோம். அவசியமானால் அத்தனைப் பிள்ளைகளையுமே கொடுப்போம். எங்களின் அடுத்த சந்ததிகளாவது சுதந்திர மனிதர்களாக வாழட்டும்" என்றார்.

இந்தப் பெண்மணியில் வடிவத்தில் ஈழநாட்டுத் தாயை நான் பார்க்கவில்லை. தியாகத்தின் வடிவத்தைத் தரிசித்தேன்.

சிங்கள இராணுவ வெறியர்களின் கொடுமையை விளக்க மற்றொரு நிகழ்ச்சியை முத்துக்குமார் விவரித்தார். "எங்கள் கிராமத்தில் சுமார் 1400 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் சுமார் 100 ஏக்கர் நிலத்தில் எப்படியோ கஷ்டப்பட்டு விவசாயம் செய்து இருந்தோம். பயிர்கள் முற்றி வளர்ந்து அறுவடையாகும் நேரத்தில் திடீரென்று இராணுவம் எங்கள் ஊரைச் சுற்றி வளைத்துக்கொண்டது. வீட்டுக்குள் புகுந்து எல்லோரையும் அடித்து ஒரு இடத்தில் கூட்டினார்கள். பிறகு எங்களைக் கட்டாயப்படுத்தி நெல்லை அறுக்கச் சொன்னார்கள். துப்பாக்கி முனையில் எங்களை வேலை வாங்கினார்கள். நெல்லை நாங்கள் அடித்துக்கொடுத்த பிறகு எங்களைக் கொண்டே அவற்றைச் சாக்குப்பைகளில் நிரப்பச்சொன்னார்கள். பிறகு அந்த மூட்டைகளைத் தூக்கி அவர்கள் வேன்களில் ஏற்றிட உத்தரவிட்டார்கள். மீதமிருந்த வைக்கோல் போர்கள் மீது பெட்ரோல் ஊற்றித் தீ வைத்தார்கள். எங்களுக்குத்தான் உணவு இல்லாமல் செய்தார்கள். எங்கள் மாடுகளும் பட்டினியாகச் சாகும்படி வைக்கோலையும் எரித்துச் சாம்பல் ஆக்கினார்கள்".

இன்னொன்றையும் அவர் பேச்சின் நடுவே குறிப்பிட்டார். "இந்தியா எங்களுக்கு உதவி செய்யும் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாளாக நாளாக எங்கள் நம்பிக்கையும் வீணாகி வருகிறது. இந்திராகாந்தி காலத்திலாவது ஓரளவுக்குப் பாதுகாப்பு இருந்தது. ஆனால் ராஜீவ்காந்தி காலத்தில் அதுவுமில்லை. தமிழ்நாட்டு மக்களைத்தான் நாங்கள் பூரணமாக நம்பி இருக்கிறோம்" என்றார் அவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கிடையில் நேரம் அதிகமாகி விட்டதால் நாம் புறப்பட வேண்டுமென விக்டர் கூறினார். எந்த ஒரு இடத்திலும் ½ மணி நேரம் அதிகபட்சம் 1 மணி நேரத்திற்கு மேல் அவர் என்னை இருக்க விடுவதில்லை. பாதுகாப்புக்காரணத்தை முன்னிட்டு அவர் அவ்வாறு சொன்னார்.

முத்துக்குமாரின் மனைவி குறுக்கிட்டு, ''சாப்பாடு தயாராகி விட்டது; சாப்பிட்டுவிட்டுத்தான் செல்லவேண்டும்'' என்றார். ''அம்மா உங்களைப்பார்த்ததே போதும். இன்னொரு முறை வரும்போது சாப்பிடுகிறோம்'' என்று சொன்னேன். அதற்கு அந்த அம்மையார் சொன்ன பதில் என்னை நிலைகுலையச் செய்து விட்டது.

''அடுத்த முறை நீங்கள் வரும்போது உயிரோடு இருப்போமோ இல்லையோ எங்களுக்குத் தெரியாது'' என்றார் அவர். மறுபேச்சுப் பேசாமல் சாப்பிடுவதற்காக நான் எழுந்தேன். அந்தத் தம்பதிகள் என்னை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போனார்கள். சாப்பிட நான் உட்கார்ந்தபோது நிமிர்ந்து பார்த்தேன். சுவரில் மோகனப்புன்னகையுடன் **மகாத்மா காந்தியடிகளின்** படம் காட்சி தந்தது.





# 6. வேடிக்கை பார்க்கிறீர்களே !

மன்னார் மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற ஆலயமான **திருக்கேதீஸ்வரம்** சென்றேன். இலங்கையில் சரித்திர காலத்திற்கு முற்பட்ட மிகவும் புராதனமான கோவில் இது. மற்றொரு புராதனமான கோவில் திரிகோணமலையிலுள்ள '**கோனேஸ்வரர்**' ஆலயம் ஆகும். இவை இரண்டும் பாடல்பெற்ற ஸ்தலங்களாகும்.

இராவணன் வழிபட்ட ஆலயம் இது என்றும் சொல்லப்படுகிறது. பௌத்த இலக்கியங்களும் இந்த ஸ்தலத்தை ''**மகாதீர்த்த**' என்று குறிப்பிடுகிறது. இதன் மூலம் கி. மு. 3-ம் நூற்றாண்டிலிருந்தே இது சிறந்த துறைமுகமாக விளங்கியது என்பது புலப்படுகிறது. பண்டைய நாட்களில் இத்துறைமுகம் ''**மாதோட்டம்**'' என வழங்கப்பட்டது.

சிங்களரின் மூதாதையரான விஜயனும் அவனுடைய தோழர்களும் மாதோட்டத் துறைமுகத்தில்தான் வந்திறங்கினார்கள். விஜயனுடன் வந்த உபதீசன் என்னும் பிராமணன் இக்கோவிலில் பூஜை செய்தான் என வரலாறு கூறுகிறது.

கி. பி. 6-ம் நூற்றாண்டில் இந்தக் கோவில்களில் திருப்பணிகளைப் பாண்டிய மன்னர்கள் செய்தனர். 7, 9-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும் சுந்தரரும் இக்கோவிலைப் பற்றித்திருப்பதிகங்கள் பாடினார்கள்.

''**வங்கம் மொழிகின்ற கடல் மாதோட்ட**'' மாநகரின் உன்னத நிலையினையும் அங்கே தமிழர்கள் செறிந்து வாழ்ந்து தனி அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்திய வரலாற்றினையும் "**ராஜரத்தினாகரம்**" என்னும் நூல் விளக்குகிறது.

கி. பி. 1028-ம் ஆண்டில் **இராஜேந்திர சோழ மன்னனின்** ஆட்சிக் காலத்தில் மாதோட்டம் மிகவும் அழகான நகரமாகக் காட்சி தந்தது. 10 சதுர மைல் பரப்பளவில் அமைந்திருந்த இந்நகரம் விசாலமான வீதிகளும் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த நகரமாகக்காட்சி தந்தது எனப்பழைய கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன. இந்தக் கோவில்களில் பல திருப்பணிகளை இராசேந்திர சோழன் செய்தான். கி. பி. 13-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் முதலாம் **சுந்தரபாண்டியன்** இக்கோவிலுக்குத் திருப்பணிகள் செய்தான்.

கி. பி. 16-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து 18-ம் நூற்றாண்டின் இறுதிவரை இக்கோவிலுக்கும் நகரத்திற்கும் அழிவு காலமாகும். கி. பி. 1545-ல் மாதோட்ட நகரத்தின் ஒரு பகுதியைக் கடல் பொங்கிவந்து அழித்தது.

கி. பி. 1585-ல் மன்னார் பகுதிக்கு வந்த போர்த்துக்கீசியர் இந்தக் கோவிலுக்குள்ளும் புகுந்து கொள்ளையடித்ததோடு, கோவிலையும் இடித்துத் தகர்த்தனர். ஆலயத்தில் இடித்த கற்களைக்கொண்டே மன்னார் துறைமுகத்தைக் கட்டினர்.

ஆலயம் அழிந்து இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர்க் கோவில் இருந்த இடத்தில் மண்மாரி பொழிந்து அவ்விடம் மணல் மேடாகிவிட்டது. இதைத் தொடர்ந்து 19-ம் நூற்றாண்டில் நடுப்பகுதி வரை இக்கோவிலில் வழிபாடு இல்லை.

கி. பி. 1872-ல் **ஆறுமுக நாவலர்பெருமான்** அவர்கள் மறைந்த இக்கோவிலை மக்களுக்கு நினைப்பூட்டினார். '**மறைந்த ஒரு மாமருந்து இருக்கிறது; ஒரு தேன்பொந்து இருக்கிறது; ஒரு திரவியம் இருக்கிறது; அதைக் கண்டறிய வாரீர்**'' என ஈழம் வாழ் மக்களுக்கு நினைவூட்டி எழுச்சிபெறச் செய்தார்.

இந்தப்புராதன ஆலயமிருந்த இடத்தை விலைக்கு வாங்கி அகழ்வாராய்ச்சி நடத்தி மீண்டும் அந்த இடத்தில் ஆலயத்தினை அமைக்க வேண்டுமென நாவலர்பெருமான் முயற்சி செய்தார். ஆனால் அவர் காலத்தில் இந்தக் கனவு நனவாகவில்லை. கி. பி. 1893-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதி மண் மூடிக்கிடந்த இந்த இடத்தை ஈழ மக்கள் சார்பில் **திரு. அரு. அரு. பழநியப்பச்செட்டியார்** என்னும்



பெருமகனார் ஏலத்தில் வாங்கினார். அதைத் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி நடத்திப்புராதன ஆலயம் இருந்த இடத்தையும் கிணற்றையும் சிவலிங்கத்தையும் நந்தி, விநாயகர் முதலான விக்கிரகங்களையும் கண்டு எடுத்தனர். கி. பி. 1903-ல் புதிய கோவிலின் குடமுழுக்கு நடைபெற்றது.

பண்டைய நாள் முதற்கொண்டு மாதோட்ட நகரத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. சம்பந்தர், சுந்தரர் போன்ற சமயக்குரவர் இக்கோவிலைப் பாடியதிலிருந்தும் இராசேந்திர சோழன், சுந்தரபாண்டியன் போன்ற மன்னர்கள் இக்கோவிலுக்குத் திருப்பணிகள் செய்ததில் இருந்தும் இந்நகரம் தமிழர்களின் நகரமாகவே இருந்தது என்பதும் தமிழ்நாட்டோடு நெருங்கிய தொடர்புகொண்டு இருந்தது என்பதும் புலப்படுகிறது. திருக்கேதீஸ்வரர் கோவிலில் இருந்து தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருக்குற்றாலத்திலுள்ள 'குறும்பலா ஈஸ்வரர்' ஆலயத்தில் நித்திய தீபச் செலவுக்குப் பொருள் அனுப்பப்பட்டதாக ஒரு கல்வெட்டுச் சான்று கூறுகிறது.

பண்டைத் தமிழர்களின் சிறப்புமிக்க நகரமாக விளங்கிய மாதோட்டத்திற்குச் சென்றபோது மேலேகண்ட நினைவுகளுடன் நான் சென்றேன். கம்பீரமாக எழுந்து நின்ற அந்தக் கோவிலின் கோபுரத்திற்கு அருகில் சென்று நாங்கள் இறங்கினோம். பெருமித உணர்வுடன் இறங்கிய என்னை, அங்குக்கண்ட காட்சிகள் நிலைகுலையச் செய்தன.

அந்தக்கோவிலுக்கு வெளியே பூசைச் சாமான்கள் விற்கும் ஒரு கடையின் பக்கத்தில் பக்தர்கள் சிலரைச்சந்தித்தேன். நான் வந்திருக்கும் செய்தி அறிந்த கோவில் அர்ச்சகர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சொன்ன செய்திகள் வேதனை தரும் செய்திகளாகும்.

இந்தக் கோவிலின் கொடிக்கம்பம் வரையிலும் சிங்கள இராணுவ வெறியர்கள் வந்து அட்டகாசம் செய்திருக்கிறார்கள். கோவிலுக்கு வந்த பக்தர்களை விரட்டி விரட்டிச் சுட்டிருக்கிறார்கள், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு வெளியூர்களில் இருந்த யாத்திரிகர்கள் யாரும் இங்கு வருவது கிடையாது. தபால் சேவையும் அறவே இல்லை. எனவே வெளி நடப்பு எதுவும் இங்கு உள்ளவர்களுக்குத் தெரியாது. கோவில் நிலங்களிலிருந்து வருமானமும் தற்போது இல்லை. பக்தர்கள் வராததனால் அவர்களின் காணிக்கைகளும் வெகுவாகக்குறைந்துவிட்டன. எனவே பூசை காரியங்கள் சிரமத்துடன்தான் நடத்தப்படுகின்றன. முன்பு போர்த்துக்கீசியர் காலத்தில் இந்தக் கோவில் அழிக்கப்பட்டதைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போல இப்போது சிங்களவர்களால் இக்கோவில் அழிக்கப்படலாம் என்று அச்சம் தெரிவித்தனர்.

இக்கோவிலுக்கு நான் சென்று வந்த பிறகு 1986 பிப்ரவரி மாதம் இக்கோவிலின் மீது விமானத்தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு பகுதி அழிந்ததாகவும் அர்ச்சகர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் செய்தி கிடைத்தது.

இந்தக் கோவிலைச் சுற்றி ஏராளமான மடங்கள் இருக்கின்றன. இந்த மடங்கள் எல்லாம் இப்போது அகதிகளின் முகாம்களாகக் காட்சி தருகின்றன. இந்த மடங்களுக்கு நான் சென்று அங்கிருந்த அகதிகளைச் சந்தித்தேன். என்னைப் பார்த்தவுடன் அங்கிருந்த பெண்கள் கதறி அழுதார்கள். அவர்களின் சோகக் கதைகள் எனது நெஞ்சைப் பிழிந்தது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிக்குளம் என்ற ஊரைச் சேர்ந்த சில அகதிகளைச் சந்தித்தேன். இவர்களெல்லாம் இரண்டாவது முறையாக அகதிகளாக ஆனதாகக் கூறினர். இவர்களில் பலர் இந்திய வம்சாவழித் தமிழர்கள் என அழைக்கப்படும் மலைத்தோட்டத் தமிழர்கள் ஆவர். மலைத்தோட்டப் பகுதியில் வாழ்ந்துவந்த இவர்கள் 1977-ம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தின்போது சிங்களர்களின் வெறியாட்டத்துக்கு இரையாகி அகதிகள் ஆனார்கள். அதற்குப் பின்னர் செட்டிக்குளத்தில் குடியேறி ஓரளவுக்குத் தங்களுடைய உழைப்பினால் மறுவாழ்வினை அமைத்துக்கொண்டார்கள். ஆனால் மீண்டும் சிங்கள இராணுவ வெறியர்களினால் விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாகி இருக்கிறார்கள். உடுத்திய துணிகளோடு ஓடி வந்திருக்கும் அவர்களின் நிலையைக் காணப்பரிதாபமாக இருந்தது. மாற்றுத் துணிகளுக்குக்கூட வழியில்லாமல் இரத்தக் கறைபடிந்த, அழுக்கு ஏறிய ஆடைகளுடன் புலம்பிய அந்தச்சகோதரிகளுக்கு என்னால் ஆறுதல் கூறவே முடியவில்லை.

'*பார்வதி*' என்னும் நடுத்தர வயதுள்ள ஒரு பெண்மணி அவளின் சோகக் கதையைச் சொன்னாள். 25 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பண்ணை அவளின் குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்தது. வசதியான வாழ்க்கையை நடத்திவந்த குடும்பம் அது. புலிப்படையைச் சேர்ந்த இளைஞர்கள் சிலருக்கு உணவு அளித்து உதவினாள் என்பதற்காகப் பார்வதியின் கணவனைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். 13 வயதுடைய தன்னுடைய மகளுடன் உயிர் தப்பி அகதிகள் முகாமில் தஞ்சம்புகுந்து அவதிப்படுகிறார். நல்ல வாழ்வு வாழ்ந்துவிட்டு ஒரு



வேளைச் சோற்றுக்கு அகதிகள் முகாம்களில் தட்டு ஏந்தி நிற்கும் அவல நிலைக்கு ஆளானபோதும் பார்வதியின் மன உறுதியைக் கண்ட நான் வியந்தேன். அவருடைய சொற்கள் இன்னமும் என் காதுகளில் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றன. "இந்தப்பூமி எங்களுக்குச் சொந்தமான பூமி. நாங்கள் வாழையடி வாழையாக வாழ்ந்த பூமி. இதைவிட்டுவிட்டு எதற்காக இந்தியாவுக்கு ஓடிவர வேண்டும். இங்கேயே போரிட்டுச்சாவோமே தவிர உயிர் தப்பி இந்தியாவுக்கு ஓடிவர விரும்பவில்லை. இவ்வளவு தமிழ் மக்கள் அழிந்துகொண்டு இருக்கிறோம். நாங்கள் அழிய அழிய இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது. இந்திய மக்கள் சுதந்திரமாக வாழ்வதைப் போல நாங்களும் சுதந்திர மனிதர்களாக வாழ உதவி செய்யுங்கள் அதுபோதும். எங்களுக்கு என்று ஒரு நாடு கிடைத்து, ஒருநாள் வாழ்ந்தாலும்போதும். வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம்" என்று அந்தப்பெண்மணி அழுதுகொண்டே கூறியபோது என் நெஞ்சம் கனத்தது. அதிலும் "**இவ்வளவு மக்கள் அழிய அழிய இந்தியா பார்த்துக்கொண்டுதானே இருக்கிறது**" என்று அந்தப் பெண்மணி சொன்னது வேதனையைத் தந்தது.

ஆம்! எத்தனை ஆண்டுக்காலமாக அவர்கள் தொடர்ந்து செத்துக்கொண்டே இருக்கிறார்கள். நாமும் வேடிக்கை பார்த்துக்கொண்டு அந்த ஓலக் குரலைக் கேட்டுக்கொண்டு எத்தனை ஆண்டுக்காலமாக சும்மா இருக்கிறோம். அந்தப் பெண்மணி சொன்னதில் என்ன தவறு?

இந்திராணி என்ற ஒரு இளம்பெண் கையில் 6 மாதக் கைக் குழந்தையுடன் என் முன்னே வந்தாள். "என்ன?" என்று கேட்டேன். பதில்சொல்லத் தொடங்கியபோதே விம்மலும் அழுகையும் பீரிட்டுக் கிளம்பின. பச்சிளம் குழந்தையும் அழுதது. அவளும் கதறி அழுதாள். சூழ நின்ற பெண்களும் அழுதார்கள். என் விழிகளிலும் நீர் கசிந்தது. பதினெட்டே வயதான அந்த இளம் பெண்ணின் கணவனை இராணுவம் பிடித்து சென்றுவிட்டது. அவன் கதி என்ன ஆனது என்பது இன்னமும் தெரியவில்லை கையில் குழந்தையுடன் அவள் துடித்த துடிப்பு துயரகரமானது. அவளுக்கு ஆறுதல் கூறினேன். நம்பிக்கை ஊட்ட முயற்சித்தேன். விடை பெற்றுக் கொண்டு வெளியே வரும் போது திருக்கேதீஸ்வரர் கோபுரம் கம்பீரமாகத் தெரிந்தது.

இராசேந்திரசோழனும் சுந்தரபாண்டியனும் வீரம் விளைவித்த நிலத்தில், சம்பந்தரும் சுந்தரரும் பக்திப் பாமாலை பொழிந்த புனிதத் திருத்தலத்தில் இன்று தமிழர்கள் அகதிகளாகத் தேம்புகிறார்கள். தமிழ் மங்கையரின் அழுகை ஒலி அலைகடலின் ஒலியையும் மிஞ்சி ஒலிக்கிறது. தமிழ்ச்சமுதாயத்திற்கு நேர்ந்துவிட்ட இந்தச் சோதனையை எண்ணி எண்ணி என் மனம் குமைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 7. தெய்வத்திற்கும் கண்திறக்கவில்லை

கல்லுடைக்கும் குவாரி ஒன்றை இன்று பார்த்தேன். பூமியைத் தோண்டி உள்ளே இருக்கும் பாறைகளைப் பிளந்தெடுத்துச் சல்லிக்கற்களாக உடைக்கும் வேலை இங்கு நடைபெறுகின்றது. பல இடங்களில் மிக ஆழமாகக் குடைந்திருந்தார்கள். சாலையின் ஓரத்தில் எங்கள் வாகனங்கள் வந்து நின்றபோது அங்கு மனித நடமாட்டமே இல்லாததைப் பார்த்தேன். என்னுடன் வந்த சில இளைஞர்கள் இறங்கிப் போய்ச் சிறிது நேரம் கழித்துப் பலருடன் திரும்பிவந்தனர். அந்த குவாரியில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் அவர்கள். சிறுகச்சிறுக ஆணும் பெண்ணுமாகச் சுமார் 30 பேர் கூடிவிட்டனர்.

எங்கள் வாகனங்கள் வரும் சப்தம் கேட்டு இராணுவ லாரிகள் தான் வருகின்றன என்று அங்கிருந்தவர்கள் அஞ்சி ஓடி ஒளிந்திருக்கிறார்கள். பிறகு நமது தோழர்கள் போய் விபரம் சொன்ன பிற்பாடு தைரியமாக வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கை துயரம் நிறைந்தது. சுமார் 350 குடும்பங்கள் இந்தக் குவாரியில் வேலை செய்து பிழைத்தன. அவர்களின் அமைதியான வாழ்வில் ஒருநாள் புயல் வீசிற்று. சிங்கள இராணுவம் இவர்களின் குடிசைகளைத் திடீரெனத் தாக்கிக்கொளுத்தியது. குவாரி தொழிலாளர்களுக்குத் தொண்டாற்றி வந்த புலிப்படையைச் சேர்ந்த "நீதி" என்ற இளைஞரைச் சிங்கள இராணுவம் கைது செய்து எரியும் குடிசைக்குள் வீசி எறிந்து கொன்றது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அங்கே இருந்த பெரும்பாலோர் வெளியேறிவிட்டனர். பலர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று விட்டனர். தற்போது 30 குடும்பங்கள் மட்டுமே அங்கு உள்ளன.



வாழ்வதே ஒரு பிரச்னையாக அவர்களுக்கு இருக்கிறது. திட்டவேலைகளோ, கட்டடங்கள் கட்டும் வேலைகளோ அறவே இல்லாததால் சல்லிக் கற்களுக்குக் கிராக்கி இல்லை. என்றாலும் பிழைப்பதற்கு இவர்களுக்கு வேறு வழியில்லை. மீண்டும் தொழிலைத் தொடங்கவும் அச்சம். இந்த நிலையில் புலிகள் அவர்களுக்கு உதவ முன் வந்தனர். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அளித்து மீண்டும் தொழிலைத் தொடங்கவும் செய்திருக்கின்றனர். அந்தத் தொழிலாளிகள் வேலை செய்வதைப் போய் பார்த்தேன். வெறும் கடப்பாறையினால் பாறைகளை மிகுந்த சிரமத்துடன் இடித்துப்பெயர்த்துக் கொண்டிருந்தனர்.

"இவற்றை வெடி வைத்துத் தகர்க்கக் கூடாதா!" என்று கேட்டேன்.

"வெடிமருந்து வைத்திருப்பதே சட்டப்படிக் குற்றம். ஆகவே அவற்றை உபயோகிக்க முடியவில்லை" என்று அவர்கள் சொன்னார்கள்.

ஆணும் பெண்ணுமாகப்பகலும் இரவும் உழைத்து உழைத்து உருக்குலைந்து போயிருந்தார்கள். அவர்களுடைய குழந்தைகள் அந்த வெயிலில் வாடி வதங்கிக்கொண்டிருந்தன. எந்த நிமிடத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் நிம்மதியற்ற வாழ்க்கையை அவர்கள் நடத்திக்கொண்டிருந்தனர்.

கல்வி அறிவற்ற பாமரர்களாகக் காட்சி தந்த அவர்களும் சுதந்திர உணர்வு பெற்றவர்களாகவே விளங்கினர்.

"எங்களுக்கு என்று ஒரு நாடு அமைந்தாலொழிய எங்களுக்கு விமோசனம் இல்லை" என அவர்கள் உறுதியாக கூறினர். அவர்கள் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள்கூட புலிப்படையில் சேர்ந்து இருப்பதாகப் பெருமையுடன் தெரிவித்தார்கள்.

"இந்தியாவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று நான் கேட்டபோது,

ஒரு பெண்மணி சொன்னார். "இந்தியா தான் எங்களுக்குத் தெய்வம்; அந்தத் தெய்வத்திற்கு இன்னமும் கண்திறக்கவில்லை" என்றார்.

கடினமான பாறைகளைக்கூடப் பிளந்தெடுக்கும் அவர்களால் இந்தியாவின் இதயத்தைத் தொட்டு அதன் உதவியைப் பெறமுடியாத பரிதாபத்தை எண்ணி மனம் குமைந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 8. மடுமாதா தேவாலயம்

மருதமடு என்னும் இடத்திற்கு ஒருநாள் காலையில் போனோம். அங்கு மிகப்பெரிய கிருஸ்தவ தேவாலயம் ஒன்று உள்ளது. மடுமாதா கோவில் என்று அழைக்கப்படும் அந்தத் தேவாலயம் இப்போது ஆயிரக் கணக்கான அகதிகளின் சரணாலயமாகத் திகழ்கிறது. அங்கே நாங்கள் சென்றபோது நூற்றுக்கணக்கிலே மக்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள். வவுனியா மாவட்டத்திலுள்ள இலுப்பக்குளம், செட்டிக்குளம் போன்ற பல்வேறு ஊர்களிலே வாழ்ந்துவந்த அவர்கள் சகலவற்றையும் இழந்து அகதிகளாக இங்கே வாழ்கிறார்கள், அந்தத் தேவாலயத்திலுள்ள கிருஸ்தவத் துறவிகளும் கிருஸ்தவக் கன்னிகளும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துவருகிறார்கள். உணவு, உடை அளித்துக் காப்பாற்றுகிறார்கள். இங்கேயும்கூடத் தமிழர்களை நிம்மதியாக வாழச்சிங்கள இராணுவம் விட்டுவைக்கவில்லை. நான் அங்கு செல்வதற்கு முதல்நாள் ஹெலிகாப்டரில் வந்து அந்த மக்களைச் சுட்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக யாரும் சாகவில்லை.

ஹெலிகாப்டர் விமானம் சுட்ட குண்டுகளை என்னிடம் காட்டினார்கள். அகதிகள் தங்கியிருக்கும் இடங்களின் கூரைகளைக்கூட குண்டுகள் துளைத்திருப்பதை நான் பார்த்தேன். ஒரு வயதான மூதாட்டி என்னிடம் பேசும்போது தாங்கள் தப்பிவந்த கதையை விவரித்தார். இரவும் பகலுமாகக்காடுகளில் மறைந்திருந்து இடைவிடாமல் நடந்து பசியும் பட்டினியுமாக இங்கு வந்து சேர்ந்ததாகக் கூறினார். வழியில் நிறை கர்ப்பிணியான ஒரு பெண்மணி குழந்தைபெற்றதையும், அதையும் தூக்கிக்கொண்டு தாங்கள் வந்ததையும் விவரிக்கும்போது



அந்த மூதாட்டியின் குரல் தளதளத்தது. "முக்கால்வாசி சனங்கள் அழிந்தாயிற்று; மிச்சம் இருக்கும் கால்வாசி சனத்தையாவது காப்பாற்றுங்கள்" என்று கூறினார்.

இன்னொரு வயதான பெரியவர் பேசும்போதே துக்கம் மேலிட்டு அழுதார். அவரைத் தேற்றினேன்.

"எங்கள் இளைஞர்களுக்கு ஆயுதம் கொடுங்கள். அவர்கள் வீரமுடன் போராடி எங்களைக் காப்பாற்றுவார்கள். நாங்களும் போராடிச் சாகத் தயாராக இருக்கிறோம்" என்று அந்தத் தள்ளாடும் வயதுள்ள கிழவர் உணர்ச்சி பொங்கக் கூறினார்.

சமரசப் பேச்சு வார்த்தை, போர்நிறுத்தம், எல்லாம் ஏமாற்று வேலை; சுதந்திரத்தைத் தவிர வேறு ஒன்றும் எங்களுக்குத் தேவையில்லை என்று அந்தக் கிழவர் சொல்லி முடித்தபின் "உங்களுக்கு இருக்கும் இந்த உணர்வு எல்லோருக்கும் இருக்கிறதா? என்று கேட்டேன்.

சுற்றிலும் நின்ற நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஒரே குரலில் 'ஆம்' என்று முழங்கினர்.

"ஈழம்தான் இதற்குப் பரிகாரம் என்று நினைக்கிறீர்களா?" என்று அவர்களை நோக்கிக் கேட்டேன்.

"ஆம் ஈழத்தைத் தவிர வேறு எதுவும் எங்களுக்குத் தேவையில்லை" என்றனர்.


போராளிகளுக்கு இந்தியா உதவ வேண்டுமென்றும் அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

அங்கிருந்த கிருஸ்தவத் துறவிகள், கிருஸ்தவக் கன்னிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசினேன். அகதிகளுக்கு அவர்கள் செய்து வரும் உதவிகளைப் பாராட்டினேன். நன்றி கூறினேன். தங்களின் கடமையைச் செய்வதாக அவர்கள் அடக்கமாகச்சொன்னார்கள். கிருஸ்தவத்தேவாலயமாக இருந்தாலும்கூட அங்கு ஏராளமான இந்துக்களுக்கும் புகலிடம் கொடுக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். தமிழர் என்ற உணர்வோடு எல்லோரும் ஒற்றுமையாக இயங்குவதைப் பார்த்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 9. மனத்தில் மூண்டதீ

இம்முறை எங்கள் பயணம் ஒரு லாரியின் மூலம் நடந்தது. சேறும் சகதியும் நிறைந்த காட்டுப் பாதையில் எங்கள் லாரி சென்றது. இருபுறமும் அடர்த்தியான மரங்கள் நிறைந்த அந்தப் பாதை மிகக் குறுகலானது. ஒரு லாரி மட்டுமே அதில் நுழைந்து செல்ல முடியும். தடத்திலிருந்து கொஞ்சம் விலகினாலும் மரங்களின்மீது லாரி மோதிவிடும். அந்த நெருக்கடியான பாதையில் மரங்களின்மீது மோதாமலும், சேற்றில் சிக்காமலும் மிகத் திறமையாக லாரியை ஓட்டிய அந்த இளைஞனின் பெயர் '**என்ஜினியர்**' என்பதாகும். இவனைப்பற்றிப் பின்னர் கூறுகிறேன்.

அருகிலிருந்த தளபதி விக்டர் அந்த லாரி அவர்களுக்குக் கிடைத்த வரலாற்றினை விவரித்தார். நாங்கள் பயணம் செய்த அந்த லாரி "போலீஸ்படைக்குச்" சொந்தமானது. லாரி நிறையத் தேங்காய் மட்டைகளை ஏற்றிக்கொண்டு தேங்காய் வியாபாரிகள் போல மாறுவேடம் பூண்டு போலீஸ் ஒற்றர்கள் கிராமப்புறத்திற்கு வந்தபோது விடுதலைப்புலிகள் அவர்களை அடையாளம் கண்டு லாரியை மடக்கிப் பிடித்துவிட்டனர். லாரியையும் கைப்பற்றினர். விடுதலைப்புலிகள் வசம் இருக்கும் வேன்கள், ஜீப்கள், மோட்டார் சைக்கிள் போன்ற பல வாகனங்களும் இவ்வாறு அரசாங்கத்திடமிருந்து கைப்பற்றப்பட்டவை தாம்.

நாங்கள் தொடர்ந்து அந்தக் காட்டுப்பாதையில் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று இராணுவ 'ஹெலிகாப்டர்' ஒன்று பறந்து வரும் சப்தம் கேட்டது. உடனே லாரியை அடர்த்தியான மரம் ஒன்றின்



நிழலில் நிறுத்தினார்கள். எங்களுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்றவருடன் விக்டர் வாக்கி-டாக்கி மூலம் பேசினார். பதிலுக்குக் கிடைத்த செய்தி இதுதான். "நாம் போய்ச்சேர வேண்டிய நெடுஞ்சாலையில் இராணுவ லாரிகள் கூட்டமாகச் செல்வதாகவும் அந்தச் சந்திப்பில் 25 இராணுவ வீரர்கள் காவல் புரிவதாகவும் அந்தத் தகவல் கூறியது". இந்தத் தகவலைக் கேட்டவுடன் அனைவரும் பரபரப்பு அடைந்தார்கள். எல்லோரும் கீழே குதித்து இறங்கினார்கள். என்னையும் இறங்கும்படிச்சொன்னார்கள். நானும் இறங்கினேன். எனது பாதுகாப்புக்காக வந்த புலிகள் ஒவ்வொரு மரத்தின் மறைவிலும் தயார் நிலையில் நின்றனர். என்னை அழைத்துக் கொண்டுபோய் ஒரு பிரமாண்டமான மரத்தின் அருகில் விக்டர் நிற்க வைத்தார். பிறகு தன்னுடைய தோழர்களுக்கு ஏதோ உத்தரவிடத் தொடங்கினார். மேலே ஹெலிகாப்டர் பறந்து சென்றது நன்றாகத் தெரிந்தது. மரத்தின் மறைவில் நின்ற நான் எனது சட்டைப் பையிலிருந்த குறிப்புப் புத்தகத்தை எடுத்து எழுதத் தொடங்கினேன். திடீரென்று சிரிப்பொலி கேட்டது. இந்தப்பயங்கரமான சூழ்நிலையில் அந்த இளைஞர்கள் சிரிப்பதைக் கண்டு திகைத்துப்போனேன். என் திகைப்பைக் கண்டு விக்டர் சிரித்துக்கொண்டே "ஒன்றுமில்லை அண்ணா! எதிரிவிமானம் பறக்கும் இந்தப்பயங்கரமான சூழ்நிலையில் கூட குறிப்புகள் எழுதத் தொடங்கி விட்டீர்களே! என்பதைப் பார்த்துதான் இவர்கள் சிரிக்கிறார்கள்" என்றார்.

"நீங்கள் எல்லோரும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு தயாராக இருக்கிறீர்கள் என் கையில் உள்ளது இந்த நோட்டுப்புத்தகமும் பேனாவும் தான். அதைத்தவிர வேறு எதை நான் கையில் எடுக்க முடியும்" என்று சொல்லிவிட்டு நானும் சிரித்தேன்.

சிறிது நேரம் கழித்து மீண்டும் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். எரிந்துபோன சில பகுதிகளைப் பார்க்க நாங்கள் செல்ல இருந்த இடத்திற்கு அருகே இராணுவம் சுட்டுக்கொண்டிருப்பதாக்ச் செய்திகள் கிடைத்தன. எங்கள் பயணவழிகளை மாற்றி வேறு பாதையில் சென்றோம். வழியில் பிரமாண்டமான கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றைக் கண்டோம். அதன் அருகே எங்கள் வேன்கள் நிறுத்தப்பட்டு நாங்கள் இறங்கினோம்.

"**பரப்புக்கடந்தான் கர்த்தர்கோவில்**" என அழைக்கப்படும் அந்தத் தேவாலயம் மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய கிறிஸ்தவத் தேவாலயமாகும். ஆண்டுதோறும் பங்குனி, சித்திரை தபசுக் காலமாகும். இத்திருவிழாவின்போது பல்லாயிரக்கணக்கில் மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்குக்கூடுவார்களாம். அந்தக் கோவில் இப்போது பாழடைந்து கிடக்கிறது. அந்தக் கோவிலுக்குள்ளே நான் நுழைந்து பார்த்தபோது வௌவால்கள் சடசடவென்று சிறகடித்துப் பறந்தன. ஆள் நடமாட்டமற்ற அந்தச் சூழ்நிலையைப்பார்ப்பதற்கு வேதனையாக இருந்தது. அருகேயுள்ள ஒரு வீட்டில் இருந்த ஒருவரைப்புலிகள் அழைத்து வந்தார்கள். அவர்களிடம் விசாரித்தபோது அவர் சில தகவல்களைச் சொன்னார். ''இந்தத்தேவாலயத்தில் வழிபாடுகள் நடந்துகொண்டிருந்த வேளையில் சிங்கள வெறியர்கள் உள்ளே சென்று சுட்டார்கள். அதன் விளைவாக நாலுபேர் அந்த இடத்திலேயே துடிதுடித்துச் செத்தார்கள். மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். வழிபாடு நடத்திக்கொண்டிருந்த பாதிரியாரும் தப்பி ஓடினார். ''புனிதமான மரியன்னையின் திருவுருவத்தையும் அந்தப் பாவிகள் விட்டுவைக்கவில்லை. அதையும் சுட்டுச் சேதப்படுத்தினார்கள். அலங்கோலமாகக்காட்சித்தரும் அந்தத் தேவாலயத்தைச் சுற்றிபார்த்தேன். இப்போது அங்கே பாதிரியாரும் கிடையாது. பக்தர்களும் வருவது இல்லை. இந்த விபரத்தையெல்லாம் சொன்னார். இன்னொன்றையும் அவர் சொன்னார். ''மன்னார் மாவட்டத்தில் 'மடுமாதா கோவில்' தான் பெரியது. அடுத்த பெரிய கோவில் 'திருக்கேதீஸ்வரம் கோவில்' மூன்றாவது பெரிய கோவில் இந்தக் கோவில்'' என்றார். அவர் கிறிஸ்தவராக இருந்த போதிலும் எந்த வேறுபாடும் இல்லாமல் இவ்வாறு கூறியது என்னைக் கவர்ந்தது. இந்து, கிருஸ்தவர், முஸ்லீம் என்று மத வேறுபாடுகள் கொஞ்சமும் இல்லாமல் ஈழநாட்டுத் தமிழர்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு இது சான்றாக விளங்கிற்று.

பரப்புக்கடந்தான் கர்த்தர் கோவிலிலிருந்து நாங்கள், சில மைல்கள்தான் சென்று இருப்போம். எங்களுக்கு எதிரில் மக்கள் கூட்டங்கூட்டமாக ஓடி வந்துகொண்டிருந்தனர். சாலைகளிலும் வயல்களிலும் வரப்புகளிலும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தலைத்தெறிக்க ஓடுவதைப் பார்த்து எங்கள் வண்டியை நிறுத்தி விசாரித்தோம். சிங்கள ராணுவம் வருவதாக அவர்கள் சொன்னார்கள். இராணுவம் வந்தால் மக்கள் எந்த அளவுக்கு பீதி அடைகிறார்கள் என்பதை நான் அப்போது பார்த்தேன். வீட்டு வேலைகளையெல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு அருகிலுள்ள காட்டை நோக்கிமக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்ற லாரியைச் சற்றுத்தொலைவிலிருந்த ஒரு வீட்டின் மறைவில் கொண்டுபோய் நிறுத்தி என்னை அந்த வீட்டிற்குள் கொண்டுபோய்ப்பத்திர்மாக உட்கார வைத்துவிட்டு மற்றவர்கள் தயார் நிலையில் ஆயுதங்களுடன் வெளியே நின்றார்கள்.



வீட்டிற்குள் தனித்துவிடப்பட்ட நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அந்த வீட்டிற்குள் யாரும் இல்லை. சுவரில் ஏசுநாதர் படமும் குடும்பப் புகைப்படங்கள் சிலவும் காட்சி தந்தன. இது ஒரு கிருஸ்தவ குடும்பத்தின் வீடாக இருக்க வேண்டும். உள்ளே சமையல் அறையிலிருந்து ஏதோ மணம் காற்றில் மிதந்து வந்தது. குரல் கொடுத்தேன். பதிலில்லை. மெதுவர்க எழுந்து சமையலறைக்குள் எட்டிப் பார்த்தேன். யாரும் இல்லை. அடுப்பிலிருந்த சட்டியில் ஏதோ குழம்பு கொதித்துக்கொண்டிருந்தது. தீயும் எரிந்துகொண்டிருந்தது. எரிந்து கொண்டிருக்கும் தீயை அணைக்காமலும் கொதித்துக்கொண்டிருக்கும் சட்டியை இறக்காமலும் அந்தக் குடும்பத்தின் தலைவி போட்டது போட்டபடி கிடக்க உயிர் தப்பி ஓடி இருக்கிறார் என்பது புரிந்தது. எரிந்துகொண்டிருந்த விறகை வெளியே இழுத்துத் தீயைக் குறைத்தேன். கொதித்துக்கொண்டிருந்த இருப்புச் சட்டியின்மீது ஒரு தட்டை எடுத்து மூடிவைத்தேன். எரிந்த தீ கொஞ்சங்கொஞ்சமாக அணைந்தது. ஆனால் என் **மனத்தில்** மூண்டெழுந்த தீ மேன்மேலும் பற்றி எரிந்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 10. ஈழமண் சிவக்கிறது

மேலும் நாங்கள் முன்னேறிச் சென்றோம். முன்னணிப் படையினரிடமிருந்து எங்களுக்குத் தகவல் வரவில்லை. ஏற்கனவே நேற்று இப்பகுதியில் இளைஞன் ஒருவனை இராணுவம் சுட்டுக்கொன்றுவிட்டது. அந்த இளைஞனின் இறுதிச் சடங்கு சம்பந்தமாகவே அப்பகுதியில் மீண்டும் இராணுவம் சுற்றுவதாகத் தளபதி விக்டர் கூறினார். இராணுவம் சுற்றித் திரியும் பகுதியிலேயே நாங்களும் திரிவதால் எந்த நேரத்திலும் இராணுவத்தை நேருக்கு நேராகச் சந்திக்க நேரலாம் என்றும் அவர் சொன்னார்.

சிறிது நேரத்தில் "வாக்கி–டாக்கி" மூலம் தகவல் கிடைத்தது. **'உயிலங்குளம்'** என்ற இடத்திலிருந்து முன்னணிப் படையினர் பேசினார்கள். அந்த ஊரில் இரண்டு இளைஞர்களை இராணுவம் சுட்டுக்கொன்றுவிட்டதாகவும் உடனடியாக அங்கு வரும்படியாகவும் கூறினார்கள். நாங்கள் அந்த ஊரை நோக்கிப்புறப்பட்டோம். சுமார் இரண்டு மைல் தொலைவில் அந்த ஊர் அமைந்திருந்தது. **உயிலங்குளத்தில்** நாங்கள் நுழைந்தபோது ஊரே சுடுகாடாகக்காட்சி தந்தது. எங்கும் மயான அமைதி. மக்கள் நடமாட்டமேயில்லை. வீடுகளில் கதவுகள் தாழிடப்பட்டு மக்கள் உள்ளே பதுங்கி இருந்தனர். எங்களுடைய வாகனங்கள் விரைந்து வருவதை அச்சத்தோடு ஒளிந்தும் மறைந்தும் பார்த்தனர்.

அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு வரும்படி முன்னணிப் படையினரிடமிருந்து தகவல் வந்தது. அதன்படி நாங்கள் அங்கு விரைந்து சென்றோம். தேவாலயத்திற்குள் எங்கள் வாகனங்கள் புகுந்து



நின்றன. அவசர அவசரமாக அனைவரும் கீழே இறங்கினோம். எங்களுக்கு முன்னால் வந்து சேர்ந்த தோழர்கள் விரைந்தோடி வந்து பதட்டத்துடன் சில செய்திகளைச் சொன்னார்கள். 10 நிமிடங்களுக்கு முன்னால் அங்கே இராணுவம் நுழைந்து சைக்கிளில் வந்துகொண்டிருந்த இரண்டு இளைஞர்களை ஈவு இரக்கம் இல்லாமல் சுட்டுக்கொன்றதாகவும், உடல்களை இராணுவ லாரிகளில் தூக்கிக்கொண்டு போய்விட்டதாகவும் கூறினார். அவருடன் பேசிக்கொண்டே நாங்கள் நடந்தோம்.

"இதோ! இதோ!" என்று அவர் எதையோ பரபரப்புடன் சுட்டிக்காட்டினார். சுட்டிக்காட்டிய திசையை நான் பார்த்தேன். கீழே தரையில் சில தோட்டாக்கள் சிதறிக்கிடந்தன. குனிந்து அவற்றைப் பொறுக்கியபோது திடுக்கிட்டேன். ஏனெனில் அவைகளிலுள்ள சூடு இன்னமும் தணியவில்லை. பாவிகள் அப்பொழுதுதான் சுட்டிருக்கிறார்கள். தோட்டாக்களைப் பொறுக்கிக்கொண்டு மேலும் சென்றோம். இரண்டு சைக்கிள்கள் சிதைந்தும் நசுங்கியும் கிடந்தன. சற்றுத்தூரம் தள்ளிக்கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவர் பயத்துடன் நின்றார். அவரை அணுகி என்ன நடந்தது என்று கேட்டேன்.

பீதியும் பதட்டமும் மேலோங்கிய குரலில் அவர் பேசத் தொடங்கினார். "தேவாலயத்திற்குள் நான் இருந்தபோது வெளியே திடீரென இராணுவ லாரிகள் வரும் சப்தமும் வெடிச்சப்தமும் கேட்டன. உடனே வாசலுக்கு வந்து எட்டிப்பார்த்தேன். தேவாலயத்திற்கு வரும் பாதையில் இரண்டு இளைஞர்கள் வேகமாகச்சைக்கிள்களில் வந்துகொண்டிருந்தனர். அவர்களை விரட்டிக்கொண்டு லாரிகள் வந்தன. அந்த லாரிகளுக்கு உள்ளே இருந்தே அந்த இளைஞர்களைச் சுட்டார்கள். இளைஞர்கள் இருவரும் சைக்கிள்களைக்கீழே போட்டுவிட்டு உயிர் தப்பி ஓடினார்கள். சிங்களச்சிப்பாய்களும் கீழே குதித்து அவர்களை விரட்டிக்கொண்டு போனார்கள். தேவாலயத்திற்கு பின்புறமுள்ள குளத்தருகே குண்டுகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. சிறிது நேரத்தில் அந்த இளைஞர்களின் இரத்தம் தோய்ந்த உடல்களைத் தரதரவெனத் தரையில் இழுத்துக்கொண்டு வந்து லாரிக்குள் வீசி எறிந்தார்கள். பிறகு கீழே கிடந்த சைக்கிள்களின்மீது லாரியை ஏற்றி இறக்கி அவற்றைச் சேதப்படுத்தினார்கள். என்ன செய்வது என்பது புரியாமல் நான் திகைத்து நின்றேன். அப்போது சிங்களச்சிப்பாய்களில் சிலர் என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருவன் என் நெஞ்சுக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டி மிரட்டினான். இன்னும் சிலர் தேவால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யத்திற்குள் புகுந்து வேறு யாரும் இருக்கிறார்களா என்று தேடிப்பார்த்தார்கள். நல்லவேளையாக ஒரு இராணுவ அதிகாரி அங்கு வந்து என்னைவிட்டு விலகும்படிச்சிப்பாய்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் சற்றுத்தயக்கத்துடன் விலகினார்கள். அந்த இராணுவ அதிகாரி அதிகாரக் குரலில் என்னையும் மிரட்டினார். "புலிகள் யாராவது வந்தால் உடனடியாக எங்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்களையும் சும்மா விடமாட்டோம்" என எச்சரித்தான்' கர்த்தர் அருளினால் எங்களைச் சுட்டுக்கொல்லாமல் விட்டு விட்டார்கள். இப்போதுதான் இங்கிருந்து போகிறார்கள். மீண்டும் வந்தாலும் வரலாம். இந்த வேளையில் நீங்கள் இங்கு வந்துவிட்டீர்கள். உங்களைப் பார்த்தால் உடனடியாகச்சுட்டுக்கொன்று விடுவார்கள்" என அவர் பதறினார்.

அவருக்கு நான் ஆறுதல் கூறினேன். அப்போது சற்றுத்தொலைவில் கிடந்த பொருள் என் கவனத்தை ஈர்த்தது. அருகில் சென்று குனிந்து எடுத்தேன். இரத்தக்கறை படிந்த ஒரு சட்டை கீழே கிடந்தது. சுடப்பட்டு இறந்தவரின் சட்டையாகத்தான் அது இருக்கவேண்டும். பிறகு தேவாலயத்தின் பின்பகுதியில் உள்ள குளக்கரைக்குச் சென்றோம். குளக்கரையில் நான் கண்ட காட்சி என் குருதியை உறைய வைத்தது. குளத்தின் நீர்ப்பகுதியை ஒட்டிருந்த மண் தரையில் திட்டுத்திட்டாக இரத்தம் கரைந்து பரவி அந்த மண்ணைச்சிவந்த மண்ணாக்கியிருந்தது. குளத்தின் நீரிலும் இரத்தம் கரைந்து கொஞ்சம்கொஞ்சமாகப் பரவிக்கொண்டிருந்தது. காற்று வீசுவதனால் அலைகள் எழுந்து குளத்தின் கரையில் மோதித் திரும்பும்போது இரத்தத்தின் மீதும் பரவி சிவப்பு அலைகளாக மாறிக்குளத்தின் தண்ணீரையே சிவக்கச்செய்துகொண்டிருந்த காட்சியைப் பார்த்து என் நெஞ்சம் கலங்கிற்று. **தமிழீழ இளைஞர்களின் இரத்தத்தினால் ஈழத்து மண் சிவப்பு மண்ணாக மாறி வருவதைக் கண்ணாரக் கண்டேன்.** சித்தம் நொந்தேன்,

பின்னர் விவரம் விசாரித்தபோது அந்த இரு இளைஞர்களும் புலிப்படையில் பயிற்சிக்காகச் சேர்ந்திருக்கும் இளைஞர்கள் என்று தெரிய வந்தது. **ஜெயரூபன், சகாயம்** என்ற அந்த இரு இளைஞர்களும் முகாமிலிருந்து விடுமுறைபெற்றுத்தங்கள் வீடுகளுக்கு வந்துவிட்டு முகாமுக்குத் திரும்பிச்செல்லும் வழியில் இராணுவத்திடம் சிக்கி வீரமரணம் அடைந்துவிட்டார்கள்.





# 11. தொடரும் பயணம்

மன்னார் மாவட்டத்தில் ஒருநாள் மாலைவேளை கதிரவன் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துகொண்டிருக்கிறான். கரடுமுரடான அந்தப் பாதையில் எங்கள் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து கொண்டிருக்கின்றன. இருபுறமும் புதர்கள் மண்டிக்கிடந்த பகுதியைத் தாண்டி மரங்கள் அடர்ந்த காட்டுப்பகுதியைக் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிக்கொண்டிருக்கிறோம்.

எங்கள் வாகனங்கள் மேலும் செல்லமுடியாமல் ஒரு இடத்தில் தேங்கிநின்றன. வாகனங்களில் இருந்து அனைவரும் ஆயுதங்களோடு கீழே குதித்தார்கள். நானும் கீழே இறங்கினேன். சுற்றும் முற்றும் பார்க்கிறேன்.

"அடடா! என்ன அற்புதமான காட்சி! மாலை நேரத்து மஞ்சள் வெயிலில் அந்தக் காட்டு பிரதேசம் எழில் பூங்காவாகக் காட்சி தந்தது. எங்கள் வாகனங்களின் என்ஜின் சப்தம் தவிர வேறு சப்தம் இல்லை.

அந்த அமைதியையும் அழகையும் கண்டு மெய்மறந்து நான் நின்றபோது தளபதி விக்டர் "அண்ணா, இந்தக் காட்டுக்குள் எங்கள் முகாம் உள்ளது. அங்கே நாம் போகிறோம்" என்றார்.

அவர் இவ்வாறு கூறியதும் ஒற்றையடிப்பாதையில் முன்னும் பின்னுமாகப்புலிப்படை நண்பர்கள் நடக்க அவர்களுடன் நானும் குழந்தைகளுக்கான குதூகல உணர்வுடன் நடக்கத் தொடங்கினேன்.

மேலே வானத்தில் திடீர் திடீரென வட்டமிடும் சிங்கள இராணுவ ஹெலிகாப்டர்களின் கழுகுப் பார்வையில் படாமலிருக்க இம்மரங்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைவில் நாங்கள் வந்த வாகனங்கள் நிறுத்தப்பட்டன. கீழே வாகனங்கள் ஊர்வது தெரிந்தால் போதும்! உடனே சுடத்தொடங்கிவிடுவார்கள். கீழே தரைவழியே வந்து புலிகளுடன் மோதும் துணிவு சிங்களப் படைகளுக்கு அறவே இல்லை.

காடு என்றால் சரியான காடு. தமிழ்நாட்டிலும் அடர்த்தியான காடுகள் உண்டு. ஆனால் மலைகளில்தான் அவற்றைக் காணலாம். சமதரையில் அத்தகைய காடுகள் அறவே கிடையாது எனலாம். ஆனால் இலங்கையில் சமதரையிலேயே பெருங்காடுகள் இருப்பதைக் கண்டு பிரமித்தேன்.

வானளாவ நெடிதுயர்ந்த மரங்கள். கிளையும் கப்புமாக அடர்ந்து நின்றன. மரங்களின்மீது ஆங்காங்கே பின்னிப்படர்ந்து வளர்ந்த கொடிகள் தடித்து உருண்டு பாம்புகள் தொங்குவதுபோல் காட்சி தந்தன. மாலை நேரத்து வெயில் மெதுவாக மறையக்கானகத்தில் இருள் வேகமாகக் கவியத்தொடங்கியது. நாங்களும் நடையை எட்டிப்போட்டோம்.

அந்த ஒற்றையடிப்பாதையில் ஆங்காங்கே யானைகளின் அடிச்சுவடுகள் படிந்திருப்பதைக் கவனித்தேன்.

"இந்தக் காட்டில் யானைகள் உண்டோ!" எனக் கேட்டேன்.

"ஆம்! அண்ணா! ஏராளமாக உண்டு. சற்றுமுன்பாக இப்பாதையில் யானைகள் போயிருக்க வேண்டும்" என்று பொட்டு சொன்னார்.

"அடாடா! நல்ல வாய்ப்பை நழுவவிட்டுவிட்டோமே! சற்று முன்பாக வந்திருந்தால் யானைகளைப் பார்த்திருக்கலாமே" என ஏக்கத்துடன் கூறினேன்.

"அண்ணா! கவலைப்படாதீர்கள். காட்டு வழியில்தான் இனி நாம் அதிகமாகப் பயணம் செய்வோம். யானைகள் மட்டுமல்ல இன்னும் பல மிருகங்களைப் பார்க்கலாம்" என்றார் விக்டர்.

"வேறு என்னென்ன மிருகங்கள் உண்டு" எனக் கேட்டேன்.

"எல்லாவகை மிருகங்களும் உண்டு. கரடி, சிறுத்தைப்புலி, காட்டுப் பன்றி, நரி, மான், முயல் போன்ற பல உண்டு" என்று விவரித்தார் இன்னொருவர்.

இப்படிப்பேசிக்கொண்டே சில மைல்கள் நாங்கள் செல்வதற்குள் நன்கு இருட்டி விட்டது. விக்டர் வாக்கி மூலம் பேசினார். பதிலுக்கு யாரோ பேசினார்கள். அதைத் தொடர்ந்து விளக்கு சமிக்ஞை கிடைத்தது.



சற்றுநேரத்தில் விளக்கு வெளிச்சம் ஒன்று எங்களை நோக்கி வந்தது. ஆம்! பெட்ரோமாக்ஸ் விளக்கை ஏந்திய வண்ணம் ஒரு சிறுவன் முன்னால் வந்தான். அவனைத் தொடர்ந்து புலிகளில் இராணுவ உடைதரித்த பலர் வந்து வரவேற்றனர். பிறகு முகாம் பொறுப்பாளரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். பிறகு முகாமில் இருந்த கூடாரம் ஒன்றுக்கு அவர் என்னை அழைத்துச் சென்றார். முகாமில் இருந்த விடுதலைப் புலிகள் அனைவரும் அங்குக்கூடிவிட்டனர்.

காட்டுக்கு நடுவே இராணுவக் கோலத்தில் அந்த இளைஞர்களைப் பார்த்தபோது என்னுள்ளம் கிளர்ந்தெழுந்தது. இந்த வீர இளைஞர்களின் களைபொருந்திய முகங்கள் அந்த மங்கிய ஒளியில் பிரகாசித்தன. சற்று நேரம் அவர்களுடன் உரையாடி மகிழ்ந்தேன்.

பிறகு அருகிலேயே ஓடிய காட்டாற்றில் முகம் கழுவினேன். தெள்ளிய நீரோடையின் குளிர்ச்சி எனது அயர்வைப் போக்கியது. பிறகு முகாம் பொறுப்பாளரிடம் முகாம் பற்றிய விவரங்களை விசாரிக்கத் தொடங்கினேன்.

அந்த முகாமில் சுமார் 150 புலிகள் இருந்தனர். அனைவரும் சகல பயிற்சிகளும் பெற்றவர்கள். புலிகளின் முகாம்களும் ஒரே இடத்தில் நிரந்தரமாக இருப்பதில்லை. சில நாட்களுக்கு ஒரு முறை மாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

மன்னாரில் தொடங்கி கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா திரிகோணமலை, மட்டக்களப்பு வரை தமிழ்ப் பகுதிகளிலும் சிங்களப் பகுதிகளிலும் இக்காடு விரிந்து பரந்திருக்கிறது. எனவே புலிகளும் அடிக்கடி இடம் மாறிக்கொண்டே இருக்க வசதியாக உள்ளது.

முகாமில் பல கூடாரங்கள் இருந்தன. சாமான்கள் வைக்க ஒரு கூடாரம், மருத்துவமனையாக மற்றொரு கூடாரம், புலிப்படை வீரர்கள் தங்கச்சில கூடாரங்கள். நான்கு புறமும் மணல் மூடைகள் அடுக்கப்பட்டு குறிவைக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் காவலர்கள் நின்றார்கள். ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை இவர்கள் மாற்றப்படுகிறார்கள்.

ஒரு பரண் அமைக்கப்பட்டு அதில் செய்திகள் தரவும்-பெறவுமான நவீன சாதன வசதிகளுடன் தகவல் நிலையம் ஒன்றும் இயங்கியது. தமிழீழப் பகுதி முழுவதிலுமுள்ள பல்வேறு புலிகளின் முகாம்களோடு தொடர்பு கொள்ளக் கூடிய மிக நவீன சாதனங்கள் அவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள இராணுவ நடமாட்டங்கள் எதுவாக இருந்தாலும் உடனுக்குடன் சகல முகாம்களுக்கும் செய்திகள் முன்னதாகவே கிடைத்து புலிகள் உடனே உஷாராகிவிடுகின்றனர். கிராமம் கிராமமாகப் பயிற்சிபெற்ற புலிகள் சாதாரண உடையில் உள்ளார்கள், அவர்கள் சிங்கள இராணுவத்தைப் பற்றிய தகவல்களை முகாம்களுக்குத் தருகிறார்கள். இப்படி முழுமையான, கட்டுக்கோப்பு நிறைந்த ஒரு இராணுவமாகப்புலிப்படை இயங்குகிறது. பிறகு அவர்கள் பயன்படுத்தும் ஆயுதங்களையும் அவற்றைக் கையாளவேண்டிய முறைகளையும் விளக்கிக் கூறினார்கள். அந்த ஆயுதங்களில் சில :

303 Riffle
S L R ,,
G 3 ,,
M 16 ,, (அமெரிக்கா)
AX 47 Auto-matic (Russian)
T 56 Auto-matic Weapon
SMG Sub Machine Gun
LMG Light ,, ,,
MMC Medium ,, ,,
SAR – Singapore Assault Riffle
Pistol
Revolver
Mines
Land Mines
Rocket Loncher
L. A. W.
Grenades

எறிகுண்டுகளில் LTTE என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. தற்போது அவர்களே அவற்றை உற்பத்தி செய்வதாகக் கூறினார்கள்.

"வகை வகையான இந்த ஆயுதங்கள் எப்படிக் கிடைத்தன?" என்று கேட்டபோது தளபதி விக்டர் சொன்னார். "அண்ணா! பல ஆயுதங்களைச் சிங்களப் படையினரிடமிருந்து பறித்தெடுத்தோம். அதற்கு நாங்கள் கொடுத்த விலை மிகப்பெரிது. எங்களில் பல தோழர்களைப் பலிகொடுத்துத்தான் இவற்றை அடைந்தோம். சிங்கள இராணுவ பாசிச வெறியர்களிடமிருந்து மக்களைக் காக்கவும் எமது நாட்டை வென்றெடுக்கவும் எமக்குத் தேவை ஆயுதங்கள். எனவே



அதற்காக எங்கள் இன்னுயிரையும் இழப்பதற்கு நாங்கள் தயங்க மாட்டோம்" என்று கூறிவிட்டு "மக்கள் தந்த உதவியின் மூலமும் ஆயுதங்களை **வெளிநாடுகளில்** வாங்குவதாகவும்" அவர் கூறினார்.

"மக்கள் தாராளமாகத் தருகிறார்களா?" என்று கேட்டேன்.

"எமது நாடு பற்றி எரிந்துகொண்டிருக்கும் இந்த வேளையிலும் தமிழீழ மக்கள் குடும்பத்திற்குக்குறைந்தபட்சம் ஒருபவுன் வீதம் அளிக்கிறார்கள். மேலும் மேலும் உதவிகள் செய்கிறார்கள். எங்களின் பல முகாம்களுக்கு மக்களே உணவளிக்கிறார்கள்" என்றார்.

தமிழீழ மக்களின் எண்ணிக்கை நம்மோடு ஒப்பிடும்போது குறைவுதான். ஆனாலும் 35 லட்சம் தமிழர்கள் தியாக உணர்வுடன் துணிந்து உதவுகிறார்கள்.

5 கோடித்தமிழர்களும் அவர்களுக்கு உதவியாக 70 கோடி இந்தியர்களும் சிறிதளவு உதவினாலும் அவர்களுக்குப் பேருதவியாக இருக்குமே. ஆனால் இன்றும் அந்த மனம் நமது மக்களுக்கு வரவில்லையே என ஏங்கினேன்.

பலரக ஆயுதங்கள், அவற்றை உபயோகிக்கும்முறை, பல்வேறு போர்த்தந்திரங்கள் போன்றவற்றைப்படங்களுடன் விளக்கும் 'போர் முறைப் பயிற்சிப் புத்தகங்கள்' பலவற்றையும் எனக்குக் காண்பித்தார்கள். அவற்றைப் புரட்டிப்பார்த்தபோது வியந்துபோனேன். ஆம்! அந்த நூற்கள் நல்ல தமிழில் தயாரிக்கப்பட்டிருந்தன. தமிழில் வெளியாகியுள்ள போர்முறைப் பயிற்சி நூற்கள் இவைமட்டுமே என்று நினைக்கிறேன். தமிழகத்தில் கூட இத்தகைய நூற்கள் இதுவரை வெளியாகவில்லை.

இதுதவிர முகாமில் உள்ளவர் படிப்பதற்காகப்பல நூற்கள் அளிக்கப்படுகின்றன. உலகப் புரட்சிகளின் வரலாறுகள், அரசியல் தத்துவங்களைப் பற்றிய நூற்கள் உள்ளன. இவற்றில் ஒருநூல் என்னை மிகவும் கவர்ந்தது. புலிகளே வெளியிட்ட நூல் இது. "**தான்பிரீன் தொடரும் பயணம்**" என்னும் இந்த நூல் அயர்லாந்து நாட்டின் விடுதலை வீரரான 'தான்பிரீன் என்பவரது வீரஞ்செறிந்த தியாக வரலாற்றை விவரிக்கிறது.

**தமிழ் நாட்டைச் சேர்ந்த சுதந்திரப்போராட்ட வீரரும், எழுத்தாளரும் கல்கியின் தோழருமான ப. ராமஸ்வாமி என்பவரால்** அவர் சிறையில் இருந்தபோது இந்நூல் எழுதப்பட்டதாகும்.

**1932-34** காலப்பகுதியில் இந்நூலாசிரியர் திருச்சிச் சிறையில் கைதியாக இருந்தபோது இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு உத்வேகமூட்ட இந்நூலை எழுதியுள்ளார். ஆனால் அது அரை நூற்றாண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்திற்குப் பிறகு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உத்வேகமூட்ட இது வெளியிடப்பட்டுள்ளது. வீரமுள்ளவர்களாக மட்டுமல்ல, அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாகவும் புலிப்படையினர் உருவாக்கப்படுகிறார்கள்.

இரவு உணவுக்கு நேரமாகிவிட்டதால் எழுந்தோம். சப்பாத்தியும் பருப்பும் கொடுத்தார்கள். எல்லோருடனும் உட்கார்ந்து சாப்பிட்டேன். நன்றாகவே இருந்தது. அவர்களுக்குள் முறைவைத்து அவர்களே சமைத்துக்கொள்கிறார்கள்.

பெட்ரோமாக்ஸ் விளக்குத்தூக்கிவந்த சிறுவன் "**ரோஸ்மன்**" என்னை மிகவும் உபசரித்தான். 12 வயதான அச்சிறுவனின் வரலாறு ஒரு சோக வரலாறு ஆகும். சிங்கள இராணுவத்தின் வெறிச்செயலுக்கு அவனது வீடு இரையானது. கண்ணிமைக்கும் நேரத்தில் பெற்றோரைப் பிரிந்து வீடு, வாசலை இழந்து அனாதையாகிவிட்ட அவனது பிஞ்சு நெஞ்சத்தில் வைராக்கியம் பிறந்தது. தனக்கு ஏற்பட்ட கதி தன்னையொத்த தமிழ்ச் சிறுவர்களுக்கு வரக்கூடாது என்பதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டான். விடுதலைப்புலிப்படையில் அவனும் சேர்ந்து இராணுவப்பயிற்சிகள் பெறுகிறான். அச்சிறுவனின் சோகக் கதை என் நெஞ்சைப் பிழிந்தது. சற்றே பெரியவனான என் கடைசி மகனை நினைத்துக்கொண்டேன். இந்த வீரச்சிறுவனும் அவனையொத்தவனே. ஆனால் இவன் வாழ்க்கை எப்படி திசைதடு மாறி நிற்கிறது.

இரவு ஒரு கூடாரத்தில் நானும் மற்றும் சிலரும் படுத்தோம். சிறுவன் ரோஸ்மனையும் எனது அருகிலேயே படுக்கச் சொன்னேன்.

வெளியே பலர் ஆயுதங்களுடன் செல்வதைப் பார்த்தேன். ரோஸ்மன் அதை விளக்கினான். அருகில் உள்ள ஊர்களில் காவல் வேலைக்காக அவர்கள் போவதாகக் கூறினான். விடியவிடிய ஊரையும் மக்களையும் காத்துவிட்டு விடியற்காலம் முகாமுக்கு இவர்கள் திரும்புவார்கள் என்றான்.

முகாமைச் சுற்றிலும் காவல் ஏற்பாடுகள் இருந்தன. நான் வந்திருப்பதை யொட்டி மேலும் அவை அதிகரிக்கப்பட்டன. எனது கூடாரத்தைச் சுற்றி இரவு முழுவதும் கண் இமைக்காமல் காவல் புரிந்தனர்.

இராமன் வனவாசம் செய்தபோது இலக்குவன் இரவு முழுவதும் உறங்காமல் காவல் காத்ததைப்போல புலிப்படைத் தம்பிகள் என்னைக் காப்பதைப் பார்த்தபோது என்நெஞ்சம் கசிந்தது. என்பொருட்டுத் தங்கள் உயிர்களைப் பணயம் வைக்கும் இந்த இளைஞர்களை இறைவா! காப்பாற்று என வேண்டிக்கொண்டேன்.





# 12. மக்களோடு புலிகள்

மன்னார்ப்பகுதிப்புலிகள் இயக்கத்தின் தளபதி விக்டருடன் சென்று அவர் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் புலிகளின் பல்வேறு பாசறைகளையும் பயிற்சி முகாம்களையும் நான் பார்த்தேன். பயிற்சி முகாம்களிலிருந்த பயிற்சிப் பொறுப்பாளர்களையும் பாசறைகளிலிருந்த துணைத் தளபதிகளையும் சந்தித்தபோது அவர்களுடன் மனம்விட்டு விவாதித்தேன்.

தளபதி விக்டர் இனிய சுபாவமும் திடமான உள்ளமும் லட்சியப் பிடிப்பும் நிறைந்த இளைஞர். விடுதலைப் படை ஒன்றின் தளபதிக்கு இருக்கக்கூடிய சகல குணங்களும் அவரிடம் நிறைந்திருந்ததை நான் பார்த்தேன். புலிகளின் இயக்கம் பற்றிய பல செய்திகளை அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் **சேர்ந்த இளைஞர்களுக்குக்** கட்டுப்பாடு மிகுந்த சிறந்த பயிற்சியளிக்கப்படுவதை நான் பார்த்தேன். சகல ஆயுதங்களையும் கையாள்வதற்கான பயிற்சியையும் அவர்கள் பெறுகிறார்கள். நவீன இராணுவம் ஒன்றின் பயிற்சிக்கான முறையான பாட நூல்களும் அங்கிருப்பதைப் பார்த்தேன். சகல பயிற்சி முகாம்களிலும் அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்திருக்கிறார்கள். சத்துணவு, மருந்துகள் போன்றவைகளும் அளிக்கப்படுகின்றன.

முகாம்களையும் பாசறைகளையும் சுற்றியுள்ள மக்களின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களாக இவர்கள் திகழ்வது என்னை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் கவர்ந்தது. ஸ்தல மக்கள் தங்கள் பிரச்னைகளைத் தீர்க்க இவர்களையே நாடிவருகிறார்கள்.

விவசாயம் கைத்தொழில் போன்றவற்றைச் செய்வதற்கு அஞ்சியிருந்த மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து அவைகளைச் செய்ய வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் புலிகளே உளுந்து, பயறு வகைகள் போன்றவற்றை விவசாயம் செய்கிறார்கள். அதைப் போலவே ஒவ்வொரு பகுதியிலும் மக்களுக்குத் தேவையான நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றை உற்பத்தி செய்து கொடுக்கிறார்கள்.

இராணுவ அடக்குமுறையின் காரணமாக அரசியல் இயக்கங்கள் முடங்கிப்போன வேளையில் புலிகளே இந்தப் பணிகளையும் மேற்கொண்டு செயல்படுகிறார்கள். மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டுவதோடு அவர்களின் உள்ளங்களில் ஒருதன்னம்பிக்கையையும் ஊட்டியிருப்பது போற்றத் தகுந்ததாகும்.

சிவில் நிர்வாகமும் போலீஸும் முற்றிலுமாகச்சீர்குலைந்துவிட்ட வேளையில் அந்தப் பணிகளையும் புலிகளே மேற்கொண்டுள்ளதால் மக்கள் அச்சமற்று வாழ்கிறார்கள்.

குறிப்பாகப்போலீஸ் நிர்வாகம் இல்லாத வேளையில் புலிகள் இந்தப் பணிகளை மேற்கொண்டு இராவிட்டால் சமூக விரோத சக்திகளின் கை ஓங்கியிருக்கும். களவு, கொலை போன்ற சமூக விரோதச் செயல்கள் தங்குதடையின்றி நடைபெற்றிருக்கும்.

அதைப் போல மக்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளைப் புலிகளே தீர்த்துவைக்கிறார்கள். இந்து, கிறிஸ்தவர், முஸ்லீம் என்று மத வேற்றுமைகள் அறவே இல்லாமல் அனைவரும் தமிழர்களே என்ற உணர்வை மக்களுக்கு ஊட்டி வளர்க்கும் படையே புலிப்படை என்பதை நான் சென்ற இடங்களிலெல்லாம் கண்டேன்.

**நேதாஜியின் இந்திய தேசிய இராணுவம்தான் ஜாதி மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டுத்தேசிய உணர்வோடு உருவான படையாகும். 'அதைப்போலத்தம்பி பிரபாகரன் அவர்களின் புலிப் படையும் தமிழ்த் தேசிய உணர்வோடு கூடிய படையாக விளங்கி வருகிறது.**

இலட்சிய உணர்வோடும் ஒழுக்க கட்டுப்பாட்டுடனும், திறமையான இராணுவப் பயிற்சியோடும் உருவாக்கப்பட்டுள்ள புலிப்படை இளைஞர்கள் மற்ற இயக்க இளைஞர்களிடமிருந்து வேறுபட்டேயிருக்கிறார்கள். தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும், துயரங்களையும்



புன்னகையோடு சகித்துக்கொள்ளும் பண்பு புலிப்படை இளைஞர்களிடையே நிரவி நிற்கிறது. சக தோழர்கள் களத்தில் போராடி வீர மரணமடைவதைக் கண்டு இவர்கள் பதட்டம் அடைவதில்லை. மாறாக முன்னிலும் அதிகமான உறுதியோடு வீறுகொண்டு எழுகிறார்கள்.

போலித்தனமாக இயங்கி மக்களுக்கு தொல்லை கொடுக்கும் சில இயக்கங்களைத் திருத்துவதற்குப்புலிகள் பொறுமையுடன் போராடுகிறார்கள். மக்கள் உதவியுடன் அவர்கள் அடாவடித்தனத்தை ஒடுக்குகிறார்கள். இதை நானே ஒரு இடத்தில் நேரில் கண்டேன். மன்னாருக்கு அருகிலுள்ள 'மடுமாதா' தேவாலயத்திற்கு நாங்கள் சென்று அங்கிருந்த அகதிகளையும் அவர்களைப் பராமரித்துவரும் கிருஸ்தவப் பாதிரியார்களையும் பார்த்துவிட்டுத் திரும்பும்போது என்னுடன் வந்த புலிப்படை இளைஞர்கள் இருவர் வேறு வேலைகளுக்காக அங்கு இறக்கிவிடப்பட்டார்கள். நாங்கள் புறப்பட்டு வந்த பிறகு வேறு இயக்கத்தினைச் சேர்ந்தவர்கள் அங்கு வந்து அந்தத் தேவாலயத்தின் பாதிரியாரை ஒரு மரத்தில் கட்டிவைத்துவிட்டு அவரது வேனைக் கடத்த முயற்சி செய்தார்கள். அதைத் தடுக்க முயன்ற அகதிகளைத் துப்பாக்கி முனையில் மிரட்டினர்.

நாங்கள் ஏற்கனவே அங்கு விட்டுவந்த புலிப்படை இளைஞர்கள் உடனடியாக அங்கு சென்று வேனை எடுத்துச் செல்லவிடாமல் தடுத்து மக்கள் உதவியுடன் அந்தக் கொள்ளைக்கார இளைஞர்களை விரட்டியடித்துவிட்டு பாதிரியாரையும் விடுவித்தார்கள்.

இந்தத்தகவல் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதும் நாங்களும் மீண்டும் அங்குச்சென்று நடந்த விவரங்களைப்பாதிரியாரிடமும், மக்களிடமும் கேட்டு உறுதி செய்துகொண்டோம்.

நாங்கள் செல்லுகிற சாலைகளில் ஆள் நடமாட்டமோ, வாகனங்களின் போக்குவரத்தோ இல்லாததை நான் பார்த்தேன். அதுகுறித்துத் தளபதி விக்டரிடம் கேட்டேன். "அண்ணா! காட்டுப் பாதையில் உங்களை நாங்கள் அழைத்துச் செல்லவில்லை. இது மக்கள் நடமாடும் சாலைதான். ஆனால் மக்களில் பெரும்பாலோர் இப்பகுதியிலிருந்து வெளியேறி விட்டதால் மக்கள் நடமாட்டமில்லை. சொந்த வாகனங்கள் வைத்திருப்போர் கூட அவற்றை உபயோகிக்க இயலாது. ஏனென்றால் அவற்றுக்குத் தேவையான பெட்ரோல், டீசல் கிடையாது. இராணுவ அதிகாரியிடம் 'பெர்மிட்' பெற்றுதான் அவற்றை வாங்க முடியும். அவ்வாறு வாங்குவது சுலபம் அல்ல. மேலும் வாகனங்களை வெளியே எடுத்துச் செல்வது ஆபத்தானது. இராணுவத்தினரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதலுக்கு அவை இரையாகக் கூடும். எனவே சாலைகளில் போக்குவரத்து அதிகமில்லை'' என்று அவர் சொன்னார்.

''உங்களுடைய வாகனங்களுக்குப் பெட்ரோல். டீசல் எப்படி கிடைக்கிறது'' என்று நான் கேட்டேன்.

அவர் பதில் சொல்லாமல் சிரித்தார். நானும் அதைப் புரிந்து கொண்டு அடுத்த கேள்விக்குத் தாவினேன்.

செல்லும் வழியில் ஒரு இடத்தில் இரண்டு இளைஞர்கள் ஒரு மரத்தடியில் நின்றுகொண்டிருந்தனர். நாங்கள் சென்ற வாகனத்தை நிறுத்தி அவர்களை எனக்குத் தளபதி விக்டர் அறிமுகம் செய்து வைத்தார். ஒருவர் பெயர் **ஜின்னா**. மற்றொருவர் பெயர் **அக்பர்**. இருவரும் முஸ்லீம் இளைஞர்கள். புலிப்படையைச் சேர்ந்தவர்கள். நாங்கள் வரும் பாதையை அவர்கள் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்.

''உங்கள் இயக்கத்தில் முஸ்லீம் இளைஞர்கள் எவ்வளவுபேர் இருப்பார்கள்'' என்று நான் கேட்டேன்.

''நிறையபேர்இருக்கிறார்கள் அண்ணா! எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் இந்து, கிருஸ்தவர், முஸ்லீம் என்ற எத்தகையவேறுபாடும் கிடையாது. நாங்கள் அனைவரும் சகோதரர் என்ற உணர்வோடும் தமிழர் என்ற உணர்வோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்று சொன்னார்.

இந்தக் கூற்றுக்கு அவரே உதாரணமாகத் திகழ்வது கண்டு வியந்தேன். காரணம் தளபதி விக்டர் ஒரு கிருஸ்தவர். அவர் தலைமையில் இந்து, முஸ்லீம் இளைஞர்கள் சுறுசுறுப்பாகப் பணியாற்றுவதைக் கண்டேன். இந்த ஒற்றுமை என்மனத்தை மிகவும் கவர்ந்தது.

''ஜின்னாவையும், அக்பரையும் போல ஏராளமான எமது இளைஞர்கள் கிராமங்களைக்காவல் காத்து வருகிறார்கள். அதனால் தான் மக்கள் தைரியத்துடன் இருக்கிறார்கள். எல்லாக் கிராமங்களிலும் நாங்கள் இருக்கிறோம் என்ற காரணத்தினால் கிராமங்களுக்குள் நுழைய இராணுவம் அஞ்சுகிறது என்று தளபதி விக்டர் கூறினார். அவர் சொல்வது எவ்வளவு உண்மையான வார்த்தை என்பதைச் செல்லும் வழி நெடுக நான் கண்டேன். தளபதி விக்டரிடமும் புலிகள் இயக்கத் தோழர்களிடமும் கிராமமக்கள் காட்டும் அன்பும் மதிப்பும் என்மனத்தை மிகவும் கவர்ந்தது.





# 13. சாத்வீகர் மனமாற்றம்

மன்னார் மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றில் வயதான கிறிஸ்துவ அரசியல் தலைவர் ஒருவரை நான் சந்தித்தேன். தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அரசியல் அமைப்புகளில் முக்கிய பொறுப்புக்களை அவர் வகித்திருக்கிறார். கிராமப்புறம் ஒன்றிலிருந்த அவர் வீட்டுக்கு நான் சென்றபோது பல்வேறு நிலைமைகளை அவர் விளக்கிக் கூறினார்.

''பழுத்த அரசியல் அனுபவம் உள்ள நீங்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஆதரிக்கிறீர்களா'' என்று நான் கேட்டேன்.

அதற்கு அவர் கொஞ்சமும் தயக்கமில்லாமல் பதில் சொன்னார்: ''ஆரம்ப காலம் தொட்டுத் தமிழரசுக் கட்சியிலும், அதற்குப் பின்னர்த் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் நான் அங்கம் வகித்து வருகிறேன். கடந்த 30 ஆண்டுக் காலமாக அமைதியான முறையில் அறவழியில் போராடி எங்கள் உரிமைகளை நிலைநாட்ட நாங்கள் செய்த முயற்சிகள் முற்றிலுமாகப் படுதோல்வியடைந்து விட்டன. எங்களுடைய சாத்வீகப் போராட்டங்களைக் கொடூரமான அடக்குமுறை மூலம் அரசாங்கம் முறியடித்தது. தந்தை செல்வாவுடன் சிங்கள அரசு செய்துகொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. எங்கள் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டனர். எங்கள் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். எங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி வாய்ப்புகளும் வேலை வாய்ப்புகளும் மறுக்கப்பட்டன. எங்கள் மொழியும் எங்கள் நாடும் கொஞ்சங்கொஞ்சமாகச் சிதைக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் அமைதியான முறையில் எங்கள் பிரச்னைகளைத் தீர்த்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக்கொள்ளும் சகல வாயில்களும் அடைக்கப்பட்ட பிறகுதான் தீவிர
வாதம் பிறந்தது. 1980-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பயங்கர
வாதச் தடைச்சட்டத்திற்குப் பின்னால்தான் எங்கள் இளைஞர்கள்
கொதித்து எழுந்தார்கள். கிறிஸ்தவப் பாதிரிகளைக்கூட இராணுவம்
படுகொலை செய்தபோது எங்கள் இளைஞர்களுக்கு வேறு வழி
யில்லை. எந்த ஒரு தமிழன் வீட்டிலும் நிம்மதியான வாழ்வில்லை.
உரிமையில்லாத நிலையிலும், மானத்தோடு வாழமுடியாத நிலையி
லும் வாழ்வதைவிடப் போராடிச் சாவதே மேல் என்று மக்கள் நினைக்
கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டார்கள். ஆயுதம் தாங்கிப் போராடு
வது மூலம் மட்டுமே எங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்
பிக்கை மக்களுக்கு ஏற்பட்டு விட்டது. இந்தப் போராட்டம் யாரோ
சில இளைஞர்களின் போராட்டம் அல்ல. இது மக்களின் போராட்ட
மாக உருவாகி வருகிறது. வியட்நாம் போராட்டம் போல நீண்ட
நெடிய போராட்டமாக இது இருந்தாலும் அதைச் சந்திக்க மக்கள்
தயாராகிவிட்டனர். குடும்பம் குடும்பமாகத்தங்கள் பங்கைச் செலுத்தி
வருகின்றனர். எனது மகனும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்.
அதுகண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று அவர் உணர்ச்சி
பொங்கக் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசும்போது ''இந்திரா இருந்த
போது எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. சிங்களவர்களுக்கு அச்சம்
இருந்தது. ஆனால் ராஜீவ் காந்தி காலத்தில் சிங்கள அரசுக்குப்புதிய
துணிவு பிறந்துவிட்டது. எங்கள் இளைஞர்கள் எல்லாம் முற்றிலு
மாக அழிந்த பிறகுதான் இந்தியா எங்களுக்கு உதவி செய்யுமா!''
என்று அவர் தழுதழுத்த குரலில் என்னிடம் கேட்டார். மறுகணம்
துக்கத்தை அவரால் அடக்கிக்கொள்ள முடியாமல் தேம்பித்தேம்பி
அழுதார். அருகேயிருந்த அவரது மனைவியும் மகளும் கூட அழு
தார்கள். அவர்களுக்கு நான் ஆறுதல் சொன்னேன்.

அவருடைய மனைவி பேசும் போது பின்வருமாறு சொன்னார்.
''என்மகன் இயக்கத்தில் சேர்ந்துவிட்டான் என்பதற்காக நான் அழ
வில்லை. எங்களுடைய இளைஞர்கள் போதுமான ஆயுதமில்லாமல்
எதிரிகளிடம் போராடிச் சாக நேர்வதைப் பார்த்துதான் நான் அழுகி
றேன். எங்கள் பிள்ளைகளுக்குப் போதுமான ஆயுதங்கள் இருக்கு
மானால் நிச்சயமாகத்தமிழ் ஈழத்தை வென்றெடுப்பார்கள். எங்களின்
ஒரே நம்பிக்கையான இந்தியாவும் எங்களை நம்பிக்கை இழக்க
வைத்துவிட்டது. தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாம் மயானமாகி கொண்
டிருக்கின்றன. கிராமங்களில் மக்கள் பாதுகாப்பாக நடமாட முடி



யாத சூழ்நிலை நிலவியுள்ளது. எங்களுடைய பொருளாதாரம் முழு
மையாகப்பாழடைந்துவிட்டது. உணவுப்பஞ்சம் உருவாகும் அபாயம்
ஏற்பட்டு விட்டது'' என்றார் அவர்.

அவர் தன்னுடைய பேச்சை மேலும் தொடர்ந்தார்: ''கிராமங்
களிலுள்ள விவசாயத் தொழிலாளிகள் பெரும்பாலோர் இந்தியாவுக்கு
அகதிகளாகச் சென்றுவிட்டார்கள். இன்னமும் தொடர்ந்து சென்று
கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகவும் சிங்களப்படையினரின்
அட்டூழியம் காரணமாகவும் விவசாயம் முற்றிலுமாக சீரழிந்துவிட்து.
நகர்ப்புறங்களில் வியாபாரமில்லை. தொழிலுமில்லை. கிராமங்களிலிருந்து
யாரும் நகர்ப்புறம் செல்வதில்லை'' என்று கூறினார்.

''இலங்கைத் தமிழர்களின் பிரிவினை வாதத்தை ஆதரிக்க முடி
யாது என ராஜீவ் சொல்லியிருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்''?
என்று கேட்டேன்.

''இந்தியப்பிரதமர் ராஜீவ் சொல்வதைப்போல இது பிரிவினை
வாதம் அல்ல நாங்களாக இந்த நாட்டைப் பிரிக்கவிரும்பவில்லை.
நாங்களும் எங்கள் மொழியும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதாலும்
எங்கள் உயிரையும், உடமைகளையும் பாதுகாக்க வேறுவழியில்லாத
தாலும் தமிழர்கள் மீது சிங்கள அரசு போர் தொடுத்திருப்பதாலும்,
எங்களைக்காப்பாற்றிக்கொள்ள நாங்கள் தனிநாடு கேட்கும் அவசியத்
திற்கு உள்ளாக்கப்பட்டு விட்டோம். இந்தியாவில் பல இன மக்கள்
உள்ளனர். ஒவ்வொரு மொழி பேசும் இன மக்களுக்கும் தனித்தனி
யான மாநிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எந்த இன மக்களுக்கும் தனி
மாநிலக்கோரிக்கை மறுக்கப்படவில்லை. இந்திய இராணுவத்தில் பல
இன மக்கள் உள்ளனர். ஆனால் இலங்கை, சிங்கள மக்களுக்கு மட்
டுமே சொந்தமான பூமி என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு
தமிழர்களுக்குத்தனி மாநிலம் கொடுக்கச்சிங்களவர் தயாராகவில்லை.
இலங்கை இராணுவம் முழுக்கமுழுக்கச் சிங்கள மயமாக உள்ளது.
அதில் தமிழர்களுக்கு இடமில்லை. எனவே இந்தியாவின் நிலைமை
வேறு; இலங்கையின் நிலைமை வேறு. இந்தியாவில் பிரிவினை வாதம்
தேவைப்படாமல் இருக்கலாம். ஆனால் இலங்கையில் உள்ள ஒவ்
வொரு தமிழனையும் எதிரியாகச்சிங்களவர் கருதும் நிலைமையில்
நாங்கள் ஒன்றுபட்டு வாழமுடியாது. இந்த உண்மையை உங்கள்
பிரதமர் உணரவில்லை'' என்று அவர் வேதனையோடு குறிப்பிட்டார்.

''இந்தப்பிரச்னையில் இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று
எதிர்பார்க்கிறீர்கள்'' என்று கேட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எங்கள் பிரச்னை பற்றியும் சிங்களவர்களைப் பற்றியும் கொஞ்சமும் புரிந்துகொள்ளாது ராஜீவ் செய்யும் சமரச பேச்சுக்களின் விளைவாக இலங்கை அரசுக்குப்புதிய துணிவு வந்துவிட்டது. போராடிக் கொண்டிருக்கும் எங்கள் இளைஞர்களை முற்றிலும் ஒழித்துவிட்டால் பிறகு தமிழர்களை அடிபணியச் செய்துவிடலாம் என்று ஜெயவர்த்தனா நினைக்கிறார். எங்களின் ஒரே நம்பிக்கையான இந்தியாவும் எங்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது" என்று அவர் கூறினார்.

"இலங்கை இரண்டாகப் பிரிவதை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களின் பிரச்னையைத் தீர்க்க இந்தியா முயற்சி செய்யும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் சொல்லியிருப்பதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"எங்கள் பிரச்னையை அவர் கொஞ்சமும் புரிந்துகொள்ளவில்லை என்பதை இது காட்டுகிறது. இலங்கையைப் பிரிக்க நாங்களாக விரும்பவில்லை. நாங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாலும் எங்களை இந்த நாட்டு மக்களாக கருதி எங்கள் உயிர்களையும். உடமைகளையும் பாதுகாக்க இலங்கை அரசு தவறிவிட்டதாலும் தமிழர்கள் அனைவரையும் எதிரிகளாகக் கருதி சிங்கள இராணுவம் வேட்டையாடுவதாலும் எங்களுக்கென்று தனிநாடு கேட்கவேண்டிய நிலைக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டோம். இந்தியாவில் பல இனமக்கள் வாழ்கிறார்கள். இராணுவத்திலும் பல இனமக்கள் இருக்கிறார்கள். ஆகவே அங்கே பிரிவினை எண்ணம் வராமல் இருக்கலாம். ஆனால் இலங்கை சிங்களர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு என்று சொல்கிறார்கள். இராணுவமும் போலீசும் சிங்கள மயமாக இருக்கின்றன. ஒவ்வொரு சிங்களனும் தமிழனை எதிரியாகவே கருதுகிறான். இந்த நிலையில் பிரிவினை வேண்டாமென்று எங்களுக்கு உபதேசம் செய்வதில் என்ன பயன்?" என்று அவர் என்னை திருப்பிக் கேட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களின் ஒருவராக விளங்குகின்ற மற்றொரு பெரியவரையும் நான் சந்தித்தேன். கிறிஸ்துவத் தலைவர் சொன்ன கருத்துக்களை இவரும் ஆதரித்தார். இலங்கைத் தமிழர் பிரச்னையில் மறைந்த பிரதமர் இந்திராவின் அணுகுமுறைக்கும், தற்போதையப்பிரதமர் ராஜீவின் அணுகுமுறைக்கும் உள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டி வேதனையோடு பேசினார். "எங்கள் சுதந்திரத்திற்காக நாங்கள் போராடுகிறோம் என்ற உண்மையை ராஜீவ் புரிந்துகொள்ளவேயில்லை. சுதந்திரத்திற்குப்போராடும் நாட்டின் மக்கள் எத்தனை கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாவார் என்பதும் அவருக்குத் தெரியவில்லை. எங்கள் நாட்டில் ரத்தம் ஆறாகப்பெருக்கெடுத்து



ஓடுகிறது. ஏராளமானவர்கள் உயிர்த் தியாகம் செய்துகொண்டேயிருக்கிறார்கள். இந்த உண்மைகளை எண்ணிப்பார்க்கக்கூடிய நிலைமையில் ராஜீவ் இல்லை. இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடியவர் இந்திரா. எனவே எங்களின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அவரால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆகவே எங்களின் சுதந்திரப் போராட்டத்தை அவர் ஆதரித்தார். ஆனால் ராஜீவ்காந்தி சுதந்திரப் போராட்டத்தைப் பார்த்தறியாதவர். எனவே அவருக்கு எங்களுடைய கஷ்டங்கள் புரியவில்லை" என்றார்.

**அடம்பன்** என்ற ஊரிலுள்ள பள்ளிவாசலில் முஸ்லீம் பிரமுகர்கள் பலரை நான் சந்தித்தேன். இராணுவத் துப்பாக்கிச்சூட்டின் விளைவாக 200 முஸ்லீம்கள் அகதிகளாக்கப்பட்டு இருப்பதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். இலங்கையில் வாழும் முஸ்லீம்கள் எல்லோரும் தமிழ்பேசும் முஸ்லீம்கள் என்று அவர்கள் கூறினார்கள். வேறு மொழி பேசும் முஸ்லீம் ஒருவர்கூட அங்கு இல்லை. சிங்களவர் பிரச்சாரம் செய்வது போல முஸ்லீம்கள் அவர்களுக்கு ஆதரவாகயில்லை. மன்னார் மாவட்டத்தில் வாழக்கூடிய முஸ்லீம்கள் முழுமையாகத் தமிழீழத்தை ஆதரிக்கிறார்கள். தமிழர்களிடமிருந்து தாங்கள் ஒருபோதும் வேறுபட நினைக்கவில்லை என்பதையும் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். உலகம் முழுவதிலும் முஸ்லீம்கள் குறிப்பாக இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் தமிழீழப் போராட்டம் வெற்றிபெறச்சகல உதவிகளையும் செய்ய வேண்டுமென்று அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

"முஸ்லீம்களுக்கு என்று தனிச்சலுகைகளைச் சிங்கள அரசோ, சிங்கள இராணுவமோ காட்டுகிறதா?" என்று நான் கேட்டேன்.

"ஒருபோதும் காட்டவில்லை. இந்துக்களானாலும். கிறிஸ்தவர்களானாலும், முஸ்லீம்களானாலும் தமிழர்கள் என்றால் இராணுவம் சுடுகிறது. கொடுமைப்படுத்துகிறது. எந்த வித்தியாசத்தையும் அவர்கள் காட்டவில்லை" என்று அவர்கள் ஒரே குரலில் கூறினார்கள்.

அவர்கள் மேலும் ஒன்றை வருத்தத்தோடு சுட்டிக்காட்டினார்கள். "இந்திராவின் காலத்தில் எங்களுக்கிருந்த பாதுகாப்பு இப்போது ராஜீவ் காலத்தில் இல்லை. ராஜீவின் போக்கு எங்களுக்குப் பாதகமாக இருக்கிறது" என்றும் அவர்கள் சொன்னார்கள்.

புலிப்படை இயக்கத்தில் முஸ்லீம் இளைஞர்களும் ஏராளமாகப் பங்கேற்றிருப்பதை நான் பார்த்தேன். பிற தமிழ்க் குடும்பங்களைப் போலவே முஸ்லீம் குடும்பத்திலுள்ள பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை மனமாரப்புலிப்படையில் சேர வாழ்த்தி அனுப்புகிறார்கள். இன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னொரு உண்மையையும் முஸ்லீம் மக்கள் என்னிடம் சொன்னார்கள். கொழும்பிலுள்ள முஸ்லீம்கள் பலருக்கு வியாபாரம், தொழில்கள் உள்ளன. அவர்களுக்கு அரசாங்கத்தின் தயவு தேவை. ஆகவே அவர்கள் சிங்கள அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்கிறார்கள். மற்ற படி மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதியில் வாழும் முஸ்லீம்கள் நூற்றுக்கு 90 பேர் பரம ஏழைகள். விவசாயத் தொழிலாளிகளாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களைப் பற்றிய கவலை கொழும்பிலுள்ள பணம் படைத்த முஸ்லிம்களுக்குக் கிடையாது. இராணுவ அட்டூழியங்களுக்கு ஏழை முஸ்லீம்களே பலியாகிருர்கள். பணக்கார முஸ்லீம்களான கொழும்பு முஸ்லீம்களைக் காட்டி உலகை ஏமாற்றுவதற்கு ஜெயவர்த்தனா முயற்சி செய்கிறார். "தமிழீழத்தி லுள்ள முஸ்லீம்கள் மற்றத்தமிழர்களுடன் இணைந்தே **நிற்கிறார்கள்.** ஏனைய தமிழர்களை அடக்கிவிட்டால் பிறகு முழுமையாக முஸ்லீம்கள் பக்கம் சிங்கள வெறியர்கள் திரும்புவார்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமே கிடையாது" என்று அவர்கள் தெளிவாகவும் திட்ட மாகவும் கூறினார்கள்.







# 14. சிங்களர் சதி

மன்னார் மாவட்டத்தில் எங்கள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு வவுனியா மாவட்டத்தில் நுழைந்தோம். மாவட்ட எல்லை யில் **வன்னித்தளபதி மாத்தயா** புன்னகை தவழும் முகத்தோடு எங் களை வரவேற்றார்.

நீண்ட காலத்திற்குப் பிறகு அவரைச் சந்தித்தபோது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். பழைய நினைவுகள் என்னுள்ளத் தில் கிளர்ந்தெழுந்தன. தமிழ்நாட்டில் தங்கியிருந்த காலத்திலேயே அவரை நான் நன்கு அறிவேன். தலைவர் பிரபாகரன் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் அவரும் ஒருவர்.

புலிப்படையின் சிறந்த தளபதிகளில் ஒருவரான அவருடைய உருவம் தான் பெரியதே தவிர அவரின் உள்ளம் குழந்தையுள்ளமாகும். எப்போதும் சிரித்த முகத்துடன் காட்சி தருவது அவருக்கே உரிய ஒன்றாகும். வன்னிப் பகுதியிலுள்ள மக்கள் அவரை எந்த அளவுக்கு நேசிக்கிறார்கள் என்பதை நான் நேரிலேயே கண்டேன். எல்லோரிட மும் பணிவாகப் பழகிக் கனிவாகப் பேசி அனைவரின் உள்ளங்களை யும் அவர் கொள்ளை கொண்டிருக்கிறார். சிங்கள இராணுவ வெறியர் களுக்கு அவருடைய பெயரைக் கேட்டாலே பீதி. அவரை வீழ்த்த எத்தனையோ முறை குறி வைத்தார்கள். ஆனாலும் அவர்கள் வெற்றி பெற முடியவில்லை. சிங்கள இராணுவத்திற்குச் சிம்மசொப்பனமாக அவர் விளங்குகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரும் அவருடன் வந்த தோழர்களும் மன்னார்த் தளபதி விக்டரும் அவருடன் வந்த தோழர்களும் புடைசூழ எங்கள் பயணம் தொடர்ந்தது.

தளபதி மாத்தயா வேடிக்கையாகப் பேசும் சுபாவமுள்ள இளைஞர். என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அண்ணா! எங்களை மிகவும் மரியாதையுடன் அழைக்கிறீர்கள். நீங்கள் அப்படிப் பேசுவதைப் பார்க்கும்போது எங்களுக்குக் கூசுகிறது. வாங்கடா! இங்கே! என்று யாராவது உரிமையோடு அழைத்தால் உடனே சாடி நெருங்கிப் பழகுவோம். மரியாதையாகப் பேசினால் விலகியே இருப்போம், ஆகவே உரிமையுடன் எங்களிடம் பேசுங்கள் அண்ணா! என அவர் கூறியபோது என்னால் சிரிக்காமல் இருக்கமுடியவில்லை.

பிறகு அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது "தமிழர்கள் மத்தியில் பீதியை உருவாக்கி பாரம்பரியமாக வாழும் இடங்களிலிருந்து அவர்களை விரட்டியடிக்கச் சிங்களர் செய்யும் சதிகளைப் பற்றி விவரமாகக் கூறினார்.

இதற்கென்று ஒரு தனியான சிங்களக் காடையர் படை அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இஸ்ரேலிய "மோசாட்" நிபுணர்கள் பயிற்சி கொடுக்கிறார்கள். பாலஸ்தீனிய மண்ணிலிருந்த அரபு மக்களை எப்படி விரட்டியடித்தார்களோ அதே பாணியில் தமிழீழ மண்ணிலிருந்து தமிழர்களை விரட்டியடிக்கச் சிங்களக் காடையர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். கொலை, களவு, கற்பழித்தல் போன்ற கொடிய குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டுச் சிறையிலுள்ள சிங்களக் குற்றவாளிகளை விடுதலை செய்தும், சமூக விரோதிகளாக இருக்கக் கூடிய சிங்கள ரவுடிகளைக் கொண்டும் இத்தகைய படையை சிங்கள அரசு அமைத்திருக்கிறது. அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கப்பட்டு தமிழர்கள்மீது ஏவிவிடப்பட்டிருக்கிறார்கள்.

"இத்தகைய சிங்களக் காடையர்களை கண்டு பிடித்துச் சுட்டுக் கொல்வதற்காகப் புலிகள் இயக்கம் தனியான ஒரு படையை அமைத்துள்ளது. எல்லையோரக் கிராமங்களில் இந்தப் படை விழிப்பாகப் பணியாற்றி வருகிறது" என்றும் தளபதி மாத்தயா கூறினார்.

"புலிப் படையில் இந்த விசேஷப் பிரிவு செயல்படத் தொடங்கிய பிறகே சிங்களக் காடையர்களின் அட்டூழியங்கள் ஓய்ந்திருக்கின்றன" என்றும் அவர் கூறினார்.

தமிழர்களின் மன உறுதியை அழிக்கவும் அர்த்தமற்ற, ஒழுக்கமற்ற வாழ்வினை வாழச் செய்து அவர்களின் உணர்வுகளை முனை



மழுங்கச் செய்வதற்குச் சிங்கள அரசு திட்டமிட்டுச் செயல்படுவதாக தளபதி மாத்தயா குற்றம் சாட்டினார்.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே" என்று நான் சொன்னேன்.

"சொந்த மண்ணிலிருந்து தமிழர்களை விரட்டியடிக்கிற இராணுவம் காட்டுப் பகுதிகளில் அகதிகள் முகாம்களைத் திறந்து அங்கு இந்த மக்களைத் தங்கவைக்கிறது. இவர்களை அர்த்தமற்ற, ஒழுக்கமற்ற ஒரு வாழ்வு வாழ வைக்கின்றது. பல மாதங்கள் இப்படியொரு வாழ்வு வாழ்ந்த பிறகு இந்த மக்கள் சொந்தக் கிராமங்களை மறந்துவிடுகின்றனர். தங்களுடைய சொந்த பூமிக்குத் திரும்பும் எண்ணமே அவர்களுக்கு வருவது இல்லை" என்று சொன்னார்.

"சிங்கள அரசின் இந்தத் திட்டத்தை முறியடிக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் எவ்வளவு இழப்புகளுக்கு ஆளானாலும் சொந்த மண்ணைவிட்டு வெளியேறக் கூடாது என எங்கள் மக்களுக்குப் போதித்து வருகிறோம். சிங்கள வெறியர்களின் தாக்குதல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறோம். சொந்த மண்ணைவிட்டு நாம் வெளியேறுவது இறுதியில் நமது மண்ணை நிரந்தரமாக இழப்பதற்கு வழிவகுத்துவிடும் என்ற உண்மையை அவர்களுக்கு உணர்த்துகிறோம். பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு ஏற்பட்ட கதி நமக்கும் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்" என்றார் தளபதி மாத்தயா

தமிழர்களை விரட்டியடிக்கச் சிங்கள அரசு செய்யும் இன்னொரு சதித்திட்டத்தையும் அவர் விளக்கிக் கூறினார். தேசியப்பாதுகாப்பு என்ற காரணம் காட்டிச் சில பகுதிகளைத் தடை செய்யப்பட்ட பிரதேசமாகச் சிங்கள அரசு அறிவிக்கிறது. உடனடியாக அந்தப்பகுதியிலுள்ள மக்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுகிறது. உதாரணமாக வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைக்கும் பிரதேசங்களான **தென்னைமரவாடி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு, கென்ட்பண்ணை, டாலர் பண்ணை, முந்திரிக்குளம்** போன்ற கிராமங்களைத் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாகச் சிங்கள அரசு அறிவித்துவிட்டது. இப்பகுதியிலுள்ள தமிழர்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டார்கள். இப்பகுதியில் மீண்டும் மக்களைக் குடியேற்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்'' என்று அவர் கூறினார்.

சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளின் முகாம்களில் உள்ள மக்களுக்குத் தேச பக்தியும் தன்னம்பிக்கையும் ஊட்டி அவர்களுக்கு வாழும் வழியினையும் புலிகள் காட்டுகிறார்கள். ஆங்காங்கே அகதிகளின் கூட்டுப்பண்ணைகளை உருவாக்கி அகதிகளின் பொறுப்பில் அவற்றைப் புலிகள் விட்டிருக்கிறார்கள். அகதி முகாம்களிலுள்ள குழந்தைகளுக்காகப் பள்ளிகளையும் புலிகள் நடத்துகிறார்கள். பெண்களுக்குத் தையல் மற்றும் கைத்தொழில்களில் பயிற்சி கொடுக்கிறார்கள். இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் கொடுக்கிறார்கள் என்று அவர் சொன்னார்.








## 15. வவுனியாப் படுகொலை

வவுனியாவிலிருந்து வெளியேறி வந்துள்ள அகதிகளைப் பல்வேறு முகாம்களில் சந்தித்தபோது **வவுனியாப்படுகொலை** என்று வர்ணிக்கப்படும் கோரமான படுகொலையைப் பற்றிய நிகழ்ச்சிகளை விசாரித்தேன்.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோது நடத்திய 'ஜாலியன் வாலாபாக்'' படுகொலை மிருகத்தனமானது. உலகத்தின் மனச்சாட்சியை அது அதிரச்செய்தது. அதற்கு இணையான மற்றொரு படுகொலை **வவுனியாப் படுகொலையாகும்.** சிங்கள வீரர்கள் திட்டமிட்டு நடத்திய இந்தப் படுகொலையைப் பற்றிய விவரங்களை நான் நேரில் கேட்டபோது அதிர்ந்துபோனேன். படுகொலைக்கு ஆளானவர்களின் குடும்பத்தினர்களைப் பல்வேறு அகதிகள் முகாம்களில் சந்தித்து உரையாடியபோது தங்களின் துயரக் கதைகளை அவர்கள் சொன்னார்கள்.

1985-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதியன்று வவுனியா மாவட்டத்திலுள்ள **தோனிக்கல்** என்ற ஊருக்கு அருகே வாழ்ந்த சிங்கள மக்கள் திடீரென லாரிகளின் மூலம் பத்திரமான இடங்களுக்கு அகற்றப்பட்டனர். திடீரென்று நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைக் கண்டு தமிழர்கள் திகைத்தனர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

மறுநாள் காலை இராணுவ லாரியில் வந்த சிங்கள இராணுவத்தினர் அங்கிருந்த பாலம் ஒன்றின் அருகே ஏதோ ஒன்றைப் புதைத்துவிட்டுச் சென்றனர். சிறிது நேரத்தில் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. பாலத்தின் ஒரு பகுதி இடிந்தது. உடனே இதைத் தொடர்ந்து சிங்கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவ வெறியர்கள் திரண்டுவந்து கண்மூடித்தனமாக மக்களைச் சுட்டார்கள். வீடுகளைக் கொளுத்தினார்கள். வவுனியா மருத்துவ மனையைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை. மறைந்த ஈழத் தலைவர் **திரு. சி. சுந்தரலிங்கம்** அவர்களின் பண்ணை வீட்டில் சுமார் 50-க்கும் மேற்பட்ட தமிழர்கள் ஓடி ஒளிந்துகொண்டனர். அந்த வீட்டைச் சிங்களச் சிப்பாய்கள் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். வெளியேவந்து வரிசை வரிசையாக நிற்கும்படி உத்தரவிட்டார்கள். பீதியடைந்த மக்கள் வரிசையில் நின்றுகொண்டிருக்கும்போதே திடீரென்று சுடத் தொடங்கினார்கள். ஓரிருவரைத் தவிர மற்றவர்களெல்லாம் கொலை செய்யப்பட்டார்கள். அன்று முழுவதும் இந்த நரவேட்டை நடந்தது. ***மொத்தத்தில் 200-க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.***


***பாவற்குளம், கம்பைமாடு, கத்திப்புலவை, தேரனிக்கல், மூன்றுமுறிப்பு, சூசைப்பிள்ளையார்குளம், கோவில்குளம்*** ஆகிய ஏழு கிராமங்களைச் சேர்ந்த தமிழர்கள் முற்றிலுமாக விரட்டியடிக்கப்பட்டார்கள். இரவு நேரத்தில் விமானம் மூலமும் இப்பகுதி மக்கள்மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

பட்டப்பகலில் பகிரங்கமாக நடைபெற்ற இந்தப்படுகொலையை மூடிமறைக்கச் சிங்கள அரசு முயற்சி செய்தது. இந்தப்படுகொலையைச் செய்தவர்கள் யார் என்பதே தங்களுக்குத் தெரியாது என்று பசப்பியது. இலங்கை சர்வோதயத் தலைவர்களில் ஒருவரான திரு. கதிரைமலை என்பவரின் குடும்பமும் படுகொலை செய்யப்பட்டது. அவரின் மனைவி, மைத்துனி, அவருடைய பாட்டி ஆகியோர் ஈவு இரக்கம் இல்லாமல் கொலை செய்யப்பட்டார்கள். இலங்கை சர்வோதய இயக்கத் தலைவரான ***ஆரியரத்தினாவின்*** உதவியாளரையும் சுட்டுக் கொன்றார்கள்.

படுகொலை செய்யப்பட்ட தமிழர்களில் ஒருவரின் சடலத்தைக் கூட உறவினர்களுக்கு அளிக்க இராணுவம் மறுத்துவிட்டது. அவ்வளவுபேரின் சடலங்களையும் எரித்து விடுவதற்கு இராணுவமே நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்கிடையில் திரு. ஆரியரத்னாவின் முயற்சியின்பேரில் திரு. கதிரைமலையின் குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரின் சடலங்கள் மட்டும் மீட்டுக் கொடுக்கப்பட்டன. அவற்றை அவர் கொண்டுபோய் கிளிநொச்சியில் அடக்கம் செய்தார். இலங்கை சர்வோதயத்தலைவரான ஆரியரத்னாவின் இந்தச் செயல் தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.



சுட்டுக்கொல்லப்பட்ட அத்தனை பேர் சடலங்களையும் அவர்களின் உற்றார் உறவினர்களிடம் ஒப்படைக்கவேண்டுமென்று போராட வேண்டிய சர்வோதயத் தலைவர் **தமது** இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரின் குடும்பச் சடலங்களை மட்டுமே திரும்பப்பெற உதவியிருக்கிறார் என்று சொன்னால் இதைவிடக்காந்தியத்துக்கு **விரோதமான** செயல் வேறு என்ன இருக்கமுடியும்? என்று அனைவரும் மனம் நொந்துபோய் சொன்னார்கள் **மேலும் அதிர்ச்சிதரத்தக்கது என்னவென்று** சொன்னால் இந்தப்படுகொலையைக் கண்டித்து ஆரியரத்னா அறிக்கை கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட கதிரைமலைகூட இராணுவத்தின் படுபாதகச் செயலை மறைப்பதற்குத் துணை புரிந்தார். பச்சைச் சீருடை அணிந்த யாரோ சிலர் இந்தப் படுகொலையைச் செய்து விட்டார்கள் **என்று கூறினாரே தவிரச்சிங்கள** இராணுவம்தான் இந்தப் படுகொலையைச்செய்தது என்று கதிரைமலை தனது அறிக்கையில் சொல்லவேயில்லை. இந்தச் செயலின் **மூலம் இலங்கைச்** சர்வோதய இயக்கத்தின் மேலுள்ள நம்பிக்கையை தமிழர்கள் அறவே இழந்து விட்டனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 16. உதிர்ந்த பூவும்—பிஞ்சும்

வவுனியா மாவட்டத்திலுள்ள சில அகதி முகாம்களுக்குப் போனோம்.

நெடிதுயர்ந்த மரங்கள் உள்ள பகுதியில் அகதிகளின் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நூற்றுக்கணக்கான மரங்கள், வெட்டி வீழ்த்தப்பட்டுக் கிடப்பதையும் வெட்டிப் போட்ட மரங்களை அறுத்து அவற்றின் துணை கொண்டே அகதிகளின் வீடுகள் அமைக்கப்பட்டு வருவதையும் நான் பார்த்தேன்.

எங்கள் வாகனங்கள் அந்தக் காட்டுக்குள் நுழைந்தபோது மனித நடமாட்டமே இல்லாத ஒரு அசாதாரணமான அமைதி நிலவிற்று. சர்வோதய இயக்கத்தின் அலுவலகத்துக்கு முன்னால் எங்கள் **வாகனங்கள்** நிறுத்தப்பட்டன. நாங்களும் கீழே இறங்கினோம். வவுனியாப்பகுதியின் தளபதி மாத்தயா அலுவலகத்திற்குள் சென்று சிலரை வெளியே அழைத்து வந்தார். வரும்போதே சிரித்துக்கொண்டு "அண்ணா! நீங்கள் வரும் வேன்களைப் பார்த்துச் சிங்கள இராணுவம் தான் வருகிறதோ என்று எண்ணி எல்லோரும் ஓடி ஒளிந்துவிட்டார்கள். சற்று உள்ளே வந்து உட்காருங்கள். அதற்குள் எல்லோரையும் அழைத்து வர ஏற்பாடு செய்கிறோம்" என்று சொல்லிவிட்டுப்போனார். நானும் உள்ளே போய் உட்கார்ந்தேன். அங்கே இருந்த அலுவலர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

மலைநாட்டுத்தமிழர்களில் 252 குடும்பங்கள் இந்த முகாம்களில் உள்ளன. இவர்கள் எல்லாம் மலையோரப் பகுதியில் வாழ்ந்து 1977-1983 கலவரங்களில் எல்லாவற்றையும் இழந்து அகதிகளாகி



வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் போன்ற பகுதிகளில் குடியேறியவர்கள். இப்பொது மீண்டும் அகதிகளாக்கப்பட்டு இங்கே வந்து தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இவர்களுக்கு குடும்பத்திற்கு 1½ ஏக்கர் விவசாய நிலமும் குடிநிலக்காணியாக 1½ ஏக்கர் நிலமும் கொடுத்து கிணறு, வீடு அமைத்துத்தரத் திட்டமிட்டுள்ளார்கள்.

அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்யவில்லை. சி. எஸ். ஐ., செடக், ரெட்பானா, விஸ்வ ஹிந்து பரிஷத் சர்வோதயா போன்ற தர்ம ஸ்தாபனங்கள் அளிக்கிற உதவிகள் மூலமே இந்த அகதிகள் முகாம் நடத்தப்படுகின்றன. அகதிகளுக்குத் தேவையான உடைகள், பாத்திரங்கள் ஆகியவற்றை இந்த அமைப்புகளே கொடுத்து உதவியுள்ளன. சர்வோதய இயக்கத்தின் சார்பில் பள்ளிக்கூடம் ஒன்றும். மருத்துவமனை ஒன்றும் நடத்தப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் இயக்கம் இந்த அகதிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு மற்ற உதவிகளையும் செய்கிறது. இந்த விவரங்களை அந்த அலுவலகத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

இதற்குள் காட்டுக்குள் ஒளிந்துகொண்டிருந்த மக்களை அழைத்துக்கொண்டு தளபதி மாத்தயா திரும்பி வந்தார். அவர்களைக்கண்டு பேசினேன். தாங்கள் அகதிகளாக்கப்பட்ட சோக வரலாறுகளை அவர்கள் விவரித்தார்கள்.

மலையகத் தமிழர் என அழைக்கப்படும் தோட்டத் தொழிலாளர் பரம்பரையைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் 1977-ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்தில் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி அகதிகளாகித் தமிழீழப் பகுதியான வவுனியா மாவட்டத்தில் குடியேறினார்கள். தமது கடும் உழைப்பினால் காடுகளை வெட்டித் திருத்திக் கழனியாக்கினார்கள். உண்மை உழைப்பு அவர்களுக்கு உயர்வைக் கொடுத்தது. நல்வாழ்வைக் கொடுத்தது. சிதைந்து போன தங்கள் பழைய வாழ்வை மறந்தார்கள். உழைப்பினால் தங்கள் இழப்பை ஈடுசெய்து கொண்டார்கள். சோகக்கதைகளை மறந்து புதிய வாழ்வு அமைத்துக்கொண்டு வாழத் தொடங்கியவர்களுக்குப் பேரிடி காத்திருந்தது.

பட்டகாலிலேயே மீண்டும் அடிபட்டது. கெட்டகுடியே மீண்டும் கெட்டது.

வவுனியாவில் தமிழ்த் தலைவர் சுந்தரலிங்கம் பண்ணையில் வாழ்ந்து சிங்கள வெறியர்களால் துரத்தியடிக்கப்பட்டு அகதிகளான பலரைக்கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அகதிமுகாம் ஒன்றில் சந்தித்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்டால் கல்நெஞ்சமும் கலங்கும். இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன் நான் என்பதை அறிவித்தபோது அவர்களது கண்ணீர் மடைதிறந்த வெள்ளமெனப் பெருகியோடிற்று.

தாய்மார்கள் அழுது புலம்பியவாறு தங்கள் துயரங்களைச் சித்தரித்தபோது நான் சித்தம் கலங்கிப்போனேன்

அதிலும் பூவும் பொட்டும் இழந்த சகோதரிகளின் நிலையை யாராலும் வர்ணிக்க இயலாது. **கணவரை இழந்த பெண்கள் பெரும்பாலும் 16 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவர்களாகவே இருந்தனர்.** இது ஏன் என்று யோசித்தபோது ஒரு பயங்கர உண்மை புலப்பட்டது. ஆம்'. இராணுவத்தினால் படுகொலை செய்யப்படுபவர்களில் பெரும்பாலோர் இளைஞர்களாக இருப்பதனால் விதவைகளில் பெரும்பாலோரும் இளம்பெண்களாகவே அமைந்துவிடுகின்றனர்.

இம்முகாம்களிலுள்ள திருமதி ***சரசுவதி மலையாண்டி*** என்ற நடுத்தர வயதுப் பெண்மணியைச் சந்தித்தேன். அவர் கதை நெஞ்சைப் பிழிய வைக்கும் சோகக்கதையாகும். **குருநகர் குறியிலுள்ள** என்ற இடத்தில் வாழ்ந்த வசதிமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். 1983-ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்தில் அவருக்குச் சொந்தமான அரிசி ஆலை எரித்து நாசம் ஆக்கப்பட்டது. அவருடைய கணவரும் கொல்லப்பட்டார். இவரின் இளைய சகோதரிகள் நான்கு பேரும் இவரைப்போலவே கணவர்களைப் பறிகொடுத்தார்கள். இவர்களில் வயதான தாய் ஏற்கனவே விதவை. ஆக.குடும்பத்திலிருந்த ஆண்கள் அனைவரையும் மொத்தமாக இழந்துவிட்டு இந்த 6 விதவைப் பெண்களும் அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். அகதிகள் முகாமில் ஒரு குடும்பத்திற்கு ஐந்துபேருக்கு உள்ள ரேசன் மட்டுமே கொடுக்கப்படுகிறது. இந்த மாதத்தோடு அந்த உதவியும் நிறுத்தப்பட்டு விடலாம். நாங்கள் என்ன செய்வது? எங்கள் கதி என்ன? என அந்தப் பெண்மணிகள் புலம்பினர். மற்றக்குடும்பங்களுக்குத் துணையாக ஆண்கள் இருக்கிறார்கள். எங்களுக்கு யாருமில்லை. எங்களுக்கு யாரும் நிலம் கொடுத்தாலும் நாங்கள் விவசாயம் செய்யமுடியாது. எங்கள் வீடுகளையும் நாங்களே கட்டிகொள்ள முடியாது. எங்களுக்கு உதவி செய்யக்கணவன்மார்களுமில்லை; புதல்வர்களுமில்லை; சகோதரர்களுமில்லை'' என்று அந்தப் பெண்மணி கண்ணீர் விட்டபோது அவருக்கு ஆறுதல் கூற வழி தெரியாது திகைத்தேன்.



இராசதுரி சாக்கு கடையில் தொழிலாளியாக வேலை பார்த்த ***ராமு*** என்பவரைச் சந்தித்தேன். 83 ஜுலை அவருடைய வீடு கொளுத்தப்பட்டது. அதற்குப்பிறகு இங்கு வந்து குடியேறி 1½ ஏக்கர் நிலத்தை வெட்டித் திருத்தியிருக்கிறார். அரசு உதவி எதுவும் கிடையாது. இங்கு வந்து சேர்ந்த புதிதில் பலர் பட்டினியால் செத்துப் போனதாகக்கூறினார். இறந்தவர்களை எடுத்துச்செல்லச் சவப்பெட்டி கூட இல்லை. "ஒரு **சவப்பெட்டியாவது எங்களுக்கு** ஏற்பாடு **செய்து கொடுங்கள்**'' என்று அவர் கேட்டபோது நெஞ்சம் பதறி போனேன். வாழவழியில்லாமல் செத்த பின்பு புதைக்கக்கூட வழியில்லாமல் தமிழர்கள் தங்களுக்குச் சொந்தமான நாட்டிலேயே தவிப்பதை எண்ணி மனம் குமைந்தேன்.

***ஆனைவிழுந்தான் குடியிருப்பு, ஆரோக்கியநகர்க்குடியிருப்புப்*** போன்ற குடியிருப்புகளுக்குச் சென்றோம். எல்லாவற்றிலுமே மலை நாட்டுத் தமிழர்கள்தான் பெரும்பாலும் அகதிகளாக இருக்கிறார்கள். இங்கேயும் இவர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை.

இக்குடியிருப்புகளிலுள்ள ***பர்தீசியா*** என்னும் பெண்மணி தமது கணவர் கொல்லப்பட்ட நிகழ்ச்சியை விவரித்தார். கோவில்குளம் ஊரில் வாழ்ந்த விவசாயக் குடும்பம் இவரது குடும்பம். விட்டிலிருந்த இவரது கணவரை இராணுவம் சுட்டுக் கொன்றது. இவரையும் மானபங்கப்படுத்த முயற்சி செய்தார்கள். **தமது** தந்தையுடன் தப்பி இந்த அகதிகள் முகாமில் வாழ்கிறார். இந்த முகாமிற்கும் இருமுறை இராணுவம் வந்து வீடுகள், கடைகள் ஆகியவற்றைக்கொளுத்தியதாகவும் ஆட்களைச் சுட்டதாகவும் அவர் சொன்னார். நான் அங்குச் செல்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் ஆகஸ்ட் மாதத்தில் இராணுவம் அங்கே சுட்டபோது படுகாயமடைந்த திரு. இராமகிருஷ்ணன் என்பவரையும் சந்தித்தேன். எவ்விதக்காரணமும் இல்லாமல் திடீரென்று இராணுவம் சுட்டதாக அவர் சொன்னார்.

அதைப்போல ***இலட்சுமி*** என்ற ஐந்து குழந்தைகளின் தாய் தமது கண்ணீர்க் கதையைக் கூறினார். விவசாயக் கூலியாக வேலை பார்த்த அவரது கணவர் இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டார். குழந்தைகளோடு அவர் அனுபவிக்கும் துன்பம் காணச்சகிக்க முடியாததாகும்.

***பிரான்சிஸ் பெஸ்தியான்*** என்பவரது வீட்டை இராணுவம் அடியோடு கொளுத்தி நாசமாக்கிவிட்டது. இப்படிச்சொத்துக்களையும் சொந்தக்காரர்களையும் இழந்த பலரும் தங்கள் சோக வரலாற்றை விவரித்தனர். ***நாகம்மாள்*** என்ற ஒரு பெண்மணியைப் பார்த்தேன். இவருக்கு 8 குழந்தைகள். மூத்த மகன் திரு. நாகலிங்கம் என்பவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள போலீஸ் அதிகாரி ஒருவரிடம் பியூன் ஆக வேலை பார்த்தான். அவர் சென்ற ஜீப் கண்ணி வெடி விபத்தில் சிக்கி அவர் மாண்டார். இந்த நிகழ்ச்சிக்கு சம்பந்தமே இல்லாத திரு.நாகலிங்கத்தை இராணுவம் கைது செய்து கொண்டுபோய் சித்திரவதை செய்தது. நாகலிங்கத்தைச் சந்திக்கவும் அவன் நிரபராதி என்பதை நிரூபித்து அவனைவிடுவிக்கவும் இந்த ஏழைத் தாய் செய்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய் விட்டன. திரு. தொண்டமான், திரு. இராசதுரை போன்ற தமிழ் அமைச்சர்களிடம் இந்த அம்மையார் முறையிட்டு மன்றாடியும் எந்தப் பயனுமில்லை. தங்களால் எதுவும் உதவ முடியாது என்று அவர்கள் கையை விரித்துவிட்டார்கள். இந்த விவரங்களை அவர் கூறிக் கண்ணீர்விட்டபோது அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

அதைபோல **ராதா** என்ற 10 வயதுச் சிறுமியை ஆரோக்கிய நகர்க் குடியிருப்பில் சந்தித்தேன். இச்சிறுமியின் சோக வரலாறு வார்த்தைகளால் விவரிக்க முடியாததாகும். கண்டியில் லாரி டிரைவராக வேலை பார்த்த செல்வராஜ் என்பவரது மகள் இவள். மாங்குளத்தில் இருந்த தனது அக்காவின் வீட்டிற்கு இவள் வந்திருந்தாள். இவளோடு இவளது மூன்று தம்பிகளும் வந்திருந்தனர், வந்த இடத்தில் திடீரென இராணுவம் தாக்கியது. அக்காளும், அக்காளின் கணவரும் எங்கே போனார்கள் என்பது தெரியவில்லை. தெருவில் தனது தம்பிமார்களோடு விளையாடிக் கொண்டிருந்த இவள் தப்பியோடி வந்து இந்த அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்தாள். பத்தே வயதான அந்தப்பெண் தன்னிலும் இளைய மூன்று தம்பிகளை வைத்துக் கொண்டு அவர்களுக்குச் சமைத்துப்போட்டு எப்படியோ காப்பாற்றி வருகிறாள். வேடர்களுக்கு நடுவே சிக்கிய மான் மிரள மிரள விழிப்பதைப்போல அவளது விழிகள் காட்சி தந்தன. அச்சமும் அழுகையும் நிறைந்த அந்த விழிகளில் குடிகொண்டிருந்த எல்லையில்லாச் சோகத்தினை நான் பார்த்தபோது தமிழீழ குழந்தைகளின் சோகம் எத்தகையது என்பதை அந்த ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டேன். அவள் இருக்கும் இடத்தை அவளுடைய பெற்றோருக்கு எப்படியாவது தெரிவிக்க முயற்சி செய்யும்படித் தளபதி மாத்தியாவிடம் கூறினேன். இந்தியாவிற்கு நான் திரும்பிய பிறகும் கூட ராதாவின் சோகம் ததும்பிய முகம் என் கண்களுக்கு முன்னால் காட்சி தந்து கொண்டே இருக்கிறது.

**கோனாவில்** என்ற இடத்திலுள்ள அகதிகள் முகாமுக்குச் சென்றோம். அந்த முகாமுக்குக் 'காந்தியடிகள்' பெயரை வைத்திருக்கிறார்கள். 'காந்திகிராமம் அகதிகள் முகாம்' என்று அதற்கு பெயரிட்டு இருப்பது எல்லா வகையிலும் பொருத்தமாக எனக்குத் தோன்றியது, அங்கே பெரும்பாலும் இந்தியவம்சாவழித் தமிழர்களே அகதிகளாக உள்ளனர். இந்த முகாமில் ஏறத்தாழ 500 பேருக்கு மேல் உள்ளனர். இந்த முகாமில் செட்டிகுளத்தைச் சேர்ந்த **இலங்கேஸ்வரி** என்ற பெண்ணைப் பார்த்தேன். அவளது கண்ணுக்கு முன்னாலேயே அவளது கணவரையும் தங்கையின் கணவரையும் சிங்களவர்கள் சுட்டுக்கொன்றார்கள். இவளது தங்கையைக் கற்பழித்துக் கொன்றார்கள். கொடூரமான நிகழ்ச்சிகளை நேரில் பார்த்த அதிர்ச்சியிலிருந்து அவள் இன்னும் மீளவில்லை.

**செல்வராணி** என்ற ஒரு இளம் பெண்ணை முகாமில் நான் சந்தித்தது என் உள்ளத்தில் ஆழமான வடுவினை ஏற்படுத்திவிட்டது. மலைநாட்டில் வாழமுடியாமல் இவரது குடும்பத்தினர் வவுனியா வந்து தஞ்சம் புகுந்தனர். மறைந்த தலைவர் சுந்தரலிங்கம் அவர்களின் பண்ணையில் இக்குடும்பம் வேலை பார்த்தது. ஒருநாள் திடீரென இராணுவம் இவர்கள் குடியிருப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டது. வீட்டுக்குள் இருந்த இவரது கணவரை வெளியே அழைத்தார்கள். அவரும் வெளியே வந்தபோது உடனடியாக இராணுவம் அவரைச்சுட்டுவிட்டது. அப்பா ! என அலறிக் கொண்டே ஓடிவந்த குழந்தையின் காலிலும் சுட்டுவிட்டார்கள். இந்தக்கதையை அந்தப்பெண் சொல்லும் போதே அளவிட முடியாத துக்கம் மேலிட்டதினால் மூர்ச்சையடைந்து என் முன்னாலேயே மயங்கி விழுந்தாள். எதிர்பாராத இந்தத்துயர நிகழ்ச்சியினால் நிலைகுலைந்து போனேன். சுற்றிலும் உள்ள பெண்கள் கூடிச் செல்வராணியின் மயக்கத்தைத் தெளியவைக்க முயற்சி செய்து கொண்டு இருந்தார்கள். இந்தப்பெண் மணியின் மாமியாரான 'விசாலாட்சி' குடும்பத்தின் சோகக்கதையை தொடர்ந்தார். ''எனக்கு எட்டு மகன்கள் உண்டு. மிஞ்சி இருப்பவன் இவன் ஒருவன்தான்'' என்று அருகில் நின்ற 15 வயது பையனைச் சுட்டிக்காட்டினார். மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்று நான் பரபரப்புடன் கேட்டபோது அத்தனை பேரையும் சிங்கள வெறியர்கள் சுட்டுக் கொன்று விட்டார்கள் என்று அந்தத்தாய் அழுதுபுலம்பினார். இதற்குள் மயக்கம் தெளிந்து எழுந்த செல்வராணிக்கு ஆறுதல் கூறினேன்

ஆனாலும் அவளின் புலம்பலை என்னால் நிறுத்த முடியவில்லை ''பிள்ளைகளைப் பிரிந்து வாழ நேர்ந்தாலும் வாழலாம்; புருஷனை இழந்து எப்படி வாழ்வது ? எனது மூத்த மகள் அப்பா இல்லாமல் எப்படிப் படிப்பேன்? எப்படி வாழ்வேன்? என்று கேட்கிறாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிணற்றில் பாய்வேன் என்று சொல்கிறார்கள். அதற்காக அவளை எனது பெற்றோர் வீட்டில் கொண்டு போய்விட்டிருக்கிறேன். மற்ற குழந்தைகளும் அப்பா என்று ஏங்கிய வண்ணமாக இருக்கின்றன. கூண்டோடு எல்லோரும் அழிந்திருந்தாலும் நிம்மதியாக இருந்திருக்கும்'' என்று அழுதாள்.

''அம்மா! தைரியமாக இரு, இதற்கு ஒரு முடிவு சீக்கிரத்தில் வரும்'' என்று சொன்னேன்.

**''முடிவு முடிவு என்று சொல்கிறீர்கள்' அது வருவதற்குள் என் வாழ்க்கையே முடிந்து விட்டது'' என்று செல்வராணி கதறிய போது பொங்கி எழுந்த அழுகையை என்னால் அடக்கவே முடியவில்லை.**

**இராமையா** என்ற ஒரு வயோதிகரைச் சந்தித்தேன். அவரின் மனைவி ஒரு சிங்களப்பெண். அந்த வயோதிகரையும் மூதாட்டியையும் சிங்களர்கள் விட்டு வைக்கவில்லை. அவருடைய மூன்று புதல்வர்களையும் சுட்டுக்கொன்றார்கள். அப்போது இராமையாவின் மனைவி சிங்கள மொழியில் அலறியபோது இராணுவ வெறியர்களின் கோபம் பன்மடங்கு அதிகமாயிற்று. ''நீ ஒரு சிங்களச்சியாக இருந்து கொண்டு ஒரு தமிழனை மணந்து பிள்ளைகள் வேறு பெற்றிருக்கிறாயா'' என்று சொல்லித் திட்டினார்களாம். இராமையாவைச்சுட முயன்ற போது அதை இந்த அம்மையார் குறுக்கே சென்று தடுத்தார். அப்போது இந்த அம்மையாரின் காலில் குண்டு பாய்ந்தது. துயரமிக்க நிகழ்ச்சியை அந்த வயதான தம்பதிகள் விவரித்தபோது சிங்களரின் வெறி எந்த அளவுக்கு உச்சக்கட்டமாக இருக்கிறது என்பது எனக்குப் புரிந்தது.

ஒரு கையும் காலும் விளங்காத இன்னொரு வயோதிகரை நான் சந்தித்தேன். என்ன வேண்டுமென்று நான் அவரிடம் பரிவாகக் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்னைத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

''எனக்குத் தேவை துவக்கு ஒன்றுதான். ஒரு கை விளங்கா விட்டாலும் ஒரு கையால் சிங்களவர்களுடன் போரிட்டுச் சாக விரும்புகிறேன்'' என்றார் அவர். அந்தப்பெரியவரின் மன உறுதியைக் கண்டு நான் வியந்தேன்.

இந்த அகதிகள் முகாமில் சமூக சேவையாளர் சிலரை நான் சந்தித்தேன். கிளிநொச்சியைச் சேர்ந்த படித்த பெண்கள் ஒன்றுகூடி ''நலன்புரி சங்கம்'' என்ற ஒரு அமைப்பினை உருவாக்கியிருக்கிறார்கள்.



இந்த அமைப்பைச் சேர்ந்த அந்த சகோதரிகள் அகதிகள் முகாம்களில் சிறந்த முறையில் சேவைசெய்கிறார்கள். அவர்களின் பெயர்களை நான் இங்கு வெளியிட விரும்பவில்லை. அகதிகளுக்கு உதவிபுரிவதற்காக அவர்களை எந்த நிமிடமும் இராணுவம் கைது செய்யலாம். ஆனாலும் அவர்கள் அதைத் துச்சமாக மதித்து அற்புதமான தொண்டு புரிந்துவருகிறார்கள். நிதி திரட்டி அகதிகளுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் அத்தியாவசியமான பொருட்கள் ஆகியவற்றை வழங்குகிறார்கள். அகதிகளின் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தருகிறார்கள். நிர்க்கதியாக நிற்கும் பெண்களுக்கு ஏதேனும் தொழில் செய்வதற்கு உதவிபுரிகிறார்கள். திக்கற்ற தமிழர்களுக்கு நடுவில் தேவதைகளாகச் சுற்றிச் சுழன்று தொண்டாற்றும் இந்த சகோதரிகளைப் பாராட்டினேன்! வாழ்த்தினேன்!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 17. கோவில்களின் கதி.

கிளிநொச்சி மாவட்டத்தில் நான் சுற்றுப் பயணம் செய்தபோது ஒரு கிராமத்துக்கு அருகே இந்துக் கோவில் ஒன்றினைப் பார்த்தேன். "**விக்ன விநாயகர் கோவில்**" என்னும் பெயருடைய அந்தக் கோவிலுக்கு 1½ ஆண்டுகளுக்கு முன்னர்தான் குடமுழுக்கு நடைபெற்றிருந்தது. ஈழநாட்டுக் கோவில்கள் பொதுவாகத் தூய்மைக்குப் பெயர்பெற்றவை. ஈழநாட்டு மக்கள் தங்கள் கோவில்களைப் பக்திப் பரவசத்தோடு பராமரிப்பது அவர்களுக்கே உரிய சிறந்த பண்பாடாகும். இந்தக் கோவிலும் இதற்கு விதிவிலக்கு அல்ல. சிறிய கோவிலானாலும் அழகாகவும், தூய்மையாகவும் விளங்கிற்று. அந்தக் கோவிலைச் சேர்ந்த குருக்கள் என்னை வரவேற்று அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தார். அதற்குபின் அவருடனும் அவருடைய குடும்பத்தினருடனும் பேசிக் கொண்டு இருந்தேன். கோவில்களைக் கூட இராணுவம் விட்டு வைக்கவில்லை என்று அவர் கூறினார். கடந்த மூன்றாண்டுக்காலங்களில் மலை நாட்டுப் பகுதியிலும் ஈழ நாட்டுப்பகுதியிலும் ஏராளமான கோவில்களைச் சிங்கள இராணுவத்தினர் நாசம் செய்து இருப்பதாகவும் அவர் சொன்னார். **50 க்கு மேற்பட்ட கோவில் குருக்களையும் சுட்டுக் கொன்றதாகவும் அவர் தெரிவித்தார்.**

இன்னொரு உண்மையையும் அவர் எனக்குப் புலப்படுத்தினார். சிங்களவர்களிலும் தமிழர்களிலும் கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்கள் சிறுபான்மையினரே. ஆனால் சிங்களவர்களில் பெரும்பாலோர் பௌத்தர்கள். அதைப்போல் தமிழர்களில் பெரும்பாலோர் இந்துக்கள்.



ஒரு சிங்களன்கூட இந்து அல்ல. ஒரு தமிழன் கூட பௌத்தன் அல்ல. தமிழர்கள் **என்ற காரணத்திற்காக மட்டும் தாங்கள் வேட்டையாடப்படுவ**தில்லை. இந்துக்கள் என்ற காரணத்திற்காகவும் வேட்டையாடப்படுவதாக அவர் சொன்னார். பிராமண சமுதாயத்தை சேர்ந்தவர்கள் சுமார் 50 ஆயிரம் பேர் இருப்பதாகவும் அவர்கள் நிலை மோசமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தப் பிரச்னை தீர வழிதான் என்ன என்று அவரிடம் நான் கேட்டேன். அப்போது பளிச்சென்று அவர் "எங்களுக்கென்று தனியாக ஒரு நாடு கிடைத்தாலொழிய இதற்குப் பரிகாரமே கிடையாது", என்று கூறினார்.

"உங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மற்றவர்களும் இப்படி நினைக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"நூற்றுக்கு**த்தொண்ணூறுபேர்**அவ்வாறு நினைப்பதாக" அவர் கூறினார்.

கோவிலுக்கு வரும் மக்கள் தொகை குறைந்து விட்டது. நிம்மதியாகவும் கோவில்களில் இருக்கமுடியவில்லை. திடீர்திடீரென இராணுவம் வருவதால் அஞ்சிஅஞ்சி வாழ வேண்டி இருக்கிறது. இராணுவம் வந்தால் அருகேயுள்ள காட்டுக்குள் ஓடி ஒளிவதைத் தவிர வேறு வழியில்லை. ஊருக்கு ஒதுக்குப்புறமாகவுள்ள கோவில்களில் இருக்கும் குருக்களின் நிலைமை இன்னும் மோசமானது.

பல்வேறு மாவட்டங்களில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது பல கோவில்களுக்குப் போனேன். அங்கேயுள்ள குருக்கள்களையும், கோவிலுக்கு வரும் மக்களையும் சந்தித்தேன். கிட்டத்தட்ட எல்லோரும் ஒரே மாதிரியான கருத்துக்களையே சொன்னார்கள்.

வல்வெட்டித்துறையில் உள்ள மிகப் பெரிய ஆலயமான '**முத்து மாரிஅம்மன்**' கோவிலுக்கும் போயிருந்தேன். அக்கோவிலின் தலைமைக் குருக்களைச் சந்தித்தேன். கோவிலில் தரிசனம் செய்துவிட்டு பிரகாரத்தில் சுற்றிவரும்போது இந்த ஆலயத்தின் நிர்வாகிகளும், குருக்களும் ஒரு இடத்திற்கு வந்தவுடன் சிலவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். மேலே போடப்பட்டுள்ள ஓடுகள் பல இடங்களில் நொறுங்கிக் கிடந்தன. கீழே கருங்கல் தரையிலும் பல சிறு குழிகள் காணப்பட்டன. என்னவென்று கேட்டபோது ஹெலிகாப்டர் விமானத்திலிருந்து இடைவிடாமல் **சுட்டதன்** விளைவாக இந்தச் சேதங்கள் ஏற்பட்டு இருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர்களுடன் உட்கார்ந்து பேசும்போது மேலும் பல விவரங்களை அவர்கள் சொன்னார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழப்பகுதியிலுள்ள எல்லாக் கோவில்களும் அதாவது சேதமடையாமல் இருக்கும் கோவில்கள் காலை 8 மணிக்குத்தான் திறக்கப்படுகின்றன. மாலை 4 மணிக்கு எல்லாம் அடைத்துவிடுகிறார்கள். அர்த்தசாம பூசையை மாலை 4 மணிக்கே முடித்துவிடுகிறார்கள். கோவில்களில் மணியடிக்க இராணுவம் தடை விதித்துள்ளது. கோவில் மணிகளை அடித்துப்புலிகள் தங்களுக்குள் ரகசிய சமிக்ஞை செய்து கொள்வதாக இராணுவம் சந்தேகப்படுகிறது. கடந்த தைப் பொங்கலன்று மணி அடிக்க விசேஷ அனுமதிபெறத் தலைமைக் குருக்கள் இராணுவ முகாமிற்குச் சென்றபோது அவரை அவமதித்து விரட்டிவிட்டார்களாம். இன்னும் இதைப்போலப் பல்வேறு கொடுமைகளை அவர்கள் விளக்கிச் சொன்னார்கள்.

வல்வெட்டித்துறையிலுள்ள 'சிவன் கோவில்' மிகப் பெரியது. இப்போது இந்தக் கோவில் இராணுவ வெறியாட்டத்திற்கு இரையாகிப் பாழாகிக் கிடக்கிறது. தலைவர் பிரபாகரனின் தந்தை இந்தக் கோவிலுக்குத் தர்மகர்த்தாவாக இருந்தார்.

அதைப் போலவே பருத்தித்துறையில் உள்ள '**சித்தி விநாயகர்' கோவில் 'கோட்டுவாசல் அம்மன்' கோவில்** போன்றவை பாழடைந்து கிடக்கின்றன. இந்தக் கோவில்களில் இப்போது வழிபாடுகளுமில்லை; வழிபடுவதற்கு யாரும் வருவதுமில்லை.

'இரணமடு அம்பா' நகரிலுள்ள 'கனகாம்பிகை' கோவிலுக்குச் சென்றேன். அமைதியும் அழகும் குடிகொண்டிருந்த பகுதியில் அந்தக் கோவில் அமைந்திருப்பது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இரணமடு என்ற அந்தப்பெரிய ஏரிக்கரையில் அமைந்துள்ள இந்தக் கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்துகொண்டிருந்தார்களாம். ஆனால் இப்போது ஆள்நடமாட்டம் இல்லாமல் அப்பகுதியே வெறிச்சோடிக் கிடந்தது. கோவிலுக்கு அருகேயுள்ள தேர் நிலையமும் சூழநின்ற பிரமாண்டமான மரங்களும் வெறுமையை மேலும் அதிகமாக்கிக் காட்டிக் கொண்டிருந்தன. கோவிலின் குருக்கள் என்னை அன்பு கனிய வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். நல்ல தரிசனம் செய்து வைத்தார். பக்தர்களின் காணிக்கையைக் கொண்டுதான் இந்தக் கோவிலின் நித்திய பூசை காரியங்கள் நடைபெற்றதாகவும் இப்போது கலவரச்சூழ்நிலையில் பக்தர்கள் வருவது குறைந்து விட்டதால் நித்திய பூசையைச்செய்வது சிரமமாக இருப்பதாகவும் கூறினார். இன்னொன்றையும் அவர் கூறினார். "இந்தக் கோவிலுக்கும் எனக்கும் இங்குள்ள மக்களுக்கும் புலிகளே பாதுகாப்பு அளிக்கிறார்கள், இவர்கள் இல்லாமலிருப்பார்களேயானால்



இந்தக் கோவிலையும் சிங்களவர்கள் எப்போதோ சூறையாடியிருப்பார்கள். **தமது குடும்பத்தைச் சேர்ந்த பல இளைஞர்களும், மற்றும் பிராமணக் குடும்பங்களைச் சேர்ந்த பல இளைஞர்களும்** புலிப்படையில் சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கல்லூரிப் பேராசிரியர் ஒருவரும் இதே கருத்தைத் தெரிவித்தார். பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர் அவர். அவருடைய வீட்டிற்கு அழைத்துச்சென்று விருந்தளித்தார். அவரும் அவருடைய துணைவியாரும் அன்போடும், பரிவோடும் என்னை உபசரித்தார்கள். விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவரான **'கணேசன்'** தம்முடைய உறவினர் என்று அவர் கூறினார். புலிகள் இயக்கத்தில் ஏராளமான பிராமண இளைஞர்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். தம்முடைய குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சோக நிகழ்ச்சியை அவர் விவரித்தார். அவரது வீட்டுச் சுவரில் நடுத்தர வயதுடைய ஒருவரது படம் மாட்டப்பட்டிருந்தது. அதை என்னிடம் காட்டியபடி அவர் சொன்னார். "இவர் எனது மைத்துனர். என்னுடைய மனைவியின் சகோதரர். இவருடைய பெயர் "**சுந்தரராஜ குருக்கள்**" என்பதாகும். 1958-ம் ஆண்டில் 'பனாந்துறை' கோவிலில் குருக்களாக பணியாற்றிவந்த இவரைக் கோவிலுக்குள்ளேயே கட்டிப்போட்டு எரித்துக் கொன்று விட்டனர் சிங்கள வெறியர்கள், அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் எங்கள் குடும்பம் மீளவில்லை".

அருகிலிருந்த ஒரு இளைஞனை எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு "இவன்தான் எனது இறந்த மைத்துனரின் மகன். இவனுக்கு அப்போது வயது ஒன்றுகூட ஆகவில்லை. கணவனை இழந்த அதிர்ச்சியில் அவன் தாயும் அதிக நாட்கள் உயிரோடு இருக்கவில்லை. விவரமறியாத குழந்தைப் பருவத்திலேயே இவனை எங்கள் கையில் ஒப்படைத்துவிட்டு அவளும் போய்விட்டாள். எனது மைத்துனன் மட்டுமல்ல 50-க்கு மேற்பட்ட கோவில் குருக்கள் சிங்கள வெறியர்களுக்கு இரையாகியிருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்களால் எங்கள் இரத்தம் கொதித்துக் கொண்டிருக்கிறது" என்று அவர் கூறினார்.

கிளிநொச்சிப் பகுதியில் ஒரு "மகாதேவ ஆசிரமம்" என்ற ஒரு ஆசிரமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே தவமே வடிவான தோற்றத்துடன் '**வடிவேல் சுவாமிகள்**' என்னும் முதிர்ந்த சிவனடியார் இருக்கிறார். ஞானப் பழமாகக் காட்சிதரும் அவருக்கு 88 வயதாகிறது என்று சொன்னார்கள். அந்தச்சுவாமிகளுடன் சிறிது நேரம் பேசிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்தேன். முற்றும் துறந்த முனிவரான அவரும்கூட நாட்டின் நிலைமை குறித்துச் சொல்ல முடியாத கவலை கொண்டிருந்தார். இந்து மதத்தையும் தமிழர்களையும் அடியோடு அழித்துவிட வேண்டும் என்பதே ஜெயவர்த்தனாவின் கொள்கை என்பதை இந்தியா இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்று கூறி வருந்தினார்.

"திருகோணமலை மீது அமெரிக்கா ஒரு கண்வைத்துள்ளது. அதன் காரணமாக ஜெயவர்த்தனாவுக்குத் தேவையான சகல உதவிகளையும் அமெரிக்கா செய்துவருகிறது. இலங்கை-அமெரிக்க உறவு இந்தியாவுக்கு ஆபத்தை நிச்சயம் விளைவிக்கும்" என்பதை அவர் சுட்டிக்காட்டியபோது நான் வியப்படைந்தேன். ஞான மார்க்கத்தில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் அவரைப் போன்றவர்கள்கூட அரசியலின் உள் நடப்புகளை எவ்வளவு தெளிவாகத் தெரிந்துவைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தபோது வியந்துபோனேன்.

விடுதலைப் போராட்டத்திற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் வீர இளைஞர்களுக்காகவும் அவர்கள் போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவும் நாள்தோறும் ஒரு மணி நேரம் தியானம் புரிவதாக அவர் சொன்னார். கிட்டத்தட்ட 90 வயதை எட்டிக்கொண்டிருக்கும் அவரது குரலில் நடுக்கமோ, கலக்கமோ இல்லை. திட்டவட்டமாகத் தெளிவாக அவர் **தமது** கருத்துக்களைக் கூறினார். தனி ஈழம் அமைவதைத் தவிர எந்தத்தீர்வும் சரியாக வராது என்பதை உறுதியாகத் தெரிவித்தார்.

தமிழிலும் சிறந்த புலமை மிக்கவராக அவர் விளங்கினார். சோழர் காலத்தில் இருந்து இன்றுவரை ஈழ நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள உறவுகளையெல்லாம் நினைவுபடுத்தினார்.

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் சீடரும் வாரிசுமாகத் திகழ்கிற **தீரு. கணேச சுவாமிகள்** என்பவரையும் அங்குச்சந்தித்தேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்த இருவரும் பேராதரவு தெரிவித்தனர்.

இம்மடத்தில் தவக்கோலம் பூண்ட ***சிவ மூதாட்டி பார்வதி அம்மையார்*** என்பவரைப் பார்த்தேன். "நான் பத்திரமாக இந்தியா திரும்ப வேண்டும் என்பதில் அவர் மிகுந்த கவலை கொண்டார். திரும்பத்திரும்ப அதையே கூறிப்புலம்பினார். அவரது தாயன்பைக் கண்டு நெகிழ்ந்து போனேன்.



யாழ்ப்பாணம் **நல்லை 'திருஞானசம்பந்தர் ஆதீன மடாலயத்திற்குச்** சென்றிருந்தேன். இலங்கையிலுள்ள ஒரே சைவ ஆதீனம் இது. **திருப்பெருந்திரு. சோமசுந்தர தேசிக பரமாச்சாரியார்** என்ற துறவி இங்கு ஆதீன கர்த்தராக இருக்கிறார். இந்த ஆதீனகர்த்தர் இளைஞர். அண்மையில் பட்டம் ஏறியவர். இவருக்கு முன் ஆதீன கர்த்தராக இருந்தவர் மதுரையிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தரிடம் தீட்சை பெற்றவர். இந்த மடத்தின் முதலாவது ஆதீன கர்த்தர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். அவருக்குப்பின் பட்டம் ஏறிய இவர் பிராமணர் அல்லாதவர். இந்த விவரம் எனக்கு வியப்பை அளித்தது.

தமிழகத்தில் எந்த மடமாக இருந்தாலும் அந்த மடங்களின் ஆதீன கர்த்தர்களாக வருபவர்கள் குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். ஒவ்வொரு மடத்திலும் இந்த முறையே பின்பற்றப்படுகிறது. ஆனால் தமிழீழத்தில் சாதி வேறுபாடுகள் அற்றதாக ஒரு சைவமடம் திகழ்வதைப் பார்த்து நான் மிக்க மகிழ்ச்சி கொண்டேன். ஆதீனகர்த்தரிடம் என் மகிழ்ச்சியை வெளிப்படையாகவே தெரிவித்தேன்.

இந்த மடத்திற்கு அதிகமான சொத்துக்கள் இல்லை. ஆனாலும் மக்கள் மத்தியில் நல்ல மரியாதை இருக்கிறது. ஆதீனகர்த்தரிடம் **பேசிக்கொண்டிருந்த**போது "இந்தக்குழப்பமான சூழ்நிலையில் உங்களால் நிம்மதியாக இருக்க முடிகிறதா? என்று நான் கேட்டேன்.

"உண்மைதான், நாட்டில் நிலவும் அமைதியின்மை எமது மனதின் அமைதியையும் கெடுத்துவிட்டது. நாங்கள் எப்போதும் அரசியலில் தலையிடுவது இல்லை. அதிலிருந்து ஒதுங்கியே இருக்கிறோம். ஆனால் எமது ஆலயங்கள் இடிக்கப்படுவதும் எமது விக்ரகங்கள் கொள்ளையடிக்கப்படுவதும் எங்களுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்திருக்கின்றன. எமது மடாலயமும் இதிலிருந்து தப்பவில்லை. 1983-ம் ஆண்டில் இராணுவம் இந்த மடத்துக்கு நெருப்பு வைத்தது. எப்படியோ சொற்பச் சேதத்துடன் மடாலயம் தப்பியது" என்று அவர் வருத்தத்துடன் சொன்னார்.

ஆதீனகர்த்தர் அவர்களிடம் நான் அரசியல் நிலை குறித்து எதுவும் பேசவில்லை. இந்தியாவிலுள்ள மடாதிபதிகளுக்கு அவர் ஒரு வேண்டுகோள்விடுத்தார். தமிழீழத்தில் இடிக்கப்பட்டுள்ள கோவில்களைப் புனர்நிர்மாணம் செய்ய தமிழக மடாதிபதிகள் உதவ வேண்டுமென அவர் வேண்டிக்கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கண்ணகி வழிபாடு

**தமிழீழத்தில்** நான் சுற்றுப்பயணம் செய்தபோது அரசியல் பணிகளுக்கு இடையே வரலாற்றாராய்ச்சிப் பணியினையும் செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய **"கண்ணகி வழிபாடு"** இலங்கைக்கும் பிற நாடுகளுக்கும் பரவிற்று. இப்போது தமிழகத்தில் அவ்வழிபாடு முற்றிலுமாக உருமாறி வெவ்வேறு வழிபாடுகளாகக் காட்சி தருகின்றது. ஆனால் ஈழ நாட்டில் அந்த வழிபாடு இன்னமும் உள்ளது. கண்ணகி வழிபாடு குறித்து ஆராய்ச்சி ரீதியான பல்வேறு செய்திகளை நான் தொகுத்துக்கொண்டிருக்கிறேன். எனவே கண்ணகி கோவில்களுக்குச் சென்று அந்த வழிபாட்டு முறைகளையும் ஓரளவுக்குத் தெரிந்து கொண்டேன்.

**மந்திகை கண்ணகியம்மன் கோவில், பருத்தித்துறை மாதனை கண்ணகியம்மன் கோவில், வற்றாப்பழை கண்ணகையம்மன் கோவில், ஊடுதுறை கண்ணகியம்மன் கோவில், வடமாராட்சி அதுலம்மன் கோவில், ஊரேழு கண்ணகியம்மன் கோவில், நாவாழி களையோடை கண்ணகியம்மன் கோவில், சுட்டிபுரம் கண்ணகியம்மன் கோவில்** போன்ற பல கண்ணகி கோவில்களுக்குச் சென்று அங்குள்ள பூசாரிகளையும் ஊர் மக்களையும் விசாரித்துப்பல புதிய செய்திகளைச் சேகரித்தேன். இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய கண்ணகி வழிபாடு எத்தகைய சிதைவோ, மாற்றமோ இல்லாமல் இன்னமும் அப்படியே நீடிப்பதை இந்தக் கோவில்களில் நான் கண்டேன்.

**"கண்ணகி காதை"** என்று சுவடி வடிவிலுள்ள ஒரு நூல் பெரும்பாலான கோவில்களில் உள்ளது. திருவிழாவின்போது அதை படிக்கிறார்கள். மக்கள் பக்தி சிரத்தையோடு கேட்கிறார்கள். தமிழ்ப் பெண்கள் திருவிழாக் காலங்களில் விரதமிருந்து பொங்கலிட்டுக்கண்ணகியை வழிபடுகிறார்கள்.

கண்ணகி, கண்ணகை, கண்ணகியம்மன், கண்ணகைத்தை போன்ற பெயர்கள் இன்னமும் அங்கு வழக்கில் உள்ளன. வீடுகளிலும் கண்ணகி படம் வைத்து வழிபடுகிறார்கள். இந்தக் கோவில்களில் வழிபாட்டிற்கு வந்திருந்த பெண்களை அழைத்துப் பேசியபோது தங்களுக்கு இழைக்கப்படுகிற அவமானங்களைப் பற்றியெல்லாம் உள்ள முருக எடுத்துச் சொன்னார்கள். கண்ணகி வழிவந்த தமிழ்ப் பெண்கள், பத்தினித் தெய்வமான கண்ணகியை வழிபடும் தமிழ்ப் பெண்கள் தங்களது சொந்த மண்ணிலேயே தங்கள் கற்பைக் காக்கப் போராடும் நிலைக்கு ஆளாக்கப்பட்டதைக் கண்டு மனம் நொந்தேன்.



## ஏமாற்றுவேலை

நான் சந்தித்த பல சைவப் பெரியவர்கள் இந்துக் கோவில்கள் பற்றி மிகுந்த கவலை தெரிவித்தார்கள். இந்துக் கோவில்களை நாசம் செய்தும் விக்ரகங்களையும் விலை உயர்ந்த பொருட்களை கொள்ளையடித்தும் கோவில் குருக்களைக் கொலை செய்தும் வருகிறார் ஜெயவர்த்தனா. இந்தியாவின் வட மாநிலங்களில் உள்ள இந்துக்களை ஏமாற்றுவதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவர் நடத்திய கபட நாடகம் ஒன்றையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இலங்கை அரசின் இந்து சமயத்துறை அமைச்சர் **'இராசதுரை'** அவர்களின் முயற்சியால் உலக இந்து சமய மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெற்றது. உலகத்திலே இந்தியாவிற்கு வெளியே இந்து சமய மாநாடு ஒன்று நடத்தப்பட்டது இதுதான் முதல் தடவை என்றும் அதை சிங்கள பௌத்த அரசுதான் செய்தது என்றும் ஜெயவர்த்தனா பெருமையடித்துக்கொண்டார். இம்மாநாட்டில் இந்தியாவைச் சேர்ந்த பல இந்துசமயத் தலைவர்களும் மடாதிபதிகளும் கலந்துகொண்டார்கள். ஆனால் இந்த மாநாட்டில் இலங்கையிலுள்ள இந்துசமயத் துறவிகளோ, குருமார்களோ மக்களோ கலந்துகொள்ளவேயில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. இதை என்னிடம் கூறிய அந்தத் துறவி வேதனையோடு பின்வருமாறு கூறினார். "இந்த மாநாட்டை நடத்திய ஜெயவர்த்தனாவின் உள்நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல் இந்தியாவிலிருந்து மடாதிபதிகளும், சமயத்தலைவர்களும் இந்த மாநாட்டிற்கு வந்தது எங்கள் உள்ளங்களில் எல்லாம் பெரும் வேதனையை ஏற்படுத்திற்று. இந்துசமயத்தை அடையாளம் இல்லாமல் அழிக்கவேண்டுமென்று வெறிகொண்டு செயல்படுபவர் ஜெயவர்த்தனா. உலகத்தின் கண்களுக்கு முன்னால் தன்னைச்சர்வமத சமரச வாதியாகக் காட்டிக்கொள்ள இந்த மாநாட்டை நடத்தினார்.

அதைப்போலவே கிறிஸ்தவத்தேவாலயத்தை இடித்தும் தகர்த்தும் கிறிஸ்தவப்பாதிரிகளைக் கொலை செய்தும் வெறியாட்டம் ஆடிவரும் ஜெயவர்த்தனா ஐரோப்பியக்கிறிஸ்தவ நாடுகளிடம் அதை மறைத்து வேஷம்போட்டு ஆயுத உதவியும், நிதியுதவியும் பெறுகிறார். ஜெயவர்த்தனாவின் உண்மை சொரூபத்தை இந்தியாவும் புரிந்து கொள்ளவில்லை, ஐரோப்பிய நாடுகளும் புரிந்து கொள்ளவில்லை" என்று அவர் மனம் நொந்து சொன்னார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அழியும் ஆராய்ச்சி நிலையங்கள்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயந்தி நகர் என்னும் இடத்தில் "காந்தி நிலையம்" என்ற பெயரில் ஆசிரமம் ஒன்றுள்ளது. 20 ஆண்டுக்காலமாக இந்த ஆசிரமம் நடந்து வருகிறது. அநாதைப் பிள்ளைகளை ஆசிரமத்தில் சேர்த்து அவர்களுக்குக் கல்வி கற்பிக்கப் படுகிறது. இந்தப் பணியோடு மற்றொரு சீரிய பணியும் இப்போது இந்த ஆசிரமத்திற்குச் சேர்ந்திருக்கிறது. செட்டிகுளம், வவுனியா, திரிகோணமலை போன்ற பகுதிகளிலிருந்து அகதிகளாக வந்திருக்கிற 96 குடும்பங்களைக் காப்பாற்றும் பொறுப்பினையும் ஆசிரமம் ஏற்றுக் கொண்டிருக்கிறது,

அதைப் போலச்-செல்வா நகர், பாரதிபுரம், மலையாளபுரம் போன்ற இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களுக்கும் சென்று அங்குள்ள அகதிகளையும் சந்தித்துப் பேசினேன். சுமார் 55 வயதான திரு. அருணாசலம் என்னும் ஒரு அகதியைச் சந்தித்தேன். அனுராதபுரத்தில் விவசாயக் கூலியாக இவர் வேலை பார்த்தார். 1985-ம் ஆண்டு மே மாதத்தில் சிங்கள வெறியர்கள் திடீரென இவர்களின் குடியிருப்பைத் தாக்கினர். இவரும் மற்றும் 30 குடும்பங்களும் உயிர் தப்பிக்காட்டுப் பகுதியில் ஓடி ஒளிந்தார்கள். பலநாட்கள் காட்டுக்குள் பல கஷ்டங் களுக்கிடையே வாழ்ந்தார்கள். புலிப்படையினர் அங்கு வந்து இவர் களைக் காப்பாற்றி இங்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். இவர்களுக்கு வேண்டிய எந்த உதவியும் அரசாங்கம் செய்வதில்லை. இவர்கள் குடிசைகள் போட்டுக் கொள்ளவும் மற்றும் தேவையான உதவிகளை அனைத்தும் புலிகள்தாம் செய்கிறார்கள் என்று அவர் சொன்னார், செப்டம்பர் 23-ம் தேதியன்று இந்த அகதிகள் முகாம் மீது ஹெலிக்காப்டர் தாக்குதலை சிங்களர் நடத்தினார்கள் என்றும் அவர் கூறினார்.

திருமதி. சரோஜா என்ற ஒரு பெண்மணியை இந்த அகதிகள் முகாமில் சந்தித்தேன். அவர் ஒரு திடுக்கிடும் தகவலைக் கூறினார். சிங்கள ஊர்க்காவல் படையினர் ஒரு தமிழனைக்கொன்றால் 1000/– ரூபாய் பரிசும், 10 தோட்டாக்களும் பெறுவதாக அவர் கூறினார்.

இந்த முகாம்களிலுள்ள இந்திய வம்சாவழித் தமிழர்கள் பல பேரைச் சந்தித்தேன். இவர்களில் எவருக்கும் இலங்கைக் குடியுரிமை கிடையாது. எனவே இவர்களுக்கு அரசு உதவி எதுவும் அளிக்கப்பட வில்லை. அமைச்சர் திரு. தொண்டமானோ, அவரது தொழிற்சங்கமோ



இவர்களுக்கு எந்த உதவியும் அளிக்க முன்வரவில்லை. விடுதலைப் புலிகள்தாம் இவர்களுக்கும் உதவி செய்வதாக தெரிவித்தார்.

திருமதி. மாரியம்மாள் என்ற ஒரு பெண்ணை நான் சந்தித்த போது அவர் சொன்னார். "எங்கள் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக்கூட நாங்கள் போட்டுக்கொள்ள முடிவதில்லை. எங்கள் கழுத்தில் தாலி இருக்குமானால் எங்களைத் தமிழ்ப் பெண்கள் என்று புரிந்துகொண்டு பல கொடுமைகளுக்கு ஆளாக்குகிறார்கள். பட்டினி கிடந்து சாவதை விடப் போராடிச் சாவதே மேல் என்று நாங்கள் நினைக்கிறோம். எங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து நாங்களும் போராடத் தயாரா யிருக் கிறோம். தமிழீழம் தவிர வேறு எதுவும் எங்களுக்குத் தேவையில்லை" என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த "பரந்தன்" என்ற ஊரில் விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று உண்டு. தமிழர் பகுதி யிலேயே இத்தகைய நிலையம் இது ஒன்றுதான். விதை நெல் உற்பத்தி மற்றும் விதை நெல் தரமானதா என்று பரிசோதனை தருவது போன்ற வற்றை இந்த நிலையம் செய்துவந்தது. சிங்கள அரசு இந்த ஆராய்ச்சி நிலையத்தை முற்றிலும் செயலிழக்க வைத்துள்ளது. விதை நெல் உற்பத்தி செய்வதோ வேறு நெல் ஆராய்ச்சிகளோ இங்கு இப்போது நடைபெறுவதில்லை. இந்த நிலையத்திலுள்ள ஆராய்ச்சி யாளர்களும் மற்றும் அலுவலர்களும் வேலைஇல்லாமல் இருக்கிறார்கள்.

இதைப் போலவே அலம்பில் என்ற கிராமத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் நான் பார்த்தேன். இதையும் சிங்கள அரசு முடக்கிவைத்திருக்கிறது. சுமார் 65,000-க்கு மேற்பட்ட தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வெளியேயனுப்பப்படாமல் இருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுக்காலத்திற்கு மேலாக இந்தக் கன்றுகள் வைக்கப்பட்டிருப்பதால் அவைகளில் பல பூமியில் முளை விட்டும் மற்றும் பல அழுகியும் அழிந்துக்கொண்டிருக்கின்றன. ஆனாலும் சிங்கள அரசு அதைப் பற்றிக்கொஞ்சமும் கவலைகொள்ள வில்லை.

தமிழர் பகுதியில் எத்தகைய வளர்ச்சித் திட்டத்தினையும் நிறை வேற்றக் கூடாது என்ற நோக்குடன் சிங்கள அரசு செயல்பட்டுவருவ தற்கு இந்த இரண்டு ஆராய்ச்சி நிலையங்களும் சரியான சான்றாக விளங்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 18. கிராம அதிகாரிகள் பேட்டி.

"கிராம சேவா" என்று அழைக்கப்படும் கிராம அதிகாரிகள் சிலரைப்பார்த்தேன். அரசாங்க நிர்வாக இயந்திரமே சீர்குலைந்து விட்ட நிலையில் அவர்களுக்கு இப்போது வேலை எதுவுமில்லை. இராணுவ அதிகாரிகள் கட்டுப்பாட்டின் கீழ் அவர்கள் இப்போது இயங்குகிறார்கள். புலிப்படையினரின் நடமாட்டம் பற்றி 10 நாட்களுக்கு ஒருமுறை இரகசியத் தகவல் கொடுக்க வேண்டுமென்று கிராம அதிகாரிகளுக்கு இராணுவத்தினர் உத்தர விட்டிருக்கின்றனர். அப்படி எந்தத்தகவலையும் எந்தக்கிராம அதிகாரியும் கொடுக்காமல் போனதால் அந்த மாவட்டத்திலுள்ள சகலரையும் வரச்சொல்லி ஒரு கூட்டத்தினையும் நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் இராணுவத் தளபதி பின்வரும் எச்சரிக்கை விடுத்திருக்கிறான். "புலிப்படையினரின் நடமாட்டம் பற்றி எந்தத் தகவலையும் நீங்கள் கொடுக்க மறுக்கிறீர்கள். உங்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிந்தால். மற்றவர்களைச் சுட்டுக் கொல்வதைப் போல உங்களைக் கொல்ல மாட்டோம், விளக்குக் கம்பத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு அதற்குப் பின்னால் சுட்டுக் கொல்வோம்" என மிரட்டியிருக்கிறார்கள். இதைக் கண்டு பயந்து போன சிலர் வேலையை விட்டு விலகிக் கொள்வதாக "ராஜிநாமா" கடிதம் கொடுத்தார்கள். அவர்கள் பாடு ஆபத்தாகி விட்டது. "ஓ! வேலையை விட்டு விட்டுப் புலிப்படையில் சேரப்போகிறாயா" என அந்த இராணுவத் தளபதி உறுமினானாம்.

எல்லா மாவட்டங்களிலும் உள்ள தமிழ் அதிகாரிகள் அனைவருமே இந்த உணர்வோடுதான் உள்ளார்கள். அரசாங்கத்துடன்



ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்றும் அந்தக்கிராம அதிகாரிகள் என்னிடம் சொன்னார்கள். புலிப்படையினரால் கிராமம் தோறும் அமைக்கப்பட்டு இருக்கும் **'இணைக்க சபை' 'விழிப்பு சபை' 'சுகாதார சபை'** போன்ற பொதுமக்கள் அமைப்புகளுடன் ஒத்துழைத்து அதிகாரிகள் பணிபுரிவதை நானே நேரில் பார்த்தேன். "இப்படிச் செய்வது இராணுவ அதிகாரிகளுக்குத் தெரிந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்தாயிற்றே" என்று நான் கேட்டபோது அவர்கள் பளிச்சென்று பதில் சொன்னார்கள். "எல்லாவற்றிலும் எங்கள் உயிருக்கு ஆபத்துதானே! சிங்கள அரசுக்கு விசுவாசமாகப் பணியாற்றினாலும் எங்களை அவர்கள் விட்டு வைக்கப் போவதில்லை. எங்களுக்காகப் போராடும் புலிகளுக்கு எங்களால் ஆன ஒத்துழைப்பைத் தந்து அதன் காரணமாக நாங்கள் கொல்லப்படுவோமேயானால் அது எங்களுக்கு மகிழ்ச்சியான மரணம் தான்" என்று அவர்கள் சொன்னார்கள்.

இன்னொரு உண்மையினையும் அவர்கள் எனக்கு தெரிவித்தனர். தமிழர்களைப் போரில் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை சிங்கள இராணுவ அதிகாரிகளுக்கு அறவேயில்லை. எந்த இடத்திலும் புலிப்படையுடன் அவர்கள் மோதுவதில்லை. புலிப்படையைக்கண்டாலே அஞ்சி நடுங்குகிறார்கள். சிங்கள இராணுவத்தில் சேரச் சிங்கள இளைஞர்கள் விரும்பவில்லை. எனவே கட்டாய இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழர் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிற சிங்கள இராணுவத்தில் பலர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போகிறார்கள். புலிப்படையினரின் பிரச்சாரம் இதற்கு ஒரு முக்கிய காரணம்.

"சிங்கள இளைஞர்களே வீணாக உங்கள் உயிர்களைப் பலிகொடுக்க வேண்டாம். உங்களைப் பலிகடாக்களாக்கி விட்டு ஜெயவர்த்தனா போன்ற வெறியர்கள் பத்திரமான உல்லாசமான வாழ்வு நடத்துகிறார்கள்" எனச்சிங்கள இராணுவ வெறியர்களுக்கு சிங்கள மொழியில் வேண்டுகோள் விடுத்துப் புலிப்படைத் தளபதி பிரபாகரன் கையெழுத்திட்ட துண்டு அறிக்கைகள் சிங்கள இராணுவ முகாம்களுக்குள் இரகசியமாக வீசியெறியப் படுகின்றன. அதைக் கண்டு சிங்கள இளைஞர்கள் 'கிலி' அடைகிறார்கள். கொள்ளை, கற்பழிப்புப்போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட ஆசை கொண்ட வெறியர்கள் சிங்கள இராணுவத்தில் இருக்கிறார்கள். அவர்கள் புலிகளுடன் மோதாமல் அப்பாவிப்பொதுமக்களைத்திடீரென தாக்கிக் கொடுமை செய்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிராம அதிகாரிகளிடம் **''இஸ்ரேலிய மோசாட்''** படை பற்றி ஏதாவது தெரியுமா? '' என விசாரித்தேன்.

''சிங்கள இராணுவத்திற்கு **'மோசாட்'** படையினர் பயிற்சி அளிப்பது உண்மைதான்'' என அவர்கள் தெரிவித்தனர்

''அதற்கு என்ன ஆதாரம்''? என்று நான் கேட்டேன்.

''சிங்கள இராணுவத்தளபதியின் உத்தரவின் பேரில் அவரைச் சந்திக்கச் செல்லும்போது இராணுவ முகாம்களில் அன்னியர்கள் சிலர் நடமாடுவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். அவர்கள் ''இஸ்ரேலிய மோசாட்'' படையினர்தாம்'' என்று அவர்கள் உறுதியாகச் சொன்னார்கள்.

தமிழ் அதிகாரிகள் யாரும் போராளிகளின் நடவடிக்கைகளைப் பற்றி இராணுவத்திற்குத் தெரியப்படுத்துவதில்லை. போராளிகளுக்கு மறைமுகமாக என்னென்ன உதவி செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்கிறார்கள்.

சிங்கள அரசு தனது பாதுகாப்பு நிதிக்காகத்தமிழ் அரசு ஊழியர்களிடம் கட்டாய வசூல் செய்கிறது. மாதந்தோறும் அவர்கள் ஊதியத்தில் ஒரு பகுதியைப் பாதுகாப்பு நிதியாகப் பிடித்துக் கொள்கிறது. அதாவது ''தமிழர்களைக் கொல்லத்தமிழர்களிடம் இருந்தே நிதியை வசூல் செய்கிறது சிங்கள அரசு'' என்று அந்த அதிகாரிகள் வேதனையோடு சுட்டிக்காட்டினார்கள்.

**துணுக்காய்** கிராமத்தில் நாங்கள் தங்கியிருந்தபோது கடல் விமானம் ஒன்று கிராமத்தைச் சுற்றி வட்டமிட்டுச் சென்றது. நான் அந்தக் கிராமத்திலிருந்த அரசு அதிகாரிகள் சிலரைச்சந்தித்தேன். 1983-ம் ஆண்டுக்குப் பிறகு அரசு அலுவலகங்கள் எதுவும் சரிவர இயங்கவில்லை என்று சொன்னார்கள். வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களையும் கூறினார்கள். வவுனியா மாவட்ட வளர்ச்சி திட்டங்களுக்காக அரசாங்கம் ரூபாய் 40 கோடி ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருந்தது. ஆனால் ஒரு கோடி ரூபாய்கூட இதற்காகச்செலவிடப்படவில்லை. தமிழர்கள் பகுதிக்கு ஒதுக்கப்படும் பணம் முழுவதும் இராணுவச் செலவுக்காக அளிக்கப்பட்டுவிடுகிறது என்பதையும் அவர்கள் கூறினார்கள்.

சாலை செப்பனிடும் வேலை அறவே நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கான தார்போன்றவை கிடைப்பதில்லை. சாலை சீர்திருத்தும் வேலை செய்தால் அவ்வாறு செய்யும் தொழிலாளிகளை இராணுவம்



சுட்டுவிடுகிறது. எனவே யாரும் வேலைக்கு வருவதில்லை. சாலை செப்பனிடுவதற்காக அலுவலகத்தில் வைத்திருக்கக்கூடிய தார் சிமெண்ட் போன்ற பொருட்களையெல்லாம் இராணுவ முகாம்கள் அமைப்பதற்காக இராணுவம் எடுத்துக்கொண்டு போய்விடுகிறது என்று இவர்கள் என்னிடம் கூறினார்கள்.

துணுக்காய் கிராமத்தில் உற்பத்தியாகும் பொருட்களை விற்கும் பொது ஜனச்சந்தையைப் பார்த்தேன். காய்கறிகளும் மீன் போன்றவைகளும் இங்கு விற்கப்படுகின்றன. இவற்றை வாங்குவதற்கென வந்திருந்த பெண்மணிகளுடன் பேசினேன். வியாபாரிகளிடமும் பேசினேன். வெளியூர்களுக்குக்கொண்டுபோய் இந்தப் பொருட்களை விற்கமுடியவில்லை. ஊருக்குள்ளேயே வந்த விலைக்கு அவசர அவசரமாக விற்றுவிட்டு ஓட வேண்டியிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். துணுக்காய் கிராம சபைக்கும் சென்றிருந்தேன் அங்குக்கூடிய கிராம அதிகாரிகளிடமும் பேசினேன்.

**தாராபுரம்** என்ற ஊரில் அரசினர் மருத்துவமனைஒன்றைப் பார்த்தேன். ஆனையூர் இராணுவ முகாமிலிருந்து ஆறுமைல் தொலைவில் இந்த ஊர் அமைந்திருக்கிறது. மருத்துவமனையில் 18 படுக்கைகள் உள்ளன. ஆனால் அத்தனை படுக்கைகளும் காலியாக இருந்தன. நான் சென்று பார்த்தபோது ஒரு நோயாளிகூட அங்கு இல்லை. இந்த மருத்துவமனைக்கு ஒரு டாக்டர், ஒரு நர்சு, மூன்று உதவியாளர்கள் உண்டு என்று சொன்னார்கள். அவர்களில் யாரும் அங்கில்லை. பெயரளவில் ஒரு உதவியாளர் மட்டுமே அங்கிருந்தார். அவரிடம் பேசியபோது சில உண்மைகளை வெளியிட்டார்.

அடிக்கடி இராணுவத்தினர் இங்கு வந்து தொல்லை கொடுப்பதால் நோயாளிகள் யாரும் மருத்துவமனைக்கு வருவதில்லை. அவர்களுக்குக் கொடுக்க எந்த மருந்தும் இல்லை. டாக்டரும் நர்சுகளும்கூட இராணுவத்தினால் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களும் வருவதற்கு அஞ்சுகிறார்கள். ஆனையூர் அருகே இராணுவ முகாம் இருப்பதால் இந்த மருத்துவமனைக்கு அபாயம் எப்போதும் உண்டு. மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டரை நான் பார்க்கவேண்டுமென்று விருப்பம் தெரிவித்தபோது அந்த உதவியாளர் போய் அவரை அழைத்துவந்தார். அந்த டாக்டர் வரும்போதே பதட்டத்துடன் வந்தார். நான் கேட்ட கேள்விகளுக்கு அரைகுறையான பதில்களைச் சொல்லிவிட்டு எங்களை அங்கிருந்து விரைவாக அனுப்புவதில் அவசரம் காட்டினார். அவரது பதட்டத்தைப் புரிந்துகொண்ட நாங்களும் அங்கிருந்து புறப்பட்டோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 19. கல்வியின் கதி.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரு நாட்கள் சுற்றுப் பயணம் செய்தேன். பல்வேறு கிராமங்களுக்கும் சென்றேன். கிளிநொச்சியிலுள்ள **இந்துமகா வித்தியாலயத்திற்குச்** சென்றிருந்தேன். இந்த மாவட்டத்திலேயே மிகப் பெரிய பள்ளிக்கூடம் இது. சுமார் 2500 மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். சுமார் 40 ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள். நான் சென்றிருந்த வேளையில் சுமார் 600 மாணவர்களுக்குள்ளாகவே வந்திருந்தார்கள். ஆசிரியர்களில் சுமார் 20 பேர்கள் மட்டுமே வந்திருந்தார்கள்.

சிங்களப் பகுதிகளில் 600 மாணவர்களிருந்தால் அது ஒரு மகா வித்தியாலயம் எனக்கருதப்பட்டு அதற்குத் தேவையான கட்டடங்கள் மரச்சாமான்கள், மற்றும் அலுவலகச் சிப்பந்திகள் உட்பட சகலமும் அளிக்கப்படும். ஆனால் தமிழ்ப்பகுதியிலுள்ள பள்ளிகளுக்கு இந்த வசதிகள் கிடையாது. கிளிநொச்சிப்பள்ளியிலுள்ள பல கட்டடங்கள் பெற்றோர்களால் கட்டிக் கொடுக்கப் பட்டவை, இந்தக் கட்டடங்களைக்கட்ட அரசு உதவவில்லை. பள்ளியிலுள்ள மரச்சாமான்களும், கரும்பலகை **போன்றவைகளும்** கூடப் பொதுமக்கள் அளித்தவையே தவிர அரசாங்கத்தால் அளிக்கப்பட்டவை அல்ல. 60 ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இந்தப் பள்ளிக்கு இப்போது 40 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். 20 ஆசிரியர்கள் வேலை காலியாக உள்ளது, இருக்கும் 40 ஆசிரியர்களிலும் பாதிப்பேர் வரவில்லை. "பெசிலிட்டி டீச்சர்" என்ற பெயரில் பட்டதாரி மாணவ மாணவிகளை மட்டும்



100 ரூபாய் சம்பளத்தில் ஆசிரியர்களாக அரசு நியமித்துள்ளது. தமிழர் பகுதியிலுள்ள பள்ளிக் கூடங்களில் பல ஆசிரியர்கள் இத்தகையவர்கள் தாம். இப்பள்ளிக்குள் நான் சென்று பார்த்தபோது 43 வகுப்பறைகளிலும் ஒன்றில்கூடக்கரும்பலகையில்லை. விஞ்ஞானக் கூடங்களில் அலமாரிகளில் காலியான பாட்டில்கள் மட்டுமே இருந்தன. பள்ளியில் மாணவர்கள் கைத்தொழில் பயிற்சி பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நெசவு நிலையம், தச்சுப்பட்டறை போன்றவற்றில் எந்தத் தொழில் கருவியும் இல்லை.

போதுமான மாணவர்கள் இல்லாத காரணத்தாலும் ஆசிரியர்கள் பற்றாக்குறைவின் விளைவாகவும் பல வகுப்புகள் இணைத்து நடத்தப் படுவதைப்பார்த்தேன். இப்பள்ளியில் அகதிகளாக வந்து படிக்கும் சில குழந்தைகளையும் பார்த்தேன். மழலை மொழியில் அந்தக்குழந்தைகள் சொன்ன சோகக்கதைகள் என் நெஞ்சைப் பிழிந்தன.

கிளிநொச்சியில் பல ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் ஒரு வீட்டில் சந்தித்தேன். தமிழீழ மாணவர்களின் கல்வி எவ்வளவு **சீரழிந்துபோய் இருக்கிறது** என்பதை அவர்கள் எனக்கு விளக்கினார்கள். 1983-ம் ஆண்டிலிருந்தே இந்தச் சீரழிவு தொடங்கிவிட்டதாகவும் அவர்கள் கூறினார்கள். சுமார் இரண்டு மணி நேரம் அந்த ஆசிரிய பெருமக்களுடன் விவாதித்தபோது பல அதிர்ச்சி தரும் உண்மைகளை நான் அறிந்துகொண்டேன்.

ஈழநாட்டு மக்கள் கல்வியை அரிய செல்வமாகக் கருதுகிறார்கள். அவர்களின் முன்னேற்றத்திற்கு அதுவே அடிப்படைக் காரணம். அவர்கள் மீது சிங்களவர்கள் பொறாமையும் ஆத்திரமும் கொள்வதற்கும் அதுதான் காரணம். ஈழநாட்டுத் தமிழர்கள் ஆண்களானாலும் பெண்களானாலும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள். கலைமகளின் உண்மையான குழந்தைகள். கல்வியில் உயர்ந்தவர்களாக அவர்கள் விளங்கியதால்தான் உலகம் பூராவும் பரவிச்சென்று அவர்களால் வாழ முடிகிறது ஈழத்தமிழர்களின் முன்னேற்றத்திற்கு கல்விதான் அடிப்படை என்பதை உணர்ந்த சிங்களவர்கள், ஈழநாட்டிலுள்ள கல்வி நிலையங்களைத் திட்டமிட்டுச் சீர்குலைத்துவருகின்றனர்.

தரப்படுத்துதல் என்ற பெயரில் நன்கு தேர்ச்சிபெற்ற தமிழ் மாணவர்ளைப் புறக்கணித்தார்கள். அதையும் மீறி அவர்கள் மேலும் மேலும் வளர்ச்சிபெறுவதைப் பார்த்த பிறகு ஈழநாட்டிலுள்ள கல்வி நிலையங்களையே அடியோடு ஒழித்துவிடச்சிங்களவர் கங்கணம்கட்டிக்கொண்டு வேலை செய்துவருகின்றனர். மாணவர்களிலிருந்துதான் விடுதலைப் புலிகள் உருவாகினார்கள் எனச்சிங்கள அரசு நினைக்கிறது. கல்லூரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையும் பள்ளிக்கூடங்களையும் புலிகள் வாழும் குகைகளாக அது கருதுகிறது. எனவே திடீர் திடீரெனக்கல்விச்சாலைகள் மீது தாக்குதல் நடத்துகிறது.

மன்னார் மாவட்டத்திலுள்ள ''வட்ட கண்டல்'' என்னும் இடத்தில் பள்ளிக்கூடத்திற்குள் புகுந்து இராணுவம் சுட்டபோது ஆசிரியர் ஒருவர் இறந்துபோனார். இதைப் போலப்பல ஆசிரியர்களும், மாணவர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பெண்கள் கல்லூரியின் முதல்வர் ஒருவர் இன்னும் பயங்கரமான விஷயங்களைக் கூறினார். சிங்கள இராணுவ மிருகங்கள் பெண்கள் கல்லூரிகளுக்குள்ளும் புகுந்து ஆசிரியைகளையும், வயதுவந்த மாணவிகளையும் கற்பழித்த நிகழ்ச்சிகளைக் கண் கலங்கக் கூறினார்.

இன்னொரு ஆசிரியர் மற்றொரு கொடுமையை விவரித்தார். இராணுவ முகாம்களில் மணல் மூடைகளை அடுக்கவும் குழிவெட்டவும் ஆசிரியர்களை இராணுவம் கட்டாயப் படுத்தி வேலை வாங்குவதாகக் கூறினார்.

எந்தப் பள்ளியிலும், அல்லது கல்லூரியிலும் விஞ்ஞான சோதனைக் கூடங்களில் எந்தப்பொருளும் இல்லை. அப்படி வைத்திருப்பது சட்டப்படி குற்றம் என அரசாங்கம் அறிவித்து விட்டது. எனவே கல்லூரி முதல்வர்கள் அந்தப் பொருட்களை யெல்லாம் இராணுவ முகாம்களில் கொண்டுபோய் ஒப்படைத்து விட்டனர். முதல்வர்கள் அலுவலகத்தில் இருக்கக் கூடிய டி.வி., தட்டெழுத்து இயந்திரம் போன்ற பொருட்களைக்கூட இராணுவத்தினர் அபகரித்துக் கொண்டு போய் விட்டார்கள். பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள் கொடுப்பது முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விட்டது.

கிராமப்புறங்களில் பெரும்பாலான கல்வி நிலையங்கள் மூடப்பட்டு விட்டன. நகரப் புறங்களில் இருக்கக் கூடிய கல்வி நிலையங்கள் அரைகுறையாக இயங்குகின்றன. அவற்றில் சில நிலையங்கள் அகதிகள் முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. கிளிநொச்சி பாடசாலையில் 2500-க்கும் மேற்பட்ட பிள்ளைகள் படித்தார்கள். நான் சென்று பார்த்தபோது எல்லா வகுப்புகளையும் சேர்த்து மொத்தம் 600-க்கும் குறைவான பிள்ளைகளே இருந்தார்கள். ஆசிரியர்களின் எண்ணிக்கையும் மிகக்குறைவு. புத்தகங்களும் இல்லாமல் விஞ்ஞான சோதனைக் கூடங்களில் எந்தப் பொருளும் இல்லாமல் பிள்ளைகளுக்கு எதைத் தான் ஆசிரியர்கள் சொல்லித் தரமுடியும்.



இன்னொரு ஆசிரியர் இராணுவத்தின் மற்றொரு விசித்திரமான நிகழ்ச்சியை விவரித்தார். ஜீ. சி. ஈ. ஓ. எல்., என்ற பள்ளி இறுதித் தேர்வு நாளில் 60 மணி நேர ஊரடங்குச்சட்டத்தினை இராணுவ அதிகாரிகள் பிறப்பித்தனர். ஊரடங்குச் சட்டம் அமலில் இருக்கும் போது ஆசிரியர்களும் பிள்ளைகளும் எப்படி தேர்வு நிலையங்களுக்கு வர முடியும்? எனவே யாரும் வரவில்லை. தேர்வும் நடைபெறவில்லை.

கிளிநொச்சியில் மாவட்ட விளையாட்டுப்போட்டிக்குச்சென்ற மாணவர்களை இராணுவம் சுற்றி வளைத்துக் கொண்டு மொத்தமாக கைது செய்தது. விஷயத்தைக்கேள்விப்பட்டுப்பதறியடித்து ஓடிவந்த பெற்றோர்களிடம் ஆயிரக் கணக்கில் பணம் வாங்கிக்கொண்டு மாணவர்களை விடுதலை செய்தது.

ஆசிரியர்களுக்கு ஊதியப்பணம் முறையாகக் கிடைப்பதில்லை என்றும் அவர்கள் சொன்னார்கள். தமிழர்களாக இருக்கக்கூடிய ஆசிரியர்களை வேண்டுமென்றே சிங்களப் பகுதிக்கு மாற்றுவது அவர்கள் அங்கு சென்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும். எனவே அவர்கள் செல்ல மறுத்தால் அதைக் காரணம் காட்டி வேலையிலிருந்து விலக்கிவிடுகிறார்கள். தமிழர்கள் பகுதிகளில் வேலை பார்த்த சிங்கள ஆசிரியர்களைச்சிங்களப்பகுதிகளுக்கே மாற்றி அவர்களைப் பத்திரமாக திருப்பி அனுப்பி வைத்து விடுகிறார்கள். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் தமிழர் பகுதிகளில் எந்தப் பள்ளிக் கூடத்திற்கும் புதிய கட்டிடமோ புதிய நாற்காலி மேசைகளோ வழங்கப்பட்டதில்லை. அவ்வாறு வழங்குவதை அறவே அரசு நிறுத்தி விட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள ''சிங்கள மகாவித்தியாலயம்'' என்ற பள்ளியைச் சேர்ந்த சிங்கள ஆசிரியர்கள் சிங்களப் பகுதிக்குப் பத்திரமாகச் சென்றுவிட்டார்கள். அவர்கள் வேலைக்கு வருவதில்லை. ஆனால் சிங்களப் பகுதியில் ஆசிரியர்களாக வேலை பார்த்த தமிழர்கள் அங்குப்பத்திரமாக வாழ முடியாமல் தமிழர் பகுதிக்குத் திரும்பிவிட்டார்கள். அத்தகையவர்கள் உடனடியாக வேலைக்குப் போய்ச்சேர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அதை ஏற்று எந்தத் தமிழரும் அங்கு செல்லவில்லை. ஆகவே அவர்களுக்கு ஊதியம் அனுப்பப்படுவதில்லை. ஆனால் சிங்கள ஆசிரியர்களுக்கு மட்டும் வேலைக்குப் போனாலும் போகாவிட்டாலும் ஊதியங்கள் முறையாக வழங்கப்படுகின்றன.

பருத்தித்துறையிலுள்ள ''காட்லிக்'' கல்லூரி, ''மேதடிக்ஸ் பெண்கள் கல்லூரி'' போன்ற சிறந்த கல்லூரிகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுவிட்டன. இந்தக்கல்லூரிகளில் படித்த மாணவ மாணவியர்கள் இப்போது வெறும் மரத்தடிகளில் கல்வி கற்க வேண்டிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டார்கள். இதைப் போலவே ஈழ நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள முக்கியமான கல்விநிலையங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டு உள்ளன. இது திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. இராணுவ முகாம்கள் வைக்க வேறு எத்தனையோ இடங்களிருந்தும் தமிழர்களின் கல்வியை அழிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாட்டினைச்சிங்கள அரசு செய்துள்ளது.

இன்னொரு கொடுமையைப் பற்றியும் அந்த ஆசிரியர்கள் வேதனையுடன் தெரிவித்தார்கள். இராணுவ வாகனங்களை 'புலிகள்' வழிமறித்துத்தாக்குகிறார்கள். இதிலிருந்து தப்ப இராணுவத்தினர் புதிய தந்திரத்தைக் கையாள்கிறார்கள். பள்ளிக்கூடம் சென்றுகொண்டிருக்கும் சின்னஞ்சிறிய குழந்தைகளை வழிமறித்து அவர்களைத் தங்கள் இராணுவ வாகனங்களில் ஏற்றி முன்னால் நிறுத்திக்கொண்டு அவர்களுக்குப் பின்னால் இராணுவத்தினர் பதுங்கிக்கொள்கிறார்கள். விடுதலைப் புலிகள் இராணுவ வாகனத்தைத்தாக்குவதானால் அதற்கு முதல் பலியாக தமிழ்க் குழந்தைகளே இருப்பார்கள். எனவே இராணுவ வாகனங்களைத்தாக்க விடுதலைப்புலிகள் தயங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தமிழ்க் குழந்தைகளை இவ்வாறு தமது வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு எல்லாம் சென்று திரும்பிய பிறகு நல்ல மனமிருந்தால் அந்தக் குழந்தைகளை இறக்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு அன்று சரியான வேட்டை கிடைக்காமல் இருந்திருக்குமானால் அந்த கோபத்தை குழந்தைகள் மீது காட்டி அவர்களைச் சுட்டு வீதிகளில் வீசி எறிந்துவிட்டுப் போகிறார்கள். இந்தக் கொடுமைகளையெல்லாம் சித்தரித்த அந்த ஆசிரியர்கள் இறுதியாகத்தமிழ்நாட்டு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பின்வரும் வேண்டுகோளை விடுத்தார்கள்.

''தமிழீழப்போராட்டம் வெற்றி பெறுவதற்குத்தமிழ்நாட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் உதவவேண்டும்' அவர்கள் மனம் வைத்தால் தமிழ்நாட்டிலுள்ள ஐந்து கோடி மக்களையும் எங்களுக்கு ஆதரவாகத் திரட்டித் தரமுடியும். அமைதியான சூழ்நிலையில் தங்களது கல்விப் பணிகளைத்தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் தமிழ்நாட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் எங்களின் அமைதியற்ற வாழ்வை எண்ணிப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறோம். நாங்களும் அவர்களைப் போலச் சுதந்திர மனிதர்களாகச்சுகமுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ அவர்கள்தான் எங்களுக்கு உதவ வேண்டும்.''

தமிழர்கள் எங்களுக்காகத் தீக்குளித்துச்சாவதைக் கேள்விப் படும்போது எங்கள் மனம் வேதனையால் துடிக்கிறது. இதை நாங்கள் விரும்பவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவியுங்கள். சிங்கள வெறியர்களால் கொன்று குவிக்கப்படும் எங்களைக் காப்பாற்ற அவர்கள் உதவ வேண்டுமே தவிர எங்கள் சகோதரர்களில் யாரையும் நாங்கள் அவமாக இழக்கத் தயாராகயில்லை'' என உணர்ச்சி பொங்க அவர்கள் சொன்னார்கள்.



யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது மகளிர் கல்லூரியின் முதல்வர் ஒருவரைச் சந்தித்தேன். அந்த அம்மையார் என்னுடன் பேசுவதற்கே பயந்தார். இருந்தாலும் அவரைத்தெரியப் படுத்தி பேச வைத்தோம், அவரது கல்லூரியில் சுமார் 1200 மாணவிகள் படிப்பதாகவும், இவர்களில் 800 பேர் வெளியிலிருந்து பஸ் மூலம் வருவதாகவும் இவர் கூறினார். அகதிகளாக வந்த மாணவிகள் ஏராளமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அமைதியான சூழ்நிலையில் ஒருபோதும் கல்லூரி நடைபெறவில்லை என அவர் வருத்தப்பட்டார். கல்லூரிக்குள் பலமுறை இராணுவம் புகுந்து கொடுமை செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தமது கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவியின் சோக வரலாற்றை அவர் விவரித்த போது அதிர்ந்து போனேன். கல்லூரிக்கு வந்து கொண்டிருந்த மாணவியைச்சிங்கள இராணுவம் பிடித்துச் சென்று விட்டது. தன் மகளைத் தேடி இராணுவ முகாமுக்குச் சென்ற வயதான தாயார் எப்படியோ கெஞ்சிக் கூத்தாடித் தம் மகளைப் பார்க்க அனுமதி பெற்றார். அதுவும் ஜன்னல் வழியாகத்தான் பார்க்க முடியும் என்று இராணுவ அதிகாரி கூறிவிட்டார். அப்படி ஜன்னல் வழியாக மகளைப் பார்த்த போது **அந்த மூதாட்டி பேய் அறைந்தவள் போலானாள்** அவளின் அருமை மகள் தலை மயிர்களால் தன் உடலை மூடி மறைத்த வண்ணம் கூனிக்குறுகி மூலையில் முடங்கியிருப்பதைப் பார்த்தாள். **ஆம்! அந்தப் பெண்ணை முழு நிர்வாணமாக உள்ளே வைத்திருந்தார்கள்.** இந்தச்சோகக் கதையை அந்த முதல்வர் கூறியபோது அவருடைய நாத்தழுதழுத்தது.

பருத்தித் துறையிலிருந்து பஸ்சில் வந்த மாணவிகளை இராணுவம் வழி மறித்து எல்லோரையும் பிடித்துச்சென்று விட்டதாம். இதில் நாலு மாணவிகள் சிங்கள இராணுவ வெறியர்களால் கற்பழிக்கப் பட்டுப்பிணமானார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

**கலியங்காடு** என்னும் ஊரைச் சேர்ந்த இக்கல்லூரியின் ஆசிரியை கல்லூரிக்கு வரும் வழியில் இராணுவத்தினர் பிடித்து சென்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த ஆசிரியை கர்ப்பிணியாக இருந்ததையும் பொருட்படுத்தாது மிருகத்தனமாகச்சிங்கள வெறியர்கள் கற்பழித்தனர். இதனால் அவர் இறந்து போனார். இச்செய்தியைச் சொல்லும் போதே கல்லூரி முதல்வர் அழுதுவிட்டார்.

''ஏன் தமிழனாகப்பிறந்தோம் என்ற வேதனையோடு தான் ஒவ்வொரு நாளும் வாழ்கிறோம். இப்படியொரு ஈனவாழ்வு வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேலானது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பையில் தேவையான சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு எந்நேரமும் ஓடுவதற்குத் தயாராகத்தான் வாழ்கிறோம். எங்கள் சொத்து சுகங்கள் போனாலும் பரவாயில்லை. எங்கள் மானம் பறிபோகிறது. 'அன்று பாஞ்சாலியின் மானத்தைக் காக்கக் கண்ணன் வந்தான், எங்களின் மானத்தைக் காக்க இந்தியா முன் வரக்கூடாதா?'' என்று அவர் கேட்டபோது என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

முள்ளிவிளை என்ற ஊரிலுள்ள வித்யானந்தா கல்லூரிக்குச் சென்றிருந்தேன். சுமார் 1,600 மாணவர்களும் 42 ஆசிரியர்களும் இங்கிருக்கிறார்கள். 84-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 85-ம் ஆண்டு மே மாதம் வரை இந்தக் கல்லூரி நடைபெறவேயில்லை. நான் சென்றிருந்தபோது ஓரளவு இயங்கிக்கொண்டிருந்தது. இக்கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் பல அதிர்ச்சி தரும் செய்திகளைச் சொன்னார்கள். இந்தக் கல்லூரி மாணவர்களான விவேகானந்தன், ஜெயந்திரன், கனகராசா ஆகிய மூன்று மாணவர்களைஇராணுவம் சுட்டுக் கொன்றதாக அவர்கள் கூறினர். மாணவர்கள் ஏறிவரும் பஸ்ஸை இராணுவம் வழிமறித்துத் தாங்களும் ஏறிக்கொண்டு மாணவர்களைத் தங்கள் பாதுகாப்புக்காக முன்னால் உட்காரவைத்துக் கொண்டு தங்கள் வேட்டையாடுதலை தினமும் நடத்துமாம். வேட்டையாடுதல் முடியும்வரை மாணவர்களை இராணுவத்தினர் விடுவிக்க மாட்டார்களாம். பஸ்ஸில் இராணுவத்துடன் மாணவர்கள் நிற்பதால் போராளிகள் இந்த பஸ்ஸை தாக்குவதற்குத் தயங்குவார்கள். இந்தத் தந்திரத்தை இராணுவம் தொடர்ந்து கடைப்பிடிப்பதாக அவர்கள் கூறினர். ஆசிரியர்களை இராணுவம் மரியாதையாக நடத்துவதில்லை. அடித்தும், உதைத்தும் துன்புறுத்துகிறது.

மாணவர்களும் படிக்கிற சூழ்நிலையில் இல்லை. படித்து என்ன செய்வது என்று மாணவர்கள் கேட்பதாக ஆசிரியர்கள் சொன்னார்கள். சிறிய மாணவர்கள்கூடத்துப்பாக்கிகளைப் படம் வரைவதும் போராளிகள் பற்றிப்பேசுவதுமாக இருப்பதாக ஆசிரியர்கள்



சொன்னார்கள். வயதுவந்த மாணவர்கள் புலிப்படையில் சேரும் மனநிலையில்தான் உள்ளார்கள். அவர்கள் திடீர் திடீரென மறைந்துவிடுகிறார்கள், சுசிலநாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் புலிப்படையில் சேர்ந்த செய்தி எங்களுக்குக் கிடைக்கிறது. முதலில் எங்களுக்கு வருத்தமாக இருந்தாலும் இதைத் தவிர வேறு வழி அந்த மாணவர்களுக்கு இல்லை என்பதை நாங்கள் உணர்ந்திருப்பதால் எங்கள் மனத்தைத் தேற்றிக்கொண்டு பெற்றோர்களையும் தேற்றுகிறோம் என்று ஆசிரியர்கள் சொன்னார்கள்.

இன்று முழுவதும் பெரும்பாலும் மோட்டார் சைக்கிளிலேயே பயணம் செய்தோம். வவுனியா நகரத்திற்குள்ளே வேப்பங்குளம் என்ற பகுதியில் அகதிகள் முகாம் ஒன்றிருக்கிறது. அவர்களைப் பார்ப்பதற்காக அங்கு போனோம். அங்குசுமார் 700 அகதிகள் இருக்கிறார்கள். தானிய கிட்டங்கிகளில் அகதிகள் தங்கி இருக்கிறார்கள். அருகில் இராணுவ முகாமிருப்பதால் அடிக்கடிப் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாவதாக அகதிகள் சொன்னார்கள். இந்த இடத்தில் 5 நிமிஷத்திற்கு மேல் இருக்க வேண்டாமென்று புலிப்படைத்தோழர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆனாலும்கூட அகதிகளின் சோகக் கதைகளைக் கேட்பதிலும் அவர்களுக்கு ஆறுதல் சொல்வதிலும் நான் ஈடுபட்டிருந்ததால் நேரம் அதிகமாகிவிட்டது. அருகிலிருந்த தோழர்கள் அவசரப்படுத்தினார்கள். அகதிகள் முகாமிலிருந்து எப்படியோ ஒரு வழியாகப்புறப்பட்டோம்.

நீண்ட தூரம் பயணம் செய்து காட்டில் ஓரிடத்திலிருந்த புலிகளின் முகாமை அடைந்தோம். அங்கு அவர்கள் உற்சாகமாக வரவேற்புக் கொடுத்தார்கள். பல்வேறு அணிவகுப்புகளைச் செய்து காட்டினார்கள். அவர்கள் வைத்திருந்த விதவிதமான ஆயுதங்களை எப்படி இயக்குவது என்பதையும் விளக்கினார்கள். பிறகு அரசியல் நிலை குறித்து விவாதித்தார்கள். இந்திய அரசின் முயற்சியால் நடைபெறும் சமரச முயற்சி குறித்தும் என்னிடம் கேட்டார்கள். சுமார் இரண்டு மணி நேரம் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர்கள் வெறும் ஆயுதப் பயிற்சி மட்டும் பெறவில்லை. அரசியல் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

தலைவர் பிரபாகரன் வெறும் போராளிகளை மட்டும் உருவாக்கவில்லை. தெளிந்த அரசியல் வாதிகளையும் சேர்த்தே உருவாக்கியிருக்கிறார் என்பதை அறிந்த போது அவர்மீது நான் கொண்ட மதிப்புப்பன்மடங்காக உயர்ந்தது. இலங்கையின் அரசியல் மட்டுமல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவின் அரசியலும் குறிப்பாகத் தமிழ் நாட்டின் அரசியலும் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

தமிழீழத்தின் விடுதலைக்கான போராட்டம் என்று மட்டும் அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கருதவில்லை. தென்னாசிய பகுதிகளில் ஏகாதிபத்தியங்களின் காலடிச் சுவடே இல்லாமல் அழிக்கும் போராட்டமாகவும், இந்தப் பகுதிக்கான **சோஷலிசப்புரட்சிக்கு** வித்திடும் போராட்டமாகவும் அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கருதுவதுகண்டு பெருமிதம் அடைந்தேன்.

தமிழர்களுடைய போராட்டத்தை அங்கீகரிக்க இந்திய அரசு இன்னமும் தயங்குவதற்கான காரணங்களை அவர்கள் வரிசையாகச் சொன்ன போது நான் வியந்து போனேன். அந்தத் தோழர்களிடமிருந்து பிரியா விடை பெற்றுக் கொண்டு நாங்கள் புறப்பட்டோம்.








# 20. சமுதாயப் பணி

கிளிநொச்சிப் பகுதியின் தளபதியான **மாறன்** சுறுசுறுப்பான இளைஞர். அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது இப்பகுதியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை விளக்கிக் கூறினார். இராணுவ நடவடிக்கைகளின் விளைவாகக் கிளிநொச்சிப் பகுதியில் 1984-ம் ஆண்டில் நெல் விளைச்சல் பெருமளவு பாதித்து விட்டது. சுமார் 50 சதவீதம் இந்தப்பாதிப்பு இருக்குமென்றும் அவர் கூறினார்.

இந்தப்பாதிப்பைச் சமாளிக்க என்ன வழி செய்திருக்கிறீர்கள்? என்று நான் கேட்டேன்.

"மரவள்ளிக் கிழங்கு மற்றும் உப உணவு வகைகளை நிறைய பயிரிடுமாறும், உபயோகிக்குமாறும் மக்களைத்தூண்டி வருகிறோம்" என்று அவர் சொன்னார்.

கிளிநொச்சிப் பகுதியில் மக்களை ஒன்று திரட்டிச்சிரமதானப் பணியைச்செய்வதாக அவர் கூறினார்.

"என்னென்ன பணிகள் செய்கிறீர்கள்" என்று நான் கேட்டேன்.

"கோவில்கள் மராமத்து, சாலைகள் திருத்துதல், பள்ளி சீர் செய்தல், நிலங்களைச்செப்பனிடுதல், மருத்துவ உதவி புரிதல் ஆகியவற்றை நாங்கள் செய்கிறோம். கிளிநொச்சி மாவட்டத்தை 23 பகுதிகளாகப்பிரித்துள்ளோம். ஒவ்வொரு பகுதியிலும் ஒருவாரத்தில் இரண்டு சிரமதான வேலைகள் எனக்குறிப்பிட்டு வாரந்தோறும் 46சிரமதான வேலைகளைச் செய்கிறோம்" என்று மாறன் கூறினார்.

"இதற்காகும் செலவை எப்படிச் சமாளிக்கிறீர்கள்" என்று கேட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இதற்காகும் செலவில் ஒரு பகுதியை மக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டுகிறோம். மற்றொரு பகுதியை மக்களே முன்வந்து சிரமதானம் செய்வதன் மூலம் ஈடு செய்கிறார்கள்" என்று அவர் சொன்னார். இன்னொரு நிகழ்ச்சியையும் அவர் விவரித்தார்.

"1983-ம் ஆண்டில் இப்பகுதியிலுள்ள பெரியகுளமான 'இரணைமடுகுளம்' உடைப்பு எடுக்கும் அபாயம் உருவானது. அது உடைந்திருந்தால் சுமார் 1 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். எனவே நாங்கள் மக்களைத் திரட்டி சிரமதான அடிப்படையில் இந்த உடைப்பை சரிசெய்தோம். இதுவரை அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதற்கு என ஒதுக்கப்பட்ட 12 கோடி ரூபாயைப்பாதுகாப்பு வேலைகளுக்காக இராணுவம் எடுத்துக்கொண்டு போய்விட்டது. இந்தப் பணிகளுக்கு அரசு அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை என்றாலும் எங்களுக்கு எதிராக இருப்பதில்லை" என்றும் அவர் கூறினார்.

நிலப்பிரச்னையையும் ஓரளவுக்குப்புலிகள் தீர்த்திருக்கிறார்கள். நிலப்பிரபுக்களிடமிருந்து உபரி நிலத்தைப் பேசிப்பெற்று அவற்றை நிலமற்ற ஏழை மக்களுக்கு வினியோகிக்கிறார்கள்.

இதைப் பற்றிய விவரங்களைத் தளபதி மாறன் கூறியபோது "இதற்கு எதிர்ப்பு ஏதும் ஏற்படவில்லையா?" என்று நான் கேட்டேன்.

"100-க்குப்பத்து சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே எதிர்த்தார்கள். ஆனாலும் அதை நாங்கள் சமாளிக்கிறோம்." என்று அவர் சொன்னார்.

கிளிநொச்சிப்பகுதியில் நாங்கள் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தபோது கரடிபோக்குச்சந்தி என்ற இடத்தை நாங்கள் அடைந்தோம். அப்போது எங்களுக்கு ஒரு விபரீதமான செய்தி கிடைத்தது.

கரடிப்போக்குச்சந்தியிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் அப்பாவி பொதுமக்களில் இரண்டு பேரை இராணுவம் சுட்டுக்கொன்றுவிட்டதாகவும், அந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திவந்தது. தளபதி மாத்தயா வேறு வழியில் திரும்பிச் செல்லும்படி வாகனங்களுக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே நாங்கள் வேறுவழியில் சென்றோம்.





# 21. பிடிபட்ட துரோகி

குமுளமுனையில் இருந்து புறப்பட்டுப்பல மைல்கள் தூரம் பயணம் செய்து மாலை நேரத்தில் அடர்ந்த காட்டுப் பகுதி ஒன்றினை அடைந்தோம். வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு அடர்த்தியாக அந்தக்காடு இருந்தது. அங்கு இறங்கி நடந்து செல்லத் தொடங்கினோம்.

காட்டில் ஓரிடத்தில் துப்பாக்கிகள் ஏந்திய சிலர் நின்றுகொண்டிருந்தார்கள். நமது ஆட்கள் வந்து விட்டார்கள் என்று தளபதி மாத்தியா சொன்னார்.

புன்னகை பூத்த முகத்தோடு ஒரு இளைஞன் முன்வந்து என்னை வரவேற்றார். முல்லைத்தீவுத் தளபதி லாரன்சு என்று அவரை மாத்தியா அறிமுகப்படுத்தி வைத்தார்.

தளபதி லாரன்சு சுறுசுறுப்பான இளைஞர். அவரை முதலில் நான் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. "அண்ணா! என்னை நீங்கள் மறந்து விட்டீர்கள்" என்று அவர் சொன்னபோது நான் திகைத்துப் போனேன். ஆம்! அவரும் தமிழ்நாட்டில் எங்கள் கிராம வீட்டில் தங்கியிருந்த தோழர்களில் ஒருவர். பழைய நினைவுகளைக் கிளறினார். ஒருமுறை தீபாவளி தினத்தில் எங்கள் கிராம வீட்டிற்கு நான் திடீரென்று போனேன் அங்கு தங்கியிருந்த புலிகள் இயக்க இளைஞர்களுக்காக இனிப்புகள், பலகாரங்கள் முதலியவற்றைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு அவர்களுடன் உரையாடி மகிழ்ந்து விட்டு நான் திரும்பினேன். எனக்கே மறந்துபோன அந்த நிகழ்ச்சியைத்தளபதி லாரன்சு நினைவு கூர்ந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் முகாம் இருக்கக்கூடிய இந்த இடத்தைச் சுற்றிலும் சில மைல்கள் சுற்றளவில் நான்கு இராணுவ முகாம்கள் இருப்பதாக அவர் சொன்னார். மேலும் இது தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பகுதி என்றும் அவர் சொன்னார். "இராணுவத்தின் ஆதிக்கத்திற்குள் இருக்கும் இப்பிராந்தியத்தில் யார் நுழைந்தாலும் சுட்டுக்கொல்லப் படுவார்கள். மேலும் எப்பொழுதும் ஹெலிகாப்டர்கள் ரோந்து வந்து கொண்டே இருக்கும். இராணுவமும் காட்டுக்குள்ளே தேடுதல் வேட்டையை நடத்தும். போதாக் குறைக்குச்சிறுத்தை, கரடி, யானை போன்ற மிருகங்களின் தொந்தரவும் உண்டு. நேற்று இரவுகூட ஒரு கரடி வந்தது. துப்பாக்கியால் சுட்டால் எதிரிகளுக்குத் தெரிந்துவிடும். தீப்பந்தத்தினால் விரட்டினோம்" என்று லாரன்சு கூறினார்.

"இப்படி அபாயம் நிறைந்த பகுதியில் எப்படித் தங்கியிருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"இப்பகுதியிலுள்ள மக்களைப் பாதுகாக்க நாங்கள் இருக்கிறோம். நாங்கள் இல்லாவிட்டால் இப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பில்லை. எனவே இப்பகுதியிலுள்ள மக்கள் சகல விதத்திலும் எங்களுடன் ஒத்துழைக்கிறார்கள். எங்களை விரும்புகிறார்கள். ஆதவே பல்வேறு அபாயங்களுக்கிடையிலும் நாங்கள் இங்கிருக்கிறோம்" என்று அவர் சொன்னார்.

இப்பகுதி மக்களுக்குத் தாங்கள் செய்து வரும் தொண்டுகள் பற்றியும் தளபதி லாரன்சு விவரித்துக் கூறினார்.

"பாதுகாப்புப் பணி புரிவதோடு இங்குள்ள மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பலவிதத்திலும் நாங்கள் உதவுகிறோம். மீன்பிடித் தொழிலைப் பெருக்க உதவிகள் செய்கிறோம். நவீன விவசாய முறைகளைக் கற்றுத் தருகிறோம். மக்களுக்கு உறுதுணையாக நாங்களும் விவசாயத் தொழிலைச் செய்கிறோம். கிராமங்களில் நியாய விலைக் கடைகளை அமைத்து எங்களின் உற்பத்திப் பொருட்களை நியாய விலையில் விற்பனை செய்கிறோம். தும்புப் பொருட்கள், பனைப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறோம். மீன், காய்கறி போன்றவற்றைப் பதப்படுத்தி மக்களுக்குத்தருகிறோம். இப்பகுதி எல்லையோரப் பகுதி என்ற காரணத்தினால் நாங்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. எங்கள் படையில் சிங்கள எதிரிகள் ஊடுருவி விடாமல் தடுப்பதில் நாங்கள் மிகக்கவன



மாக இருக்கிறோம். எங்களுடைய அரசியல் தொண்டர்கள் மிகக்கவனமாக பரிசீலனை செய்து சிபாரிசு செய்த பிறகே புலிப்படையில் ஆட்களைச் சேர்க்கிறோம்", என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே மேலே ஹெலிகாப்டர் பறக்கும் சப்தம் கேட்டது. உடனே லாரன்சும் மற்றவர்களும் மிகப்பரபரப்பு அடைந்தார்கள். அடர்ந்த காட்டுக்குள் கூடாரங்கள் அமைக்கப் பட்டிருந்த காரணத்தினால் ஹெலிகாப்டரிலிருந்து பார்த்தால் தெரியாது என்றாலும் அவர்கள் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள்.

சற்று நேரத்தில் ஹெலிகாப்டர் மறைந்து போய்விட்டது. லாரென்சு தமது பேச்சைத் தொடர்ந்தார். "இந்த ஹெலிகாப்டர் விமானந்தான் சிங்களவர்களுக்கு இன்று பெரும் பாதுகாப்பு. தரை வழியாக வந்தால் அவர்களை நாங்கள் ஓடஓட விரட்டுவோம். எனவே அப்படி வருவதற்கு அஞ்சி ஹெலிகாப்டரில் பறந்து வந்து சுடுகிறார்கள். ஹெலிகாப்டரையும் எங்கள் இளைஞர்கள் பதம் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். எங்களுக்குத் தேவையான ஆயுதங்கள் மட்டும் இருக்குமானால் எப்போதோ வெற்றியைக் குவித்திருப்போம்" என்று லாரன்சு கூறியபோது, அவருடைய முகத்தைப் பார்த்தேன். ஒளி பொருந்திய அந்த முகத்தில்தான் எவ்வளவு நம்பிக்கை! அந்த நம்பிக்கையுடன் அவர் மேலும் பேசினார். "எங்கள் பயிற்சி முகாமில் சேர ஏராளமான இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு முன் வருகிறார்கள். எல்லோருக்கும் பயிற்சி கொடுக்க எங்களிடம் ஆயுதம் இல்லை. எனவே பயிற்சிக்கு ஓரளவுக்குத்தான் இளைஞர்களை எடுக்கிறோம்" என்று அவர் சொன்னார்.

"சிங்கள இராணுவம் எங்களைக் கண்டு நடுநடுங்குகிறது. இராணுவ முகாம்களை விட்டு அவர்கள் வெளிவர முடியாதபடி இருக்கிறார்கள். அப்படி வந்தாலும் ஹெலிகாப்டர் துணையோடுதான் அவர்கள் வரமுடியும். இரண்டு நாட்களுக்கு முன்னால் அலம்பீல் என்ற இடத்திற்குச்சிங்கள இராணுவம் வாகனங்களில் வந்தபோது நாங்கள் திடீர்த் தாக்குதல் நடத்தினோம். மூன்று சிங்கள வீரர்கள் செத்தார்கள். 6 பேர் படுகாயம் அடைந்தார்கள். மற்றவர்கள் வாகனங்களையும் ஆயுதங்களையும் போட்டுவிட்டு உயிர் பிழைத்தால் போதும் என்று ஓட்டம் பிடித்து விட்டார்கள்" என்று சொன்னார்.

பிறகு முகாமைப் பார்வையிட என்னை அழைத்துக் கொண்டு போனார். வழியில் ஒரு கூடாரத்தில் ஒருவனைக் கட்டிப் போட்டு இருந்தார்கள். யார் என்று கேட்டபோது, "இவன் ஒரு துரோகி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்மிடமிருந்து கொண்டு சிங்களவர்களுக்குச் செய்திகள் சொல்லியவன். இன்றுதான் உண்மையைத் தெரிந்து பிடித்து வைத்திருக்கிறோம்'' என்றார் லாரன்ஸ்.

''அவன் ஒற்றன் என்பதற்கு என்ன ஆதாரம்?'' என்று நான் கேட்டேன்.

தாது பையில் இருந்த ஒரு சீட்டை எடுத்து லாரன்சு கொடுத்தார். முல்லைத் தீவின் சிங்கள இராணுவத்தளபதி கொடுத்திருக்கக்கூடிய அத்தாட்சிப் பத்திரம் அது. அதில் வீரசிங்க என்ற பெயர் எழுதப்பட்டு இருந்தது. அவர் அங்க அடையாளங்களும் கொடுக்கப் பட்டிருந்தன. இந்தச் சீட்டின் அடியில் சிங்களத் தளபதியின் கையெழுத்தும் முத்திரையும் பொறிக்கப் பட்டிருந்தன. இந்தச் சீட்டைக் கொண்டு வந்து இராணுவ முகாமில் காட்டினால் உடனடியாகத் தளபதியிடம் அழைத்துச் செல்ல வேண்டும். இந்தச் சீட்டு வைத்திருப்பவர்களுக்கு இராணுவம் தேவையான உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தது.

''இவனை எப்படிப்பிடித்தீர்கள்'' என்று நான் கேட்டேன்.

''இவன் எங்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி உளவாளியாகச் செயல்படுகிறான் என்ற சந்தேகம் எங்களுக்குப் பல நாட்களாகவே உண்டு. எங்களுடைய ஒற்றர்படை இவனைப்பல நாட்களாகக் கண்காணித்தது. இறுதியில் இவன் பிடிபட்டு விட்டான்'' என்று லாரன்சு சொன்னார்.

கையும், காலும் கட்டப்பட்ட நிலையில் கீழே படுத்துக்கிடந்த அவன் என்னிடம் ஏதோ சொல்ல முயன்றான்.

''நீ ஒரு தமிழனாக இருந்து கொண்டு இப்படித்துரோகம் செய்யலாமா?'' என்று நான் அவனிடம் கேட்டேன்.

''நான் ஒரு பாவமும் அறியாதவ '' என்று திரும்பத்திரும்பச் சொன்னான். அவன் முகத்தில் மரண பயம் குடிகொண்டிருந்தது.

அன்று இரவு அந்த முகாமிலேயே தங்கினோம். இரவு உணவுக்குப்பின் சில மாத்திரைகளை எனக்குக் கொடுத்தார்கள். என்னவென்று கேட்டேன். இந்தக் காட்டில் ''மலேரியா'' கொசுக்கள் மிகுதியாக உண்டு. அதற்காக மலேரியாத்தடுப்பு மாத்திரைகளைச்சாப்பிட்டு விட்டுத்தான் இங்கு இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நானும் சில மாத்திரைகளை விழுங்கிக் கொண்டேன்.

கைது செய்யப்பட்டுள்ள உளவாளியைப் பற்றி மேலும் கேட்டேன். ''சிங்கள உளவாளிகளையோ, சிங்கள இராணுவ வீரர்களையோ நீங்கள் கைது செய்தது உண்டா'' என்று கேட்டேன்.



''சிங்கள இராணுவ வீரர்களை பலமுறை பிடித்திருக்கிறோம். ஆனால் அவர்களை பல நாட்கள் எங்கள் முகாமில் வைத்திருந்து பல உண்மைகளை அவர்களுக்கு உணர்த்துவோம். தமிழர்கள் ஒரு போதும் சிங்களவர்களுக்குஎதிரிகள் அல்ல. தமிழர்கள் சிங்களவரோடு நட்புறவு கொண்டுதான் வாழ விரும்புகிறார்கள். ஆனால் சிங்களவரின் அடிமைகளாக வாழ விரும்பவில்லை. நாங்களும் சுதந்திரம் பெற்றவர்களாக வாழவே விரும்புகிறோம். சிங்கள இன வெறியர்களும், ஜெயவர்த்தனாவும் சிங்களவரை ஏமாற்றி தமிழர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டு உண்மையில் சிங்களரை அவர்களுக்கு அடிமையாக்கி விட்டார்கள்'' என்று பல விஷயங்களை அவர்களுக்கு உணர்த்துகிறோம்' அதன் பிறகு எல்லைக்கு அருகே கொண்டு போய் பத்திரமாக அவர்களை விடுதலை செய்கிறோம். ஆனால் படுகொலை, கற்பழிப்பு போன்ற கொடிய குற்றங்களில் ஈடுபட்டதாகத் தெரிந்து பிடிபட்டவர்கள் விஷயத்தில் எத்தகைய கருணையையும் நாங்கள் காட்டுவதில்லை'' என்றும் அவர் சொன்னார்.

மேலும் அவர் பேசுகையில் ''எங்கள் தலைவர் பிரபாகரன் அவர்கள் கையெழுத்திட்ட சிங்கள மொழி வேண்டுகோள்' கடிதத்தினை சிங்கள இராணுவ முகாம்களுக்குள் கிடைக்கும்படி செய்கிறோம். சிங்கள அமைச்சர், இராணுவத் தளபதி போன்றவர்களுக்கு இது அதிர்ச்சியைக் கொடுத்தாலும், அடிமட்டத்திலுள்ள சிங்களவரை எங்களின் இச்செயல்கள் சிந்திக்க வைக்கின்றன. எனவே அவர்கள் இராணுவத்தில் சேர மறுக்கிறார்கள். சேர்ந்தாலும் தமிழர் பகுதிகளுக்கு வர அறவே மறுக்கிறார்கள். சம்பளம், குடும்பத்திற்குச் சலுகைகள், இறந்து போனால் பெரும் தொகை வழங்குதல் போன்ற ஆசை காட்டிதான் அவர்களைச் சேர்க்க வேண்டியிருக்கிறது. அப்படியும் நாங்கள் தாக்கும்போது அவர்கள் ஈடுகொடுக்க முடியாமல் ஓடத் தொடங்கி விடுகிறார்கள். சிங்கள அரசு அண்மையில் கொண்டு வந்த கட்டாய இராணுவ சட்டமும் இதனால்தான் கொண்டு வரப்பட்டது. சிங்கள இளைஞர்களைக் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்க்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. சிங்கள இளைஞர்கள் தாமாகவே இராணுவத்தில் சேர முன் வருவதில்லை என்பதற்கு இதுவே சான்றாகும் என்று கூறினார்.

இரவு வெகு நேரம் என்னிடம் பேசிவிட்டு லாரன்சு உறங்கப் போனார். நானும் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தேன், அதிகாலையில் எழுந்து நாங்கள் புறப்படத் தயாரானபோது லாரன்சு எங்களுக்குப் பிரியா விடை கொடுத்தார். **அவரை நான் காண்பது அதுவேதான் கடைசி முறையாக இருக்கும் என்று அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 22. தம்பியின் கனவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான் சுற்றுப் பயணம் செய்த போது சகல துறைகளிலும் அது பிற்போக்கான மாவட்டமாக இருப்பதை நான் பார்த்தேன். அதைப்பற்றித்தளபதி மாத்தயாவிடம் நான் கேட்டபோது அவர் பின்வருமாறு கூறினார்.

''அரசியலிலும், கல்வியிலும் இன்னும் சகல துறைகளிலும் இந்த மாவட்டம் பிற்போக்கான மாவட்டம். பிறபகுதிகளில் பள்ளி இறுதித் தேர்வில் 90% மாணவர்கள் வெற்றி பெற்றால் இங்கு 10% மாணவர்கள்தாம் வெற்றி பெறுவார்கள். இந்த லட்சணத்தில் இப்போது கடந்த பல மாதங்களாக பள்ளிகள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. ஏற்கனவே மிகவும் பின் தங்கிய மாணவர்கள் இதன் விளைவாக மேலும் பின் தங்கிப் போய் விட்டார்கள். அரசியலிலும் இந்த மாவட்டத்தில் விழிப்புணர்ச்சி குறைவு. எனவே எங்களுக்கு இங்கு வேலை அதிகமாக இருக்கிறது'' என்று அவர் சொன்னார்.

முல்லைத்தீவு மாவட்டம் அழகான மாவட்டம். தென்னஞ் சோலைகள் நிறைந்த பூமி. இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களுக்குப் போனேன். இந்த மாவட்டத்திலுள்ள **புதுக்குடியிருப்பு** என்ற கிராமத்திற்கு நாங்கள் சென்ற போது அந்த கிராமத்து மக்கள் தாங்கள் அனுபவித்த வேதனைகளை விவரித்தார்கள். மூன்று தடவை இந்த கிராமத்தை இராணுவம் சுற்றி வளைத்து அட்டூழியம் செய்திருக்கிறது.

**1985**-ம் ஆண்டு பொங்கல் நாள். இந்த கிராமத்திற்கு மறக்க முடியாத நாள். தமிழர் திருநாளான பொங்கல் திருநாளில் காலையில்



ஒவ்வொரு வீட்டிலும் பொங்கல் பானைகளை வைத்துப்பொங்கல் இடுவதற்கான வேலைகளில் அனைவரும் ஈடுபட்டிருந்த போது திடீரென இராணுவம் கிராமத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டது. வீடுவீடாகப் புகுந்து பாதி பொங்கியும், பொங்காமலும் இருந்த பொங்கல் பானைகளையெல்லாம் உடைத்து நொறுக்கிப்பொங்கல் அடுப்புகளிலிருந்த எரிந்து கொண்டிருந்த விறகுக் கட்டைகளை எடுத்துப்பலரை அடித்துச் சுட்டுப்பல்வேறு கொடுமைகளை இராணுவத்தினர் செய்தனர்.

பொங்கல் அன்று அங்குப் பெண்கள் புத்தாடைகள் உடுத்தி நகைகள் எல்லாம் அணிந்து இருப்பார்கள். அவைகளையெல்லாம் இராணுவத்தினர் கொள்ளையடித்தார்கள். வீடுகளிலிருந்த விலையுயர்ந்த பொருட்களையும் கொள்ளையடித்தார்கள். குழந்தை குட்டிகள் உட்படக்கிராம மக்கள் அனைவரையும் கைது செய்து கொண்டு போய் இரண்டு நாட்கள் கொடுமைப் படுத்தினார்கள்.

இதுபோதாது என்று மூன்று மாதங்கள் கழித்து அதாவது **21.4.'85** அன்று அந்த கிராமத்தினரில் **24** பேர்களை இராணுவம் கைது செய்து கொண்டு போய் அருகேயுள்ள காட்டில் நிர்வாணமாக்கி ஓட சொல்லிப்பிறகு சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இராணுவம் சென்ற பிறகு காட்டுக்குள் சென்று பார்த்த கிராம மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

சுடப்பட்ட **24** பேர்களில் சிலர் சாகவில்லை, படுகாயமுடன் கிடந்திருக்கிறார்கள். ஆனாலும் இராணுவம் அவர்களை ஒன்றாக்குவித்து எரித்து விட்டது. உயிரோடு சிலரும் எரிக்கப்பட்டு சாம்பல் ஆனார்கள். எரிந்தும் கரிந்தும் கிடந்த அந்த உடல்களை அந்த கிராம மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அடக்கம் செய்தார்கள்.

ஈழநாட்டு மக்களின் வழக்கப்படி இறந்தவர்களுக்கு **6**-ம் மாதச் சடங்கு ஒன்று நடத்துவார்கள். அந்த சடங்கு நடைபெற்ற நாளில் நான் எதிர்பாராத விதமாக அந்த ஊருக்குச் சென்றேன். சொல்லவொண்ணாத அந்தத் துயரத்திலும் எனது வருகை அவர்களுக்கு ஆறுதல் தந்தது. கொல்லப்பட்ட **24** பேர்களின் குடும்பங்களுக்கும் ஆறுதல் கூறினேன். அவர்களின் துயரங்களைத் துடைக்க என்னாலான முயற்சிகளைச் செய்தேன். இருந்தாலும் கோரமான அந்தச்சம்பவத்தைப் பற்றிய நினைவுகளை அவர்களின் நெஞ்சங்களில் இருந்து யாராலும் அகற்றமுடியாது. இந்தக் கொடுமைகளை இராணுவம் இழைத்தபோது ஊருக்கு மேலேயே ஹெலிகாப்டர் வட்டமிட்டுக் கொண்டு இருந்தது என்றும் அந்த ஊர் மக்கள் கூறினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த ஊருக்கு அருகேயுள்ள முள்ளியவளை என்ற கிராமத்திற்கு நான் சென்றிருந்தேன். நான் அங்கே செல்வதற்குச்சில நாட்களுக்கு முன்னால் அதாவது 6.10.85-ல் அந்த ஊரில் இராணுவம் புகுந்து ஐந்து விவசாயத் தொழிலாளிகளைக் கைது செய்தது. அவர்களை விசித்திரமான முறையில் இராணுவத்தினர் கொலை செய்த கதையை அந்த மக்கள் பரிதாபத்துடன் கூறினார்கள். ஊர் நடுவேயிருந்த மரத்தில் இந்த ஐந்து பேரையும் ஏறச்சொல்லி யிருக்கிறார்கள். ஏறா விட்டால் சுடுவோம் என்று மிரட்டி யிருக்கிறார்கள். இதைக் கேட்டு நடுநடுங்கிய அந்த ஐந்து பேரும் மரத்தின் மீது ஏறியிருக்கிறார்கள். கீழே இருந்து அவர்களைச் சுடுவதற்குக்குறி வைத்திருக்கிறார்கள். இதைக் கண்டு அச்சம் அடைந்த அந்த ஐந்துபேரும் குரங்குகளைப் போலத்தாவித்தாவி மரக்கிளைகளில் ஒளிந்து கொள்ள முயற்சித்திருக்கிறார்கள். சிங்கள இராணுவ வெறியர்களோ தமிழர்களைக் குரங்குகளாகக் கருதி வேட்டையாடியிருக்கிறார்கள். ஒவ்வொரு தமிழனும் சுடப்பட்டுப்பயங்கரமான அலறலுடன் மரத்திலிருந்து கீழே விழுந்து சாவதைப் பார்த்துச்சிங்கள வெறியர்கள் குதூகலித்திருக்கிறார்கள். பிறரின் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி யடைபவர்களை ஆங்கிலத்தில் **சேடிஸ்ட்** என்று கூறுவார்கள். சிங்கள இராணுவ வெறியர்கள் அத்தனை பேர்களும் சேடிஸ்ட்கள் என்பதை இந்த நிகழ்ச்சி உறுதிப் படுத்தியது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மோட்டார் சைக்கிளில் யாரும் செல்லக் கூடாது என இராணுவம் தடை விதித்திருப்பதாக தளபதி மாத்தயா சொன்னார். போராளிகள் மோட்டார் சைக்கிள்களில் வந்து தாக்குவதைத் தடுக்கும் நோக்குடன் இந்தத் தடை உத்தரவை இராணுவம் பிறப்பித்திருப்பதாக அவர் கூறினார். மோட்டார் சைக்கிளில் யாரும் சென்றால் உடனே சுடப்படுவார்கள் என்றும் இராணுவம் எச்சரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எங்களுக்கு முன்னால் வழிகாட்டிக் கொண்டு புலிப்படை வீரர்கள் இருவர் மோட்டார் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்ததைக் காட்டி இது எப்படி? என்று நான் கேட்ட போது பதில் எதுவும் சொல்லாமல் மாத்தயா சிரித்தார்.

இந்தப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகளை கொடுத்துள்ளது. அடையாள அட்டை இல்லாமல் யாரும் வெளியில் நடமாட முடியாது. அப்படி நடமாடுபவர் இராணுவத்திடம் பிடிபட்டால் அவர்கள் 'கதி அதோ கதிதான் என்றும் அவர் சொன்னார்.



இங்கு மட்டும் தானா இந்த முறை? என்று கேட்டேன்.

''இல்லை அண்ணா! தமிழீழப் பகுதி முழுவதிலும் அடையாள அட்டை முறை அமுலில் இருக்கிறது'' என்று தளபதி மாத்தயா பதில் கூறினார்.

''எனக்கு ஒன்றும் அடையாள அட்டை இல்லையே'' என்று நான் வேடிக்கையாகச் சொன்னேன்.

**''நீங்கள் சுதந்திரத் தமிழீழத்தின் விருந்தினர். ஆகவே உங்களுக்கு அடையாள அட்டை வேண்டியது இல்லை'' என்று சொல்லிவிட்டு அவர் சிரித்தார். வண்டியிலிருந்த அத்தனை இளைஞர்களும் இதை ஆமோதிப்பது போலக் கலகலவென நகைத்தனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வது பிரதானமான கைத்தொழில் ஆகும். ஆனால் அதை விற்பதற்கு வழியில்லாமல் போனதால் லிட்டர் 10 ரூபாய்க்கு மேல் விலையில்லை. எண்ணெய்த் தொழில் முடங்கிக் கிடக்கிறது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிலவற்றை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக இராணுவம் திடீரென அறிவித்து விட்டிருக்கிறது. இவ்வாறு அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் கட்டிய துணியோடு வெளியேற்றப் படுகிறார்கள். வீடு, தோட்டம், நிலம், தளவாடச் சாமான்கள், பாத்திரங்கள், வாகனங்கள் போன்ற பல தலைமுறையாகச் சேர்த்த சொத்துக்கள் அனைத்தையும் அப்படி அப்படியே விட்டு விட்டு ஓடும்படி நிர்பந்தப்படுத்தப் படுகின்றனர். வெளியேறுவதற்கு சற்று தயங்கினாலும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இவ்வாறு தமிழர்கள் வெளியேறிய பிறகு சிங்களர் அந்தக் கிராமங்களில் புகுந்து பொருட்களைக் கொள்ளை யடிக்கின்றனர். வீடுகளை இடித்து உத்திரங்கள், மரங்கள், நிலைகள், ஜன்னல்கள், ஓடுகள் போன்றவற்றைக்கூடப் பெயர்த்தெடுத்துச் செல்கின்றனர். பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்த மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கும், அவர்களின் பொருட்களைக் கொள்ளையடிப்பதற்கும் மட்டுமே இந்தச் சட்டத்தை சிங்களர் பயன்படுத்துகின்றனர் என்று தளபதி மாத்தயா விவரித்தார்.

''அப்படித்தமிழர்கள் வெளியேற்றப்பட்ட ஒரு கிராமத்தைப் பார்க்க வேண்டும்; அழைத்துக் கொண்டு செல்லுங்கள்'' என்று நான் வேண்டிக் கொண்டேன். ''தடை செய்யப் பட்ட பகுதியிலுள்ள கிராமத்திற்குச் செல்வது ஆபத்தானது. அதிலும் உங்களை அழைத்துக் கொண்டு போவது மிகவும் ஆபத்தானது'' என்றார் அவர். ''எப்படியாயினும் நான் பார்த்தேயாக வேண்டும்'' என்று வற்புறுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினேன்; சற்றுத்தயக்கத்துடன் எனது வேண்டுகோளை நிறைவேற்ற அவர் ஒப்புக்கொண்டார்.

இதற்கிடையில் நன்றாக இருட்ட தொடங்கி விட்டது. காட்டுப் பாதையில் நாங்கள் தொடர்ந்து சென்றோம். தொலை தூரத்தில் மின் விளக்குகள் தெரிந்தன. என்னவென்று கேட்டேன்.

''இராணுவ முகாம் ஒன்றின் விளக்குகள்''என்று மாத்தயா சொன்னார்.

''நமது வாகனங்களின் விளக்குகளின் ஒளி அவர்களுக்குத் தெரிந்தால் ஆபத்து ஆயிற்றே'' என்று கேட்டேன் நான்.

''ஆபத்துதான். ஆனாலும் வேறு வழி நமக்கு இல்லை. இன்னும் கொஞ்சம் தொலைவில் சென்ற பிறகு நாம் வேறு திசையில் பிரிந்து சென்று விடுவோம். அதற்குப் பிறகு அபாயம் இல்லை'' என்று அவர் சொன்னார்.

அதைப் போலவே இராணுவ முகாமுக்குச் சற்றுத்தொலைவில் நாங்கள் பிரிந்து இன்னொரு திசையில் காட்டுக்குள் விரைந்து சென்றோம். சிலமணி நேரப்பயணத்திற்குப் பின்னால் நாங்கள் வரவேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தோம். ஆம்! புலிகளின் முகாம் ஒன்றில் அன்று இரவு நாங்கள் தங்கினோம். இரவு அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்தோம்.

அருகில் படுத்திருந்த தளபதி மாத்தயா பழைய நிகழ்ச்சிகளை நினைவு படுத்தினார்.

**புலிப்படையின் இராணுவச்சீருடையைத் தரித்து குறைந்தது 100 பேராவது அணி வகுத்துச்செல்வதைப் பார்க்க வேண்டுமென்று தம்பி பிரபாகரன் ஆரம்ப நாட்களில் கனவு கண்டார். அந்த கனவு அற்புதமான முறையில் நிறைவேறி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நூறு அல்லது பல நூறு புலிப்படை வீரர்கள் சீருடையில் அணி வகுப்பதும் தமிழீழ மெங்கும் பல்லாயிரக்கணக்கில் புலிப் படையின் சீருடை தரித்த வீரர்கள் அணி வகுப்பதும் இன்றைய நடை முறையாகி விட்டது. இதைத்தளபதி மாத்தயா சொன்ன போது அவருடைய கண்கள் பனித்தன.**

மதுரையில் எங்கள் வீட்டில் தலைவர் பிரபாகரன் சில மாதங்கள் தங்கியிருந்த போது புலிப்படையின் சீருடை, தொப்பி, சின்னம் போன்றவற்றின் மாதிரிகள் தயாரிக்கப் பட்டன. அவ்வாறு தயாரிக்கப் பட்ட பல மாதிரிகளில் எது நன்றாக இருக்கிறது என்று அவர் என்



**னைக் கேட்டது என்னுடைய நினைவுககு வந்தது. அதைத்தளபதி மாத்தயாவிடம் சொன்னேன். சில ஆண்டுகளிலேயே தம்பியின் இந்த கனவு அற்புதமாக நிறைவேறித்தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் புலிப்படை வீரர்கள் காவல் காத்து வருகிற காட்சியினை நானே நேரில் பார்ப்பதும் நான் கண்டது கனவு தானா! என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியது. இவ்வாறு பேசிக் கொண்டே நாங்கள் உறங்கிப் போனோம்.**

**இடையில் நள்ளிரவில் நான் வெளியே எழுந்துவந்து பார்த்த போது கொட்டும் பனியில் இளைஞர்கள் காவல் காத்து நிற்பதைக் கண்டு மனம் நெகிழ்ந்தேன். காட்டிலும் மேட்டிலும் மழையிலும் வெயிலிலும் இரவிலும் பகலிலும் வாடைக் காலத்திலும் தங்கள் கடமையை மறவாத இந்த இளைஞர்களின் தியாகம் ஈடுஇணை யில்லாதது. அந்தக் கடுங்குளிரிலும் எனது கண்கள் கலங்கின.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 23. சிங்களப் படையோடு மோதல்

**தண்ணி முறிப்புக்குளம்** என்ற பெரிய ஏரியின் கரைவழியாக இன்று சென்றோம். ஏரியில் ஓரளவு தண்ணீர் இருந்தது. ஆனாலும் ஏரியைச் சுற்றியுள்ள வயல்கள் வறண்டு கிடந்தன. கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் எந்த வயலிலும் விவசாயம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அருகிலிருந்த தளபதி மாத்தயாவிடம் இதைப் பற்றிக் கேட்ட போது "விவசாயிகள் வயலில் இறங்கி வேலை செய்வதைப் பார்த்தால் உடனே ஹெலிகாப்டரில் வந்து சுடுகிறார்கள், எனவே விவசாயிகள் வயல் வேலைகளில் இறங்க அஞ்சுகிறார்கள்" என்று சொன்னார்.

"அப்படியானால் உணவுக்கு என்ன செய்கிறீர்கள்" என்று நான் கேட்டேன்.

"ஊர் ஓரங்களில் உள்ள நிலங்களை மட்டும் ஓரளவுக்குப் பயிர் செய்திருக்கிறார்கள். வீட்டைச் சுற்றிலும், இன்னும் ஊருக்கு அருகிலும் உள்ள நிலங்களில் ஏராளமாக மரவள்ளிக் கிழங்குகளை நட்டு இருக்கிறார்கள். இதை நாங்களே ஊக்கப்படுத்துகிறோம். இவ்வாறு செய்யுமாறு பிரச்சாரம் செய்கிறோம். யாழ்ப்பாணத்திலிருந்து மரவள்ளிக் கிழங்குக் குச்சிகளைக் கொண்டு வந்து ஊர் ஊராக மக்களிடம் விநியோகித்து அவற்றை நடச் செய்திருக்கிறோம். இப்போது எங்கள் மக்களுக்கு உணவளிப்பது மரவள்ளிக் கிழங்குதான்" என்று அவர் சொன்னார்.



இவ்வாறு பேசிக் கொண்டு நாங்கள் சென்ற போது அடர்ந்த காடு ஒன்று குறுக்கிட்டது. அதன் வழியாகப் பகலெல்லாம் பயணம் செய்து இரவு ஏழு மணி சுமாருக்கு 'நெடுங்கேணி'க்கு வந்து சேர்ந்தோம். இரவில் ஒரு நண்பர் வீட்டில் உணவருந்தினோம். அந்த நண்பரும் அவர் வீட்டிலிருந்த பெண்களும் மிகவும் அன்போடு உபசரித்து விருந்தளித்தனர். என்னுடன் வந்த புலிப்படை இளைஞர்களிடம் அந்தப் பெண்கள் காட்டிய சகோதர பாசம் என் உள்ளத்தைத் தொட்டது.

இரவு உணவுக்குப் பின் அந்தக் குடும்பத்தினருடன் பேசிக் கொண்டிருந்தேன். "இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எப்படி நீங்கள் வாழ்கிறீர்கள்? என்று நான் அவர்களிடம் கேட்டேன்.

"ஆரம்ப நாட்களில் எங்களுக்குச் சற்றுப் பயமாகத்தான் இருந்தது. எங்கள் போராளிகள் மீது எங்களுக்குச் சற்றுக் கோபமும் வெறுப்பும் இருந்தது; எங்களுக்காக அவர்கள் போராடுகிறார்கள் என்பதைக் கூட நினைத்துப் பார்க்காமல் எங்கள் சுயநலம் காரணமாக அவர்களைத் தவறாக நினைத்தோம். இவர்கள் இராணுவத்தைத்தாக்குவதனால்தானே இராணுவம் பதிலுக்குப் பொது மக்களைத் தாக்குகிறது என்றுகூட நினைத்ததுண்டு. ஆனால் போகப் போக எங்களுக்கு உண்மை தெளிவாயிற்று. போராளிகள் இல்லையென்று சொன்னால் எங்கள் அத்தனை பேரையும் இராணுவத்தினர் அழித்திருப்பார்கள். போராளிகள் இருப்பதினால்தான் அவர்கள் எங்களை நெருங்குவதற்கு அஞ்சுகிறார்கள். வட மாநிலத்தைப் பொறுத்த வரையில் எங்களுக்குக் காவலாகப் புலிப்படையிருக்கிறது. ஆகவே எங்களை நெருங்க இராணுவம் அஞ்சுகிறது. ஆனால் கிழக்கு மாநிலத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் போராளிகள் பலமாக இல்லாத இடங்களில் சிங்கள இராணுவம் அங்குள்ள தமிழர்களைக் கொல்லுகிறது. பாரம்பரியமாக வாழ்ந்த பூமியிலிருந்து தமிழர்களை விரட்டியடிக்கிறது. இலட்சக்கணக்கான பேர் அங்கிருந்து இடம் பெயர்ந்து வட மாநிலத்தில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். புலிகள் இல்லையென்று சொன்னால் எங்களுக்கும் இந்தக் கதியே ஏற்பட்டிருக்கும். நாங்கள் அத்தனை பேரும் இந்தியாவில் அகதிகளாகப் புகுந்திருப்போம்" என்று அந்தக் குடும்பத் தலைவி கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் "எங்களுடைய பிள்ளைகள் எங்களுக்காகப் போராடுகிறார்கள், உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். ஆகவே இராணுவத்தினால் ஏற்படும் பல்வேறு கொடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைகளை நாங்கள் தாங்கிக் கொள்கிறோம். எங்களால் முடிந்த அளவுக்குப் போராளிகளுக்கு உதவுகிறோம். எங்களுடைய தேவை களைக் குறைத்துக் கொள்கிறோம். எல்லா வகையிலும் எங்களுடைய பிள்ளைகளுக்கு நாங்கள் என்றும் பக்கபலமாக இருப்போம்'' என்று அந்தப் பெண்மணி கூறிய போது என்னுடைய நெஞ்சம் சிலிர்த்தது.

இவ்வாறு சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டு நாங்கள் படுக்கப் போனோம். படுக்கும் போது தளபதி மாத்தயா ஒரு எச்சரிக்கைச் செய்தார். ''அண்ணா! நாம் ஆபத்தான இடத்திலிருக் கிறோம். இங்கிருந்து வடமேற்கே ஏழாவது மைலில் **ஒட்டிசுட்டான்** என்ற இடத்தில் இராணுவ முகாம் உள்ளது. கிழக்கே ஆறாவது மைலில் **ஒதியமலையில்** மற்றொரு இராணுவ முகாம் உள்ளது. இங்கிருந்து எட்டாவது மைலில் **கென்ட்பண்ணை** என்ற இடத்தில் ஒரு இராணுவ முகாம் உள்ளது. மேற்கே பதினைந்தாவது மைலில் **பதவியா** என்ற இடத்தில் ஒரு இராணுவமுகாம் உள்ளன. இப்படி நாலாபுறமும் உள்ள முகாம்களிலிருந்து இராணுவத்தினர் எந்த நிமிடமும் இங்கு வரலாம். எனவே உடனே புறப்படுவதற்குத் தயாராகப் படுங்கள்'' என்று அவர் சொன்னார். நானும் அவ்வாறே படுத்தேன்.

திடீரென நள்ளிரவில் தளபதி மாத்தயா என்னை எழுப்பினார். அந்த இருளில் நாங்கள் புறப்பட்டுச் சென்றோம். அங்கேயிருந்து நடந்தே சில மைல்கள் சென்று மற்றொரு கிராமத்திலிருந்த ஒரு வீட்டில் படுத்தோம். நாங்கள் ஏறிவந்த வாகனங்கள் என்னவாயின என்று நான் யோசித்து வியந்தேன். சுற்றிலும் இராணுவ முகாம்கள் உள்ள பகுதியில் நள்ளிரவில் வாகனங்களில் வருவது ஆபத்தானது என்ற காரணத்தினால் என்னை நடத்தியே கூட்டி வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். ஒவ்வொரு விஷயத்திலும் முன்னெச் சரிக்கையுடன் எப்படிச் செயல் படுகிறார்கள் என்பதைப் பார்த்து நான் வியந்தேன். இரவு ஒரே இடத்தில் தங்கினால் ஒரு வேளை அந்த ரகசியம் வெளியாகி விடக்கூடும். ஆகவே இரவிலேயே வேறு வேறு இடங்களில் மாறிமாறித் தங்கும் தந்திரத்தை அவர்கள் கையாள்வதை **மனத்திற்குள்** நான் பாராட்டிக் கொண்டேனே தவிர அவர்களிடம் எதுவும் கேட்கவில்லை.

நெடுங்கேணியில் நாங்கள் தங்கிய வீட்டை நான் வந்து சென்ற சுமார் ஒரு மாத காலத்தில் இராணுவத்தினர் தாக்கி அழித்து விட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது. நல்ல வேளையாக அந்தக் குடும்பத்



தினருக்குத் தீங்கு எதுவும் நேரவில்லை. இராணுவம் வரவிருக்கும் செய்தி முன்னதாகவே அவர்களுக்குக் கிடைத்துத் தப்பி விட்டார்கள்.

செல்லும் வழியில் பட்டிக் குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜா, திரு. சிவராஜா, திரு. பாக்கியராஜா, திரு. வேலாயுதம் ஆகியவர்களைச் சந்தித்துப் பேசினேன். இவர்களும் மற்றும் ஏராளமானவர்களும் இப்போது ஒரு பள்ளியில் அகதி களாகத் தங்கியிருக்கிறார்கள். அரசு இவர்களுக்கு எந்த உதவியை யும் செய்யவில்லை. இந்தப் பள்ளியின் முதல்வரான **திருச்செல்வம்** என்பவரே இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துவருகிறார். அவருடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தேன். ''இந்தியா இன்னும் எத்தனை நாளைக்கு வேடிக்கை பார்க்கப் போகிறது'' என்று அவர் கேட்டார்

''விரைவில் உதவி செய்யும்'' என்று நான் அவருக்கு ஆறுதல் கூறினேன்.

''மூன்றாண்டுக்காலமாக எங்கள் மக்கள் கொன்று குவிக்கப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நாங்களும் தினமும் செத்துக் கொண்டே யிருக்கிறோம். தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கூறியது போல இந்தியா எங்களுக்கு அனுதாபக் கூட்டம் தான் போடுமா?'' என்று அவர் குரல் தழுதழுக்க என்னிடம் கேட்ட போது என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

இந்தக் கேள்வியை என்னிடம் நேருக்கு நேர் கேட்ட அவர் என் முகத்தை ஊடுருவிப் பார்த்தார். அவர் விழிகளில் ஆச்சரியம் தென்பட்டது, திடீரென்று அவர் எனது கைகளைப் பிடித்துக் கொண்டு ''நீங்கள் நெடுமாறன் தானே'' என்று கேட்டார். ஆம்! என்றும் சொல்லாமல், இல்லையென்றும் மறுக்காமல் நான் புன்னகை செய்தேன். ஆனால் அவர் எனது கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடிக்கத் தொடங்கி விட்டார். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்'' என்பது போல அவருடைய அன்பு தங்கு தடை இல்லாமல் பெருக்கெடுத்து ஓடிற்று.

**1983**-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நான் மேற்கொண்ட தியாகப் பயணம் அது தமிழீழ மக்களுக்கு எவ்வளவு நம்பிக்கையை ஊட்டியது என்பது பற்றியும் சிங்களவர்களுக்கு எவ்வளவு நடுக்கத்தை ஏற்படுத்தியது என்பது பற்றியும் விரிவாகக் கூறினார்.

அந்த முகாமிலிருந்த அகதிகளுக்கு ஆறுதல் கூறினேன். அங் கிருந்த ஒரு தாய் தனது ஏழு வயதுப் பையனை என்னிடம் கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்து காட்டினார். சந்திரமோகன் என்ற அந்தச் சிறுவனின் வலது கண் வெந்து போய் இருந்தது. திடுக்கிட்டுப் போன நான் என்ன வென்று கேட்ட போது, அவன் கண்ணில் சுண்ணாம்பு பட்டுவிட்ட தாகவும், அதற்கு மருந்து போடாததால் இப்படியாகி விட்டதாகவும் அந்தத் தாய் சொன்னார். எவ்வளவு **நிர்க்கதியான** நிலையில் நம்முடைய குழந்தைகள் அங்கு இருக்கின்றனர் என்பதைப்பார்த்த போது எனக்கு வருத்தமாக இருந்தது.

அந்தப் பகுதியிலுள்ள காட்டுப் பூவரசன் குளம், கஞ்சிரா மட்டை, நாவலர் பண்ணை, வெடிவைத்த பண்ணை போன்ற பல கிராமங் களுக்கு நாங்கள் சென்றோம். அந்தக் கிராமங்களில் ஒரு விஷயம் எனக்குப்புதிராகப் பட்டது. கிராம மக்களோடு பேசும் போது உரக்கப் பேசினால் அவர்கள் பயப்படுகிறார்கள். மெதுவாகப் பேசினால் நம்பிக்கையோடு நெருங்கி வந்து பேசுகிறார்கள். கிராம மக்களோடு புலிகள் ஒன்றிப் பழகி இரண்டறக்கலந்து இருப்பதை நான் பார்த்தேன்

அதைப் பற்றி அந்தக் கிராம மக்களிடமே நான் கேட்டேன். புலிகளோடு இவ்வளவு நெருங்கிப் பழகுவதற்கு என்ன காரணம்'' என்று அந்த மக்களைக் கேட்ட போது அவர்கள் எவ்விதத்தயக்கமும் இல்லாமல் உடனடியாகப் பதில் சொன்னார்கள். **''சம்பலும், சோறும் கொடுத்தாலும் இவர்கள் அன்போடு சாப்பிடுகிறார்கள். மற்றவர்கள் அப்படியல்ல, எனவேதான் இவர்களை நாங்கள் நம்புகிறோம்'' என்றார்கள்.**

தேங்காயும் மிளகாய் வற்றலும் உப்பும் வைத்து அரைக்கப் பட்ட சட்னிக்குச்சம்பல் என்று பெயர். தமிழீழத்தில் உள்ள ஏழை மக்களின் உணவு சம்பலும் சோறுமாகும். ஏழை மக்கள் கொடுக்கும் எளிய உணவையும் புலிகள் அன்போடு வாங்கி உண்பதால் சாதாரண மக்கள் மத்தியில் புலிகளைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் உருவாகி யுள்ளது. நாங்கள் இருந்த பகுதி எந்நேரமும் இராணுவம், **ஊர்க்காவல்** படை, விமானப் படை சுற்றித் திரியும் பகுதி என்பதால் சீக்கிரம் புறப் பட வேண்டுமென்று தளபதி மாத்தயா கூறினார். அதற்கிணங்க நாங்களும் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டோம். சிறிது தூரம் சென்ற பிற்பாடு முன்னால் சென்ற தோழர்களிடமிருந்து 'சற்றுத்தாமதிக் கும்படி' செய்தி வந்தது.

அதற்கிணங்க அங்கிருந்த மரத்தின் நிழலில் நின்று சற்று நேரம் தாமதித்தோம். முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலி சபா மீண்டும் அவசரச் செய்தி ஒன்றினை அனுப்பினார். சிங்கள ஊர்க்காவல் படையைச் சேர்ந்த சுமார் 30 பேர்



வந்து கொண்டிருப்பதாகவும் அவர்களை எதிர்த்துப் போராட உதவிக்குச்சில பேர்களை அனுப்பி வைக்கும்படியும் அந்தச் செய்தி கூறியது. எங்களுடன் லாரியில் வந்த 10 வீரர்களைத்தளபதி மாத்தயா உடனே விரைவாக அனுப்பி வைத்தார். சற்றுத் தொலைவில் துப்பாக்கிகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. அரைமணி நேரத் திற்கு இந்தச்சண்டை நடந்தது. அதற்குப் பிறகு தொடர்ந்து முன் னேறி வரும்படி எங்களுக்குச் சபா செய்தி அனுப்பினார். நாங்கள் தொடர்ந்து முன்னேறினோம். சுமார் 2 மைலுக்கு அப்பால் சபாவும் மற்றத்தோழர்களும் வெற்றிக் களிப்போடு காட்சி தந்தார்கள்.

அளவிட முடியாத பரபரப்போடு அவர்களை அணுகி என்ன நடந்தது என்று கேட்டேன்.

சிங்கள ஊர்க்காவல் படையினர் திரண்டு **வந்ததாகவும்** அவர் களுடன் போராடி அவர்களை விரட்டி அடித்ததாகவும் சபா சொன்ன போது ''உங்கள் போராட்டத்தைக் காணக் கிடைத்த அருமையான வாய்ப்பைத் தவற விட்டு விட்டேனே'' என்று நான் **சொன்னதற்குச்** சபா சொன்னார்; ''அண்ணா! உங்களை அபாயத்திற்கு உள்ளாக்க நாங்கள் விரும்பவில்லை. எதிரிகளை விரட்டியடித்து இனி அபாய மில்லை என்று தெரிந்த பிறகு தான் எந்த இடத்திற்கும் உங்களை அழைத்துப் போக வேண்டும் என்பது எங்கள் தலைவரால் எங்களுக்கு பிறப்பிக்கப் பட்டிருக்கும் கட்டளை யாகும் என்றார்.

பகைவரைப்புறமுதுகிட்டு ஓடும்படிச்செய்த அந்த வீரத் திருமுகத்தை மறுமுறையும் பார்த்தேன். ''தம்பி உடையான் படைக்கு அஞ்சான்'' என்பது பழமொழி. **''தம்பி பிரபாகரனின் படை யுடையான் எந்தப் படைக்கும் அஞ்சான்'' என்பது புதியமொழி**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 24. கல்லூரி ஆசிரியையின் கதை

இங்குள்ள காடுகளில் வழி காட்டுவதற்காகக் கிராமப்புற இளைஞர்களைக் கொண்ட விசேஷப் படைப் பிரிவு ஒன்றினைப்புலிகள் அமைத்து உள்ளனர். அத்தகைய கிராமப்புற இளைஞர்களில் சிலரை நான் பார்த்தேன். அவர்களுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் எத்தகையவர்கள் என்பதை விளக்க தளபதி மாத்தயா ஒன்றைச் சொன்னார். ''இவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள். நல்ல உடல் வலிமை படைத்தவர்கள். காடுகளில் எந்த மிருகத்திற்கும் பயப்பட மாட்டார்கள். வேல் கம்பு, அரிவாள் போன்ற ஆயுதங்களின் உதவி கொண்டே புலி, கரடி போன்ற கொடிய மிருகங்களுடன் போராடும் துணிவு இவர்களுக்கு உண்டு. கொடிய மிருகமான ''காட்டுப்பன்றி''யை ஓடஓட விரட்டி அதனுடைய பின்னங் கால்களைப் பிடித்துத் தூக்கித்தரையில் அடித்துக் கொல்வது இவர்களின் பொழுது போக்காகும்'' என்றார். கள்ளம் கபடமற்ற அந்த இளைஞர்களில் உரம் ஏறிய உடம்புகள் மாத்தயாவின் கூற்றுக்குச் சாட்சியம் கூறின. கிராமப் புறத்திலுள்ள இந்த இளைஞர்களுக்கும் தேச பக்தி உணர்வையூட்டி அவர்களையும் விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் ஈடுபடுத்தியுள்ளது பாராட்டத் தக்கதாகும்.

செல்லும் வழியில் வவுனியா மாவட்டத்திலுள்ள **''பட்டிக்குடியிருப்பு''** என்ற கிராமத்திற்குப்போனேன். அந்தக் கிராமத்தில் மனித நடமாட்டமேயில்லை. ஒன்றரை ஆண்டுக்காலத்திற்கு முன்பு சிங்கள இராணுவம் உள்ளே புகுந்து இரண்டு பேரைச் சுட்டுக் கொன்றது. அதைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தில் வாழ்ந்த 110 குடும்பங்களும் வெளியேறி விட்டன. இந்தக்கிராமத்தைச் சேர்ந்த மக்களைத் தான் சற்று முன்பாக அகதிகள் முகாமில் சந்தித்துவிட்டு வந்தோம். இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட இங்கு இராணுவம் வந்து போனதாகச் சொன்னார்கள். அந்தக் கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவில், வீரபத்திரன் கோவில் ஆகியவை சேதமான நிலையில் கிடக்கின்றன. கிராமத்துப் பள்ளி காலியாகக் கிடந்தது. 1956-ஆம் ஆண்டில் இந்தப் பள்ளி கட்டப் பட்டது என்பதற்கான அடிக்கல்லை நான் பார்த்தேன்.

கிராமத்திலிருந்த கூட்டுறவுக்கடை எரிந்து நாசமாகிக்கிடந்தது. இந்தக் கடையின் மேலாளராக இருந்த **பாலசிங்கம்** என்பவரை இராணுவம் சுட்டுக் கொன்றதாகவும் கூறினார்கள். கிராமத்திலுள்ள வீடுகளில் இராணுவத்தினர் கொள்ளை அடித்தார்களாம். வீட்டைச் சுற்றியிருந்த வேலிக் கம்பிகளைக் கூட இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. வெறிச் சோடிக் கிடந்த அந்தக் கிராமத்தை நான் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது அவசர செய்தி ஒன்று வந்தது. **நாலு ஜீப்புகளில் இராணுவம் வருவதாக அந்தத் தகவல் கூறியது. உடனே நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம்.**

திரிகோணமலை மாவட்டத்திலிருந்து அகதிகளாக **வந்திருந்த** பல்லாயிரக் கணக்கான பேரை முல்லைத் தீவிலுள்ள பல முகாம்களில் சந்தித்தேன். திரிகோண மலையிலிருந்து 30 மைல் **தொலைவிலுள்ள திரியாய்** கிராமம் மிகவும் பாதிக்கப்பட்ட கிராமம். அக்கிராமத்திலிருந்து **வந்திருந்த** சுமார் இரண்டாயிரம் அகதிகளை நான் சந்தித்தேன். அவர்களின் நிலை மிகவும் மோசமாக **இருந்தது**. அவர்கள் சொன்ன செய்திகள் திடுக்கிடும் செய்திகளாகும். **திரியாய்** கிராமத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு பலரை இராணுவம் சுட்டுக் கொன்றது. தரை வழியாகத்தப்பிக்க முயன்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடல் வழியாகத் தப்பிச் செல்ல முயன்றவர்களின் படகுகள் பீரங்கிகளால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப் பட்டன. எனவே காடுகளில் மறைந்திருந்து பல கஷ்டங்களுக்கிடையே இவர்களெல்லாம் தப்பி வந்திருப்பதாகத் தெரிவித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள **தண்ணீர் ஊற்று** என்னும் கிராமத்தில் இவர்கள் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள்.

திரியாயிக்கு அருகேயுள்ள **கொக்குத்தொடுவாய்** என்னும் கிராமத்திலிருந்து பல நூற்றுக் கணக்கானோர் அகதிகளாக வந்திருக்கின்றனர். இந்தக்கிராமத்தைச்சிங்கள இராணுவம் சுற்றி வளைத்துக் கொண்டு 24 மணி நேரத்தில் வெளியேறும்படி உத்தரவு போட்டதாம். மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கும் போதே பலரைச் சுட்டுக் கொன்றார்கள். செத்தவர்களின் கணக்கு யாருக்கும் தெரியாது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடும்பங்கள் சிதறி விட்டன. ஒவ்வொரு குடும்பத்திலும் யார் உயிருடன் இருக்கிறார்கள், யார் செத்து விட்டார்கள் என்பது யாருக்கும் தெரியாது. உயிருடன் தப்பி வந்தவர்கள் அரசாங்க அகதி முகாம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இந்த முகாமிலிருந்தவர்களுக்கு வெறும் பூசனிக்காய் மட்டுமே சில நாட்களுக்கு உணவாகத் தரப்பட்டதாம். இதன் விளைவாக 200 பேருக்கு மேல் அந்த முகாமில் செத்துப் போனார்கள். திரியாயி, கொக்குத் தொடுவாய் போன்ற பல தமிழ்க் கிராமங்கள் அடியோடு நாசம் செய்யப் பட்டுவிட்டன.

இந்த அகதிகளுக்கு நடுவே சற்றுப்படித்தவராகக் காணப்பட்ட ஒரு பெண்மணியைப் பார்த்தேன். அவரை அழைத்துப்பேசினேன். ருக்மணி என்ற அந்தப் பெண்மணி கல்லூரி ஆசிரியையாக வேலை பார்த்துவந்தவர். அவருடைய கணவர் ஒரு விவசாயி. அமைதியான வாழ்வு நடத்திய ருக்மணி வாழ்வில் இடி விழுந்தது. சிங்கள இராணுவத்தின் வெறிச் செயலுக்கு அவருடைய கணவர் பலியானார். வயது வந்த புதல்விகளுடன் உயிர் தப்பிய கதையை அவர் விவரிக்கும் போது அழுதே விட்டார். 1984-ம் ஆண்டு மார்கழி மாதம் முதல் ஆனி மாதம் வரை சுமார் 5 மாதங்களாகத் திரியாயி கிராமத்தை சிங்கள இராணுவம் இடைவிடாது தாக்கியதாம். ஹெலிகாப்டரிலும் பறந்து வந்து சுட்டார்களாம். அங்கு வாழ்ந்த தமிழர்கள் முற்றிலுமாக வெளியேறும் வரை இராணுவம் ஓயவில்லை. 18 நாட்கள் அடர்ந்த காடுகளின் வழியாக நடந்து பிறகு அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்ததாக அவர்கள் சொன்னார்கள். அகதிகள் முகாமைத் சுடற்படை தாக்கியதன் விளைவாக 12 பேர் இறந்து போனதாகவும் அவர் கூறினார். பிறகு மறுபடியும் காட்டுக்குள் ஓடி இரண்டு மாதகாலம் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்ந்தார்களாம். "சிங்கள வெறியர்களுக்கும் காட்டு மிருகங்களுக்கும் அஞ்சி அஞ்சி இரண்டு மாத காலம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காட்டில் கிடந்தோம். காட்டில் கிடைக்கக் கூடிய பழங்கள், காய்கள், கிழங்குகள் போன்றவற்றை உண்டு எப்படி உயிர் வாழ்ந்தோம் என்பது எங்களுக்கே தெரியாது. நல்ல வேளையாகப் புலிப்படை இளைஞர்கள் எங்களைத் தேடி வந்து கண்டு பிடித்து அபயம் அளித்தனர். அங்கிருந்து அவர்கள் உதவியால் உயிர் தப்பி இங்கு வந்து சேர்ந்தோம்" என்று அவர் கண்ணீர் மல்கக் கூறினார்.

விவசாயத்திற்கும் மீன் பிடிப்பதற்கும் சிறந்த இடம் திரியாயி கிராமம். எனவே அங்கு வாழ்ந்த தமிழர்களை அடியோடு விரட்டி விட்டு இப்போது சிங்களவர்களைக் குடியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



சிங்கள இராணுவம் தன்வசமாக்கிக் கொண்ட தமிழ்க் கிராமங்களின் பெயர்களெல்லாம். சிங்களப் பெயர்களாக்கப்பட்டு விட்டன. இந்த சோகக் கதையெல்லாம் சொல்லி அழுத ருக்மணி இறுதியாக நெஞ்சு வெடிக்கும் செய்தி ஒன்றையும் சொன்னார். விடுதலைப்புலி இளைஞர்கள் நான்கு பேர்களின் தந்தைமாரை எப்படியோ அடையாளம் கண்டு கொண்ட சிங்கள இராணுவத்தினர் அவர்களைப் பிடித்துத் தங்கள் கண் முன்னாலேயே படுகொலை செய்ததாக அவர் கூறினார். "எங்களைச் சுட்டாலும் பரவாயில்லை, எங்கள் நாட்டையும், எங்களையும் காக்கப் போராடும் வீரர்களின் குடும்பங்களைக் கருவறுப்பதைப் பார்த்துத்தான் நாங்கள் சொல்ல முடியாத வேதனையடைந்திருக்கிறோம்" என்று அவர் சொன்னார்.

ஓமத்தை என்னும் ஊரிலுள்ள நலன்புரி நிலையத்தில் சுமார் 800-க்கு மேற்பட்ட அகதிகள் தங்கியிருக்கிறார்கள். அனுராதபுரம், மன்னார், தச்சன்குளம், வாசிகுளம் போன்ற ஊர்களிலிருந்து வெளியேறி வந்தவர்கள் இந்த அகதிகளாவர். இவர்களுக்கு அரசாங்க உதவி எதுவுமில்லை. இப்பகுதியிலுள்ள மக்கள் உதவியால் வாரத்திற்கு மூன்று நாளைக்கு மட்டுமே உணவு கிடைக்கிறது. எனவே இவர்கள் அரைப்பட்டினியாகக் கிடக்கிறார்கள்.

இந்த முகாமில் திருமதி **ராஜேஸ்வரி** என்ற பெண்மணியைச் சந்தித்தேன். இராணுவத்தினரிடமிருந்து தப்பி அவர்கள் ஓடியபோது வழியில் இராணுவ முகாம் ஒன்றைப் பார்த்தார்கள். தம்முடைய குடும்பத்தினர்களையும் தம்முடன் உயிர் தப்பி ஓடிவந்தவர்களையும் தொலைவில் நிற்க வைத்து விட்டு "இராணுவத் தளபதியிடம் முறையிட்டு அனைவரின் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்து வருகிறேன்" என்று சொல்லி விட்டு இராணுவ முகாமுக்குள் ராஜேஸ்வரியின் கணவர் போனார், பிறகு அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இரவு முழுவதும் தனது கணவனை எதிர்பார்த்து அவள் காத்திருந்தாள். காலையில் அவளுடைய கணவரின் பிணம் இராணுவ முகாமுக்கு வெளியே வீசி எறியப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். சிங்கள இராணுவ வெறியர்கள் எவ்வளவு ஈவு இரக்கம் அற்றவர்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக் காட்டாகும்.

புத்திபேதலித்த நிலையிலிருந்த திருமதி **வசந்தா** என்ற ஒரு பெண்மணியை இந்த முகாமில் பார்த்தேன். வசந்தாவின் கதை சோககரமானது. அவளுடைய கணவனை அவளுக்கு முன்னாலேயே கழுத்தை அறுத்துப் படுகொலை செய்தார்கள். அவளுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சின்னஞ்சிறிய குழந்தையை மடக் எனக்கழுத்தை முறித்துக் கொலை செய்து வீசினார்கள். இந்த இரண்டு நிகழ்ச்சியையும் நேரில் பார்த்த வசந்தாவின் சித்தம் குழம்பிவிட்டது. இன்னும் தெளியாத நிலையில் வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் நடைபிணமாக அவள் வாழ்ந்து வருவதைப் பார்த்த போது எனது நெஞ்சம் கலங்கிற்று.

**பம்பைமடு** கிராமத்தைச் சேர்ந்தவரும் அந்த வட்டாரத்தின் பிரமுகருமான **பிச்சை** என்பவரையும் அகதிகள் முகாமில் பார்த்தேன். அவர் மேலும் பல முக்கிய விவரங்களைத் தெரிவித்தார்: வவுனியாவில் விமானப் படைத்தளம் அமைக்கச்சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது. வவுனியா நகரை ஒட்டியும், சற்றுத்தள்ளியும் ஏராளமான நிலம் இருந்தும் வேண்டுமென்றே வவுனியா நகருக்குள் விமானத்தளத்தை அமைக்கச்சிங்கள அரசு முயலுகிறது. வவுனியா நகருக்குள் முக்கிய பகுதிகளை உள்ளடக்கிய ஓர் இடத்தைத்தேர்ந்தெடுத்து, அதில் விமானதளம் அமைக்கப் போவதாக அரசு அறிவித்திருக்கிறது. சுமார் 600 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தப் பகுதியில் 18 அரிசி ஆலைகள் உள்ளன. ஒவ்வொரு ஆலையும் 50 இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாய் வரை மதிப்புள்ளது இதுபோலத்தொழிலிடங்கள் பல உள்ளன. பிரமாண்டமான ரொட்டி சுடும் பேக்கரிகள் நாலு, 200 கடைகள், மரத் தொழிற்சாலைகள் ஆகியவை இப்பகுதிக்குள் அடங்கியுள்ளன. இந்துக் கோவில்கள் இரண்டும், கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் இப்பகுதியில் உள்ளன. இவை தவிரச்சிறிதும் பெரிதுமான 600 வீடுகளும் உள்ளன. இதையொட்டி 150 ஏக்கர் விவசாய பண்ணைகளும் உள்ளன. மொத்தம் ரூபாய் 100 கோடிக்கு மேல் பெறுமானம் உள்ள சொத்துக்கள் இப்பகுதியில் இருக்கின்றன. இந்தப் பகுதியை முற்றிலும் இடித்துத்தரைமட்டமாக்கி அதில் விமானதளம் அமைக்க அரசு உத்தேசித் திருக்கிறது. எந்த நாகரிக நாட்டிலும் இதுபோன்ற பைத்தியக்காரத்தனமான திட்டம் அமல் செய்யப்பட்டதில்லை. வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் இதுபோன்ற முட்டாள்தனமான திட்டம் கொண்டு வரப்படுமேயானால் அதை எதிர்த்து உச்சநீதி மன்றம் வரை போய் வாதாடி இத்தகைய திட்டத்தை செல்லாத திட்டமாக ஆக்கி இருப்பார்கள். ஆனால் இலங்கையில் இராணுவம் எதைச் செய்தாலும் அதை எதிர்த்து எந்த நீதி மன்றத்திற்கும் யாரும் போக முடியாது. எனவே 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்தச்சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு வெளியேற வேண்டிய நிலைமைக்குத்தமிழர்கள் ஆளாக்கப்பட்டு விட்டார்கள்."



"அப்பாவி பொது மக்களைச் சுட்டுத் தள்ளி விட்டு அவர்களைப் பயங்கரவாதிகள் என்று சிங்கள அரசு பட்டம் சூட்டுவதைப்பற்றியும் அவர் அம்பலப் படுத்தினார். பொது மக்களை இராணுவம் சுட்டுத் தள்ளிய பிறகு அவர்களின் உடல்களைப் பெறுவதற்கு உறவினர் போனால் இறந்தவர்கள் பயங்கரவாதிகள் என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டுக்கொடுத்தால் மட்டுமே பிணங்களைத் தருகிறார்கள். இல்லையென்றால் மறைத்து விடுகிறார்கள். இப்படி மிரட்டி வாங்கப் படும் கடிதங்களைக்**காட்டிச் சுட்டுக்கொல்லப்படுபவர்களையெல்லாம்** பயங்கரவாதிகளாக உலகத்தின் கண்முன்னால் சிங்கள அரசுகாட்டுகிறது" என்று திரு. பிச்சை கூறினார்.


அங்கேயிருந்த மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு நாங்கள் புறப்பட்டோம். இருட்டு வேளையில் வவுனியா-யாழ்ப்பாணம்-கொழும்பு நெடுஞ்சாலைக்கு வந்து சேர்ந்தோம். எப்போதும் இராணுவ நடமாட்டம் உள்ள சாலை அது. எனவே எந்த நிமிடமும் இராணுவமோ அவர்களின் வாகனங்களோ வரலாம். எனவே மின்னல் வேகத்தில் எங்கள் வாகனங்கள் பறந்தன. எங்கள் வாகனங்களிலிருந்த தோழர்கள் அனைவரும் ஆயுதங்களைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டு எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருந்தனர். எந்த நிமிடம் என்ன நடக்குமோ என்ற நிலையில் நாங்கள் பயணம் செய்தது மயிர்க் கூச்செறியும் அனுபவமாக இருந்தது. வவுனியா நகரை நாங்கள் நெருங்கிய போது மீண்டும் பிரதான சாலையிலிருந்து விலகிக்காட்டுப் பாதையில் சென்று **பம்பைமடு** என்ற கிராமத்தை அடைந்தோம். அன்று இரவு அங்குத்தங்கினோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 25. சிங்களர் குடியிருப்பில்

காலையில் நாங்கள் புறப்படும் போதே அன்றையச் சுற்றுப் பயணத் திட்டத்தைத்தளபதி மாத்தையா விவரித்தார். "நாம் இப்போது எல்லையோரப் பகுதிகளுக்குச் செல்கிறோம். அங்குள்ள சிங்களக் குடியிருப்புகளைப்பார்க்கிறோம்" என்றார்.

சிங்களக் குடியிருப்புகளையா! என நான் ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆம்! தமிழர்கள் வாழ்ந்த கிராமங்களிலிருந்து அவர்கள் விரட்டியடித்து விட்டு அரசாங்கமே வீடுகளைக் க்ட்டி ஏராளமான பொருட் செலவில் பள்ளிக்கூடம், புத்தர் கோவில் போன்றவைகளையெல்லாம் எழுப்பிச்சிங்களவர்களைக் குடியேற்றி வைத்தது. பிரதமர் பிரேமதாசாவே வந்து அதைத் திறந்து வைத்தார். தமிழீழப்ப குதிகளில் சிங்களவர்களை எப்படித் திட்டமிட்டு குடியேற்றியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நேரில் தெரிந்து கொள்வதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்" என்று சொன்னார். பிறகு "அண்ணா! நமது பயண முறையில் சிறிது மாற்றம். இது எல்லையோரப் பகுதி. திறந்த வெளிகள் அதிகம். எனவே ஜீப்பிலோ, வாகனங்களிலோ செல்வது ஆபத்தானது. எனவே மோட்டார் சைக்கிளில் நீங்கள் செல்ல வேண்டி இருக்கும்" என்று அவர் சொன்னார். அதன்படி என்னை ஒரு மோட்டார் சைக்கிளின் பின்னால் உட்கார வைத்தார்கள் இன்னொரு மோட்டார் சைக்கிளில் இன்னும் இரண்டு பேர் ஏறிக் கொண்டார்கள். என்னைத் தவிர மற்றவர்களிடம் இயந்திரத் துப்பாக்கிகள் இருந்தன. தளபதி மாத்தையாவிடமும் மற்றவர்களிடமும் விடை



பெற்றுக் கொண்டு நாங்கள் புறப்பட்டோம். எனது மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் **இன்ஜினியர்** என அழைக்கப்படும் நண்பர். ஜீப், வேன் மற்றும் புலிப்படை வாகனங்கள் அனைத்துக்கும் அவர் தான் இன்ஜினியர். இன்னொரு மோட்டார் சைக்கிளில் **காசி** என்பவரும் **அர்ச்சனா** என்பவரும் சென்றார்கள். காட்டுப் பாதை வழியாகப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு மோட்டார் சைக்கிள்கள் சென்றன. தமிழ்நாட்டில் கூட எனக்குக் கிடைக்காத இந்த மோட்டார் சைக்கிள் சவாரி சுகத்தை நான் உற்சாகமாக அனுபவித்தேன்.

காட்டுப் பாதையிலிருந்து பிரதான சாலை ஒன்றை நாங்கள் அடைந்தோம். இது மன்னார்-வவுனியா நெடுஞ்சாலை என இன்ஜினியர் சொன்னார். அந்தச் சாலையில் **பம்பைமடு** சந்திப்பில் ஒரு பிள்ளையார் கோவிலைப் பார்த்தேன். முழுவதுமாக சேதமடைந்து கிடந்தது. அருகில் சென்று பாரத்தேன். மூலவிக்ரகத்தைத் தவிர பாக்கி உள்ள கோவில் முழுவதுமே இடிக்கப்பட்டும் தகர்க்கப்பட்டும் கிடந்தன. அதைச் சுற்றிப் பார்த்து விட்டு மீண்டும் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். மறுபடியும் நெடுஞ் சாலையிலிருந்து பிரிந்து காட்டுப் பாதையில் சென்றோம். எதிரில் இரட்டை மாட்டு வண்டிகளிலும் டிராக்டர்களிலும் தட்டு முட்டுச் சாமான்களை ஏற்றிக்கொண்டு சாரிசாரியாக மக்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். அவர்களை நிறுத்தி என்னவென்று கேட்டபோது செட்டிக்குளம் பகுதியிலிருந்து வெளியேறுவதாக இவர்கள் சொன்னார்கள். இராணுவத்தின் அட்டகாசம் தாங்க முடியாததால் வெளியேறிக்கிளிநொச்சி செல்வதாக இவர்கள் தெரிவித்தார்கள். வண்டிகளுக்கு மேலிருந்து மிரளும் பார்வையுடன் எட்டிப் பார்த்த குழந்தைகளுக்கு நாங்கள் கொண்டு போயிருந்த பிஸ்கெட் பாக்கெட்டுகளை கொடுத்து விட்டு எங்கள் பயணத்தைத்தொடர்ந்தோம். பாரம்பரியமாக வாழ்ந்த கிராமங்களை விட்டுவிட்டுத்தமிழர்கள் சாரைசாரையாக வெளியேறும் பரிதாபக் காட்சி என் மனதை உலுக்கி விட்டது. **இவ்வளவுக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் அமலில் இருக்கும் போதே தமிழர்கள் அகதிகளாக வெளியேறும் நிலை இருக்குமானால் போர் நிறுத்த ஒப்பந்தம் வருவதற்கு முன் நிலைமை எவ்வாறு இருந்திருக்குமென்று எண்ணிப் பார்த்தேன்.**

இந்தியா, பாகிஸ்தான் பிரிந்த வேளையில் அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் ஆயிரக்கணக்கான அகதிகள் சாரைசாரையாக சென்ற காட்சிகளைத்திரைப் படங்களில் பார்த்திருக்கிறேன். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது நேரில் காண வாய்ப்புக்கிடைத்த போது என் நெஞ்சம் கலங்கியது. பரம்பரை பரம்பரையாக வேரூன்றி வாழ்ந்த மண்ணிலிருந்து குடிபெயர்ந்து எதிர்காலம் என்ன வென்ற கேள்விக் குறியுடன் குழந்தை குட்டிகளுடன் பயணமாகிக்கொண்டிருந்த அந்த மக்களின் நிலையை நினைத்து வருந்தினேன்

தொலை தூரத்தில் ஸ்தூபி ஒன்றும் வளைவு ஒன்றும் தெரிந்தன. ''அண்ணா! சிங்களக்கிராமத்தை நெருங்கிவிட்டோம் என்றார் இன்ஜினியர். சிறிது நேரத்திற்குள் அந்த வளைவை அடைந்தோம். அந்த வளைவில் சிங்களத்தில் ஏதோ எழுதப்பட்டு இருந்தது. என்னவென்று கேட்டபோது அர்ச்சனா பதில் சொன்னார். **ரணதத்கம** என இந்த ஊரின் பெயர் எழுதப் பட்டிருக்கிறது என்றார். **வரரிக்குட்டியூர்** என அழைக்கப்பட்ட தமிழ்க் கிராமத்தின் பெயரை மாற்றி விட்டனர். இந்த வளைவுக்கு அருகில் சிறு குன்று போல உயர்ந்து நின்ற ஒரு மேட்டின் உச்சியில் ஸ்தூபி ஒன்று எழுப்பப் பட்டிருந்தது. அந்த மேட்டின் மேல் ஏறிச்சுற்றும் முற்றும் பார்த்தேன். வரிசை வரிசையாக வீடுகள் கட்டப் பட்டிருந்தன. எல்லாம் புத்தம் புதிய வீடுகள். சுமார் 300 குடியிருப்புகள் எழுப்பப்பட்டிருந்தன. இந்த வீடுகளில் ஒரு மாதம் முன்புவரை சிங்களவர்கள் குடியிருந்தார்களாம். சுற்றிலும் உள்ள கிராமங்களில் வாழ்ந்த தமிழர்களை விரட்டியடித்து அவர்களின் நிலங்களைப்பறித்துச் சொத்துக்களைக் கொள்ளையடித்து வாழ்வதே இவர்களுக்கு தொழிலாகும் அவர்களுக்குப்பக்கபலமாகச்சிங்கள இராணுவம் இருந்தது. சிங்களக் குடியிருப்புகளை நாங்கள் பார்வையிட்டோம். சிமெண்டினால் கட்டப்பட்டு ஓடுவேயப் பட்ட அந்த வீடுகள் பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் வீட்டுத் தோட்டம் அமைத்துக் கொள்ள ஏராளமான இடமும் இருந்தது. ஊருக்கு அருகில் சிங்களக் குழந்தைகளுக்காகப் பெரிய பள்ளிக் கூடம் ஒன்றும் அதன் அருகிலேயே புத்தர் கோவில் ஒன்றும் கட்டப்பட்டிருந்தன. ஒரு மாஞ்சோலையைக் கைப்பற்றி அதற்கு நடுவே புத்தர் கோவிலைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்குள் நாங்கள் நுழைந்தபோது ஆள் நடமாட்டமேயில்லை. கோவிலைச் சுற்றியுள்ள பூமி எங்கும் மாம்பழங்கள் சிதறிக்கிடந்தன. பறிப்பதற்கு ஆள் இல்லாத காரணத்தினால் அணில்களும் பறவைகளும் மாம்பழங்களை கொத்திக்கீழே விழவைத்திருந்தன. மரத்திலும் ஏராளமான காய்களும் பழங்களும் தொங்கின. என்னுடன் வந்தவர்கள் பழங்களைப்பறித்தார்கள். எனக்கும் ஒன்று கொடுத்தார்கள். பிறகு அந்தக் கோவிலுக்குள் நுழைந்தோம். அழகான கோவில், உள்ளே



பிரம்மாண்டமான புத்தர் சிலை உட்கார்ந்த நிலையில் அமைக்கப் பட்டிருந்தது. அரைப் பனை உயரமானது அந்தச்சிலை. சிலையின் முன்னே பூசை செய்வதற்குரிய பாத்திரங்கள் சிதறிக் கிடந்தன. அவற்றை எடுத்துச்சிலைக்கு முன்னால் இருந்த மேடையில் ஒழுங்காக வைத்தோம்.

என் கையிலிருந்த மாம்பழத்தைப்புத்தர் பகவானின் மலரடியில் வைத்து இரு கை கூப்பித்தொழுதேன். ''புத்த பெருமானே! தமிழ் நாட்டிலிருந்து புத்தத் துறவிகள் இலங்கைத்தீவுக்கு வந்து புத்த மதத்தைப் பரப்பிய காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று உங்களுடைய சீடர்கள் என்று சொல்லிக் கொள்கிற சிங்களவர்கள் நீங்கள் போதித்த தர்மங்களை மறந்து தமிழர்களை வேட்டையாடுகிறார்கள். அவர்களின் வெறித்தனம் நீங்கப் புத்த பெருமானே அருள் பாலிப்பீராக' என வேண்டிக் கொண்டேன்.

**புத்தபெருமானின் கருணை தவழும் அந்த முகத்தைப்பார்த்த போது சிங்களவரின் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டு புத்த பெருமானால் எப்படி மௌனம் சாதிக்க முடிகிறது என்று எனக்குத் தோன்றிற்று.** பிறகு கோவிலைச் சுற்றிப் பார்த்தோம். அருகேயுள்ள வீடுகளையும் பார்த்தோம். போட்டது போட்டபடி போட்டு விட்டு அவர்கள் ஓடியிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. தமிழர்கள் கிராமங்களில் அவர்களை விரட்டிவிட்டுக்குடியேறிய சிங்களவர்களையும் அவர்களுக்கு உதவியாக வந்த இராணுவத்தையும் புலிப் படையினர் விரட்டியடித்து இருக்கிறார்கள். தவிர அந்த மக்களுக்கு எவ்வித கொடுமைகளையும் செய்யவில்லை. சிங்கள இராணுவத்திடம் சிக்கிய தமிழர்களும் அவர்களின் கோவில்களும் தேவாலயங்களும் என்ன கதி அடைந்திருக்கின்றன என்பதைப்பல இடங்களில் நேரில் பார்த்த நான் இந்தப்புத்தர் சிலைக்கோ கோவிலுக்கோ எவ்விதச் சேதமும் இல்லாததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். **புலிப் படையினரின் இந்த உயர்ந்த பண்பாடு தமிழர்களுக்கே உரிய சீரிய பண்பாடாகும். அதை நிலைநிறுத்திய புலிகளுக்கு அவர்கள் மண்ணிலேயே நின்று வணக்கம் தெரிவித்தேன்.**

அந்தக் கோவிலுக்குள் இருந்து வெளியே வந்தபோது பொட்டு சொன்னார். '' அண்ணா! இது போன்ற பல சிங்களக் கிராமங்களை தமிழீழ மண்ணில் உருவாக்கி யிருக்கிறார்கள். அதை அவர்கள் திட்டமிட்டே செய்கிறார்கள். தமிழ் மக்களது பாரம்பரிய நிலத்தில் சுமார் 2 லட்சம் சிங்களவர்களைக் குடியேற்ற ஜெயவர்த்தனா திட்டமிட்டிருக்கிறார். ஜெயவர்த்தனாவின் இந்தத்திட்டத்தை அமல்நடத்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுப்புகளை தேசியப் பாதுகாப்பு அமைச்சரான லலித்அதுலத்முதலி ஏற்றுக்கொண்டிருக்கிறார். சிங்களர் தொகுதி ஒவ்வொன்றிலிருந்தும் ஆயிரம் பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்துப் பின்னர் அவர்களைத்தமிழீழப் பிரதேசங்களில் குடியேற்றி அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்க இருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார். இதற்குத் தேவையான நிதி 'தேசியப் பாதுகாப்பு' நிதியிலிருந்து ஒதுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

"இந்தத்திட்டத்தைச்சிங்கள அரசு நிறைவேற்றிவிட்டதா" என்று நான் கேட்டேன்.


"இப்போது நாம் நின்று பேசிக்கொண்டிருக்கும் இந்த சிங்களக் குடியிருப்பைப் போலப்பல குடியிருப்புகளை உருவாக்கிச்சிங்களவர்களைக் குடியேற்றும் வேலையை அவர்கள் தொடங்கியபோது இதை முறியடித்தே தீர வேண்டுமென்று எமது இயக்கம் முடிவு எடுத்தது. எனவே நாங்கள் நேரிடையாக நடவடிக்கையில் இறங்கினோம். 13-3-'85 அன்று மதவாச்சியில் போலீஸ் நிலையத்தின் மீதும் புகைரத நிலையத்தின் மீதும் தாக்குதல் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டோம், அப்போதும் சிங்களப் பொதுமக்களை நாங்கள் தாக்கவில்லை. மதவாச்சியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்கள் அத்தனையிலும் இத்தகைய தாக்குதலை நடத்துவோம் என்றும் நாங்கள் அறிவித்தோம்" என்று பொட்டு கூறினார்.

"உங்கள் இந்த அறிவிப்புக்கு என்ன விளைவு ஏற்பட்டது" என்று நான் கேட்டேன்.

"மதவாச்சியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து சிங்கள அரசின் திட்டங்களை ஏற்றுந்தமிழ்ப் பிரதேசங்களில் நாம் குடியேறினால் நாமும் பலியாக வேண்டும் என்பதை உணர்ந்த சிங்கள மக்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். ஆயுதப் படையினருக்கே பாதுகாப்பு இல்லாத நிலைமையில் சிங்களக் குடியேற்ற வாதிகளுக்கு பாதுகாப்பே இருக்காது என்பதும் அத்தகைய பாதுகாப்பைச் சிங்கள இராணுவத்தினால் வழங்க முடியாது என்பதையும் அம்மக்களுக்கு இத்தகவல்கள் மூலம் உணர்த்தினோம்" என்றார் பொட்டு,

"சிங்களக் குடியேற்றத்திட்டம் இவ்வாறு முளையிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூடக்கிழக்குப் பகுதியில் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கடந்த 10 ஆண்டுகாலமாக ஏராளமான சிங்களவர்கள் குடியேறியிருக்கிறார்கள். அதுதான் இப்போது பெரும் பிரச்னையாகியிருக்கிறது" என்றும் அஷுர் சொன்னார்.





# 26. மக்கள் அமைப்புகள்

**ஆனந்தர்புளியங்குளம்,** என்ற கிராமத்திற்கு நான் சென்றபோது அங்குப்பதட்ட நிலையிருப்பதை நான் கவனித்தேன். சுமார் 1000 மக்கள் வாழும் அந்தக் கிராமத்தில் இருநாட்களுக்கு முன்பு தான் சிங்கள இராணுவம் புகுந்து அட்டகாசம் செய்திருக்கிறது. விவசாயிகளை விரட்டி அவர்கள் வைத்திருந்த **டிராக்டர்**களைக் கைப்பற்றிச் சென்று விட்டது. இந்தச்சூழ்நிலையில் யாரும் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. பிறகு வந்திருப்பது யாரென்று தெரிந்தவுடன் கொஞ்சங் கொஞ்சமாக அனைவரும் கூடிவிட்டனர். இந்தக் கிராமத்தில் நிர்வாகத்தை மக்களே மேற்கொண்டிருக்கிறார்கள். கிராம இணக்கசபை, கிராம சுகாதாரக்குழு, கிராம விழிப்புக்குழு போன்றவை இங்கு அமைக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் விசாரித்து அறிந்தேன். ஊர்மக்கள் கூடி இந்தச் சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகளைப் புலிகள் செய்கிறார்கள். 10 நாட்களுக்கு முன்னால் இதற்கான முன்னறிவிப்பு அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. **இணக்கசபை** என்ற அமைப்பு,கிராம மக்களிடையே ஏற்படும் வழக்குகள், தகராறுகள் போன்றவற்றை விசாரித்துத் தீர்ப்புக் கூறுகிறது. **விழிப்புக்குழு** என்ற அமைப்பு, கிராம மக்களின் பாதுகாப்பு, காவல் ஏற்பாடுகளை மேற்கொள்கிறது. **சுகாதார சபை** என்ற அமைப்புகிராம சுகாதாரத்தையும், மக்களின் உடல் நலத்தையும் கவனிக்கிறது. சிவில் நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்திருக்கும் நிலைமையில் இந்த அமைப்புகள் மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றன. இந்தசபை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களின் உறுப்பினர்கள் யார் என்ற விவரம் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகிறது. பொது மக்கள் இதை வேறு யாரிடமும் தெரிவிக்க மறுக்கிறார்கள். ஏனென்றால் உறுப்பினர்கள் யாரென்று தெரிந்தால் உடனடியாக இராணுவம் அவர்களைக் கைது செய்கிறது. சித்திரவதை செய்கிறது. இவ்வாறு சபைகள் அமைப்பதைச் சட்டவிரோதமானது என்றும் இராணுவம் அறிவித்திருக்கிறது. ஆனால் இராணுவத்தின் இந்த மிரட்டலுக்கு மக்கள் பயப்படவில்லை. கிராமம் கிராமமாக இத்தகைய சபைகளை அமைத்து வருகிறார்கள். ஓரளவுக்கு இந்த அமைப்புகள் அந்தந்தக்கிராமத்தின் சுதந்திர அரசுகளாக விளங்குகின்றன என்றுதான் சொல்ல வேண்டும். இந்த அமைப்புகளை மக்கள் ஒற்றுமையாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவைகள் செய்யும் முடிவுகளுக்குக் கட்டுப்படுகிறார்கள். கிராமங் கிராமமாக இந்த அமைப்புகள் இப்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்களிடம் சில சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டேன். "இந்த அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரத்திற்கு என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"மக்கள் முன்னால் இந்தப் பிரச்னையை வைக்கிறோம். மக்களே முன் வந்து நிதியையளிக்கிறார்கள். ஆனால் யாரையும் கட்டாயப்படுத்தி நிதி வசூலிப்பதில்லை. வசதியுள்ளவர்களிடம் மட்டுமே நிதி பெறுகிறோம். எங்களுக்குப் பெருமளவு நிதியும் தேவையில்லை. செய்ய வேண்டிய வேலைகளை மக்களே முன்வந்து செய்கிறார்கள். உதாரணமாக, கிராமத்துச் சாலையைச் சீர்செய்ய வேண்டுமென்று சொன்னால், மக்களே முன்வந்து மண் வெட்டுவதிலிருந்து எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். இதற்கு யாரும் கூலி பெறுவதில்லை. மக்களின் உழைப்பைத் தானமாகப் பெறுகிறோம். இப்படி ஒவ்வொரு காரியத்திலும் மக்களின் உழைப்பு, நிதி ஆகிய இரண்டையும் பெறுவதால் எங்களுடைய காரியங்கள் தங்குதடையின்றி நடக்கின்றன" என்று சொன்னார்.

"உங்களால் தீர்க்க முடியாத பிரச்னை எதுவுமிருந்தால் எப்படித் தீர்க்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அப்படிப்பிரச்னை எதுவும் அதிகமாக வருவதில்லை. வந்தாலும் புலிகள் அவற்றைத் தீர்த்து வைக்கிறார்கள்" என்றார்.

அருகிலிருந்த தளபதி மாத்தயா குறுக்கிட்டு "60 சதவீதத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் இத்தகைய அமைப்புகளை ஏற்படுத்தி



விட்டோம். இன்னும் தொடர்ந்து பல கிராமங்களில் இவற்றை அமைத்து வருகிறோம். விரைவில் எல்லாக்கிராமங்களிலும் இத்தகைய சுயாட்சி அமைப்புகள் ஏற்பட்டுவிடும். இத்தகைய அமைப்புகளின் மூலம் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் வாய்ப்புப் பெறுகிறார்கள். இந்த விடுதலைப் போராட்டம் நமக்காக நடைபெறுகிறது என்ற உணர்வு பெறுகிறார்கள். அவர்கள் பெறும் தன்னம்பிக்கை எங்களுக்குப்பக்க பலமாக அமைகிறது. போராளிகளின் போராட்டம் என்ற நிலையில் இருந்து இதை ஒரு மக்கள் போராட்டமாக விரிவுபடுத்துவதற்கு இத்தகைய அமைப்புகள் பேருதவி புரிகின்றன" என்று அவர் சொன்னார்.


இந்த அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களையும் பொது மக்களையும் பாராட்டி விட்டு நான் அங்கிருந்து புறப்பட்டேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 27. ஒதிய மலையின் ஓலம்

முல்லைத் தீவுப் பகுதியில் உயர் அதிகாரி ஒருவரை நான் சந்தித்தேன். தமிழர்களை ஒழிக்கச்சிங்கள அரசு திட்டமிட்டுச் செயல்படுவதை அவர் விளக்கிச் சொன்னார். வடக்கு, கிழக்கு ஆகிய மாநிலங்களை இணைக்கும் பகுதியான **கொக்கிளாய்** கொக்குத்தொடுவாய், செம்மலை, அலம்பில், குமுளமுனை, முறிப்பு, தண்ணிமுறிப்பு, ஒதியமலை போன்ற பகுதிகளைத் திடீரெனத் தடை செய்யப்பட்ட பகுதியாக இராணுவம் அறிவித்தது. 24 மணி நேரத்தில் இப்பகுதியில் வாழும் மக்கள் வெளியேற வேண்டுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டது. உடுத்திய உடுப்புகளோடு ஓட வேண்டிய நிலைக்கு மக்கள் ஆளாக்கப்பட்டனர்.

"சற்று அவகாசம் கொடுக்கும்படி இராணுவ அதிகாரியிடம் முறையிட்டோம். எந்தப் பயனுமில்லை. இப்பகுதியிலிருந்த அரசு அதிகாரி உட்பட அனைவரும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின் தமிழர்களின் வீடுகளை இராணுவம் கொள்ளையடித்தது. ஆடு, மாடு, கோழி உட்பட அனைத்துமே கொள்ளையடிக்கப்பட்டன. 1984 டிசம்பர் 22-ம் தேதி இப்பகுதிகள் தடைசெய்யப்பட்ட பகுதிகள் என அறிவிக்கப்பட்டன. ஆனால் 1985 ஏப்ரல் 5-ம் தேதி இந்தத் தடை நீக்கம் செய்யப்பட்டது. இதன் பிறகு சிங்களர் இப்பகுதியில் குடியேறத் தொடங்கினர். இந்தப் பகுதிகளைச்சிங்கள எல்லைக்குள் உள்ள மதவாச்சி மாவட்டத்துடன் இணைத்துச்சிங்களப் பகுதிகளாக்கிவிட்டனர். வடக்கு–கிழக்குப் பகுதிகளை இணைக்க முடியாது. ஏனெனில் இவற்றுக்கு நடுவே சிங்களப் பகுதிகள் உள்



ளன" என்று ஜெயவர்த்தனா பசப்புகிறார். "இந்தியப் பிரதமர் ராஜீவ் போன்றவர்கள்கூட அவர் சொல்வதை உண்மை என்று நம்பி வடக்கு–கிழக்கு மாநிலங்களை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரிக்க மறுக்கிறார்கள்" என்று அவர் கூறியபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியத்தலைவர்களில் ஒருவர் சென்னையில் வைத்துக் கூறியது நினைவுக்கு வந்தது,

"பிரதமர் ராஜீவைத்தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சந்தித்தபோது வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்த வேண்டாம் என்று பிரதமர்கூறினார். வெவ்வேறான இரண்டு பகுதிகளை இணைப்பது எப்படிச் சாத்தியமாகும்? என்று அவர் கேட்டார். பின்னர் இலங்கையின் வரை படத்தை வைத்துக்கொண்டு வடக்கு மாநிலமும் கிழக்கு மாநிலமும் இயற்கையாக ஒன்றுபட்ட பகுதிகளாக இருப்பதை விளக்கிக் காட்டி **ஜெயவர்த்தனா**வின் சூழ்ச்சியையும் புரியவைத்த பிறகே பிரதமர் ராஜீவ் உண்மையை உணர்ந்தார்" என்று அவர்கள் என்னிடம் சொன்னது என் நினைவுக்கு வந்தது.

இப்படிக்காலி செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழீழக் கிராமங்களில் **ஒதியமலை** என்னும் கிராமமும் ஒன்று. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இந்த அழகிய கிராமம் வளம் நிறைந்தது. இந்தக்கிராமத்திற்குச் சென்று நான் பார்த்தபோது திகைத்துப்போனேன். ஆள் நடமாட்டமே இல்லை. மருந்துக்குக்கூட ஒருவர் இல்லை. வெறிச்சோடிக்கிடந்த அந்தக் கிராமத்தின் வீதிகளில் நாங்கள் நடந்தபோது எங்கள் காலடி ஓசையைத் தவிர வேறு ஓசை இல்லை. வீடுகள் இடிந்தும், தகர்ந்தும், எரிந்தும் நாசமாகியும் கிடந்தன. எங்கும் மயான அமைதி.

என்னை அழைத்துச் சென்ற நண்பர்கள் ஒதியமலை கிராமத்தின் சோகக் கதையை என்னிடம் விளக்கினார்கள்.

1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி வழக்கம்போல் ஒதியமலைக் கிராம மக்கள் விழித்தெழுந்தபோது ஓர் பயங்கரம் அவர்களைச் சில நிமிடங்களில் எதிர்கொள்ளப்போகிறது என்பதை அறிந்திருக்கவில்லை. அந்த அதிகாலைப் பொழுதில் கிராமத்தைச் சிங்கள இராணுவம் சுற்றி வளைத்தது. கைக்குச் சிக்கியவர்களையெல்லாம் கைது செய்தது. அவ்வாறு இராணுவத்தினால் பிடிக்கப்பட்ட 37 பேர் ஊர்ப்பொதுநல மன்றத்திற்கு முன்னால் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். கிராம மக்கள் இந்த அதிர்ச்சியிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீள்வதற்குள் மீண்டும் அந்தக் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவம் "யாழ்" பல்கலைக் கழக மாணவர் தலைவரான **ஸ்ரீஸ்கந்த ராஜா** என்னும் **இளைஞரையும்** மற்றும் 8 பேரையும் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் மரங்களில் கட்டிவைத்துச் சுட்டது. அந்த மரங்களை நான் பார்த்தேன். அவற்றை துளைத்திருந்த குண்டுகளையும் பார்த்தேன். மரங்களையே துளைத்த குண்டுகள் அந்த இளைஞர்களின் உடல்களை எப்படித் துளைத்திருக்கும் என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து .திரு. சி. கிருஷ்ணப்பிள்ளை என்பவரின் வீட்டில் புகுந்து அவர்களுடைய புதல்வர்களான கி. ராசலிங்கம், பரமலிங்கம் என்பவர்களை இராணுவ வெறியர்கள் சுட்டுக் கொன்றனர்.

தம்பிஅய்யா என்பவர் வீட்டில் புகுந்து 5 பேரைப்படுகொலை செய்தார்கள். அந்தக் கிராமத்தின் கூட்டுறவுக் கடையைக் கொள்ளை அடித்தார்கள். பிறகு அதை அடியோடு எரித்து நாசம் செய்தார்கள். சகல வீடுகளிலும் புகுந்து அவர்களுடைய விலை உயர்ந்த பொருட்களையெல்லாம் கொள்ளை அடித்தார்கள். பிறகு வீடுகளுக்குத் தீ வைத்தார்கள்.

அந்த ஊரிலிருந்த விஷக்கடி வைத்தியரான திரு கணபதி பிள்ளை என்ற முதியவரையும் சுட்டுக்கொல்ல அவர்கள் தயங்கவில்லை. கிராமப்பள்ளியின் புதிய கட்டிடம் திறந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. அந்தப்பள்ளி அடியோடு நாசம் செய்யப்பட்டு இருப்பதைப்பார்த்தேன். பள்ளிக்குள்ளேயே அமைந்து இருக்கும் முதல்வரின் வீட்டிற்குள் போய்ப்பார்த்தேன். சாமான்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு தாறுமாறாகக் கிடந்தன. பள்ளியின் புதிய கட்டிடத்திறப்பு விழா அழைப்பிதழ் ஒன்று கீழே கிடந்தது. 1984 நவம்பர் மாதம் 5 ஆம் தேதி மாலை 4 மணிக்கு திறப்பு விழா நடைபெற்று இருக்கிறது. திறப்பு விழா நடந்த ஒரு மாத காலத்திற்குள் அந்தப்பள்ளிக்கு மூடு விழாவையும் சிங்கள வெறியர்கள் நடத்திவிட்டார்கள்.

கிட்டத்தட்ட 100 ஆண்டுப்பழமையான அவ்வூர்ப்பிள்ளையார் கோவில் **இருந்த** நிலையைப்பார்த்தபோது அதிர்ச்சி அடைந்தேன். கோவில் என்று கூடப்பார்க்காமல் உள்ளே புகுந்து இராணுவம் அட்டகாசம் செய்திருக்கிறது. உற்சவ விக்கிரகங்கள், நகைகள், பாத்திரங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் அனைத்தையும் இராணுவம் கொள்ளை அடித்துக்கொண்டுபோய் விட்டது. கோவில் அலுவலகத்துக்குள் நான் நுழைந்து பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு கிடந்தது. பீரோவின் உள்ளேயும் வெளியேயும் பனை ஓலைகள்



சிதறிக் கிடந்தன. அதை எடுத்துப்பார்த்தபோது பழமைவாய்ந்த சுவடிகள் என்பது புரிந்தது. அந்த ஓலைகளையெல்லாம் ஒன்று திரட்டி என்னுடன் எடுத்து வந்தேன். கோவில் கர்ப்பகிரகம் இருளடைந்து **கிடந்தது**. கோவில் பாழடைந்து **கிடந்தது** .

என்னுடன் வந்த ஒருவர் சொன்னார்: "ஊர் மக்களையெல்லாம் அடித்து விரட்டிய பிறகு இராணுவம் இந்தக் கோவிலில் தங்கி இருந்தது. மாமிசம், மீன் போன்றவைகளையெல்லாம் கோவிலுக்குள்ளேயே சமைத்துச் சாப்பிட்டார்கள். பூட்ஸ் அணிந்த கால்களுடன் கோவிலுக்குள் நடமாடினார்கள். எல்லா வகையிலும் இந்தக் கோவிலைச் சிங்கள இராணுவ வெறியர்கள் அசுத்தப் படுத்தினார்கள்" என்று அவர் சொன்னார்.

இராணுவம் செய்த அட்டகாசம் போதாதென்று யானைகளும் அட்டகாசம்செய்து இருக்கின்றன. ஊரில் மனித நடமாட்டம் இல்லையென்றவுடன் காட்டில் உள்ள யானைகள் கூட்டம் கூட்டமாக ஒதியமலைக்கிராமத்தின் மீது படையெடுத்து வந்தன. வீட்டுத் தோட்டங்களிலிருந்த மா, தென்னை போன்ற மரங்களை அழித்துச் சாய்த்திருக்கின்றன. ஒரு வேளை இந்த யானைகளும் சிங்கள யானைகளோ என்னவோ?

அந்த ஊரைச் சுற்றி வந்தபோது ஒரு இடத்தில் அபூர்வமான மணம் வீசிற்று; மணம் வந்த திக்கை பார்த்தேன். தேக்கு மரங்கள் பூத்துக் குலுங்கி நின்றன.

இன்னொரு இடத்தில் ஒரு மரத்தில் தூக்கணாங் குருவிகளின் கூடுகள் அடுக்கடுக்காகத் தொங்கின. **அவற்றினுள்ளிருந்து** குஞ்சுகள் கூக்குரலெழுப்பிக் கொண்டிருந்தன. எவ்விதத் தடையும் இல்லாமல் தூக்கணாங் குருவிகள் கூவிக் கொண்டிருப்பதைப் பார்த்து நான் வியந்தேன்.

**ஒதியமலை கிராமத்தில் மலர்கள் மணம் பரப்பலாம். ஆனால் தமிழ் மணம் கமழ அனுமதி இல்லை.**

**குருவிகள் கூடு கட்டி வாழலாம். ஆனால் தமிழர்கள் வீடு கட்டி வாழ உரிமை இல்லை.**

ஒரு ஒதியமலை அல்ல, நூற்றுக்கணக்கான ஒதியமலைக்கிராமங்களைச்சிங்களவர் அழித்து விட்டனர். ஒதியமலை எழுப்பும் ஓலம் இந்திய மக்களின் செவிப் பறைகளைக் கிழிக்கின்றன.

**வயல்குடியிருப்பு, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், நாவல்பண்ணை, காட்டுப் பூவரசங்குடி, காஞ்சுர மோட்டை, வெடி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வைத்தகல், கோவில்-புளியங்குளம், பெரியதளம்** போன்ற நான் பார்த்த பல கிராமங்கள் ஆள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. இந்தக் கிராமங்களில் உள்ள வயல்வெளிகள் தரிசாகக் கிடக்கின்றன. புகையிலை, நெல், மிளகாய் போன்ற பணப்பயிர்கள் விளையும் வளமான பூமிகள் வறண்டு கிடப்பதைப் பார்த்தேன். குளங்களின் மதகுகளை இராணுவம் வெடி வைத்துத் தகர்த்து இருக்கின்றது.

நல்ல நீர்வளம் இருந்தும் நிலவளம் இருந்தும் உழைக்க மக்கள் இருந்தும் விவசாயம் செய்ய முடியாத நிலைமையினை நான் கண்டேன்.

தமிழர்கள் வாழும் கிராமங்களிலிருந்து அவர்களையெல்லாம் விரட்டிவிட்டு அந்தக் கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதோடு மட்டும் அவர்கள் நிற்கவில்லை. தமிழ்க் கிராமங்களின் பெயர்களைச் சிங்களப் பெயர்களாக மாற்றுகிறார்கள். அதாவது தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளமே இல்லாமல் செய்வதற்காகவும் இவைகள் எல்லாம் சிங்களக் கிராமங்கள்தான் என்று உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்வதற்காகவும் அதை அவர்கள் செய்கிறார்கள். உதாரணமாகத் திருகோணமலை மாவட்டத்தில் பல கிராமங்கள் இவ்வாறு மாற்றப்பட்டிருப்பதை நான் பார்த்தேன்.

திரியாயி என்ற தமிழ் கிராமத்தின் பெயர் **திரியாயா** என்று மாற்றப்பட்டுள்ளது. புடவைக்கட்டு என்ற தமிழ்க் கிராமத்தின் பெயர் **சாகரபுர** என்று மாற்றப்பட்டுள்ளது. புல்மோட்டை என்ற தமிழ்க் கிராமத்தின் பெயர் **கனிகபுர** என்று மாற்றப்பட்டுவிட்டது.

பயங்கரவாதிகள்மீது போர்தொடுப்பதாகப் பறைசாற்றும் சிங்கள அரசாங்கம் ஏன் விவசாயிகளைச்சுட்டுக் கொல்கிறது? விவசாயத்தை ஏன் சீர்குலைக்கிறது? எதனால் குளங்களை எல்லாம் நாசப்படுத்துகிறது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே விடைதான். தமிழர்களை வாழவிடக் கூடாது. பொருளாதார நெருக்கடியையும் பஞ்சத்தையும் ஏற்படுத்தி அம்மக்களைச் சாகடிக்க வேண்டுமென்பதுதான் சிங்கள அரசின் திட்டம்.

**''ஈழத் தமிழனுக்குக்காடும்-கரையும்''** என்பது அந்நாட்டு வழக்கு ஆகும். காடு என்று சொன்னால் விவசாயம் செய்யும் நிலம் என்பது பொருள். கரை என்று சொன்னால் மீன் பிடித் தொழிலைக் குறிப்பிடுவது. விவசாயத்தையும் மீன் பிடித் தொழிலையும் நம்பி வாழ்ந்த ஈழநாட்டு மக்கள் இப்போது இந்த இரு தொழிலையுமே இழந்து தவிக்கிறார்கள். விவசாயத்தை முற்றிலுமாகச் சீர்குலைத்து



விட்ட சிங்கள அரசு மீனவர்களின் வாழ்க்கையையும் முற்றிலுமாக நிர்மூலமாக்கியிருக்கிறது. தமிழீழத்தின் கடற்கரைப் பகுதி முழுவதையும் கடல் கண்காணிப்பு வளையப் பகுதியாக அறிவித்திருக்கும் சிங்கள அரசு மீன் பிடித் தொழில் செய்த தமிழ் மீனவர்களை வாழவிடுவதாக இல்லை. மீன் பிடிக்கக் கடலில் சென்றால் ஹெலிக்காப்டரிலிருந்து சுட்டுத்தள்ளுகிறார்கள். கடற்கரைப் படகுகளிலிருந்து சுட்டுத்தள்ளுகிறார்கள். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற கடற்கரையோரக்கிராமங்கள் அடியோடு அழிக்கப்பட்டுள்ளன. கடற்கரையோர கிராமங்களை நோக்கிக் கடலிலிருந்தே பீரங்கிக் குண்டுகளால் இடைவிடாமல் தாக்குகிறார்கள். ஏனென்று சொன்னால் தரை வழியாக வந்து அந்தக் கிராமங்களைத் தாக்கச் சிங்களப் படையால் இயலவில்லை. எனவே, கடலிலிருந்து தாக்கிக்கிராமங்களையும் மக்களையும் அழிக்கிறார்கள்.

கடலோரப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வீடுகளைக்காலி செய்து விட்டு உட்புறமாக இடம் பெயர்ந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து திரிகோண மலைப் பகுதிவரை சுமார் 120 மைல்கள் இரவு நேரத்தில் பயணம் செய்தபோது கடற்கரை யோரத்தில் எந்தக் கிராமத்திலும் சில விளக்கு வெளிச்சம் கூடத் தெரியவில்லை. அந்த அளவுக்குக் கடற்கரையோரக் கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறி இருக்கிறார்கள். விவசாயத்தையும், மீன் பிடித் தொழிலையும் திட்டமிட்டு அழித்ததன் மூலம் பொருளாதார உற்பத்தியில் தமிழர்களின் முதுகெலும்பை முறிக்கச்சிங்கள அரசு முயற்சி செய்கிறது, உணவு உற்பத்தியை முற்றிலுமாக அழித்துப் பஞ்ச நிலையை உருவாக்கச் சிங்கள அரசு செய்யும் முயற்சிகளை முறியடிக்க விடுதலைப் புலிகள் செய்யும் ஏற்பாடுகளையும் நான் பார்த்தேன். இராணுவத்தினால் நாசமாக்கப்பட்ட குளங்களைச் செப்பனிட மக்களை ஒன்று திரட்டி விடுதலைப் புலிகள் முயற்சி செய்கின்றனர்.


இரணமடுகுளம் என்னும் பிரம்மாண்டமான குளத்தின் கரையைச் சிங்கள இராணுவம் வெடி வைத்துத் தகர்த்த பிறகு மக்களைத் திரட்டி மணல் மூடைகளை அடுக்கி அந்த உடைப்பை விடுதலைப் புலிகள் அடைத்து இருந்ததை நான் நேரில் பார்த்தேன். விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு விதைகள் வழங்குவது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் போன்றவற்றை விடுதலைப் புலிகள் செய்கின்றனர். இதன் மூலம் சுமார் 10 சதவீதமாவது விவசாயம் நடக்கிறது. மக்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையாவது உற்பத்தி செய்து கொள்ள முடிகிறது. மரவள்ளிக் கிழங்கு பயிரிடுமாறு இடைவிடாது பிரசாரம் நடைபெறுகிறது. காடுகளிலும் வீடுகளைச்சுற்றியுள்ள இடங்களிலும் மரவள்ளிக் கிழங்கைப் பயிரிடுமாறு மக்கள் வேண்டப் படுகிறார்கள். உணவுப் பஞ்சம் வந்தால் இதை வைத்துச் சமாளிக்கவே இந்த ஏற்பாடு. மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஜவ்வரிசி உற்பத்தி ,யும் புலிகளே செய்கின்றனர். அதற்காகவே ஜவ்வரிசி உற்பத்திச் சாலைகள் பலவற்றை நிறுவி உள்ளனர்.







# 28. இராமதூதன்

**கற்குளம் சந்தை** என்ற கிராமத்தில் நாங்கள் வரவிருப்பதை முன்னதாகவே அறிந்திருந்த மக்கள் திரளாகவே கூடியிருந்தனர். நாங்கள் சென்றபோது அனைவருக்கும் குளிர்பானம் கொடுத்து உபசரித்தனர்.

"நாங்கள் வருவது எப்படி உங்களுக்குத் தெரியும்" என்று கேட்டபோது **மாலா** என்ற பெண்மணி சிரித்துக்கொண்டே சொன்னாள். "இரண்டு நாட்களாகவே நீங்கள் வரப்போகிறீர்கள் என்று எங்களுக்கு செய்தி கிடைத்தது. எங்களுக்கு மட்டுமல்ல அருகேயிருக்கக்கூடிய பல கிராமங்களிலும் உங்கள் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்" என்று கூறினர்.

அருகேயிருந்த தளபதி மாத்தயாவிடம் "எனது வருகையை இவ்வளவு இரகசியமாக நீங்கள் வைத்திருந்தும்கூட எப்படி இவர்களுக்குத் தெரிந்துவிட்டது" என்று கேட்டேன்.

"நாம் ஏற்கெனவே சென்றுவந்த ஊர்களிலிருந்து வந்தவர்கள் யாரேனும் இவர்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். அதைப் பற்றிக் கவலைகொள்ளத் தேவையில்லை" என்றார் அவர்.

"மக்கள் நம்முடைய இரகசியத்தைக் கவனமாகப் பாதுகாப்பார்கள்" என்று அவர் சொன்னார். அது எவ்வளவு உண்மை என்பதைப்பிறகு உணர்ந்துகொண்டேன். 20 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து யாழ்ப்பாணம் வரும்வரை சிங்கள அரசு எனது வருகையைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிந்துகொள்ளவில்லை. தமிழீழ மக்கள் அனைவருக்கும் எனது வருகை தெரிந்திருந்தது.

நெடுங்கேணிக்கு நாங்கள் புறப்பட ஆயத்தமாக இருந்தபோது அப்பகுதியின் பொறுப்பாளர் **சபா** மோட்டார் சைக்கிளில் பறந்துவந்தார். தளபதி மாத்தயாவிடம் பதட்டத்துடன் பேசத் தொடங்கினார். " அண்ணா வரும் செய்தி அறிந்து ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கிறார்கள். பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இராணுவத்திற்குச் செய்தி எட்டியிருக்கக்கூடும். எனவே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்துச் செய்ய வேண்டும் " என்று அவர் சொன்னார்.

பிறகு தளபதி மாத்தயாவின் தலைமையில் பொட்டு, லிங்கம்' சபா மற்றும் என்னுடன் வந்த அனைவரும் என்ன செய்வது என்பது பற்றி ஆலோசனை நடத்தினார்கள். நான் அந்த விவாதத்தில் பங்கெடுக்கவில்லை. பார்வையாளனாகவே இருந்தேன்.

இவ்வளவு பெருங் கூட்டத்திற்கு நடுவே என்னை அழைத்துக் கொண்டு போவது பாதுகாப்பானது அல்ல என முடிவு செய்தார்கள். எனவே எங்கள் வேனில் முன்பகுதியில் எல்லோரும் பார்க்கும்படி என்னை உட்காரவைத்து மெதுவாக ஓட்டிச் செல்வது என்றும் அங்கு இறங்குவதோ, மக்களிடம் பேசுவதோ கூடாது என்றும் அவர்கள் முடிவு செய்தார்கள். அதன்படி நாங்கள் புறப்பட்டோம். நெடுங்கேணிக்கு நாங்கள் சென்ற போது எதிர்ப்பார்த்ததை விட அதிகமாக மக்கள் கூடி இருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகத்தெருக்களில் மக்கள் நிறைந்து வழிந்தார்கள், எங்கள் வாகனங்கள் செல்வதற்கு வழி விட்டு நின்றார்கள். நான் சென்ற வாகனத்தைப் பார்த்தவுடன் எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரம் நிற்காமல் செல்லச் செல்ல அழுகைக் குரலாக மாறி ஓங்கி ஒலித்தது. குறிப்பாக பெண்கள் கதறி அழுததைப் பார்த்த போது எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. என் அருகிலிருந்த தளபதி மாத்தயாவிடம்" தம்பி என்ன ஆனாலும் சரி! இவ்வளவு தூரம் வந்து இந்த மக்களிடம் ஓரிரு வார்த்தைகள் கூடப் பேசாமல் போவது நல்லதல்ல. எனது மனசாட்சியும் என்னை மன்னிக்காது. வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள்" என்று நான் சொன்னேன்.

மாத்தயா சற்று தயங்கினார். ஆனாலும் வண்டியை நிறுத்தும்படி உத்தரவிட்டார். வண்டி நின்றதும் மக்கள் மத்தியில் ஆரவாரக்கூச்சல் எழுந்தது. எல்லோரும் திரளாக ஓடிவந்து எங்கள் வாகனத்தை



நாலாபுறமும் சூழ்ந்து கொண்டார்கள். நானும் கீழே இறங்கினேன். அப்பகுதியின் பொறுப்பாளரான **சபா** தலைமையில் மற்ற தோழர்கள் பெரும் சிரமத்துடன் கூட்டத்தை விலக்கி என்னை அழைத்துச் சென்றார்கள். வழி நெடுகத் தாய்மார்கள் என் காலில் விழுந்தும் எனது கைகளைப் பிடித்தும் கதறிக்கதறி அழுதார்கள். ஆறாத துயரத்தில் அமிழ்ந்து கிடந்த அவர்கள் தங்கள் துயரங்களைச்சொல்லி அழ ஒரு சகோதரன் வந்து விட்டான் என்ற உணர்வுடன் என்னிடம் அவ்வளவையும் கொட்டித் தீர்த்தார்கள். விழிகளில் நீர் வழிந்தோட நானும் அவர்களுக்கு ஆறுதல் கூறிக் கொண்டே சென்றேன். இறுதியில் ஒரு மேசையைப்போட்டு அதன் மீது ஏறிப் பேசும்படிச் சபா என்னிடம் கேட்டுக் கொண்டார். அதன்படி மேசை மீது ஏறி அங்கிருந்த மக்களை அமரும்படி வேண்டிக் கொண்டேன். எல்லோரும் அமர்ந்தார்கள். அவர்களுக்கு நடுவே ஆறுதல் சொல்லும் வகையில் சிறிது நேரம் பேசினேன்.

" இதே இலங்கைத் தீவில் சிறைவைக்கப்பட்டிருந்த சீதாப்பிராட்டியைக் கண்டு அவளது நிலையைத் தெரிந்துகொள்ளவும் இராமபிரான் நிச்சயமாக வந்து அவளைச்சிறைமீட்பான் என்று தைரியம் கூறவும் அன்று இராம தூதுவனாக அனுமான் வந்தான். அதைப்போல இன்று சிங்கள அரக்கர்களின் கொடுமைகளுக்குள்ளாகியிருக்கும் உங்கள் நிலையை அறிந்து செல்ல இந்திய மக்களாகிய இராமபிரான் சார்பில் அனுமானைப்போல நான் வந்திருக்கிறேன். அன்று எப்படி இராவணனைக் கொன்று அரக்கர்களை அழித்துச்சீதையை இராமன் மீட்டானோ அதைப்போலச்சிங்கள அரக்கர்களின் கொட்டத்தை ஒடுக்கி உங்களைச் சுதந்திர மனிதர்களாக உலவவைப்பதற்கு இந்தியா உதவி செய்யும். யார் உங்களுடைய புதல்வர்களைக் கொன்று குவிக்கிறார்களோ அந்தக் கொடியவர்களை அடக்கி ஒடுக்க இந்தியாவின் கரங்கள் நிச்சயமாக நீளும். இங்கு நான் நேரில் கண்ட உங்களுடைய துயரங்களையும் அவலங்களையும் உங்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளையும் இந்தியாவிலுள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்வேன். அவர்களின் ஆதரவை உங்களுக்காக திரட்டுவேன் " என்று நான் குறிப்பிட்டபோது கூட்டத்தில் அழுகை ஒலியும் ஆரவார ஒலியும் ஒருங்கே எழுந்தன. தாய்மார்களும் சகோதரிகளும் என்னுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு கதறி அழுதார்கள். இன்னமும் அந்தச் சோகக் காட்சி என்னுடைய நெஞ்சத் திரையில் ஓடிக்கொண்டே யிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 28-அ. நிலாவெளி நிகழ்ச்சி

முரடு என்ற ஊரில் அகதிகள் முகாம் ஒன்றுக்குச் சென்றேன். மலையகத் தமிழர்களின் **22** குடும்பங்கள் இந்த முகாமில் உள்ளன 1977-ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்தில் தேயிலைத் தோட்டங் களை விட்டு வெளியேறித் திருகோணமலைக்கு வந்து குடியேறியவர்கள். இப்போது அங்கிருந்தும் விரட்டப்பட்டு அகதிகளாகி இங்குவந்திருக் கிறார்கள். இவர்களைப் போலக் குமுளமுனை என்ற இடத்தில் ஏராள மான அகதிகள் இருக்கிறார்கள் இதற்கருகில் தடை செய்யப்பட்ட பகுதி ஆரம்பமாகிறது.

செம்மலை என்ற இடத்தில்தான் சிங்கள இராணுவத்தைப்புலிப் படையினர் முதன் முதலாகத் தாக்கி **15** பேரைக் கொன்றார்கள். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட விடுதலைப்புலி **எட்வின்** இங்குதான் வீர மரணமடைந்தார் என்று நண்பர்கள் கூறினார்கள்.

**நாயாறு** என்ற கிராமம் எல்லையிலுள்ள கிராமம். இங்கு தமிழர் களும் சிங்களவர்களும் கலந்து வாழ்ந்தார்கள். திடீரென இராணுவம் இங்கு வந்து ஐந்து தமிழர்களைச் சுட்டுக் கொன்று மற்ற தமிழர்களை யெல்லாம் விரட்டியடித்தது. இந்தக் கிராமத்தில் ஹோட்டல் நடத்திய சிங்களப்பெண் ஒருத்திதான் இதற்குக்காரணம் என்பதைத் தெரிந்து கொண்ட விடுதலைப் புலிப்படை அங்கு விரைந்து வந்து அந்த ஹோட்டலையும் போலீஸ் நிலையம் போன்றவற்றையும் தகர்த்தது. நாயாறு பாலத்தின் வழியாகத்தான் சிங்களப் படை அடிக்கடி வருகிறது என்ற காரணத்தினால் அந்தப் பாலத்தையும் புலிகள் வெடிவைத்துத் தகர்த்து விட்டனர். அந்த இடங்களுக்குச் சென்று அவற்றை நான்



பார்த்தேன். பிரமாண்டமான நாயாற்றுப் பாலம் அடியோடு தகர்ந்து கிடப்பதைக் கண்டேன். இடிந்து கிடந்த அந்தப் பாலத்தின் வழியாக நடந்து அக்கரை வரை சென்று வந்தோம்.

**13.1.'85**-ல் அந்தப் பாலம் தகர்த்தப் பட்டதாகத்தளபதி மாத்தயா கூறினார், இதையொட்டி நடந்த போராட்டத்தில் **28** சிங்கள இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித் தார்.

இதற்கு அருகில் வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைக்கும் பகுதியான **கொக்கிளாய்** உள்ளது. இதனைச் சிங்கள மாவட்டமான ***மதவாச்சி*** மாவட்டத்தோடு இணைத்து வடகிழக்குப்பகுதிகளை நிரந் தரமாகப்பிரிக்கச்சிங்கள அரசு சதி செய்கிறது. இந்தப் பகுதியிலிருந்து உடுத்திய உடையுடன் வெளியேற்றப்பட்ட தமிழர்கள் சுமார் **எட்டா யிரம் பேர்களாவர்** முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள **18** அகதிகள் முகாம்களில் இவர்கள் தங்கியிருக்கிறார்கள். இன்னும் அகதிகள் தொடர்ந்து வந்துகொண்டே யிருக்கிறார்கள். இந்த அகதிகளுக்குத் தேவையான உதவிகளைப் புலிப்படையின் தலைமையில் மக்கள் **தாம்** செய்கிறார்கள். இங்குள்ள அகதிகளுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு மாற்று உடைதான் பெரும் பிரச்னையாக இருக்கிறது. உடுத்திய உடையோடு ஓடிவந்த அந்தச்சகோதரிகளும் தாய்மார்களும் மாற்றுத் துணிகூட இல்லாமல் கிழிந்து, அழுக்கேறிய இரத்தக்கரை படிந்த ஆடைகளை உடுத்தியிருப்பதைப் பார்த்து வெட்கமும், வேதனையும் கொண்டேன்.

திருகோணமலை மாவட்டத்தில் இன்னும் தமிழர்கள் இருக்கும் ஊர்களில் ஊர்க்காவல் படையினர் அட்டூழியங்கள் புரிவதாக அந்த அகதிகள் சொன்னார்கள்.

**நிலாவெளி** என்னும் ஊரில் நடைபெற்ற படுகொலைகளைப் பற்றிய செய்திகள் என்னை அதிரவைத்தன. நான் ஈழம் செல்வதற்குச் சுமார் ஒரு மாதத்திற்கு முன் இந்தப்படுகொலைகள் நடைபெற்றன. சிங்கள இனவெறியர்கள் நிலாவெளி கிராமத்தையே முற்றிலுமாக அழித்துவிட்டனர். வீடு, வாசல்கள் அத்தனையையும் இழந்த தமிழர்கள் நிலாவெளியில் உள்ள பாடசாலையில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர். **1985**-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **16**-ம் தேதியன்று சிங்கள இராணு வம் இந்தப் பாடசாலையைச் சுற்றி வளைத்துக்கொண்டது. இந்த அகதிகள் முகாம்களில் இருந்தவர்களில் விடுதலைப் புலிகளின் உறவி னர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட **140** பேரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். அவர்கள் அனைவரும் இரவோடு இரவாகச்சுட்டுக் கொல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லப்பட்டார்கள். எஞ்சி இருந்தவர்கள் முகாமைவிட்டு விரட்டியடிக்கப் பட்டார்கள். இந்த விவரங்களை **ருக்மணி** என்ற அகதிப் பெண்மணி என்னிடம் கூறினார்.

அவருடைய மகனையும் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுவிட் டனர். இந்த அகதிகளுக்குப் பாதுகாப்பாக இருந்த புலிப்படையைச் சேர்ந்த **சிங்கராயன்** என்னும் இளைஞனையும் இராணுவம் படுகொலை செய்தது.

இப்போது அந்தப் பகுதிகளில் அரசு அதிகாரிகளைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் சொன்னார்கள். **குமுளமுனை** என்ற கிராமத்திற்கு நாங்கள் சென்றபோது அங்கு மிச்சம் இருந்தவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 3,500 ஏக்கர் நிலத்தில் அறுவடைக்குத் தயாராக நெற் பயிர் இருந்தது. இராணுவம் அங்கு வந்து விவசாயிகளைச் சுட்டு விரட்டிப் பச்சைப்பசேல் எனப் பூத்துக் குலுங்கி நின்ற நெற்பயிரைத் தீயிட்டுக் கொளுத்திவிட்ட கொடு மையை விவரித்தார்கள்

குமுளமுனையைச் சேர்ந்த **விஜயகுமாரி** என்ற கர்ப்பிணிப் பெண்ணின் சோகக் கதையை அவளது கணவர் **குமாரசாமி** கண் கலங்கக் கூறினார். நுல்லிவிளைக்குச் சென்றிருந்த விஜயகுமாரியைச் சிங்கள வெறியர்கள் பிடித்து அவள் கையில் துப்பாக்கியைக் கொடுத்து புகைப்படம் எடுத்தனர். அதன்பிறகு அவளைச் சுட்டுக் கொன்றனர். பிறகு அவளைப் பயங்கரவாதியாகச் சித்தரித்து இலங்கை **ரூபவாகினி யில்** துப்பாக்கியுடன் உள்ள அவள் படத்தைக் காட்டிப் பொய்ப் பிரச் சாரம் செய்திருக்கின்றனர். இதைப் பார்த்துக்குமுளமுனை மக்கள் அதிர்ச்சியடைந்தனர். எந்தப் பாவமும் அறியாத குடும்பப் பெண் அதுவும் கர்ப்பிணியான பெண்ணைச் சுட்டுக் கொன்று பயங்கரவாதி யாகச் சித்தரித்த செயலை அந்தப் பெண்ணின் கணவர் தாழாத வேத னையுடன் விவரித்தார்.





# 29. தந்தை தவற்றை-மகன் திருத்துகிறான்

வன்னிப் பகுதியில் எங்கள் சுற்றுப் பயணம் இனிதாக முடிந்தது. வன்னிப் பகுதியைச் சேர்ந்த **கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு, நெடுங்கேணி வவுனியா, வவுனியாகுளம்** என்ற ஆறு பகுதி களிலும் விரிவான சுற்றுப் பயணத்தை நான் மேற்கொண்டிருந்தேன். வன்னிப் பகுதியின் தளபதியான மாத்தயாவும், அவரின் கீழ்ப்பணி யாற்றிய அனைவருமே எனது சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு எல்லா வகையிலும் உதவினார்கள். இந்த அன்பான நண்பர்களிடம் விடைபெறும் நேரம் வந்த போது மனம் தவித்தது. மாலையில் தளபதி மாத்தயாவிடமும் மற்றுமுள்ள அனைவரிடமும் பிரியாவிடை பெற்றுக் கொண்டு கிழக்கு மாநிலம் நோக்கிப் புறப்பட்டோம்.

சுமார் 35 மைல்கள் காட்டுப் பாதையில் பயணம் செய்து **ஆனைஇறவு** அருகே கடற்கரையை அடைந்தோம்.

கடல் கொந்தளிக்கும் காலங்களில் ஆனைஇறவு எனப்படும் பகுதியில் கடல் நீர் பொங்கி உள் புகுந்துவிடும். யானைகள் கூட்ட மாக இந்த இடத்தில் இறங்கி கடலைக் கடக்குமாம். எனவே இந்தப் பகுதிக்கு ஆனைஇறவு என்று பெயர் வைத்திருக்கிறார்கள், கடற் கரையோரமாக வேகமாகச் சென்றோம். ஆங்காங்கே பேட்டரி வெளிச்சம் காட்டிப் புலிப்படை வீரர்கள் வழி காட்டினார்கள். காட்டின் நடுவே ஓரிடத்தில் ஜீப் ஒன்றும் ஆயுதம் தாங்கிய வீரர்கள் பலரும் நின்றனர். எங்கள் வாகனங்களின் விளக்குகள் அணைக்கப்பட்டன. இருதரப் பினரும் "வாக்கி-டாக்கி" மூலம் சமிக்ஞைகளைப் பரிமாறிக் கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டார்கள். **வடமராட்சிப்** பகுதியின் **தளபதி சூசை** எங்களை வரவேற்றார். இவரும் தமிழகத்தில் எங்கள் வீட்டில் இருந்தவரே. நீண்ட நாட்களுக்குப் பின்னால் அவரைச்சந்திப்பது மகிழ்ச்சியாக இருந்தது. பிறகு அவரதுஜீப்பில் ஏறிப் பயணம்செய்தோம். விளக்குகள் இல்லாமலேயே எங்கள் வாகனங்கள் சென்றன. இருட்டில் விளக்குகள் இல்லாமல் அவர்கள் லாவகமாகவும் வேகமாகவும் வாகனங்களை ஓட்டிச் சென்றது எனக்கு அதிசயமாக இருந்தது. ஒரு இடத்தில் கடற்கரையோரமாக எங்கள் வாகனங்கள் நிறுத்தப்பட்டன. அங்கு ஒரு படகு தயாராகயிருந்தது. நாங்களும் புறப்படுவதற்கு தயாரானோம். எங்கள் சாமான்கள் எல்லாம் படகில் ஏற்றப்பட்டன. அப்போது திடீரென **வாக்கி டாக்கி** மூலம் அவசரச் செய்தி வந்தது. தளபதி சூசை என்னை நோக்கி வந்தார். "அண்ணா! கடலில் இரு கடற்படைக் கப்பல்கள் திருகோண மலை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இன்று பயணம் செய்வது ஆபத்தானது. எனவே பயணத்தை நாளை மாலை தொடரலாம்'' என்றார். எனவே அங்கிருந்து மறுபடியும் கிளம்பிக்கடற்கரைக்கிராமம் என்ற ஊரை அடைந்தோம். அங்குள்ள புலிகளின் முகாமில் இரவு தங்கினோம். ஊருக்குள்ளேயே ஒரு வீட்டில் இந்த முகாம் இருந்தது. "இது ஆபத்தான இடம் அல்லவா'' என்று சூசையிடம் கேட்டேன்.

"அண்ணா! எங்கள் முகாம் இங்கிருப்பது இராணுவத்திற்கும் தெரியும். ஊர் மக்களுக்கும் தெரியும். இந்த ஊரைச் சுற்றி **தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை** ஆகிய இடங்களில் இராணுவ முகாம்கள் உள்ளன. இங்குள்ள மக்களுக்கும் சுற்றுவட்டாரங்களிலுள்ள மக்களுக்கும் நாங்கள் இங்கிருப்பதுதான் பாதுகாப்பானதாகும். ஆகவே நாங்கள் இங்கேயே இருக்கிறோம். ஊரைச் சுற்றிக் காவலுக்கு எங்கள் தோழர்கள் 24 மணி நேரமும் இருக்கிறார்கள். இராணுவம் வருவது எங்களுக்கு உடனே தெரிந்துவிடும். இரண்டு மாதங்களுக்கு முன்பாகக்கடல் வழியாகக்கடற்படை இந்த ஊருக்குள் இறங்க முயன்றபோது அதை நாங்கள் முறியடித்து விரட்டினோம். எனவே கரையில் இறங்க முடியாமல் கடலில் இரண்டு மைல்களுக்கு அப்பால் இருந்து பீரங்கிகள் மூலம் சுடுகிறார்கள். தரை மார்க்கமாகவும் வருவதற்குப் பயந்து ஹெலிகாப்டரில் வந்து சுடுகிறார்கள். தரையில் எங்கள் கைதான் ஓங்கியிருக்கிறது'' என்று அவர் சொன்னார். இந்த முகாமிலுள்ள புலிகள் அனைவருக்கும் ஊர் மக்களே உணவு அளிக்கிறார்கள். முறைவைத்து ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொரு வேளை உணவு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.



மறுநாள் பகலில் ஒரு வீரத் தாயை நான் சந்தித்தேன். யாழ்ப்பாணம் பகுதியில் புலிப் படைத் தளபதியாக இருக்கக்கூடிய கிட்டுவின் தாயார் திருமதி இராஜலெட்சுமி அம்மையாரை அவருடைய வீட்டுக்குப்போய் நான் பார்த்தேன். **தளபதி கிட்டு தலைவர் பிரபாகரனின் நெருங்கிய சகா ஆவார்.** ஆரம்ப காலம் தொட்டே அவரை நான் நன்கு அறிவேன். அவரும் எங்கள் வீட்டிலிருந்திருக்கிறார். அத்தகைய வீரமகனைப் பெற்ற அன்னையைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். திருமதி இராஜலெட்சுமி அம்மையார் வெறும் குடும்பப் பெண்மணியாக மட்டும் இருக்கவில்லை. தமிழரசுக்கட்சியின் மாதர் பிரிவின் தலைவராகவும் பணியாற்றினார். அவரது கணவரும் தமிழரசுக்கட்சியின் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். 1961-ம் ஆண்டில் கிட்டு ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோதே இந்த அம்மையார் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு கைக் குழந்தையுடன் சிறை சென்றார். **தம்** மகனுக்கு தாய்ப் பாலை மட்டும் ஊட்டி அவர் வளர்க்கவில்லை. தேச பக்தியையும் ஊட்டி வளர்த்தார். இப்போது அந்த வீட்டில் அவர் மட்டுமே இருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்னால் அவருடைய கணவர் காலமாகிவிட்டார். மகனோ விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுவிட்டான். தனிமையாக வாழும் இந்த நிலைமையிலும் அந்த அம்மையார் **தமது** தேசத் தொண்டினை நிறுத்தவில்லை. இந்த வீரத்தாயுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தேன்.

"சத்தியாக்கிரகப்போராட்டம் போன்ற அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட நீங்கள் இன்று உங்கள் மகனும் மற்ற இளைஞர்களும் ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டிருப்பதைச்சரியானது என நினைக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் அவர் பளிச்சென்று பதில் சொன்னார்.

"அன்று இளைஞராகஇருந்த எனது கணவரும் அவரைப் போன்றவர்களும் ஆயுதம் தாங்கிப் போராடி இருப்பார்களேயானால் எப்போதோ தமிழீழம் சுலபமாகக் கிடைத்திருக்கும். எங்கள் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் சமரசப் பேச்சுக்களின் மூலம் எங்களது உரிமைகளைப்பெற்றுவிட முடியும் என்று நம்பி எங்கள் சக்தியையும் நேரத்தையும் விணடித்து விட்டார்கள். 30 ஆண்டுக்காலம் இப்படி வீணாகக் கழிந்து விட்டது. **எனது கணவர் செய்ததவற்றைஇன்று எனது மகன் திருத்துகிறான். சுபாஷ் சந்திரபோஸின் வழியில்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செயல் பட்டால்தான் எங்கள் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கும்''** என்றார் அந்த வீரத்தாய்.

கிட்டுவின் தாயை இராணுவம் பல துன்பங்களுக்கு உள்ளாக்கி வருகிறது. ஆனாலும் அவர் அதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் மாதர் சங்கம் ஒன்றினை அமைத்துப்புலிகளுக்கு ஆதரவும் உதவியும் திரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். நான் சென்ற வேளையில் அவர் வீட்டில் பெண்கள் கூடி இருந்ததற்கு அதுவே காரணம். அவரது வீட்டின் சுவரை ஈழநாட்டுத் தலைவர்களின் படங்கள் அலங்கரித்தாலும் பிரதானமாக இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் படங்களே விளங்கின. **காந்திஜி, நேருஜி, நேதாஜி, பட்டேல்** ஆகிய தலைவர்களின் படங்கள் அங்கு இருந்தன.

திருமதி. இராஜலெட்சுமி அம்மையார் வீட்டில் **இருந்த** போது சென்னை வானொலிச் செய்தி அறிவிப்பு ஒன்றினைக் கேட்டேன். தென்னாப்பிரிக்கத்தலைவர் **பெஞ்சமின் மலோசி** தூக்கிலிடப் பட்டதை பொகாமியாவில் கூடிய காமன்வெல்த் தலைவர்கள் கண்டித்தனர் என்று அந்தச்செய்தி அறிக்கையில் சொல்லப்பட்டது. அருகிலிருந்த இராஜலெட்சுமி அம்மையார் வெடுக்கெனக் கேட்டார். **"சிங்களச் சிறையில் தினமும் பல பெஞ்சமின் மலோசிகளைக் கொன்று குவிக்கும் ஜெயவர்த்தனாவைப்பக்கத்தில் வைத்துக் கொண்டு காமன்வெல்த் மாநாட்டின் தலைவர்கள் இப்படி ஒரு தீர்மானம் போடுவது கேலிக் கூத்தாகும்''** என்றார். அந்த அம்மையாரின் கேள்வி தமிழீழத் தாய்மார்கள்**எந்த அளவுக்கு**அரசியல் விழிப்புணர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதைக் காட்டியது.

**பொலிகண்டி** கடற்கரையில் சிங்கள இராணுவத்தினரால் வெடிவைத்துத்தகர்க்கப்பட்ட நூலகத்தை நான் பார்த்தேன். நல்ல கெட்டிக் கட்டிடமான அந்நூலகம் அடியோடு இடிந்து தகர்ந்து கிடந்தது. கட்டிடத்தை மட்டும் அவர்கள் தகர்க்கவில்லை. **29 தமிழர்களை அக் கட்டிடத்திற்குள் வைத்துப் பூட்டி அதற்குப் பிறகு அதை வெடி வைத்துத் தகர்த்தார்கள் என்பதை அப்பகுதியிலுள்ள மக்கள் என்னிடம் சொன்னபோது அதிர்ந்துபோனேன்.** நூலகத்துக்கு உள்ளே சிக்கிக்கொண்ட அத்தனை பேரும் சதைசதையாக பிய்த்தெறியப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். கடற்கரை நெடுகிலும் மனித **அவயவங்**களும் கட்டிட இடிபாடுகளும் சிதறிக்கிடந்த காட்சி கண்டோரைக்கதி கலங்கவைத்தது. போர்நிறுத்தம் தொடங்கிய 33-ம் நாளில் இந்தக்



**கொடூரமான நிகழ்ச்சியைச் சிங்கள இராணுவம் நடத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.**


**கடற்கரையில் நின்று நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தபோது சிங்களக்கடற்படையின் பீரங்கிப் படை ஒன்று வெகுவேகமாகக் கடலில் செல்வதை நாங்கள் பார்த்தோம்.**

**புலிப் படையின் முக்கிய தளபதிகளில் ஒருவரான ரகுவின் வீட்டைப் பார்க்க நாங்கள் சென்றோம். சிங்கள இராணுவம் அந்த வீட்டை முற்றிலுமாக நாசமாக்கி யிருந்தது. ரகுவின் பெற்றோர் எப்படியோ தப்பி இந்தியா போய்ச் சேர்ந்துவிட்டனர். நான் வந்திருக்கும் செய்தி அறிந்தவுடன் அக்கம்பக்கத்திலுள்ள மக்கள் அங்குக்கூடிவிட்டார்கள். அவர்களிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன். நான் நடத்திய தியாகப்பயணம் இங்கு அனைவரின் நினைவிலும் பசுமையாக உள்ளதை அறிந்தேன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 30. மடியில் விழுந்த மீன்

**ஒருநாள்** மாலை 4 மணிக்குப் புறப்பட்டு இருட்டும் வேளையில் கடற்கரையை அடைந்தோம். முதல் நாள் வந்த அதே கடற்கரை. படகு புறப்படுவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தது. படகோட்டி திரு. ஆறுமுகம் என்பவரிடம் பேசிக்கொண்டிருந்தோம். இரவெல்லாம் விடியவிடியப் பயணம் செய்ய வேண்டியிருக்கும் என்று அவர் சொன்னார். மாலை சுமார் 6 மணிக்கு நாங்கள் புறப்பட்டோம். கரையில் நின்று வழியனுப்பிய தளபதி சூசை திடீரென தண்ணீரில் குதித்து நீந்தி வந்து சில செய்திகளை லிங்கத்திடம் சொல்லிவிட்டுப் போனார். எனக்கு 'லைப் ஜாக்கெட்' அணிவித்தார்கள். மொத்தம் 16 பேர் படகில் இருந்தோம். படகு வேகமாகச் செல்ல தொடங்கிற்று.

மெல்ல மெல்ல இருள் **கவிந்தது**. கரையோரக்கிராமங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளக்குகள் தெரிந்து மறைந்தன. வழியில் ''**கொக்கிளாய்**'' இராணுவ முகாம் ''குச்சுவெடி'' கடற்படைத் தளம் ஆகியவற்றின் விளக்குகளைப் பார்த்தோம். புல்மோட்டை என்ற இடத்தில் பிரமாண்டமான 'எலனமைட்' தொழிற்சாலையின் விளக்குகள் ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன. தொலை தூரத்தில் சிங்களக் கடற்கரைப் படகுகள் ரோந்துபோய்க்கொண்டிருப்பது தெரிந்தது. எங்கள் படகு விரைந்து போய்க்கொண்டிருந்தது. நீரைக் கிழித்துக்கொண்டு படகு செல்வதால் எழும் அலைகள் அடிக்கடி எங்களை நனைத்துக் கொண்டிருந்தன. இருட்டில் திடீரென என் மடியில் ஏதோ விழுந்தது. யாரோ எதையோ போட்டிருக்கிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தேன். விழுந்த பொருள் அப்படியே கிடக்கவில்லை. துள்ளித்துள்ளி விழுந்தது. என்னவென்று புரியவில்லை. மங்கிய நிலா



வெளியில் உற்றுப் பார்த்தேன். என் மடியில் கிடந்தது என்னவென்று நினைக்கிறீர்கள்? உயிர் உள்ள ஒரு மீன் துடித்துக்கொண்டிருந்தது. உடனே ''மீன்! மீன்!'' என நான் கூவினேன். பக்கத்தில் இருந்த தோழர்கள் அத்தனைப் பேரும் கடல் அலைகளோடு போட்டிபோட்டு சிரித்தார்கள். பொட்டு என் மடியில் கிடந்த மீனை எடுத்து ''அண்ணா! இது உங்கள் கட்சியின் சின்னம் ஆயிற்றே! அதனால்தான் உங்களைத் தேடி மடியில் வந்து விழுந்திருக்கிறது'' என்று சொல்லி விட்டுக்கடலில் வீசி எறிந்தார். இந்த அனுபவம் என்னை மகிழச் செய்தது.

பல மணி நேரம் நாங்கள் பயணம் செய்த பிறகு ''வாக்கி-டாக்கி'' யில் ஏதோ செய்திவந்தது. பொட்டு பேசினார். கரையில் இருந்து யாரோ பதிலுக்குப் பேசினார்கள். பொட்டுவும் ''முடியாது! முடியாது! வழியில் எங்கள் பயணத்தை மாற்ற முடியாது'' என்று சொன்னார். மறுபடியும் அவர்கள் ஏதோ சொன்னார்கள். மறுபடியும் பொட்டு மறுத்தார்.

லிங்கம் பொட்டுவிடம் என்னவென்று கேட்டார். 'திரியாயிலுள்ள நமது தோழர்கள் பேசுகிறார்கள். ''அண்ணாவை எப்படியும் பார்க்க வேண்டுமாம். இரவு முழுவதும் அதற்காகக் கடற்கரையில் காத்திருக்கிறார்களாம். எப்படியாவது கரைக்கு வந்து போகவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்'' எனக் கூறினார்.

''நாம் அபாயகரமான இடத்தில் இருக்கிறோம் எந்த நிமிடமும் சிங்களக்கடற்படைப்படகுகள் வரலாம். இந்த நிலையில் பாதையிலிருந்து விலகிக்கரைக்குப் போவது ஆபத்தானது'' என்று லிங்கம் கூறினார்.

''அவ்வளவு அவர்கள் ஆசைப்படும்போது நாம் பார்க்காமல் போவது சரியல்ல; பார்த்துவிட்டே போவோம்'' என்று நான் சொன்னேன். அரைகுறை மனதோடு லிங்கமும் பொட்டுவும் அதற்கு இசைந்தார்கள். பாதையிலிருந்து விலகிக் கரையை நோக்கி படகு நகரத் தொடங்கிற்று. சிறிது நேரத்தில் கடற்கரையை அடைந்தோம். அங்கு பத்துப்பனிரெண்டு இளைஞர்கள் இருளில் நின்றுகொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் அன்போடு கட்டி அணைத்துக்கொண்டார்கள். ''அண்ணா! நீங்கள் வரப்போகிற செய்தி இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே எங்களுக்குக் கிடைத்துவிட்டது. இவ்வளவு நெருக்கடியிலும் நீங்கள் எங்கள் நாட்டிற்கு வந்தது எங்களுக்கு எல்லாம் புதிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. திரியாயி மக்களும் உங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்க்கத் துடிக்கிறார்கள். ஆனாலும் ஊருக்குள் உங்களை அழைத்துப் போவது ஆபத்து. எனவே கடற்கரையில் உங்களைப் பார்ப்பதோடு நாங்கள் திருப்தி அடைகிறோம்'' என்று சொன்னார்கள்.

திரியாயிலிருந்து ஓடிவந்திருந்த பல அகதிகளை முல்லைத்தீவில் சந்தித்ததை நான் அவர்களுக்குச் சொன்னேன். அந்தத் தோழர்கள் எங்களுக்கு, பிஸ்கட், பழம் போன்றவற்றைக் கொடுத்தார்கள். நாங்களும் சாப்பிட்டோம். பிறகு அவர்களிடமிருந்து பிரியா விடைபெற்றுக் கொண்டு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

சில மணிநேரப்பயணத்திற்குப் பிறகு திருகோணமலையிலுள்ள விளக்குகள் தெரிந்தன.

"அண்ணா! அதோ "திருகோணேஸ்வரர்'' கோவில் விளக்குத் தெரிகிறது'' என்று பொட்டு சொன்னார். இன்னும் சற்று நெருங்கியதும் துறைமுக விளக்குகளும் திருகோணமலை நகர விளக்குகளும் வரிசை வரிசையாகத் தெரிந்தன. படகு மெதுவாக ஊர்ந்தது. மூன்று புறமும் மலைகளால் சூழப்பட்டு கடலோடு கணவாய் போன்ற ஒரு பகுதியால் இணைக்கப்பட்டிருக்கிறது திருகோணமலைத் துறைமுகம். இந்தத் துறைமுகத்தில் காலூன்ற வல்லரசுகள் முயலுகின்றன. சிங்கள அரசும் இதைத் தாரை வார்க்கத் தயாராக இருக்கின்றது. தமிழீழத் தமிழனுக்குச் சொந்தமான இந்த துறைமுகத்தைக் காக்கத்தான் நம்முடைய இளைஞர்கள் போராடுகிறார்கள். அவர்களை எதிர்க்கச்சிங்களக் கடற்படை இங்கு குவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே அபாயம் மிகுந்த ஓரிடத்தை நாங்கள் நெருங்கிக்கொண்டிருந்தோம். படகிலிருந்த புலிப்படைத் தோழர்கள் அனைவரும் ஆயுதங்களைத் தூக்கித்தயார் நிலையில் இருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாகத் திருகோணமலையைத் தாண்டி அதற்கு அப்பாலிருந்த ஒரு பகுதியை நெருங்கினோம். கரையிலிருந்தும் சமிக்ஞை கிடைத்தது. சிறிது நேரத்தில் கடற்கரையில் வந்து இறங்கினோம். அப்போது விடியற்காலை 4 மணியாகி இருந்தது. கிட்டத்தட்ட 10 மணி நேரம் சுமார் 120 மைல் தூரம் பயணம் செய்திருக்கிறோம். கரை இறங்கியதும் ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். குளித்துவிட்டுச் சாப்பிடலாம் என்றார்கள். குளித்தேன்; ஆனால் உணவு உட்கொள்ள மனமில்லை. கடற்கரை மணலில் துண்டை விரித்துப் படுத்தேன். அயர்ந்து தூங்கிப் போனேன்.





# 31. மானங்காத்த மறவர்கள்

அந்த அதிகாலைப்பொழுது அழகாக விடிந்திருந்தது. கடற்கரை மணலில் ஒரு கூரை வீட்டின் முன்னால் படுத்திருந்த நான் எழுந்தபோது நான் கண்ட காட்சி என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. என் எதிரில் நீலத்திரைக் கடல் பொங்கிப் புரளும் அலைகளுடன் காட்சி தந்தது. எனது பின்புறம் தொலைதூரத்தில் ஒரு கிராமம் தென்பட்டது. இடது கைப்புறம் தொலைவில் திருகோணமலை கம்பீரமாகக் காட்சி தந்தது. வலது புறத்தில் தென்னை மரங்கள் அடர்ந்த காட்சி தென்பட்டது. இந்த இயற்கைக் காட்சியில் மனம் லயித்துப்போய் எவ்வளவு நேரம் இருந்தேன் என்பது எனக்கே தெரியாது. என்னுடன் வந்த தோழர்கள் அத்தனைபேரும் ஆங்காங்கே அந்த மணலில் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். வாழ்வின் வசந்த காலத்தை இன்பமாகக் களிக்கவேண்டிய இந்த இளைஞர்கள் எத்தனையோ அபாயகரங்களுக்குத் தங்களை உட்படுத்திக்கொண்டு உற்றார் உறவினர்களைப் பிரிந்து இப்படி வாழ நேர்ந்திருப்பதை எண்ணி என் மனம் ஒருபுறம் துன்பப்பட்டாலும், மறுபுறத்தில் வீரமும் தியாகமும் நிறைந்த இந்த இளைஞர்களை எண்ணிப் பெருமிதமும் கொண்டது. சிறிது நேரத்தில் ஒவ்வொருவராக அவர்கள் கண் விழித்தனர்.

குளிப்பதற்காக நாங்கள் கடற்கரையோரமாவிருந்த ஒரு கிணற்றுக்குச் சென்றோம். எங்களுக்குத் தண்ணீர் இறைத்து ஊற்றிய உள்ளூர் இளைஞர் ஒருவர் சில செய்திகளை எங்களுக்குச் சொன்னார். "நேற்று இரவுதான் சிங்களப் பீரங்கிப் படகுகள் இந்தப் பக்கம் வரவில்லை. இதற்கு முன் நான்கு நாட்களாகச்சிங்களப் பீரங்கிப் படகுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப் பக்கத்திலேயே சுற்றிக்கொண்டு இருந்தன. நல்லவேளையாக நீங்கள் வரும்போது அவைகள் இல்லை'' என்றார்.

சிங்களப் பீரங்கிப் படகுகள் வந்தால் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் படகுகளைக்கூடச் சுடுவார்களாம். எனவே பீரங்கிப் படகுகளைக் கண்டால் இந்தப் பகுதி மக்கள் அஞ்சி நடுங்குகிறார்கள். நாங்கள் குளித்துக்கொண்டிருந்தபோது கடற்கரையோரமாகச் சிலர் கும்பலாகச் செல்வதைப் பார்த்தேன்.

'' அவர்கள் யார்? எங்குப்போகிறார்கள்? '' என்று கேட்டேன்.

'' மீன் பிடிக்கப் போகும் மீனவ இளைஞர்கள் '' என்று சொன்னார்.

''கடலில்தான் படகில் போய் மீன் பிடிக்க முடியாதே இவர்கள் எப்படி மீன் பிடிக்கப் போகிறார்கள்'' என்று கேட்டேன்.

''வெடிவீசிப் பிடிப்பார்கள்'' என்று அவர் சொன்னார்.

அவர் சொல்வது புரியாமல் நான் திகைத்தப் போது அவர் மேலும் சொன்னார், ''கடற்கரையோரமாகப்போய் மீன்கள் நிறைய இருக்கும் இடத்தைப் பார்த்து வெடி வீசுவார்கள். வெடி வைத்தவுடன் மீன்கள் செத்து மிதக்கும். அதை வாரிக்கொண்டு வருவார்கள். இந்த வழியைத் தவிர மீன் பிடிக்க வேறுவழியில்லை'' என்று அவர் வேதனையுடன் கூறினார்.

நாங்கள் பேசிக் கொண்டிருந்த போதே கடலுக்குள் அந்த மீனவ இளைஞர்கள் இறங்கி இடுப்பளவு ஆழத்தில் நின்று ஏதோ வீசிஎறிவதைப்பார்த்தேன். லேசாகவெடிச்சத்தமும் கேட்டது.

பிறகு குளித்து விட்டு வந்து காலை உணவை முடித்துக் கொண்டு புறப்பட்டோம். திறந்த ஜீப் ஒன்றினை தோழர்கள் கொண்டு வந்து என்னை அதில் ஏற்றி அழைத்துப் போனார்கள்.

**சம்பூர்-வில்லுக்குளம்** என்ற ஊருக்குச் சென்றோம். இங்கு ஐந்து மீனவர்களை இராணுவம் சுட்டுக் கொன்று விட்டு அவர்களுக்குப் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டியதாக அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

வில்லுக்குளத்திலிருந்து சம்பூருக்குள் நுழைந்தோம். பெரிய ஊர்தான். அந்த ஊரின் வீதிகளில் நாங்கள் சென்ற போது இருபுறமும்



மக்கள் நின்று வேடிக்கை பார்த்தார்கள். எல்லோருக்கும் வணக்கம் சொல்லிக் கொண்டே போனேன். பல கட்டிடங்கள், வீடுகள், கடைகள் முதலியவை எரிந்தும் நாசமாகியும் கிடப்பதைப் பார்த்தேன். 13.6.'85-ல் இராணுவம் இந்த ஊரில் புகுந்து பலரைச் சுட்டுக் கொன்று பல கட்டிடங்களையும் எரித்தது என்று சொன்னார்கள். எரிந்து நாசமான ஒரு கடையின் உரிமையாளரை நான் பார்த்தேன். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ஊரையே கொளுத்தினார்கள் என்று அவர் சொன்னார். இவருடைய கடை எரிக்கப்பட்டதால் ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் சொன்னார். கிராம சேவக் வீடு, கூட்டுறவுக் கடை மேலாளர் வீடு ஆகியவையும் கொளுத்தப்பட்டதாகக் கூறினார்.

சம்பூரிலுள்ள மகா வித்தியாலயத்திற்கு சென்றேன். அங்கு ஏராளமான அகதிகள் தங்கியிருந்தார்கள், மேங்காமம், கிளிவெட்டி மூன்றாம் குளவி, அதிகமாங்கேணி போன்ற திருகோணமலையைச் சுற்றியுள்ள பல்வேறு ஊர்களைச் சேர்ந்த அகதிகள் அங்கு அடைக்கலம் புகுந்திருந்தார்கள்

**தங்கநகர் கிளிவெட்டி** என்ற ஊரிலிருந்து அகதிகளாக வந்திருந்த **சதாசிவம்** என்பவர் அதிர்ச்சி தரும் ஒரு தகவலைக்கூறினார். **அவருடைய கிராமத்தைச் சுற்றி வளைத்துக் கொண்ட சிங்கள இராணுவம் அந்தக் கிராமத்திலிருந்த மொத்த இளைஞர்கள் 42 பேர்களையும் படுகொலை செய்து விட்டது என்று அவர் கூறினார் அந்தக் கிராமத்தில் இப்போது இளைஞர்கள் மருந்துக்குக்கூட இல்லை. எல்லோரும் இறந்து போனார்கள். வயதானவர்களும், குழந்தைகளும் மட்டுமே மீதம் இருக்கிறார்கள் என்று சொல்லி அவர் அழுதார்**

இதைத் தொடர்ந்து இந்தக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். அங்கேயும் அவர்களை நிம்மதியாக வாழச்சிங்கள இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. அகதிகள் முகாம்களுக்குச் சென்று அங்குள்ள தமிழர்களையெல்லாம் அடித்துச் சித்திரவதை செய்துவிட்டு இளம் பெண்களாக 50 பேரைத் தேர்ந்தெடுத்து லாரிகளில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டார்கள். இச் செய்தியைக் **கேள்விப்பட்ட விடுதலைப் புலிகள் உடனடியாக** விரைந்து வந்தார்கள். **தெகிவத்தை** என்ற இடத்திற்கு அருகே ஒரு பாலத்திற்கு அடியில் இந்த 50 பெண்களையும் கொண்டு போய் அவர்களைக் கற்பழிக்கும் முயற்சியில் சிங்கள வெறியர்கள் ஈடுபட்டனர். நல்ல வேளையாக உரிய நேரத்தில் விடுதலைப் புலிகள் அங்குபோய்ச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேர்ந்தனர். விடுதலைப் புலிகளைக் கண்டவுடன் சிங்களக் கோழை கள் ஓடிவிட்டனர். அந்த 50 சகோதரிகளையும் மீட்டுப்பத்திரமாக அழைத்து வந்து அவர்களது உறவினர்களிடம் புலிகள் ஒப்படைத் தனர். ஒரு சிங்கள வெறியன் உயிருடன் புலிகளால் பிடிக்கப்பட்டான். மற்றவர்கள் ஆயுதங்களைப் போட்டு விட்டு ஓடிவிட்டார்கள். மறு நாள் சிங்களப் பெரும்படை ஒன்று தெகிவத்தை கிராமத்தை நோக்கி வந்தது. இதனையும் விடுதலைப் புலிகள் எதிர்த்துத் தாக்கினார்கள். இதன் விளைவாக 9 சிங்களச் சிப்பாய்கள் இறந்தனர். பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.


**சித்திரவேலு** என்ற இன்னொருவர் மிகவும் பரிதாபத்திற்குரியவர். அவருடைய கதை நெஞ்சைப் பிழியவைக்கும் கதை. **அவருடைய ஒரு குடும்பத்தில் மட்டும் 16 பேரைச் சிங்கள வெறியர்கள் ஈவு இரக்கம் இல்லாமல் கொன்று குவித்தனர்.** அவர் மட்டுமே உயிர் தப்பியிருக்கிறார். பைத்தியம் பிடித்த நிலையில் அவர் இருப்பதைப் பார்த்த போது மனம் கலங்கினேன். இப்படி ஏராளமான பேர் தங்களுடைய சோகக் கதைகளையெல்லாம் சொன்னார்கள்.

பூசா சிறை முகாமில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகிச்சமீபத் தில் விடுதலைடைந்த சிலபேரையும் இங்குச்சந்தித்தேன்.

பிறகு அங்கிருந்து **சேனையூர், கட்டைப்பறிச்சான்** முதலிய ஊர் களுக்குப் போனோம். என்னை அப்பகுதிகளுக்கு அழைத்துச் சென்ற இப்பகுதித் தளபதி **கணேசன்** நிறையத் ததவல்களைத் தெரிவித்தார். கட்டைப்பறிச்சான் அருகே சிங்கள இராணுவ ஜீப் வண்டியைக்கண்ணி வெடி வைத்துப்புலிகள் தகர்த்த இடத்தைக் காட்டினார்கள். இடுப்பள வுக்குப் பெரும் பள்ளமும் அதன் அருகே ஜீப் வண்டி நொறுங்கிக் கிடப் பதையும் நான் பார்த்தேன். இந்த இடத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் சிங்கள இராணுவ முகாம் ஒன்று இருப்பதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கல்லடி, வாழைத்தோட்டம் மல்லிகைத்தீவு, ஈச்சியலம்பத்தை, வெருகல்முகத்துவாரம், சங்குவேலி, மீங்காமம், கிளிவெட்டி போன்ற பல கிராமங்கள் சிங்கள வெறியர் களால் நாசப்படுத்தப்பட்டிருப்பதையும் நான் பார்த்தேன்.






# 32. தமிழன் துறைமுகம்

திருகோணமலைக்கும், தமிழர்களுக்கும் உள்ள தொடர்பு என்பது மிகப் பழமையானது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. பிற்காலச் சோழர் காலத்திலிருந்தே திருகோணமலை தமிழர்களுக்குச் சொந்தமான துறைமுகமாக விளங்கிவந்தது. தென்கிழக்காசியா முழுவதிலும் சோழர் களின் புலிக்கொடி வெற்றிகரமாகப் பறந்த காலத்தில் திருகோணமலை முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. தமிழ்நாட்டிலிருந்து தென் கிழக்காசிய நாடுகளை நோக்கிப் படையெடுத்துச் சென்ற சோழநாட்டுக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் தங்கியே சென்றன. சோழப் பேரரசர்கள் இத்துறைமுகத்தைத் தங்களின் கடற்தளமாகப் பயன்படுத்தினர். **தட்சிணகைலாசம்** என்று அழைக்கப்பட்ட திருக் கோணேஸ்வரம் ஆலயத்திற்குச்சோழ, பாண்டிய மன்னர்கள் ஏராள மான மானியங்களையும், நிவந்தங்களையும் அளித்திருக்கிறார்கள்.

**முதலாம் இராஜராஜசோழன்** திருகோணமலையில் தனது பெயரால் ஒரு புத்தப்பள்ளியைக் கட்டினான். அது **இராஜராஜப்பெரும் பள்ளி** என வழங்கப்பட்டது.

சோழர்களின் **வேளக்காரப்படை** இங்கு நிரந்தரமாகத் தங்கி யிருந்தது. இது குறித்த பல கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

**நிலாவெளி** என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டுத்திருகோணமலைக் கோவில் பற்றிய பல உண்மைகளை எடுத்துச் சொல்கிறது. திருக்கோணேஸ்வரம் ஈஸ்வரனைச்சம்பந்தரும், சுந்தரரும் பாடியுள்ளனர். சிங்களவரின் மூதாதையான **விஜயன்** இலங்கை மண்ணில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னாலிருந்தே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருக்கோணேஸ்வரம் கோவில் இருந்துவருகிறது என்பது சரித்திரப்பூர்
வமான உண்மையாகும். சிங்கள வரலாற்று ஆசிரியரான **டாக்டர்**
**பால்பேரிஸ்** என்பவரே **இதனை ஒப்புக்கொண்டுள்ளார்.**

எல்லா வகையிலும் தமிழர்களின் பூமியான திருகோணமலையி
லிருந்து இப்போது தமிழர்கள் சிங்களவரால் விரட்டியடிக்கப்படு
கிறார்கள். **1827**-ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் **1.30**சத
விகிதம் மட்டுமே இருந்த சிங்களவர்கள் **1981**-ம் ஆண்டில் **31.62** சத
விகிதமாகப்பெருகியிருக்கிறார்கள். சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுச்
சிங்களவர்களைக் குடியேற்றி அதை முழுமையாகச்சிங்கள மாவட்ட
மாக்க முயற்சி செய்கிறது.

திருகோண மலை மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு நான்
சென்றபோது பல திடுக்கிடும் தகவல்களை அங்கிருந்தவர்கள் எனக்குச்
சொன்னார்கள். திருகோணமலை துறைமுகத்தில் பல்வேறு தொழில்
களைத் தொடங்க அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளைச் சேர்ந்த
தொழில் அதிபர்களை சிங்கள அரசு வற்புறுத்தி வருகிறது. ஜப்பானியக்
கூட்டுறவுடன் இங்கு ஒரு பிரம்மாண்டமான ***சிமெண்ட்*** தொழிற்சாலை
தொடங்கப்பட்டிருக்கிறது. இதைப் போல மேலும் பல தொழிற்
சாலைகளைத் தொடங்கி இவற்றில் வேலை பார்க்கச்சிங்களத் தொழி
லாளர்களைக் கொண்டு வந்து குடியேற்றி, இதை சிங்கள மாவட்ட
மாக்கத் திட்டமிட்ட சதி நடைபெறுகிறது.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இங்கு கட்டப்பட்டிருந்த பிரம்மாண்
டமான எண்ணெய்க் கிடங்குகளை இப்போது அமெரிக்காவுக்குக்
குத்தகைக்கு விடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. **1981**-ம்
ஆண்டில் ஒரு அமெரிக்க கம்பெனிக்கு இதை குத்தகைக்குவிட முயற்சி
நடைபெற்றபோது தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளு
மன்ற உறுப்பினர்கள் கண்டனக் குரல் எழுப்பி இதை எதிர்த்துப்
போராடினார்கள். ஆனாலும் இந்த முயற்சியை சிங்கள அரசு
இன்னமும் கைவிடவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது ஒரு சதித்திட்டத்தைச்
சிங்கள அரசு வகுத்திருப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தார்கள்.
இதன்படித்திருகோணமலை மாவட்டம் பல பிரிவுகளாகப்பிரிக்கப்படும்.
ஒவ்வொரு பிரிவும் அடுத்துள்ள சிங்கள மாவட்டத்துடன் இணைக்
கப்படும். இதன் மூலம் சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள
மாவட்டங்களோடு திருகோணமலை மாவட்டத்தின்பலபகுதிகள்பிரிந்து
இணைக்கப்படுமேயானால் திருகோணமலை மாவட்டமே இருக்காது.



அதைப் போலவே வடக்கு–கிழக்கு மாநிலங்களை இணைத்துக்
கொண்டிருக்கும் பல பகுதிகளைப் பிரித்தெடுத்துச்சிங்கள மாவட்டங்
களுடன் இணைக்கத் திட்டமிட்ட முயற்சியில் அவர்கள் ஈடுபட்டி
ருப்பதாகவும் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். வடக்கு-கிழக்கு
மாநிலங்களிலிருந்து எந்தப் பகுதியையும் பிரிக்கக் கூடாது என்பது
அரசியல் யாப்பு ஆகும். அதையும் மீற முயலுகிறார்கள் என்பதையும்
கூறினார்கள்.

போர் நிறுத்த உடன்பாட்டிற்குப்பின் திருகோணமலை மாவட்டத்
திலிருந்து மட்டும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக
விரட்டியடிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் என்னிடம்
கூறினார்கள்.

"திருகோணமலை மாவட்டத்தைச் சிங்களமயமாக்க ஏன்
ஜெயவர்த்தனா முயலுகிறார்?" என்று நான் கேட்டபோது அவர்கள்
பின்வருமாறு சொன்னார்கள்.

"திருகோணமலைத் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் ஈழத்
தமிழர்களின் நலன்களும் இந்தியாவின் நலனும் ஒன்று என ஜெயவர்த்
தனா நினைக்கிறார். திருகோணமலையில் தமிழர்கள் அதிகம் இருப்
பது இந்தியாவின் நலன்களுக்கு உதவி செய்வதாகும். இங்கிருந்து
தமிழர்களை முழுமையாக அகற்றினாலொழிய தாங்கள் நினைக்கிறபடி
இதை அமெரிக்காவுக்கோ வேறு வல்லரசுக்கோ தாரைவார்க்க முடி
யாது என ஜெயவர்த்தனா நினைக்கிறார். ஆகவேதான் தமிழர்களை
விரட்டியடிக்க முயலுகிறார்" என்று அவர்கள் சொன்னார்கள்.

"இந்திராகாந்தி உயிரோடு இருந்தகாலம்வரை திருகோணமலை
மாவட்டத்திதிலுள்ள தமிழர்க்ளுக்கு எந்தவிதமான கேடும் வரக்கூடாது
என்பதில் உறுதியாக இருந்தார். அம்மாவட்டத்தின் அமைப்பிலும்
எத்தகைய மாற்றமும் செய்யப்படக் கூடாது என்பதிலும் கண்டிப்பாக
இருந்தார். அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்பு இந்தியாவுக்கு
ஏற்படும் பாதிப்பு என்று அவர் கருதினார். எனவே அவர் உயிரோடு
இருந்தவரை திருகோணமலையிலுள்ள தமிழர்களைத் தாக்க ஜெய
வர்த்தனா துணியவில்லை. இந்திராவின் மறைவிற்குப் பின்னர்தான்
எங்களுக்கு இந்தக்கதி ஏற்பட்டிருக்கிறது" என்று அவர்கள் வருத்தத்
தோடு கூறினார்கள்.

பிரதமர் ராஜீவ் செய்யும் மற்றொரு மாபெரும் **தவற்றையும்**
அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைப்பதை ஜெயவர்த்தனா தொடர்ந்து எதிர்த்துவருகிறார். அவர் அவ்வாறு எதிர்ப்பதின் உள் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் ராஜீவ் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். வடக்கும்-கிழக்கும் இணைக்கப்பட்டு ஒரே மாநிலமாக ஆக்கப்பட்டால்தான் திருகோணமலை தமிழர்கள் 'கையில் இருக்கும்' கிழக்கு மாநிலம் தனியாகப் பிரிக்கப்படுமானால் திருகோணமலை தமிழர்கள் கையில் இருக்காது. திருகோணமலை தமிழர்கள் கையில் இருக்கும் வரையில் இந்தியாவுக்கு ஆபத்தில்லை. திருகோணமலை சிங்களவர்கள் கையில் இருக்குமானால் இந்தியாவுக்கு நிரந்தரமான ஆபத்து ஏற்படும். இந்த உண்மையைக்கூட உணராமல் பிரதமர் ராஜீவ் காந்தி செயல்படுவதை பார்த்து நாங்கள் எல்லோரும் அதிர்ச்சியடைந்திருக்கிறோம்" என்று அவர் கூறினார்.







# 33. நாசம் ! சர்வநாசம்!

திருகோணமலை மாவட்டதைச் சேர்ந்த மூதூருக்கு நான் சென்றபோது அங்குள்ள பிரஜைகள் குழுவினரை நான் சந்தித்தேன். மூதூர்ப்பகுதியிலுள்ள சேனையூர், கட்டைப்பறிச்சான், கூனித்தீவு ஆகிய இடங்களில் சிங்கள இராணுவம் நடத்திய அட்டூழியங்களைப் பற்றி அவர்கள் வேதனையோடு விவரித்தார்கள்.

1984-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதியன்று 'கடற்கரைச் சேனைக் கடலில் சிங்களக் கடற்படைப் பீரங்கிப் படகுகளில் விடியற்காலம் 3 மணி சுமாருக்கு இராணுவத்தினர் வந்திறங்கினார்கள். பீரங்கிப் படகுகள் வரும் சப்தமும் கடற் கரையில் இராணுவம் இறங்கும் சப்தமும் அந்த இரவு நேரத்தில் மக்களுக்குத் தெளிவாகக் கேட்டன.

அதிகாலைப் பொழுதில் பீரங்கிப் படகுகள் கடற்கரையை நோக்கிச் சுடத் தொடங்கின. குண்டுகள் பாய்ந்துவந்து வீடுகளையும் கட்டிடங்களையும் தாக்கிச் சிதறடித்தன. மக்கள் அஞ்சிச் சிதறி அங்குமிங்கும் ஓடினார்கள்.

சேனையூரிலுள்ள வருணகுல விநாயகர் கோவிலில் பெரும்பாலோர் அடைக்கலம் புகுந்தார்கள்.

கடற்கரையில் வந்திறங்கிய சிங்கள இராணுவத்தினர் இயந்திர துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டே சேனையூர் நோக்கி முன்னேறிவந்தார்கள். வழிநெடுக உள்ள வீடுகளையெல்லாம் கொளுத்தினார்கள். வரும்வழியில் மகேந்திரன் அரசன் ரத்தினம், வெங்கடாசலம், அந்தோணிபிடாரி, பீட்டர் சிங்கம் ஆகிய நால்வரை இராணுவத்தினர் கைது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தார்கள். இந்த நால்வரையும் பிடித்துக்கொண்டுபோய் அருகிலிருந்த தம்பிராசா காளிராசா என்பவர் வீட்டிற்குள் நுழைந்தார்கள். முதல் மூவரையூ காளிராசாவின் வீட்டிற்குள் வைத்தே சுட்டுக் கொன்றார்கள். பிறகு அந்த வீட்டைக் கொளுத்தினார்கள். பிறகு கதிர்காமத் தம்பி என்பவர் வீட்டிற்குள் சென்று அவரையும் சுட்டுக் கொன்றார்கள். அதைத் தொடர்ந்து முத்துலிங்கம் தர்மலிங்கம் என்பவர் வீட்டிற்குள் போய் அவரையும் அவருடைய 21 வயது மகன் மோகனராசாவையும் சுட்டுக் கொன்றார்கள்.

இதற்கிடையில் விநாயகர் ஆலயத்திற்குள் இராணுவத்தினர் புகுந்து அங்கு அடைக்கலம் புகுந்த மக்களைக் கடுமையாகத் தாக்கினார்கள். அதில் ஏராளமானவர்கள் காயமடைந்தார்கள். அங்கிருந்த விக்ரகங்களை உடைத்து நொறுக்கினார்கள். விநாயகர் ஆலயத்திற்குள் சிங்கள இராணுவத்தினர் இவ்வாறு தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தபோது ஆலயத்திற்கு மேலாக இரண்டு ஹெலிகாப்டர்கள் பறந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன.

அந்தக் கிராமத்தில் பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர். மாலை 5½ மணிவரை சேனையூர் கிராமத்தை நிர்மூலமாக்கிய சிங்கள இராணுவத்தினர் பிறகு அங்கிருந்து **சம்பூர்** என்ற கிராமத்திற்குச் சென்று இரவு அங்கு தங்கினார்கள்.

பிறகு 9-ம் தேதியன்று காலை கூனித்தீவு கிராமத்திற்கு சென்று அங்குள்ள வீடுகளுக்குத் தீ வைத்தார்கள். அதே நேரத்தில் பீரங்கிப் படகுகளும் அந்தக் கிராமத்தைக் குறிவைத்துச் சுட்டன. அதே நேரத்தில் விமானப் படையைச் சேர்ந்த விமானத்திலிருந்து இந்தக் கிராமங்களுக்கு அருகிலிருந்த காடுகள் மீது குண்டுவீசி அவற்றையும் கொளுத்தினார்கள். இந்தக் குண்டுகள் யாவும் நெருப்புக் குண்டுகள். வெடித்த இடமெல்லாம் உடனே தீப்பிடிக்க வைக்கும் சக்தி வாய்ந்தவை. இந்தத் தாக்குதல் சுமார் 1 மணி நேரத்திற்கு நடந்தது. திருகோணமலை நகரில் வாழ்ந்த மக்கள் **கூனித்தீவு கிராமத்தின் மீது** நடத்தப்பட்ட விமானத் தாக்குதலைப் பார்த்தார்கள். **அந்த அளவுக்கு** இந்தத் தாக்குதல் வெளிப்படையாகத் தெரிந்தது.

10-ம் தேதியன்று மாலை 4½ மணிக்குச் சேனையூர்க் கிராமத்தின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. ''பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்'' என்பது போல அவ்வூர் விநாயகர் ஆலயத்திலிருந்த மக்கள் மீது ஹெலிகாப்டரிலிருந்து சுட்டார்கள். ஆலயக் **கூரையைத் துளைத்துக்கொண்டு உள்ளேபாய்ந்த குண்டுகள்** பலரைப்



படுகாயப் படுத்தின. விநாயகர் ஆலயம் முழுவதும் இரத்தம் திட்டுத் திட்டாகப் பரவிக்கிடந்தது.

11-ம் தேதியன்று மீண்டும் இராணுவம் சேனையூர்க் கிராமத்திற்குள் புகுந்து அதை முழுமையாகக் கொளுத்தி நாசப்படுத்தியது.

இந்த ஊர்களை நான் சுற்றிப் பார்த்தபோது பிரஜைகள் குழுவினரும் மக்களும் சொன்ன செய்திகள் யாவும் உண்மை என்பதைக் கண்டேன். நல்ல கட்டிடங்களும், கடைகளும், வீடுகளும் முற்றிலுமாகச் சேதமடைந்து கிடந்தன.

நான் சென்று பார்த்து விட்டு வந்த பிறகும்கூட மற்றொருமுறை இராணுவத்தினர் இந்த ஊர்களிலுள்ள அகதிகளின் முகாம்களிலிருந்த மக்களைத் தாக்கினார்கள் என்பதை அறிந்தேன்.

தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள். ஆலைகள், ஆலயங்கள், கல்லூரிகள், மருத்துவ மனைகள், வயல்கள், நிலங்கள் ஆகியவற்றை சிங்கள அரசு திட்டமிட்டுச்சுவீகரிக்கிறது. அந்த இடங்களில் சிங்கள இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. காங்கேசன்துறை, ஏராவூர், பலாலி, வவுனியா போன்ற பகுதிகளில் இவ்வாறு திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அருகாமையிலிருந்த மருத்துவ மனைக் கட்டிடம், சுகாதார வைத்திய அலுவலகம் ஆகியவற்றைச் சிங்கள இராணுவத்தின் உபயோகத்திற்குத் தேவையெனச் சிங்கள அரசு எடுத்துக் கொண்டுள்ளது.


இஸ்லாமிய குழந்தைகள் கல்வி பயிலும் ஏராவூர் 'அலிகார்மகா வித்யாலயம்' என்ற பள்ளிக்கூடத்தினைச் சிங்கள இராணுவம் கைப்பற்றி குடியேறியிருக்கிறது. பலாலியில் இருந்த தமிழர்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களும் வீடுகளும் இராணுவ முகாம்களுக்குத் தேவையென எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன. இப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நமது மாணவர்களின் கல்விக்கு உலைவைப்பதன் மூலம் தமிழ் இனத்தின் எதிர்காலத்தை அழித்திடத் திட்டமிட்டுச் செயல்பட்டுவருகிறது சிங்கள அரசு. 3-12-'85 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தகவலின்படி யாழ்ப்பாணத்தில் 555 பாடசாலைகளும் மன்னாரில் 105 பாடசாலைகளும், முல்லைத் தீவில் 85 பாடசாலைகளும், வவுனியாவில் 120 பாடசாலைகளும், மட்டக்களப்பில் 255 பாடசாலைகளும், திருகோணமலையில் 208 பாடசாலைகளும், அம்பாறையில் 107 பாடசாலைகளும், கல்முனையில் 17 பாடசாலைகளுமாக மொத்தம் சுமார் 1500-க்கு மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 34. புலிகளிடம் சொல்லுங்கள்

யாழ் பிரஜைகள் குழுத்தலைவரான திரு. இரா. பாலசுப்ரமணியம் அவர்களையும் மற்றும் உறுப்பினர்களையும் சந்தித்தேன். திரு. பாலசுப்ரமணியம் யாழ்ப்பாணத்திலுள்ள புகழ்பெற்ற சட்டத்தரணிகளில் ஒருவராவார். எல்லோரும் இவரைப்பாலா என அன்புடன் அழைக்கிறார்கள்.

இராமேஸ்வரம் மீனவர்களின் படகுகளைச்சிங்களக் கடற்படைக் கைப்பற்றியது அல்லவா? அது சம்பந்தமான வழக்குகளில் இராமேஸ்வரம் மீனவர்களுக்காக வாதாடியவர் இவர். 1984-ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் இராமேஸ்வரம் மீனவர்களுக்குச் சொந்தமான நான்கு படகுகளைச்சிங்களக் கடற்படையினர் கைப்பற்றினர். மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். 1985-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் இந்திய அரசின் முயற்சியின் காரணமாக விடுவிக்கப்பட்டனர். அவர்கள் விடுதலை செய்யப்படும்வரை இந்த மீனவர்கள் மீது குற்றப் பத்திரிக்கையை சிங்கள அரசு தாக்கல் செய்யவில்லை.

திரு. பாலா அவர்கள் யாழ் உயர்நீதி மன்றத்தில் இராமேஸ்வரம் மீனவர்களின் சார்பில் ஒரு மனுவினைக் கொடுத்தார். படகுகளைப் போலீஸ் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டுமென்று கோரினார். அதன்படி உயர்நீதிமன்றம் போலீஸ் காவலில் படகுகளை வைத்திருக்க ஆணை பிறப்பித்தது.

கவனிப்பாரற்ற நிலையில் படகுகள் முற்றிலுமாகச்சீர்குலைந்து போய்விட்டன. இதை அறிந்த திரு. பாலா உயர்நீதிமன்றத்தில்



மற்றொரு மனுவினைத்தாக்கல் செய்தார். போலீசாரிடம் எந்த நிலையில் படகுகள் ஒப்படைக்கப்பட்டனவோ அதே நிலையில் படகுகளைத் திருப்பித் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். உயர்நீதி மன்றமும் இந்த மனுவை ஏற்றுக் கொண்டு இந்தப் படகுகளைப்பழுது பார்த்துக் கொடுக்கும்படி உத்தரவிட்டது.

படகுகள் சேதமானதிற்கு இராணுவத்தினர்தான் காரணம் என்று அரசு அதிகாரிகளும், தாங்கள் அவற்றுக்குப் பொறுப்பல்ல என்று இராணுவ அதிகாரிகளும் கையை விரித்தார்கள். இதற்கிடையில் ஒரு நாள் இந்த நாலு படகுகளும் மர்மமான முறையில் எரிந்து கிடந்தன. இராணுவம்தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இந்தப் படகுகளில் ஒன்று இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பொன்னாளி கணேசன் என்பவருக்குச் சொந்தமானது. இந்தப் படகின் எண் ஆர். என். 107 என்பதாகும். இந்தப் படகு ஒரு இலட்சத்து இருபத்தாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபாய் பெறும் என மதிப்பிடப் பட்டது. இந்த அடிப்படையில் இந்த நான்கு படகுகளுக்கும் நஷ்டஈடு தர வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் திரு. பாலா மனுச் செய்தார். அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை. நஷ்டஈடு கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. உடனே அரசு வழக்குரைஞர் இந்திய ஹைகமிஷனர் மற்றும் சிங்கள அதிகாரிகளுடன் பேசி முடிவு சொல்வதாக வாய்தா கேட்டார். உயர்நீதி மன்றமும் வாய்தா கொடுத்தது.

இந்திய அரசுத்தரப்பிலிருந்து இலங்கை அரசை நெருக்கினால் இந்த நான்கு படகுகளுக்கும் நஷ்டஈடு கிடைத்துவிடும் என்று திரு. பாலா கூறினார். நானும் இந்தியா திரும்பிய பிறகு சம்பந்தப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களுக்கு விவரத்தைத் தெரிவித்து இந்திய அரசுக்கு மனு செய்யும்படி கூறினேன். இந்திய வெளிநாட்டுத் துறைக்கும் இந்த விவரத்தைத் தெரியப்படுத்தினேன். இந்தியப் பிரதமரைச் சந்திக்கும்போது இந்தப் பிரச்னையைத் தெரியப்படுத்தலாம் எனவும் திட்டமிட்டிருந்தேன். ஆனாலும் இந்திய அரசின் அலட்சியப்போக்கின் காரணமாக இராமேஸ்வரம் மீனவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான நஷ்டஈடு இன்னமும் கிடைக்கவில்லை. திரு. பாலா போன்றவர்கள் தன்னலமற்ற முறையில் எதையும் எதிர்பார்க்காமல் நம்முடைய மீனவர்களுக்காக வாதாடி உயர்நீதிமன்றத்தில் வெற்றிபெற்றும் பயன் இல்லாமல் போகக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது.

திரு. பாலா அவர்களின் இல்லத்திலேயே யாழ்பிரஜைகள் குழு உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள் ஏராளமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவரங்களைத் தெரிவித்தார்கள். போர்நிறுத்தம் என்பது ஒரு முழுமையான மோசடி என்பதை அவர்கள் அம்பலப்படுத்தினார்கள். போர் நிறுத்தத்திற்கு முன்னால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் சாலையில் இரண்டு இடங்களில்தான் சோதனைச்சாவடிகள் அமைக்கப் **பட்டிருந்தன.** போர்நிறுத்தத்திற்குப் பிறகு 15 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. சோதனைச்சாவடிகளில் தமிழர்கள் அவசியமில்லாத கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே இந்த சோதனைச்சாவடிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று பிரஜைகள் குழுவினர் தேசியப்பாதுகாப்பு அமைச்சரான லலித் அதுலத் முதலியிடம் முறையிட்டனர். ஆனால் எவ்விதப் பயனும் இல்லை.

''இவையெல்லாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்குள் வரவில்லை'' என்று அவர் கூறினார்.

பூசா சிறை முகாம்களிலுள்ள கைதிகளுக்கு மாற்று உடை என்பது அறவேயில்லை. அரசுக்குத் தெரியப்படுத்தியும்கூட மாற்றுடை தருவிப்பதற்கான எந்த ஏற்பாட்டையும் அரசு செய்யவில்லை. பிறகு யாழ் பிரஜைகள் குழுவின் சார்பில் 500 கைதிகளுக்கு மாற்றுடைகள் வாங்கி அனுப்பப்பட்டன.

பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டப்படி யாரைக் கைது செய்தாலும் குற்றச்சாட்டுத்தாக்கல் செய்யாமல் 15 மாதங்களுக்குமேல் சிறையில் வைத்திருக்கக் கூடாது. பெரும்பாலானவர்கள் விஷயத்தில் குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யப்படுவதில்லை. கைது செய்யப்படு **பவர்கள்** பல்வேறு இராணுவ முகாம்களில் **மாறிமாறி** அடைத்துவைத் திருந்து சித்திரவதைகள் செய்து அதற்குப் பின்னால்தான் சிறை முகாம் களுக்கு அனுப்பப்படுகிறார்கள். சிறையில் அடைக்கப்பட்ட நாள் தான் அவர் கைது செய்யப்பட்ட நாள் எனக்கணக்கிடுகிறார்கள். இராணுவ முகாம்களில் பல மாதங்கள் வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றைக் கணக்கில் சேர்ப்பதில்லை.

மனித உரிமைகளை எவ்வளவு **அப்பட்டமாகச்** சிங்கள அரசு மீறுகிறது என்பதற்கு இது ஒரு சரியான உதாரணமாகும் என்பதை பிரஜைகள் குழு உறுப்பினர்கள் என்னிடம் சுட்டிக்காட்டினார்கள்.

தமிழர்கள் மத்தியிலும் சிங்களவர்கள் மத்தியிலும் லலித்அதுலத் முதலியின் செல்வாக்கினைக் குறைக்கத் திட்டமிட்டு **ஜெயவர்த்தனா** செயல்படுகிறார் என்பதையும் **தமது** மகன் ரவியைத் **தமக்குப்** பின் அரியணையில் ஏற்ற ஜெயவர்த்தனா விரும்புகிறார் என்பதையும்



அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் பிரதமர் '**பிரேமதாசா** **தமக்கு**' என்று சொந்த குண்டர் படை வைத்துள்ளார். எனவே அவர் இறுதிவரை எதிர்த்துப் போராடுவார் என்பதையும் அவர்கள் கூறினார்கள்.

சிங்கள இராணுவ வீரர்கள் மத்தியிலும் வெறுப்பும் விரக்தியும் குழப்பமும் நிலவிவருவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். இராணுவ முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிற கைதிகளிடம் சிங்களச் சிப்பாய்கள் பின்வருமாறு கூறினார்களாம். 'நீங்களும் சாகிறீர்கள் நாங்களும் சாகிறோம். எங்களை ஏன் சுடுகிறீர்கள், லலித் போன்றவர்களைச்சுடக் கூடாதா'' என அவர்கள் கேட்டதாகக் கூறினார்கள்.

1985-ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன்பு இலங்கை அரசின் நிலை வேறுவிதமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் தீவிரமான தாக்குதல்களினால் சிங்கள இராணுவத்திற்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்தது. உள்நாட்டில் பொருளாதாரச் சீர்குலைவும் அந்த அரசை ஆட்டம் காணச் செய்துகொண்டிருந்தது. இந்த நிலைமையில் எப்படியாவது ஒரு போர் நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சிங்கள அரசு விரும்பியது. ''பிரஜைகள் குழு உறுப்பினர்களை அழைத்துப்போர்நிறுத்தம் வேண்டுமென்று நீங்கள் ஏன் தீர்மானம் போடக்கூடாது'' என்று லலித் தூண்டினார். ஆனால் அவர் விரித்த வலையில் விழப்பிரஜைகள் குழு மறுத்துவிட்டது. **ஆனால் இந்திராவின் மறைவையொட்டி இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் போர்நிறுத்தம் கொண்டுவர ராஜீவ் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் இலங்கை அரசுக்குத்தான் உதவியாயிருக்கிறது என்பதை அவர்கள் கவலையோடு தெரிவித்தார்கள்.**

''பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் ஆட்சியின் கீழ் ஒரு அடி நிலங்கூடக் கிடையாது. ஆனாலும் இந்த அமைப்பை இந்தியா அங்கீகரித்துள்ளது. வேண்டிய உதவிகளைச் செய்கிறது. ஆனால் தமிழீழ விடுதலைப் போராளிகள் தமிழீழ மண்ணிலிருந்து கொண்டுதான் போராடுகிறார்கள். எங்கள் மண்ணை நாங்கள் முற்றிலுமாக இழந்துவிடவில்லை. ஆனாலும் எங்களை அங்கீகரிக்க ஏன் இந்தியா மறுக்கிறது என்று அவர்கள் கேட்டபோது என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

''சைப்ரசில் துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்குமிடையே போர் மூண்டபோது எந்தெந்தப் பகுதி யார் வசமிருக்கிறதோ அந்தந்தப்பகுதி அவர்களுக்குச் சொந்தம் என்னும் கொள்கையை இந்தியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலியுறுத்தியது. துருக்கியர்கள் வாழும் பகுதி அவர்களுக்கும் கிரேக்கர்கள் வாழும் பகுதி அவர்களுக்குமாகப்பிரிக்கப்பட வேண்டும் என இந்தியா வாதாடியது. அதைப்போலத்தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் தமிழர்களுக்கே சொந்தமாக வேண்டும் என்பதை ஏன் இந்தியா அங்கீகரிக்க மறுக்கிறது என்று அவர்கள் கேட்டார்கள். 'Effective control theory was applied in cyprus by India' ஆனால் இந்தக் கொள்கையை இலங்கையின் தமிழர்கள் பிரச்சனையில் கடைப்பிடிக்க இந்தியா ஏன் தயங்குகிறது'' என்று அவர்கள் கேட்டார்கள்.

''நியாயமான கேள்விதான்'' என்று நான் சொன்னேன்.

பிரஜைகள்குழு உறுப்பினர்கள் ஜெயவர்த்தனாவைச் சந்தித்த விஷயம் மிக முக்கியமானது. இந்தக் குழுவினர் ஜெயவர்த்தனாவை சந்தித்து அப்பாவிப்பொதுமக்களை இராணுவம் கண்டபடி சுடுவது பற்றிப் புகார் செய்தார்கள். இதைக் கேட்டதும் ஜெயவர்த்தனா கடும் எரிச்சல் அடைந்தார் ''Go and tell it to the Tigers'' என்று அகம்பாவமாகக் கூறினாரார். மொத்தத்தில் பிரஜைகள் குழுவினரையே பயங்கரவாதிகள் எனக் கருதி அவர் பேசினார் என்றும் இவர்கள் வருத்தத்தோடு தெரிவித்தார்கள்.

''திருகோணமலையிலுள்ள நிலைமை அப்படியே காக்கப்பட வேண்டும் என்பதில் இந்திரா உறுதியாக இருந்தார். எனவே அவர் உயிருடன் இருந்தவரைக்கும் திருகோணமலையைத் தாக்கவோ அங்குள்ள தமிழர்களை விரட்டியடிக்கவோ ஜெயவர்த்தனா துணியவில்லை. ஆனால் இந்திராவின் மறைவுக்குப் பிறகு திருகோணமலையை தாக்கி அங்குள்ள தமிழர்களை விரட்டியடித்துவிட்டு முழுக்கமுழுக்க அப்பகுதியைச்சிங்களமயமாக்குவதில் ஜெயவர்த்தனா தீவிரமாக ஈடுபட்டுவிட்டார்'' என்பதையும் அவர்கள் மிகுந்த வேதனையோடு எடுத்துக்காட்டினார்கள்.

''இந்திரா உயிரோடிருந்தபோது இங்குள்ள பிரச்னைகளைப் பற்றி அவருக்கு நாங்கள் தெரியப்படுத்தினால் உடனடியாக 'டில்லி'யிலிருந்து ஜெயவர்த்தனாவுக்குத் தாக்கீதுகள் வரும். அதற்கு ஜெயவர்த்தனா அன்று பயந்தார். ராஜீவ் காலத்தில் நாங்கள் என்ன சொன்னாலும் அதை அவர் காதில் வாங்க மறுக்கிறார். இந்த நிலைமை நீடிப்பது நல்லதல்ல'' என்பதையும் அவர்கள் கூறினார்கள்.





# 35. தியாக 'சீலன்'

நான் திருகோணமலைக்குச் சென்றிருந்த போது தோழர்களிடையே பழைய முகங்கள் சிலவற்றையும் கண்டேன். **பஷீர்காக்கா, மதன் கணேஷ்** போன்ற பலரைப்பார்த்துமகிழ்ந்தேன். இவர்களெல்லாம் தமிழ்நாட்டில் இருந்தபோதே என்னுடன் நெருங்கிப் பழகியவர்கள். அவர்களுடன் பழைய நினைவுகளை நான் பகிர்ந்து கொண்டேன். ஆனால் திருகோணமலை மண்ணை மிதித்தபோது என் நினைவில் பசுமையாக நின்றவன் சீலன். ஆனால் அவன் அங்கில்லை.

தன்னுடைய தோழர்களால் **ஆசீர்** என்றும் **சீலன்** என்றும் **இதயசந்திரன்** என்றும் அன்புடன் அழைக்கப்பட்ட **லுகாஸ்சார்லஸ் அன்ரனி** அழகான இளைஞன். புன்னகை பொலியும் அவனது முகத்தையும் பண்பு நிறைந்த பேச்சையும் எவராலும் என்றும் மறக்க முடியாது. எடுத்த எடுப்பிலேயே எவரையும் கவரும் வசீகரம் அவனுக்கு இருந்தது. தலைவர் பிரபாகரனின் உள்ளத்தையே கவர்ந்த தோழன் அவன். பிரபாகரனுடனும் பேபியுடனும் அடிக்கடி வரும் அவன் சென்னையிலுள்ள எனது வீட்டில் பலமுறை தங்கியிருந்திருக்கிறான். பிரபாகரனின் அரசியல் நேர்மையிலும் வாழ்க்கைத் தூய்மையிலும் வழிநடத்தி செல்லும் திறமையிலும் அவன் பரிபூரண நம்பிக்கை கொண்டிருந்தான். அவனது அதிசயமான துணிச்சலும் திட்டமிட்டு போராடும் திறமையும் குறுகிய காலத்தில் அவனை இராணுவப் பிரிவின் தலைவனாக உயர்த்தியது.

அங்கிருந்த அவனது தோழர்கள் சீலனின் இளமைப்பருவ நிகழ்ச்சிகளை எனக்குச் சொன்னார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்லூரியில் அவன் **படித்த** நாட்களிலேயே விடுதலை உணர்வு கொண்டவனாகச் சீலன் திகழ்ந்தான். 1978-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக பதவியேற்கும் நிகழ்ச்சியினை அமர்க்களமாகக் கொண்டாட அரசு திட்டமிட்டது. ஆனால் சீலனோ வேறு வகையாகத் திட்டமிட்டான். அவன் படித்த திருமலை இந்துக் கல்லூரியில் சிறிலங்காவின் தேசியக் கொடியை ஏற்றி வைக்க விமரிசையான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கொடிக் கம்பத்தில் ஏற்றுவதற்குத் தயாராகச்சிங்களக் கொடியைக்கட்டிவைக்கும் பொறுப்பு சீலனிடம் கொடுக்கப்பட்டது. மாணவன் என்ற முறையில் கல்லூரி முதல்வரின் ஆணைக்குச்சீலன் கட்டுப்பட்டு அதைச்செய்தான்.

நிகழ்ச்சி தொடங்கியது. ஆசிரியர்களும் மாணவர்களும் கொடிக் கம்பத்தின் முன் அணிவகுத்து நிற்கிறார்கள். திருமலை அரசு அதிபர் கம்பீரமாக முன்வந்து சிங்கக் கொடியை ஏற்றுகிறார். அனைவரும் அண்ணாந்து பார்க்கின்றனர். கொடி மெல்ல மெல்ல மேலுயர்கிறது. கொடி உச்சிக்குச் சென்றபோது வழக்கம்போலக்கயிற்றை ஒரு சுண்டு சுண்டினார் அரசு அதிபர், கொடி அவிழ்ந்து விரிந்து பறப்பதற்குப் பதில் பற்றி எரிந்து சாம்பலாகிக் கீழே விழுந்தது. அரசு அதிபரும் மற்றவர்களும் திகைத்துச் செயலிழந்து நிற்கிறார்கள். மாணவர்கள் மத்தியிலோ மகத்தான ஆரவாரம். சீலன் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி. "அவன் திட்டம் அவனுக்கு அல்லவா தெரியும்" கொடியைச் சுருட்டிக் கட்டும்போதே உள்ளே "பாஸ்பரஸ்" என்ற இரசாயனத்தையும் வைத்துக் கட்டினான் சீலன். அது உலர்ந்தவுடன் தீப்பிடிக்கும் தன்மை கொண்டது. எனவே அவன் திட்டமிட்டப்படி கொடி பற்றி எரிந்தது, விழா குழப்பத்தில் முடிந்தது. சிங்களப் போலீஸ் மாணவனான சீலனைக் கைதுசெய்து சொல்லொண்ணாத சித்திரவதை செய்தது. பதினெட்டே வயதான சீலன் உறுதியாக நின்றான். தனக்கு இழைக்கப்பட்டக் கொடுமைகளைச் சகித்துக்கொண்டான். தன்னுடைய கூட்டாளிகள் யாரையும் இறுதிவரை அவன் காட்டிக்கொடுக்கவில்லை. 1979-ம் ஆண்டில் புலிப்படை இயக்கத்தில் சேர்ந்த சீலன் குறுகிய காலத்தில் பல மகத்தான சாதனைகளைப் புரிந்தான்.

1981-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாகச் சிங்கள இராணுவத்திற்கு எதிராகக் "கொரில்லா"த் தாக்குதலை வெற்றிகரமாகத் தொடங்கி இரண்டு சிங்கள வெறியர்களைச் சுட்டுத் தள்ளிய பெருமை சீலனுக்கே உரியது.

யாழ்ப்பாணத்தில் **பெரியதும்** அதிகமான பாதுகாப்புக்கொண்டதுமான சாவகச்சேரி போலீஸ் நிலையத்தின் மீது வெற்றிகரமான தாக்குதலை நடத்தி அங்கிருந்த ஆயுதத் தளவாட அறையைத் தாக்கி அத்தனை ஆயுதங்களையும் கைப்பற்றிய பெருமைக்குரியவன் சீலன். இந்தத் தாக்குதலில் சீலன் காயமடைந்தான். இந்தத் தாக்குதல் இலங்கை அரசையே கதிகலங்கச் செய்தது. இதைத் தொடர்ந்து வட மாநிலத்தின் பல போலீஸ் நிலையங்கள் மூடப்பட்டன. வட மாநிலத்தில் போலீஸ் நிர்வாகத்தை முற்றிலுமாகச்சீர்குலைத்தது இந்தத் தாக்குதலாகும். இது போன்ற பல வெற்றிகளை இயக்கத்திற்கு ஈட்டிக் கொடுத்த பெருமைக்குரியவன் சீலன்.



1983-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி சீலனின் சொந்த ஊரான 'மீசாலை' கிராமத்தைச்சிங்களப் படையினர் சுற்றிவளைத்தனர். ஒரு துரோகி காட்டிக் கொடுத்ததால் சிங்கள இராணுவம் தன்னுடைய மறைவிடத்தைச் சுற்றி வளைப்பதை உணர்ந்த சீலனும் அவனுடைய மூன்று தோழர்களும் விரைந்து வெளியேறிக்கொண்டிருந்தபோது இராணுவம் சுடத் தொடங்கியது.

வெட்டவெளியில் தொடர்ந்து முன்னேறவோ, பின் வாங்கவோ முடியாத இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் சிக்கிக் கொண்டனர்.

சீலனின் இயந்திரத்துப்பாக்கி தொடர்ந்து சடசடக்கத் தொடங்கியது. மற்ற தோழர்களும் தொடர்ந்து சுட்டார்கள். ஆனாலும் சீலனின் மார்பில் எதிரியின் குண்டு பாய்கிறது. இரத்தம் பீறிட்டு ஓடச்சீலன் தள்ளாடுகிறான். ஏற்கெனவே இரண்டுமுறை களத்தில் குருதி சிந்தியவன் அந்த வீரன். தன் உயிர் போகவில்லை என்பதை உணர்கிறான். உயிரோடு அகப்பட்டால் அவனைக் கடித்துக்குதறக் காத்திருக்கும் சிங்கள வேட்டை நாய்கள் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வருகின்றனர்.

வேறுவழியில்லை. சீலன் ஒரு திடமான முடிவு எடுக்கிறான்

"என்னைச் சுட்டுக்கொன்றுவிட்டு நீங்கள் பின்வாங்கித் தப்பிச் செல்லுங்கள்" என்று ஆணையிடுகிறான்.

படைத்தலைவனின் கட்டளையைக் கேட்ட இளம் வீரன் திடுக்கிட்டு நிற்கிறான். மீண்டும் தலைவனின் கண்டிப்பான கட்டளை பிறக்கிறது.

"என்னைச்சுடு" புன்னகைதவழும் முகத்துடன் கனமான குரலில் சீலன் கட்டளையிடுகிறான். இலட்சியத்தணலில் புடம்போட்ட சொக்கத் தங்கமாகக் காட்சிதரும் தீரன் சீலனின் தலையில் துப்பாக்கிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குண்டுகள் சீறிப்பாய்கின்றன. தான் நேசித்த தமிழீழ மண்ணை முத்த மிட்டவாறே மடிகிறான் அந்த மாவீரன்.

சாவை யாசித்துப்பெற்றவன் சீலன். தியாக வரலாறு படைத்த வன் சீலன். சிங்களவர்களுக்குக் காலனாக விளங்கியவன் சீலன். தமிழர் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்தவன் சீலன்.

அவனை ஈன்றெடுத்த திருகோணமலை மண்ணில் நின்று கலங் கியகண்களுடன் அவனுக்கு அஞ்சலி செலுத்தினேன்.

## வீர மதனன்

கூனித்தீவுப்புலிகள் முகாமில் நாங்கள் தங்கியிருந்தபோது சில மணி நேரத்திற்கு ஒருமுறை இலங்கையின் பல பகுதிகளிலும் நடை பெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை எனக்கு உடனுடக்குடன் தெரிவித்தார்கள். இது தவிர இந்தியாவிலிருந்து வானொலிமூலம் ஒலிபரப்பு ஆகும் செய்திகளை அவ்வப்போது வானொலி மூலம் நான் கேட்கும்படிச் செய்தார்கள். இலங்கையின் பல பகுதிகளிலிருந்து உடனுக்குடன் செய்திகள் எப்படிக் கிடைக்கின்றன என்று நான் கேட்ட பொழுது அதற்கென்று ஒரு தனியான செய்திப்பிரிவு ஒன்று இயங்கு வதாகவும் கம்பியில்லாத்தந்தி மூலம் அவ்வப்போது செய்திகள் அனுப் பப்படுவதாகவும் அவர்கள் கூறினர். அந்த முகாமிலிருந்த ''செய்தித் தகவல் பிரிவுக்கு அழைத்துப்போய்க்காட்டினார்கள். ஏராளமான நவீன சாதனங்களுடன் சில இளைஞர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டி ருந்தனர். நாங்கள் கூனித்தீவு வந்திருக்கும் செய்தியை வேறு எங்கோ அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அதாவது என்னுடைய சுற்றுப்பயணம் பற்றிய சகல செய்திகளும் உடனுக்குடன் தமிழீழப் பகுதியிலுள்ள சகல ஊர்களுக்கும் தெரியப்படுத்தப்படுவதை அறிந்தபோது நான் வியப் படைந்தேன்.

கூனித்தீவிலிருந்து நான் புறப்படுவதற்கு முன்பாக விடுதலைப் புலி மதனனைக் கண்டேன். வீரஞ்செறிந்த அந்த இளைஞர் மட்டக் களப்புப் போர்க்களத்தில் போராடிப் படு காயத்துடன் வந்திருந்தார். மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த புலிகள் இயக்க நண்பர் காக்கா என்ப வரும்என்னுடன் வந்தார். இருவருமே எனக்கு அறிமுகமானவர்கள். எங்களது கிராம வீட்டில் தங்கி இருந்தவர்கள். மதனனின் தியாக வரலாறு கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும் வரலாறாகும்.

மட்டக்களப்புப் போர்க்களத்தில் சிங்கள இராணுவ வீரர்களை எதிர்த்துப் போராடிய போது மதனுன் குண்டடிபட்டுக் கீழே விழுந்தார். அவரது தொடையிலும் வலது கையிலும் வலது தோள்பட்டையிலும் குண்டுகள் பாய்ந்திருந்தன. கீழே விழுந்த அவரைச்சிங்கள விரர்கள்



சூழ்ந்து கொண்டார்கள். விடுதலைப் புலிகளின் வழக்கப்படியே மதனன் கழுத்தில் தொங்கிய 'சைனைடு' விஷக் குடுவையை எடுத்துக் கடித்து விட்டார். அதைப் பார்த்த சிங்கள விரர்கள் விஷம் அருந்திய சில நிமிடங்களில் சாகப் போகிறார் என்று நினைத்து அப்படியே விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். மறைந்திருந்த நமது தோழர்கள் விரைந்தோடி வந்து மதனனைத் தூக்கி அருகிலிருந்த டாக்டரிடம் கொண்டு போய் விஷ முறிப்புச் சிகிச்சை செய்தும் அவர் உடம்பிலிருந்த விஷ ரத்தத்தை வெளியேற்றித்தங்களுடையரத்தத்தை பாய்ச்சியும் எப்படியோ அவரைப் பிழைக்க வைத்து விட்டார்கள். படுகாயமடைந்திருந்த மதனனை எங்களுடன் யாழ்ப்பாணம் கொண்டு வந்து அங்கு ஓரளவு சிகிச்சை அளித்து பிறகு மேல் சிகிச்சைக்காக நாங்கள் தமிழகம் வரும்போது எங்களுடனேயே கொண்டு வந்தோம். அந்த வீர இளைஞர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த காலக் கட்டத்தில்கூட முகமலர்ச்சியோடு விளங்கினார். நாங்கள் வரும்போது தன்னுடன் இருந்த தோழர்களைச் சீண்டிக் கொண்டே வந்தார். ''அண்ணா! இவன்கள் என்னுடைய கழுத்தில் மறுபடியும் சைனைடு குடுவையைக்கட்டத் திட்டமிடுகிறார்கள் நான் அதையே தின்றும் சாகாமல் இருக்கிறேன். இந்த விஷம் என்னை என்ன செய்யும்? இதைவிடக் கடுமையான விஷம் இருந்தால் என் கழுத்தில் கட்டச் சொல்லுங்கள்'' என்று சொன்ன பொழுது என் நெஞ்சம் பதறியது. வாழ வேண்டிய வயதில் சாவை எவ்வளவு விளையாட்டாக இவர்கள் கருதுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்த போது ஒரு பக்கம் பெருமித உணர்வும் மறுபக்கம் வருத்தமும் மேலோங்கி நின்றன.

அதைப் போலவே பஷீர்காக்கா நல்ல வீரமிக்க இளைஞன். லிங்கம், பொட்டு ஆகியோரை அவர் கிண்டல் செய்துகொண்டே இருந் தார். ''அண்ணா! இவர்களெல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லர்; இவர்கள் தமிழக விடுதலைப்புலிகள்'' என்று கேலிசெய்தார். அதாவது தமிழ்நாட்டில் இருந்துகொண்டு லிங்கமும், பொட்டுவும் வேலை செய்வதால் அவர்களை அவர் அவ்வாறு கேலி செய்தார்.

''தமிழகத்தில் இருந்தாலும் உங்களுக்கு நிதி திரட்ட மற்ற உதவிகள் திரட்ட வேண்டிய வேலைகளைச் செய்துகொண்டுதானே இருக்கிறார்கள்'' என்று நான் சொன்னேன்.

''அப்படிச் சொல்லுங்கள் அண்ணா! அப்படிச் சொல்லுங்கள் அண்ணா'' என்று லிங்கமும் பொட்டுவும் ஆர்ப்பரித்தார்கள்.

''என்ன இருந்தாலும் தமிழீழப் போர்க்களத்திலிருக்கும் எங் களைவிட இவர்கள் ஒருபடி கம்மியானவர்கள்தாம்'' என்று காக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறி வேண்டுமென்றே அவர்களை வம்புக்கு இழுத்தார். அவர்களின் இந்த வம்புப் பேச்சை நான் ரசித்துக்கொண்டுவந்தேன்.

(நான் தமிழகம் திரும்பும்போது தலைவர் பிரபாகரனின் ஆணைக்கு இணங்கி பஷீர்காகாவும் தமிழகம் வரவேண்டிய வேலை இருந்தது. எனவே அவரும் எங்களுடனேயே பயணம் செய்தார். தமிழகக் கடற்கரையில் நாங்கள் வந்திறங்கியவுடன் காக்காவைக் கூப்பிட்டேன். "என்ன அண்ணா" என்று அருகில் ஓடிவந்தார்.

"நீங்களும் இப்போது தமிழக விடுதலைப்புலியாகிவிட்டீர்கள்" என்று சொன்னேன்.

அவ்வளவுதான் சுற்றி நின்ற அத்தனை பேரும் கைகொட்டிச் சிரித்தார்கள்.

"என்ன அண்ணா! நான் எப்போதோ சொன்னதை ஞாபகம் வைத்துக்கரை இறங்கியதும் அதைச்சொல்கிறீர்களே" என்று காக்கா சிணுங்கினார்.)

அன்று மாலை மட்டக்களப்புக்கு நாங்கள் பயணமாக இருந்தோம். அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. மாலை நேரத்தில் கடற்கரைக்குப்போய்ச் சேர்ந்தோம். படகில் எங்கள் சாமான்களை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். மீண்டும் லிங்கம், பொட்டு, கனேஷ் ஆகியோர் கூடிப் பேசினார்கள். பரபரப்புடன் அங்கிருந்து எங்கோ சென்றுவந்தனர். பிறகு என்னிடம் வந்து "அண்ணா! மட்டக்களப்புப் பயணத்தைச் சற்று ஒத்திவைக்க வேண்டி உள்ளது. இராணுவக் கெடுபிடி அங்கு அதிகமாக இருக்கிறது" என்று கூறினார்கள்.

நான் பெரும் ஏமாற்றம் அடைந்தேன். மட்டக்களப்புப் பயணம் இருமுறை தட்டிப் போய்விட்டது. 1981-ஆம் ஆண்டில் நான் இலங்கை வந்திருந்தபோது எனது மட்டக்களப்புப் பயணம் அப்போதும் ஒத்தி வைக்கப்பட்டது. அதற்குப் பின் இப்போது சுமார் 120 மைல்கள் பெரும் அபாயத்திற்கு நடுவே வந்தும்கூடப்பயனில்லை. திருகோணமலைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இடையேயுள்ள எல்லையருகே நான் இருந்தும்கூடச்சுமார் 90 மைலுள்ள மட்டக்களப்புக்கு என்னால் செல்லமுடியவில்லை. நான் எவ்வளவு வற்புறுத்தியும்கூட மற்றவர்கள் அந்த ஆபத்திற்கு என்னை உட்படுத்தத் தயங்கினார்கள். எனது பிடிவாதத்தினை தலைவர் பிரபாகரனுக்கு தெரிவித்திருக்கிறார்கள். ஆபத்தான சூழ்நிலையில் வேண்டாம் என்று அவரும் மறுத்திடவே இவர்களும் மறுத்து விட்டார்கள். மறுபடியும் இரவு 7 மணிக்குப் புறப்பட்டு 120 மைல் தூரம் வந்த வழியிலேயே திரும்பி விடியற்காலம் 5 மணிக்குப் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தோம்.





# 36. தும்பி பறக்கிறது

இன்று பொலிகண்டியில் மோட்டார் 'பம்ப்செட்' வைக்கப்பட்டிருந்த ஒரு கிணற்றில் குளித்தோம். மண்ணெண்ணெயினால் இந்த பம்ப்செட் ஓடுகிறது. தமிழீழப் பகுதி முழுவதுமே மண்ணெண்ணெயின் மூலம் இன்ஜின்கள் ஓடுகின்றன. அருவிபோலக்கொட்டிய தண்ணீரில் குளித்துக் கொண்டிருந்தபோது திடீரென லிங்கம் ஏதோ சப்தமிட்டார். எங்கேயோ பொட்டு விரைந்தோடினார். என்னவென்று திடுக்கிட்டுப் பார்த்தேன்.

'தும்பி' வருகிறதடா என்று லிங்கம் சப்தமிட்டுக்கொண்டிருந்தார். அதற்குள் பொட்டு இன்ஜினை நிறுத்திவிட்டார். ஒன்றும் புரியாமல் திகைத்தேன். மறு வினாடி தலைக்கு மேலாக ஹெலிகாப்டர் ஒன்று பறந்து சென்றது. ஹெலிகாப்டருக்குப்புலிகள் வைத்துள்ள புனைப்பெயர்தான் 'தும்பி' என்பது. இன்ஜின் ஓடுகிற சப்தமும் தண்ணீர் பாய்வதும் தெரிந்தால் உடனே மேலேயிருந்து சுடுவார்களாம். தும்பி மறைந்து போன பிறகு மறுபடியும் நாங்கள் குளிக்கத்தொடங்கினோம்.

குளிக்கும்போதே அவர்களிடம் "அதென்ன 'தும்பி' என்று பெயர் சூட்டியிருக்கிறீர்கள்" என்று கேட்டேன்.

சிரித்துக்கொண்டே லிங்கம் பதில் சொன்னார். "அண்ணா! ஹெலிகாப்டர் விமானத்திற்கு மட்டுமல்ல எல்லாவற்றுக்குமே நாங்கள் புனைப்பெயர்கள் சூட்டித்தான் அழைப்போம். "விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அனைவருமே சொந்தப் பெயர்களினால் அழைக்கப்படுவதில்லை. புனைப் பெயர்களால் மட்டுமே அழைக்கப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு புனைப்பெயர் மட்டுமல்ல பல புனைப்பெயர்கள் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே எங்களை அடையாளம் காணுவது அவ்வளவு சுலபமான தல்ல. நபர்களுக்கு மட்டும் நாங்கள் புனைப் பெயர் சூட்டவில்லை. ஊர்களுக்கும் மற்றும் சாதனங்கள் அனைத்திற்குமே புனைப் பெயர் களைச் சூட்டியிருக்கிறோம். படகுக்கு **வண்டி** என்றும், ஜீப் காருக்குத் **தேர்** என்றும், ஹெலிகாப்டருக்கு **தும்பி** என்றும் பெயர் சூட்டியிருக் கிறோம்.'' **என்றார்.**

''அண்ணா ! இன்று சிகாகோ போகிறோம்'' என்று பொட்டு இடையில் புகுந்து சொன்னபோது நான் திகைத்துப்போனேன். என் திகைப்பைப்பார்த்து அவர்கள் சிரித்தார்கள். ஒன்றும் புரியாமல் நான் ''உங்கள் வேன் என்ன ஆகாயத்தில் பறந்து அமெரிக்காவில் போய் இறங்குமா'' என்று கேட்டேன்.

''அமெரிக்காவிற்கு எதற்காகப் போக வேண்டும் அண்ணா! இங்கேயே சிகாகோ, சான்பிரான்சிஸ்கோ. லாஸ் ஏஞ்சல்ஸ் எல்லாம் இருக்கிறதே. எல்லாவற்றையும் உங்களுக்குக் காட்டுகிறோம்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்கள்.

மேலும் என்னைத்திகைப்பில் ஆழ்த்த விரும்பாமல் லிங்கம் அந்த மர்மத்தை எனக்கு விளக்கிச் சொன்னார். எதிரிகளுக்குப்புரியக் கூடாது என்பதற்காக எல்லா ஊர்களுமே புனைப் பெயர்களால் அழைக்கப்படுவதை அவர் விவரித்தார். ஊர்களின் உண்மைப் பெயர்களையும் அவற்றுக்கு சூட்டப்பட்டுள்ள புனைப் பெயர்களையும் இங்குக்குறிப்பிடுவது இரகசியத்தை வெளிப்படுத்துவதாகும், எனவே நான் அவற்றைச் சொல்லவில்லை.

காலைக் கடன்களை முடித்து நாங்கள் தயாரான போது **யாழ்த் தளபதி கிட்டு** எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்ததும் பழைய நினைவுகள் கிளர்ந்தெழுந்தன, எனக்கு மறந்து போன பல நிகழ்ச்சிகளை அவர் நினைவு கூர்ந்து பேசிமகிழ்ந்தார்.

1982-ம் ஆண்டில் தலைவர் பிரபாகரன் சென்னையில் கைது செய்யப்பட்ட வேளையில் **கிட்டு, பண்டிதர், ரஞ்சன், சீலன்** ஆகிய பலரைக்கிராமத்திலிருந்த எங்கள் விட்டில் தங்க வைத்துப் பாதுகாத்த விஷயத்தை நினைவு படுத்தினார். இன்று அவர்களில் பண்டிதர், ரஞ்சன், சீலன் ஆகியோர் வீரமரணம் அடைந்து விட்டனர். அவர்கள் இப்போது இல்லை.

எந்த உதவியும் யாரும் செய்ய முன்வராத கஷ்டப்பட்ட காலத்தில் எனது தம்பி **திரு. ஆறுமுகம்** செய்த உதவிகளையெல் லாம் நன்றியோடு அவர் நினைவு கூர்ந்தார். எங்கள் குடும்பத்திலுள்ள



ஒவ்வொருவரையும் விசாரித்து அறிந்தார். எனது குறும்புக்கார மகள் **உமாவைப்** பற்றி விசாரிக்க அவர் தவறவில்லை. **தலைவர் பிரபாகரன் மற்றும் அவருடைய தோழர்கள் அத்தனை பேருக்கும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மீது அளவு கடந்த அன்பு உண்டு ஒருவர் என் தம்பி ஆறுமுகம். இன்னொருவர் எனது மகள் உமா. என் தம்பி ஆறுமுகத்திடம் தான் அவர்களது அந்தரங்கமான விஷயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். வெளியே தெரியாமல் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அத்தனையும் தம்பி ஆறுமுகம் செய்து கொடுப்பார்.**

தங்களது சொந்தக் குடும்பங்களைவிட்டுப் பிரிந்துதலைமறைவு வாழ்க்கை நடத்திய இந்தத் தோழர்களுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளை அன்பு. அத்தனை அன்பையும் என் மகள் உமா மீது அள்ளி அள்ளிப் பொழிந்தார்கள்.

தளபதி கிட்டு ''உமா என்னை நினைவு வைத்திருக்கிறாளா! அல்லது மறந்துவிட்டாளா ! அவள் இப்போது வளர்ந்திருப்பாள்'' என்றெல்லாம் அவளைப் பற்றி அன்பொழுக விசாரித்தார்.

யாழ்ப்பாணத் தளபதி கிட்டு புலிகள் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர். யாழ் நகரை இராணுவப் பிடியிலிருந்து மீட்ட தோடு மட்டுமல்ல யாழ்கோட்டைக்குள் சிங்கள ராணுவத்தை முடக்கி வைத்த பெருமைக்குரியவர். அவரது தலைமையில் புலிகள் யாழ் நகரை எப்படிக்காவல் காக்கின்றனர் என்பதை நான் நேரில் பார்த் தேன். யாழ் மக்களும் அவர்மீது எத்தகைய மதிப்பும் அன்பும் கொண் டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து மகிழ்ந்தேன். ஐந்தாண்டுகளுக்கு முன்பு நான் சந்தித்த சாதாரண இளைஞன் இன்று வீரத் தளபதியாக விளங்குவது கண்டு பெருமிதம் அடைந்தேன்.

அவருடன் பேசிக்கொண்டிருந்ததில் பொழுது போனதே தெரியவில்லை. பிற்பகலில் அவர் வீட்டுக்கு அவரே அழைத்துச் சென் றார். அவரது அன்னையார் அன்புடன் அளித்த விருந்தினை உண்டு மகிழ்ந்தோம். புறப்படும்போது அந்தத்தாய் **தமது** வீரமகனை உச்சி முகந்து கண்கலங்க வழியனுப்பிய காட்சி என் நெஞ்சத்தில் ஆழ மாகப் பதிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 37. முழுமை பெறாத பயணம்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு செல்லும் எனது பயணம் தடைப் பட்டாலும் என்னை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த நண்பர் ப்ஷீர்காக்காவிடமும், மற்ற தோழர்களிடமும் பேசி அங்குள்ள நிலவரத் தை அறிந்து கொண்டேன்.

வளம் நிறைந்த மட்டக்களப்புப்பகுதியை இழக்க சிங்களவர்கள் விரும்பவில்லை. தமிழீழத்தின் **நெற்களஞ்சியமாக** மட்டக்களப்பு விளங்குகிறது. எனவே அதை அபகரிக்க முயலுகிறார்கள்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மட்டக்களப்புப் பகுதியில் சிங்கள இராணுவம் அமல் நடத்தவேயில்லை. தேடுதல் நடவடிக்கைகள் என்ற பெயரில் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்கள் அங்குத் தொடர்ந்து நடந்தவண்ணமிருக்கின்றன.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகு **கும்பர்மலை, அக்கறைப் பத்து** என்ற இரண்டு இடங்களில் புதிய இராணுவ முகாம்களைச் சிங்கள அரசு திறந்துள்ளது.

"வடமாநிலம் முழுவதுமாகத்தங்கள் கையை விட்டுப் போய் விட்டதெனச்சிங்களவர்கள் நினைக்கிறார்கள். எனவே வடக்கிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் திருகோணமலையைத்தமிழர்கள் நெருக்கினால் என்ன செய்வது என்ற அச்சத்தால் மட்டக்களப்பில். தொடர்ந்து தாக்குதல் நடவடிக்கைகளில் சிங்கள இராணுவம் ஈடுபட்டிருப்பதாக" காகா சொன்னார்.



"மட்டக்களப்பு தொகுதியிலுள்ள முஸ்லீம்களுடன் உங்களுக்குச் சமூக உறவு இருக்கிறதா?" என்று நான் கேட்டேன்.

"இஸ்லாமியத் தமிழர்களுக்கும், மற்றத் தமிழர்களுக்குமிடையே பகையை வளர்க்கவும் மோதலை உருவாக்கவும் சிங்களவர்கள் இடை விடாது சதி செய்கிறார்கள். சிங்களக் காடையர்களைக் கொண்டுவந்து முஸ்லீம்களின் வீடுகளைத் தாக்கிவிட்டுத் தமிழர்கள் தாக்கியதாக பொய்ப்பிரச்சாரம் செய்தார்கள். அமைச்சர் **தொண்டமான்'** போன்ற வர்களே இந்தப் பொய்யை அம்பலப்படுத்தினார்கள். கலவரப்பகுதி களில் நாங்கள் சமாதானக்குழுக்களை ஏற்படுத்தியுள்ளோம். இக்குழுக் கள் பிரச்னைகளை உடனுக்குடன் தீர்க்கின்றன. இக்குழுக்களுடன் முஸ்லீம்கள் பரிப்பூரணமாக ஒத்துழைக்கிறார்கள்" என்று அவர் சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் "இந்தப் பிரச்னை தோன்றுவதற்கு எங்களுடைய பழைய அரசியல் தலைவர்கள் காரணமாக இருந்தார்கள். தேர்தல் போட்டிகள் போன்ற பல விஷயங்களில் இஸ்லாமியத்தமிழர் களுக்கும், மற்றத் தமிழர்களுக்குமிடையே வேண்டாத சச்சரவுகள் முளைத்தன, **காத்தாங்குடி** என்ற தமிழ்க்கிராமத்தில் முஸ்லீம்கள் குடியேறிய போது அதை அவர்கள் வரவேற்றிருக்க வேண்டும் தமி ழர்களும் முஸ்லீம்களும் இணைந்து நின்று சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பதற்குப்பதில் முஸ்லீம் குடியேற்றத்தை எதிர்த்தனர். இந்தத் **தவற்றைச்**செய்ததற்கு அரசியல் தலைவர்கள்**தாம்** காரணம். எங்க ளுடைய பழைய தலைவர்கள் செய்த **தவற்றை** நாங்கள் திருத்தி வருகிறோம்" என்று காகா கூறினார்.

"முஸ்லீம்களையும் சிங்களவர்கள் வேட்டையாடுகிறார்கள் என்று சொல்லுகிறார்களே!" என்று நான் கேட்டேன்.

"உண்மைதான் இரண்டு நாட்களுக்கு முன்புகூட அம்பாறை மாவட்டத்திலுள்ள **பட்டானைசேனைப்** பிரிவிலுள்ள **பொன்னாவி** கிராமத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் தாக்கப்பட்டு அங்குச்சிங்களர் குடி யேற்றப்படுகிறார்கள். ஊர்க்காவல் படையே இந்த வேலையைச் செய்கிறது. இந்த அக்கிரமத்தை உடனடியாகத்தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு 22.10.'85-ல் முஸ்லீம்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். அம்பாறை மாவட்டத்தில் **தீகவாபி** என்ற இடத்தில் முஸ்லீம் விவசாயிகள் இரண்டு பேரை இராணுவம் சுட்டுக் கொன்றது.

கிராம மக்கள் நாங்கள் முஸ்லீம்கள் என்று கதறிய போது "இருங்கள்! இருங்கள்! தமிழர்களுக்கு அடுத்து உங்களையும் ஒழித் துக்கட்டுகிறோம்" என்று இராணுவத்தினர் **கறுவினார்களாம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு, வலைஇறவுப்பகுதிகளில் முஸ்லீம்கள் குடியிருந்த 200 வீடுகளை இராணுவம் இடித்துத் தள்ளி விட்டது. விமானதள விஸ்தரிப்புக்கு இது தேவை என்று இராணுவம் கூறியது என்று காகா கூறினார்.

''மட்டக்களப்பு மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். அங்குள்ள மக்கள் பெரும்பாலும் ஏழைகளே. முஸ்லீம்களும் ஏழைகளே. மொத்தத்தில் அந்த மாவட்டத்து மக்கள் இந்துக்களானாலும், முஸ்லீம்களானாலும் எல்லாத்துறைகளிலும் மிகவும் பின்தங்கியவர்களே''என்றும் காகா கூறினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்களில் ஒருவரை நான் சந்தித்தது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவரது பெயரை **இப்போது** வெளியிடுவது அவரை அபாயத்திற்கு உள்ளாக்கும் என்ற காரணத்தினால் வெளியிடவில்லை. அவர் பின்வரும் விவரங்களைக் கூறினார்.

மட்டக்களப்பில் ஒரு பகுதியை **1961**-ம் ஆண்டிற்குப் பிறகு அம்பாறை மாவட்டம் எனத்தனியாக சிங்கள அரசு பிரித்தது. இவ்வாறு பிரிக்கப்பட்ட மாவட்டத்தில் ஏராளமான சிங்களவர்களைக் கொண்டு போய் குடியேற்றியது. இங்குள்ள முஸ்லீம்கள் தமிழ் பேசும் முஸ்லீம்களாவர், இவர்களைவிட அதிகமான எண்ணிக்கையில் அங்குச்சிங்களவர்களைக் குடியேற்றிவருகிறார்கள். அதிலும் கடந்த ஓராண்டுகாலமாக இந்த குடியேற்றம் அதிகமாகி இருக்கிறது.

இம்மாவட்டத்திலிருந்த பல கிராமங்களைப் பிரித்தெடுத்து அம்பாறை மாவட்டத்தோடு சேர்த்துள்ளனர், இதன்விளைவாக **இப்**போது அம்மாவட்டத்தில் **14( 371 (37.6%)** சிங்களவர்கள் உள்ளனர். முஸ்லீம்களின் எண்ணிக்கை **161 754 (41.6%)** தமிழர்களின் எண்ணிக்கை **80745 (20.46%)** ஆகும்.

இதைப்போலவே மட்டக்களப்பு மாவட்டத்திலும் சிங்களவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் எனக்குத் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தின் அட்டூழியத்தால் தினம்தோறும் **20** முதல் **25** தமிழர்கள் சாகடிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். மட்டக்களப்புப் பகுதியிலுள்ள தமிழர்கள் நிராதரவான நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.


நிராதரவான நிலையில் இருந்தாலும் மட்டக்களப்பு மக்களின் மனஉறுதி கொஞ்சமும் குறையவில்லை. 'எதுநடந்தாலும் என்ன நேர்ந்தாலும் பிறந்தமண்ணைவிட்டு எக்காரணமும் கொண்டும் வெளியேறு



வதில்லை என அம்மக்கள் உறுதிபூண்டிருப்பதாக அவர் கூறியபோது நான் மனநிம்மதியடைந்தேன்.

அவர்மூலம் மட்டக்களப்பு மக்களுக்கு **ப்பின்வரும்** செய்தியையனுப்பினேன்.

''தமிழீழப்பகுதி முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்திக்க வந்த நான் மட்டக்களப்பு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. மட்டக்களப்பு மக்களைச் சந்திக்காமல் எனது சுற்றுப்பயணம் முழுமைபெறவில்லை; என்மனமும் நிறைவுபெறவில்லை. உங்களது துயரங்களை நானும் பகிர்ந்துகொள்கிறேன். உங்கள் உறுதிகண்டு வியந்து பாராட்டுகிறேன். உங்கள் போராட்டம் வெற்றியடையும் நாள் அதிக தூரத்தில் இல்லை.''





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 38. புதிய புறநானூற்றுத் தாய்மார்கள்

ஈழ நாட்டில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது அங்குச்சந்தித்த தாய்மார்களின் வீர உணர்வு என்னைப்பிரமிக்கவைத்தது. கொடுமையும் துயரமும் அவலமும் நிறைந்த வாழ்வுக்கு நடுவே விடுதலை உணர்வோடு அவர்கள் காட்சிதந்தது கண்டு நான் அளவிடமுடியாத வியப்படைந்தேன். முதல்நாள் போரில் தந்தையையும், அடுத்தநாள் போரில் சகோதரனையும்,மூன்றாம்நாள் போரில் கணவனையும் இழந்த ஒரு தாய் நான்காவது நாள் போருக்கு தனது பச்சிளம் பாலகனை உச்சிமுகந்து கையில் வேல்தந்து அனுப்பினாள் என்று புறநானூறு சித்தரிக்கிறது. **ஆனால் தமிழீழத் தாய்மார்கள் புதிய புறநானூற்றினைத்தங்களின் வீரப்புதல்வர்கள் சிந்திய இரத்தத்தினால் எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நேரில் பார்த்தபோது என் மெய்சிலிர்த்தது,**

ஒரு வீரத்தாயை நான் சந்தித்தேன். இத்தாயின் மூத்த மைந்தன் விஜி விடுதலைப் புலிப்படையில் சேர்ந்து போரிட்டு வீரமரணமடைந்து விட்டான். அவன் சாகும்போது அவனுக்கு வயது இருபத்திநாலே தான். விஜியின் பெற்றோர்களுக்கு ஆறுதல் சொல்ல அவன் வீட்டிற்கு சென்றிருந்தேன். பக்தி சிரத்தையுள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவக் குடும்பம் அது.

மகனைப்பற்றிய பேச்சு எடுத்தபோது அந்தத்தாயினால் தன் அழுகையை அடக்கமுடியவில்லை. நெஞ்சத்தில் துக்கத்தை த்தேக்கிக் கொண்டும் விழிகளில் பெருகும் நீரைத் துடைத்துக்கொண்டும் அந்தத் தாய் என்னுடன் பேசினாள்.



''என் மகனைப்போல எண்ணற்ற இளைஞர்கள் எமது நாட்டிற்காகத்தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். இதோ உங்களுடன் வந்திருக்கும் இவர்கள் அனைவருமே என் புதல்வர்கள் தாம். இவர்களில் என் மகனை நான் காண்கிறேன்'' என்று அந்தத் தாய் தழுதழுத்த குரலில் கூறினார். அவர் அருகில் அவரது மகள் நின்றுகொண்டிருந்தாள்.

''அம்மா உன் அண்ணனை இழந்துவிட்டதற்காக வருத்தப்படாதே'' என்று அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் சொல்ல நான் முயன்றேன். ஆனால் அந்தப் பெண் என்னைத் தொடர்ந்து பேசவிடவில்லை.

''அய்யா, என் அண்ணன் இறந்ததற்காக நான் கவலைப்படவில்லை. எமது குடும்பத்திலும் ஒருவன் எமது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்திருக்கிறான் என்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோமே தவிர அதற்காக நாங்கள் கவலைப்படவில்லை. எங்கள் அண்ணன் மட்டும் அல்ல ஏராளமான எமது அண்ணன்மார்கள் போர்க்களத்தில் மடிந்துகொண்டேயிருக்கிறார்கள். என்னைப்போன்ற யுவதிகளும் சிங்கள வெறியர்கள் கையில் சிக்கி மானம் இழப்பதைவிடப்போராடிச் சாகவே விரும்புகிறோம்'' என்று அந்தச் சிறு பெண் சொன்னபோது எனக்கு ஒருபுறம் பெருமிதமாக இருந்தாலும் மறுபுறத்தில் துக்கம் என் நெஞ்சை அடைத்தது.

இவ்வாறு நான் உரையாடிக் **கொண்டிருந்த** போது 10 அல்லது 12 **வயதுச்சிறுவன்** ஒருவன் எதுவும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

''அவன் யார்'' என்று நான் கேட்டபோது, அந்தத் தாய் சொன்னாள், ''எனது இளைய மகன் அய்யா, என் மீது அவனுக்கு மிகவும் கோபம்'' என்று சொன்னார்,

அந்தச் சிறுவனை நோக்கி ''அம்மாவின்மீது என்ன கோபம்'' என்று கேட்டேன்.

அவன் பதில் எதுவும் கூறாமல் முகத்தைத் தாழ்த்திக்கொண்டான். அவனுடைய தந்தை அவன் சார்பில் பதில்கூறத் தொடங்கினார்.

''இவனும் புலிப்படையில் சேர வேண்டுமாம். அதற்காக அம்மாவுடன் எப்பொழுதும் சண்டைபோட்டுக்கொண்டேயிருக்கிறான்'' என்று அவர் சொன்னார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''இதற்காகவா அம்மாவுடன் சண்டை போடுவது! நானே உன்னைப்புலிப்படையில் சேர்த்து விடுகிறேன். கவலைப்படாதே''என்று நான் அவனுக்கு ஆறுதல் சொன்னேன்.

என் பதிலைக் கேட்டு அவன் மகிழ்ச்சியடைவான் என எதிர் பார்த்தேன். ஆனால் அவன் விழிகளில் கண்ணீர்த் துளிகள் பூத்து நின்றதைப்பார்த்துத்திடுக்கிட்டு **அவன்** தாயைநோக்கித்திரும்பினேன். ஆனால் அந்த அம்மையாரோ தேம்பித் தேம்பி அழுதார். எனக்கு எதுவுமே புரியவில்லை. எனது திகைப்பைப் போக்க **அவன்** தந்தை முன் வந்தார்.

''ஒன்றுமில்லை அய்யா! இவன் பிறவியிலேயே அங்ககீன மானவன். ஒரு கையும், ஒரு காலும் அவனுக்கு விளங்காது. அவன் அண்ணனின் வீர மரணம் அவனை ஆவேசம் கொள்ள வைத்திருக் கிறது. ஆனால் அவனது அங்ககீனம் அவனை ஏங்க வைக்கிறது. அதனை நினைத்து அவன் அம்மாவிடம் சண்டை போடுகிறான். ஏன் அம்மா என்னை இப்படிப் பெற்றாய்? என் கையும் காலும் சரியாக இருந்தால் அண்ணனைப் போலவே நானும் புலியாகிப் போரிட்டு அண்ணனைக் கொன்றவர்களைப் பழிக்குப்பழி வாங்கியிருப்பேனே. நீ என்னை இப்படிப் பெற்றதால் தானே என்னால் எதுவும் செய்ய முடியவில்லை? என்று அழுவான்'' என்றார்.

இதைக் கேட்டபோது அந்தக் குடும்பத்தின் வீர உணர்வையும் தியாக உணர்வையும் கண்டு மலைத்துப் போனேன். அநேகமாக தமிழீழத்தில் நான் சந்தித்த ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த உணர்வு **பிரதிபலிப்பதைக்** கண்டேன்.

## ஈழத்து ஜான்ஸி ராணிகள்

இந்தியாவின் முதலாவது விடுதலைப் போரில் ஜான்சிராணியின் பங்கு மகத்தானதாகும். கணவனை இழந்த நிலையில் மாறாத மன உறுதியுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய வீராங்கனை ஜான்ஸிராணி ஆவார்.

ஈழநாட்டிலும் பல ஜான்ஸிராணிகளைக் கண்டேன். **தந்தையை** சகோதரர்**களை, கணவரை** இழந்த பெண்களில் பலர் வீறுகொண்டெழுந்து விடுதலைப் போராளிகளாக மாறியுள்ளதை நான் நேரில் பார்த்தேன்.

**மகேஸ்வரி** என்னும் இளம்பெண் அத்தகைய வீராங்கனை களில் ஒருத்தியாவாள். திருமணமான நாலே ஆண்டுகளில் கைப்



பிடித்த கணவனைப் பறிகொடுத்தாள். பூ இழந்தாள். பொட்டு இழந்தாள். மங்கலமிழந்தாள். ஆனால் மன உறுதியை மட்டும் அவள் இழக்கவில்லை. சோகமும் வீரமும் கலந்து பின்னப்பட்ட வாழ்க்கை அவளது வாழ்க்கை.

யாழ்ப்பல்கலைக்கழக மாணவனான பார்த்திபன் என்னும் வீர இளைஞன்தான் அவளின் கணவன். குமுளமுனைக் கிராமம் சென்றி ருந்தபோது **பார்த்திபனின்** தந்தையைச் சந்தித்தேன். அவர் வீட்டில் பார்த்திபனும்-மகேஸ்வரியும் திருமணக் கோலத்தில் எடுத்துக்கொண்ட படத்தைப்பார்த்தேன்.

வீரப்புலி பார்த்திபன் இளம் வயதில் தன்னை முழுமையாக இயக்கத்திற்கு **அர்ப்பணித்துக் கொண்டான்** சிங்கள இராணுவத்தின் தாக்குதலுக்கு ஆளாகி அகதிகளாக ஓடிவந்து காடுகளில் மறைந்து வாழ்ந்த மக்களைப்பாதுகாப்பதில் **அவன்** செய்த பணிக்கு ஈடுஇணை கிடையாது.

ஒருமுறை நடுக்காட்டில் பிரசவ வேதனையால் துடித்துக் கொண் டிருந்த ஒரு பெண்ணுக்கு உதவி செய்து தாயையும், குழந்தையையும் பத்திரமாகத் தூக்கி வந்து காப்பாற்றிய பெருமைக்குரியவன். **அவனது** நடவடிக்கைகளின் விளைவாகத்தான் யாழ்ப் பல்கலைக்கழகம் புலிகளின் குகையாக மாறிவருகிறது என்று ஆத்திரம் கொண்ட சிங்கள இராணுவம் அவனை இடைவிடாமல் வேட்டையாடியது. பலமுறை இராணுவத்தின் பிடியிலிருந்து அவன் தப்பினான். ஆனால் ஒருநாள் அதிகாலைப் பொழுதில் தனது கிராமத்திற்கு அருகேயுள்ள காட்டில் **அவன்** உறங்கிக் கொண்டிருந்த போது இராணுவம் **அவனைச்** சுற்றி வளைத்துக் கொண்டது. அவனை மரத்தில் கட்டி தங்கள் வெறி தீரும் வரை **சரமாரியாகச்** சுட்டார்கள் சிங்கள வெறியர்கள்.

பார்த்திபனின் உடல் சல்லடைக் கண்களாகத் துளைக்கப் பட்டது. அவன் சுடப்பட்ட இடத்தை நான் பார்த்தேன். எந்த மரத்தில் கட்டி வைத்துச் சுட்டார்களோ அந்த மரத்தில் துப்பாக்கி குண்டுகள் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கின்றன என்பதை நான் பார்த்தபோது பார்த்திபனது இளம் உடலை இந்தக்குண்டுகள் எப்படிச் சிதைத்திருக்கும் என்பதை என்னால் உணரமுடிந்தது.

பார்த்திபனின் இளம் மனைவி மகேஸ்வரி சிறிய வயதிலேயே மங்கலம் இழந்தாள். ஆனாலும் மறத்தமிழச்சியான அவள் மனமுடைய வில்லை. தன் கணவன் விட்டுச்சென்ற பணியினைத் தொடர்ந்து மேற்கொள்ள முடிவு செய்தாள். புலிப்படையில் சேர்ந்து தமிழீழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைக்காகப் போராடுவது எனத் தீர்மானித்தாள். அவளது பெற்றோரும் **பார்த்திபனின்** பெற்றோரும் எவ்வளவோ தடுத்தும்கூட அவள் பிடிவாதமாக இருந்தாள். வேறுவழியில்லாமல் அவள் போக்கில் அவளை விட்டனர்.

பின் ஒரு சந்தர்ப்பத்தில் பெண்களுக்கான புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றில் அவளை நான் சந்திக்க நேர்ந்தது.

பெண் புலிகள் நடத்திய நாடகம் ஒன்றில் தலைவிரிகோலமாக தமிழீழ அன்னை வருவதுபோல ஒரு காட்சி அமைந்தது. அந்தக் காட்சியில் சோகமே வடிவாக வந்த தமிழீழ அன்னை வேடத்தில் இருப்பதுதான் மகேஸ்வரி, பார்த்திபனின் மனைவி என என் அருகில் இருந்த தளபதி பிரபாகரன் கூறிய போது என் நெஞ்சம் இரத்தக் கண்ணீர் வடித்தது. வீரபத்தினி என்ற பெயருக்கு ஏற்றாற்போல மகேஸ்வரி நடந்து கொள்வதைப் பார்த்தபோது என் தலை அவளுக்காக வணங்கிற்று,

## தவமணித்தாய்

கடற்கரைக் கிராமம் ஒன்றில் நாங்கள் தங்கியிருந்தபோது **தவமணி** என்னும் ஒரு அம்மையாரைச் சந்தித்தேன். புலிகளுக்குத் தேவையான சகல உதவிகளையும் அந்த அம்மையார் செய்துவருகிறார். சுமார் 50 வயதிருக்கும், அந்தப் பெண்மணியிடம் புலிகளுக்கு உதவி செய்வது பற்றிக் கேட்டேன். அவர் சொன்னார் "நானும் ஒரு தாய்; இந்தப் பொடியர்கள் அனைவரையும் எனது பிள்ளைகளாகவே கருதுகிறேன். எனது மகள் இந்தியாவில் இருக்கிறாள். அவள் எனக்கு எழுதிய கடிதத்தை நான் வாசித்துக் காட்டுகிறேன்" என்று சொல்லி அந்தக் கடிதத்திலிருந்து சில பகுதிகளை எனக்கு வாசித்துக் காட்டினார்.

"தமிழீழத்துக்காகப் போராடும் இளைஞர்களுக்கு நீ எல்லா வகையிலும் உதவியாக இருக்க வேண்டும். தோட்டத்திற்குப் **பசலை** போல நம்முடைய நாட்டுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்த இளைஞர்களை உனது பிள்ளைகளைப் போல நினைத்து வேண்டிய உதவிகளையெல்லாம் செய்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் அந்த அம்மையார் சொன்னார், "நான் நாள்தோறும் கண்ணனை வணங்குகிறேன். இந்த இளைஞர்கள் ஒவ்வொருவரையும் நான் கண்ணனாகவே நினைக்கிறேன். இந்த இளைஞர்களுக்குச் சுகமில்லாவிட்டால் என் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிடச் சொல்லு



வேன். அவர்கள் சுகமாகும்வரை பரிவோடு கவனித்துக்கொள்வேன்" என்று அந்த அம்மையார் **சொன்னபோது** அவரது குரல் தழுதழுத்தது.

"இந்த இளைஞர்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றிபெறுவார்கள் என்று நினைக்கிறீர்களா" என்று நான் கேட்டேன்.

"நிச்சயமாக வெற்றிபெறுவார்கள். ஆஞ்சநேயப்பெருமான் அவர்களுக்குத் துணைசெய்வார்" என்று அளவிலாத பக்தி சிரத்தையுடனும் அழியாத நம்பிக்கையுடனும் அந்தப் பெண்மணி கூறினார். அக்கிராமத்திலுள்ள தாய்மார்கள் எப்படியிருக்கிறார்கள் என்பதற்குத் **தவமணி** அம்மையார் ஒரு சீரிய உதாரணம் ஆவார்.

தவமணியைப் போல ஒவ்வொரு பெண்மணியும் இந்த இளைஞர்களின் வெற்றிக்காக நாள்தோறும் **அவரவர்** வழிபடும் தெய்வத்தை வணங்குகிறார்கள். சிவபிரானாக இருந்தாலும், இயேசுபிரானாக இருந்தாலும், அல்லாவாக இருந்தாலும் அத்தனை மதங்களைச் சார்ந்த தாய்மார்களும் இந்த இளைஞர்களுக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டு இருக்கிறார்கள். பக்தி சிரத்தையுடன் அவர்கள் செய்யும் வழிபாடு ஒரு நாளும் வீண்போகாது.

## பலமுனைகளிலும் பெண்கள்

போராடும் புலிகளுக்குப்பலமுனைகளிலும் பெண்கள் உறுதுணையாக உள்ளனர். இராணுவச் **சர்வாதிகாரத்திற்கு** எதிராக மக்களைத் திரட்டுவது, சமுதாயத் தொண்டுகளில் ஈடுபடுவது, மருத்துவ உதவிகள் புரிவது, அகதிகளுக்கு உதவி செய்வது போன்ற பல பயனுள்ள பணிகளில் பெண்கள் ஈடுபட்டிருப்பதை நேரில் கண்டேன்.

நெருக்கடியும் அபாயமும் நிறைந்த கால கட்டத்தில் தமிழீழச் சகோதரிகள் அவற்றைக்கண்டு அஞ்சாமல் துணிந்து நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையாற்ற முன்வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். நான் கண்ட காட்சிகளில் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறேன்.

யாழ்ப்பாணத்திலிருந்த போது **அன்னையர் முன்னணி** என்னும் பெண்கள் அமைப்பின் நிர்வாகிகளைக் கண்டு பேசினேன். **திருமதி பாலசிங்கம்** என்பவர் இதன் தலைவியாக இருந்துவருகிறார். இந்த முன்னணி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இராணுவ அடக்குமுறைகளை எதிர்த்து அன்னையர் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டங்கள் உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. கொடிய சர்வாதிகார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்சிக்கு எதிராகப்பெண்களைக் கிளர்ந்தெழச் செய்யும் பணியினை இம்முன்னணி வெற்றிகரமாகச் செய்து வருகிறது.

இந்த அணியின் தலைவர் திருமதி பாலசிங்கம் அவர்கள் இல்லத்திற்கு நான் சென்றிருந்தபோது ஏராளமான சகோதரிகளும் அங்குகூடியிருந்தார்கள். அன்பு மயமான ஒரு வரவேற்பினை அவர்கள் அளித்தார்கள்.

அங்கிருந்த தாய்மார்கள் அனைவரும் மாறிமாறி என்னிடம் ஒரே கேள்வியையே கேட்டார்கள். "நாங்கள் செத்துக்கொண்டேயிருக் கிறோம். இந்தியா ஏன் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருக்கிறது?" என்றுதான் அவர்கள் கேட்டார்கள்.

"சிங்கள வெறியர்களை எதிர்த்து வீரமுடன் போராடும் தங்கள் புதல்வர்களின் உதவிக்குவர இந்தியா இன்னும் தயங்குவது ஏன்?" என்றும் அவர்கள் கேட்டார்கள்.

**என் உள்ளத்திலும் தாய்த்தமிழ்நாட்டு மக்கள் உள்ளங்களி லும் இதே கேள்வி குமுறிக்கொண்டிருப்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். அறிய நேர்ந்தால் மனமுடைந்து போவார்கள் என்ப தால் நான் அதைவெளிக்காட்டிக்கொள்ளவில்லை.**

இந்தக்கேள்விக்கு ஏதோ ஒருவகையில் பதில்கூறி அவர்களைச் சமாதானப்படுத்தினேன்.

அன்னையர் முன்னணி ஒரு அற்புதமான அமைப்பு. ஈழநாட்டுப் பெண்களின் மன உறுதி குன்றாமல் இருக்கவும் அம்மக்களுக்கு எதிராக விடப்பட்டிருக்கும் அறைகூவலை எதிர்க்கும் துணிவினை அவர்களுக்கு ஊட்டவும் இம்முன்னணி தொடர்ந்து பாடுபடுகிறது. தன் முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறது.

**நெடியகாடு** என்ற கிராமத்தில் இளம் பெண்களால் நடத்தப் படும் **ஆரம்ப சுகாதார நிலையம்** ஒன்றினைப் பார்த்தேன். 1985-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்த நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. **வடமராட்சிப்** பகுதியில் மட்டும் சுமார் 200 நிலையங்கள் இவ்வாறு தொடங்கப்பட்டுள்ளன. இங்குள்ள இளம் பெண்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். இந்தக் கிராமத்தில் மட்டும் 72 பெண்கள் முதலுதவிச் **சிகிச்சை**க்கான பயிற்சிபெற்றிருப்பதாக அவர்கள் பெருமிதத்துடன் கூறினார்கள்.

" உங்களுக்கு இந்தப் பயிற்சி யார் கொடுத்தது? " என்று நான் அவர்களிடம் கேட்டேன்.



" புலிகள் இயக்கத்தின் சார்பில் இந்தப் பயிற்சிமுகாம் நடத்தப் பட்டது " என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

" இந்தப் பயிற்சியைக்கொண்டு எவ்வாறு சேவைசெய்கிறீர்கள்" என்று நான் கேட்டேன்.

" மருத்துவமனைகள் இயங்காத இந்தச் சூழ்நிலையில் மக்களுக் குத் தேவையான சகல மருத்துவ உதவிகளையும் நாங்கள் செய்கிறோம். அறுவைச் **சிகிச்சை போன்றவைதவிர** எங்களால் செய்ய முடியாதே தவிர மற்றெல்லாம் நாங்கள் ஓரளவுக்குச் செய்வோம். இராணுவத்தி னால் சுடப்பட்டு படுகாயமடைந்த 6 பேர்களின் உயிர்களை நாங்கள் காப்பாற்றினோம். இதைத் தவிர மக்களுக்கும், குழந்தைகளுக்கும் ஏற்படும் சிறுசிறு நோய்களுக்கு எல்லாம் நாங்கள் **சிகிச்சை** செய்துவரு கிறோம். கிராமத்தைச் சுகாதாரமாக வைத்துக்கொள்ளவும் தொண் டாற்றுகிறோம் " என்று அந்த இளம் பெண்கள் கூறினார்கள்.

நெடியகாடு கிராமத்தில் மட்டும் அல்ல; பல நூற்றுக்கணக்கான கிராமங்களில் முதலுதவி சிகிச்சை படைகள் அமைக்கப்பட்டுவருகின் றன. ஒவ்வொரு இளம் பெண்ணும் இவற்றில் சேருவதற்கு அக்கறை காட்டுகிறாள்.

தங்களுடைய அண்ணன்மார்களும், தம்பிமார்களும் ஆயுதம் தாங்கிப் போராடிக்கொண்டிருக்கும்போது நாங்கள் சும்மா வீட்டில் அடைபட்டுக்கிடப்பது சரியல்ல. போராடும் இளைஞர்களுக்குப் பக்க பலமாகத் தாங்களும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வு இந்த இளம் பெண்களுக்கு ஏற்பட்ட காரணத்தினால்தான் அவர்கள் முழுமை யாக இத்தகைய பணிகளுக்குத் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். அகதிகளுக்கும் அவர்கள் சிறந்த தொண்டாற்றி வருவதைக் குறிப்பிட் டார்கள். அகதிகளாக வந்துள்ள 15 குடும்பங்களைத் தாங்கள் பரா மரிப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

**ஆனைக்கோட்டை** என்னும் இடத்திற்கு அருகேயுள்ள ஒரு இடத்தில் **முதலுதவி நிலையம்** ஒன்றினைப் பார்த்தேன். முழுவதும் இளம் பெண்களாலேயே இந்த நிலையம் நடத்தப்படுகிறது. 120 பேர் முதலுதவி **ப்பயிற்சி** பெற்றிருக்கிறார்கள். எட்டுக் குழுவினர்களாக இவர்கள் செயல்படுகிறார்கள். இந்தப் பகுதியில் மருத்துவமனை எது வும் இயங்காததால் இந்நிலையத்தை மக்கள் வரப்பிரசாதமாகக்கருது கிறார்கள். இந்த இளம் பெண்களுக்கு இருக்கக்கூடிய உறுதியையும் தொண்டாற்றும் தியாக உள்ளத்தினையும் நான் மனமாரப் பாராட் டினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீங்கள் ஏற்றிருக்கக்கூடிய இந்தப் பொறுப்பில் அபாயம் அதிகம் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

"உணர்ந்துதான் இதற்கு எங்களை அர்ப்பணித்திருக்கிறோம்" என்று பளிச்சென்று பதில் சொன்னார்கள்.

"நீங்கள் செய்கிற இந்தக் காரியங்களை இராணுவம் அறிந்தால் உங்கள் உயிர்களுக்கு ஆபத்து வருமே என்று நான் கேட்டபோது, அவர்கள் கொஞ்சமும் தயக்கமில்லாமல் "வீட்டில் நாங்கள் சும்மா இருந்தாலும் எப்போதும் ஆபத்து எங்களுக்கு இருக்கிறது. எமது மக்களுக்காக நாங்கள் தொண்டாற்றி அதன் காரணமாகச்சாவு வருமானால் அதை நாங்கள் பெருமையுடன் ஏற்போம்', என்று சொன்னார்கள்.

"உங்களுக்கு வேண்டிய மருந்துகளை எங்கிருந்து பெறுகிறீர்கள்" என்று நான் கேட்டேன்.

"பொது ஸ்தாபனங்கள் மூலம் பெறுகிறோம்" என்று சொன்னார்கள்.

அவர்களிடம் ***சிகிச்சைக்காக*** வரும் நோயாளிகளைப் பற்றிக் கேட்டபோது பல திடுக்கிடும் உண்மைகளைக் கூறினார்கள்.

***இராணுவ அட்டூழியங்களைப் பார்த்துச் சித்தம் கலங்கிய ஏராளமான பெண்கள் சிகிச்சைக்காக*** **வருவதாக அவர்கள் தெரிவித்த போது நான் அதிர்ச்சி** அடைந்தேன், தங்கள் கண்ணெதிரில் கணவனை, சகோதரர்களை, பெற்ற பிள்ளைகளை ஈவு இரக்கமில்லாமல் சிங்கள இராணுவம் படுகொலை **செய்வதைப்** பார்க்கும்போது எந்தப்பெண்ணாக இருந்தாலும் சித்தம் கலங்கிவிடும்.

அதைப்போலவே இராணுவச் சிறை முகாம்களிலிருந்து விடுதலையாகி வருபவர்கள் பலர் அறிவு கலங்கிய நிலையில்தான் வருகிறார்கள். அவர்களுக்கு ஆண்மை அழிப்பு ஊசி போடப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். இராணுவத்திற்குப் பயந்து காடுகளில் ஒளிந்து வாழும்போது பாம்பு போன்ற விஷ சந்துக்களால் கடிக்கப்பட்டுப்பலர் பாதிக்கப்படுவதாகவும் போதுமான மருந்துகள் இல்லாததால் பலர் சாக நேரிட்டதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

"எங்களுக்குத் தேவை மருந்துகள்தான். அவற்றை எப்படியாவது அனுப்பி வையுங்கள்" என்று வேண்டிக்கொண்டனர். நானும் தமிழகம் திரும்பிய பிறகு ஓரளவுக்கு மருந்துகள் சேகரித்து அவர்களுக்கு அனுப்பிவைத்தேன்.





பஸ்டியன் பாதிரியார்

## 39. துறவிகளின் உறுதி

யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கத் துறவிகள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தமிழீழப் போராட்டத்தில் கத்தோலிக்கத் துறவிகளின் தொண்டு சிறப்பானதாகும். அரசாங்கத்தின் சினத்திற்கு ஆளானபோதிலும்கூட அவர்கள் தொடர்ந்து தங்கள் கடமைகளைச் செய்து வருகிறார்கள். பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்களில் அகதிகளாக ஓடிவரும் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, உணவும் உடையும் அளித்து அவர்களைப் பராமரிக்கும் அரிய பணியினைச் செய்து வருகிறார்கள்.

இராணுவத்தினால் பல கத்தோலிக்கத் துறவிகள் சுட்டுக் கொல்லப்பட்டதுண்டு. **பஸ்டியன் பாதிரியார்** இதற்கு ஒரு சீரிய உதாரணமாவார். அதைப்போலவே சிங்களச் சிறைகளில் சொல்ல முடியாத சித்ரவதைக்கு ஆளான கிறிஸ்தவத்துறவி சிங்கராயரின் தியாகம் அளப்பரியதாகும். இன்னும் சிறைகளிலே பலர் வாடியும் வருகிறார்கள்.

கத்தோலிக்கத் துறவிகளை நான் சந்தித்தபோது அவர்களது சீரிய தொண்டுகளைப் பாராட்டி நன்றியும் தெரிவித்தேன். "எங்கள் கடமைகளை நாங்கள் செய்கிறோம். அதற்காக இறைவனுக்கு நன்றி கூற வேண்டுமே தவிர எங்களுக்கு அல்ல" என்று அடக்கமாகச் சொன்னார்கள்.

"பிரதமர் ராஜீவின் சமரச முயற்சிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று நான் அவர்களிடம் கேட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மறைந்த பிரதமர் இந்திரா காந்தியும், இன்றையப் பிரதமர் ராஜீவ் காந்தியும் எங்கள் பிரச்னைகளை அணுகிய முறையில் பலத்த வேறுபாடிருக்கிறது" என்று அவர்கள் கூறினார்கள்.

"எப்படி? என்று நான் கேட்டேன்.

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைப் பார்த்துக் கொண்டு இந்தியா சும்மா இருக்க முடியாது. இது இந்தியாவையும் பாதிக்கிற பிரச்னை என்று பிரதமர் இந்திராகாந்தி கூறினார். 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்புக் கலவரங்கள் உச்சநிலையில் நடைபெற்றபோது இவ்வாறு இந்திராகாந்தி கூறியதும் ஜெயவர்த்தனா பயந்தார். உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுத்துக் கலவரத்தை ஒடுக்கினார். ஆனால் **இப்போதயப்** பிரதமர் ராஜீவ்காந்தி கூறிய இரண்டு விசயங்கள் எங்களைப் பலவீனப் படுத்திவிட்டன. சிங்களரின் கரங்களைப் பலப்படுத்தி விட்டன" என்று கூறிவிட்டு மேலும் அவர்கள் தொடர்ந்தார்கள். "தமிழீழத் தனிநாடு கோரிக்கையை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்காது என்றும் இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னை என்றும்" பிரதமர் ராஜீவ் வெளியிட்ட அறிவிப்பு எங்களைப் பெருமளவு பாதித்து விட்டது. இந்திராவின் நிலையிலிருந்து இவர் விலகி நிற்கிறார் என்பதைக் காட்டி விட்டது. 'காமன்வெல்த்' மாநாட்டில் பேசிய இலங்கைப்பிரதமர் பிரேமதாசா இந்தப் பிரச்னையைத் தீர்க்க இந்தியா எங்களுக்கு உதவிபுரியும் என்று கூறும் துணிவு பெற்றதற்கு யார் பொறுப்பு? " என்று அவர்கள் என்னைப் பார்த்துக கேட்டார்கள்,

" நீங்களே சொல்லுங்கள் " என்று நான் சொன்னேன்.

"எங்களை ராஜீவ் கைகழுவிவிட்டார் என்பதுதான் இதற்குப் பொருள் " என்று அவர்கள் கூறினார்கள்.

"எத்தகைய சமரசத் தீர்வும் இப்பிரச்னையில் சாத்தியமானது அல்ல. புத்திசாலித்தனமாக முடிவு எடுக்கும் திறமையும் அவ்வாறு எடுக்கும் முடிவை அமல்நடத்தும் 'துணிவும் ஜெயவர்த்தனாவுக்கு அறவே கிடையாது. இதைப் புரிந்துகொள்ளாமல் ராஜீவ் காந்தி மேற்கொள்ளும் சமரச முயற்சி எதுவும் எவ்விதப் பயனையும் அளிக்காது " என்று அவர்கள் கூறினார்கள்.

அப்படியானால் இதற்கு என்னதான் வழி என்று நான் கேட்டேன்.

தமிழீழம் அமைவதைத் தவிர வேறு வழி இல்லவே, இல்லை. அதுதான் எமது பிரச்னையை நிரந்தரமாகக் தீர்க்கும். அதற்கு இந்தியா



எமக்கு உதவ வேண்டும்" என அவர்கள் கூறினார்கள். அவர்களின் குரலில் உறுதி தொனித்தது.

"**ஜோசப் மேரி பாத்ரியார்**" என்பவர் கிழக்கு மாநிலத்தின் நிலை குறித்து எழுதிய ஒரு கடிதத்தின் பிரதியை எனக்குக் கொடுத்தனர். அவருடைய கட்டுரைகள் பல்வேறு பத்திரிகையிலும் வெளியிடப்பட்டுள்ளன.

நான் இப்படி வந்திருப்பது குறித்து அந்தக் கத்தோலிக்கத் துறவிகள் கவலைப்பட்டார்கள். பத்திரமாக நான் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டுமென விரும்பினார்கள். "உங்கள் ஆசியும், இறைவனின் அருளும் இருக்கும்வரை அஞ்சத் தேவையில்லை" என்று நான் கூறினேன்.

பிறகு விசேஷ வழிபாடு ஒன்றினை எனக்காக அந்தத் துறவிகள் நடத்தினார்கள். என் நெற்றியில் சிலுவைக் குறியிட்டு என்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 40. அதிகாரிகளின் சந்திப்பு

இலங்கை அரசின் மிக உயர்ந்த பதவியிலிருக்கும் தமிழர் ஒருவரைச் சந்தித்தேன். அவரது சந்திப்பு மிகப் பயனுள்ள சந்திப்பாக இருந்தது. சிங்கள அரசாங்கத்தின் மேல் மட்டத்தில் நடைபெறும் பல சதிகளைப்பற்றிய தகவல்களை அவர் சொன்னார்.

தமிழ்ப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியினை இராணுவச் செலவுகளுக்கே அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. வெளி உலகை ஏமாற்றுவதற்காக தமிழ்ப்பகுதிகளிலும் வளர்ச்சிப் பணிகளைத் தாங்கள் மேற்கொண்டிருப்பதாகச்சிங்கள அரசு பிரச்சாரம் செய்கிறது. ஆனால் அந்தப் பணம் பூராவையும் தமிழ்ப்பகுதிகளிலுள்ள இராணுவத்தின் செலவுக்காக அளித்து விடுகிறது. இது ஒரு **திட்டமிட்ட மோசடியாகும்''என்று அவர் கூறினார்.**

இராணுவ நோக்கில் தடை செய்யப்பட்ட பகுதிகள் எனப்பல பகுதிகளை அறிவித்திருப்பதன் மூலம் விவசாயமும் மீன் பிடித் தொழிலும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதை அவர் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டினார்.

கைத்தறித்தொழில் முழுவதுமாக நசிந்துவிட்டது. கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தேவையான நூல் கொழும்பி'லிருந்துதான் வர வேண்டும். அது இப்போது அறவே நிறுத்தப்பட்டு விட்டதால் கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் வேலை வாய்ப்பு இழந்து வாடுகிறார்கள்.

''சிங்களப் பகுதியின் பொருளாதார நிலைமையும் மோசமாக இருப்பதாகச்சொல்கிறார்களே'' என்று நான் கேட்டேன்.



''உண்மைதான் அங்குப்பொருளாதாரம் நாளுக்குநாள் சீர் குலைந்து வருகிறது. ஆனால் வெளிநாட்டு உதவிமூலம் அதை அவர்கள் சரிக்கட்டுகிறார்கள். ஆசிய நாடுகளிலேயே அதிக நிதி உதவி பெறுகிற நாடு இலங்கைதான். சரித்திரம் காணாத அளவிலும், எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாத முறையிலும் வெளிநாட்டு நிதிஉதவி இலங்கைக்குக்கிடைக்கிறது. இதைக் கொண்டு ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கிறார்கள். சரிந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் பொருளாதாரத்தைச் சரிக்கட்டுகிறார்கள்''.

''அமெரிக்கா நேரடியாக இலங்கைக்கு ஆயுதம் கொடுக்கா விட்டாலும், பாகிஸ்தான் மூலம் ஆயுதங்களைக் கொடுக்கிறது. இஸ்ரேல், சீனா போன்ற நாடுகளும் ஆயுத உதவி செய்கின்றன. ஜப்பான் தனது மார்க்கெட்டாக இலங்கையை வைத்திருக்கிறது. எனவே அதுவும் உதவி செய்கிறது. அதாவது ஜப்பானிய தொழில்கள் மூலம் இலங்கைக்குள் அமெரிக்கா ஊடுருவியிருக்கிறது'' என்று அவர் கூறினார்.

திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத் தளம் வரவிருப்பது குறித்து நான் கேட்டேன்.

''வியட்நாம் போராட்டத்தின் போதே இதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன. வியட்நாம் போராட்டத்திற்கு அனுப்பப்பட்ட அமெரிக்கக் கடற்படையினருக்குத்திருகோணமலைத் துறைமுகத்தில் தங்கும் வசதிகள் இலங்கை அரசினால் செய்து கொடுக்கப்பட்டன. கடற்படைத் தளம் அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட இருந்த வேளையில் வியட்நாம் போர் **முடிந்து** விட்டதால் அந்த முயற்சி அப்படியே நின்று விட்டது, மீண்டும் அந்த முயற்சி ஆரம்பமாகியிருக்கிறது'' என்றார் அவர்.

''இலங்கை போன்ற சிறிய நாட்டில் இராணுவ பலம் **பெருகுவது ஆபத்து** என்பது சிந்திக்கத் தெரிந்த சிங்களவர்களுக்குத் தெரியவில்லையா'' என்று கேட்டேன்.

''இலங்கை இராணுவம் ஏற்கெனவே ஒழுங்கின்மைக்கும் கட்டுப்பாடற்ற **தன்மைக்கும் பெயர் போனது** இது மேலும் மேலும் பலம் பெறுவது என்பது இலங்கையின் ஜனநாயகத்தையே அழித்து இராணுவ ஆட்சிக்கு அடிகோலிவிடும் என்ற அச்சம் சிங்களவர்களுக்கு இல்லாமல் இல்லை. என்னுடன் வேலை பார்க்கும் பல சிங்கள உயர் அதிகாரிகள் இதை வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள். ஆனால் தமிழர்களுக்கு எதிரான இனவெறி மேலோங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிற்பதால் இது **இப்போது** எடுபடாமல் இருக்கிறது'' என்று அவர் கூறினார்.

''இலங்கையில் சமஷ்டி ஆட்சி அமைத்தால் தமிழர் பிரச்னைக்கு அது பரிகாரமாக இருக்கும் என்பதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? '' என்று கேட்டேன்,

''அப்படி நாங்கள் எண்ணியகாலம் ஒன்று இருந்தது. ஆனால் அப்போது அது ஒரு வேளை சாத்தியமாக இருந்திருக்கலாம். இப்போது அது சாத்தியமல்ல. ஒற்றை ஆட்சியை ஏற்பது தமிழனுக்கு அழிவு தான். தமிழீழம் அமைவதைத் தவிர எங்கள் பிரச்னை தீர வேறு வழியே இல்லை'' என்று அவர் அழுத்தமாகக் கூறினார்.

'' இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் சமரச முயற்சிகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள் '' என்று கேட்டேன்.

''இந்திரா பாதையிலிருந்துராஜீவ் விலகிச் செல்கிறார் என்றுதான் எங்களுக்குப் படுகிறது என்று அவர் வேதனையோடு கூறினார்.''

'' எதை வைத்து இப்படிக் கூறுகிறீர்கள் ? என்று நான் கேட்டேன்.

'' எங்கள் பிரச்னைகளில் இந்தியா நடுநிலை வகிக்க வேண்டும் என்பதுதான் ஜெயவர்த்தனாவின் **விருப்பமாகும்** பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலம்கடத்தினால் போராளிகள் பலவீனமடைவார்கள். தமிழர்களின் பொருளாதார பலத்தை அழித்து அவர்களின் போராடும் சக்தியைக் குறைக்க வேண்டும். இவற்றுக்கான கால அவகாசம்பெற பேச்சுவார்த்தை உதவும் என்பது ஜெயவர்த்தனாவின் திட்டம். அவரின் இந்தத் திட்டம் நிறைவேற ராஜீவ்காந்தி உதவிசெய்கிறார் '' என்றார்.

'' மற்ற சிங்களக் கட்சிகளின் நிலை என்ன? '' என்று நான் கேட்டேன்.

''**இப்**போதைய சூழ்நிலையில் ஜெயவர்த்தனாவை வீழ்த்தும் சக்தி சிங்களக் கட்சி எதற்கும் கிடையாது. தனக்குச் சார்பான சிங்களக் கட்சி மூலம் அவரை வீழ்த்த முடியாத கட்டத்தில் அவரையே தனது சார்பாளராக வைத்துக்கொள்ள இந்தியா முயற்சி செய்கிறது. எனவேதான் எமக்கு ஆதரவற்ற போக்கில் இந்தியா நடந்துகொள் கிறது '' என்று கூறினார்.

இலங்கையின் அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட தீர்வை இந்தியா ஆதரிக்கும் என்று ராஜீவ் சொல்லியிருக்கிறாரே, அது பற்றி என்ன நினைக்கிறீர்கள் '' என்று நான் கேட்டேன்.



அவர் 'சிரித்துக்கொண்டே '' இப்போதுள்ள அரசியல் சட்டத் தின்படி எல்லா அதிகாரமும் மக்கள் கையில்தான் உள்ளது. சிங்களரே பெரும்பான்மையாக இருக்கக் கூடிய நிலைமையில் தமிழர்களின் உரிமையை எப்படிப்பாதுகாக்க முடியும். மேலும் தற்போதைய அரசியல் சட்டப்படி நாடாளுமன்றத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது. அந்த அதிகாரத்தை ஜனாதிபதி வழங்க முடியாது. மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தினால்தான் அவ்வாறு செய்ய இயலும். சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு நாட்டில் இது எப்படிச் சாத்தியமாகும்? சாத்தியமே ஆகாது. இந்தியாவில் மாநிலங்களுக்குள்ள உரிமைகள்போல் இலங்கையிலும் வழங்கலாம் என்று ராஜீவ் கூறியிருக்கிறார். அப்படிச் செய்வதானால் இலங்கை அரசியல் அமைப்பையே மாற்றியாக வேண்டும். அதற்கு ஜெயவர்த்தனா தயாராகஇல்லை' எங்கள் நாட்டின் அரசியல் சட்டத்தைப் பற்றியும் ஜெயவர்த்தனாவைப் பற்றியும் எதுவும் தெரிந்துகொள்ளாத வகையில் ராஜீவ்காந்தி பேசுகிறார்'' என்று அவர் மிக வருத்தத்தோடு சொன்னார்.

''தமிழீழத்திலுள்ள சாதாரண மக்கள் என்ன நினைக்கிறார்கள்'' என்று நான் கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னபதில் என்னைச் சிலிர்க்க வைத்தது. ''அடிமைத்தனத்தோடு **சாவது** அல்லது சுதந்திரத்திற்காக போராடிச் **சாவது**இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தீரவேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சுதந்திரத்திற்காகப் போராடிச் சாவது என்ற உறுதியை அவர்கள் பூண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் எங்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் போராளிகளின் சுதந்திர வேட்கைக்கு எதிராக ஒருபோதும் திரும்பமாட்டோம் என்பதுதான் **நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது**சதவிகிதத் தமிழர்களின் கருத்தாகும்'' என்றார் அவர்.

'இந்தியாவிலுள்ள தமிழர்கள் உங்களுக்கு உதவ என்ன செய்ய வேண்டுமென்று நான் இறுதியாகக் கேட்டேன்

''எங்களுக்கு உதவும்படி, 'டில்லியை' நீங்கள் நிர்ப்பந்திக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக தமிழகத்திலுள்ள எம். ஜி. ஆர். அரசு எங்களுக்குச்சாதகமாகயில்லை. ஒப்புக்காக அவர் நடத்தும் உண்ணா விரதப் போராட்டங்கள் நகைப்புக்குரியவை. எங்கள் பிரச்னையைத் தீர்க்க உண்மையில் எந்த நடவடிக்கையும் எடுக்க அவர் தயாராக இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. எங்கள் போராளிகளை இந்திய மத்திய அரசு நாடுகடத்தியபோது எம். ஜி. ஆர். வாயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறக்கவில்லை என்பது எங்களை அளவுகடந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது'' என்று அவர் சொன்னார்.

எம். ஜி. ஆர். வாயைத் திறக்கவில்லை என்பது பாதி உண்மை. அவரின் சம்மதத்தோடுதான் போராளிகள் நாடு கடத்தப்பட்டார்கள் என்பதே முழு உண்மை என்று நான் சொன்னபோது அவர் திகைத்துப் போனார்.

யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது மற்றொரு உயர்தர அதிகாரியைச் சந்தித்தேன். என் **மனத்திலிருந்த** பல சந்தேகங்களுக்கு அவர் தெளிவான விடை சொன்னார் அவருடைய கருத்துக்களை மட்டுமல்ல அரசு மட்டத்தில் உள்ள பல பெரிய அதிகாரிகளின் ஒட்டு மொத்தமான கருத்தையே **தாம்** வெளியிடுவதாக அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளின் போராட்டம் குறித்து இருவரும் பேசினோம்.

''வியட்நாம் போராட்டம்போல நீண்டகாலப் போராட்டமாக இந்தப் போராட்டம் நடந்தாலும் அதனால் ஏற்படும் கஷ்டங்களைத் தாங்கும் மன உறுதி மக்களுக்கு உண்டா!'' என்று நான் கேட்டேன். அவர் சற்று யோசித்துவிட்டு என்னுடைய கேள்விக்கு நிதானமாகப் பதில் சொல்லத் தொடங்கினார்.

'' சில மாதங்கள் ரயில் போக்குவரத்தே நிறுத்தப்பட்டது. மக்கள் அதைச் சமாளித்துக்கொண்டார்கள். பஸ் போக்குவரத்தைப் பெருமளவுக்குக் குறைத்தார்கள், மக்கள் சகித்துக்கொண்டார்கள். தனியார் வாகனப் போக்குவரத்தை முழுமையாக ஸ்தம்பிக்கவைத்தார்கள், அப்போதும் மக்கள் தாக்குப்பிடித்தார்கள். கல்வி நிலையங்கள் இயங்காதபோது, மருத்துவமனைகள் செயல்படாதபோது, சாலைகள் சீர்செய்யப்படாதபோது, குளங்கள் மராமத்துச் செய்யப்படாதபோது, எந்த வளர்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்படாதபோதும் மக்களின் மன உறுதி குன்றவில்லை. மாறாக மேலும் தாக்குப்பிடித்தார்கள். விவசாயம் முற்றிலுமாகச்சீர்குலைந்து,மீன் பிடித் தொழிலும் முற்றிலுமாக அழிந்து, துயரமே வாழ்வு என்றானபோதுகூட மக்கள் உறுதியோடு இருக்கிறார்கள் வியட்நாமிய மக்களின் மன உறுதிக்குக் கொஞ்சமும் குறைந்தது அல்ல ஈழத் தமிழர்களின் மன உறுதி '' என்று அந்த அதிகாரி சொன்னார்.

'' சரி! படித்தவர்கள் எப்படியிருக்கிறார்கள்? சிறுசிறு துன்பங்களானாலும் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாதே '' என்று நான் கேட்டேன்.



'' யாழ்ப்பாணத்தில் கடைகள் பெரும்பாலும் மூடப்பட்டிருக்கின்றன. திறந்திருந்தாலும் சில மணி நேரங்கள் மட்டுமே திறக்கப்படுகின்றன. போதுமான சாமான்கள் கிடைப்பதில்லை. சினிமா தியேட்டர்கள் எல்லாம் அறவே மூடியாகிவிட்டது. நகரசுத்தப்புரவுப் பணிகளும் ஒழுங்காக நடைபெறவில்லை. எந்தத் தொழிலும் ஒழுங்காக நடத்த முடியவில்லை. ஒவ்வொருவரின் வருமானமும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் யாழ்ப்பாணத்திலுள்ள படித்த மக்களில் குறைந்தபட்சம் 75 சத வீத மக்கள் இந்தக் கஷ்டங்களினால் மனம் கலங்கவில்லை. உறுதியாக இருக்கிறார்கள் '' என்பதை அவர் தெரிவித்தார்.

'' அதிகாரிகளின் மனநிலை எப்படியிருக்கிறது '' என்று நான் கேட்டேன்.

'' உச்சமட்ட அதிகாரிகள் தவிர நடுமட்டத்திலும், கீழ்மட்டத்திலுமுள்ள அதிகாரிகள் அத்தனைபேரும் முழுக்க முழுக்க இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக இருக்கின்றார்கள். உச்சமட்ட அதிகாரிகளும்கூட வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக ஆதரவு தருகிறார்கள் '' என்று சொன்னார்.

'' சுதந்திர அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அதிகாரிகள் ஆதரவு தருவார்களா '' என்று நான் கேட்டேன்.

'' சுதந்திர அரசு அமைக்கப்பட்டு விடுமேயானால் பெரும்பாலான அதிகாரிகள் அந்த அரசிடம்தான் விசுவாசமாக இருப்பார்கள் '' என்று அவர் அழுத்தமாகக் கூறினார்.

''மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களிலிருந்து ஏராளமான அகதிகள் யாழ் நகரில் குடியேறத் தொடங்கிவிட்டார்கள். யாழ்குடா நாட்டை விமானப்படை மூலமோ, கடற்படை மூலமோ தாக்கி அழிக்கச்சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது. இங்கு மக்கள் அதிகமாக குவிந்து இருப்பதால் அப்படி ஒரு தாக்குதல் நடந்தால் பெரும் சேதம் ஏற்படும். இந்த அபாயத்தையும் நாங்கள் எதிர்நோக்கியே இருக்கிறோம்'' என்றார் அவர்.

''விவசாயம் சீர்குலைக்கப்பட்டு இருப்பதால் பஞ்சம் உருவாகும் நிலையும் இருக்கிறது. அப்படிப்பஞ்சம் வந்தால் சில வாரங்கள் மட்டுமே சமாளிக்க முடியும்'' என்றும் அவர் கவலையோடு கூறினார்.

மேலும் சில அதிகாரிகளையும் சந்தித்தேன். 1957-ஆம் ஆண்டிலிருந்து 1985-ஆம் ஆண்டுவரை நடைபெற்ற சமரசப்பேச்சுவார்த்தைகளினால் எந்தப் பயனும் இல்லை. பேச்சு வார்த்தையின் மூலம் இந்தப் பிரச்னைக்குத்தீர்வு வரவே வராது என்பதை அவர்கள் தெரிவித்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்குடா நாட்டில் அகதிகள் வந்து குவிவதை அரசு அனுமதிப்பதற்கு உள்நோக்கம் இருப்பதாக தெரிவித்தார்கள். யாழ்குடா நாட்டை விமானப்படை மூலமோ, கடற்படை மூலமோ, தாக்குவது சுலபமானது. இங்கு லட்சக்கணக்கான தமிழர்கள் குவிவதை அனுமதித்துப்பிறகு இத்தகைய தாக்குதலை நடத்தி அவர்களை முழுவதுமாக ஒழித்துக்கட்டச்சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள்.

இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகம் முற்றிலுமாகத்தோல்வியடைந்துவிட்டதாகவும் அவர்கள் கூறினார்கள். பாராளுமன்ற ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டுவிட்டது. தமிழர்களைப் பொறுத்தவரை பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் எதையும் பெறமுடியாது என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டு விட்டார்கள்.

தமிழ்ப்பகுதியில் பலவிதத்திலும் சிங்களவரைத் திட்டமிட்டுக்குடியேற்றுவதாகக் கூறினர். ஏதேனும் ஒரு தொழிற்சாலையை அமைத்து அதில் வேலைபார்க்கச் சிங்களத் தொழிலாளிகளைக் கொண்டுவந்து குவிக்கிறார்கள். அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தருகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சி என்று சொல்லித்தமிழர் பகுதிகளில் எந்த இடத்திலாவது புத்தமதச் சின்னங்கள் கிடைத்தால் உடனே அது சிங்களர் வாழ்ந்த பகுதி என்று கூறி சிங்களக் குடியேற்றங்களை அமைக்கத் **தொடங்குகிறார்கள்** ஆரம்ப காலத்தில் தமிழர்கள் பௌத்தர்களாக இருந்தார்கள். தமிழ்ப்புத்தத் துறவிகளே இலங்கையில் புத்தமதத்தைப் பரப்பினார்கள் என்ற வரலாற்றுண்மையைக்கூட அவர்கள் எண்ணிப்பார்ப்பது இல்லை'' தமிழீழப் பகுதிகளில் இராணுவ முகாம்களை அமைத்து அதையொட்டிச் சிங்களவர்களைக் குடியேற்றுகிறார்கள். இப்படி எல்லாவகையிலும் தமிழர் பகுதிகளில் சிங்களரை தொடர்ந்து குடியேற்றிக்கொண்டிருக்கிறார்கள்'' என்பதை விவரித்தார்கள்.

தமிழீழப் பகுதியில் குடும்பக்கட்டுப்பாடு தீவிரமாக அமுல் நடத்தப்பட்டுள்ளதன் விளைவாக தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதாகவும் அவர்கள் கூறினார்கள். தமிழர் பகுதியிலுள்ள சிங்களவர் இனத்தொகைப் பெருக்கம் 7½ சதவிகிதமாகும். முஸ்லிம்களின் இனத்தொகைப் பெருக்கம் 2½ சதவிகிதமாகும். தமிழர்களின் ஜனத்தொகைப் பெருக்கம் 2½ சதவிகிதத்திற்கும் குறைவாகஇருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் தமிழர்கள் பகுதிகளிலேயே தமிழர்களின் எண்ணிக்கை சில ஆண்டுகளில் குறைந்துவிடும் என்பதையும் அவர்கள் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டி



னார்கள். எனவேதான் கருத்தடையை எதிர்த்து விடுதலைப்புலிகள் பிரச்சாரம் செய்வதாக அவர்கள் கூறினார்கள்.

விவசாய அதிகாரி ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் பல முக்கிய விவரங்களைத் தெரிவித்தார். யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய், புகையிலை போன்றவை இலங்கை முழுவதுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது என்று அவர் கூறினார்.

எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது. தமிழ்நாட்டில் மலைப் பகுதிகளில்தான் உருளைக் கிழங்கு பயிர் செய்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் அதுவும் தரைப் பகுதியில் மணல் பூமியில் உருளைக் கிழங்கு பயிர் செய்யப்படுவது புதிய விஷயமாக இருந்தது. அதைப் பற்றி நான் கேட்டேன்.

"ஆம்! இங்குச்செம்மணல் பகுதியில் உருளைக் கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. ஹாலந்திலிருந்து உருளைக் கிழங்கு விதைகள் வரவழைக்கப்பட்டு இங்குப்பயிர் செய்யப்படுகிறது. இது ஒரு விசேஷரகமான உருளைக் கிழங்கு'' என்று அவர் கூறினார்.

"இப்போதையச்சூழ்நிலையில் உருளைக் கிழங்கு விவசாயம் பெருமளவுக்குப்பாதிக்கப்பட்டிருக்குமே'' என்று நான் கேட்டேன்.

உண்மைதான்! இப்போதுள்ள நலவரச்சூழ்நிலையில் இங்கிருந்து சிங்களப் பகுதிகளுக்கு எங்களது விவசாய பொருட்களை அனுப்ப முடியவில்லை. உருளை விவசாயிகளுக்கு மட்டும் இந்த ஆண்டு ரூபாய் 30 கோடி நஷ்டமாகியிருக்கிறது. எங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திய சிங்களவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள்'' என்று அவர் சொன்னார்.

ஒன்றும் புரியாமல் திகைப்புடன் அவரைப் பார்த்தேன். "நாங்கள் உற்பத்தி செய்யும் உருளைக்கிழங்கை வேண்டாம் என்று சொல்லி எங்களை நஷ்டப்படுத்திப்பொருளாதார ரீதியாக எங்களை ஒழிக்க முயலுகிறர்கள். இன்னொரு பக்கத்தில் உருளை, மிளகாய், வெங்காயம் போன்றவை இந்தியாவிருந்து இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டிலிருந்து வரவழைத்துக்கொள்கிறார்கள்'' என்றார்.

இச்செய்தியைக் கேட்டதும் நான் அதிர்ச்சியடைந்தேன். "உண்மையாகவா? அப்படியா'' என்று கேட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆம்! தமிழ்நாட்டிலுள்ள தமிழ் விவசாயிகளிடமிருந்து வேண்டிய உணவுப்பொருட்களை வரவழைத்துத் தின்றுகொழுத்து ஈழநாட்டைச் சேர்ந்த தமிழர்களைச் சிங்கள வெறியர்கள் **சுட்டுக் கொல்கிறார்கள்.** ஈழத்தமிழன் வயிற்றில் தமிழ்நாட்டுத் தமிழனைக்கொண்டே அடிக்கிறார்கள். இதுதான் சிங்களவனின் சாமர்த்தியம்" என்று அவர் வேதனையோடு சொன்னார். எனக்கு ஒருபக்கம் வேதனையாகவும் இருந்தது. இன்னொரு பக்கம் வெட்கமாகவும் இருந்தது.

மாவட்ட அளவிலுள்ள அதிகாரிகள் வேறு சிலரைச் சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இந்த அதிகாரிகள் அனைவரும் தமிழர்கள். சிங்கள அதிகாரிகள் எவரும் தமிழர் பகுதிகளில் இல்லை. வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்துப்பத்தாயிரம் மக்கள் வசித்திருக்கிறார்கள். இவர்களில் முப்பதாயிரம் பேர் இராணுவக் கொடுமைகளின் காரணமாக வெளியேறி விட்டதாகவும், மேலும் பலர் வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள். இதுவரை சுமார் 50 தமிழ்க் கிராமங்கள் முற்றிலுமாகக்காலி செய்யப் பட்டுவிட்டன என்றும் அவர்கள் கூறினர். நெடுங்கேணிப் பகுதியிலிருந்து 3,500 ஏக்கர் நிலத்தைப் பிரித்து அதைத் தனி நிர்வாகப் பகுதியாக்கிச்சிங்களரைக் குடியேற்றியிருப்பதாகவும் அவர்கள் கூறினர். மேலும் அனுராதபுரத்தில் வசித்து வரும் சிங்களரை வவுனியா வாக்காளர் பட்டியலில் சேர்த்து இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்கள். தமிழர்களின் மாநிலங்களான வடக்கு-கிழக்கு மாநிலங்களிலுள்ள எந்தப் பகுதியையும் பிற மாவட்டங்களுடன் சேர்க்கக் கூடாது என்பது அரசியல் யாப்பாகும். ஆனால் அதைமீறித்தமிழர்களின் பகுதிகளை பிரித்தெடுத்துச்சிங்கள மாவட்டத்துடன் திட்டமிட்டு சேர்த்து வருவதாகவும் கூறினர்

சிங்களவர்கள் ஆயிரம் பேர் குடியேறி இருந்தால் வாக்காளர் **பட்டியலில்** ஐயாயிரம் பேரைச் சேர்ப்பதற்கான மனுவை அவர்கள் கொடுப்பார்கள். அதிகாரிகள் அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பாடு ஆபத்து. இப்படிப் பொய்யாக அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கையைக் காட்டிதான் தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கிக் காட்டுகிறார்கள். வவுனியாவுக்கு அருகிலுள்ள சிங்களக் கிராமங்களில் ஏராளமான அரசு நிலம் இருந்தும் அவற்றைச் சுவீகரித்து விமானதளம் அமைக்காமல் தமிழர்களின் குடியிருப்புப் பகுதிகளை இராணுவ தளங்களுக்கு வேண்டுமென்று சொல்லிச்சுவீகரிக்கிறார்கள்.



மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்த போலீஸ் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டார்கள். இராணுவத் தளபதியின் உத்தரவின் கீழ்த்தான் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் இயங்கவேண்டும் என்று உத்தரவிட்டு விட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரியாமலேயே இராணுவம் தனது முகாம்களை அமைக்கும். ஆனால் அதற்குத் தேவையான உதவிகளை மாவட்ட அதிகாரிகள் செய்தே தீரவேண்டும்.

வவுனியாவில் 1976-ம் ஆண்டு முதலில் ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. 1978-ல் விமானப் படை முகாம் அமைக்கப்பட்டது. 1983-ல் முப்படைத் தலைமை முகாம் நிறுவப்பட்டது. (Joint Services Special Operation (J. O. S. S. O.) தமிழர்களைச் சித்திரவதை செய்யும் முகாம்களும் அமைக்கப்பட்டன. 1984-ஆம் ஆண்டில் "கென்ட் பண்ணை" "டாலர் பண்ணை" இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. 1985 ம் ஆண்டு செட்டிக்குளம் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. ஆக மொத்தம் **இப்போது** வவுனியா மாவட்டத்தில் 2,500 இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த இராணுவ முகாம்களைச் சுற்றிலும் உள்ள ஊர்களில் வாழும் மக்கள் சொல்லவொண்ணாத கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கிறார்கள். யாரை வேண்டுமானாலும் கைது செய்து கொண்டுபோகிறார்கள். பெண்களை மானபங்கப்படுத்துகிறார்கள். அதிகாரிகளைக்கூட அவர்கள் விட்டுவைப்பதில்லை. வவுனியா மாவட்டத் துணையாட்சித் **தலைவராக** (A. G. A.) இருந்த **குணநாயகம்** என்ற தமிழரை 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சிங்கள ஊர்க்காவல் படையினர் பிடித்து கை, கால்களைக் கட்டி நடுச் சாலையில் படுக்கப்போட்டு அவருடைய ஜீப்பையே அவர்மேல் பல முறை ஏற்றி இறக்கித் துடிதுடிக்கச் சாகடித்தனர்.

இவர்களால் கைது செய்யப்பட்டவர்களின் கதி என்ன ஆகிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கூடத் தெரிந்துகொள்ள முடியாது. அவ்வாறு கைது செய்திருப்பவர்களைப் பற்றி பொதுமக்கள் புகார் கொடுத்தால் அந்த நபர் இந்தியாவுக்கு அகதியாகப் போய்விட்டார் என்று சொல்லிப்புகார் **கொடுத்தவர்களுக்கும்** அதுவே பதில் என்று தெரிவிக்குமாறு இராணுவம் உத்தரவிட்டிருக்கிறது. இராணுவத்தினால் கொலை செய்யப்பட்டவர்கள் பல பேர் இவ்வாறு இந்தியாவுக்குப் போய்விட்டோர் பட்டியலில் எழுதப்பட்டிருப்பதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தார்கள். அரசுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தால் அந்த வழியாக வரும் தமிழர்களைப் பிடித்து நாவால் நக்கி அந்தச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சுவரொட்டிகளைக் கிழிக்கச்செய்கிறார்கள். நாவால் நக்கிக் கிழிப்ப தோடு மட்டுமல்லாது கிழிக்கப்பட்ட துண்டுகளையும் அவனே விழுங்கி யாகவேண்டும். இல்லாவிட்டால் கடுமையான சித்ரவதைக்கு ஆளாக வேண்டும்.

பொதுமக்களை மட்டுமல்ல; அதிகாரிகளைக்கூட இராணுவம் இவ்வாறுதான் இழிவாக நடத்துகிறது. வவுனியாவிலுள்ள சர்வேயர் அலுவலகத்தின் அதிகாரியையும் மற்றும் அந்த அலுவலகத்திலிருந்த அத்தனை பேர்களையுமே முழங்காலிட்டுப்பல மணி நேரம் நிற்க வேண் டுமென்ற தண்டனையை இராணுவம் விதித்தது.

"இன்சூரன்சு" செய்திருந்தால் அதிலும் தமிழர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காதபடி சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இராணுவத்தி னால் எரிக்கப்படும் வீடுகளும் கடைகளும் "இன்சூரன்சு" செய்யப் பட்டிருந்தாலும் அவைகளுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை என்ற சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் சிங்களவர் பகுதி யில் இவ்வாறு நடந்தால் அதற்கு நஷ்டஈடு உண்டு.

தமீழீழ அதிகாரிகள் யாரும் போராளிகளின் நடவடிக்கைகள் பற்றி அரசுக்குத் தெரியப்படுத்துவதில்லை. போராளிகளுக்கு மறைமுக மான உதவிகளையும் செய்கிறார்கள். சிங்கள மேலதிகாரிகள் மிரட்டி யும்கூடத்தமிழ் அதிகாரிகள் போராளிகளைக் காட்டிக்கொடுக்க மறுக் கிறார்கள். இந்த உணர்வு பெரும்பாலான அதிகாரிகளிடம் இருப்பதை நான் **அறிந்தேன்**. சிறிய அதிகாரிகளானாலும் பெரிய அதிகாரி களானாலும் தமிழர்கள் என்ற உணர்வோடு விளங்குகிறார்கள். காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக மாற அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் அப்படி மாறினாலும் அவர்களுக்குப் புலிகள் கடுமையான தண்டனை விதிக்கிறார்கள்.





# 41. புலிகளின் குகை

யாழ்ப்பல்கலைக்கழகத்திற்கு இன்று சென்றிருந்தோம். புலிகள் வாழும் குகையாக யாழ்ப்பல்கலைக்கழகம் விளங்குகிறது. இங்குள்ள பேராசிரியர்கள் சிறந்த எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்கி வருகிறார்கள்.

**1981**-ம் ஆண்டில் நான் இங்கு வந்திருந்தபோது மறைந்த தமிழ்ப்பேராசிரியர் திரு. **கைலாசபதி** உயிரோடிருந்தார். அவரும் பேராசிரியர் திரு. ***சிவத்தம்பியும்*** என்னை யாழ்ப்பல்கலைக்கழகத்திற்கு அழைத்து சென்று பேசவைத்த நினைவுகள் எனக்கு எழுந்தன. ஆசிரி யர்கள்–ஆராய்ச்சி மாணவர்கள் கூட்டம் ஒன்றில் அன்று நான் பேசினேன். மாணவர்களும், ஆசிரியர்களும் பல கேள்விகளை கேட்டார் கள். இப்படி சுமார் மூன்றுமணி நேரம் கருத்துப் பரிமாற்றம் நடந்தது. அது பயனுள்ளதாக இருந்தது. அன்றையக் கூட்டம் ஒரு அமைதி யான சூழ்நிலையில் நடந்திருந்தாலும் எரிமலை வெடிப்பதற்கு முன் நிலவும் அமைதியை ஒத்திருந்தது அது. ஆனால் ஐந்தே ஆண்டுகளில் எவ்வளவு பெரியமாற்றம் ஏற்பட்டுவிட்டது, குமுறிக்கொண்டிருந்த எரி மலை வெடித்தேவிட்டது. எரிமலை வெடித்த சூழ்நிலையில் நான் மீண்டும் யாழ்ப்பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்திருக்கிறேன். யாரும் யாருடனும் மனம்விட்டுப் பேச முடியாத ஒரு நிலைமையில் அங்கு நுழைந்திருக்கிறேன்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரை ஒரு அறையில் சந்தித்து உரையாடினேன். பேராசிரியர்களின் பெயர்களையோ மற்ற விவரங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையோ இங்கு வெளியிடுவது உசிதமாக இருக்காது என்ற காரணத்தினால் இங்கு வெளியிடவில்லை. ஆனால் அவர்களுடன் நான் நடத்திய விவாதம் எனக்கு எத்தனையோ புதிய விஷயங்களை அறிந்து கொள்ள உதவியது.

இலங்கை அரசியலைப் பற்றி மட்டுமல்ல இந்தியாவின் அரசியலையும் உலக அரசியலையும் அவர்கள் எவ்வளவு தெளிவாக அறிந்திருக்கிறார்கள் என்பதையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்பதையும் என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. இலங்கைத் தமிழர் பிரச்னையை இந்தியப் பிரதமரும் மற்றுமுள்ள முக்கியத் தலைவர்களும் சரிவரப்புரிந்துகொள்ளவில்லை என்று அவர்கள் வருத்தப்பட்டார்கள். அகில இந்திய மட்டத்திலுள்ள பல்வேறு கட்சித் தலைவர்கள் கூட இந்தப் பிரச்னையைப் பற்றித்தவறாகப்புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் மனம் நொந்து கூறினார்கள்.

பல்வேறு தேசிய இன மக்க்ளும் கூடிவாழும் நாடாக இந்தியா விளங்கும்போது இரு தேசிய இனமக்களைக் கொண்ட இலங்கை ஏன் ஒன்றுபட்ட நாடாக இருக்க முடியாது என்று இந்தியத் தலைவர்கள் பலர் நினைக்கிறார்கள். இலங்கையில் **அது** சாத்தியமானது அல்ல என்பதை அவர்கள் உணரவில்லை **எனக்** கூறிய அப் பேராசிரியர்கள் அதற்கான பல ஆதாரங்களையும் என்னிடம் தெரிவித்தார்கள்.

**1920**-ம் ஆண்டில் 'சமஷ்டி' அரசியல் கோரிக்கை (Federal Demand) எழுப்பப்பட்டபோது ஈழத்தமிழர்களே அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். ஆதரிக்கவில்லை. **24** ஆண்டுகள் கழிந்த பிறகே சமஷ்டி அரசியல் கோரிக்கை எழுப்பப்பட்டது.

**1944**-ம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் கூட்டாட்சி நாடாகத்தான் இலங்கை இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது. இப்படித் தமிழர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்கு ஆதரவாகத்தான் ஆரம்பகாலத்திலிருந்தே வந்திருக்கிறார்கள் என்பதை அந்தப் பேராசிரியர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு சிங்களவர்களின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் இலங்கையின் ஒற்றுமையைச்சிதைத்து விட்டது. சிங்களர், தமிழர் ஆகிய இரு தேசிய இனங்களுக்கான அரசாக இருப்பதற்குப்பதில், சிங்கள் தேசிய இனத்திற்கான அரசாக



மட்டுமே இலங்கை அரசு மாறத் தொடங்கி விட்டது. தமிழர்களை இரண்டாந்தரக்குடிமக்களாகச்சிங்களர் கருதத் தொடங்கினர்.

இந்தியாவில் பல்வேறு தேசிய இன மக்களும் அவரவர்களுக்கென்று வரையறுக்கப் பட்ட மாநிலங்களில் அவரவர்களின் மொழி, பண்பாடு, வரலாறு, இலக்கியம், கலைகள் போன்றவற்றை வளர்ப்பதற்கான பூரண உரிமைகளுடன் வாழ்கிறார்கள். ஆனால் இலங்கையில் அந்த நிலைமையில்லை.

இந்தியாவின் ஜனாதிபதியாக மைனாரிட்டி சமூகங்களான முஸ்லீம், சீக்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் வர முடிகிறது. ஆனால் இலங்கையில் ஒரு தமிழனோ முஸ்லீமோ அந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ நிச்சயமாக வரமுடியாது.

இந்திய இராணுவத்தில் பல்வேறு தேசிய இன மக்களும் இருக்கிறார்கள். ஆனால் இலங்கை இராணுவம் சிங்கள மயமாக மட்டுமே உள்ளது. இப்படி எத்தனையோ காரணங்களினால் இலங்கை பல தேசிய இன நாடாக விளங்கவில்லை. இந்தியாவின் சூழ்நிலையோடு இதை ஒப்பிட்டுப் பார்ப்பது எல்லா வகையிலும் தவறானது'' என்று அப்பேராசிரியர்கள் கூறினர்.

சிங்கள இன வெறியர்கள் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்துவருவதையும் எனக்கு ஆதாரப்பூர்வமாக எடுத்துக் காட்டினார்கள். **1974** ஆம் ஆண்டில் ஆயுதப் புரட்சி மூலம் இலங்கை அரசைக் கைப்பற்ற நினைத்துத்தோல்வியடைந்த "**ரோகணவிஜய வீரா** " என்பவரின் தலைமையில் இயங்கும் **ஜனதா விமுதிபெரமுனா** என்ற கட்சியும் '**ஜாதிய விமுனாபெரமுனா**' என்ற கட்சியும் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. இந்தியாவை ஒரு ஏகாதிபத்திய ஆசைகொண்ட நாடாக இந்தக் கட்சிகள் வர்ணித்து வருகின்றன என்பதை எடுத்துக் கூறினார்கள்.

"பயங்கரமான குற்றச்சாட்டின்கீழ்ச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 'ரோகணவிஜய வீர' போன்ற சிங்கள வெறியர்களை ஜெயவர்த்தனா ஆட்சிக்கு வந்த பின்னர் விடுதலை செய்தார். ஜெயவர்த்தனாவின் நிழலில்தான் இந்தக் கட்சிகள் இந்திய எதிர்ப்பு விஷத்தைக் கக்குகின்றன என்பதை இந்தியா மறந்துவிடக் கூடாது'' என்றும் அந்தப் பேராசிரியர்கள் கூறினார்கள்.

தென் இலங்கையில் 'புத்தபிட்சுக்கள்' இந்திய எதிர்ப்பைத் தொடர்ந்து வளர்த்து வருகிறார்கள். **சிறிமாவோ** பண்டாரநாயகாவின் கட்சியும் தொடர்ந்து இந்திய எதிர்ப்புக் கட்சியாகவே விளங்கிவந்திருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறது. 1862-ம் ஆண்டு சீனா இந்தியாவின் எல்லையை ஆக்கிரமித்த போது திருமதி. பண்டாரநாயகா இந்தியாவுக்கு ஆதரவாகஇல்லை. நடுநிலையாளர் வேடம்பூண்டு மறைமுகமாகச்சீனாவையே ஆதரித்தார்.

1974 ம்ஆண்டில் வங்கதேசப் போராட்டத்தையொட்டி இந்தியா, பாகிஸ்தான் போர் மூண்டபோது பாகிஸ்தான் இராணுவ விமானங்கள் இலங்கை வழியாக வங்கதேசம் போவதற்குத்திருமதி. பண்டாரநாயகா அனுமதித்ததையும் இந்தப் பேராசிரியர்கள் சுட்டிக்காட்டினர்.

" அதே வேளையில் இந்தியா மீது சீனா படையெடுத்தபோது தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்கள் இந்திய நிலையை ஆதரித்துப்பிரதமர் நேருவுக்குத்தந்தியனுப்பினார். இந்தியாவின் போர் நிதிக்கு நிதி திரட்டினார். எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய எல்லையைக் காக்க'தமிழ்த் தொண்டர் படை' ஒன்றை அனுப்புவதாகவும் அவர் கூறினார். இப்படி எல்லா வகையிலும் இந்தியாவுக்கு ஆதரவாக இருக்கும் எங்களை ஆதரிக்காமல் இந்தியாவுக்கு எதிரியாக எப்போதும் இருக்கும் சிங்களவரை இந்திய அரசு ஆதரிப்பது ஏன்" என்று அந்தப் பேராசிரியர்கள் கேட்டபோது என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

"இந்தியா எங்கள் பிரச்னையில் பாராமுகமாக இருப்பதும் நடுநிலையாளனாகத் தன்னைக் காட்டிக்கொள்வதும் சிங்களவர்களுக்குச் சாதகமான நடவடிக்கையேயாகும்" என்று அந்தப் பேராசிரியர்கள் வேதனையோடு கூறினார்கள்.

இன்னொன்றையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். "இந்தியாவுக்கு எதிரிகளான பாகிஸ்தான், சீனா போன்றவற்றின் உதவியைப் பெறுவதற்கு சிங்களவர்கள் யோசிக்கவில்லை. **பாகிஸ்தானிடமும்** சீனாவிடமும் ஆயுத உதவிகள் உட்பட எல்லா உதவிகளையும் பெறுகிறார்கள். **ஆனாலும்** இந்தியா எங்களை ஆதரிக்கவோ உதவி செய்யவோ மறுக்கிறது. அதனால் இந்தியாவின் மீது கோபம் கொண்டு இந்தியாவின் எதிரிநாடுகளிடம் உதவிபெற நாங்கள் போகவில்லை. இன்னமும் இந்தியாவைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறோம். இதையாவது இந்திய அரசு எண்ணிப் பார்க்க வேண்டாமா" என்று அவர்கள் கேட்டார்கள்.

இலங்கைக்கு அருகே இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் இல்லாத காரணத்தினால்தான் எங்கள் பிரச்னையில் இந்தியா அலட்சியம் காட்டுகிறது என்றும் அவர்கள் குற்றம்சாட்டினார்கள்.



"அது எப்படி?" என்று நான் கேட்டபோது பின்வரும் விளக்கத்தினை அளித்தார்கள்.

"நேபாளம், பூடான் போன்ற சிறிய நாடுகள் இந்தியா, சீனா ஆகியவற்றுக்கு நடுவே உள்ளன. ஆகவே இந்நாடுகளிலுள்ள மக்களின் பிரச்னைகளில் இந்தியா அக்கறை எடுத்துக்கொள்கிறது. இல்லாவிட்டால் இந்த மக்கள் சீனாவை நாடிச் சென்றுவிடுவார்களோ என்று இந்தியா அஞ்சுகிறது. இந்த நிலை இலங்கையில் இல்லை. இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் இலங்கைக்குப் பக்கத்தில் இல்லை. ஆகவே தன்னை விட்டால் வேறுகதியில்லை என்று எங்களைப் பற்றி இந்தியா நினைக்கிறது. ஆகவேதான் எங்களுக்கு உதவ மறுக்கிறது. இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் தோற்றுவிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும். எங்களை ஒடுக்குவதில் சிங்களவர்கள் வெற்றிபெற்றுவிடுவார்களேயானால் அது இந்தியாவுக்கு ஆபத்தாக மாறும். வெற்றி பெற்ற சிங்களவர்கள் முழுக்கமுழுக்க அமெரிக்காவின் ஆதரவாளராக மாறுவார்கள். அவ்வாறு அவர்கள் மாறுவதை இந்தியாவினால் தடுக்க முடியாது. ஆனால் தமிழர்கள் ஒருபோதும் இந்திய எதிர்ப்பு நிலையை எடுக்கமாட்டார்கள். இந்தப்போராட்டத்தில் தமிழர்கள் வெற்றிபெறுவதன்மூலம் இரண்டு ஆதாயங்கள் இந்தியாவுக்கு உண்டு. 1. தமிழீழ நாடு இந்தியாவின் உற்ற நட்பு நாடாக விளங்கும், 2. சிங்கள நாடு இந்தியாவிற்கு எதிரான நிலையை என்றும் எடுக்க முடியாதபடி ஆக்கப்பட்டுவிடும். ஆனால் இந்த உண்மைகளை இந்திய அரசு உணரவில்லை. தமிழீழம் அமைவது தனக்கு ஆபத்து என்று எண்ணுகிறது. இது ஒரு தவறான கண்ணோட்டம்" என்று அவர்கள் கூறினர்.

"இலங்கையில் தமிழர்கள் கொன்று குவிக்கப்படும் வேளையில் இந்திய "கிரிக்கெட் குழு" இலங்கைக்கு வந்ததைத் தமிழர்களுக்கு எதிரான செயலாக இந்தப் பேராசிரியர்கள் கருதுகிறார்கள். தென்னாப்ரிக்காவின் நிறவெறியை எதிர்க்கும் இந்திய அரசு அந்நாட்டிற்குக் கிரிக்கெட் குழுவை அனுப்புமா" என்று என்னிடம் கேட்டார்கள்.

பித்துக்குளி முருகதாஸ் அவர்கள், தென்னாப்ரிக்காவிலுள்ள தமிழர் கோவிலுக்குப்பக்திப் பாடல்கள் பாடுவதற்குச் சென்று வந்ததையே தவறானது என்று இந்திய அரசு கருதி எதிர்காலத்தில் எந்தத் தமிழ்க்கலைக் குழுவினரும் தென்னாப்ரிக்காவுக்குப் போகக்கூடாது என்று உத்தரவிட்டிருப்பதை நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

"தென்னாப்பிரிக்காவுக்கு ஒரு நீதி? எங்களுக்கு ஒரு நீதியா?" என்று அவர்கள் ஆதங்கத்தோடு கேட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறகு எங்கள் பேச்சுச் சிங்கள அரசியல் பற்றித்திரும்பிற்று. சிங்கள அரசியல் பற்றிய பல புதிய தகவல்களை அந்தப் பேராசிரியர்கள் எனக்குத் தெரிவித்தார்கள் **ஜெயவர்த்தனாவைச்**சுற்றியிருப்பவர்களிடையே கடுமையான பதவிப்போட்டி நடைபெறுவதாகவும் அவர்கள் கூறினர். இதைத் தவிர்ப்பதற்காக ஜெயவர்த்தனா அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொடுத்து இருக்கிறார். பிரதமரான **பிரேமதாசா**விடம் ஊர்க்காவல்படைப் பொறுப்பு உள்ளது. ஜெயவர்த்தனாவின் மகன் **ரவி ஜெயவர்த்தனா**விடம் அதிரடிப் படையின் பொறுப்பு உள்ளது. ஜெயவர்த்தனாவின் மருமகனான **ரணவிக்ரம சிங்க**ாவிடம் பட்டாளத்திற்கு ஆள் சேர்க்கும் பொறுப்பு உள்ளது. **லலித் அதுலத் முதலியிடம்** இராணுவப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது, இவர்களில் யாரும் தனியாக ஆட்சியைக் கைப்பற்றி விடமுடியாது. அத்தனைபேரும் ஒன்று சேர்ந்தால்தான் ஆட்சியைப் பிடிக்க முடியும். இவர்களை ஒன்று சேராதபடி ஜெயவர்த்தனா பார்த்துக் கொள்கிறார். **தமக்குப் பின்னால் தம் மகன் அரியணை** ஏற வேண்டும் என்று அவர் உள்ளுக்குள் விரும்புகிறார். ஜெயவர்த்தனாவின் பிரித்தாளும் சூழ்ச்சியின் விளைவாகத்தமிழர்களுக்கு அதிகக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. அதிகமான தமிழர்களைக் கொல்வது எந்தப் படைப் பிரிவு என்பதில் இவர்களுக்குள் போட்டாபோட்டி நடைபெறுகிறது. லலித் அதுலத் முதலியின் இராணுவம் ஒரு பக்கம் தமிழர்களைக் கொன்று குவித்தால், பிரதமர் பிரேமதாசா **தம்முடைய ஊர்க்காவல்** படையை ஏவி அதைவிட அதிகமான தமிழர்களைக் கொன்று குவிக்கிறார். இவர்களுக்குப் போட்டியாக ரவிஜெயவர்த்தனா தன் அதிரடிப் படையை ஏவி மேலும் தமிழர்களைக் கொலை செய்கிறார். இப்படி எல்லா வகையிலும் தமிழர்களுக்கு அபாயம் உள்ளது என்பதை அவர்கள் விளக்கினார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தம் அறவே செயல்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். போர்க்காலத்தைவிடப் போர் நிறுத்தக்காலத்தில்தான் அதிகமான தமிழர்கள் கொல்லப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

"இந்திய அரசு நடத்தும் பேச்சுவார்த்தைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று நான் கேட்டேன்.

"இந்தப் பேச்சுவார்த்தைகளினால் எந்தப் பயனும் இல்லை. ஏனென்றால் இந்தப் பேச்சுவார்த்தைகளினால் உருவாகும் சமரச ஒப்பந்தத்தின்படித்தமிழர்களுக்கு எதுவும் தருவதற்கோ ஒப்பந்தத்தை **அமல்** நடத்துவதற்கோ ஜெயவர்த்தனா தயாராக இல்லை. அவரால்



அவ்வாறு செய்யவும் முடியாது. அவ்வாறு செய்தால் சிங்களவர்களின் கடுமையான எதிர்ப்புக்கு அவர் ஆளாக நேரிடும். எனவே அவர் இந்தியாவின் சமரச முயற்சி எதற்கும் கட்டுப்படமாட்டார். தங்களை மேலும் பலப்படுத்திக்கொள்ள இந்த அவகாசத்தைப்பயன்படுத்திகொள்கிறாரே தவிர உண்மையில் சமரசத்தில் அவருக்கு நாட்டமில்லை. இந்தியாவின் சமரச முயற்சிக்கு இணக்கமானவர் போலக்காட்டிக்கொள்ளாவிட்டால் இந்தியா தமிழர்களுக்கு உதவி செய்யத் தொடங்கிவிடும். பிறகு என்ன செய்வது என்று அவர் அஞ்சுகிறார். தமிழர்களுக்கு இந்தியா எந்த உதவியும் செய்யக்கூடாது என்பதுதான் அவரின் உள்நோக்கமாகும். அந்த நோக்கத்திற்கு பிரதமர் ராஜீவ்காந்தி துணை புரிகிறார்" என்று அவர்கள் வருத்தப்பட்டார்கள். பேராசிரியர்களுடன் நான் பேசியபோது எல்லாப்பிரச்னைகளிலும் அவர்களுக்கு இருந்த அரசியல் தெளிவை நான் பாராட்டினேன். தொலைநோக்குப் பார்வையுடன் அவர்களின் பிரச்னையை அணுகிய விதம் எனக்கு மன நிறைவைக் கொடுத்தது. வெறும் புத்தகப் புழுக்களாக இல்லாமல் யதார்த்த உண்மைகளையும் அலசி ஆராய்பவர்களாக அவர்கள் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 42. எங்கள் குரல் கேட்கிறதா ?

மறுநாள் பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் சென்றபோது அங்கிருந்த ஒரு பெரிய அரங்கில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் மாணவிகளும் கூடினார்கள். நான் இப்படிப்பகிரங்கமாக அங்குத்தோன்றிய விதம் அவர்களுக்குத் திகைப்பையூட்டியிருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் என்னைப் பேசுமாறு வற்புறுத்தினார்கள்.

''நான் இங்குப் பேசுவதற்காக வரவில்லை. உங்களுடைய நிலைமையை அறிந்துபோக வந்திருக்கிறேன்: ஆகவே நீங்கள் தயவு செய்து சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்'' என்று வேண்டிக் கொண்டேன். பிறகு ஒவ்வொரு மாணவராக எழுந்து பேசினார்கள்.

'வணிகத்துறை' பட்டப்படிப்புப் பயிலும் சர்வேந்திரன்' என்ற மாணவன் பின்வருமாறு கூறினார்.

''பாலஸ்தீனம், நமிபியா விடுதலைப் போராட்டங்களை அங்கீகரித்துள்ள இந்திய அரசு எங்களின் விடுதலைப்போராட்டத்தை அங்கீகரிக்க ஏன் மறுக்கிறது? எங்களை இந்திய அரசு அங்கீகரிக்குமாறு செய்யத்தமிழ்நாட்டு மக்கள் போராட வேண்டும்'' என்று கூறிய அவர், எங்களது விடுதலைப் போராட்டம் 'சோஷியலிசத்துக்கான' போராட்டமாக இருப்பதால் இதை அங்கீகரிக்க இந்திய அரசு தயங்குகிறதா! என்று கேட்டார்.

புவியியல் பட்டப்படிப்புப்படிக்கும் ''நல்லதம்பி' என்ற மாணவர் போர் நிறுத்தத்தை அமுல் நடத்தசர்வதேசக்குழு வரவேண்டும் என்று கூறினார்.



மனோகரன் என்ற மாணவர் இன்னோர் உண்மையைக் கூறினார். ''யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் 300க்கு மேற்பட்ட முஸ்லீம் மாணவர்கள் படிக்கிறார்கள். நாங்கள் சகோதரர்களாகவே வாழ்கிறோம்; எங்களைப் போலவே அவர்களும் விடுதலை உணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்கள். எங்களுக்குள் எந்தப் பிரச்னையும் இல்லை'' என்று கூறினார்.

ஜெயநாதன் என்ற மாணவர் பேசும்போது கண்காணிப்புக்குழு செயல்படாத குழுவாக உள்ளது. போர் நிறுத்தம் ஒரு மோசடி என்பதை வலியுறுத்திக் கூறினார், இப்படிப்பல மாணவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

யாழ் மாணவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் தெளிவான அரசியல் பார்வையுடன் விளங்குவதை என்னால் உணர முடிந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவின் கொள்கை பின்வருமாறு அமைந்துள்ளதாக அவர்கள் கருதுகிறார்கள். ' இந்தியாவுக்குப் பாதகமற்ற போக்கினை இலங்கை உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் முரண்படாதவாறும் அதே வேளையில் எந்த ஒரு வெளிநாடும் இலங்கையில் தமது செல்வாக்கைச் செலுத்த முடியாதவாறும் இருக்க வேண்டும்

அவர்களின் இந்தக் கருத்தை நான் அறிந்தபோது அவர்களிடமிருந்து மேலும் விளக்கங்களைப் பெற விரும்பினேன்.

'' நீங்கள் நினைப்பதைப் போல இலங்கையைத்தனது கட்டுப்பாட்டை மீறாத நாடாக வைத்திருப்பதற்கு இந்தியாவின் திட்டங்கள் எவை? என்று நான் கேட்டேன்.

போட்டிபோட்டுக்கொண்டு பல மாணவர்கள் இதற்குப் பதில் சொன்னார்கள். (அவர்கள் பதிலின்) சாராம்சம் இதுதான்.

'' இலங்கையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இந்தியா மூன்று விதமான திட்டங்களை வகுத்திருக்கிறது. அவையாவன:-

1. இலங்கையுடன் சுமுக உறவுகளைக் கையாள்வதுடன் இலங்கை அரசுக்கு உதவிகளைச்செய்தேனும் இந்தியாவின் செல்வாக்குக்குட்பட்ட நாடாக வைத்திருத்தல். உதாரணமாக 1971-ம் ஆண்டில் சிங்கள இடதுசாரி இயக்கமான ஜெ. வி. பி. இயக்கம் ஆயுதம்தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்டபோது பதவியிலிருந்த திருமதி பண்டாரநாயகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின் அரசாங்கத்திற்கு ஆயுத உதவி, படையுதவி போன்ற சகல உதவிகளையும் இந்தியா வழங்கி ஜெ.வி.பி. போராட்டத்தைத் தோற்கடித்தது. இவ்வாறு இந்தியா உதவி செய்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஜெ. வி. பி. இயக்கம் உள்நாட்டு ரீதியாக இடதுசாரிக் கொள்கையை உடையது. வெளிநாட்டு ரீதியாக இந்திய எதிர்ப்பு வாதக் கொள்கையை உடையது. எனவே அந்த இயக்கத்தின் கிளர்ச்சியை ஒடுக்க இந்தியா உதவி புரிந்தது.

2. இலங்கை அரசாங்கத்துக்கு உதவிகள் செய்வதன்மூலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியாது போனால் இலங்கையில் பதவியிலிருக்கும் அரசுக்குப் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கி அதன்மூலம் இந்திய அரசிடம் இலங்கை அரசைப் பணிய வைத்தல் என்பதாகும். இப்போதையச் சூழ்நிலையில் இந்தியா இத்தகைய திட்டத்தையே செயல்படுத்தி வருகிறது.

3. இவ்விரண்டு திட்டங்களினாலும் இலங்கையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைக்க முடியாது போனால் படையெடுப்பின் மூலம் இலங்கையைத்தனது சொல்லைக் கேட்க வைப்பதே இந்தியாவின் இறுதித் திட்டமாகும்.

இந்த மாணவர்களின் அரசியல் தெளிவினை நான் மனத்திற்குள் பாராட்டினேன்.

"இந்தியா உங்களுக்கு உதவாத பட்சத்தில் வேறு ஏதாவது ஒரு வல்லரசு உங்களுக்கு உதவும் என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டேன்.

"வேறு எந்த வல்லரசும் சமீபத்தில் எங்கள் உதவிக்கு வரும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சிங்கள அரசுக்குச்சாதகமாகவுள்ளது. எனவே அமெரிக்காவோ மற்ற மேற்கத்திய நாடுகளோ எங்களுக்கு உதவிபுரிய முன்வரமாட்டா

தென்னாசியப்பகுதியில் இந்தியாவுடன் நேரடியாக மோத அமெரிக்கா விரும்பவில்லை; மாறாக இலங்கையைத் தட்டிக் கொடுத்து இந்தியாவுக்கு பிரச்னைகளை ஏற்படுத்த அமெரிக்கா முயலுகிறது, தென்னாசியாவில் அமெரிக்கா காலூன்றி விடக்கூடாது என்ற அடிப்படையில் இப்பகுதியை இந்தியாவின் நலனுக்குட்பட்ட பகுதியாக சோவியத் யூனியன் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதேவேளையில் சோவியத்தின் நலன்களைப் பேணக்கூடியவாறு இந்தியா நடந்து கொள்ள வேண்டும் என்பதும் அந்த நாட்டின் விருப்பம் ஆகும். இந்த அடிப்படையில் இலங்கைப் பிரச்னையில் இந்தியாவின் நிலையே



சோவியத் நாட்டின் நிலையுமாகும் எனவே சோவியத் நாடும் எங்களுக்கு உதவ இப்போது முன்வரும் என்று நாங்கள் நினைக்கவில்லை' என்று அவர்கள் சொன்னார்கள்.

"அப்படியானால் காலம் கடந்தாவது சோவியத் நாடு உங்கள் உதவிக்கு வரும் என்று நம்புகிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

"ஆம்! இந்திராவின் மறைவிற்குப் பிறகு ராஜீவ் காந்தியைத் தனது பக்கம் இழுக்க அமெரிக்கா பெரும் முயற்சி செய்துவருகிறது அதைத் தடுக்கச்சோவியத் நாடும் விடாமுயற்சி செய்கிறது. வல்லரசுகளின் இந்தப் போராட்டத்தில் ஒருவேளை ராஜீவ் காந்தியைத்தமது பக்கம் ஈர்ப்பதில் அமெரிக்கா வெற்றி பெற்று விட்டால் சோவியத் நாட்டின் நிலை மாறக்கூடும். அதன்பின் எங்களை அவர்கள் ஆதரித்தாலும் ஆதரிக்கலாம்" என்று அவர்கள் கூறினார்கள்.

இன்னொரு மாணவர் பின்வருமாறு கூறினார். "இலங்கைத் தீவு இருநாடுகளாகப் பிரிவதை இந்தியா விரும்பவில்லை. இலங்கையை ஒரே நாடாக வைத்து அதனைக் கையாள்வதுதான் சுலபமானது. தன் நலனுக்கு உகந்தது என இந்திய அரசு நினைக்கிறது. எனவே இந்தியா தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்காது. தமிழ் மக்களின் பிரச்னையைத் தனது நலனுக்கு உகந்தவகையில் ஓரளவுக்குத்தீர்த்து வைப்பதும் தனது தலைமையை இலங்கை அரசு ஏற்க வைப்பதுமே இந்தியாவின் பிரதான நோக்கமாகும்" என்று அவர் கூறினார்.

"இலங்கைக்கு நேரடியாக உதவி செய்வதிலிருந்து அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளை ஓரளவு தடுப்பதில் இந்திரா வெற்றி பெற்றிருந்தார். ஆனால் ராஜீவ்காந்தியினால் அவ்வாறு தடுக்க முடியவில்லை" என்பதையும் ஒரு மாணவர் சுட்டிக் காட்டினார்.

"இந்தியாவை மீறி எந்த வல்லரசாவது இலங்கைப் பிரச்னையில் தீவிரமாகத்தலையிடும்" என்று நம்புகிறீர்களா என்று கேட்டேன்.

"எந்த ஒரு வல்லரசும் இந்தியாவில் தனக்கு ஏற்படக்கூடிய நலன்களுக்காக இலங்கையை இந்தியாவுக்கு விற்கவே தயாராக இருக்கும்" என்று ஒரு மாணவர் கூறினார்.

தமிழீழப் போராளிகளின் இயக்கங்களுடன் இந்திய அரசு வைத்திருக்கும் உறவு பற்றியும் அவர்கள் கடுமையான கருத்துக்கள் கொண்டிருந்ததார்கள். புரட்சிகர இயக்கங்களை முதிர்ச்சியற்ற ஒரு வளர்ச்சிக்குக் கொண்டு போவது அதனைச் சீரழிப்பதற்கான ஒரு இலகுவான வழியாகும், ஓர் இயக்கம் படிப்படியாக அனுபவங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்கு உட்பட்டு ஒழுங்காக வளர்வதன் மூலம் அவ்வியக்கம் சரியான பாதையில் ஸ்திரமடைந்துவிடும். தமிழீழப் போராளிகளின் இயக்கங்கள் இத்தகைய வளர்ச்சி பெறுவதை இந்திய அரசு விரும்பவில்லை. இயக்கத்துக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதிலும் இயக்கங்களுக்குள் பகைமையை வளர்ப்பதிலும் இந்திய உளவுத்துறை அதிகாரிகள் தீவிரமாகச்செயல்படுகிறார்கள். ஆட்சி அதிகாரத்தைக்கைப்பற்றும் வகையில் இந்த இயக்கங்கள் வளர்ச்சியடைந்துவிடக்கூடாது என்பதில் இந்திய அரசு அக்கறைகொண்டுள்ளது'' என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

''இலங்கை மீது இந்திய அரசு பொருளாதாரத் தடைகளை மேற்கொள்வது நலம் பயக்குமா?'' என்று நான் கேட்டேன்.

''நிச்சயமாக நலம்பயக்கும்'' என்று அவர்கள் சொன்னார்கள். அதற்கான ஆதாரங்களையும் எடுத்துக் காட்டினார்கள். ''இலங்கையின் தேசிய வருமானத்தில் 60% தேயிலை ஏற்றுமதியால் மட்டுமே கிடைக்கிறது. இலங்கைத் தேயிலையின் தரத்திற்குச் சற்றும் குறையாத வகையில் அசாம் மாநிலத்தில் உற்பத்தியாகும் தேயிலை உள்ளது. உலகச் சந்தையில் அசாம் தேயிலையின் விலையைச் சற்று குறைக்கும் பட்சத்தில் இலங்கைத் தேயிலையின் **சந்தை** வீழ்ச்சியடைந்துவிடும்.

பிரான்ஸ், கனடா போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் இந்தியாவின் வேண்டுகோளுக்குச் **செவிசாய்க்கக்கூடியனவாக** இருப்பதினால் அந்நாடுகள் இலங்கை அரசுக்கு வழங்கும் பொருளாதார உதவியை இந்தியாவால் கட்டுப்படுத்த முடியும். தமிழீழப் பகுதியிலிருந்து சிங்களப் பகுதிக்கு அனுப்பப்படும் வெங்காயம், உருளைக்கிழங்கு, கருவாடு போன்றவை **இப்போது** அறவே நின்றுவிட்டன. இதற்குப் பதிலாக இந்தப் பொருட்களையும் மற்றும் தேவையான உணவுப் பொருட்களையும் இந்தியாவிலிருந்து இலங்கை வரவழைத்துக்கொள்கிறது. இதை இந்திய அரசு உடனடியாக நிறுத்தவேண்டும், மேலும் இலங்கையின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியா உதவி செய்து வருகிறது. இந்திய நிபுணர்களும் இங்கு வந்து உதவி செய்கிறார்கள். இவர்களை இந்தியா திரும்பப் பெறவேண்டும். இலங்கைக்கு வரும் ஆயுதங்களை ஏற்றிவரும் விமானங்களும் கப்பல்களும் இந்திய விமான நிலையங்களிலும் துறைமுகங்களிலும் தங்கித்தான் வருகின்றன. ஆயுதங்களை ஏந்திவரும் விமானங்களையும் கப்பல்களையும் அனுமதிக்கமாட்டோம் என்று இந்தியா கூற வேண்டும். **இவை போன்ற**



நடவடிக்கைகளை மேற்கொண்டாலொழிய இலங்கையை அடிபணிய வைக்க முடியாது என்றும் அந்த மாணவர்கள் கூறினார்கள்.

யாழ்ப்பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் '**தளிர்**' என்னும் இதழை எனக்குக்காட்டினார்கள். தீர்க்கமாகச் சிந்தித்து தெளிவாக எழுதும் ஆற்றலினை இந்த மாணவர்கள் இளம் வயதில் பெற்றிருப்பதைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். இவர்களது வயதையொத்த நமது தமிழ்நாட்டு மாணவர்களில் பலர் எவ்விதக்குறிக்கோளும் இல்லாமல் சினிமா போன்ற மாயைகளில் ***சிக்கிச் சீரழிவதையும் எண்ணிப்*** பார்த்தேன். என் மனம் வேதனையடைந்தது.

யாழ் மாணவர்கள் நடத்தும் தளிர் என்ற இதழில் வெளியான ஒரு தலையங்கம் என்னை மிகவும் கவர்ந்தது.

''**எம்மைத் தெரிகிறதா, எங்கள் குரல் கேட்கிறதா**'' என்ற தலைப்பில் வெளியான தலையங்கத்தை இங்கு தருகிறேன். தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களுக்காகவே இது எழுதப்பட்டது போல எனக்குத் தோன்றிற்று. துயரம் தோய்ந்த இந்த வரிகளைப் படியுங்கள்.

வெலிக்கடையில், தங்காலையில், பூஸாவில், நீர்கொழும்பில்,<br>
கோட்டையில் உள்ள நூற்றுக்கணக்கான இருண்ட சிறைக் கூடங்களுக்குள்

நம்பிக்கையின் கடைசிக் கிரணத்தில்<br>
மட்டுமே உயிரைத் தாங்கி வைத்திருக்கிற அவலநிலையில் இருக்கும்

எங்கள் குரல் கேட்கிறதா!

இந்தக் கோடை காலத்தின் இறுதிப் பகுதியில் உயர்ந்துள்ள வெப்பத்தில்

திருவிழாச் சந்தடியில், போர்நிறுத்தம் என்ற மாயையில்<br>
எங்களை, எங்கள் பெயர்களை, எங்கள் குரல்களை மறந்து<br>
விடுவீர்கள் என்று அஞ்சுகிறோம்?

தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுக்கீழே நெருப்பு மூட்டப்பட்ட போதும்,

நகம் பிடுங்கிய ரணங்களின் மீது மிளகாய்த்தூள் இடப்பட்ட போதும்,

பாம்புகளை வாய்க்குள் செலுத்திய போதும்

'என் தேசமே!' என்றுதான் எம்மில் சிலர் அழுதனர்; தச்சிறையில் உலர்ந்த கற்சுவர்கள் எப்படி உறிஞ்சியிருக்க முடியும்.

www.tamilarangam.net

வதைக்கூட அறைச்சுவரில் சிதறிய குருதித் துளிகளுக்கும்.
நினைவு திரும்பாமலே மரித்துப்போன எங்கள் பக்கத்து அறைத் தோழர்களுக்கும்

உங்களுக்குச் சொல்வதற்கென்று ஆயிரம் கனவுகளை
நெஞ்சில் தாங்கி, அந்தக் கனவுகளுடனேயே
அநாதைகள் போல எங்கோ ஒரு பெயர் தெரியாத காட்டிற்குள்
புதைக்கப்பட்டு விட்ட நண்பர்களுக்கும், இவை தொடர்கதை **தாம்** என்பதை
எப்படிச் சொல்லப் போகிறீர்கள்?

'தமக்கென்ன என்று இட்டு, உண்டு இரும்! என்று பழைய
தமிழில் ஔவை சொன்னதை எப்படி நீங்கள் திருப்பிச் சொல்ல முடியும்?

எமது துயரமும் எமது துன்பங்களும் உண்மையான மனித விடுதலைக்காக
உழைத்தமையின் பரிசுதான் என்றால் அவை
மகிழ்வுதான் தருவன.. இந்தச் சிறைகூட வதை அறைகளுக்குள்
எழும் எமது அவலக்குரல்களில்தான் உண்மையான மனித நேயத்தின்
அவசியத்தை உணர்கிறோம்
மிருகங்களின் மத்தியில் இருக்கிற போதே மனிதத்தின் அருமை
எமக்குத் தெரிகிறது.

அன்புள்ள மக்களே
அன்புள்ள நண்பர்களே,
அன்பான தேசமே,
உயர்த்தி அடைத்த இரும்பு வேலியுள் இருந்து எழுகிற
எமது குரல்கள் உங்களைக் கேட்பதெல்லாம்
ஒன்றே ஒன்றுதான் –
போரிடுங்கள் –
அநீதிகளுக்கு எதிராக,
போரிடுங்கள் -
அடக்குமுறைகளுக்கு எதிராக,
போரிடுங்கள் -
மனித நேயத்திற்காக.

மணல்துகளைக்காற்று அடித்துச் செல்வதைப்போலக்
காலமும், காலனும் எங்களைக் கொண்டுபோய்த்தீர்ப்பதைத்
தடுத்து நிறுத்துங்கள் ! உலகத்தின் **மனச்சாட்சியின்**



மெல்லிய நரம்புகள் மீது எமது அவலத்தையும் துயரத்தையும்
அதிர வைப்பதற்கு நாங்கள் உயர்த்தும் குரல்களுக்குத்
துணை கொடுங்கள் !
உயரும் கரங்களுடன் அணி திரளுங்கள் !

வெறும் பேச்சோடு மாணவர்கள் நிற்கவில்லை என்பதையும் நான் பார்த்தேன். யாழ்ப்பாணத்தில் குவிந்துள்ள அகதிகளுக்காக மாணவர்கள் நிறைய உதவிகள் செய்கிறார்கள். மாணவர்களே முன் நின்று நிதி திரட்டி அகதிகளுக்காக 640 வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்தபோது எனக்குப் பெரு வியப்பு ஏற்பட்டது. சிங்கள அரசு செய்யத் தவறிய ஒரு காரியத்தினை ஈழ மாணவர்கள் தங்களுடைய பிஞ்சுக் கரங்களால் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்த போது இவர்கள்மீது எனக்குள்ள மதிப்புப் பல மடங்கு உயர்ந்தது. இதைத்தவிர அகதிகளுக்குத் தேவையான உணவு, உடைகள், பால்மாவு போன்றவற்றையும் ஏராளமாகத் திரட்டி வந்து தருகிறார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 43. உருவாகும் திட்டங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்தபோது பேராசிரியர்கள், டாக்டர்கள், அரசு அதிகாரிகள், வழக்குரைஞர்கள் போன்ற பல்வேறு படிப்பாளிகளைக் கொண்ட ஒரு அமைப்பினர் என்னை அழைத்திருந்தார்கள். அவர்களுடன் சில மணி நேரங்கள் விவாதத்தில் கழித்தது மிக்க பயனுள்ளதாக இருந்தது. இந்த அமைப்பு மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எதிர்காலத் தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். சமுதாய-அரசியல் கண்ணோட்டத்திலும் சிந்திக்கிறார்கள். அவர்கள் உருவாக்கியுள்ள திட்டங்களைப் பார்த்து நான் பிரமித்ததைவிடத் தமிழீழம் வந்தே தீரும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் செயல்படுவதைக் கண்டுதான் **அதிகம் பிரமித்தேன்**

1937–ஆம் ஆண்டு 'இந்திய தேசியக்காங்கிரசின்' தலைவராக **சுபாஷ்சந்திரபோஸ்** அவர்கள் இருந்தபோது சுதந்திர இந்தியாவுக்கான எதிர்காலத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். இதற்காகத் '**தேசியத் திட்டக்குழு**' ஒன்றினை அவர் அமைத்தார். **ஜவஹர்லால்நேரு** இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். நிபுணர்கள் பலர் இக்குழுவில் அங்கம் வகித்தார்கள். இந்த தேசியக் குழுவின் அடிப்படையில்தான் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பிரதமரான ஜவஹர்லால் நேரு அதிகாரப்பூர்வமான திட்டக்குழுவை அமைத்தார். இந்தியா நிறைவேற்றியுள்ள பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அடிப்படையை **அந்தத்தேசிய திட்டக்குழுதான் தந்தது** அது போன்ற முன்யோசனையுடன் அவர்கள் செயல்படுவதை நான் பாராட்டினேன்.



அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது பல புதிய விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

" தமிழீழ வரலாற்றில் புதிய யுகத்தினை எங்களுடைய இளைஞர்கள் தொடங்கியிருக்கிறார்கள். ஆயுதம் தாங்கிப் போராடுவது என்று எங்களுடைய இளைஞர்கள் எடுத்த முடிவுக்குப் பின்னால்தான் எங்களுடைய இலட்சியப் பாதையில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது " என்று அவர்களில் ஒருவர் உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டார்.

"இளைஞர்களின் போராட்டமாக மட்டுமே இது இருக்கிறதா? அல்லது மக்கள் போராட்டமாக இது உருவெடுத்துள்ளதா" என்று நான் கேட்டேன்.

குழுவின் தலைவர் எனக்குப்பதில் சொன்னார்.

"இளைஞர்களின் போராட்டமாக இது தொடங்கப்பட்ட போதிலும் மக்கள் அவர்களுக்குப் பின்னால்தான் இருக்கிறார்கள். முழுமையான மக்கள் போராட்டமாக இது உருவெடுக்க இன்னும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். எங்கள் போராளிகளுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் மக்கள் செய்கிறார்கள். போராளிகளைப் பாதுகாப்பது, அவர்களுக்கு உணவளிப்பது, நிதி தருவது போன்ற சகல உதவிகளையும் மக்கள் செய்கிறார்கள். இதன் காரணமாகச்சிங்கள இராணுவம் வெறி கொண்டு மக்களைத் தாக்குகிறது. சிங்கள இராணுவத்தினரால் கொன்று குவிக்கப்படுபவர்களில் 100-க்கு தொண்ணூற்று ஐந்து சதவிகிதம் பொதுமக்கள்தாம். இராணுவக் கொடுமைகளுக்கு இலக்காகாத குடும்பமே தமிழீழத்தில் இல்லை என்று சொல்லலாம். இந்தனைக்கும் (மேலாக) மக்கள் எமது இளைஞர்களை ஒருபோதும் காட்டிக்கொடுப்பதில்லை. இளைஞர்கள் வேறு. மக்கள் வேறு அல்ல. எங்களில் ஓர் அங்கம்தான் இளைஞர்கள். எமக்கும் போதுமான பயிற்சி அளிக்கப்பட்டு ஆயுதங்களும் அளிக்கப்படுமேயானால் இளைஞர்களுடன் சேர்ந்து போராட நாங்களும் தயாராக இருக்கிறோம்" என்று அவர் சொன்னார்.

"1983-ம் ஆண்டு மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய பிறகு உங்கள் போராட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா?" என்று நான் கேட்டேன்.

"நிச்சயமாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. விரல்விட்டு எண்ணக்கூடிய நிலைமையிலிருந்த எங்கள் போராளிகளின் எண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணிக்கை பல்லாயிரமாக உயர்ந்திருக்கிறது. மூன்று ஆண்டுகாலப்போராட்டத்தில் நாங்கள் எவ்வளவோ இழப்புகளுக்கு ஆளானது உண்மை தான். ஆனால் சிங்களவர் **பிடியிலிருந்து** வடமாநிலத்தை அநேகமாக மீட்டுவிட்டோம். கிழக்கு மாநிலத்தையும் விரைவில் வென்று எடுப்போம். தமிழீழப் பகுதியில் சிங்கள ஆட்சி அடியோடு இல்லை. எந்தப் போலீஸ் **நிலையமும்** செயல்படவில்லை. இரண்டாண்டு காலமாக நாங்கள் எந்த வரியையும் சிங்கள அரசுக்குச் செலுத்தவில்லை. எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையிலும் எங்களுடைய மக்களின் மன உறுதி குன்றவில்லை. எங்களுடைய போராட்டம் **தொடர்ந்து** நடத்தப்பட வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். நாங்களும் நாளுக்குநாள் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். போர்நிறுத்தம் வராமல் இருக்குமானால் இன்னும் வேகமாக முன்னேறியிருப்போம். எங்கள் பகுதியிலிருந்த இராணுவத்தை முற்றிலுமாக விரட்டியடித்திருப்போம் என்று அவர் கூறியபோது அவரது குரலில் திடமான நம்பிக்கை **தெரிந்தது**

போர் நிறுத்தம் செய்யப்பட்டது எந்தவகையில் தவறு என்று நினைக்கிறீர்கள்? என்று கேட்டேன்.

''எல்லாவகையிலும் தவறானது. எங்களுடைய இளைஞர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இராணுவம் திணறிக் கொண்டிருந்தது. போர் நிறுத்தம் வராமல் இருந்திருக்குமானால் மிகப் பெரிய தோல்வியை அணைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் ராஜீவ்காந்தி போர் நிறுத்தத்தை அமலுக்குக்கொண்டு வந்தது அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது. தங்கள் நிலைகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளவும் வெளிநாடுகளிலிருந்து மேலும் மேலும் ஆயுதங்களைக் கொண்டுவந்து குவிக்கவும் இராணுவத்திற்குப் புதிய பயிற்சிகள் அளிக்கவும் அவகாசத்தை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். ராஜீவ்காந்தியை ஜெயவர்த்தனா பேய்க்காட்டி விட்டார்'' என்று அவர் சொன்னார்.

பேய்க்காட்டுவது என்று அவர் சொன்னபோது எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்கு அர்த்தம் என்னவென்று கேட்டேன்.

பேய்க்காட்டுதல் என்று சொன்னால் ஏமாற்றுவது என்று அவர்கள் சொன்னபோது என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ராஜீவ்காந்தி வந்த பிறகு ஜெயவர்த்தனாவுக்குப் புதிய துணிச்சல் ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள்.


ராஜீவ்காந்தியை டில்லியில் சந்தித்துப் பேசிவிட்டு ஜெயவர்த்தனா இலங்கை திரும்பியவுடன் ஓராண்டுக்காலத்திற்குள் போராளிகளை ஒழித்துக் கட்டுவதாக அறிவித்தார்.



இந்திராகாந்தி இருந்தவரை அவர் இப்படிச் சொல்வதற்குத் துணியவில்லை. ஆனால் ராஜீவ்காந்தி வந்த பிறகு இவ்வாறு சொல்லும் துணிவு அவருக்கு வந்து விட்டது.

மேலும் இலங்கைக்கு எந்த நாடும் ஆயுத உதவி செய்யக் கூடாது என்பதில் இந்திராகாந்தி மிகக்கண்டிப்பாக இருந்தார். அவர் காலத்தில் எந்த நாடும் ஆயுத உதவி செய்ய முன்வரவில்லை. அவ்வாறு செய்வதை இந்தியா எதிர்க்கும் என்ற அச்சம் எல்லா நாடுகளுக்கும் இருந்தது. ஆனால் ராஜீவ்காந்தி காலத்தில் பாகிஸ்தான் சீனா, இஸ்ரேல், பிரிட்டன், தென்னாப்பிரிக்கா போன்ற பலநாடுகள் இலங்கைக்கு ஏராளமாக ஆயுத உதவி செய்துள்ளன.

இதை ஏன் ராஜீவ்காந்தி தடுக்கவில்லை? என்று அவர்கள் என்னிடம் கேட்டபோது என்னால் பதில் சொல்ல முடியவில்லை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# 44. நெருப்புக் கவிதைகள்

தமிழீழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் பலரை ஒரு கூட்டத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எழுத்தாளர்களும் கவிஞர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். சில பெண்களும் அவர்களிடையே காணப்பட்டது கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். சிறந்த பெண் எழுத்தாளர்களும், சிறந்த பெண் கவிஞர்களும் தமிழீழத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்தபோது மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருமே மனம் திறந்து பேசினார்கள். இவர்களில் பலர் "**மார்க்சியத்தில்**" நம்பிக்கைகொண்ட முற்போக்கு எழுத்தாளர்களாவர். இவர்களில் பலர் கடந்த காலத்தில் தமிழீழக் கோரிக்கைக்கு எதிர்ப்பாக இருந்தார்கள். ஆனால் இப்போது அவர்களின் கண்ணோட்டத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதை நான் கண்டேன். கலந்துகொண்ட எழுத்தாளர்களின் பெயர்களை இங்குக்குறிப்பிடுவது அவர்களின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல என்ற காரணத்தால் குறிப்பிடவில்லை.

**தமது** எழுத்து வன்மையினால் தமிழீழ மக்கள் மத்தியில் அழியாத இடம்பெற்றுள்ள ஒருவர் இக்கூட்டத்தில் பேசினார்; "நான் **மார்க்சியத்தில்**" நம்பிக்கை உள்ளவன். என்னைப் போன்ற பலர் தேசிய ஐக்கியத்திற்காகவும் சிங்களர்–தமிழர் இனங்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்காகவும் இரு இனங்களைச் சேர்ந்த பாட்டாளிகள் ஒன்றுபட்டு வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் பற்றி எழுதியும் பேசியும் வந்தோம். ஆனால் யதார்த்த உண்மையை நாங்கள் இப்



போதுதான் உணர்ந்திருக்கிறோம். சிங்களப் பேரினவாதம் தலைவிரித்தாடுவதையும் தொடர்ந்து தமிழர்கள் ஒடுக்கப்படுவதையும் நாங்கள் பார்க்கிறோம். இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியம் தமிழருக்கு ஏற்பட்டுவிட்டது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் மார்க்சியத்திற்கு எதிரானது அல்ல. நிச்சயமாக அல்ல. மனிதாபிமான அடிப்படையிலும் சித்தாந்த அடிப்படையிலும் எமது விடுதலைப் போராட்டம் நியாயமானதே ஆகும். இப்போது இந்த அடிப்படையில்தான் நாங்கள் இலக்கியங்களை உருவாக்கி வருகிறோம். ஒரு காலத்தில் தமிழர் உரிமை பற்றிப்பேசுவதே இனவாதம் என்று நாங்கள் கருதினோம். ஆனால் ஒடுக்கப்பட்ட ஒரு இனம் இழந்த உரிமைகளைப் பெறப் போராடுவது இனவாதம் அல்ல என்பதை இப்போது நாங்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறோம்" என்று அவர் கூறியபோது எனக்கு அளவு கடந்த வியப்பு ஏற்பட்டது.

பொதுவாக இந்தியாவிலுள்ள இடதுசாரிகள் தமிழீழக் கோரிக்கைக்கு எதிராகவே இருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் ஈழநாட்டு இடதுசாரிச் சிந்தனையாளர்களின் கருத்தோட்டத்தை அறிந்தபோது நான் வியப்படைந்தது இயற்கையேயாகும்.

பிரபலமான ஈழநாட்டுப்பெண் எழுத்தாளர் ஒருவர் சுருக்கமாகப் பேசினாலும் ஆழமான கருத்துக்களை வெளியிட்டார். "இரண்டாம் உலகப் போரின்போது சில மக்களுக்கு ஜப்பானியர் செய்த சித்ரவதைகளை விட அதிகக் கொடுமைகளைச்சிங்களர் தமிழர்மீது ஏவிவிட்டுள்ளனர். எமது நாடே சிறைக்கூடமாகவும் வதைக்கூடமாகவும் மாறி வருகிறது" என்று அவர் கண்கலங்கக்கூறினார்.

கல்லூரிப் பேராசிரியராக இருக்கக்கூடிய ஒருவர் நிதானமாகவும், அதே சமயத்தில் ஆணித்தரமாகவும் பேசினார். "உலக வல்லரசுகளில் ஒன்றாக உருவாக இந்தியா விரும்புகிறது. அந்த நினைப்போடுதான் எங்கள் பிரச்னையை அது அணுகுகிறது. எங்கள் பிரச்னையில் இந்தியா மேற்கொண்டுள்ள சகல நடவடிக்கைகளும் இந்த நினைப்பை ப்பின்னணியாகக் கொண்டதேயாகும். இது ஒரு தவறான அணுகுமுறையாகும். சிங்கள அரசுக்கும் எமக்கும் இடையே ஒரு நடுவராக மட்டுமே விளங்க இந்தியா விரும்புகிறது. ஆனால் அதற்கு மேலானக் கடமை இந்தியாவுக்கு உள்ளது என்பதை அது மறந்துவிட்டது. அந்தக் கடமையை இந்தியா செய்வதற்குத்தமிழ்நாடுதான் எங்களுக்கு உதவ வேண்டும். நாங்கள் தமிழ்நாட்டைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறோம்" என்று சொன்னார்.

www.tamilarangam.net

நாடக எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு பேசினார் "வெகு ஜனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் சிங்கள அரசு கையிலும். முதலாளிகள் கையிலும்தாம் உள்ளன. எங்கள் விடுதலைப் போராட்டத்தின் நோக்கங்களையும் அதை முன்நடத்திச் செல்வது பற்றியும் மக்களுக்கு விளக்கிக்கூற எங்களிடம் போதுமான சாதனங்கள் இல்லை. எங்களுடைய பத்திரிகைகளைக்கூட நாங்கள் **இரகசியமாகத்தான்** விநியோகிக்க வேண்டி இருக்கிறது. மக்கள் அவற்றைப் படிப்பதும்கூட இரகசியமாகத்தான் படிக்க வேண்டியுள்ளது. எனவே பிரச்சாரத்திற்கு கிராமியக் கலையைத்தான் பெருமளவு நம்பியிருக்கிறோம். கிராமியக்கலைகளை எங்கள் விடுதலைப் போராட்ட பிரச்சாரத்திற்கு எப்படியெல்லாம் பயன்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் திட்டமிட்டுப் பயன்படுத்துகிறோம். மக்களோடு நேரிடையாக தொடர்புகொள்ளக்கிராமியக்கலைகளைத் தவிர வேறு வலுவான சாதனம் எதுவும் எங்களிடம் இல்லை. வில்லுப்பாட்டு, பொய்க்குதிரையாட்டம், தெருக்கூத்து போன்றவை மூலம் எமது மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டி வருகிறோம்" என்று அவர் சொன்னார்.

தமிழீழ எழுத்தாளர்களுடன் மனம்விட்டுப் பேசிக்கலந்துரையாட எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பினை மிக அரிய வாய்ப்பாகவே நான் கருதினேன். தமிழ்நாட்டு எழுத்தாளர்களில் பலர் நுனிப்புல் மேய்பவர்களாக மட்டுமே இருப்பதையும், சமூகக் கண்ணோட்டம் இல்லாமல் இருப்பதையும், வெறும் பொழுது போக்கு இலக்கியங்களையே படைத்து வருவதையும் கண்டு மனம் நொந்து போய் இருந்த எனக்கு ஆழமான விஷய ஞானமும், சமூகக்கண்ணோட்டமும் நிறைந்த ஈழநாட்டு எழுத்தாளர்களின் சந்திப்புப்புதிய நம்பிக்கையையூட்டியது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலத்தில் தாகூர், பக்கிம் சந்திரர், காண்டேகர், மகாகவி பாரதி, கல்கி போன்றவர்கள் தோன்றி தமது எழுத்தாற்றலினால் சுதந்திர வேட்கையை ஊட்டினார்கள். அற்புதமான இலக்கியங்களையும் நமக்கு அளித்தார்கள். அதே சூழ்நிலையில் ஈழநாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஈழ நாட்டில் பெருக்கெடுத்தோடும் குருதி வெள்ளத்தில் தங்களது பேனா முனைகளைத் தோய்த்து அந்த எழுத்தாளர்கள் படைத்துவரும் இலக்கியங்கள் எதிர்காலத்தில் அமர இலக்கியங்களாக விளங்கித்தமிழன்னைக்கு அழியாத சிறப்பை அளிக்கப் போகின்றன என்பதில் சந்தேகமில்லை.



யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது மாணவர்களும் பல்வேறு போராளிகளின் இயக்கங்களும் வெளியிடும் பத்திரிக்கைகள், பிரசுரங்கள் போன்றவற்றைப்புரட்டிக் கொண்டிருந்த போது பல அற்புதமான கவிதைகளைப் படித்தேன். புதுக்கவிதைகள் என்று இவற்றை சொல்வதற்குப் பதில் புரட்சிக் கவிதைகள் என்றுதான் சொல்லவேண்டும். தமிழீழத்தில் நடைபெறும் சிங்கள அரசின் ஒடுக்குமுறையும் அதற்கு எதிராக அந்நாட்டு இளைஞர்கள் கிளர்ந்தெழுந்து நடத்தும் வீரஞ்செறிந்த போராட்டமும் அந்நாட்டுக் கவிஞர்களை எப்படியெல்லாம் சிந்திக்க வைத்திருக்கின்றன. எப்படியெல்லாம் புரட்சிகரமாக எழுத வைத்திருக்கின்றன என்பதை நான் பார்த்தபோது பிரமித்துத்தான் போனேன்.

விடுதலைப் போராளியாக மாறிவிட்ட தன் மகனைப் பற்றி ஒரு தாய் நினைத்துப் பார்க்கிறாள். சொல்லாமல் கொள்ளாமல் விடுதலைப் போராட்டத்தில் குதித்துவிட்ட தன்மகனைப் பற்றி அந்த வீரத்தாய் சொல்வதாக ஒரு கவிதை. அதைப் படித்த போது என் உள்ளம் சிலிர்த்தது.

மார்கழி மாதத்தின் முன் இரவில் ஓர்நாள்
அவன்
நேரமாகியும் வீடு திரும்பவில்லை
வழமையாகக்கோயில் மணி ஒன்பதடிக்க
வாசலில் அவன் வருவது தெரியும்
எழுந்து சென்று
கதவைத் திறந்து
அவனை அழைத்து
உணவு போடவும் அப்போதும்
அவன் மௌனம்தான்...
எப்பொழுதும் அவன் அப்படித்தான்!
சாப்பிடும் போது எதுவும் பேசான்
என் மகன்!
நள்ளிரவாகியும் வரவே இல்லை...
எங்கே போனான்?

அன்று,
தங்கை அயர்ந்து துங்கியிருந்தாள்
நானும் அவனைத் தேடி இருந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் பின் அவன் வரவேயில்லை.
நீ எங்கு போனாய் என்பதை அறியேன்...

ஆனால், இன்று
அறிந்தேன் வேறொரு கதை
உனது நண்பன் சொன்னான்!
மீசை அரும்பும் இந்த வயதில்
நாட்டுப்பற்று வந்ததா உனக்கு!
அப்படியானால் கடமைகள் இருக்கும்,
வீரனாய் இருந்து வீடு திரும்பு."

ஈழநாடு சாம்பல் மேடாக மாறி வருவதை இன்னொரு கவிஞன் பாடுகிறான். அந்தச் சோக கீதம் நமது நெஞ்சங்களை உலுக்குகிறது.

"எங்கள் பூந்தோட்டத்தில்
மலர்களில்லை; மரங்களில்லை;
கூவிக் குரலெழுப்பும்
குயில்கள் தான் எதுவுமில்லை
எம்நாடு சாம்பல் மேடாய்
இரத்தக் கறைச்சிதறல்களாய்
எங்கள் உயிர் துடிக்கின்றது
வதையின் கதை தொடர்கின்றது
நிராயுத பாணிகளாய்
வீழ்ந்துதான் போய்விட்டோம்.
எங்கள் முகங்களை
இழந்து தான் போய் விட்டோம்."

அளவற்ற சோகத்தினால் துடித்தாலும் அவன் ஓய்ந்துவிடவில்லை. வீறுகொண்டு முழங்குகிறான். "சிந்தப்படும் ஒவ்வொரு இரத்தத் துளியிலிருந்தும் நாங்கள் மீண்டும் எழுந்து வருவோம்" என்று வீர சபதம் செய்கிறான். "யாரும் எங்களை அழித்திட முடியாது நாங்கள் மீண்டும் மீண்டும் எழுந்துவந்து போரிடுவோம்" என்கிறான். வீரம் கொப்பளிக்கும் அந்த வரிகள் நம்மையும் கொதித்தெழ வைக்கின்றன.

"எவர் தாம் எங்களைக்
கொன்றிட முடியும்
ஒவ்வொரு துடிப்பிலும்
உயிர்ப்புடன் நாங்களே



எரிந்து எங்கள்
குடிசையில் இருந்தும்

சாம்பல் பூத்த
தெருக்களில் இருந்தும்
ஒவ்வொரு இரத்தச்
சிதறலில் இருந்தும்
நாங்களே மீண்டும் எழுந்து வருவோம்.

நாங்களே மீண்டும் எழுந்து வருவோம்
எங்களின் தாகம் ஈழம் மட்டுமே
கரங்களுக்குத்தேவை கருவிகள் மட்டுமே."

தாய்த் திருநாட்டை நேசித்த இளைஞர்கள் மரணமடைந்தது குறித்து, நெஞ்சம் கனக்கும் ஒரு கவிதையை இன்னொரு கவிஞர் பாடுகிறார்.

"நேற்றையத்துயரங்கள்
நெஞ்சினில் கனக்க - இம் மண்ணை
நேசித்தனர் இவர்கள்
அதனால்
இளமையில் மரணித்துப் போயினர்."

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வீர மரணமடைந்த அமர தியாகிகள், வரலாற்றின் பொன்னேடுகளில் இடம்பெறப் போவதை யாராலும் தடுக்க இயலாது என்பதை அழகிய கவிதையாக வடித்துத் தருகிறான் இன்னொரு கவிஞன். அந்தக் கவிதையில் சுதந்திரத் தாயின் பாதங்கள் இரத்தச் சேற்றுக்குள் புதைந்து இருப்பதை அவன் சுட்டிக்காட்டுகிறான். இந்தக் கவிதையின் ஒவ்வொரு வரியும் இதய நரம்புகளை மீட்டுகின்றன.

எனக்கு
அச்சமாயிருக்கிறது
புகை மண்டலம்
தேசியச்சின்னமாகவும்
வெடிச்சத்தங்களே
தேசிய கீதமாகவும்
அங்கீகரிக்கப்பட்டு விடுமோ!

எனக்கு
அச்சமாயிருக்கிறது
சுதந்திர தேவியின்

www.tamilarangam.net

முகம் வேண்டுமானால்
வெளியே இருக்கலாம்

ஆனால்
பாதங்கள் ஏனோ
ரத்தச் சேற்றுக்குள்ளே
புதைந்திருக்கிறது !

எனக்கு
அச்சமாயிருக்கிறது !

துப்பாக்கி ஏந்துவதற்கு
இல்லை
துப்பாக்கி ஏந்துகிற
துர்பாக்கியம்
வந்து விடுமோ !
என் இனிய
தோழனே !
உன் மார்பில்
சில ஈட்டிகளும்
தோட்டாக்களும்
முத்தமிட்ட தடமிருந்தால்
போதும்.
வரலாற்று மேகத்தின்
வான ஊர்வலத்தைத் தடுக்க
எந்தச்சிங்களச் சிட்டுக்கும்
வல்லமை இல்லை
உங்கள் நம்பிக்கையின்
பாதங்களில்
என் முத்தங்கள்.

பெண்ணினத்தின் எதிர்காலத்தைப் பற்றி இன்னொரு கவிதையைப் படித்தேன். பெண்கள் கண்ணகியாகவும், சீதையாகவும் மாற வேண்டாம். புலிக்கூட்ட மறவர் **தம்மைக்** காத்திடும் வீர நங்கையராக இருந்தால்போதும் என்கிறார் இந்தக்கவிஞர்.

பெண்ணினமே ! நீ ... ... ...
கண்ணகியாக மாற வேண்டாம்
புன்னகை அரசியாகவும் வேண்டாம்
தீயினில் இறங்கிய சீதையாகவும் வேண்டாம்



சினிமா தந்த ஸ்ரீதேவியாகவும் வேண்டாம்
போதை யூட்டிடும்
நாரிய நங்கையராகவும் வேண்டாம்
இங்கெமக்கு நீங்களெல்லாம்
களங்காணத் துடித்திடும்
புலிக் கூட்ட மறவர்தமைக்
காத்திடும் வீரப் பெண்களாய்
உருமாறி வந்திட்டால் போதும்.

சாயாவனமாய்ப்பற்றி எரிகிறது ஒரு தேசம்.

சிதைந்து போன தேசத்தை விடுவிக்க வீர வேங்கைகளாக விரைகிறார்கள் வீர இளைஞர்கள். இதை விவரிக்கும் கவிஞன் நம்மைப் புல்லரிக்க வைக்கிறான்.


"தீயிட்ட சாயாவனமாய்
ஒரு தேசம்...
அதன் மேனியில்
எதிரியின் கொடுங்கரங்கள்
வெந்த அம்மண்ணில்
தளிர் விட்ட வீரப்புதல்வர்கள்
ஆம் ! அவர்கள்
**நெஞ்சம் வெடிக்குமடி**
**அவர்தம் தீரம் கேட்டால்**
இங்கும் அவனொருவன்
வேங்கையாய் விரைகிறான்
ஆயிரமாயிரம் தோழர்களுடன்
"சிறைபோன வரலாற்றையும்
சிதைந்து போன தேசத்தையும்
விடுதலை செய்ய"

இப்படி எத்தனையோ கவிதைகளைப் படித்தேன். அவைகள் கவிதைகள் அல்ல. கனன்றுகொண்டிருக்கும் நெருப்புத் துண்டங்கள். சிங்கள இனவெறிச் சருகுகளை அவை நிச்சயமாகச் சுட்டெரிக்கப் போகின்றன.

இறந்த உடல்களுக்கும்
அகதிமுகாம்களிலே
குழந்தைகளின்
இடையறாத அழுகுரல்களுக்கும்
இடையே
எதைத்தான் எழுத?

என அவர்கள் திகைத்திருக்கவில்லை. இடையறாமல் கனன்றுகொண்டிருக்கும் அவர்கள் நெஞ்சங்கள் நெருப்புக் கவிதைகளை உமிழ்ந்து கொண்டே இருக்கின்றன.

www.tamilarangam.net



## 45. அதுலத் முதலி கணக்கில்

யாழ்ப்பாணத்திலுள்ள வணிகர்கள் பலரை நான் சந்தித்தேன். வணிகத்துக்குப் பெயர் போன நகர் யாழ்ப்பாணம். இப்போது அங்கு முற்றிலுமாக வியாபாரம் சீர்குலைந்து போய் விட்டது. முன்பு நடைபெற்ற வியாபாரத்தில் நூற்றுக்கு 10 சதம் கூட இப்போது நடைபெறவில்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

''வியாபாரத்திற்கான பொருட்களை எங்கிருந்து பெறுகிறீர்கள்'' என்று நான் அவர்களிடம் கேட்டேன்.

''பெரும்பாலான பொருட்கள் கொழும்பில் இருந்துதான் எங்களுக்கு வந்தன. இங்கிருந்து உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், கருவாடு போன்ற பல பொருட்களைச் சிங்களப் பகுதிக்கு அனுப்புவதாகவும்'' கூறினார்கள். ''வெளியே பொருட்களை அனுப்புவதோ வெளியூர்களிலிருந்து பொருட்களை வரவழைப்பதோ அபாயம் நிறைந்ததாகி விட்டது. கொழும்பிலிருந்து எங்களுக்குப் பொருட்கள் எல்லாம் வந்தாலும் இங்கிருந்து நாங்கள் பொருட்களை அனுப்பினாலும் சிங்களப் பகுதிகளில் அவற்றைக் கொள்ளையடிக்கிறார்கள். லாரி டிரைவரும் உதவியாளரும் கொல்லப்படுகிறார்கள். ஆகவே லாரி போக்குவரத்து அறவே நின்றுவிட்டது. இரயில்கள் மூலம் அனுப்பவும் முடியவில்லை. ஏனென்றால் இரயில்கள் முறையாக வருவதில்லை'' என்று சொன்னார்கள்.

''அப்படியானால் மக்களுக்குக் கஷ்டம் ஏற்படுமே. இதை மக்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள்'' என்று கேட்டேன்.



''மக்கள் ஆடம்பரப்பொருட்கள் வாங்குவதை அறவே நிறுத்தி விட்டார்கள். அப்படி வாங்குவதைத் தேசத் துரோகமான காரியம் என்று நினைக்கிறார்கள் அத்தியாவசியமான பண்டங்களை மட்டுமே மக்கள் வாங்குகிறார்கள். ஆகவே மக்கள் நடுவில் எந்தப் பிரச்னையையும் இது ஏற்படுத்தவில்லை'' என்று அவர் கூறினார்.

''அரசாங்கத் தொல்லைகள் உங்களுக்கு ஏதேனும் உண்டா?'' என்று கேட்டேன்.

1983-ம் ஆண்டுக்குப் பிறகு வருமான வரியோ விற்பனை வரியோ எந்த வியாபாரியும் கட்டுவதில்லை. அதிகாரிகளும் என்னவென்று கேட்பதில்லை'' என்று அவர்கள் சொன்னார்கள்.

'' இராணுவத்தினால் தொல்லை உண்டா?'' என்று நான் கேட்டேன்

''முன்பு இருந்தது; திடீர் திடீரென்று கடைவீதிக்கு வருவார்கள். எந்தக் கடையானாலும் உள்ளே புகுந்து அவர்களுக்குத் தேவையான சாமான்களை அள்ளிப் போட்டுக் கொள்வார்கள். பிறகு லலித் அதுலத் முதலி கணக்கில் எழுதிக்கொள்'' என்று சொல்லிவிட்டுப் போவார்கள். தடுத்தால் சுட்டுக்கொல்வார்கள். ஆனால் இப்போது அந்தத் தொந்தரவு அதிகமாயில்லை. காரணம் இங்குப் புலிகளின் கை ஓங்கி இருக்கிறது. எனவே இராணுவம் எங்களைத் தொந்தரவு செய்ய முடியவில்லை.

'' இந்தப் பிரச்னை தீர எதுதான் வழி? என்று நினைக்கிறீர்கள் '' என்று நான் கேட்டேன்.

'' இதற்குத் தமிழீழம் தான் வழி. வேறு வழியே கிடையாது '' என்று அவர்கள் கூறினர்.

'' இந்தியாவிடமிருந்து என்ன உதவியை எதிர்பார்க்கிறீர்கள் '' என்று கேட்டேன்.

'' எங்கள் இளைஞர்களுக்கு ஆயுதம்தான் வேண்டும். அதைக் கொடுங்கள் அதுவே போதும் '' என்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள விற்பனைப் பிரதிநிதிகளைச் சந்தித்தேன். இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் விற்பனைப் பிரதிநிதிகளாக இவர்கள் செயல்படுகிறார்கள். தமிழீழப் பகுதியில் வியாபாரமே சீர்குலைந்துபோய் இருப்பதை அவர்கள் ஆதாரப்பூர்வமாக எடுத்துக்காட்டினார்கள். இந்தியா உட்பட உலக நாடுகளிலிருந்துவரும் சகலப் பொருட்களும் கொழும்புத் துறைமுகத்தின் வழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாகவே வரவேண்டும். வேறு வழியில்லை. ஆகவே கொழும்பி லிருந்து தமிழீழப் பகுதிக்கு லாரிகள் மூலம் அனுப்பப்படும் சரக்குகள் பல முட்டுக்கட்டைகளைத் தாண்டி வரவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் பணம் கொடுத்தாலொழிய இராணுவம் அந்த லாரிகளை மேலே செல்ல அனுமதிக்காது. இது பகிரங்கமான கொள் ளையாகும். இது தவிரப் பகற்கொள்ளையும் உண்டு. இதைச் செய்ப வர்கள் இராணுவத்தினரும் ஊர்க்காவல் படையினரும் ஆவார்கள். இவர்கள் லாரிகளை நிறுத்தித் தங்களுக்குத் தேவையான சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டுதான் அனுப்புவார்கள்."

கடைக்காரர்கள் பொருட்களைச்சேகரித்து வைக்கப்பயப்படுகிறார் கள். ஆகவே எந்த வியாபாரியும் ஓரளவுக்குமேல் பொருட்களை வைத் துக்கொள்வதில்லை. பொருட்கள் பற்றாக்குறையாலும் மற்றக் காரணங் களாலும் எல்லாப்பொருட்களின் விலைகளும் ஏறிவிட்டன. மக்களும் அத்யாவசியமான பண்டங்களைத் தவிர வேறு எதுவும் வாங்குவ தில்லை. எனவே வியாபாரம் பெருமளவு சீர்குலைந்துவிட்டது என் பதை அவர்கள் மிகுந்த கவலையோடு தெரிவித்தார்கள். இராணுவத் தாக்குதலுக்கு இரையாகி நாசமாகும் கடைகளுக்கு அரசினர் நஷ்டஈடு எதுவும் கொடுப்பதில்லை என்று கூறினார்கள்.

தமிழீழம் அமைந்தாலொழிய வியாபாரமும் தொழிலும் நடக்க வேறு வழிகளோ கிடையாது என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

அரியாலை என்ற இடத்தில் **தெங்கு-பனம் பொருள் கூட்டுறவு உற்பத்தி நிலையம்** ஒன்று உள்ளது. சுமார் 10 ஆயிரம் தொழிலா ளர்கள் ஒன்றுகூடித் தங்களுக்கு என்று 18 சங்கங்களை அமைத்திருக் கிறார்கள். இவற்றின் தலைமை நிலையத்திற்கு நான் சென்றிருந்தேன். கிராமிய மணம் வீச வீற்றிருந்த அந்தத் தொழிலாளர்களிடம் பேசிய போது பல உண்மைகளை நான் தெரிந்துகொண்டேன். யாழ்ப்பாணத் தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர்தான் இத்தொழிலில் ஈடுபட்டிருக் கின்றனர். 'நழுவர்' என அழைக்கப்படும் இச்சமுதாயத்தினர் சாதியில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

**'பனை இருக்கும் இடமெல்லாம் தமிழன் இருப்பான். தமிழன் இருக்கும் இடமெல்லாம் சாதி யிருக்கும்'** என்பது உண்மையாக இருந் தது. சாதிக் கொடுமையால் ஒடுக்கப்பட்டிருந்த இந்தத் தொழிலா ளர்கள் வாழ்வில் இந்தச் சங்கம் மகத்தான மாறுதலை ஏற்படுத்தியிருக் கிறது. இந்தச் சங்கத்தின் அயராத தொண்டின் மூலம் சாதி ஆதிக்கம் தகர்க்கப்பட்டு அப்பாவிகளான இந்த மக்கள் உரிமைபெற்ற மக்களாக வீறுநடை போடத் தொடங்கியுள்ளனர்.



பதநீர், சீனி, பனங்கட்டி, பனங்கற்கண்டு, வெல்லம், கருப்புக் கட்டி போன்றவற்றை இவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். தொழிலா ளர்கள் செய்யும் இந்த உற்பத்திப் பொருட்களை முன்பு தனிப்பட்ட வியாபாரிகள் வாங்கி கொள்ளை லாபம் அடித்துவந்தனர். கூட்டுறவு அமைப்பின்கீழ் இவர்கள் வந்த பிறகு ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ் வொரு மாதமும் ரூபாய் 750 இல் இருந்து 2000 வரை சம்பாதித்தனர். ஆனால் தமிழ்த் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் திட்டத்துடன் சிக்கள அரசு வெளிநாட்டிலிருந்து சீனியை ஏராளமாக இறக்குமதி செய்யத் தொடங்கியது. இதன் விளைவாக இவர்களின் தொழில் பெரு மளவுக்குப் பாதிக்கப்பட்டது.

இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இவர்களின் வாழ்வு முற்றிலுமாகச்சீர்குலைந்துவிட்டது. பனைகளிலோ-தென்னைகளிலோ ஏறி தொழில் செய்ய முற்பட்டால் இராணுவம் அவர்களைச் சுடுவதாகச் சொன்னார்கள். மேலும் உயிருக்குப்பயப்படாமல் துணிந்து தொழில் செய்து பொருட்களை உற்பத்தி செய்தாலும் அவற்றை விற்பதற்கு வழி யில்லாத நிலைமை இருந்தது என அவர்கள் வேதனையோடு சொன் னார்கள்.

இப்போதைய நிலைமை எப்படி இருக்கிறது? என்று நான் கேட்டேன்.

"நாங்கள் தொழில் செய்யப்புலிகள் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்தனர். எங்களுடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவர்கள் புத்துயிர் கொடுத்தார்கள். எனவே நாங்கள் எங்கள் தொழிலில் நிம்மதியாக ஈடுபட்டிருக்கிறோம்" என்று கூறி அவர்கள் இன்னொரு முக்கியமான விசயத்தையும் சொன்னார்கள்.

**"புலிகள் இயக்கம் சாதி ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட்டதன் விளைவாக எங்களுக்கு விமோசனம் பிறந்திருக்கிறது. இதுவரை எங்களை ஒதுக்கி தள்ளப்பட்டவர்களாகக் கருதியவர்கள் சம உரிமை யுடன் நடத்த முன்வந்து சகோதரபாசம் காட்டுகிறார்கள். இந்தமாறு தலுக்கு வழிவகுத்த புலிகளை நாங்கள் மனமார பாராட்டுகிறோம். நன்றி கூறுகிறோம்" என்று நாத்தழுதழுக்க அவர்கள் சொன்னார்கள்.**

## வங்கிகள்

இலங்கையிலுள்ள வங்கிகள் எப்படி செயல்படுகின்றன என்பதை நான் அறிய விரும்பிய போது வங்கி அதிகாரிகள் சிலபேரை நண்பர்கள் அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவர்களுடன் உட்கார்ந்து பேசிய போது பல முக்கிய விஷயங்களை அவர்கள் தெரிவித்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்று இரு அரசு வங்கிகள் உள்ளன. 1983-ம் ஆண்டுக்குப் பிறகு தமிழர்கள் பகுதிகளில் வங்கிகள் சரிவர இயங்கவில்லை. எந்த வங்கியாயிருந்தாலும் சேவிங்ஸ் கணக்கில் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் எடுக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் கோட்டைக்குள் உள்ள இராணுவ முகாமில் ஒரு வங்கிப்பிரிவு உள்ளது அந்தப் பிரிவில்தான் பணம் போடவோ பணம் எடுக்கவோ முடியும். யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு வங்கிக் கிளைகளில் பணம் போடவோ பணம் எடுக்கவோ முடியாது. மன்னார், கிளிநொச்சி, பருத்தித்துறை போன்ற இடங்களில் இராணுவ **முகாம்களில் உள்ள** வங்கிக் கிளையில் மட்டுமே பணம் போடவோ எடுக்கவோ முடியும். இராணுவ முகாம்களில் இருக்கக்கூடிய வங்கிக்கிளைகள் தவிர வேறு எந்த வங்கிக் கிளைகளிலும் பணமோ நகையோ அறவே கிடையாது. தமிழீழ மக்கள் 200 கோடி ரூபாய் பெறுமானமான தங்கள் நகைகளை இவ்வங்கிகளில் அடகு வைத்திருக்கிறார்கள். அந்த நகைகளை முழுவதும் இராணுவம் கொழும்புவுக்கு எடுத்துச் சென்று விட்டது. மக்கள் தாங்கள் வாங்கிய கடனைத்திருப்பிச் செலுத்திய பிறகும் அந்த நகைகளைக் கொடுக்க அரசு மறுக்கிறது.

நகைகளைத் திரும்பக்கொடுத்தால் போராளிகள் ஆயுதம் வாங்குவதற்கு அந்த நகைகளை மக்கள் கொடுத்து விடுவார்கள் என்று நினைத்து அரசாங்கம் மறுக்கிறது. நான் யாழ்ப்பாணத்திலிருந்த போது அடகு வைத்த நகைகளைத்திரும்பக் கொடுக்குமாறு கூறி வங்கிகளுக்கு முன்னால் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம் செய்ததை நானே நேரில் பார்த்தேன். தமிழீழப் பகுதியில் மொத்தத்தில் வங்கித் தொழில் என்பது முற்றிலுமாகச்சீர்குலைந்து போய்விட்டது.

## மருத்துவமனைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள டாக்டர்கள் சிலபேரை நான் சந்தித்தேன். அவர்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு சிரமங்களைப்பற்றியெல்லாம் அவர்கள் கூறினார்கள். சகல மருந்துச்சாமான்களும் உயிர்க்காற்றுப் போன்றவைகளும் **கொழும்பிலிருந்து**தான் வரவேண்டும். போக்குவரத்துத் தடையினால் எதுவுமே வரமுடியவில்லை. ஆகவே போதுமான மருந்துகள் கிடைப்பதில்லை என்பதையும் அறுவைச்சிகிச்சை போன்றவை செய்வதற்கு இயலாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள். உயிரைக் காப்பாற்றுவதற்கான நிலையில் மட்டுமே அவசர அறுவைச்சிகிச்சை தேவைப்படுகிறது. மற்ற அறுவைச் சிகிச்சைகளையெல்லாம் ஒத்திவைத்திருப்பதாக அவர்கள் கூறினார்கள்.



மருத்துவமனைகளில் திடீர் திடீரென்று இராணுவம் சோதனையிட்டுத்தொல்லை கொடுப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள். சிங்கள இராணுவம் செய்யும் இன்னொரு கொடுமைகளையும் அவர்கள் கூறினார்கள். இராணுவத்தினால் கொல்லப்படும் தமிழர்களின் பிரேத விசாரணை அறிக்கையைச்சம்பந்தப்பட்ட டாக்டர்கள் கொழும்பிலுள்ள உயர் நீதிபதிக்கு மட்டுமே அனுப்பவேண்டும். இறந்தவர்களுக்கான சான்றிதழ்களும் அவர்கள் கொடுக்கக்கூடாது. இந்தச் சான்றிதழ் இருந்தால்தான் இன்சூரன்ஸ் போன்றவற்றைப்பெறமுடியும். அதைத் தமிழர்கள் பெறக்கூடாது என்பதற்காகவே இத்தகைய தடையை இராணுவம் விதித்துள்ளது, சுடப்பட்டுச் செத்தவர்களின் உடலை சுலபமாகப்பெறமுடியாது. இறந்தவர் பயங்கரவாதி என உறவினர்கள் எழுதிக்கொடுக்கவேண்டும் அல்லது யார் சுட்டது என்பது எங்களுக்குத் தெரியாது என்று எழுதிக்கொடுக்கவேண்டும். இப்படி எழுதிக்கொடுத்தால்தான் சடலம் கிடைக்கும்.

பயங்கரவாதிகளைச் சுட்டால் **1000 ரூபாய் பரிசு** என்று இராணுவக்குழு அறிவித்திருக்கிறது. எனவே கண்டபடி சுடுகிறார்கள் என்பதையும் அந்த டாக்டர்கள் தெரிவித்தார்கள். இராணுவம் எந்த அளவு மனிதாபிமானம் இல்லாமல் நடந்து கொள்கிறது என்பதற்கு ஒரு சோக நிகழ்ச்சியை அந்த டாக்டர்கள் விவரித்தார்கள்.

ஊரடங்குச்சட்டம் அமலில் இருந்த நேரத்தில் ஒரு பெண்ணுக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டது. எனவே வெள்ளைக் கொடிபோட்ட ஒரு காரில் அந்தப் பெண்ணை மருத்துவ மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். இராணுவம் வழிமறித்துச் சுட்டது. கர்ப்பிணி பெண்ணுக்கும் அந்தக் காரிலிருந்த மற்றவர்களுக்கும் குண்டுக் காயங்கள் ஏற்பட்டன. அந்தப் பெண் பிழைத்ததே பெரும் காரியம் ஆயிற்று.

யாழ்ப்பாணம் மருத்துவமனைக்குத் தேவையான உயிர்க்காற்று உருளைகள் **(oxygen** Cylinders) கொழும்புவிலிருந்துதான் வர வேண்டும். இந்த மருத்துவமனையில் ஒவ்வொரு மாதமும் சுமார் **1,200** அறுவைச்சிகிச்சைகள் நடத்தப்படுகின்றன. அதாவது ஒவ்வொரு நாளும் சராசரியாக **40** பேருக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்படுகிறது. இந்த நோயாளிகளுக்காகவும், சுவாசக் கோளாறுள்ள நோயாளிகளுக்காகவும், குறைப்பிரசவமாகப் பிறந்த குழந்தைகளுக்காகவும் தினமும் **15**க்குக்குறையாத உயிர்க்காற்று உருளைகள் இந்த மருத்துவமனைக்குத் தேவைப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழும்பிலுள்ள உயிர்க்காற்று உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் வேலை பார்க்கும் சிங்களத் தொழிலாளிகள் யாழ் மருத்துவமனைக்கோ மற்றத் தமிழர் பகுதிகளிலுள்ள மருத்துவமனைக்கோ உயிர்க்காற்று உருளைகள் அனுப்பமுடியாது என மறுத்துவிட்டார்கள்.

இதன் விளைவாகப் பல நோயாளிகள் இறந்துபோனதாக அங்குள்ள டாக்டர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

இத்தகைய மனிதாபிமானமற்ற முறையில் சிங்களத் தொழிலாளிகள் நடந்துகொள்வதைக்கண்டு நான் அதிர்ந்துபோனேன்.







# 46. போர் நிறுத்த மோசடி

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்ற பெயரால் எத்தகைய மோசடி நாடகத்தை ஜெயவர்த்தனே நடத்தி வருகிறார் என்பதை நேரில் விசாரித்தறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணத்திலும் மற்றும் நான் சென்ற பல இடங்களிலும் இக்குழுவின் செயற்பாடுகள் குறித்து ஏராளமான தகவல்கள் எனக்குக் கிடைத்தன. போராளிகளுடன் கலந்தாலோசித்து அவர்கள் குறிப்பிடும் உறுப்பினர்களையும் சேர்த்துப் போர் நிறுத்தக் குழுவை அமைக்க வேண்டும் என்பதுதான் இந்திய அரசிடம் இலங்கை அரசு ஒப்புக்கொண்ட விஷயமாகும். ஆனால் போராளிகளைக் கலந்தாலோசிக்காமலும் இந்திய அரசுக்குத் தெரியாமலும் அவசர,அவசரமாக இந்தக்குழுவை ஜெயவர்த்தனே அமைத்தார். இந்தக்குழு அமைப்பது பற்றிப்பேசுவதற்காக இந்திய அரசின் சார்பில் **பண்டாரி** வருவதற்கு முதல் நாளே இக்குழு பற்றிய அறிவிப்பு வெளியாகி விட்டது. எனவே இந்திய அரசை அவர் கொஞ்சமும் சட்டை செய்யவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிவிட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் உள்ள 11 உறுப்பினர்களில் 6 பேர் சிங்களவர்கள்; 5 பேர் தமிழர்கள்; இதில் இரண்டு பேர் அரசுச் சார்புடைய இஸ்லாமியத் தமிழர்கள், மீதமுள்ள மூன்று தமிழர்களில் திரு. சிவநாதன் என்பவரும் அரசுச் சார்புடையவர். சிங்கள அரசின் பாதுகாப்புத்துறை செயலாளரான **சேப்பால ஆர்ட்டிக்கல** என்பவரின் பள்ளித் தோழர் என்ற முறையில் திரு. சிவநாதன் இக்குழுவில் நியமிக்கப் பட்டுள்ளார். இவருக்குத்தமிழே சரிவரப் பேசத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரியாது. மீதமுள்ள இந்த இருவருமே கண்காணிப்புக் குழுவிலிருந்து பின்னர் ராஜிநாமா செய்தனர். **பேராசிரியர் டாக்டர் திரு. சிவத்தம்பி, திரு. சிவபாலன்** ஆகிய இருவர் மட்டுமே தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடியவர்கள். இக்குழுவிலுள்ள பாக்கி 9 பேரும் அரசுச் சார்புடையவர்கள் என்பதிலிருந்து இக்குழுவின் யோக்கியதையைப் புரிந்து கொள்ளலாம்.

இலங்கை உச்சநீதிமன்ற நீதிபதியான **ரோட்ரிக்கோ** என்னும் சிங்களர் முழுமையான தமிழ் விரோதியாவர். இக்குழுவுக்கு இவரே தலைவர்.

இக்குழுவிலுள்ள தமிழ் உறுப்பினர்களின் தொலை பேசிகள் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. அவர்களது நடவடிக்கைகள் இரகசியப் போலீசாரால் இடைவிடாமல் கண்காணிக்கப் படுகின்றன மிகச் சிரமமான சூழ்நிலையில் இக்குழுவிலுள்ள தமிழ் உறுப்பினர்கள் தங்கள் கடமையை ஆற்றிவர வேண்டிய நிலையுள்ளது.

இக்குழுவின் கூட்டங்களில் இராணுவத்தளபதியும், உளவுத் துறை மேலதிகாரிகளும் கலந்துகொள்வது மிக முக்கியமானதாகும். தமிழர்கள் சார்பில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோது அதை அவர்கள் அலட்சியம் செய்துவிட்டார்கள்.

இக்குழு சுதந்திரமாகச் செயல்படமுடியாத நிலைமையில் உள்ளது. இந்தக் குழுவினர் எந்த இடத்திற்காவது செல்லவேண்டுமென்று சொன்னால் இராணுவத்தின் உதவியில்லாமல் செல்லமுடியாது. இராணுவப்பாதுகாப்பு இல்லாமலும், இராணுவத்தின் அனுமதியில்லாமலும் இக்குழு எந்த இடத்திற்கும் போகமுடியாது. இராணுவத்தின் அத்துமீறல்களைப்பற்றி இந்தக்குழு விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குக்கூட இராணுவத்தின் உதவி வேண்டும். இப்படிச் செயல்படமுடியாத ஒரு பொம்மைக்குழுவை ஜெயவர்த்தனே நியமித்து இந்தியாவையும், உலக நாடுகளையும் ஏமாற்றிவருகிறார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வரையறுக்கப்பட்ட பணி எவை? என்பதைத் தேசியப் பாதுகாப்பு அமைச்சரான லலித் அதுலத் முதலி அறிவித்திருக்கிறார்.

1. பொதுமக்களிடம் புகார்களைப்பெறுதலும், அதுகுறித்து விசாரித்தலும்.



2. அகதிகளை மீண்டும் அவரவர்களின் வீடுகளில் குடியமரச் செய்தல்.

3. சிறையிலுள்ளவர்களை அவர்களது உறவினர் பார்க்க ஏற்பாடு செய்து கொடுத்தல்.

4. சிறைக்கும் சிறைமுகாம்களுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளைப்பார்த்தல்.

மேற்கண்டவைகளைத்தவிர வேறு எதிலும் தலையிட கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று அவர் அறிவித்துவிட்டார். கண்காணிப்புக் குழுவை எவ்வளவு கேலிக்குரிய **அமைப்பாக** சிங்கள அரசு கருதுகிறது என்பதற்கு லலித் அதுலத் முதலியின் கூற்றுச்சரியான எடுத்துக்காட்டாகும்.

நடைமுறையில் இக்குழுவை இயங்கமுடியாதபடி தடுக்க என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் இராணுவம் செய்கிறது. போர்நிறுத்த காலத்தில் இராணுவம் மேற்கொண்டுவரும் சில நடவடிக்கைகள் குறித்து போர்நிறுத்த குழுவில் அதன் தமிழ் உறுப்பினர்கள் கேட்டபோது சிங்கள இராணுவ தளபதி இறுமாப்பான பதிலைக் கொடுத்தார்.

"**போர்க்காலமாக** இருந்தாலும் போர்நிறுத்தக்காலமாக இருந்தாலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு. அந்தக் கடமையை நாங்கள் ஒருபோதும் நிறுத்தமாட்டோம். யாரும் எங்களைத்தடுக்கவும் முடியாது."

போர் நிறுத்தம் என்பது எவ்வளவு பெரிய மோசடி என்பதை சிங்கள இராணுவத் தளபதியின் கூற்று மெய்ப்பிக்கிறது.

நான் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு இந்த மோசடியை அம்பலப் படுத்தினேன். போர் நிறுத்தக் காலத்தில் மட்டும் சுமார் இரண்டாயிரம் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதையும், லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகி இருப்பதையும் நான் அம்பலப்படுத்திய போது அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள். எனது இந்தக் குற்றச்சாட்டை மறுக்க இலங்கை அரசினால் முடியவில்லை. போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்து இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகத் தம்பட்டம் அடித்த இந்திய அரசும் பேச வாயின்றி மௌனம் சாதித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர் நிறுத்தம் பற்றிய மோசடியை நான் அம்பலப்படுத்திய சில வாரங்களில் இக்குழுவில் அங்கம் வகித்த பேராசிரியர் திரு. சிவத்தம்பி, திரு. சிவபாலன் ஆகியோர் பதவி விலகினார்கள். செயல்பட முடியாத ஒரு குழுவில் அங்கம் வகிக்க விரும்பவில்லை என அவர்கள் அறிவித்தனர்.

போர் நிறுத்தக்குழு பற்றி நான் கூறியது அத்தனையும் உண்மையே என்பதை அவர்களின் பதவி விலகல் நிரூபித்துக் காட்டியது.

இதைத் தொடர்ந்து ஜெயவர்த்தனாவின் மோசடியை உலகம் உணரத் தொடங்கிற்று.







# 47. இந்தியாவின் தடுமாற்றம்

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களை முற்றிலுமாக அழித்துவிடுவது என்ற திட்டத்துடன் சிங்கள அரசு இனப்படுகொலையை நடத்தி வருகிறது. பின்தங்கிய நாடு என்ற முறையில் இலங்கைக்கு உலகிலுள்ள பல்வேறு நாடுகள் பொருளாதார உதவி செய்து வருகின்றன. இந்த உதவிகளைப் பயன்படுத்தி பெருமளவில் ஆயுதங்களை வாங்கி, அவற்றை தமிழர்களை ஒழிப்பதற்காக இலங்கை பயன்படுத்துகிறது. இந்த நிலையில் இலங்கைக்கு உலக நாடுகள் பொருளாதார உதவி செய்யக்கூடாது; தமிழர்களை இனப்படுகொலை செய்வதை அது நிறுத்தினால்தான் உதவி செய்ய முடியும் என்று உலக நாடுகள் அதனை வற்புறுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் தலைவர்கள் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். 1984-ம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பல்வேறு நாடுகளில் நான் சுற்றுப் பயணம் செய்தபோது அந்நாடுகளில் வாழுகிற ஈழத்தமிழர்கள் அந்நாடுகளின் அமைச்சர்களை அல்லது உயர் அதிகாரிகளைச் சந்தித்து இதுபற்றி வேண்டுகோள் விடுப்பதை நான் நேரில் கண்டேன்.

எனது ஈழநாட்டுச்சுற்றுப் பயணத்தில் நான் சந்தித்த பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் இதையே என்னிடம் வலியுறுத்திக் கூறினர். இலங்கையின் பாதுகாப்புச் செலவுக்காக இவ்வாண்டு (1985) அந்நாடு சுமார் 650 கோடி ரூபாய் செலவழிக்கிறது. அதனுடைய மொத்த வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதியைப் பாதுகாப்புச் செலவுக்காக அது செலவிடுகிறது என்பது வினோதமானது. இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

650 கோடி ரூபாயில் 200 கோடி ரூபாய்க்கு நவீன ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. இது ஆயுதங்களுக்காக முதலீடு செய்யப்படும் மூலதனச் செலவாகும்.

"இதற்காகும் அந்நியச் **செலாவணியை** இலங்கை எப்படிப் பெறுகிறது? என்று நான் கேட்டேன்.

"வெளி நாடுகள் செய்யும் உதவியை மறைமுகமாகச்சிங்கள அரசு இதற்குப்பயன்படுத்திக் கொள்கிறது" என்று அவர்கள் கூறினர்.

1985-ம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்வதில் ஜெய வர்த்தனே ஏன் அக்கறை காட்டினார் என்பதையும் அந்த நண்பர்கள் எனக்கு விளக்கிக் கூறினார்கள்.

1985-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் பாரிஸ் நகரில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கூடவிருந்தது. சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்துவரும் பாரபட்ச நடவடிக்கைகள், மனித உரிமை மீறுதல்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டிய அந்நாடுகள் 1986-ல் இலங்கை மிகக்குறைந்த அளவு தொகையையே உதவியாகப் பெறும் என அறிவித்திருந்தன

உடனடியாக 1985-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஜெயவர்த்தனா புதுடெல்லிக்குச்சென்று பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கண்டுபேசிப் போர் நிறுத்தத்திற்குத் தயாராகவிருப்பதாகத் தெரிவித்தார். எத்தகைய உள்நோக்கத்துடன் அவர் அவ்வாறு செய்ய முன்வந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாத பிரதமர் ராஜீவ் தமிழ்ப் போராளிகளை **நிர்ப்பந்தப்படுத்தி** போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொள்ளவைத்தார்.

1985 ஜுன் மாதம் 18-ம் தேதி போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இரண்டு நாட்கள் கழித்து ஜுன் மாதம் 20-ம் தேதி பாரீஸ் நகரில் நடைபெற்ற உதவியளிக்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை நிதியமைச்சர் **ரோனி டிமெல்** பேசும்போது தமிழ்ப் போராளிகளுடன் **தமது** அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்திருப்பதைச் சுட்டிக் காட்டி அதிக உதவியளிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். இம்மாநாட்டில் கலந்து கொண்ட 12 நாடுகளும் இதை உண்மையென நம்பிச்சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 85 லட்சம் டாலர் கூடுதலாக உதவியளிக்க ஒப்புக் கொண்டன. அதாவது மொத்தம் 4,820 லட்சம் டாலர்களை இலங்கை உதவியாகப் பெற்றது. உதவி யளிக்கும் நாடுகளிடம் உதவியைப் பெற்ற பிறகு போர் நிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் தமிழர்களைத் தாக்கும் முயற்சியை இலங்கை அரசு தொடங்கியது.



உலக நாடுகளை இவ்வாறு ஏமாற்றிய ஜெயவர்த்தனே இந்தியா வையும் தொடர்ந்து ஏமாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. என்னிடம் இந்த விவரங்களைக் கூறிய நண்பர்கள் மேலும் சில ஆதாரங்களை எனக்குத் தெரிவித்தார்கள்.

**இலங்கையின் கிராமப்புறத் தொழில் வளர்ச்சிக்குக் கை கொடுக்க இந்திய அரசு முன்வந்துள்ளதையும் அவர்கள் அம்பலப் படுத்தினார்கள். இலங்கையில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு சிறுசிறு தொழில்களைத் தொடங்க இந்தியத்தொழில் அதிபர்கள் சம்மதித்துள்ளதாகவும் அதற்கு இந்திய அரசு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.**

"இதற்கு என்ன ஆதாரம்" என்று நான் கேட்டேன்.

இலங்கைக்கிராமப்புற தொழில் வளர்ச்சி அமைச்சர் திரு. தொண்டமான் வெளியிட்ட ஒரு அறிக்கையை அவர்கள் எனக்குக் காட்டினார்கள். இலங்கையில் தொழில்கள் தொடங்குவது குறித்துத் தொண்டமானுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தொழில் அதிபர்கள், அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட 6 பேர் அடங்கிய குழு இலங்கை வரவிருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்திய இன்ஜினிரியங் கம்பெனி ஒன்று தொழில் நுட்ப முன்னேற்றம் பற்றிக் **கொழும்பில்** ஒரு பொருட்காட்சி நடத்த முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தியைக் கண்டு நான் அளவற்ற திகைப்படைந்தேன்.

ஜெயவர்த்தனேயின் உள்நோக்கம் எனக்குத் தெளிவாக புரிந்தது.

1984-ம் ஆண்டு கலவரத்தில் **கொழும்பிலிருந்த** தமிழர்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளைக் கொளுத்தி நாசப்படுத்தினார்கள் சிங்கள வெறியர்கள். அவற்றைப் பாதுகாக்க ஜெயவர்த்தனே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல ஆயிரம் கோடி ரூபாய் பெறுமான தமிழர்களின் தொழிற்சாலைகள் நாசப்படுத்தப்பட்டன. அதே ஜெயவர்த்தனே இந்தியத் தொழில் அதிபர்களை இலங்கையில் தொழில் நடத்த வரும்படி அழைப்பு **விடுக்கிறார்.** அவரது வேண்டுகோளை ஏற்று இந்திய தொழில் அதிபர்கள்தொழில்களைத் தொடங்குவார்களேயானால் அதன்விளைவாக இந்திய முதலாளிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையே நெருக்கம் ஏற்படும். இந்த நெருக்கத்தை பயன்படுத்தி இந்திய அரசைச் சரிக்கட்டிக் கொள்ளலாம் என்று ஜெயவர்த்தனே திட்டமிட்டிருக்கிறார். அதன் விளைவாகவே இந்த முயற்சி என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைக்கு உலக நாடுகள் உதவி செய்யக்கூடாது என்று நாம் பிரச்சாரம் செய்யும் போது அந்நாடுகள் நம்மைத் திருப்பிக் கேட்டால் நாம் பதில் சொல்லமுடியாதபடி இந்திய அரசும், தமிழக அரசும் நடந்து கொள்வதையும் அந்த நண்பர்கள் எனக்குச் சுட்டிக்காட்டினார்கள்.

''தமிழக அரசு என்ன செய்தது? '' என்று நான் கேட்டேன்.

ஒரு காலத்தில் தமிழர் வாழும் பகுதியாக விளங்கிய **புத்தளம்** மாவட்டத்தில் இப்போது சிங்களவர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். இந்த மாவட்டத்திலுள்ள **தியோயா** ஆற்றின் குறுக்கே **இங்கி நிமிட்டியா** என்ற இடத்தில் அணை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்த அணைக்குத் தேவையான மதகுகளைத் தமிழக அரசு செய்து கொடுத்துள்ளது. தமிழக அரசின் பொறுப்பிலுள்ள சதர்ன் **ஸ்ட்ரக்சுரல்** என்ற தொழிற்சாலையில் இந்த மதகுகள் செய்யப்பட்டு இலங்கைக்கு எடுத்துச் செல்லப் பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலை தமிழக அரசின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும் தொழிற்சாலையாகும். **இலங்கைக்குச் செய்யப்படும் பொருளாதார ரீதியான உதவிகளைத் தமிழ்நாட்டு அரசே நிறுத்தாத போது உலக நாடுகள் அவ்வாறு நிறுத்த வேண்டுமென்று கேட்பதற்கு நமக்கு வாயில்லாமல் போய் விட்டது.** இந்த அணைத் திறப்பு விழாவில் இந்திய அரசின் வெளி விவகாரத் துறைச் செயலாளர் பண்டாரி கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கு எதிராகப்பொருளாதாரப்பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டாலும் இலங்கையின் கொட்டம் ஒடுங்கும். அதைச் செய்வதற்குக்கூட இந்தியா தயங்குவது ஏன்? என்று அந்த நண்பர்கள் என்னிடம் கேட்டபோது பதில் கூற வழியில்லாமல் வாயடைத்துப் போனேன்.





# 48. அவர்களின் மனக்குறை

பருத்தித்துறையிலுள்ள இலவசக் கல்விநிலையம் ஒன்றுக்கு நான் சென்றேன். ஆரம்பக்கல்வி முதல் மேல்நிலைப் படிப்பு வரை உள்ள மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி கொடுக்கும் நிலையம் அது. கல்வி நிலையங்கள் முறையாக இயங்கமுடியாததனால் மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி கொடுக்க இந்த நிலையத்தை யாழ்ப்பல்கலைக்கழக மாணவர்கள் நடத்துகிறார்கள். அவர்களே ஆசிரியர்களாக இருந்து சொல்லிக் கொடுக்கிறார்கள்.

இக்கல்வி நிலையத்திற்கு நான் சென்றபோது ஆசிரியர்களில் ஒருவர் என்னை வரவேற்றுப் பேசினார். அவரது பேச்சின் சுருக்கம் இதுதான்.

"இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தமிழக அரசியல்வாதிகள் தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். உண்மையான நாட்டத்துடன் இந்தப் பிரச்னையை அவர்கள் அணுகவில்லை. எங்களுக்கு இதில் ஆழமான வருத்தம் உண்டு. உங்கள் வருகை அந்த வருத்தத்தை ஓரளவுக்குப் போக்கியிருக்கிறது. ஒரு சாதாரண லுங்கியுடனும், முகத்தில் தாடியுடனும் உங்கள் உயிரைத் துச்சமாக மதித்து எங்களின் அவலநிலையைக் காண நீங்கள் இங்கு வந்திருப்பது எங்களுக்கு ஆறுதல் தருவதோடு புதிய தெம்பையும் ஊட்டியிருக்கிறது. எமக்காக உண்மையாகப்பாடுபடும் அரசியல்வாதிகளும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் நிரூபித்துவிட்டீர்கள். உங்களுடைய இராணுவம் இங்கே வரவேண்டிய அவசியமில்லை. எங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுதங்கள் கொடுங்கள் அதுபோதும். நாங்களே போராடி எங்கள் சுதந்திரத்தை வென்றெடுப்போம்.''

இவ்வாறு அவர் பேசியபோது கூடஇருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். தமிழீழ மக்களின் மன நிலையையே அவர் வெளிப்படுத்துகிறார் என்பது புரிந்தது. அவருக்கும் அங்குக்கூடியிருந்தவர்களுக்கும் ஆறுதலாகச்சில வார்த்தைகள் சொன்னேன்.

**மல்லாவி யோகபுரம்** என்ற இடத்தில் ஒரு பள்ளிக்கு நான் சென்றிருந்தேன். அந்தப் பள்ளியிலுள்ள மாணவ மாணவிகள் கூட்டமாகக்கூடி என்னுடன் பல விஷயங்கள் குறித்துப் பேசினார்கள்.

''பாலசிங்கத்தை ஏன் இந்தியாவிலிருந்து வெளியேற்றினீர்கள்'' என்று ஒரு மாணவி கேட்டாள்.

அவள் குரலில் சற்று கோபம் தொனிப்பதுபோல எனக்குத் தோன்றியது.

''பாலசிங்கத்தை வெளியேற்றியது தவறுதான். ஆனால் இந்திய அரசு செய்த இந்தத் தவறை எதிர்த்துத்தமிழ்நாட்டு மாணவ மாணவிகள் போராடினார்கள். ''டெசோ'' இயக்கம் போராடியது. இதில் அங்கம்வகிக்கும் தி. மு. க., தி. க., காமராஜ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் சிறை புகுந்தார்கள். இதற்குப் பிறகே இந்திய அரசு பணிந்தது. பாலசிங்கத்தையும் மற்றவர்களையும் இந்தியா வர அனுமதித்தது'' என்றேன்.

ஆனாலும் அந்த மாணவியின் கோபம் தணிந்தபாடில்லை.

''வெளியேற்றிய பிறகுதானே போராடினீர்கள். அதற்கு முன்னால் ஏன் நீங்கள் போராடவில்லை'' என்று கேட்டாள்.

இந்தியாவின் இந்த நடவடிக்கை அந்தச் சின்னஞ்சிறிய உள்ளங்களில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் நேரில் பார்த்தபோது திகைத்துப் போனேன்.

இன்னொரு மாணவன் சொன்னான் ''எமது போராளிகளுக்கு ஆயுதங்களைக் கொடுங்கள். உங்கள் இராணுவம் வரவேண்டிய அவசியம் இல்லாதபடி நாங்களே போராடி வெற்றிபெறுவோம்'' என்றான்.

''நீ போராடுவதற்குத் **தயாராக** இருக்கிறாயா'' என்று நான் அந்த 12 வயது சிறுவனை நோக்கிக் கேட்டேன்.

''நான் மட்டுமல்ல;தமிழீழ மாணவர்கள் அனைவருமே தயாராக இருக்கிறோம்'' என்று அந்த வீரச்சிறுவன் நெஞ்சுயர்த்திச் சொன்னான்.



வவுனியாவைச் சேர்ந்த **கமலேஸ்வரர்** என்பவரை நான் சந்தித்தேன். அவர் மதுவியாபாரம் செய்து வந்தவர். அவர் கடைக்குள் புகுந்து மதுபாட்டில்களைச்சிங்கள இராணுவம் கொள்ளையடித்துச் சென்றுவிட்டது. அவர் என்னிடம் பேசும்போது ஏக்கத்துடன் ஒரு உண்மையை வெளிப்படுத்தினார்.

''1983-ம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற கலவரத்தின்போது இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் **நரசிம்மராவ்** கொழும்புவுக்கு வந்தார். ஜெயவர்த்தனாவையும் மற்றவர்களையும் பார்த்தார் திரும்பிப் போனார். அதற்குப்பின் இந்திராவின் விசேஷ தூதர் ஜி. பார்த்தசாரதி பலமுறை கொழும்புவுக்கு வந்துபோனார். புதிய பிரதமர் ராஜீவ் காலத்தில் அவருடைய தூதுவராகப்பண்டாரியும் பல முறை வந்து போனார். ஆனால் இலங்கைக்கு வந்த இந்திய அரசுப் பிரதிநிதிகளில் ஒருவர் கூடத்தமிழீழப் பகுதிக்கு வந்து எங்களின் குறைகளைக் கேட்கவோ உண்மைகளை அறிந்து கொள்ளவோ ஆறுதல் கூறவோ முயற்சிக்கவில்லை. இது எமது மக்கள் மத்தியில் பெரும் மனக்குமுறலை ஏற்படுத்தியிருக்கிறது'' என்று அவர் சொன்னார்.

''அவர்கள் வராவிட்டாலும் நான் வந்திருக்கிறேனே'' என்று கூறி அவரைச் சமாதானப்படுத்தினேன்.

எனது ஈழச்சுற்றுப்பயணத்தின் போது ஆரம்பம் முதல் இறுதி வரை என்னுடன் இடைவிடாது பயணம் செய்து எனது சுற்றுப் பயணக் காட்சிகளை வீடியோப் படம் எடுத்த **அர்ச்சுனா** சிறந்த காமிராக்காரர் மட்டுமல்ல; அரசியல் நிலைகளைப் படம் பிடிப்பதிலும் வல்லவர் என்பதை நான் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. சுற்றுப்பயணத்தில் ஒருநாள் அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது தமிழ்நாட்டு அரசியலைப் பற்றியும் பேச்சு வந்தது. அவர் பின்வருமாறு சொன்னார்:

''அண்ணா ! தமிழ் நாட்டின் இன்றைய நிலையைப்பார்க்கும் போது என் நெஞ்சம் பொருமுகிறது. தமிழ் நாட்டு இளைஞர்கள் சினிமா மோகம் பிடித்தவர்களாக, வாழ்வையே சினிமா என்று நினைப்பவர்களாக இருக்கிறார்கள். எத்தனையோ உத்தமமான தியாக சீலர்கள் பிறந்த தமிழ் நாட்டில் அவர்கள் பெயரால் மன்றங்கள் வைப்பதைவிடச் சினிமா நடிகர்கள் பெயரால் மன்றங்களும் ரசிகர்கள் மாநாடுகளும் நடத்தப்படுகின்றன. பணம் சம்பாதிப்பதைத் தவிர வேறு எந்தக் குறிக்கோளும் இல்லாத இந்த நடிகர்களுக்காகத்தங்களது அருமையான வாழ்வையும் உழைப்பையும் இந்த இளைஞர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீணாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து எமது நெஞ்சமெல்லாம் வெதும்புகின்றது. எது உண்மை, எது போலி என்பதைக்கூட உணர முடியாதவர்களாகத்தமிழ்நாட்டு இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் எப்படித் திருத்தப் போகிறீர்கள் என்பது எனக்குத்தெரியவில்லை. **எமது தியாகத்தினாலும் நாங்கள் சிந்தும் இரத்தத்தினாலும் இன்னும் ஐந்தாண்டுக்காலத்தில் தமிழீழம் தலை நிமிர்ந்து நிற்கும். ஆனால் இன்னும் 50 ஆண்டுகள் ஆனாலும் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பதற்குரிய அறிகுறி எங்களுக்குத் தெரியவில்லை**'' என்று அவர் சொன்னார். அவர் கூறிய இந்த உண்மை கசப்பானது என்றாலும் கூடத் தமிழகத்தின் அரசியல் நிலையை ஈழநாட்டு இளைஞர்கள் எவ்வளவு உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் என்பதை எனக்கு விளக்கியது.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் சுட்டபோது காயமடைந்த ***சிவதாரணி*** என்னும் ஒரு வயதுக்குழந்தையை யாழ் மருத்துவமனையில் சென்று பார்த்தேன். வீட்டிற்குள் தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த இந்தக் குழந்தையின் வலது கண்ணுக்கு அருகே குண்டு பாய்ந்திருந்தது. வீட்டுக் கதவை துளைத்துக்கொண்டு அவள்மீது குண்டு பாய்ந்திருந்தது. வேதனை தாங்காமல் துடிக்கும் அந்தப்பச்சிளம் குழந்தையைப்பார்த்தபோது சிங்களரின் அரக்கத்தன்மையின் அளவு எனக்குப் புரிந்தது. குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் கூறித் தேற்றினேன்.








# 49. தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம

**தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழக** அலுவலத்திற்குச் சென்ற போது திகைத்துப்போனேன். ஏராளமானவர்கள் இங்குப்பணியாற்றுவதைப் பார்த்தேன். இதில் பலர் தாமாகவே முன்வந்து தொண்டாற்றுபவர்கள். யாழ்ப்பாணத் தமிழர்களுக்குரிய நிர்வாகத் திறமை இங்குப் பளிச்சிடுவதைப் பார்த்தேன். இந்த அமைப்பின் வரலாறு நெஞ்சம் தொடும் வரலாறாகும்.

'' தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் '' என்ற அமைப்பு 1977-ம் ஆண்டுப்பிறந்தது. அவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் மலையகப் பகுதியில் நடைபெற்ற கலவரத்தின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகள் ஆனார்கள். திக்கற்றுத்தவித்த இந்த அகதிகளைத் தமிழீழப் பகுதிகளில் குடியேற்றி அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் இந்த அமைப்பு நிறுவப்பட்டது.

1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் தேதி பிறந்த இந்த அமைப்புச் செய்துவரும் தொண்டு மகத்தான தொண்டு. இந்தத் தொண்டுக்கு ஈடுஇணையில்லை.

மலையகத் தமிழர்கள் வேறு, ஈழத் தமிழர்கள் வேறு என்ற வேறுபாட்டினை முழுவதுமாக அகற்றிய பெருமையில் இந்த அமைப்புக்கும் பங்குண்டு.

இந்திய வம்சாவழித் தமிழர்கள் எனப்படும் மலையகத் தமிழரை ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் குடியேற்றி அரவணைத்துக் காத்தது இந்த அமைப்பாகும்.

www.tamilarangam.net

அரசாங்கத்தின் ஒத்துழைப்போ உதவியோ இல்லாத சூழ்நிலையில் இந்த அமைப்புச்செயல்படுகிறது. வவுனியா போன்ற இடங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் அகதிகளைக் குடியேற்றி அவர்களுக்கு இந்த அமைப்புப்புனர்வாழ்வு கொடுத்தது. ஆனாலும் இப்படிக் குடியேற்றப் பட்டவர்களுக்கு ஏராளமான தொல்லைகளை அரசாங்கம் கொடுத்தது. இவ்வளவு சிரமத்திற்கு நடுவே மனிதாபிமான உணர்வோடு செய லாற்றிய இந்த அமைப்பை அங்கீகரிக்கவும் சிங்கள அரசு மறுத்து விட்டது. தமிழர் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டங் களுக்கு எல்லா உதவிகளையும் செய்யும் அரசாங்கம் அதே உதவிகளைத் திக்கற்ற தமிழர்களுக்கு வழங்க மறுத்தது, இந்த அமைப்பை அங்கீ கரிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குச் சிங்கள அரசு விதித்த நிபந்தனை என்னவென்பதை அவர்கள் சொன்னபோது நான் அதிர்ச்சி யடைந்தேன்.

இந்த அமைப்பின் பெயரில் இருந்து **தமிழ்** என்ற வார்த்தையை யும் **அகதிகள்** என்ற வார்த்தையையும் அடியோடு நீக்கிவிட வேண்டு மென்று அரசு கூறியது. அதை ஏற்பதற்கு இந்த அமைப்பினர் மறுத்து விட்டனர். இது குறித்து ஜனாதிபதி **ஜெயவர்த்தனாவுக்கு** அவர்கள் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்.

"எங்களின் உதவியைப்பெற்ற 14 ஆயிரம் அகதிகளில் 35 பேர்களே சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்த 35 பேரும் சிங்க ளப் பெண்கள். தமிழர்களை மணந்துகொண்ட பாவத்துக்காக அவர் களும் அகதிகளானார்கள். எனவே இந்தச் சூழ்நிலையில் தமிழ் அகதிகள் என்று கூறுவதை ஒருபோதும் நாங்கள் கைவிடமாட்டோம்.'

இந்த உறுதியிலிருந்து அவர்கள் கொஞ்சமும் பிறழவில்லை இந்த அமைப்பின் தலைவராக *திரு. **இரா. விசுவலிங்கம்** என்பவர் தொண்டாற்றுகிறார். இவரது தலைமையின்கீழ் இந்த அமைப்பு எல் லோராலும் பாராட்டப்படும் தொண்டினைச் செய்துவருகிறது.

திரு. விசுவலிங்கம் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவரைப் பற்றிய ஒரு உயர்வான எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது. தன்னை முழுவதுமாக அகதிகளின் புனர்வாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒரு சிறந்த தமிழராக அவர் விளங்குகிறார். ஒவ்வொரு தமிழனும் அவரைப் பற்றிப் பெருமைப்பட வேண்டும்.

---

* திரு. இரா. விசுவலிங்கம் அவர்கள் 1986 ஆகஸ்டில் காலமாகிவிட் டார்.



அக்டோபரில் நான் அவரைப் பார்த்தேன். அதற்கு முந்தைய மூன்று மாதங்களில் மட்டும் அகதிகள் புனர்வாழ்வுக்காக ரூபாய் 45 லட்சம் செலவிட்டிருப்பதாக அவர் கூறினார்.

"உங்களுக்குத் தேவையான நிதியை எவ்வாறு திரட்டுகிறீர்கள்? என்று நான் கேட்டேன்.

"தமிழீழ மக்களிடமிருந்து ஓரளவுக்குத் திரட்டுகிறோம். நார்வே, சுவிடன், டென்மார்க் போன்ற நாடுகளிலுள்ள தர்ம ஸ்தாபனங்கள் பெருமளவுக்குத் துணைபுரிகின்றன. இவற்றை வைத்துக்கொண்டு நிலைமையைச் சமாளிக்கிறோம்" என்று அவர் கூறினார். அகதிகள் முகாம்களை வைத்து அவர்களுக்கு உணவும், உடையும் மட்டும் அளிப்பது என்ற நிலையில் இவர்கள் உதவி செய்யவில்லை. அதற்கு மேலாக ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து, புனர்வாழ்வு பெற இவர்கள் உதவுகிறார்கள். இது ஒரு சீரிய பணி யாகும். இதை எனக்கு விளக்குவதற்காக அந்த அலுவலகத்திலேயே இருந்த ஒருவரை அழைத்து வரச் சொன்னார்.

"இரு கால்களையும் இழந்த ஒருவர் அழைத்து வரப்பட்டார்", "சிங்கள வெறியர்களினால் இவர் தமது கால்களை இழந்திருக் கிறார். இவரும் இவரது குடும்பமும் நிர்க்கதியாக உள்ளார்கள். ஒரு சிறு வியாபார நிலையம் வைத்துப் பிழைத்துக்கொள்ள இவருக்கு உதவி செய்திருக்கிறோம். இவரும் இவரது குடும்பமும் இன்று அந்த உதவி யைப்பெற்றுக்கொண்டு அகதிகள் முகாமிலிருந்து வெளியேறவிருக் கிறார்கள்" என்று திரு. விசுவலிங்கம் கூறினார்.

**இந்த அமைப்பின் முகாம்களில் 16 வயது முதல் 23 வயது வரையுள்ள இளம் விதவைகள் சுமார் இரண்டாயிரம் பேர் இருப்ப தாக அவர் கூறியபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.** இந்த இரண்டாயிரம் விதவைகளுக்கும் ஏதேனும் சிறுசிறு கைத்தொழில் தொடங்குவதற்கு உதவியளிக்கத்திட்டமிட்டு உள்ளோம். அதற்காக தமிழ்நாட்டிற்கு வந்து பல்வேறு கைத்தொழில்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறோம்" என்று அவர் கூறினார். "அவசியம் வாருங்கள்" என்று நானும் அழைத்தேன்.

இந்திய வம்சாவழித் தமிழர்கள்தாம் பெரும்பாலும் பாதிக்கப்பட் டிருப்பதாகவும் அவர் கூறினார். அவர்களுக்குப்புனர்வாழ்வு அளிக்கும் பணியில் ஈழத் தமிழர்கள் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்தியத்தமிழர், ஈழத் தமிழர் என்று பிரித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

துப்பேசித் தமிழ்நாட்டில் வேண்டாத பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த உண்மையை உணர வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது அந்நகரின் வீதிகளில் ஒரு பெரிய ஊர்வலம் வருவதைப் பார்த்தேன். 23 – 10 – '85-ல் அந்த ஊர்வலம் நடைபெற்றது. திருக்கோணமலையிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வந்திருக்கக் கூடியவர்கள் தங்களின் புனர்வாழ்வுக்கு வழிசெய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி ஊர்வலம் நடத்தினார்கள். ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அந்த ஊர்வலத்தில் முழக்கமிட்டவாறு செல்வதை நான் பார்த்தேன். கைக் குழந்தையுடன் தாய்மார்கள் சென்ற காட்சி பரிதாபத்திற்குரியதாக இருந்தது.







## 50. நையும் மீனவர்கள்

தமிழீழத்தின் நீண்ட கடற்கரை நெடுகிலும் மீன்பிடித் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தது. ஈழத்தமிழர்களுக்கு வாழ்வளிக்கும் முக்கியத் தொழிலாக அது திகழ்ந்தது. **தமிழீழப்** பகுதியிலுள்ள பல கடற்கரையோர ஊர்களுக்கு நான் சென்றிருந்தேன். **பாசையூர்** என்ற ஊரிலுள்ள மீனவர்களைச் சந்தித்தேன். அவர்களின் சங்கக் கட்டடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்கள். இச்சங்கத்தில் சுமார் 1500 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள். நான் வந்திருக்கும் செய்தியை அறிந்தவுடன் கூட்டம் கூட்டமாக அங்குக் கூடிவிட்டார்கள். அவர்களின் கஷ்டங்களை எல்லாம் எடுத்துச்சொன்னார்கள்.

கரையிலிருந்து சுமார் 100 மீட்டருக்கு அப்பால் சென்று மீன் பிடிக்கக் கூடாது என்றும் மாலை 4 மணி முதல் காலை 5 மணி வரை யாரும் கடலில் சென்று மீன் பிடிக்கக் கூடாது என்றும் இராணுவம் தடைவிதித்திருக்கிறது. இதை மீறி மீனவர்கள் மீன் பிடிக்கப் போனால் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள் என்றும் கூறினார்கள். மீன் பிடித் தொழிலில் 80 சதவீதம் பாதிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

"எங்கள் கஷ்டம் குறித்துச் சிங்கள அரசிடம் நாங்கள் செய்த முறையீடுகள் எதுவும் பலன் அளிக்கவில்லை" என்று வயதான பெரியவர் ஒருவர் வேதனையோடு கூறினார். சிங்கள மீனவர்களுக்கு அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறது. அவர்களின் தொழிலை மேலும் மேலும் செம்மைப்படுத்தக் கடன், மானியம் முதலியவற்றை அளிக்கிறது. ஆனால் தமிழ் மீனவர்களுக்கு இந்தச் சலுகைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளிக்கப்படாதது மட்டுமல்ல அவர்களின் வாழ்க்கையையே அழிக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டிருக்கிறது'' என்று அவர்கள் கூறினார்கள்.

தமிழ்நாட்டு மீனவச் சகோதரர்களுக்கு அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். ''தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று தமிழ்நாட்டு மீனவர்கள் வற்புறுத்த வேண்டும் என்றும், அவர்களின் முயற்சியால்தான் தங்களுக்கு விடிவு காலம் பிறக்க வேண்டுமென்றும்'' அவர்கள் சொன்னபோது தமிழ்நாட்டின் மீனவர்களுக்கு இச் செய்தியை அவசியம் தெரிவிக்கிறேன் என்று சொல்லி நான் விடைபெற்றேன். தமிழீழக் கிராமங்களில் எங்கு போனாலும் இதே நிலைமை இருப்பதை நான் பார்த்தேன்.

தமிழீழத்தின் நீண்ட கடற்கரையில் உள்ள ஏராளமான துறைமுகங்களும்சீரழிந்துகிடக்கின்றன. திருகோணமலைதுறைமுகம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகும். இந்துமாக்கடல் பகுதியிலுள்ள இயற்கைத் துறைமுகங்களில் மிகவும் சிறந்தது அது. பிரிட்டன் ஒரு காலத்தில் இத்துறைமுகத்திலிருந்து கொண்டு இந்துமாக்கடல் நாடுகளை அடக்கி ஆண்டது. இப்போது இந்தத் துறைமுகத்தின் மீது உலக வல்லரசுகளின் கண் விழுந்துள்ளது. இத்துறைமுகப் பகுதியிலிருந்த தமிழர்களை விரட்டியடிக்கச் சிங்கள அரசு உறுதிபூண்டுள்ளது. இரண்டுஇலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இங்கிருந்து அகதிகளாக விரட்டியடிக்கப் பட்டு விட்டனர். இங்குச்சிங்களவர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்படுகிறார்கள்.

எதிர்காலத்தில் தமிழீழம் அமையும் போது திருகோணமலையே அதன் தலை நகராக இருக்கும் என்று தமிழீழத் தந்தை திரு. செல்வா அவர்கள் அறிவித்திருந்தார். தங்களின் தலைகளைக் கொடுத்தேனும் தலைநகரை மீட்கத்தமிழர்கள் போராடி வருகிறார்கள்.


திருகோணமலையைப்போலவே காங்கேசன் துறை, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, ஊர்க்காவல்துறை மயிலிட்டி, ஆனைப்பந்தி போன்ற பல சிறந்த துறைமுகங்கள் பாழடைந்து கிடக்கின்றன. தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான கப்பல்கள் அந்த நாளில் இத்துறைமுகங்களுக்கு வந்து போய்க் கொண்டிருந்தன. பர்மாவுக்கும் இந்தத் துறைமுகங்களுக்கும் தொடர்பு இருந்தது. பர்மாவிலிருந்து அரிசி, தேக்கு போன்றவை அனுப்பப்பட்டு இத்துறைமுகங்களில் வந்திறங்கின. 1960-ம் ஆண்டில் கூடத் தமிழ்நாட்டிலுள்ள நாகபட்டினத்திலிருந்து இத்துறைமுகங்களுக்குக்கப்பல்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.



ஆனால் சிறிமாவோ பண்டாரநாயகா ஆட்சிக்காலத்தில் இந்தத் துறைமுகங்களை அவர் இழுத்து மூடிவிட்டார். வெளிநாடுகளிலிருந்து வரும் பொருட்கள் யாவும் கொழும்புத் துறைமுகம் மூலம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட வேண்டுமென்றும் அங்கிருந்து மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டார். அதற்குப் பின்னர் இந்தத் துறைமுகங்கள் வெறும் மீன்பிடித் துறைமுகங்களாக மாறிவிட்டன. அந்தத் தொழிலும் இப்போது அழிந்து போய்விட்டது.

இந்தத் துறைமுகங்கள் பலவற்றிற்கு நான் சென்று பார்த்தபோது மனம் நொந்துபோனேன். பாழடைந்து கிடக்கும் இத்துறைமுகங்களையும் பசித்த கண்களுடன் வாடி நிற்கும் மக்களையும் பார்த்து வருந்தினேன்.

தமிழர்கள் சிறந்த கடலாடிகள் எனப்பெயர் பெற்றவர்கள். கிழக்கே கடாரம், காம்போஜம், சீனம் வரையிலும் மேற்கே எகிப்து, கிரேக்கம், ரோமபுரி வரையிலும் தமிழர்களின் கலங்கள் தங்குதடையின்றிச் சென்று வந்த காலமும் இருந்தது. ஆனால் இன்று அவன் வழிவந்த தமிழர்கள் கடலில் இறங்கத்தடை, அவர்களின் துறைமுகங்கள் பாழ்! பாழ்! வீரத்தமிழர்கள் வாழ்வில் விதி எவ்வாறு விசித்திரமாக விளையாடி விட்டது?.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 51. பத்திரிகைகளின் வக்ரப்போக்கு

தமிழீழத்தில் வெளியாகிக் கொண்டிருக்கும் பல்வேறு தமிழ்ப் பத்திரிகைகளின் போக்குச்சிங்கள அரசுக்குச்சாதகமாக இருப்பதை நான் ப்பார்த்தேன். விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய தவறான செய்தி களையும் அதற்கு எதிரான செய்திகளையும் சிங்கள அரசு வெளியிட்டுப் பொய்ப் பிரச்சார்ரம் செய்கிறது. அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச்சில தமிழ்ப் பத்திரிகைகள் வெளியிடுவதைப் பார்த்தபோது எனக்கு வருத்தமாக இருந்தது.

போரா்ளிகளின் பல்வேறு பத்திரிகைகளில் இவற்றுக்கு மறுப்புகள் வெளி வந்த போதிலும்கூட இந்நிலை இன்னும் மாறவில்லை,

விடுதலைப் புலிகளின் சார்பில் வெளியிடப்படும் பல்வேறு பத்திரிகைகளின் பொறுப்புகளை வகிக்கும் நண்பர்களுடன் பேசினேன், அவர்கள் பேசும்போது மேற்கண்ட பத்திரிகைகளின் போக்கு தமிழீழத் துக்கு எதிரானதுதான் என்பதை உறுதிப்படுத்தினார்கள். "விடு தலைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போது அப்போராட்டத் திற்கு ஆதரவாகவும் அப்போராட்டத்தை மேலும் வளர்க்கக்கூடியதாக வும் செய்திகளை வெளியிட வேண்டும். ஆனால் நமது ஊர்த்தினசரிகள் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான செய்திகளை வெளியிடா விட்டாலும் எதிராகச் செயல்படாமலிருந்தால் போதும். ஆனால் அவைகள் எதிராகவே செயல்படுகின்றன. எமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இனரீதியில் நாம் ஒடுக்கப்பட்டோம். அதனாலேயே நாம் தமிழீழம் வேண்டுமென்று போராடுகிறோம். இந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம்



செய்தது பேச்சுவார்த்தைக்கோ அல்லது, சில சலுகைகளைப் பெறுவ
தற்காகவோ அல்ல. ஆனால் இந்தத் தினசரிகளில் பெரும்பாலானவை
இடைக்காலத் தீர்வு, மாவட்ட சபை போன்றவை கிடைத்தால் போதும்
என்ற எண்ணத்துடனேயே செயல்படுகின்றன. இதன் மூலம் வளர்ந்து
வரும் விடுதலை உணர்வை இந்தப் பத்திரிகைகள் மழுங்கடிக்க முயற்
சிக்கின்றன" என்று கூறினார்.

"இந்தப் பத்திரிகைகளின் போக்கைப் பற்றி மக்கள் என்ன
நினைக்கிறார்கள்" என்று நான் கேட்டேன்.

"மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமே இப்பத்திரிகைகளின் தவ
றான போக்குகளைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியில்
இவற்றை அம்பலப்படுத்த நாங்கள் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்
கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

"சிங்களச்செய்தி நிறுவனமான 'லங்காபுவத்'வெளியிடும் பொய்ச்
செய்திகளைத்தமிழ்ப்பத்திரிகைகள் அப்படியே பிரசுரிப்பது வேதனைக்
குரியது. போராளிகளின் முகாம்களைத் தாக்கியதாகவும் அவர்களைப்
பூண்டோடு அழித்துவிட்டதாகவும் லங்காபுவத் கொடுக்கும் செய்தி
களை இந்தப் பத்திரிகைகள் அப்படியே வெளியிடுகின்றன. எனவே
இந்தப் பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை கொடுக்கவேண்டிய நிலை
மைக்கு நாங்கள் ஆளாக்கப்படுகிறோம்" என்றும் அவர்கள் கூறி
னார்கள்.

"எச்சரிக்கை என்றால் எந்த முறையில் செய்கிறீர்கள்" என்று
நான் கேட்டேன்.

"குறிப்பிட்ட ஒரு யாழ்ப்பாணத் தினசரியில் ஆபாசப்படங்களும்
படுமோசமான வக்ரமான பாலுணர்வூட்டும் திரைப்படங்கள் பற்றிய
செய்திகளும் வெளியாகியிருந்தன. இந்தப் பிரதிகளை நாங்கள் பறி
முதல் செய்து நட்டநடுவீதியில் போட்டு எரித்தோம். நமது இளைஞர்
கள் விசாரணையின்றிக்காவல் முகாம்களில் சொல்லமுடியாத சித்ர
வதைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் அங்கே சாகடிக்கப்படு
கிறார்கள். நமது யுவதிகள் இராணுவ அதிகாரிகளின் காமப்பசிக்கு
இரையாக்கப்படுகிறார்கள். இத்தகைய கொடுமைகளை இப்பத்திரி
கைகள் அம்பலப்படுத்துவதில்லை; இதைக் கண்டித்து எழுதுவ
தில்லை. ஆனால் சமுதாயத்திற்குத் தேவையில்லாத செய்திகளை
வெளியிடுவதிலும் அரசாங்கத்தின் பொய்ச்செய்திகளைப் பரப்புவதி
லும் இப்பத்திரிகைகள் கூச்சமின்றி ஈடுபடுகின்றன. இதை நாங்கள்
அவ்வப்போது அந்தப் பத்திரிகைகளுக்குச் சுட்டிக்காட்டுகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருந்தாத பத்திரிகைகளைத் தமிழீழப் பகுதிக்குள் விற்பனை செய்யக் கூடாது என்று தடைவிதித்திருக்கிறோம். இதை மீறி யாரேனும் விற்ப தற்கு முயன்றால் நாங்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறோம். எங்களது இத்தகைய நடவடிக்கையின் விளைவாக இந்தப் பத்திரி கைகள் ஓரளவு திருந்தி வருகின்றன'' என்று அந்த இளைஞர்கள் என்னிடம் சொன்னார்கள்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் "ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இதழான "**தினபதி**" என்ற தமிழ் நாளிதழ் போராளிகளுக்கு எதிரான செய்திகளை வெளியிடுவதாலும் உண்மைகளைத் திரித்துப் பிரச்சாரம் செய்வதாலும் தமிழீழப் பகுதிக்குள் எங்கும் அது வரக் கூடாது எனப்புலிகள் தடைவிதித்துள்ளனர். அந்த நாளிதழ் கொழும்பு விலிருந்து வெளியாகிறது. தமிழீழத்தில் அதை யாரும் வாங்குவதில்லை.

விடுதலைப் புலிகளின் சார்பில் பல ஏடுகள் வெளியாகிக்கொண் டிருக்கின்றன. மகளிருக்கும், மாணவர்க்கும் என்று **தனித்தனியாக்கூட** ஏடுகள் வெளியிடப்படுகின்றன.

தமிழ் நாட்டுப் பத்திரிக்கைகளில் பல சமுதாய நோக்கு இல்லாமல் வியாபார நோக்குடனேயே நடத்தப்படுவது போல தமிழீ ழத்திலும் சில பத்திரிக்கைகளின் போக்கு இருக்கின்றன. சமுதாய எதிர் நோக்கில் நடத்தும் அந்தப் பத்திரிக்கைகளைத் திருத்த அல்லது ஒடுக்க அங்குள்ள இளைஞர்கள் துணிகர நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். தமிழ்நாட்டிலும் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நமது இளைஞர்கள் மேற்கொண்டாலொழிய இங்குள்ள சில பத்திரிக்கை களின் வக்கிரப்போக்கினைத் தடுக்கமுடியாது.

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிக்கை ஆசிரியர்கள், செய்தியாளர் கள் ஆகியோரின் திடீர்ச்சந்திப்புக்குத் தளபதி கிட்டு ஏற்பாடு செய் திருந்தார். ஒரு நண்பரின் வீட்டில் இந்த இரகசியச் சந்திப்பு நடைபெற்றது.

உயிருக்குப் பயப்படாமல் துணிந்து நான் வந்திருப்பது குறித்து அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்கள். தமிழீழத்தில் எனது சுற்றுப் பயணம்பற்றி விசாரித்தார்கள். இந்திய அரசின் நிலை குறித்து விவாதித்தார்கள்.

சிங்கள அரசியல் கட்சிகளின் போக்குக்குறித்து அவர்களிடம் கேட்டேன்.

"இலங்கையில் உள்ள சிங்களக் கட்சிகள் எதுவாக இருந்தாலும் தமிழருக்கு எதிரான வெறியைத் தூண்டுவதில் ஒன்றோடு ஒன்று



போட்டியிடும் கட்சிகள்தாம்' என அவர்கள் கூறினார்கள். இதற்கான ஆதாரங்களையும் எனக்கு அவர்கள் காட்டினார்கள்.

இலங்கையின் ஜனாதிபதியான ஜெயவர்த்தனா தமிழர்-சிங்களப் பிரச்னை தீர்வதற்குக் கீழ்க்கண்ட புதிய வழியைச் சொல்லியிருக்கிறார்.

**"தமிழ் மக்கள் பௌத்தத்தைக் கடைப்பிடித்தால் சிக்கல் களுக்கு வழியில்லை. அவர்கள் தமிழ்ப்பௌத்தர்களாக இருப்பார்கள்; நாம் சிங்களப் பௌத்தர்களாக இருப்போம்; பிரச்னை தலை யெடுக்காது"**

**21.12.'83** தேதி 'வீரகேசரி' பத்திரிக்கையில் ஜெயவர்த்தனாவின் இந்தப் பேச்சு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்துக்களானாலும் கிறிஸ்தவர்களானாலும் முஸ்லீம்களானா லும் தமிழர்கள் பௌத்தர்களாக மாறினால் ஒழிய அவர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று ஜெயவர்த்தனா மிரட்டி இருக்கிறார். உலகின் எந்த நாகரிக நாட்டின் ஜனாதிபதியும் இவ்வாறு கூறியதாகச் சான்றில்லை.

ஆளும் கட்சியின் தலைவரும் நாட்டின் தலைவருமான ஜெய வர்த்தனாதான் இப்படிப் பேசுகிறார் என்றால் எதிர்க்கட்சித் தலைவ ரான **அநுரா பண்டாரநாயகா** இன்னும் ஒருபடி மேலே போய்த் தமிழர்கள் அனைவரும் தமிழ்நாட்டுக்குப் போய்விடலாம் என்று சொல்லி இருக்கிறார்.

"நமது நாட்டிலிருந்து ஒரு புல் முளைக்கும் இடத்தைக்கூடப் பிரித்தெடுக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. சிங்கள மக்களுக்கு வேறு எந்த நாடும் இல்லை. தமிழர்களுக்குத் தமிழ்நாடு உண்டு. அவர்கள் விரும்பினால் அங்குப்போய்விடலாம். தமிழ்நாடு அவர்களுக்குத் தஞ்சம் அளிக்கும். நாம் சிங்களர் எங்கே போவது

**17-12-'83** அன்று வெளியான 'வீரகேசரி' நாளிதழில் அநுரா பண்டாரநாயகாவின் இந்தப் பேச்சு வெளிவந்திருக்கிறது. சிங்கள ஆளும் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர்களை ஒழிக்கும் விஷயத்தில் ஒன்றாகவேயிருக்கிறார்கள். அவர்களுக்கிடையே எந்த வேறுபாடும் இல்லை.

சிறில்மாத்யு என்ற சிங்கள வெறியர் இன்னும் கொச்சையான முறையில் தமிழ் முஸ்லீம்களை மிரட்டியிருக்கிறார். **"இந்நாட்டின் முஸ்லீம்களின் உடல்களில் கூடுதலாக ஓடுவது சிங்கள இரத்தம் ஆகும். இதனை நான் ஏன் சொல்கிறேன் என்றால் இங்குள்ள**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லீம்கள் சிங்களருடன் இணைந்து வாழ வேண்டும். அவர்கள் எக்காரணம் கொண்டும் தமிழர்களுடன் சேரக் கூடாது என்பதனால் ஆகும்.''

12-12-'83 தேதிய 'வீரகேசரி' நாளிதழில் இது வந்திருக்கிறது.

இன்னொரு சுவையான செய்தியையும் யாழ்ப்பாணத்தில் நிருபர்கள் எனக்குக் காட்டினார்கள். 1983-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 5 ஆயிரம் தொண்டர்களுடன் நான் இலங்கையை நோக்கித் தியாகப் பயணம் செய்தது பற்றி இலங்கையின் தேசியப்பாதுகாப்பு அமைச்சரான லலித் அதுலத் முதலி எத்தகைய விமர்சனம் செய்தார் என்பதை அவர்கள் கூறினார்கள்.

13-8-'86 'வீரகேசரி' நாளிதழில் லலித் அதுலத் முதலி பேச்சு வெளிவந்திருக்கிறது. அது வருமாறு: ''நெடுமாறன் இலங்கைக்கு வர முற்பட்டபோது, தென்னிந்தியர்கள் இலங்கைக்கு வருவது தீர்வையற்ற பொருட்களை வாங்கத்தானே. நீங்களும் வாருங்கள் தீர்வையற்ற கடைத் தலத்துக்குச் சென்று பொருட்களை வாங்க ஏற்பாடு செய்கிறேன் என அவருக்குச் செய்தி அனுப்பினேன்'' மேலே கண்டவாறு எனக்கு அவர் ஏதோ செய்தி அனுப்பியதாகப் பேசியிருப்பதைக் கேட்டு நான் அளவு கடந்த வியப்படைந்தேன்.

இலங்கையில் கிடைக்கும் வெளிநாட்டுச் சாமான்களை வாங்குவதற்குத்தான் நாங்கள் ஏதோ பயணம் புறப்பட்டதாகக் கூறி எங்களின் தியாகப் பயணத்தை அவர் இழிவு செய்ததாக நான் நினைக்கவில்லை. ஒரு நாட்டின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் என்ற பெரும் பொறுப்பில் இருக்கும் ஒருவர் எனக்கு ஏதோ செய்தி அனுப்பியதாக ''நா'' கூசாமல் ஒரு பொய்யைப் பகிரங்கமாகச் சொல்கிறார் என்று சொன்னால் அந்த நாட்டின் ஆட்சி எத்தகைய கீழான மனிதர்களிடம் சிக்கியிருக்கிறது என்பதை எண்ணித்தான் வருந்தினேன்.

**அதைப் போலவே 'சன்' போன்ற பல சிங்கள ஆதரவு ஏடுகளில் என்னை மிகக் கடுமையாகத் தாக்கி வெளியிடப்பட்டிருந்த செய்திகளையும் தலையங்கங்களையும் அவர்கள் எனக்குக் காட்டினார்கள்.**

நியூயார்க்கில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் நான் தலைமை வகித்துப்பேசியபோது இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு உலகநாடுகள் முன்வரவேண்டும் என்று பேசியிருந்தேன். எனது பேச்சைக் கண்டித்து ''நெடுமாறன் பிதற்றல்'' என்ற தலைப்பில் 'சன்' என்ற ஆங்கில நாளேடு மிகக்கடுமையான முறையில் தலையங்கம் தீட்டியிருந்தது. சிங்கள ஏடுகளோ வசவுமழை பொழிந்திருந்தன.



இவற்றையெல்லாம் அந்தச் செய்தியாளர்கள் எனக்குக் காட்டியபோது நான் அவர்களிடம் 'சிங்கள அரசாங்கம் என்னைப் பெரிய எதிரியாகக் கருதுகிறதுபோல் இருக்கிறதே'' என்று சொன்னேன். அவர்களும சிரித்துக்கொண்டு ''உங்களை மிகப்பெரிய தமிழ்ப் பயங்கரவாதியாகச் சிங்கள மக்களிடம் சித்கரித்துக் காட்டியிருக்கிறார்கள். தப்பித்தவறிச் சிங்களவர்கள் கையில் நீங்கள் பிடிபடுவீர்களானால் அந்திமக்கிரியை நடத்துவதற்குக்கூட எலும்பு அகப்படாது'' என்றார்கள்.

''அப்படி ஒரு கதி எனக்குச் சிங்கள வெறியர்களால் ஏற்படுவதானால் அதை நான் வரவேற்பேன். என் ஒருவனின் சாவின்மூலம் இந்தப் பிரச்னையை இந்தியாவும் உலகமும் முழுமையாக அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுமானால் அத்தகைய சாவு மகிழ்ச்சிக்குரியதொன்று'' என்று நான் சொன்னேன்.

செய்தியாளர்களிடம் சுமார் 2 மணி நேரத்திற்குமேல் நான் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சு சுவையாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் சென்றுகொண்டிருந்தது. மாலை நேரம் நெருங்கியதால் இப்பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து நான் விடைபெற்று எழுந்தபோது புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தோழர் மிகப் பரபரப்புடன் உள்ளே நுழைந்து ஒரு பத்திரிகையை என்னிடம் கொடுத்தார் Saturday Review என்ற அந்த இதழில் யாழ்ப்பாணத்திற்கு நான் வந்திருப்பது பற்றிய செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்தபோது நானும் மற்ற தோழர்களும் அதிர்ச்சியடைந்தோம். இலங்கையைவிட்டு நான் வெளியேறும் வரை நான் இங்கு வந்த செய்தியை வெளியிட வேண்டாம் என்று பத்திரிகையாளர்களை வேண்டியிருந்தேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதை மீறி Saturday Review இதழ் மட்டும் இந்த செய்தியை பெரிதாகப் போட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தின் தளபதி கிட்டு, பொட்டு, லிங்கம் போன்ற அனைவருமே அளவு கடந்த பரபரப்படைந்துவிட்டார்கள். அந்த இடத்திலிருந்து உடனே என்னை அழைத்துச்சென்றுவிட்டார்கள். பத்திரிகையில் இந்தச் செய்தி வெளியானதையொட்டி எனது பயணத் திட்டத்திலும் நாங்கள் படகில் ஏற வேண்டிய இடம் முதலியவற்றிலும் மாறுதல்கள் செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது.

இந்த இதழில் அந்தச் செய்தி வெளிவந்த உடனேயே இச் செய்தி கொழும்புவுக்குப் போய் அங்கிருந்து இந்தியாவுக்கும் எட்டிவிட்டது. நான் தமிழகம் திரும்புவதற்கு முன்னாலேயே தமிழ்நாட்டின் பத்திரிகைகள் இதைப் பெரிது பெரிதாக வெளியிட்டுவிட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

என்னுடைய பாதுகாப்பைக் கருதி எனது பயணத்தில் செய்யப்பட்ட மாறுதல்கள் விளைவாக இரண்டு நாட்கள் நான் தலைமறைவாக நேரிட்டது. அந்த இரண்டு நாட்களில் தமிழகத்தில் தேவையில்லாத பரபரப்பு மூண்டுவிட்டது.

இலங்கைக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டிருக்கிறேன் என்ற செய்தி பத்திரிகையில் வெளிவந்த பிறகு நான் தமிழகத்திற்குப் பத்திரமாகத்திரும்பிவிட்டேனா? இல்லையா! என்பதை அறிந்துகொள்ள முடியாத எல்லோருமே குழப்பத்தில் ஆழ்ந்துபோய்விட்டார்கள். என்னை உயிருடன் பிடித்துவிட வேண்டும் என இலங்கை இராணுவம் முடுக்கிவிடப்பட்டது. தமிழ்நாட்டுக்கடற்கரையில் நான் இறங்கும்போது என்னைக் கைது செய்துவிட வேண்டுமெனத் தமிழ்நாட்டுப் போலீஸும் மத்திய உளவுத் துறையும் மிகத் தீவிரமாகச் செயலில் இறங்கின. நான் இறங்குவேன் என்று எதிர்பார்க்கப்பட்ட இடங்களில் பலமான போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் வேட்டைக்குத் தப்பித் தமிழ்நாட்டுப் போலீஸும் மத்திய உளவுத் துறையும் வீசிய வலைகளுக்குத் தப்பிச்சென்னைக்கு வந்து சேர்ந்து பத்திரிகையாளர்களை நான் சந்தித்து முழு விவரங்களையும் வெளியிடுவது வரை மிகப்பரபரப்பாகவேயிருந்தது.


# "Mr. Nedumaran's Antics", says "The Island" in anger

*Editorial in The Island, the Colombo newspaper, of 7th November, 1985*




*As the Island cartoonist Wijesoma saw it.*





## 52. பௌத்தர்களின் மனித இறைச்சி வியாபாரம்

சிங்கள இராணுவத்தைப் பற்றிய பல செய்திகளையும் நான் சேகரித்தேன். சிங்கள இராணுவத்தில் அதன் அதிகாரிகளுக்கும் சாதாரணச்சிப்பாய்களுக்குமிடையே பெரிய இடைவெளி நிலவுகிறது. சிங்களச்சிப்பாய்களில் பெரும்பாலோர் மிகவும் பின்தங்கிய கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள். சிங்கள இராணுவ அதிகாரிகளில் பெரும்பாலோர் கொழும்பு, கண்டி போன்ற நகரங்களைச் சார்ந்த சிங்கள மேட்டுக்குடிகளில் பிறந்தவர்கள். இந்த வர்க்க ஏற்றத் தாழ்வு சிங்கள இராணுவத்திற்குள் ஆழமாக ஊடுருவியிருக்கிறது. இதன் விளைவாக இராணுவத்திற்குள் கட்டுப்பாடற்ற தன்மை நிலவுகிறது.

மேலும் சிங்கள பௌத்தனாக இல்லாத எந்த உயர் அதிகாரியாலும் சிங்கள பௌத்தச்சிப்பாய்களைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகவே யிருக்கிறது. மன்னாரில் சிங்கள இராணுவம் அட்டூழியம் புரிந்தபோது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நண்பர்கள் சுட்டிக் காட்டினர்.

மன்னாரில் **'கர்னல் மாக்ஸ் பீலிப்ஸ்'** என்னும் சிங்கள இராணுவ அதிகாரி தமது கீழுள்ள சிப்பாய்கள் அப்பாவிப்பொது மக்களைச் சுட்டுக் கொல்வதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். ஓடோடிச் சென்று அதைத் தடுத்து நிறுத்த அவர் முற்பட்டபோது சிங்களச் சிப்பாய்கள் அவரது உத்தரவுக்கு அடிபணிய மறுத்ததோடு மட்டுமல்ல அவரை இழுத்துச் சென்று ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டி விட்டார்கள். "அதை மீறி வெளியே வந்தால் சுட்டுக் கொல்லப்படுவார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் எச்சரித்தார்கள். காரணம் இந்த அதிகாரி கத்தோலிக்க பரங்கி இனத்தைச் சார்ந்தவர். சிங்கள-பௌத்தர் அல்லர். எனவே இவர் ஒரு கர்னலாக இருந்தும் இவர் உத்தரவுக்கு அடிபணிய சிப்பாய்கள் மறுத்து விட்டார்கள்.

முள்ளியவிளை என்ற ஊரில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த மக்கள் மீது சிங்களச்சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் 15 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த அக்கிரமத்தைத் தடுத்து நிறுத்த முயன்ற சிங்கள இராணுவ வீரர் ஒருவரை அவரது சக வீரர்களே சுட்டுக் கொன்றுவிட்டார்கள். ஆனால் அந்த இராணுவ வீரர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் பின்னர் அறிவித்துவிட்டார்கள். லலித் அதுலத் முதலி, ஆனந்த திச டி. அல்விஸ் போன்ற அமைச்சர்கள் இராணுவ வீரர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வேண்டும் என்பதற்காக அவர்களை இலங்கையின் தேசிய வீரர்களாகச் சித்தரிக்கிறார்கள். சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களையெல்லாம் மூடிமறைத்து அவர்கள் நாட்டைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகப் புகழ்கிறார்கள். இவ்வாறு செய்யாவிட்டால் அந்த அமைச்சர்களின் கதியும் அதோகதியாகிவிடும்.

சிங்கள விமானப் படையினர் செய்யும் பயங்கரமான அக்ரமங்களை அங்குள்ள மக்கள் எனக்குச் சொன்னபோது அதிர்ந்து போனேன்.

தமிழீழப் பகுதியிலுள்ள காடுகள்தாம் போராளிகளின் உறைவிடங்களாக விளங்குகின்றன என்ற காரணத்தினால் காடுகளில் நச்சு வாயுக்களை விமானம்மூலம் தெளிக்கிறார்கள். இதன்விளைவாகக்காடுகளில் வாழும் பறவைகள், மிருகங்கள் போன்றவை சாவது மட்டுமல்ல இராணுவக் கொடுமைகளுக்குப் பயந்து காட்டுக்குள் மறைந்துவாழும் மக்களும் துடிதுடித்துச் சாகிறார்கள். காடுகளிலுள்ள குளங்கள், சுனைகள் போன்றவற்றிலும் விஷத்தைக் கலந்துவிடுகிறார்கள். இந்தத் தண்ணீரைக் குடித்தால் உடன் மரணம் நிச்சயம்.

இது மட்டுமல்ல எந்த நாகரிக நாட்டிலும் யாரும் செய்யத் துணியாத கொலை பாதகச் செயல் ஒன்றினையும் சிங்கள வெறியர்கள் செய்கிறார்கள். உலக நாடுகள் பலவற்றில் கண்வங்கிகள் உண்டு. இறந்தவர்களின் கண்களைத் தானமாக பெற்று விழியற்றவர்க்கு அதைப் பொருத்தும் உன்னதமான தொண்டினைப் பல நாடுகள் செய்கின்றன.

**ஆனால் சிங்கள வெறியர்கள் புதிய வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்திருக்கிறார்கள். மனிதத்தோல், எலும்பு, குருதிக்குழாய்கள், செவிப்பறை, மென்தோல்கள், இதயவால்வுகள், நரம்புகள்,**



**சிறுநீரகங்கள் போன்ற மனித உடல் உறுப்புகளைச் சேகரித்துப் பதனிட்டு உலக நாடுகளுக்கு விற்பனை செய்ய ஓர் அமைப்பினைச் சிங்கள வெறியர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அமைப்புக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு 30 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காகக்கிட்டத்தட்ட இரண்டுகோடி ரூபாய்களைச் சிங்கள அரசு ஒதுக்கியிருக்கிறது.**

35 வயதுக்குட்பட்ட நல்ல தேக ஆரோக்கியம் நிறைந்தவர்கள் இறந்த பிறகு அவர்கள் உடல்களிலிருந்து எடுக்கப்படும் உறுப்புகள் தாம் மற்றவர்களுக்குப் பொருத்துவதற்கு லாயக்கானவை. நோய்களினால் அல்லது வயோதிகத்தால் இறந்துபோனவர்கள் உடல் உறுப்புகள் இதற்கு லாயக்கற்றவை. மிக முற்போக்கான சிந்தனையுள்ள சில அறிவு ஜீவிகளைத் தவிர வேறு யாரும் தமது உடல் முழுவதையும் தானம் செய்ய முன்வரமாட்டார்கள். அப்படி அவர்கள் முன்வந்தாலும் கூட மரண வீட்டில் வைத்து அவர்களது உடலிலிருந்து இவ் உறுப்புகள் அகற்றப்படுவதை அவர்களது உறவினர்கள் விரும்பமாட்டார் அனுமதிக்கவும் மாட்டார்கள். இந்துக்கள் இந்த விஷயத்தில் கண்டிப்பாக இருப்பார்கள். கிறிஸ்தவர்களும் அதைவிடக் கண்டிப்பாக இருப்பார்கள். முஸ்லீம்களின் உடல்களைத் தொடவே முடியாது. இந்த நிலைமையில் யாருடைய உடல்களை நம்பி இந்த அமைப்பு இயங்கப்போகிறது?

சிங்கள இராணுவ வெறியர்களால் சுட்டுக்கொல்லப்படுகிற அப்பாவி தமிழ் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரின் உடல்களை நம்பித்தான் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மிருகத்தனமான வியாபாரத்தின் மூலம் கோடிக்கணக்கில் இலங்கை அரசு பணம் திரட்டப்போகிறது.

இந்தச் செய்தியை நண்பர்கள் கூறியபோது என்னால் நம்பவே முடியவில்லை. கொழும்புவிலிருந்து வெளிவரும் அரசாங்க ஆதரவு பத்திரிகையான ''ஆப்சர்வர்'' என்னும் பத்திரிகையின் 1985 ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி இதழில் இந்த அமைப்பு சம்பந்தமான விரிவான கட்டுரை வெளிவந்திருக்கிறது. அதை நண்பர்கள் என்னிடம் காட்டினார்கள்.

சிங்கள இராணுவ வெறியர்கள் தமிழ் இளைஞர்களைத் தேடிப் பிடித்துக் கொலை செய்கிறார்கள். சுட்டுக் கொன்றவுடன் உடல்களையும் உறவினர்களுக்குக் கொடுக்காமல் உடனே எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். இந்த மர்மம் இப்போதுதான் எனக்குப் புரிந்தது. பேயாட்சி நடந்தாலும்கூட இத்தகையகொடுமை நடக்காது.ஜெயவர்த்தனாவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்சியில் இவை தங்குதடையின்றி நடந்துகொண்டிருக்கின்றன.

சிங்கள இராணுவச் சிறைகளில் நடைபெற்ற சித்திரவதைகளை அதிலிருந்து விடுதலையாகி வந்த இளைஞர்கள் விவரித்தபோது என் செவிகளையே என்னால் நம்ப முடியவில்லை. அவ்வளவு கொடூரமான முறையில் தமிழர்கள் சித்ரவதை செய்யப்படுகிறார்கள்.

தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு உடம்பின் பல பகுதிகளில் தொடர்ந்து அடித்துக்கொண்டே இருப்பது, சில சமயம் இரவு முழுவதும் இந்தத் தண்டனை தொடரும். சூடான மிளகாய்ப் பொடி நிறைந்த பையைத் தலையைச் சுற்றி மூடிக் கட்டி மிளகாய் நெடி தாங்காமல் அலறி மூர்ச்சையாகும் வரை சித்ரவதை செய்வார்கள்.

பலகையில் படுக்கவைத்து உள்ளங் கால்களில் தொடர்ந்து அடித்துக்கொண்டே இருப்பார்கள்.

ஒரு கம்பியில் முழங்கால் மடியத் தொங்கவிட்டு அடிப்பார்கள்.

ஆண், பெண், மர்ம உறுப்புகள் அல்லது மற்ற மென்மையான பாகங்களில் தடி அல்லது மணல் நிரம்பிய பிளாஸ்டிக் குழாய்களால் அடிப்பார்கள்.

மிளகாய்ப் பொடியை மூக்கு, வாய், கண் மற்றும் மர்ம உறுப்புகளில் வைத்து அடிப்பார்கள்.

செப்புக் கம்பிகளைக் கைகளிலும், கால்களிலும் சுற்றி மின்சாரத்தைப் பாய்ச்சுவார்கள்.

கை, கால் நகக்கண்களிலும், உள்ளங்கால்களிலும் நீண்ட குண்டூசிகளைச் செலுத்துவார்கள்.

சிகரெட் நெருப்பால் மார்பிலும், முதுகிலும் சுடுவார்கள்.

கொடியவன் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் யூத இனச்சித்திரவதை முகாம்கள் பற்றியும் கொடுங்கோலன் இடிஅமின் ஆட்சியில் செய்யப்பட்ட சித்திரவதைகளைப் பற்றியும் படித்திருக்கிறோம். ஹிட்லர், இடிஅமின்கூட நினைத்துப் பார்க்காத கொடுமைகளை இலங்கையில் ஜெயவர்த்தனா செய்கிறார். ஆங்கிலத்தில் இத்தகைய வெறிகொண்டவர்களை Sadist என்பார்கள். இலங்கையில் Sadist ஆக விளங்கும் ஜெயவர்த்தனா வெளி உலகுக்கு வரும்போது சமாதானத் தூதுவராகக் காட்சி தருகிறார். ராஜீவ்காந்தியுடன் கைகுலுக்குகிறார். 'தன் கையைக் குலுக்கும் அந்தக் கரங்கள் ரத்தக்கறைபடிந்த கரங்கள்' என்பதை ராஜீவ்காந்தி அறியவில்லை என்பதுதான் வேதனைக்குரியது.



சிறையில் செய்யப்பட்ட சித்ரவதைகளை அந்த இளைஞர்கள் சொல்லும்போதே என் நெஞ்சம் அளவுகடந்த வேதனைப்பட்டது. ஆனால் சித்ரவதைக்கு ஆளான அந்த இளைஞர்கள் எந்த அளவுக்கு வேதனைப்பட்டிருப்பார்கள் என்பதை என்னால் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை.

இராணுவச் சிறை முகாமில் இருந்தவர்கள் பலர் வெளியே போகும்போது பிணமாகத்தான் சென்றார்கள் என்று அந்த இளைஞர்கள் கூறினார்கள்.

1983-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் தேதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ்த் தடைசெய்யப்பட்ட 'குருநகர்' இராணுவ முகாமில் வைத்திருந்த கே. நவரத்னராஜா என்ற தமிழர் இராணுவ முகாமிலேயே இறந்துபோனார். பிரேத பரிசோதனையின்போது அவரது உடலில் 25 வெளிக் காயங்களும் 10 உட்காயங்களும் இருந்தது தெரியவந்தது. அவரது மரணம் ஒரு கொலையே என்று மாஜிஸ்ரேட் விசாரணையின்போது கூறப்பட்டது. இந்தக் கொலைக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கவோ தண்டிக்கவோ அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்ட தமிழர்களின் மரணம் தொடர்பாகவோ சித்ரவதை தொடர்பாகவோ இதுவரை எந்தப் போலிஸ் அதிகாரியும் அல்லது இராணுவ அதிகாரியும் தண்டிக்கப்படவேயில்லை" என்றும் அந்த இளைஞர்கள் என்னிடம் கூறினார்கள்.

ஆனையிறவு இராணுவமுகாமில் வல்வெட்டித்துறையைச் சார்ந்த கந்தசாமிபிரபாகரன், சிவசுப்ரமணியம் என்ற இரு இளைஞர்கள் இரவில் சிறுநீர் கழிக்கவேண்டும் என்றனர். அவர்கள் இருவரும் வெளியே கொண்டு செல்லப்பட்டுப்பின்னர் முதுகில் பெரிய காயங்களோடு பிணங்களாகத் திரும்பக் கொண்டுவரப்பட்டனர். இதைப் பார்த்த பின்னால் சிறுநீர் கழிக்க யாரும் அனுமதி கேட்பதில்லை.

சிங்கள இராணுவம் எவ்வளவு கொடூரமான காரியங்களைச் செய்கிறது என்பதற்கு **மணிவாசகன்** என்ற இளைஞனின் வரலாறு சரியான சான்றாகும். மணிவாசகன் என்ற அந்த இளைஞன் **கராத்தே** பயிற்சி பெற்றவன். இலங்கையில் சிறந்த கராத்தே வீரனாக விளங்கினான். சிங்கப்பூரில் நடைபெற்ற கராத்தே போட்டி ஒன்றுக்கு அரசாங்கமே அவனை அனுப்பி வைத்தது. அங்குச்சென்று **கருப்புப்பட்டிப்** பரிசை பெற்றான் மணிவாசகன். உலகின் சிறந்த கராத்தே வீரர்களில் ஒருவன் என்ற புகழுடன் நாடு திரும்பிய அவனை அபாயம் எதிர்கொண்டு அழைத்தது. இராணுவம் அவனைக் கைது செய்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மணிவாசகனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"சிங்கப்பூருக்கு எதற்காகப் போனாய்?" என்று இராணுவ அதிகாரி அவனிடம் கேட்டான்.

"அரசாங்கம்தான் என்னை அனுப்பி வைத்தது" என்று மணிவாசகன் பதில் சொன்னான்.

"அதுபற்றி எங்களுக்குக் கவலையில்லை. நீ கராத்தே பயிற்சி பெற்றிருக்கிறாய் அதுதான் எங்களுக்கு முக்கியம்" என்று சொன்னான் அந்த அதிகாரி.

"கராத்தே பயிற்சி பெற்றது குற்றமா?" என்று கேட்டான் மணிவாசகன்.


"ஒரு தமிழன் கராத்தே பயிற்சி பெறுவது மன்னிக்க முடியாத குற்றம்தான்" என்றான் இராணுவ அதிகாரி.

"நான் என் நாட்டிற்குப் பெருமைத்தேடித் தந்திருக்கிறேனே" என்றான் மணிவாசகன்.

"அதற்குரிய பரிசு இதோ" என்று சொல்லி துப்பாக்கியை எடுத்துச் சுட்டான் அந்த இராணுவ அதிகாரி.

சுருண்டு கீழேவிழுந்து செத்தான் மணிவாசகன்.

கராத்தே பயிற்சி பெற்ற ஒரே குற்றத்திற்காக மணிவாசகனை சாகடித்தது சிங்கள இராணுவம்.







# 53. வீர சங்கிலி மன்னன்

யாழ்ப்பாணத்தில் வீர சங்கிலி மன்னன் சிலையைப் பார்த்தேன். யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக்கொண்டு தமிழீழப் பகுதிகளை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் **சங்கிலி மன்னன்** ஆவான். 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழீழத்தின் தன்னிகரற்ற மன்னனாக விளங்கியவன் வீர சங்கிலியன். இவனை வீழ்த்தவும், இவன் அரசை எப்படியும் கைப்பற்றவும் போர்த்துக்கீசியர் முயற்சி செய்தனர். போர்த்துக்கீசியரின் படையெடுப்பிலிருந்து தன் நாட்டைக் காப்பாற்றுவதற்காகத்தாய்த் தமிழகத்தின் உதவியை நாடினான் சங்கிலி மன்னன். தஞ்சையில் அப்போது ஆண்டுகொண்டிருந்த **ரகுநாத நாயக்கர்** சங்கிலி மன்னனுக்கு உதவிபுரிய முன்வந்தார். தமது தளபதியான **வர்ணகுலத்தான்** என்பவனின் தலைமையில் ஐயாயிரம் வீரர்களைத் தஞ்சை நாயக்க மன்னர் அனுப்பிவைத்தார்.

சங்கிலி மன்னன் இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள கோழிக்கோட்டு நகரை ஆண்ட **குஞ்சலிவீரர்கள்** என்பவர்களின் உதவியையும் நாடினான். அவர்களும் ஆறு கப்பல்களில் சங்கிலி மன்னனுக்கு உதவிபுரிய வந்துசேர்ந்தனர். கடல் வழியாகவும் தரை வழியாகவும் போர்த்துக்கீசியப் படைகளும் சிங்களக் கூலிப் படைகளும் யாழ்ப்பாணம் நோக்கி வந்தன.

தமிழரிடையே அன்றும் சில துரோகிகள் இருந்தனர். வன்னிப் பகுதியை ஆண்ட **காக்கை வன்னியன்** என்ற தமிழ் மன்னன் போர்த்துக்கீசியருக்கு உதவிபுரிந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்ட போர்த்துக்கீசியப் படைகள் இரண்டு நிபந்தனைகளைச் சங்கிலி மன்னனுக்கு விதித்தனர். 1. போர்த்துக்கீசியரின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டு கப்பம் கட்டவேண்டும். 2. தமிழ்நாட்டிலிருந்து தளபதி வர்ணகுலத்தான் தலைமையில் வந்துள்ள ஐயாயிரம் வீரர்கள் போர்த்துக்கீசியரிடம் சரணடைய வேண்டும்.

இந்த இரு நிபந்தனைகளை வீர சங்கிலி மன்னன் ஏற்கவில்லை. போர்த்துக்கீசிய சிங்களப் படைகளை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கினான். **வண்ணப்பன்னை** என்ற இடத்தில் பெரும்போர் நடந்தது. முதலில் வந்த சிங்களக் கூலிப் படைகள் படுதோல்வி அடைந்து ஓட்டம்பிடித்தன. போர்த்துக்கீசியப் படைகளுடன் சங்கிலி மன்னன் படைகள் கடும்போர் புரிந்துகொண்டிருந்த வேளையில் துரோகியான காக்கை வன்னியன் ஒரு சூழ்ச்சி செய்தான். சங்கிலி மன்னனின் பக்கம் சேர்ந்து போராட விருப்பம் தெரிவித்தான். இதைக்கண்டு சங்கிலி மன்னன் ஏமாந்தான். தன்னுடன் சேர்ந்து போராட முன்வந்த காக்கை வன்னியனைக் கட்டித் தழுவிப் பாராட்டினான். காக்கை வன்னியனும் அவனுடன் வந்த வீரர்களும் சங்கிலி மன்னனை இறுகப்பிடித்துக் கொண்டனர். உண்மை என்னவென்று தெரிந்து தமிழ்ப்படைகள் தங்கள் மன்னனின் உதவிக்கு வருவதற்கு முன்னதாகவே காக்கை வன்னியன் சங்கிலி மன்னனைச் சிறைப்பிடித்துக்கொண்டுபோய்ப் போர்த்துக்கீசியரிடம் ஒப்படைத்துவிட்டான். இதன்விளைவாக 1619 ம் ஆண்டு ஜூன் மாதம் தமிழீழம் போர்த்துக்கீசியரின் அடிமை நாடாக மாறியது.

சிறைப்பிடிக்கப்பட்ட சங்கிலி மன்னனைப் போர்த்துக்கீசியர் இந்தியாவிலுள்ள **கோவாவுக்குக்** கொண்டு சென்றனர். பிறகு கோவாவில் அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

வீர சங்கிலி மன்னனின் சிலைக்கு முன்னால் நான் நின்றபோது இந்த வரலாற்று நிகழ்ச்சிகளை எனக்கு நண்பர்கள் விளக்கிச் சொன்னார்கள். அன்னிய ஆதிக்கத்திற்கு அடிபணிய மறுத்து வீர சங்கிலி மன்னன் அன்று தொடுத்த சுதந்திரப் போரட்டத்தை இன்று நமது இளைஞர்கள் தொடர்ந்து நடத்துகிறார்கள். இந்தப் போராட்டத்தில் வெற்றிபெறச் சங்கிலி மன்னனின் ஆவி அவர்களுக்குத் துணை நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.





# 54. உடல் உரமும் மன உரமும்

யாழ்ப்பாணத்திற்கு அருகேயுள்ள புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றுக்குப் போனோம். முழுவதுமே அவர்களுடன் தங்குவது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களும் பிறமாவட்டங்களிலிருந்து அகதிகளாக வந்தவர்களுமாக சுமார் 200 பேருக்கு மேல் இந்தப் பயிற்சி முகாமில் பயிற்சி பெறுகிறார்கள். இந்த முகாமின் பயிற்சிப் பொறுப்பாளராக செல்வராஜ் இளங்கோ, பாபு போன்ற துடிப்பான இளைஞர்கள் இருக்கிறார்கள்.

"பயிற்சியாளர்களை எப்படி நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

ஒவ்வொரு பகுதியிலும் எங்களுடைய அரசியல் குழுக்கள் இயங்குகின்றன. அந்தந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு முதலில் அரசியல் பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றோம். அப்போது இளைஞர்களை 6 மாதங்களுக்குக் கண்காணிக்கிறோம். அவர்களிலிருந்து இராணுவப் பயிற்சிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறோம்" என்று கூறினார்கள்.

"பயிற்சி பெற வருகிறவர்கள் எத்தகைய இளைஞர்கள்" என்று நான் கேட்டேன்.

சமுதாயத்திலுள்ள சகல வர்க்க இளைஞர்களும் பயிற்சி பெற வருகிறார்கள் என்றார்கள்.

"எவ்வளவு காலம் பயிற்சி கொடுக்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"சாதாரணமாக 6 மாதங்கள் வரை அளிப்பதுண்டு. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவசர காலமாதலால் ஆறுமாத காலப்பயிற்சியை ஒரே மாதத்தில் அளிக்கிறோம்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

அங்கு நடைபெறும் பயிற்சிகளை நான் பார்த்தேன். மிகக் கடுமையான பயிற்சிகள். காலை 4 மணி முதல் மாலை 6 மணிவரை பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. உணவுக்கான இடைவேளை தவிர வேறு இடைவேளை கிடையாது. ஏணிப் படிகள் போல் அமைக்கப் பட்ட பரணில் தாவியேறி உச்சிக்குப் போய் மடமடவென கீழிறங் குவது; ஆள் உயரச்சுவர் போன்ற அமைப்பைத் தாண்டுவது; உயர மான பார் ஒன்றில் தொங்கிக் கொண்டே செல்வது; இரு உயர்ந்த மரங்களுக்கிடையே கட்டப்பட்டுள்ள கயிற்றைக்கால்களினாலும், கை களினாலும் பிடித்துக் கொண்டே செல்வது; உயரமான மரக் கிளையி லிருந்து தொங்கவிடப்பட்டுள்ள கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலேறி இறங்குதல்; தரையிலிருந்து ஒரு அடி உயரத்திற்குக் கட்டப்பட்டிருக் கும் முள்வேலியில் சிக்காமல் தவழ்ந்து போவது, நெருப்பைத் தாண் டுவது போன்ற கடுமையான பயிற்சிகளைப் புலிகள் பெறுகின்றனர்.

இடையிடையே வகுப்புகளும் நடைபெறுகின்றன. உளவறிதல் போன்றவையும் சொல்லித் தரப்படுகின்றன.

மாலையில் ஆயுதப் பயிற்சியும் நடைபெறுகிறது. மொத்தத்தில் ஆறு மாதத்தில் பெறவேண்டிய பயிற்சியை ஒரே மாதத்தில் அளிப் பதால் சக்கையாகப் பிழிகின்றனர். யாரும் இதைக்கண்டு சோர்ந்து விடுவதில்லை. மாறாக ஊக்கமுடன் பயிற்சி பெறுகின்றனர்.

ஒவ்வொருவரும் தத்தமது குடும்பத்தில் யாரையேனும் இழந்த வராக இருப்பதால் அதை நினைத்து மன உரம் கொள்கின்றனர். தாங்கள் பெறும் இந்தப் பயிற்சி தமது குடும்பத்தையும் நாட்டையும் காக்கவே என்பதை உணர்கின்றனர். பயிற்சி பெற வந்தவர்களுடன் உட்கார்ந்து அவர்கள் சாப்பிடும் உணவையே நானும் உண்டு அவர் களுடன் பேசிக் கொண்டிருந்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. ரொட்டியும், பருப்பும் தான் அன்றையக்காலை உணவு.

முகாமில் 40 வயது மதிக்கத்தக்க ஒருவரைப் பார்த்தேன். ஏற்கெனவே விபத்து ஒன்றில் கால் எலும்பு முறிந்தவர். ஆனாலும் இந்தக் கடுமையான பயிற்சிகளையெல்லாம் அவர் கடும் சிரமத்திற் கிடையே விடாப்பிடியாகச் செய்ததைப் பார்த்தேன். அவரை அழைத்துப் பேசினேன்.

''இந்த இளைஞர்கள் பயிற்சி செய்வது சரி; ஆனால் நடுத்தர வயதுள்ள நீங்கள் இவ்வளவு சிரமத்துடன் பயிற்சியில் சேர்ந்த காரணம் என்ன?'' என்று கேட்டேன்.



சிவநாதன் என்ற அவர் ஒரு கணம் என்னை நிமிர்ந்து பார்த் தார். அவர் விழியோரங்களில் நீர் கோர்த்தது. ''என் வயதான தந்தையைக் கொன்றார்கள். எனது இளைய சகோதரனைச் சிறைப் பிடித்துப் போனார்கள். நிறைமாத கர்ப்பிணியான என் மனைவியை எட்டி உதைத்து இம்சித்தார்கள். என்னைக் குற்றுயிரும் குறையுயிரு மாகப் போட்டு விட்டுப் போனார்கள். நான் இறந்து விட்டதாக நினைத்து விட்டார்கள். இல்லையென்றால் என்னையும் வேலை முடித்திருப்பார்கள். எங்கள் குடும்பம் சின்னாபின்னமானதைப் போல எங்கள் ஊரே நாசமாகி விட்டது, நானும் என் மனைவியும் வயதான தாயும் எப்படியோ தப்பிப் பிழைத்தோம். என் மனைவியையும் தாயையும் உறவினர்கள் வீட்டில் விட்டுவிட்டு நான் இங்கு வந்திருக் கிறேன். எங்களுக்கென்று ஒரு நாடு அமைந்தாலொழிய எமது மக்களுக்கு வாழ்வில்லை என்பதை உணர்ந்த நிலையில் எங்களுக்கு இதைத் தவிர வேறு வழியில்லை'' என்றார்.

இவரைப் போலவே ஒவ்வொருவரின் கதையும் சோகமயமானது அவர்கள் ஆயுதம் தூக்கியிருக்கிறார்கள் என்றால் அது மற்றவர்களைக் கொல்ல அல்ல. தாங்கள் வாழ்வதற்காக ஆயுதம் தூக்கியிருக்கிறார்கள். இதை உலகம் உணர வேண்டும்.

காலை உணவுக்குப் பின்னால் அவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. நான் சென்றிருந்த அன்று உளவறிதல் பற்றிய வகுப்பு நடந்தது. உளவறிதலின் பல்வேறு முறைகள் அவர்களுக்கு விளக்கப்பட்டன. உளவறிதலில் ஒருவர் அறிந்து வந்ததை இன்னொரு வரைவிட்டு உறுதி செய்துகொள்ள வேண்டும். இப்படிப்பல கோணங் களில் கிடைக்கும் முடிவை வைத்துத்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அந்த வகுப்பில் என்னையும் பேச அழைத்தபோது நான் வள்ளுவர் கூறிய ஒரு குறளை அவர்களுக்குச் சொன்னேன். ஒரு ஒற்றன் அறிந்து வந்து தெரிவித்த செய்தியை, மற்றொரு ஒற்றனினால் கேட்டுவரச் செய்து ஒப்புமை கண்டபின் உண்மையைக் கொள்ளவேண்டும் என்ற பொருளில்

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

என வள்ளுவர் கூறியிருப்பதைக் கூறினேன். இது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பயிற்சிப் பொறுப்பாளரான செல்வராஜ் சொன்னார். ''ஆங்கில நூல்களிலிருந்து தான் நாங்கள் எங்கள் பயிற்சிக்கான விஷயங்களை இதுவரை எடுத்து வந்தோம். தமிழ் இலக்கியங்களிலும் எங்களுக்குத் தேவையான விஷயங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் எடுத்துக் காட்டி விட்டீர்கள். இனி நாங்கள் அவற்றைப் பயன்படுத்துவோம்'' என்று கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## 55. புலிகளின் ஒழுக்க நெறி

புலிகளின் முகாம்களில் மிகக்கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மது, சிகரெட் போன்றவை அறவே தவிர்க்கப்பட்டுள்ளன. மேற்கத்தியப்பண்பாடுகள் பரவியுள்ள ஈழநாட்டில் மது அருந்துவது சர்வ சாதாரணமாகும். ஆனால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் மது அருந்ாதவர்கள் மட்டுமல்ல மது குடிப்பதை எதிர்த்துப்பிரச்சாரம் செய்யும் காந்தீய வாதிகளாகவும் இருக்கிறார்கள். சிகரெட் பழக்கம் உள்ளவர்களைப் பயிற்சிக் காலத்தில் சிகரெட் குடிக்க அனுமதிப்பதில்லை. பயிற்சிக்காலம் முடிந்த பிறகு உடல் நிலை காரணங்களுக்காக ஒரு சிலருக்கு மட்டும் சிகரெட் புகைக்க விசேஷ அனுமதி அளிக்கப்படுகிறது அவர்களும் ஒரு நாளைக்கு இரண்டு சிகரெட்களுக்கு மேல் புகைக்கக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளனர். ஆனால் புலிகளின் இயக்கத்தில் சேர்ந்த பிறகு பெரும்பாலோர் சிகரெட் குடிப்பதையே நிறுத்திவிட்டனர்.

பயிற்சி முகாமில் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் ஒரே மாதிரியான உணவு அனைவருக்கும் அளிக்கப்படுகிறது, தளபதிகளுக்கு வேறு, படை வீரர்களுக்கு வேறு என்று வித்தியாசம் காட்டப்படுவதில்லை. உணவையும் அவர்களுக்குள்ளேயே முறை வைத்துச் சமைத்துக் கொள்கிறார்கள்.

பயிற்சிமுகாம்களில் மருத்துவமனைகளும் உள்ளன. அவற்றையும் புலிகளே பொறுப்பேற்று நடத்துகிறார்கள். முகாம்களிலுள்ள வீரர்களுக்கு உடைகளும் அப்படியே ஏற்றத்தாழ்வு இல்லாமல் அமைந்திருக்கின்றன. களத்திற்குச் செல்லும் போது மட்டும் புலிகளுக்குரிய



இராணுவ உடையைத் தருகிறார்கள். மற்ற நேரங்களில் கைலி கட்டிக் கொண்டு நடமாடுகிறார்கள்.

முகாம்களில் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் காவல் வேலைக்குக் கட்டாயமாகச்செல்ல வேண்டும். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை காவலர்கள் மாற்றப்படுகிறார்கள்.

முகாம்களில் உள்ளவர்களின் பொழுது போக்கிற்காகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் புலிகளே பங்கேற்கிறார்கள். சிங்கள இராணுவத்தின் கொடுமைகள் குறித்தும், புலிகளின் வீரஞ் செறிந்த போராட்டம் குறித்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அத்தகைய நிகழ்ச்சிகள் ஒன்றினை நான் பார்த்தேன். பார்ப்போரை உணர்ச்சி கொள்ள வைக்கும் நாடகம் அது.

புலிகளின் முகாம்கள் பலவற்றில் நான் தங்கியிருந்தபோது பல விஷயங்களைக் கவனித்தேன். முகாம்களை வெகு சுத்தமாக வைத்துக் கொள்கிறார்கள். எப்போதும் சுகாதார உணர்வுடனேயே செயல்படுகிறார்கள். முகாம்களைப் பெருக்குதல், சுத்தம் செய்தல், தண்ணீர் கொண்டு வருதல், சமையல் செய்தல் போன்ற பல காரியங்களைத் தங்களுக்குள்ளாகவே முறை வைத்துச் செய்து கொள்கிறார்கள்.

இயக்கத்தில் சேருவதற்கு முன்பு வரை அவர்கள் பொறுப்பறியாத இளைஞர்களாக இருந்திருக்கலாம். ஆனால் இயக்கத்தில் சேர்ந்த பிறகு கடமையுணர்வு மிக்கவர்களாக எந்தக் காரியத்தையும் நேர்த்தியுடன் செய்பவர்களாக அவர்கள் மாறி விடுகிறார்கள்.

ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கான பயிற்சிகளைப் பெறுவதோடு மட்டும் அவர்கள் நிற்கவில்லை. சமையல் செய்வதிலிருந்து வேன்கள், மோட்டார் சைக்கிள் ஓட்டுவது அவற்றைப் பழுது பார்ப்பது வரை சகல காரியங்களையும் அவர்கள் செய்கிறார்கள்.

### புலிகளின் நூற்கள்

புலிகளின் பயிற்சி முகாம்களில் பல பயிற்சி நூற்கள் வைக்கப்பட்டிருந்தன. **'புலிகளின் போர்க்குரல்'. 'கைத் துப்பாக்கியால் சுடுவது எப்படி', 'உயிர்ப்பாதுகாப்பு', 'நீர் அடியில் நீச்சல்', குண்டு வீச்சிலிருந்து தப்புவது எப்படி', 'பேரரில் கையாளப்பட வேண்டிய முறைகள்'** போன்ற பல நூல்களைப் பார்த்தேன். நவீனப்போர் முறைகளைப் பற்றிய நூல்கள் ஆங்கிலத்தில்தான் உண்டு.
தமிழில் அத்தகைய நூல்கள் அறவே இல்லை. முதல் நூலாகத்தமிழில் அத்தகைய நூல்களைப் புலிகளின் முகாமில்தான் பார்த்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் படிக்க வேண்டிய நூல்களில் ஒன்று என்னைக் கவர்ந்தது. ''போரில் கையாளப்பட வேண்டிய ஒழுக்க விதிகள்'' என்ற தலைப்புடன் விளங்கிய அந்தச் சிறு நூலை எடுத்துப் படித்தேன். சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இந்த நூலினை வெளியிட்டுள்ளது. உண்மையானபோர்வீரன் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை அந்த நூல் விவரிக்கிறது. போர் வீரர்களுடன் மட்டுமே போரிட வேண்டும் போருக்குரிய இலக்குகளை மட்டுமே தாக்க வேண்டும். குடிமக்களையும் மற்றும் அவர்களுடைய உடைமைகளையும் தாக்கக்கூடாது. குறிக்கோளின் தேவைக்கு மேற்படாத சேதங்களை மட்டுமே ஏற்படுத்த வேண்டும்''ஆகிய உயர்ந்த கோட்பாடுகளைச்சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தியிருக்கிறது. இதை உலகிலுள்ள 161 நாடுகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச்சர்வதேச ஒழுக்க விதிகள் புலிகளுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அவற்றை அவர்கள் கடைப் பிடிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்படுகின்றது. பட விளக்கங்களுடன் கூடிய இந்தச் சிறு நூலைப் படித்து நான் பெருமிதமடைந்தேன். சர்வதேச ஒழுக்க நியதிகளை ஏற்றுக் கொண்டு கட்டுப்பாடாக இயங்கும் ஒரு இராணுவமாக விடுதலைப்புலிகளின் இயக்கம் விளங்குவது ஒவ்வொரு தமிழனுக்கும் பெருமையளிக்கும் விஷயமாகும்.

அதே வேளையில் சர்வதேச ஒழுக்க விதிகளை முற்றிலும் மீறுகிற ஒரு இராணுவமாகச்சிங்கள இராணுவம் விளங்குகிறது என்பதையும் நான் பார்த்தேன்.

ஆனால் சர்வதேச நியதிகளை மீறி வருகிற சிங்கள இராணுவம் சர்வதேச நியதிகளை மதிக்கிற புலிகளைப் பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டுவது வேடிக்கையானது.

சிங்கள இராணுவத்தை எதிர்த்துப்போராடும் புலிகள் எந்த ஒரு கட்டத்திலும் சிங்கள மக்களை எதிர்த்துப் போராடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களைச்சிங்கள இராணுவம் கொன்றுகுவித்து வருகிறது. விமானத் தாக்குதல் நடத்தித்தமிழர்களின் ஊர்களையும், தமிழர்களையும் அழிக்கிறது. ஆனாலும் கூடச்சிங்களக் கிராமங்கள் மீதோ சிங்களப்பொதுமக்கள்மீதோ விடுதலைப் புலிகள் ஒருபோதும் தாக்குதல் தொடுத்ததில்லை.

விடுதலைப் புலிகளிடம் உயிரோடுபிடிபடும் சிங்களச் சிப்பாய்களையும் அவர்கள் மன்னிக்கின்றனர். தங்களுடைய போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை விளக்கி அவர்களை



விட்டுவிடுகின்றனர். இதுகுறித்துப்புலிகளால் வெளியிடப்படும் 'களத்தில்' என்ற ஏட்டில் ஜூன் 1985-ம் இதழில் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

''நாம் மனித நேயத்துடனே போராடுகிறோம் என்பதை எம் மக்கள் நன்கறிவர். எம்மக்கள்மீதும் போராளிகள்மீதும் எம் எதிரியால் கட்டவிழ்த்துவிடப்படும் கொடூரங்கள் எமது உணர்வுகளைக் கடுமையாகப் பாதிக்கின்றன. ஆயினும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது மனிதாபிமான உணர்வுகளைக்கைவிடாமல் எமது போராட்டத்தை நெறிபடுத்தி முன்னெடுக்கிறோம்.

நாம் யுத்தத்தை விரும்பி ஏற்றுக்கொண்டவர்களல்லர். இரத்தம் தோய்ந்த இம்மண்ணும் எம் மக்கள்மீது திணிக்கப்பட்ட கோரங்களும் கொடுமைகளுமே எம்மைப்போராட்டத்திற்குக் கொண்டு வந்தன. இவற்றிலிருந்து எம்மக்களைப்பாதுகாக்கவே நாம் ஆயுதம் ஏந்தினோம். நாம் துப்பாக்கி ஏந்தியது யாரையும் அழிக்கவல்ல, எம்மீது திணிக்கப்பட்ட அடக்குமுறையிலிருந்து எம் இனத்தைப்பாதுகாக்கவே.

எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல, எம் மக்கள் பாதுகாப்பாகவும் சுபிட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கானதே எமது போராட்டமாகும்.''

இதைத் தவிர விடுதலைப் புலிகளுக்காகவே சில பத்திரிகைகள் விசேஷமாக வெளியிடப்படுகின்றன. '**விடுதலைப்புலிகள்**', '**களத்தில்**' போன்ற பத்திரிகைகள் வெளிவருகின்றன. **விடுதலைப்புலிகள்** என்ற பத்திரிகை பொதுவாக விடுதலைப் புலிகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துத்தருகின்றது. **களத்தில்** என்ற பத்திரிகை அங்கு நடைபெறும் இராணுவ அடக்குமுறைகள் அதற்கு எதிரான மக்களின் போராட்டங்கள் போன்றவற்றைத் தொகுத்துத்தருகின்றன.

பயிற்சி முகாம்களில் ஆயுதப் பயிற்சி மட்டும் அளிக்கப்படுவதில்லை. அரசியல் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இந்த நூல்களையும், பத்திரிகைகளையும் அவர்கள் படிக்கிறார்கள். எனவே விஷய ஞானம் நிறைந்தவர்களாகப்புலிகள் இருக்கிறார்கள். பல முகாம்களில் இருந்தவர்களுடன் நான் விவாதித்த போது இது எனக்குப் புரிந்தது.

முகாம்களில் பயிற்சி முடிந்தவுடன் பயிற்சியாளர்கள் அவரவர் ஊர்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். அவரவர்கள் கிராமங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிலிருந்து கொண்டு செயல்படுகிறார்கள். அவர்களுக்குரிய வேலைத் திட்டங்களும் அவ்வப்போது அவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. தேவைப்படும்போது அவர்களை இயக்கம் திரும்ப அழைத்துக் கொள் கிறது. பயிற்சி பெற்றவர்கள் முழு நேரமும் இயக்கத்திற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள விரும்பினாலும் ஆயுதப் பற்றாக் குறை போன்ற பல காரணங்களினால் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை.

பயிற்சி பெற்றவர்கள் தங்கள் கிராமங்களுக்குத்திரும்பச் செல்லும் போது அங்குள்ள மக்கள் புலிகளின் இயக்கத்தைப் பற்றி முழுமை யாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஒழுங்கும் கட்டுப் பாடும் தியாக உணர்வும் நிறைந்த இயக்கம் புலிகளின் இயக்கமே என்பதை மக்கள் தெரிந்து கொண்டு அவர்களுக்கு மேலும் மேலும் ஆதரவு தர முன்வருகிறார்கள். மக்களின் மன உறுதி கெடாமல் இருக்கவும் அவர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்படவும் பயிற்சி யாளர்கள் பேருதவி புரிகிறார்கள்.

Liberation Tigers Of
TAMIL EELAM






## 56. புலிகளின் சமுதாயப்பணி

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதோடு தங்கள் கடமை தீர்ந்துவிட்டதெனப்புலிகள் ஒருபோதும் நினைத்ததில்லை. எதிரிகளை எதிர்த்துப் போராடுவது எவ்வளவு முக்கியமோ அதைப் போன்ற முக்கியமான கடமைகளாகச்சமுதாயப்பணிகளையும் கருதுகிறார்கள். பல்வேறு சமூகத் தொண்டுகளிலும் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டுவரு கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நான் தங்கியிருந்தபோது அங்குப்பல சாலைகளையும் செப்பனிடும் வேலைகளைப் போராளிகள் மேற்கொண் டிருப்பதை நான் பார்த்தேன். ஒவ்வொரு இயக்கமும் ஆளுக்கொரு சாலையாக எடுத்துக்கொண்டு அந்தச்சாலைகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் போலவே கிராமப்புறங்களில் விவசா யக் குளங்களையும் விவசாயக் கால்வாய்களையும் அவர்கள் செப்ப னிட்டுக்கொண்டிருந்த காட்சிகளை நானே நேரில் பார்த்தேன்.

அகதிகளின் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குச் சத்தற்ற உணவு வழங்கப்படுவதை அறிந்து விடுதலைப்புலிகள் குளங்களில் பெருமளவில் மீன்பிடித்து முகாம்களிலுள்ளவர்களுக்கு வழங்குகிறார்கள் அதைப் போலவே முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள பல்வேறு அகதிகள் முகாம்களிலும் யாழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் நிவார ணப்பணிகளை மேற்கொண்டிருப்பதையும் நான் பார்த்தேன்.

சிங்கள இராணுவத்தின் வெறித் தாக்குதல்களுக்கு இரையாகி நாசமாகிக் கிடந்தவீடுகளுக்குப்பலமாதங்களுக்குப்பின்னால் மக்கள் திரும்பி வந்தபோது அவர்களுக்கு உதவியாக அந்த வீடுகளைச்சீரமைக்கும் பணியிலும் இளைஞர்கள் ஈடுபட்டிருப்பதை நான் கண்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிராமம்தோறும் அகதிகள் புனர்வாழ்வு சபையைப் புலிகள் அமைத்திருப்பதை நான் பார்த்தேன். நாள்தோறும் பெருகிவரும் அகதிகளை ஒரு இடத்தில் வைத்துப் பராமரிப்பது என்பது சிரமமாகும். அரசாங்கமும் அவர்களுக்கு உதவி செய்யாத நிலையில் ஒரே இடத்தில் பல்லாயிரக்கணக்கான அகதிகள் குவிக்கப்பட்டால் மக்களுக்கும் அது பெரும் சுமையாக விளங்கும் என்று கருதியதனால் கிராமம் கிராமமாக அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்புகளைப் புலிகள் நிறுவியிருக்கிறார்கள். அந்தந்தக்கிராம மக்களின் உதவியுடன் அந்த அகதிகளுக்குப் புனர்வாழ்வு தருகிறார்கள். இத்தகைய பணியில் ஈடுபட்டுள்ள ராஜ்குமார், சிவம், பாஸ்கர், சண்முகராஜா, கந்தராஜா போன்ற சிலரை நான் சந்தித்தேன். கிராமம்தோறும் உள்ள அகதிகள் புனர்வாழ்வு சபை பற்றிய குறிப்புகளையும் இந்தச் சபையின் பொறுப்பிலுள்ள அகதிகள் பட்டியலையும் இவர்கள் என்னிடம் காட்டினார்கள். ஒவ்வொரு அகதியைப் பற்றிய முழு விவரங்களும் இவர்களிடம் உள்ளன. எந்த ஊரில் வாழ்ந்தார்கள், என்ன தொழில் செய்தார்கள், குடும்பத்தில் எத்தனைப்பேர், இப்போது எங்கேஇருக்கிறார்கள் என்பது போன்ற சகல விவரங்களும் இந்தப்பட்டியலில் உள்ளன. அரசாங்கம் கூட இவ்வளவு கச்சிதமான புள்ளிவிவரங்களைக் கொடுக்க முடியாது. அவர்களின் தொண்டு தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்றேன்.

## சமுதாய விழாக்கள்

தமிழர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம், ருதுசாந்தி, குழந்தைகள் பிறந்த விழாக்கள், இறுதிச் சடங்குகள் போன்றவற்றை எத்தகைய ஆடம்பரமும் இல்லாமல் சிக்கனமாக நடத்தவேண்டுமென்ற பிரச்சாரத்தினைப்புலிகள் இயக்கம் தீவிரமாக நடத்துகிறது. நாடு எங்கும் நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போது ஆடம்பரமாக விழாக்களை நடத்துவது மிகப்பெரிய தேசத்துரோகமாகும் என்பதை மக்களுக்கு அவர்கள் உணர்த்துகிறார்கள்.

இதைப்போலவே சீதனமுறையைக்கடுமையாக எதிர்த்துப்பிரச்சாரம் செய்கிறார்கள். இதில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழர்கள் சமுதாயத்தைப் பிடித்துள்ள ஒரு சாபக்கேடாக சீதனமுறையை வர்ணிக்கிறார்கள்.

## கருத்தடை

கருத்தடை செய்வதை எதிர்த்து புலிகள் பிரச்சாரம் செய்கின்றனர். போரின் காரணமாக தமிழர்களின் எண்ணிக்கை குறைவதால் அதிகப்பிள்ளைகள் பெறுமாறு பிரச்சாரம் செய்யப்படுகிறது.



'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமலர்', 'துக்ளக்' போன்ற இந்தியப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் போராளிகளுக்கு எதிரான செய்திகளைச் சிங்கள அரசின் வானொலியும், தொலைக்காட்சியும், சிங்கள அரசுப்பத்திரிகைகளும் பிரமாதமாக வெளியிட்டு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்கின்றனர்.

## சுவரொட்டிகள்

தமிழ்நாட்டில் திரும்பிய பக்கம் எல்லாம் அரைகுறை நிர்வாண சினிமாச்சுவரொட்டிகளையும், அரசியல் தலைவர்களின் வரவேற்பு சுவரொட்டிகளையும் பார்த்து பார்த்துச்சலித்துப்போன எனது கண்களுக்குத்தமிழீழத்தில் நான் சுற்றுப்பயணம் செய்த சகல பகுதிகளிலும் இத்தகைய சுவரொட்டிகள் எதுவுமே இல்லாதது ஆச்சரியமாகவே இருந்தது. மருந்துக்குக்கூட ஒரு சினிமா சுவரொட்டியை நான் எந்த இடத்திலும் பார்க்கவில்லை.

சிங்கள இராணுவத்தை எதிர்த்துப் போராடி வீரமரணம் அடைந்த 'தியாக சீலருக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளும், கசிப்பு எனப்படும் கள்ளச் சாராயத்தை எதிர்க்கும் சுவரொட்டிகளும், சுதேசிப் பொருட்களையே உபயோகியுங்கள்'' என மக்களை வேண்டும் சுவரொட்டிகளும் ஆங்காங்கே தென்பட்டனவே தவிர எந்த ஒரு இடத்திலும் அருவருக்கத்தக்க சுவரொட்டி ஒன்றைக்கூட நான் பார்க்கவில்லை.

**தமிழகத்தில் பரவியுள்ள அரசியல்-கலாச்சாரச் சீரழிவு தமிழீழத்தை எட்டவில்லை என்பதை அறிந்தபோது மனதிற்கு ஆறுதலாக இருந்தது. வாழ்வானாலும் சாவானாலும் வரவேற்பானாலும் எதிர்ப்பானாலும் சுய கட்சி விளம்பரங்களானாலும், மாற்றுக் கட்சியைத் தாக்குவதானாலும் ஆள் உயரச்சுவரொட்டிகள் ஒட்டித்தமிழ்நாட்டின் அரசியலையே சுவரொட்டி அரசியலாக்கிச் சீரழிய வைத்துள்ள நோய் நல்லவேளையாகக் கடல் தாண்டி ஈழத்தில் பரவவில்லை.**

## கசிப்பு

நாங்கள் செல்லுகிற வழியில் ஓரிடத்தில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். 'கசிப்பு கொடிய நஞ்சு. நமது சமுதாயத்தைச் சீரழிக்கிறது. அருந்தாதீர்' என எழுதப்பட்டு இருந்தது. பின்னணியில் ஒரு மது பாட்டில் காணப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தச் சுவரொட்டியைப் பற்றித் தளபதி மாத்தையா எனக்கு விளக்கினார். கள்ளச் சாராயத்தை அங்குக் கசிப்பு என்று அழைக்கின்றனர். கள்ளச் சாராயம் காய்ச்சுவதை புலிகள் இயக்கம் அறவே தடை செய்துள்ளது என்று கூறிய தளபதி மாத்தயா மேலும் தொடர்ந்தார். "இதை அருந்துவதால் எங்கள் மக்கள் உடல் நலம் கெடுகிறது. சக்தியை இழந்து பலவீனமாகிறார்கள். எதிரியை எதிர்த்துப் போராடப் பலம் தேவைப்படுகிற வேளையில் எமது மக்கள் பலவீனமாவதை நாங்கள் விரும்பவில்லை. எனவே கள்ளச் சாராயம் உற்பத்தி செய்வதையோ, குடிப்பதையோ நாங்கள் அனுமதிப்பதில்லை எனவே கள்ளச்சாரய விஷயத்தில் மிகக்கடுமையாக இருக்கிறோம்" என்றார்.

"கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் விற்பதையும் எப்படித் தடுக்கிறீர்கள்" என்றேன்.

"தர்மபுரம் என்ற ஊரில் 680 பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருநாள் நாங்கள் அங்குச் சென்று கள்ளச்சாராய உற்பத்தி சாதனங்கள் அத்தனையையும் அழித்தோம். இனி இந்தத் தொழிலில் ஈடுபட்டால் கடுமையான தண்டனை வழங்குவோம் என எச்சரித்தோம். இத்துடன் நாங்கள் நின்று விடவில்லை. அவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுத்தோம். அவர்களுடைய விவசாய நிலங்களை டிராக்டர் மூலம் உழுது கொடுத்தோம். விதை நெல் உரம் போன்றவற்றை இலவசமாக வழங்கினோம். மாடுகள், கோழிகள் ஆகியவற்றையும் அவர்களுக்கு வழங்கி அவர்களின் புனர்வாழ்வுக்கு வழி செய்துள்ளோம்" என்று அவர் சொன்னார்.

தமிழ் நாட்டில் கள்ளச் சாராயத்தை ஒழிக்கவே முடியாமல் போனதன் காரணம் எனக்குப் புரிந்தது. போலீஸ்படையில் தாண்டவமாடும்இலஞ்ச ஊழல் இதற்கு முதல் காரணம். இரண்டாவதாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேறு தொழில் செய்து வாழ வழி ஏற்படுத்தாமல் அவர்களைத் தண்டிப்பதனாலோ அவர்களின் உற்பத்தி சாதனங்களை அழிப்பதனாலோ ஏந்தப் பயனுமில்லை. தண்டனைக் காலம் முடிந்து அவர்கள் வெளியே வந்தவுடன் மீண்டும் இந்தத் தொழிலிலேயே ஈடுபடுகிறார்கள். ஆனால் ஈழநாட்டில் இந்தத் தீமையை ஒழிப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றிருப்பதின் இரகசியத்தை நான் புரிந்து கொண்டு அவர்களை மனமாரப் பாராட்டினேன். இதைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டே நாங்கள் பயணம் செய்தோம். அன்று இரவு நாங்கள் 'உருத்திரபுரம்' என்ற ஊரில் ஒரு வீட்டில் தங்கினோம். அந்தக் குடும்பத்தினர்



எங்களை மிகவும் அன்பாக உபசரித்தனர். அந்தக் குடும்பத் தலைவி விருந்தோம்பலில் மிகச் சிறந்தவராக இருந்தார். புலிப்படைத் தோழர்களை வற்புறுத்தி உபசரித்து அளவுக்கு அதிகமாகவே சாப்பிட வைத்தார்.

பையன்களும் "அக்கா! அக்கா!" என உரிமை கொண்டாடி வேண்டியதைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்கள்.

உணவு விஷயத்தில் நான் உபயோகம் இல்லாதவன். நான் சாப்பிடும் அளவு எப்போதும் குறைவானதே. இத்தனை நாள் பழக்கத்தில் இதை என்னுடன் வரும் புலிப்படைத் தோழர்கள் நன்கு தெரிந்து கொண்டிருந்தனர். பல இடங்களில் சாப்பிடும் போது அன்பின் மிகுதியால் அவர்கள் அதிகமான உணவை வைக்கும் போது நான் திணறுவேன், திண்டாடுவேன். அப்போதெல்லாம் என் உதவிக்குச் சாந்தன் என்ற தோழர்தான் வருவார். "அக்கா! அக்கா! அண்ணாவைத் தொந்தரவு செய்யாதீர்கள். அந்தத் தட்டை இப்படிக்கொண்டு வாருங்கள். அண்ணாவின் சிரமத்தை நான் குறைக்கிறேன்" என்று சொல்லி அவர் வாங்கிக் கொள்வார். இதைக் கேட்டு எல்லோரும் சிரிப்பார்கள். பெரிய இக்கட்டிலிருந்து நானும் விடுபடுவேன்.


ஒவ்வொருமுறையும் சாப்பிடும்போது சாந்தனைத் தேடிப்பிடித்துப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொள்வேன். மற்றத்தோழர்கள் சாந்தனை இதற்காக மிகவும் கேலி செய்வார்கள். ஆனாலும் சாந்தன் என்ற அந்த இளைஞன் எவ்வளவு பேர் கேலி செய்தாலும் கொஞ்சம்கூடக் கோபமடையவில்லை. சிரித்த முகத்துடன் அவற்றை ஏற்றுக்கொள்வான்.

சாப்பிடுவதில் எப்படிச் சூரனோ அதைப்போலக் காவல்புரியும் வேலையிலும் சாந்தன் ஒரு வீரன். என்னதான் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் பேசிக்கொண்டிருந்தாலும் அவனுடைய கைகள் துப்பாக்கியை ஏந்தியவண்ணம் தயார் நிலையில் இருக்கும். அவனுடைய கண்கள் நாலாபுறமும் எச்சரிக்கையாகச் சுழன்றுகொண்டு இருக்கும். சில நேரங்களில் கூட்டங்களுக்கு நடுவே நான் சிக்கிக்கொண்டு பேசும்போதும் அல்லது மக்களால் நெருக்கப்படும்போதும் சாந்தன் மிக எச்சரிக்கையாக என் அருகில் நின்றுகொண்டேயிருப்பான். என்னுடன் வந்த தோழர்கள் அனைவருமே சாந்தனைப் போன்ற திறமைசாலிகள்தாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 57. புலிகளின் குடும்பங்கள்

விடுதலைப் புலிகளின் இயக்கத் தோழர்களின் வீடுகளுக்குச் சென்று அக்குடும்பங்களின் சூழலை ஆராய வேண்டும் என விரும்பினேன். நண்பர்கள் என் விருப்பம் நிறைவேற உதவினார்கள்.

நல்ல வசதிமிக்க குடும்பங்கள், மிக ஏழைக் குடும்பங்கள், நடுத்தரக் குடும்பங்கள் எனச்சமுதாயத்தின் பல தட்டுகளைச் சேர்ந்த குடும்பங்களை நான் சந்தித்தேன். விடுதலைப் புலிகளின் வீடுகளுக்கு நான் சென்றபோது சம்பந்தப்பட்ட தோழர்கள் என்னுடன் இருந்தபோதிலும் அவர்கள் தங்கள் வீடுகளுக்கு வரவில்லை. நான் அழைத்தபோதுகூட சிரித்துக்கொண்டே நழுவிவிட்டார்கள். குடும்பங்களை அவர்கள் நேசித்தாலும் தங்கள் நாட்டை அதற்கு மேலாக நேசிப்பதால் குடும்பங்களை மறந்து செயல்படுகிறார்கள்.

தோழர் பொட்டுவுடன் யாழ்ப் பல்கலைக்கழகம் சென்றபோது அங்கிருந்த மாணவ, மாணவிகள் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அவர்களில் ஒரு மாணவியைப் பொட்டு சுட்டிக்காட்டி "அண்ணா இது என் தங்கை" என்றார். அவளும் அவரைப் பார்த்துச் சிரித்தாள். அவ்வளவுதான் அதற்குமேல் பொட்டு எதுவும் அவளுடன் பேசவில்லை. குடும்பநலன் குறித்து விசாரிக்கவில்லை. என்னைக் காவல்புரியும் வேலையில் கவனமாக இருந்தாரே தவிர தங்கையைக் கண்டவுடன் மனம் நெகிழ்ந்துவிடவில்லை. அவரின் மனஉறுதி என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

காசி என்ற தோழரின் வீட்டுக்கு நான் சென்றபோது அவரின் பெற்றோர்களும் சகோதர, சகோதரிகளும் அன்பொழுக என்னை



வரவேற்றார்கள். காசியின் சகோதரியின் குழந்தைகளுடன் நான் பேசி மகிழ்ந்தேன். அந்தக் குழந்தைகளிடம் "உங்கள் மாமா எங்கே?" என்று கேட்டேன். "மாமா சிங்களவர்களுடன் சண்டைபோடப் போயிருக்கிறார்" என்று மழலை மொழியில் பெருமிதத்துடன் அக்குழந்தைகள் கூறின.

காசியின் பெற்றோர்களும் தங்கள் புதல்வன் புலிப்படையில் இருப்பது குறித்துப் பெருமிதத்தோடு இருந்ததையும் நான் பார்த்தேன். உள்ளுக்குள் அவர்களுக்கு ஏக்கமிருந்தாலும் அதை அவர்கள் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

அதைப் போலவே பரம ஏழைக் குடும்பங்களிலிருந்தும் நிறைய இளைஞர்கள் புலிப்படையில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வீடுகளுக்கும் நான் போனேன். வறுமை வாட்டிடும் அந்த நிலையில்கூட, அந்தக் குடும்பத்தினர் தங்களின் புதல்வர்களைக் குறித்துப் பெருமைப்படுகிறார்களே தவிர வருத்தப்படவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முக்கியப்பொறுப்பு வகிக்கும் திரு. சுப்ரமணியம் அவர்களுடைய ஏழைத்தாயையும், சகோதரரையும் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பக்தி சிரத்தையுள்ள அந்தப் பெண்மணியை நான் பார்த்தபோது என்னுடைய கண்கள் குளமாயின. திரு. சுப்ரமணியத்தின் தந்தை நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் இருந்தார். திரு. சுப்ரமணியத்தின் சகோதரர் ஒருவரின் வருமானத்தில் அந்தப்பெரிய குடும்பம் வாழவேண்டிய நிலைமையில் உள்ளது. அவரின் அடுத்த தங்கைகள் பள்ளிப்பருவத்தில் உள்ளவர்கள். ஐந்தாண்டுகளுக்கு முன்னால் வீட்டைவிட்டு வெளியேறிய திரு. சுப்ரமணியம் இன்னும் வீடு திரும்பவில்லை. புலிப்படை இயக்கத்தில் சேர்ந்து அவர் ஆற்றிவரும் அரிய தொண்டுகள் பற்றிய செய்திகள் மட்டும் அவ்வப்போது இக்குடும்பத்தினருக்கு கிடைத்து வருகின்றன. இடையிடையே இராணுவத்தினரின் தொல்லைகள் வேறு அந்த குடும்பத்தை வாட்டின. ஆனாலும் அவர்கள் மனம் கலங்கவில்லை.

தம் விழிகளில் பொங்கும் நீரைக் கட்டுப்படுத்திக்கொண்டு அந்த ஏழைத்தாய் என்னிடம் பின்வருமாறு சொன்னார்.

"அய்யா! என்மகன் எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும். அவன் சேர்ந்திருக்கும் இயக்கத்திற்கும் எங்கள் நாட்டிற்கும் அவன் பெருமை தேடிக்கொடுத்தால்போதும். அதைத் தவிர எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். இதைமட்டும் அவனிடம் நீங்கள் சொல்லி விடுங்கள்" என்று அவர் நாத்தழுதழுக்கக் கூறியபோது என் விழிகளிலும் நீர் பெருகிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilerangam.net

அந்தத்தாயுடன் உட்கார்ந்து ஒரு புகைப்படம் எடுத்து அதைக் கொண்டுவந்து திரு. சுப்ரமணியம் அவர்களிடம் கொடுத்தபோது அவர் நெகிழ்ந்துபோனார். ஆனாலும் தன்னுடைய மனநெகிழ்ச்சியை அவர் வெளியில் காட்டிக்கொள்ளாததைக்கண்டு நான் மனத்திற்குள்ளாகவே அவரைப் பாராட்டினேன்.

வசதிமிக்க குடும்பங்களிலிருந்தும், வசதியில்லாத குடும்பங்களிலிருந்தும், தீவிர சைவக் குடும்பங்களிலிருந்தும் ஆழ்ந்த மதப்பற்றுக் கொண்ட கிறிஸ்த்துவக்குடும்பங்களிலிருந்தும் இஸ்லாமிய நெறியை விட்டு அணுவளவும் விலகாத முஸ்லீம் குடும்பங்களிலிருந்தும் ஏராளமான இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து அதற்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்திருக்கிறார்கள். எந்தகைய குடும்பச்சூழ்நிலைகளில் இவர்கள் பிறந்து வளர்ந்திருந்தாலும் இயக்கத்தில் சேர்ந்த பிறகு ஏற்றத் தாழ்வு உணர்வுகள் இல்லாமல் சரிசமமாகப் பழகிப்புதிய மனிதர்களாக அவர்கள் உருவாகி வருவதை நேரில் பார்த்து வியந்தேன். ஒரு புதிய புரட்சிகரமான தலைமுறை, எதிர்காலத்தில் தமிழீழத்திற்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்களுக்கு வழி காட்டக் கூடிய தலைமுறை சிறந்த முறையில் உருவாகி வருவதைக் கண்டு நான் பெருமைப்பட்டேன்.







## 58. ஒற்றர்கள் ! ஜாக்கிரதை

தமிழீழத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தை முனைப்புடன் முறைப்படுத்தி முன்நடத்திச் செல்லத் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட பல ஸ்தாபனங்களில் **''தமிழீழ ஆய்வு நிறுவனமும்''** ஒன்றாகும். போராட்டக்காலத்திலும் அதற்குப்பின்னர் நாட்டின் நிர்மாண காலக்கட்டத்திலும் எழக்கூடிய பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாகச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை ஆய்வு செய்து அமல் நடத்துவது இந்த நிறுவனத்தின் பொறுப்பாகும். இந்த நிறுவனத்திலுள்ள சிலருடன் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் வெளியிட்டுள்ள பல்வேறு சிறு பிரசுரங்களையும் படித்துப் பார்த்தேன். தமிழீழத்தின் விடுதலைப் போராட்டம் மேலும் வலுவடையும்போது பல நெருக்கடிகள் ஏற்படும். பட்டினி, நோய் முதலியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தமிழீழத்திற்கு வெளியிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருட்கள், எரிபொருட்கள், மின்சக்தி முதலிய அத்யாவசியப் பொருட்கள் ஒரு கட்டத்தில் நிறுத்தப்படலாம், அத்தகைய நிலையில்மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படாதவாறும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வகையிலும் அவசியமான ஏற்பாடுகளைச்செய்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைச் சமாளிக்க முடியாமல் திணறும் சிங்கள அரசு தமிழீழ மக்களைப் பட்டினி போட்டுக் கொல்ல முயற்சி செய்யும். விவசாயம், மீன் பிடித்தல் போன்றவற்றை சிங்கள அரசு முற்றிலுமாகச் சீர்குலைத்திருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து மக்களை மீட்பதற்கு விடுதலைப் புலிகள் என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள நான் விரும்பினேன்.

அதற்கு அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள். தமிழீழத்தின் ஒவ்வொரு சிறு பிராந்தியமும் தன்னளவில் குறைந்த பட்சத் தன்னிறைவையாவது அடையக் கூடிய வகையில் எமது திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். எங்களது குறிக்கோளாகக் கீழ்க்கண்டவற்றை வைத்திருக்கிறோம்.

1. தமிழீழத்தின் ஒவ்வொரு குடிமகனும் மிகக்குறைந்த தேவைகளையாவது பெற்றுக் கொள்ள உறுதிப்படுத்துதல்.
2. மக்களின் நுகர்வு அளவை உயர்த்துவதன் மூலம் அனைவரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
3. உற்பத்திக்கான சகல சாதனங்களையும் முழுமையாகப் பயன்படுத்துதல்
4. கிடைக்கக்கூடிய வளங்களை ஒழுங்கு படுத்துவதோடு முழுமையாகப் பயன்படுத்துதல்.

இந்த நான்கு குறிக்கோள் அடிப்படையிலேயே நாங்கள் செயல்பட்டு வருகிறோம் என்று சொன்னார்கள்.

"தமிழீழத்தின் விவசாயத்துறையைச் சீர்படுத்த என்ன திட்டங்களை வகுத்திருக்கிறீர்கள்" என்று நான் கேட்டேன்.

"எம்மிடம் உள்ள **குறைந்த அளவு** நிலத்தையும் **குறைந்த அளவு** நீரையும் முழுமையாகப்பயன்படுத்தி அதிக அளவு உணவு உற்பத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு அதற்கான பயிரினங்களையே பயிரிடும்படி நாங்கள் சொல்லுகிறோம். நெல், சாமை, சோளம், மற்றும் சட்டிக்கருணை, இராசவள்ளிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு, பீட்ரூட், முள்ளங்கி போன்றவற்றைப்பயிர் செய்யும்படி ஆலோசனை கூறுகிறோம். எண்ணெய்த் தேவைக்காக சூரியகாந்தி, எள், நிலக்கடலை, ஆமணக்கு போன்றவற்றைப்பயிர்செய்துவருகிறோம்.

வீட்டைச் சுற்றியுள்ள நிலத்தில் வீட்டிற்குத் தேவையான பீட்ரூட், கிழங்கு, பழ வகைகளை உற்பத்தி செய்யச் சொல்லுகிறோம். வயல்நிலம், தோட்டநிலம் போன்றவற்றில் பணப்பயிர்களைப்பயிரிடுவதைக் குறைத்து உணவுப் பயிர்களைப் பயிரிடுமாறு வற்புறுத்துகிறோம். நெல் பயிரிடுவதற்குப் பதிலாக் மரவள்ளிக் கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு, சோளம், சோயாபீன்ஸ் போன்றவற்றை அதிகமாகப் பயிரிடும்படி வற்புறுத்துகிறோம். இவைகள்



குறுகிய காலத்தில் அதிக விளைவு தரக்கூடியதாகும். நெல் பயிரிடுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. போதுமான தண்ணீர் இல்லாமல் போவது, விவசாய நிலங்களில் ஹெலிகாப்டர் தாக்குதல் ஆகிய காரணங்களினால் நெற்பயிர் சாகுபடி செய்வது சிரமமாகவுள்ளது.

மிருகங்கள் வளர்ப்பு பற்றியும் அவர்களது திட்டங்களை விளக்கி சொன்னார்கள். "தமிழீழ மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் கோழி, ஆடு, மாடு, முயல், பன்றி போன்றவற்றை அவரவர்கள் வசதிக்கேற்ப வளர்க்குமாறு பிரச்சாரம் செய்கிறோம். வீட்டில் மிஞ்சும் உணவு வகைகளைப் போட்டு வளர்க்கப்படும் இந்த மிருகங்களினால் பெரும் பயன் உள்ளது. அதைப் போலவே எங்கள் பிரதேசங்களில் பரந்து காணப்படும் சிறுசிறு கடலோர குடாக்கள், குளங்கள், குட்டைகள் போன்றவற்றில் மீன், இறால் போன்றவற்றை வளர்க்கத் தூண்டுகிறோம். கடல் தடைச் சட்டத்தினால் மீன் பிடித் தொழில் பாதிக்கப்படும்போது தேவையான மீன் உணவைப் பெறுவதற்கு இதுவே சிறந்த வழியாகும்" என்றார்கள்.

"மக்களுக்குத் தேவையான பொருட்களைக்கொண்டுவர சிங்கள அரசு தடை செய்திருப்பதைச் சமாளிக்க என்ன செய்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"மக்களுக்குத் தேவையான சோப்பு, மாவு, உணவுவகைகள் தும்பு, சாயம், எண்ணெய், சாம்பு, பழரசம் போன்றவற்றை நாங்களே உற்பத்தி செய்கிறோம். மக்களின் துணையுடன் இவற்றை நாங்கள் செய்வதால் மக்கள் இவற்றை வாங்கி எம்மை ஆதரிக்கிறார்கள். பெண்களைக் கொண்டு பனைப் பொருட்கள் உற்பத்தி செய்கிறோம். ஏராளமான பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு மக்களுக்குத் தேவையான பொருட்களும் கிடைக்கின்றன. அதைப் போல கருவாடு தயாரித்தல் அவற்றை தகரத்தில் அடைத்தல், குளிர் ஊட்டுதல் உணவு தயாரித்தல் போன்றவற்றையும் நாங்கள் செய்கிறோம். இவற்றின் மூலம் எங்கள் பொருளாதாரமும் வலுவடைகிறது. மக்களுக்குத் தேவையான பொருட்களும் **கிடைக்கின்றன**' என்று சொன்னார்கள்.

"எரிபொருள், மின்சாரம் போன்றவற்றை சிங்கள அரசு அடியோடு தடைசெய்து விட்டதே அதை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"தமிழீழத்தில் தேவையான அளவுக்குச்சூரிய ஒளி கிடைக்கிறது. வருடத்தில் 75 சதவீகித நாட்கள் இது கிடைக்கின்றது வீட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமைப்பதற்கும் சூரிய சக்தியை பயன்படுத்தத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம். அதைப் போலவே நீர்ப்பாசனத்திற்குத் தேவையான எரிபொருள் பற்றாக் குறையைச் சமாளிக்கக் காற்றாடி இயந்திரங்களைப் பயன்படுத்துமாறு கூறுகிறோம். ஒவ்வொரு விவசாயியும் தனித்தனியாக இவற்றை அமைப்பதற்குப் பதில் பல விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து காற்றாடி இயந்திரங்களை அமைக்க உதவுகிறோம். மாட்டுச்சாணம் போன்றவற்றிலிருந்து உற்பத்தியாக்கப்படும் உயிரின வாயுவைப்பெருமளவு பயன்படுத்தி வருகிறோம். இயற்கையில் எம்மிடமுள்ள இத்தகைய சக்திகளைக் கொண்டு எரிபொருள் மின்சாரப் பற்றாக்குறையை நாங்கள் ஓரளவு சமாளிக்கிறோம்'' என்று அவர் சொன்னார்.

தமிழீழ மக்களால் **கற்பகத்தரு** என்று அழைக்கப்படும் பனை மரத்தின் பயன்கள் பற்றி அவர்கள் எடுத்துச் சொன்ன விதம் எனக்கே திகைப்பை ஊட்டியது. ''தமிழீழப் பகுதியில் சுமார் 1 கோடிக்கு மேற்பட்ட பனை மரங்கள் உள்ளன. ஆனால் அவற்றை முழுமையாக இன்னமும் பயன்படுத்தவில்லை. எனவே பனையின் பயனைப் பற்றிப்புலிகள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். பனம் பழமும், பனங்கிழங்கும் சிறந்த உணவுப் பொருளாகும். ஒரு பனை மரத்திலிருந்து சராசரி பருவத்தில் 150 கிழங்குகள் பெற முடியும். எனவே ஒரு மரத்திலிருந்து கிடைக்கும் பனம் பழத்திலிருந்து ஒரு பருவத்தில் 22½ கிலோ பனாட்டு கிடைக்கும். பனங்கிழங்கிலிருந்து மூன்று கிலோ 'ஒடில்மா' கிடைக்கும். அதைப் போலவே ஒரு மரத்தில் கிடைக்கும் பதநீரிலிருந்து 40 பவுண்ட் சீனியை உற்பத்தி செய்யலாம். வெல்லமாக இருப்பின் 75 பவுண்ட் வெல்லம் உற்பத்தி செய்யலாம். தமிழீழத்திலுள்ள மொத்தப்பனையிலிருந்து சுமார் 1 லட்சம் டன் சீனி உற்பத்தி செய்யலாம். வெல்லத்தைப் பொறுத்த வரை ஒரு ஆண்டுக்கு சுமார் 8 லட்சம் டன் வெல்லம் உற்பத்தி செய்யலாம். இதைத் தவிர பழச்சாறு, ஜாம், பனம்பழம், கிரிம் போன்றவற்றையும் பனங்காயிலிருந்து 'வினிகர்' போன்றவற்றையும் உற்பத்தி செய்யலாம். இத்துறையில் தமிழர்கள் இதுவரை போதுமான கவனம் செலுத்தவில்லை. இப்போது நாங்கள் இதில் தீவிர கவனம் செலுத்தும்படிப்பிரச்சாரம் செய்து வருகிறோம். தமிழ்ப் பகுதியிலுள்ள பனையில் 2 சதவிகிதம் மட்டுமே தற்போது பயன்பாட்டிற்குள் இருந்துவருகின்றன. பாக்கி 98 சதவிகிதம் வீனாகக் கிடக்கிறது. ஆகவே இதில் தீவிரக்கவனம் செலுத்திவருகிறோம்'' என்று அவர் சொன்னார்.

**வியட்நாம் மக்கள் ஒரு கையில் மண்வெட்டியுடனும், மறு கையில் துப்பாக்கியுடனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை**



**எதிர்த்துப் போராடினார்கள்; வெற்றி வாகையும் சூடினார்கள். அதைப் போல இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு கையில் மண்வெட்டியுடனும் மறுகையில் துப்பாக்கியுடனும்சிங்கள ஏகாதிபத்தியத்தையும், அதற்குப் பின்னணியாக இருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் முறியடிக்கப் போராடுவதை நான் நேரில்பார்த்து வியந்தேன்.**

## குண்டு வீச்சு

விமானக் குண்டு வீச்சுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பது பற்றியும் மக்களுக்கு விடுதலைப் புலிகள் சொல்லிக் கொடுக்கிறார்கள். விளக்கப் படங்களுடன் கூடிய சிறு நூல்களையும் அதற்காக வெளியிடுகிறார்கள். ''குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு'' என்ற தலைப்பில் விடுதலைப்புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள சிறு பிரசுரம் ஒன்றை நான் பார்த்தேன்.

விமானங்களிலிருந்து குண்டுகள் வீசுவதன் மூலம் மக்களிடையே அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி விடுதலைப்புலிகளுக்கு மக்களிடையேயுள்ள ஆதரவினைக் குறைத்து விடுதலைப் போராட்டத்தின் முனையை மழுங்கச் செய்துவிடலாம் என்று சிங்கள அரசு நினைக்கிறது.

இந்த நூலின் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டுள்ள சில வாசகங்கள் என்னைக் கவர்ந்தன. ''ஆகாய விமானத் தாக்குதலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எவை? இக்கேள்விக்கான விளக்கம் தரப்படும் முன்னர் உங்கள் **மனத்தில்** நீங்கள் கற்பனை செய்து வைத்திருக்கும் விமானத் தாக்குதல்கள் பற்றிய மோசமான கற்பனைகளை அகற்றி விடுங்கள். ஏனெனில் ஆகாய விமானமானது உங்களின் மன உறுதிக்கான ஆயுதமேயாகும். வெறுமனே பயங்கர சப்தத்தை எழுப்பிக் கொண்டு தாழ்வாகப் பறந்துவந்து தாக்குவது மக்களிடையே பீதியையும் குழப்பத்தையும் உண்டுபண்ண வேண்டும் என்ற ஒரே நோக்கத்தினாலேயேயாகும். அவர்கள் எதிர்பார்த்தபடி நீங்கள் சிதறியடித்து ஓடுவீர்களேயாயின் பெருமளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாவீர்கள். ஆனால் மனஉறுதியுடன் எந்த ஒரு தாக்குதலுக்கும் தாக்குப்பிடிக்கக் கூடிய ரீதியில் திட்டமிட்டுச் செயல்படுவீர்களேயாயின் குண்டுவீச்சினால் பெருமளவு உயிர்ச்சேதம் எதனையும் ஏற்படுத்த முடியாது.''

மக்கள் **மனத்தில்** அச்சத்தை அகற்றித்தன்னம்பிக்கையையூட்டும் இந்தப் பிரசுரம் ஏராளமான விளக்கப் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதெல்லாம் இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. அகழிகளைவெட்டுவது எப்படி? அதற்குள் பதுங்குவது எப்படி என்பது பற்றியெல்லாம் இதில் சொல்லப்பட்டுள்ளது.

விமானத் தாக்குதல் வேளையில் திறந்த வெளியிலோ தெருவிலோ பாதையிலோ சிக்கிக் கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் கட்டிடம் ஒன்றின் அருகிலுள்ள போது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் கட்டிடம் ஒன்றின் உள்ளே உள்ள போது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் இரயில் வண்டியிலோ பஸ்ஸிலோ கார் மூலமோ மாட்டு வண்டியிலோ பயணம் செய்யும் போது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் படங்களுடன் கூடிய விளக்கங்கள் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன.

இன்னும் வீட்டின் கண்ணாடி ஜன்னல்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றியும் வாயில்படிகளுக்கு அருகே மணல் மூடைகளை அடுக்கி வைப்பது பற்றியும் இதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வீட்டிலுள்ள பாதுகாப்பான அறைக்குள் பல நாட்கள் தங்க நேர்ந்தால் என்னென்ன பொருட்களைச்சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியெல்லாம்கூட இந்நூலில் சொல்லப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்காக அகழிகள் வெட்டப்பட்டு வருவதை நான் பார்த்தேன். வீடுகளைச் சோதனை போடும் போதும் சிங்கள இராணுவத்திடமிருந்து தப்புவதற்காக இரகசிய இடங்களை அமைப்பது எப்படி என்பது பற்றியும் இந்தப்பிரசுரம் சொல்கிறது.

எதிரி விமானங்களைத்திசை திருப்பி ஏமாற்றும் நடவடிக்கைகள் பற்றியும் இந்தச்சிறு நூலில் சொல்லப்பட்டுள்ளது. குண்டுவீச்சு நேரங்களில் வீட்டிலுள்ள சகல விளக்குகளையும் அணைத்துவிட்டு தோட்டத்தில் அல்லது பக்கத்திலுள்ள திறந்தவெளிகள்போன்றவற்றில் சிறுவிளக்குகளை எரிய வைப்பதன்மூலம் இரவில் மேலிருந்து பார்க்கும் விமானமோட்டி விளக்குகள் எரியும் இடங்களை நோக்கிக்குண்டுகளை வீசுவார். அதன்மூலம் உங்களது வீடுகள் காப்பாற்றப்படும்.

ஒருமுறை குண்டுகள் வீசிய விமானங்கள் மீண்டும்வந்து குண்டு வீசக்கூடும். எனவே வெட்டவெளியில் குப்பைகூளங்கள் போன்றவற்றைக் குவித்து அவற்றுக்குத்தீ வைப்பதன் மூலம் திரும்பிவரும் விமானம் ஓட்டி தான் முதலில் குண்டுபோட்ட இடத்தில்தான் நெருப்பு பற்றி எரிகிறது என்று நினைத்து அந்த இடத்தைவிட்டு வேறு இடம்



நோக்கிச் செல்வான். இப்படிப்பட்ட பல பயனுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்களுக்குப் புலிகள் கற்றுக்கொடுக்கிறார்கள். விமானத் தாக்குதலைக் கண்டு அச்சம் அடையாமல் இருப்பதற்கு மக்களுக்குத்தைரியம் ஊட்டுகிறார்கள்.

## ஒற்றர்கள்! ஜாக்கிரதை

ஒற்றர்கள் பற்றிப்புலிகள் மக்களுக்கு எச்சரிக்கிறார்கள். எந்தெந்த வடிவங்களில் ஒற்றர்கள் ஊடுருவுவார்கள் என்பதைப் பற்றியும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் துண்டறிக்கைகள் அச்சடித்து மக்களிடையே புலிகள் புரியவைத்துள்ளார்கள். அத்தகைய அறிக்கை ஒன்றினை நான் பார்த்தேன். அந்த அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

## எச்சரிக்கையாக இருங்கள்

தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக வளர்ச்சியடைந்து வருகிறது. பெரும்பான்மையான தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் தங்கள் பங்களிப்பைச் செலுத்துகின்றனர். இந் நிலையில் போராளிகள் ஓரளவு வெளிப்படையாகவே மக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தும் துரோகிகள் மக்களோடு இணைந்து பழகித்தகவல்களை அறிந்து எதிரிக்கு அனுப்புகின்றனர். அண்மைக் காலங்களில் போராளிகள் இருப்பிடங்கள் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

அண்மையில் பன்னிரண்டு வயதுச் சிறுவனொருவன் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அவனால் இராணுவத்தினருக்குப் பெருமளவு தகவல்கள் கொடுக்கப்பட்டது தெரியவந்தது. இன்னோர் காவியுடை தரித்த சாமியார் வயது நாற்பத்தி ஐந்து இருக்கும்; இராணுவத்தின் ஒற்றராக மக்கள் மத்தியில் உலாவியது கண்டுபிடிக்கப்பட்டது.

உங்கள் அருகிலும் ஒற்றர்கள் இருக்கலாம். உங்கள் பகுதிகளில் நீங்கள் அறியாத புதியவர்களைக் கண்டால் கவனமாக இருங்கள். ஐஸ் பழம் விற்பவராக, பழைய கோட் வாங்குபவராக, பிச்சை எடுப்பவராக, சாமியார் வேடம் பூண்டவராக, புத்திசுவாதீனம் இல்லாதவராகப்பல வழிகளில் ஒற்றர்கள் உலாவுகிறார்கள். உங்களுக்கு சந்தேகமானவர்களின் நடமாட்டத்தை அவதானியுங்கள். சந்தேகத்திற்கிடமானவர்களைப் பிடித்து (அவர்களுக்கு எவ்விதத்திலும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இம்சைகள் புரியாது) நீங்கள் அறிந்த விடுதலைப் போராளிகளிடம் கையளியுங்கள்.

உங்களுக்குத் தெரிந்த இரகசியங்களைப் பற்றிக்கண்ட இடத்திலும் பேசாதீர்கள். உங்களை அறியாமலே நீங்கள் கதைக்கும் தகவல்கள் எதிரிக்குக் கிடைக்கலாம். இவை விடுதலைப் போராட்டத்தில் இழப்புகளை அதிகரிக்கும்.

இராணுவத்தினரை எங்காவது கண்டால் உடனே மற்றவர்களுக்குத் தகவல் கொடுங்கள். நீங்கள் காணுபவர்களையெல்லாம் எச்சரியுங்கள். இராணுவ நடமாற்றம் பற்றிய சரியான தகவல்களை விரைவாகப் பரப்புங்கள். உங்கள் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்படுவதை அறிந்தால் உடனடியாக நீங்கள் அறிந்த விடுதலைப் போராளிகளின் முகாம்களுக்குத் தகவல் கொடுங்கள். நீங்கள் பரப்பத் தவறும் சிறிய தகவல்கள் விடுதலைப் போராட்டத்தில் பெரிய இழப்புகளை ஏற்படுத்தலாம்.







# 59. சுதேசித் தொழில்கள்

யாழ்ப்பாணத்தில் புலிகளுக்குச் சொந்தமான **'கரன் சோப்பு'** தொழிற்சாலையைப் பார்த்தேன். விடுலைப்புலி கரனின் பெயரால் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான சோப்புகள் உற்பத்தி செய்கிறார்கள். தேவை் அதிகமிருப்பதால் இந்த உற்பத்தியை இரட்டிப்பாக்கத் திட்டமிட்டுள்ளார்கள். வீரமரணமடைந்த விடுதலைப்புலி **''வாசனின்''** பெயரால் 'வாசன் கற்பூரம்', 'வாசன் பத்திகள்' போன்றவையும் உற்பத்தி செய்யப்படுவதை நான் பார்த்தேன். இதைப்போலக்கருவாடு, கடலை வறுவல், கேழ்வரகு மாவு போன்றவையும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**'புது உதயம் பப்படம்'** என்ற பெயரால் பப்படங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவை கிராக்கியுடன் விற்பனையாகின்றன. இந்த உற்பத்தித்துறையில் பொறுப்பாளரான பப்பா என்ற சுகுமார் எங்களை இந்த இடங்களுக்கெல்லாம் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினார். இவற்றை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணப் பகுதியில் 32 விற்பனை நிலையங்களைத் திறந்து இருப்பதாக அவர் கூறினார். இந்த விற்பனை நிலையங்களில் ஒரு நாளைக்குச்சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரை விற்பனை நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

''இந்தப் பொருட்களுக்கு எவ்வளவு லாபம் வைத்திருக்கிறீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

''5 சதவீத லாபம்'' மட்டுமே வைத்திருப்பதாகப்பப்பா கூறினார். மேலும் அவர் கூறும்போது அரிசி, சீனி, மண்ணெண்ணெய் போன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வற்றை அடக்க விலைக்கே விற்கிறோம் என்று சொன்னார். அந்நியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் நாங்கள் விற்பதே கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். ஏழை மக்கள் அதிமாகவுள்ள பகுதியிலேயே எங்கள் கடைகளைத் திறந்திருக்கிறோம். எங்களின் வாடிக்கையாளர்களில் ஏழைகளே அதிகம் என்றும் அவர் பெருமிதத் துடன் கூறினார்.

வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில் புலிகளின் மற்றொரு சோப்புத் தொழிற்சாலை ஒன்றுக்கு நான் சென்றேன். அந்தத் தொழிற்சாலையின் பொறுப்பாளரான **வசந்த்** என்ற இளைஞரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றும் அத்தனை பேரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களே. வடமராட்சிப்பகுதிக்கு இந்தத் தொழிற்சாலை தான் சோப்புகளை வழங்குகிறது. இதுபோல ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே சோப்புத் தொழிற்சாலை உள்ளதாக வசந்த் கூறினார். ஒவ்வொரு மாதமும் இங்குச்சுமார் 60000 ஆயிரம் சோப்புக்கட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தச்சோப்புகள் சலவைச்சோப்புகளாகும். இலங்கைப்பணத்தில் ஒரு சோப்புக்கட்டி ரூபாய் 3 என விற்கப்படுகிறது. குறுகிய காலத்தில் இந்த சோப்புகள் மக்களிடம் பிரபலம்பெற்றுவிட்டன. மக்களின் தேவையை எங்களால் சமாளிக்கமுடியவில்லை எனவே உற்பத்தியை இரு மடங்காக உயர்த்தத் திட்டமிட்டு உள்ளோம் என்று வசந்த் பெருமையாகக் கூறினார். அந்தத் தொழிற்சாலையை நான் சுற்றிப்பார்த்தேன். சோப்புகள் தயாரிக்கப்படும் முறைகளைப் பார்த்தேன். இங்குத்தொழிற்சாலையில் தொழிலாளிகளாக வேலை செய்து கொண்டிருந்தவர்கள் புலிப்படை வீரர்கள். ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கு மட்டுமல்ல தொழில் செய்வதற்கும் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பது எனக்குப் புலனாயிற்று. இவர்களெல்லாம் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள். யாழ் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள். நல்ல உல்லாசமாக வாழ வேண்டிய வாழ்க்கையைத் துறந்துவிட்டுத் துப்பாக்கி ஏந்திப் போராடும் போராளியாகவும், இயந்திரங்களை இயக்கும் தொழிலாளியாகவும் தங்களை அவர்கள் பக்குவப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஒவ்வொரு இயந்திரத்தையும் எப்படி இயக்குவது என்பதை எனக்கு அவர்கள் செய்து காட்டினார்கள். அவர்களுடன் சேர்ந்து அவற்றை நானும் இயக்கியபோது அளவற்ற குதூகலத்துடன் சிரித்தார்கள். அவர்களிடமிருந்து விடைபெறும்போது சில சோப்புக்கட்டிகளை வசந்த் எனக்குப்



பரிசாகக் கொடுத்தார். தமிழ்நாட்டு மக்களுக்குக் காட்டுவதற்காக மகிழ்வுடன் அவற்றைப் பெற்றுக் கொண்டேன்.

## தும்புத் தொழிற்சாலை

யாழ்ப்பாணம் அருகே உள்ள ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கு புலிகளால் நடத்தப்படும் **தும்புத் தொழிற்சாலையைப்** பார்த்தேன். இப்பகுதி இயற்கையில் இத்தொழிலுக்கு ஏற்ற பகுதி. இங்குள்ள கடல் ஆழமற்ற கடலாகும். குடாக்களும் நிறைய இருந்தன. தென்னை மட்டைகளை இந்தக் குடாக்களில் ஊற வைக்கிறார்கள். பிறகு அதிலிருந்து தும்பை சுலபமாக எடுக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையின் பொறுப்பாளராக இருப்பவர் அந்தோணி என்ற இளைஞர். தொழிலைப் பற்றிய பல விபரங்களை அவர் எனக்குச் சொன்னார். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பகுதியில் தும்புத் தொழில் செழித்தோங்கியிருந்தது. ஆனால் சிங்களப் பகுதிகளில் நவீன இயந்திர சாதனங்களுடன் தும்புத் தொழில் தொடங்கப்பட்டவுடன் இங்கு இந்தத் தொழில் அழிந்து விட்டது. தமிழீழப் பகுதிலுள்ள கயிறு திரிக்கும் தொழிலுக்குத் தேவையான தும்பை அரசாங்கம்தான் அளித்து வந்தது. இப்போது அதை அறவே நிறுத்திவிட்டது.

“50 ஆண்டுகளுக்கு முன்னால் மறைந்து போன இந்தத் தொழிலுக்கு நாங்கள் மீண்டும் புத்துயிர் கொடுத்திருக்கிறோம். இந்தப் பகுதிக்கிராம மக்களுக்கு இதன் மூலம் வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தப் பகுதியில் 15 கயிறு திரிக்கும் நிலையங்களை அமைத்திருக்கிறோம். அவற்றுக்குத் தேவையான தும்பு முழுவதும் இங்கிருந்து அளிக்கப்படுகிறது. இந்த 15 நிலையங்களிலும் சுமார் 300 பேர் வேலை பார்க்கிறார்கள். இந்தப் பகுதியில் தென்னை மரங்களும் அதிகம். குடாப் பகுதிகளும் அதிகம். ஆகவே இங்கு இத்தொழில்புரிகிற வாய்ப்பும் அதிகம். தனியார் யாரும் இத் தொழிலைச் செய்ய முன்வருவதில்லை. அதையும் நாங்கள் ஊக்கப் படுத்திப் பார்த்தோம். யாரும் வரவில்லை என்பதால் நாங்கள் இப்போது செய்கிறோம். இலாபகரமாக இந்தத் தொழில் நடக்கிறது” என்று அவர் சொன்னார்.

இதற்கு அருகிலேயே கடற் சிப்பிகளிலிருந்து சுண்ணாம்புசெய்ய சுண்ணாம்புக்காளவாசல் ஒன்றினைப் புலிகள் அமைத்திருக்கிறார்கள். இதுவும் சிறப்பாக இயங்குகிறது.

இதற்கு அருகிலேயே **ஆஸ்பெஸ்டாஸ்** தொழிற்சாலை ஒன்றும் அமைத்திருக்கிறார்கள். இங்கு ஒரு புதுமையை நான் பார்த்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதர்ரணமாக ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளைக்கொண்டு வேயப்பட்ட வீடுகளில் உஷ்ணம் அதிகமாகஇருக்கும். இதன் காரணமாக வீட்டுக் கூரைகளுக்கு ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளை உபயோகிக்க யாரும் முன் வருவதில்லை. புலிகள் இயக்கத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் தீவிர ஆராய்ச்சியின் பயனாகப்புதுவகையான ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளை உற்பத்தி செய்கிறார்கள். சாதாரணமாக சிமெண்ட், மணல் கலந்த கலவையைக்கொண்டு ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் செய்யப்படும். ஆனால் சிமெண்ட், மணல் கலவையுடன் தேவையான அளவு தும்பை யும், அதாவது தேங்காய் நாரையும் கலந்து அதிலிருந்து ஆஸ்பெஸ் டாஸ் தகடுகள் செய்கிறார்கள், அதை நானே நேரில் பார்த்தேன். சாதாரணமாக ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளைவிட இது கொஞ்சம் பருமனாக இருந்தது. ''இதனால் என்னென்ன பலன்கள் என்று நான் கேட்டபோது அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள். இதனால் உஷ் ணம் குறைகிறது. தொற்று நோய்கள் வரவேவராது. விலையும் குறைவு'' என்று சொன்னார்கள்.

அதைப் பார்த்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சிமெண்ட் தொழிலில் எவ்வளவோ முன்னேறி இருக்கக்கூடிய இந்தி யாவில்கூட இத்தகைய புதுமையான கண்டுப்பிடிப்புகள் செய்யப்பட வில்லை. இவ்வளவு நெருக்கடியிலும் தமிழீழ இளைஞர்கள் அற்புத சாதனைகள் செய்துவருகிறார்கள் என்பதற்கு இது ஒரு சீரிய உதாரண மாகும்.

அங்கிருந்து அருகேயுள்ள ஒரு பெரிய தென்னந் தோப்புக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். சுமார் 100 ஏக்கர் பரப்பளவுள்ள அந்தத்தென்னந் தோப்பில் ஆயிரக்கணக்கில் தென்னை மரங்கள் இருந்தன. மேலும் மரங்களை நட்டு அந்தத் தோப்பை விரிவாக் கிக் கொண்டிருப்பதையும் நான் பார்த்தேன். இந்தத் தோப்பு புலிகளுக்குச் சொந்தமானது என்று சொன்னார்கள். அது எப்படி என்று நான் கேட்டபோது அவர்கள் சிரித்துக் கொண்டே சொன்னார் கள் ''இது சிங்கள அரசுக்குச் சொந்தமான தோப்பு. இதை நாங்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றியிருக்கிறோம். இப்போது இதுஎங்களுக்குச் சொந்தம்'' என்று சொன்னார்கள். இந்தத் தோப்புக்கு அருகிலேயே தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினையும் ஆரம்பித்திருக்கிறார்கள். அதையும் நான் சென்று பார்த்தேன். கிராமப்புறப்பொருளாதாரத்தைப் பெருக்கும் வகையில் அவர்கள் மேற் கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளை நான் மனமாரப் பாராட்டினேன்.



## ஸ்கிரீன்பிரிண்ட் தொழிற்சாலை

விடுதலைப் புலிகள் தங்களுக்கு வேண்டிய சுவரொட்டிகளை அச்சடிப்பதற்காக ஸ்கிரீன்பிரிண்ட் தொழிற்சாலை ஒன்றினை வைத் திருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான சகல சுவரொட்டிகளும் இங்கேயே அச்சடிக்கப்படுகின்றன. நேர்த்தியாகவும், எடுப்பாகவும் இந்தச்சுவரொட்டிகள் இருப்பதை நான் பார்த்தேன்.

இதில் பணிபுரியும் இளைஞர்கள் கலையுணர்வு மிக்கவர்கள். ஒவ்வொரு சுவரொட்டியிலும் அவர்களுடைய கலையுணர்வு மிளிர் வதை என்னால் காண முடிந்தது.

## விற்பனைக் கடைகள்

பொலிகண்டியில் புலிகளினால் நடத்தப்படும் கடை ஒன்றுக்குச் சென்றிருந்தேன். வீரமரணமடைந்த விடுதலைப்புலி ஜெயம் நினை வாக இக்கடைக்கு ஜெயம் ஸ்டோர்ஸ் என்று பெயரிட்டுள்ளார்கள். புலிகள் தயாரிக்கும் அத்தனைப் பொருட்களும் இங்கு விற்கப்படு கின்றன. அந்தப் பகுதியில் இதுபோல ஏழு கடைகளை நடத்துகிறார்கள்.


ஜெயம் ஸ்டோரிலுள்ள பல பொருட்களை எடுத்துப் பார்த்தேன். ஊதுபத்தி, சூடன், பழரசங்கள், ஜாம், பனைப் பொருட்கள், வெல்லம், சோப்பு ஆகிய பல பொருட்கள் அங்கு இருந்தன. அவையெல்லாம் புலிகளால் உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொன்னார்கள். மற்றும் அரிசி, பலசரக்குச்சாமான்கள் போன்றவையும் வெளியிலிருந்து வருவித்து விற்கப்படுகின்றன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 60. மக்களுக்காக—கலை

யாழ்ப்பாணத்தில் நான் தங்கியிருந்தபோது விடுதலைப்புலிகள் நடத்திய கலைநிகழ்ச்சிகள் சிலவற்றைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

தமிழ்நாட்டில் மெல்லிசை நிகழ்ச்சி என்ற பெயரால் மேற்கத்திய நாடுகளின் இசையையும் வாத்தியங்களையும் கலந்து கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுவதையும் அதை நமது இளைஞர்கள் கும்மாளமிட்டு இரசிப்பதையும் பார்த்து மனம் நொந்திருக்கிறேன். அதைப் போலவே தான் இங்கேயும் இருக்குமோ என்று சந்தேகத்துடன் சென்றேன்.

நிகழ்ச்சி நடைபெற்ற இடம் ஒரு முச்சந்தியாகும். அப்போது இரவு மணி சுமார் 9 இருக்கும். திரளான மக்கள் அங்குக்கூடியிருந்தார்கள். குறிப்பாகப் பெண்களும், குழந்தைகளும் அந்தக் கூட்டத்தில் இருந்ததைப் பார்த்தபோது எனக்கு வியப்பாக இருந்தது. போர்க்காலத்தில் அதுவும் எந்தநேரத்திலும் சிங்கள இராணுவம் வந்து மக்களைத் தாக்கலாம் என்ற சூழ்நிலையில் இவ்வளவு திரளாக மக்கள் கூடியிருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

கூட்டத்திற்கு நடுவில் மூன்று இளைஞர்கள் பொய்க்கால் குதிரைகளைக் கட்டிக்கொண்டு ஆடுவதற்குத் தயாராக நின்றார்கள். இன்னொருபுறத்தில் ஒரு பாய் விரிக்கப்பட்டு அதில் வாத்தியங்களுடன் சில இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். சிறிது நேரத்தில் நிகழ்ச்சி தொடங்கிற்று. பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் தான் நிகழ்ச்சி நடந்தது. முதலில் தமிழீழ வாழ்த்துப் பாடல் பாடப்பட்டது. அதைத்



தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விளக்கும் பாடல்களும் பாடப்பட்டன. சிறப்பான வாத்திய இசையுடன், எடுப்பான குரலில் இளைஞர்கள் பாடினார்கள். அந்த இசைக்கு ஏற்பப்பொய்க்கால் குதிரைக் கலைஞர்கள் நடனம் ஆடினார்கள். இடையிடையே வசனங்களும் பேசினார்கள். அவர்களின் பாடல்களையும், பேச்சுக்களையும் மக்கள் இரசித்துக்கேட்டார்கள். **திம்பு** பேச்சுவார்த்தையைக் கிண்டல் செய்து பாடல்கள் பாடப்பட்ட போது கூடியிருந்த மக்கள் கெக்கலி கொட்டிச்சிரித்தார்கள்.

பாடல்கள் கருத்தாழம் மிக்கவையாக இருந்தன. பாடியவர்களும், ஆடியவர்களும் இனிமையாகவும், உணர்ச்சியாகவும் ஆடிப்பாடினார்கள். பொய்க்கால் குதிரையாட்டத்திற்கு இப்படியொரு புதுமையான வடிவம் கொடுக்க முடியும் என்பதை நான் ஒருபோதும் எண்ணிப்பார்த்ததில்லை. பழமையான கலைகளுக்குப் புத்துயிர்கொடுத்து புதிய வடிவம் தந்து, புரட்சிக்கனலைப் பற்றி எறியச் செய்யமுடியும் என்பதைப் புலிகள் நிருபித்துக்காட்டிவிட்டார்கள். பொய்க்கால்குதிரையாட்டம் வில்லுப்பாட்டுப் போன்ற பழமையான கலைகளுக்கு அவர்கள் புதிய வடிவம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதேவேளையில் இந்தப் பழமையான கலைகளில் பழமைகுன்றாமல் அவற்றிக்குப்புதுமை மெருகேற்றி மக்கள் **மனத்தைக்** கவரும் முயற்சியில் புலிகள் மகத்தான வெற்றி பெற்றுவிட்டார்கள்.

சுமார் இரண்டு மணி நேரம் நடந்த அந்த நிகழ்ச்சியைக் கூட்டத்தோடு கூட்டமாக நின்று நானும் இரசித்துப் பார்த்தேன். அந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு, நிகழ்ச்சி நடத்திய தோழர்களை அணுகி என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்தேன். இந்நிகழ்ச்சியை நானும் பார்த்துக் கொண்டிருந்தேன் என்பதை அந்த இளைஞர்கள் அறிந்திருக்கவில்லை. ஆகவே என்னை அங்குக்கண்டபோது அவர்கள் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

''அண்ணாவை! அழைத்து வந்திருப்பதை ஏன் முதலிலேயே தெரிவிக்கவில்லை'' என, என்னை அழைத்து வந்த தோழர்களிடம் கோபித்துக் கொண்டார்கள்.

''நான் வருவது முன்கூட்டியே தெரிந்திருந்தால் மக்கள் மத்தியில் தேவையில்லாத பரபரப்பு ஏற்படும். உங்கள் நிகழ்ச்சிகளையும், அதை மக்கள் எப்படி இரசிக்கிறார்கள் என்பதையும் உணரமுடியாது போய் விடும். ஆகவேதான் நான் வந்திருப்பதை உங்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கவில்லை'' என்று அவர்களுக்குச் சமாதானம் சொன்னேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்த நாள் யாழ்ப்பாண நகரின் இன்னொரு புறத்தில் நடை பெற்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குச் சென்றேன். அன்று இலேசாக மழையாயிருந்த காரணத்தினால் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்திற்குள் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. காலஞ்சென்ற கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன், கொத்தமங்கலம் திரு. சுப்பு ஆகிய கைதேர்ந்த கலைஞர்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதை நான் பார்த்திருக்கிறேன். அந்த மாபெரும் கலைஞர்களைப் போலவே இந்த இளைஞர்களும் மிகச் சிறப்பாக வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதைப் பார்த்து நான் வியந்து போனேன். ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றினை வில்லுப் பாட்டாகப் பாடி, மக்கள்மனத்தைத் தொட்ட இந்த நிகழ்ச்சியிலும் ஏராளமான பெண்களும் குழந்தைகளும் கலந்து கொண்டதைப் பார்த்தேன். பொய்க்கால் குதிரையாட்டம், வில்லுப்பாட்டு ஆகியவற்றைப் போலவே சிறுசிறு நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், கவியரங்கங்கள் போன்றவற்றை விடுதலைப் புலிகள் நடத்துகிறார்கள். பாரதியார், பாரதிதாசன், காசி ஆனந்தன் போன்ற கவிஞர்களின் பாடல்களையும் தக்கமுறையில் பயன்படுத்துகிறார்கள். துயரத்திலும் சோகத்திலும் ஆழ்ந்திருக்கும் மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் ஓரளவு மகிழ்ச்சியூட்டுவதோடு அவர்களையும் உணர்ச்சி கொள்ள வைக்கின்றன.

கலை பற்றிய விடுதலைப் புலிகளின் கண்ணோட்டம் அறிவுபூர்வமானது. **''மக்களுக்காகக்கலை'' என்பதே அவர்களின் கொள்கை. மக்களுக்கு அறிவூட்டவும் அவர்களது விடிவுக்கான வழியைக் காட்டுவதாகவும் கலை அமையவேண்டும் என அவர்கள் கருதுகிறார்கள்.**

அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு விடுதலைக்காக ஏங்கி நிற்கும் மக்களுக்குப்பொழுதுபோக்கு அம்சங்களை மட்டுமே கொண்ட கலை தேவையில்லை என அவர்கள் கூறுகிறார்கள்.


இது குறித்து அவர்களது **''களத்தில்''** என்னும் ஏட்டின் ஜூன் 1985 இதழில் எழுதியுள்ளதைத் தருகிறேன்.

**''வீரகதாபத்தில் வாடும் காதலி காதலனுக்குக் காற்றோடு தூதுவிடும் செய்திகள் எமக்கு இன்று அவசியமில்லை, மாறாக 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்றும் ''இங்கே ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்'' என்றும் எனவே எமக்கு ''அச்சமில்லை அச்சமில்லை உச்சிமீது வானிடிந்து**



**விழ்கின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை '' என்றுகூறுகின்ற கலைகளை வளர்ப்போம்.**

இங்கே ஆயிரம் எண்ணங்கள் மலரட்டும். அவை மக்களிடையே புரட்சிச் செய்தியை எடுத்துச் செல்லும். கலைகளின் முக்கியத்துவம் இன்று சகலராலும் உணரப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் கலாச்சாரப் படை இன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. நாம் காத்திரமான படைப்புகளை உருவாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். மக்களிடையே இருந்து உருவாகும் காலத்தின் தேவையான கலை இலக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நாம் தயாராகவுள்ளோம்.''





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 61. அதுலத்முதலியின் அண்டப்புளுகு

யாழ்ப்பாணம் நகரில் பழங்காலத்துப் போர்த்துக்கீசியர் கோட்டை ஒன்றுள்ளது. அந்தக் கோட்டைக்குள் சிங்கள இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. கோட்டைக்கு வெகு அருகிலேயே 'தந்தை செல்வாவின்' சமாதி, யாழ் நகராட்சி அலுவலகம் மருத்துவ மனை, வீரசிங்கம் மண்டபம், கடைத்தெரு எல்லாம் இருக்கின்றன.

யாழ் நகராட்சி அலுவலகத்தில் இராணுவ முகாம் வைப்பதற்கு இராணுவம் முயற்சி செய்தபோது அதை விடுதலைப்புலிகள் வெற்றி கரமாக முறியடித்தார்கள். நகராட்சி அலுவலகத்தையே வெடிகுண்டு வைத்துத் தகர்த்துவிட்டார்கள். இப்போதும்கூடக்கோட்டையைவிட்டு இராணுவம் வெளியேறுவதற்குப் பயப்படுகிறது. கோட்டைக்குள் இருக்கும் இராணுவத்திற்குத் தேவையான சாமான்கள்கூட 'ஹெலி காப்டர்' மூலம்தான் அளிக்கப்படுகின்றன. தரை வழியாக அவற்றைக் கொண்டுபோக இயலாது. ஏனென்றால் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் நகர் முழுவதுமே விடுதலைப் புலிகளினால் பலமாகக் கண்காணிக்கப்படுகிறது. குறிப்பாக இரவு நேரத்தில் இந்த கண்காணிப்புக்கடுமையாக இருக்கிறது. இரவு நேரத்தில் விடுதலைப் புலிகளின் அனுமதியில்லாமல் யாரும் வெளியே செல்ல முடியாது.

ஒரு நள்ளிரவில் யாழ்ப்பாணம் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்குப் புறப்பட்டோம். அன்று எங்கள் வாகனத்தை யாழ்த் தளபதி கிட்டு ஓட்டினார். அருகில் நானும் உட்கார்ந்திருந்தேன். எங்கள் வாகனம்



சென்றபோது ஒரு இடத்தல் திடீரென்று மரம் ஒன்றின் மறைவிலிருந்த ஒரு இளைஞர் வெளிப்பட்டார். ஒரு கையில் துப்பாக்கி, இன்னொரு கையில் டார்ச் விளக்கு ஆகியவற்றுடன் வெளிப்பட்ட அவர் எங்கள் வண்டியை நிறுத்துமாறு உத்தரவிட்டார். தளபதி கிட்டு வண்டியை நிறுத்தினார். இதற்குள் மறைவில் இருந்த இன்னொரு இளைஞர் எங்கள் வாகனத்தைக் குறிவைத்து இயந்திரத் துப்பாக்கியுடன் நிற்பதைப் பார்த்தேன். டார்ச் வைத்திருந்த இளைஞர் முன்னேறி வந்து என் முகத்தில் முதலில் டார்ச்சை அடித்துப் பார்த்தார். அடுத்து டிரைவர் சீட்டிலிருந்த தளபதி கிட்டு மீது டார்ச் அடித்தார். அவருடைய துப்பாக்கி காருக்குள் நீட்டப்பட்டு எனது கழுத்துக்கு நேராக இருந்தது. முகத்தில் வெளிச்சம்பட்டதும் கிட்டு திரும்பிப் புன்னகை செய்தார். அவர் முகத்தைப் பார்த்ததும் பதறிப்போன அந்த இளைஞர் துப்பாக்கியை வேகமாக வெளியே இழுத்து அவருக்கு சலியூட் செய்தார்.

"என்னா அண்ணாவையே மிரட்டுகிறாயா!" என்று சொல்லி கிட்டு சிரித்தார். பிறகு அந்த இளைஞரை அழைத்து ஏதோ விசாரித்தார். பிறகு சில உத்தரவுகள் இட்டார். பிறகு எங்கள் வாகனம் கிளம்பியது.

போகும் வழியில் நான் கேட்டேன், "அவர் நிறுத்து என்று சொன்னபோது நாம் நிறுத்தாமல் போயிருந்தால் என்னவாகி இருக்கும் என்றேன்.

"உடனடியாகச் சுட்டு இருப்பார்கள்" என்று கிட்டு பதில் கூறினார்.

"யாழ்ப்பாணம் முழுவதுமே இரவு நேரத்தில் இத்தகைய காவலை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம். ஆகவே இராணுவம் வருவதற்கு அஞ்சுகிறது. மக்கள் பயமில்லாமல் நிம்மதியாக இருக்கிறார்கள்" என்றார்.

இவ்வாறு பேசிக்கொண்டு பல தெருக்கள் வழியாக நாங்கள் சென்றோம். எந்தத் தெருவிலும் மக்கள் நடமாட்டமே இல்லாததை நான் பார்த்தேன். வீடுகளில்கூட பெரும்பாலும் விளக்குகள் இல்லை. தெரு விளக்குகளும் எரியவில்லை. எங்கும் இருள் பரவியிருந்தது. எங்கள் வாகனம் செல்லும் போது ஒரு கோவில் குறுக்கிட்டது. கோவில் அருகே எங்கள் வாகனத்தைத்தளபதி கிட்டு நிறுத்தினார். கோவிலின் இருண்ட மண்டபத்திலிருந்து கையில் டார்ச்சுடனும் வாக்கி டாக்கியுடனும் ஒருவர் மெதுவாக வெளியே வந்தார். அவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைத்துத் தளபதி கிட்டு சில உத்தரவுகளையிட்டார். பிறகு எங்கள் வாகனம் தொடர்ந்து சென்றது.

போகும் வழியில் கிட்டு சொன்னார் " அண்ணா ! இன்று உங்களுக்கு உண்மையான போரைக் காட்டப் போகிறோம்" என்றார். திகைப்புடன் அவர் முகத்தைப் பார்த்தேன். "அண்ணா ! இன்று நள்ளிரவில் கோட்டையிலிருந்து வெளியேறி மக்களைத் தாக்குவதற்கு இராணுவம் திட்டமிட்டிருப்பதாக எங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. நாங்கள் எதிர்த்தாக்குதல் நடத்தப் போகிறோம். சற்று தொலைவிலிருந்து அதை நீங்கள் பார்க்கலாம்" என்றார்.

அளவிடமுடியாத ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அவருடன் நான் சென்றேன். கோட்டைக்குச் சற்று தூரத்திற்கு அப்பால் ஒரு மரத்தின் மறைவில் எங்கள் வாகனம் நிறுத்தப்பட்டது. வண்டியிலிருந்த அனைவரும் கீழே குதித்தனர். நானும் இறங்கினேன். அந்த இருட்டில் ஒரு மரத்தின் மறைவிற்கு என்னைக் கிட்டு அழைத்துச் சென்று பார்க்க வைத்தார். கோட்டையைச் சுற்றிப் பிரகாசமான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கோட்டையின் மதில்கள்மீது ஆயுதம் ஏந்திய வீரர்கள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து செல்வதைப் பார்த்தேன்.

"அண்ணா ! இனி நீங்கள் வாகனத்திலேயே அமர்ந்துகொண்டு வேடிக்கை பாருங்கள். கீழே நிற்க வேண்டாம்" என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு போய் வாகனத்தில் உட்கார வைத்தனர். வாகனத்தையும் இன்னும் சற்றுப் பாதுகாப்பான இடத்தில் நிறுத்திவிட்டு எல்லோரும் இருளில் மறைந்து போனார்கள். நடக்கப் போவது என்ன என்பதை அறிய எனது உள்ளம் எல்லையில்லாத பரபரப்புக்கு ஆளானது. எவ்வளவு நேரம் அப்படியிருந்தேன் என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் திடீரென்று படபடவென குண்டுகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. உற்றுக்கவனித்தேன். கோட்டையின் கதவுகள் திறக்கப்பட்டு உள்ளிருந்த ஒரு இராணுவ வாகனம் வெளியே வர முயலுவதைப் பார்த்தேன். அதை நோக்கிச் சரமாரியாகக்குண்டுகள் பாய்ந்தவுடன் அந்த இராணுவ வாகனம் வந்த வழியாகப்பின்னோக்கிப் போய்விட்டது. கோட்டைக்கு மேலிருந்தும் சிங்கள வீரர்கள் இடைவிடாமல் சுட்டார்கள். பதிலுக்கு விடுதலைப்புலிகளும் சரமாரியாகச் சுட்டார்கள். விடுதலைப்புலிகள் எங்கிருந்து சுடுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனாலும் இடைவிடாமல் சுட்டார்கள். பலமுறை இராணுவத்தினர் வெளியே



வரமுயற்சிசெய்வதும்பிறகு பின்வாங்கி ஓடுவதுமாக இருந்தார்கள். பல மணி நேரத்திற்கு இந்தச்சண்டை நீடித்தது. இந்தச் சண்டையில் அருகிலிருந்த நகர மண்டபமான வீரசிங்க மண்டபத்தில் ஒரு பகுதி இடிந்து விழுந்ததைப் பார்த்தேன்.

சுமார் மூன்று மணி நேரம் சண்டை நடந்தது. கோட்டைக்கு வெளியே வரும் உத்தேசத்தை இராணுவத்தினர் கைவிட்டுவிட்டனர் என்பது புலனாயிற்று. இருளில் மறைந்திருந்த நமது தோழர்கள் ஒவ்வொருவராக வெளியே வரத்தொடங்கினார்கள். கிட்டுவும் வந்து சேர்ந்தார். " அண்ணா! எப்படியிருந்தது " என்று சிரித்துக்கொண்டே கேட்டார். திரில்லிங்காக இருந்தது என்று நான் சொன்னேன்.

"இன்றைக்கு அவ்வளவுதான் அண்ணா! இனி அவர்கள் வெளியே வரமாட்டார்கள்" என்று கூறிவிட்டு வாகனத்தில் ஏறி ஓட்டத் தொடங்கினார்.



யாழ் கோட்டையும், நகரமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 62. போராளிகள் போர்வையில் சமூக விரோதிகள்

யாழ்ப்பாணத்து வீதிகளில் நான் ஒருநாள் சென்றுகொண்டிருந்த போது ஓரிடத்தில் கூட்டமாக மக்கள் நிற்பதைப் பார்த்தேன். நாங்கள் சென்ற வேனிலிருந்து இறங்கி அருகில் சென்று பார்த்தபோது மூன்று இளைஞர்கள் அங்குள்ள விளக்குக் கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டிருப்ப தையும் அவர்கள் கழுத்தில் ஏதோ எழுதிய அட்டைகள் தொங்குவதை யும் பார்த்தேன். அதற்குள் கூட்டத்தில் இருந்தவர்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டனர். பரபரப்போடு எனக்கு வழிவிட் டனர். அந்த இளைஞர்களின் அருகில் சென்று நான் பார்த்தபோது அந்த மூன்று இளைஞர்களும் தலை குனிந்தபடியே இருந்தார்கள். அட்டையில் **"போராளிகள் அல்ல கொள்ளைக்காரர்கள்"** என்று எழுதப்பட்டிருந்தது.

என்ன விஷயம் என்று நான் விசாரித்தபோது அங்கிருந்தவர்கள் சொன்னார்கள், "ஒரு வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டுபோக அவர்கள் முயற்சி செய்தபோது பொதுமக்கள் ஒன்று திரண்டு அவர்களை வளைத்துப்பிடித்துவிட்டனர். போராளிகள் என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருப்பவர்களை அடையாளம் காட்டுவதற்காகவே அவர்களைக் கட்டிப்போட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள்.

நிருவாகமும், போலீசும் செயலற்றுக்கிடக்கும் வேளையில் இத் தகைய சமூக விரோதிகளை மக்களே பிடித்துத் தண்டிப்பதைப் பார்த்த



போது நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்த ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல தமிழீழத்தில் நான் தங்கியிருந்தபோது பல இடங்களில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நான் கண்டேன்.

மன்னாரிலுள்ள **'மடுமாதா'** தேவாலயத்தில் ஏராளமான அகதிகள் தங்கியிருக்கிறார்கள். அந்த தேவாலயத்தைச் சேர்ந்த கிருஸ் தவத் துறவிகளும் கன்னிகாஸ்திரீகளும் அகதிகளுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து சிறப்பாகத் தொண்டாற்றி வருகிறார்கள். மடுமாதா தேவாலயத்திற்கு நான் சென்று அங்கு அகதிகளைப் பார்த்து விட்டுத் திரும்பிய சிறிது நேரத்தில் சில இளைஞர்கள் ஆயுதங்களோடு அங்குப்போய் தேவாலயத்திற்குச் சொந்தமான வேன் ஒன்றை அபகரிக்க முயன்றபோது உடனே அங்கிருந்த அகதிகள் ஒன்றுதிரண்டு அந்த முயற்சியை முறியடித்தார்கள். அதைப் போலவே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர்க்கூட்டுறவு சங்கப் பண்டகசாலையை இரவு நேரத்தில் கொள்ளையடிக்கச்சிலர் முயற்சி செய்தபோது பொதுமக்கள் அதை வெற்றிகரமாக முறியடித்தார்கள்.

நான் யாழ்ப்பாணத்திலிருந்தபோதுதான் பெருமாள்கோவிலில் கொள்ளை நடந்தது. கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களை விடுதலைப் புலிகள் தடுப்பதற்கு முயற்சி செய்தனர். கொள்ளையடிக்க வந்தவர்களும் ஏதோ ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். எனவே இது இயக்கங்களுக்கு இடையே உள்ள சண்டையாக மாறிவிடக் கூடாது என்று புலிகள் சற்றுத் தயங்கினார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு கொள்ளைக்காரர்கள் தப்பிவிட்டார்கள். கொள்ளை நடந்த இடத்தை மறுநாள் நானும் போய்ப் பார்த்தேன். இந்தச்சமூகவிரோதச் செயல்கள் குறித்து யாழ்ப்பாணப்பகுதி புலிப்படைத்தளபதி கிட்டு அவர்களுடன் பேசினேன்.

அவர் சொன்னார் " இத்தகைய கொள்ளை முயற்சிகள் இன்று நேற்று அல்ல, நீண்ட காலமாகவே நடந்து வருகிறது. ***புற்றீசல்போலக்*** கிளம்பியிருக்கும் புதுப்புது இயக்கங்கள் இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றது. இதன் விளைவாக மக்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பது மட்டுமல்ல; போராளி களைப் பற்றிய தவறான எண்ணம் கொள்ளத் தொடங்கி விடுகிறார்கள். மேலும் சிங்கள அரசு இத்தகைய சமூக விரோதச் செயல்களை மிகப் பெரிதாகக் காட்டிப் பிரச்சாரம் செய்கிறது. ஒட்டு மொத்தத்தில் போராளிகள் அனைவருமே சமூக விரோதிகள் எனச் சித்தரிக்க அது முயலுகிறது. இந்தியாவிலும் பிற வெளி நாடுகளிலும் எங்களைப் பற்றிய தவறான கருத்துக்கள் பரவுவதற்கு இது வழிவகுக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே இது குறித்து நாங்கள் ஒரு தெளிவான முடிவுக்கு வந்திருக்கிறோம். புதிதுபுதிதாய்த் தொடங்கிச் சிறுசிறு கும்பலாக இருந்து தமிழீழ விடுதலைக்காக இயங்காமல் சமூக விரோதச் செயல்களைப் புரிந்து வரும் இவைகள் விடுதலை இயக்கங்கள் அல்ல. இவைகள் கொள்ளைக் கும்பல்களே. எனவே எவ்வித நிபந்தனையும் இன்றி இந்தச் சிறு இயக்கங்கள் பொறுப்பு வாய்ந்த விடுதலை இயக்கங்களில் முழுவதுமாக இணைந்து கொள்ள வேண்டும். அல்லது பொறுப்பு வாய்ந்த இயக்கங்கள் இவற்றைச் சமூக விரோத சக்திகளாகவே கருதி நடவடிக்கைகள் எடுத்தேயாக வேண்டும் என நாங்கள் அறிவித்தோம்''.

''உங்களின் இந்த அறிவிப்புக்குப் பிற இயக்கங்கள், மக்கள் ஆதரவு எப்படியிருக்கிறது?'' என்று நான் கேட்டேன்.

''பொது மக்கள் மத்தியில் நல்ல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. புத்தூர், புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதிகளில் மக்கள் கிளர்ந்தெழுந்து இத்தகைய சமூக விரோதக் கும்பலை விரட்டியடித்தார்கள். அந்த மக்களுக்கு நாங்கள் பாதுகாப்புக் கொடுக்கிறோம். மக்கள் உதவியுடன்தான் இத்தகைய சமூக விரோத சக்திகளை ஒழிக்கமுடியும். எமது மக்கள் உண்மையான இயக்கம் எது போலியான இயக்கம் எது என்பதை இப்போது தெளிவாக உணர்ந்து வருகிறார்கள். இந்தியாவிலோ பிற நாடுகளிலோ உள்ள மக்களை இந்தப் போலி இயக்கங்கள் ஏமாற்றலாம். ஆனால் தமிழீழத்திலுள்ள மக்களை இனி ஏமாற்ற முடியாது. மக்கள் உண்மையை உணரத் தொடங்கி விட்டார்கள். உண்மையான போராளிக்கும் போலித்தனமான போராளிக்குமுள்ள வேறுபாட்டை அறிந்திருக்கிறார்கள். ஆகவே சமூக விரோதிகளை எதிர்த்துப் போராடுவதில் எங்களுக்கு மக்களும், மக்களுக்கு நாங்களும் உறுதுணையாக இருக்கிறோம்'' என்று அவர் சொன்னார்.

''கொள்ளை முயற்சிகளில் இந்த இயக்கங்கள் ஈடுபடுவதற்கு எதுகாரணம்?'' என்று நான் கேட்டேன்.

''இந்த இயக்கங்களுக்கு எவ்விதப் பொருளாதாரத் திட்டமும் கிடையாது. இயக்கத்தின் அன்றாட செலவுகளுக்கு வகையற்றிருக்கிறார்கள். இவர்களின் செலவுக்களுக்கு வழியில்லாத நிலையில் இதைப் போன்ற கொள்ளையில் ஈடுபடுகிறார்கள். இவர்களைக் கட்டுப்படுத்த அவர்களின் தலைமையினாலும் முடியவில்லை. ஏனென்றால் தலைமையால் இவர்களுக்குச் சோறு போட முடியவில்லை. எனவே அவர்களும் இதை அனுமதிக்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கென்று பொருளாதாரத் திட்டங்கள் உள்ளன.



மக்களுக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்து நாங்கள் விற்பனை செய்கிறோம். இதன்மூலம் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்கிறோம். எங்களின் தேவைக்கும் மக்கள் உதவுகிறார்கள். ஆனால் எத்தகைய திட்டமும் இல்லாமல் இயங்கக்கூடிய இயக்கங்கள் சமூக விரோதச் செயல்கள் புரிவதைத் தவிர வேறுவழியில்லாத நிலைமையில் அதைச் செய்யத் தொடங்குகிறார்கள். பின்னர் அதுவே அவர்களின் வாழ்க்கை நியதியாகிவிடுகிறது'' என்று அவர் சொன்னார்.

''இந்த இயக்கங்களுக்கு வேறு பின்னணி ஏதாவது உண்டா'' என்று நான் கேட்டேன்.

''நிச்சயமாக உண்டு! சிங்கள அரசே சில இயக்கங்களுக்குப் பின்னணியில் இருக்கிறது. உண்மையான போராளிகள்மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தவும் இயக்கங்களுக்கு உள்ளே குழப்பங்களை ஏற்படுத்தவும் இந்த இயக்கங்களைச் சிங்கள அரசு பயன்படுத்துகிறது. இந்தியாவிலுள்ள எங்களுக்கு வேண்டாத சக்திகளும், பத்திரிகைகளும் இந்த சமூகவிரோத இயக்கங்கள் செய்யும் காரியங்களை பெரிதுபடுத்தி, எங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்திற்கு இவற்றை பயன்படுத்திக்கொள்கிறார்கள். இதை அவர்கள் திட்டமிட்டே செய்கிறார்கள். இதை நாங்கள் அம்பலப்படுத்துகிறோம்'' என்று கூறி ஒரு பத்திரிகையை என்னிடம் காட்டினார்.

**''தமிழீழத்தில்''** என்ற பெயரில் வெளியாகும் விடுதலைப்புலிகளின் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் கட்டுரை அது. அதை நான் முழுவதுமாகப் படித்தேன். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

## உண்மைப் போராளிகள் யார்?

''எவ்விதப் பொருளாதாரத் திட்டமும் அற்ற இவர்கள் இன்று கடுமையாகக் கண்டித்தாலும் நாளை சாப்பாட்டிற்கு என்ன செய்வார்கள்? ஒரு குடும்பம் நடத்தவே பெரிய பிரச்னை ஏற்படும்போது ஆயிரக் கணக்கானவர்களைக் கொண்டு நடத்த என்ன செய்வது? சந்திக்கு வந்து சிகரட்டை ஊதி, தங்கச் சங்கிலிகளுடன் புதுப்புது வாகனங்களில் திரிபவர்கள் போராளிகளா? இவர்கள் மக்களை நேசிப்பவர்களா? மக்களை மதியாமல் இவர்கள் செய்யும் அட்டகாசங்கள் எல்லையைக் கடக்கின்றன ஆனால் இவர்கள் வெளியீடுகளில் இவர்கள் உன்னதப்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளிகள்! மக்களும் இவர்கள் வெளியீடுகளைப் பார்த்துத் திருப்தியடைகிறார்கள்.

எனவே மக்கள் நிதர்சன நோக்குடன் சிந்தித்து உண்மைப் போராளிகள் யார் எனத்தெளிவடையவேண்டும்.

சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகவே தமிழ் மக்கள் போராடுகின்றார்கள். அதே அடக்குமுறைகள் தறிகெட்ட இயக்கங்களால் ஏற்படும் என்றால்! அதற்கெதிராகவும் போராடி உண்மையான மக்கள் விடுதலையைத்தோற்றுவிக்க வேண்டிய கடமை மக்களுடையதே!.








## 63. இந்திராவின் அரவணைப்பு

யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது அங்குள்ள பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்குச் சென்று பலரைச் சந்தித்துப் பேசினேன். ஒவ்வொரு அலுவலகத்திலும் இருந்தவர்களுடன் மனம்விட்டுப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களின் பெயர்களையும் அவர்கள் என்னிடம் தெரிவித்த விவரங்களையும் அப்படியே சொல்லுவது தற்போது உசிதமானது அல்ல என்ற காரணத்தினால் அவற்றை இங்கே தெரிவிக்கவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும், சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்கள் பற்றியும் ஏராளமான விவரங்களை அவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள். இவர்களுடன் நான் நடத்திய விவாதங்களிலிருந்து ஒரு உண்மை எனக்குத் தெளிவாகப் புரிந்தது. ''பேச்சு வார்த்தைகளின் மூலமோ அல்லது சமரசங்களின் மூலமோ தங்கள் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது. ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலமே தங்கள் உரிமையை வென்றெடுக்க முடியும்'' என்று அவர்கள் கருதுகிறார்கள். இதைத் தவிர வேறு வழியே இல்லை என்றும் அவர்கள் உறுதியான குரலில் கூறினார்கள்.

''முப்பது ஆண்டு காலமாக நடைபெற்ற அறவழிப் போராட்டங்களின் மூலம் தங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பதையும், ஒவ்வொரு முறையும் தாங்கள் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்பதையும் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துவிட்டதாகவும்'' அவர்கள் கூறினார்கள். எனவேதான் ''அறவழிப் போராட்டங்களுக்கு விடை கொடுத்துவிட்டு, ஆயுதம் தாங்கிய போராட்டக் களத்தில் தாங்கள் அடியெடுத்து வைக்க வேண்டியதாயிற்று'' என்பதையும் அவர்கள் விளக்கினார்கள். போராளிகள் இயக்கங்கள் அல்லாத மற்றும் பல அமைப்புகளுடன் நான் பேசியபோதும் அவர்களின் கருத்தும் இதையொட்டியே அமைந்திருந்ததைப் பார்த்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணையோடு நான் ஈழம் வந்திருக்கிறேன் என்பது அவர்களுக்குத் தெரிந்த போதிலும் சகல இயக்கங்களைச் சேர்ந்த தோழர்களும் என்மீது அன்பும் மதிப்பும் செலுத்தினார்கள். அவர்களின் எண்ணங்களைத் திறந்த **மனத்துடன்** என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

அதைப்போலவே தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த முக்கியத்தலைவர்கள் இந்தியாவில் இருந்தபோதிலும் ஈழநாட்டிலுள்ள பல முக்கியமானவர்களையும் நான் சந்தித்துப் பேசினேன். அதைப் போலவே தொண்டைமான் அவர்களின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த சிலரையும் சந்தித்துப் பேசினேன்.

பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த இவர்கள் அத்தனைபேரும் என்னிடம் கொண்ட நம்பிக்கைக்கு நான் நன்றி செலுத்துகிறேன். தம்முள் ஒருவனாக என்னை ஏற்றுக் கொண்டு பல முக்கிய விஷயங்கள் குறித்து என்னுடன் மனம்விட்டு விவாதித்தனர். அவர்கள் கூறிய வற்றில் இப்போதைய சூழ்நிலையில் எதை மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டுமோ அதை மட்டும் இப்போது இங்கே தெரியப் படுத்துகிறேன்.

போர்நிறுத்தக் காலத்திலும் சிங்கள இராணுவத்தின் கொடுமைகள் தொடருவதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நீண்டகாலப் போராட்டத்திற்கான திட்டத்துடன் சிங்கள அரசு செயல்படுவதாகவும், புதிய புதிய இராணுவ முகாம்களை அமைத்துக்கொண்டே போவதாகவும் சிங்களப் பொதுமக்களும் ஆயுதபாணிகளாக ஆக்கப்படுவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர். யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குக் கீழேயுள்ள பகுதிகளில் மனித நடமாட்டமே சிரமத்துக்குள்ளாகியிருக்கிறது. கிழக்கு மாநிலத்தில் நிலைமை மிகவும் மோசமாகியிருக்கிறது என்பதையும் கூறினர்.

"திருகோணமலையிலிருந்து தமிழர்கள் திட்டமிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். மலையகத் தமிழர்களின் நிலைகூடப்பாதுகாப்பானதல்ல. மலையகப் பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு தரம் இராணுவம் மோட்டார் சைக்கிள்களில் ரோந்துவருகிறது. அன்னிய நாட்டு நிறுவனங்கள் தமிழீழப் பகுதியில் ஊடுருவத் தொடங்கிவிட்டன. பிரிமா மாவு மில், அமெரிக்க எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் போன்று அன்னியர் முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்தார்கள்.

திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் இஸ்ரேலிய மொசட் உளவாளிகள் மட்டுமல்ல பாலைவன நிபுணர்களும் ஊடுருவியிருக்கிறார்கள். வறண்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யவும் விவசாயப் பண்ணை, மாட்டுப்பண்ணை போன்றவைகளைப் பெருமளவில் வைக்கவும் இஸ்ரேலிய நிபுணர்கள் ஆலோசனை கூறிவருகிறார்கள். இவைகளில் சிங்களர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்புகள் அளிக்கப் படுகின்றன.



"ராஜீவ்காந்தி நினைப்பதைப் போல இலங்கை அரசு நடந்து கொள்ளப்போவதில்லை. இந்தியாவுக்கு எதிராகத் திரும்பப்போகிறது. அதற்குப் பின்னால் தமிழர்களுக்கு ஆதரவு தரும் கட்டாயத்திற்கு ராஜீவ் ஆளாக்கப்படுவார். இந்தியாவை மீறி சோவியத் நாடோ வேறு நடுநிலை நாடுகளோ இப்பிரச்னையில் தலையிடத் தயங்குகின்றன." இதுபோன்ற பல விஷயங்களை அவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள்.

என்னுடைய தியாகப்பயணம் பற்றிப் பெருமையாகவே பேசினார்கள். தியாகப்பயணத்திற்குப்பிறகே சிங்களவர்களுக்கு ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஈழநாட்டுத் தமிழர்களுக்கு துணைபுரியப்படையெடுத்து வரக்கூடும் என்ற ஒரு பயம் தியாகப்பயணத்திற்குப் பிறகுதான் சிங்களவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கூறினார்கள். எனது வருகையைக் குறித்து மட்டற்ற மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

**"எங்களை வைத்து அரசியல் நடத்தாமல் எங்களுக்காக உயிரைத் துச்சமாக மதித்து எங்கள் நாட்டுக்கு வந்தவர் நீங்கள், தமிழ்நாட்டுத்தலைவர்களில் நீங்கள் வித்தியாசமானவர்" என்றும் அவர்கள் கூறினர்.**

விடுதலை இயக்கங்களைப் பிளவுபடுத்தவும், இயக்கங்களுக்குள் மோதல் ஏற்படுத்தவும் ஜெயவர்த்தனா இடைவிடாது முயற்சி செய்வதையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

## இந்திராவின் அரவணைப்பு

தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் மிக உயர்ந்த இடத்தை அன்னை இந்திரா பெற்றிருப்பதை நான் சென்ற இடமெல்லாம் பார்த்தேன். அன்னை இந்திராவுக்கு அஞ்சலி செலுத்தி ஒட்டப்பட்டிருந்த பல்வேறு சுவரொட்டிகளை நான் பல இடங்களில் பார்த்தேன். குறிப்பாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அன்னை இந்திராவின் படம் ஒட்டப்பட்டிருப்பதையும் அதன்கீழ் அவருக்கு

பிற்காலத்தில் இது உண்மையாகிவிட்டது. சிங்கள அரசு இந்திய உளவுத்துறையான RAW ஆகியவை விரித்த வஞ்சக வலையில் பல இயக்கங்கள் சிக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அஞ்சலி செலுத்தும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருப்பதையும் கண்டு மனம் நெகிழ்ந்தேன்.

அவற்றைப் பார்த்தபோது எனது நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன. 1978 ம் ஆண்டில் அன்னை இந்திரா பதவியை இழந்து எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அவரைச் சந்திக்கத்தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் அவரது துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி ஆகியோரை நானும் நண்பர் டாக்டர் திரு. ஜனார்த்தனம் அவர்களும் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தோம். இலங்கைத் தமிழர் நிலை குறித்து அவர்களிடம் மனம்விட்டுப் பேசினார் அன்னை இந்திரா. இந்தப் பிரச்னையில் அவர் எவ்வளவு ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறார் என்பது எனக்கு அன்று தெரிந்தது. அதன் பின்னர் அவர் இறக்கும் காலம் வரையிலும் இப்பிரச்னையில் ஈழத்தமிழர்பால் அனுதாபம் காட்டியே வந்தார். ஈழத்தமிழர் பிரச்னை தொடர்பாக அவரை நேரில் சந்தித்த காலத்திலும் கடிதங்களைப் பரிமாறிக் கொண்ட காலத்திலும் அவரது உள்ளம் எனக்கு நன்கு புரிந்தது. அவற்றையெல்லாம் சொல்வதென்றால் அதற்குத் தனியான நூலே எழுத வேண்டும்.

தமிழீழ மக்களும் அன்னை இந்திராவை எவ்வளவு அதிகமாக நேசித்தார்கள் என்பதை நான் நேரில் கண்டபோது மனமுருகிப் போனேன்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் மலையகம் எங்கும் கருப்புக்கொடிகள் ஏற்றப்பட்டுக்கடைகளும் பள்ளிகளும் அடைக்கப்பட்டுப்போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டு நவம்பர் 1, 2, 3, ஆகிய தேதிகளில் பரிபூர்ண துக்கத்தை ஈழமக்கள் கடைப் பிடித்ததாக என்னிடம் சொன்னார்கள்.

அன்னை இந்திராவின் மறைவிற்குத் தமிழர்கள் அஞ்சலி செலுத்துவது கண்டு சிங்கள இராணுவம் எரிச்சல் அடைந்ததாம். தெருக்களில் கட்டப்பட்டிருந்த கருப்புக் கொடிகளை அவர்கள் அகற்றினார்களாம்.

யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு நான் சென்றபோது அங்கிருந்தவர்கள் நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். யாழ் மருத்துவமனையில் சிங்கள தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. தமிழ் இளைஞன் ஒருவன் அக்கொடியை இறக்கிவிட்டுக் கருப்புக் கொடியை ஏற்றினார். அச்சமயம் அவ்வழியே வந்த சிங்கள



இராணுவத்தினர் ஆத்திரமடைந்து துப்பாக்கியால் சுட்டனர். கருப்புக் கொடியை ஏற்றிய இளைஞனும் அவனுடைய நண்பன் ஒருவனும் "அன்னை இந்திரா வாழ்க" என்று முழங்கியபடியே துடி துடித்து மாண்டனர்.

இதைப்போலவே சாவகச்சேரியிலும் தங்கள் சைக்கிள்களில் கருப்புக் கொடிகளைக் கட்டியபடி சென்ற இரு தமிழர்களை சிங்கள இராணுவம் சுட்டுத் தள்ளியது.

"உரும்பராய் என்னும் ஊரில் துக்க தினத்தைக் கடைப்பிடிப்பதில் ஈடுபட்டிருந்த ஒரு தமிழ்க் குடும்பத்தையே சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்றது. குடும்பத் தந்தையையும் அவரது புதல்வர்களையும் வேலைக்காரனையும் வீட்டிற்குள் புகுந்து இராணுவம் படுகொலை செய்தது. இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் யாழ்ப் பல்கலைக் கழக விரிவுரையாளர் தேவகுமாரும் ஒருவராவார்.

மோட்டார் சைக்கிளில் கருப்புக் கொடி கட்டிச் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் மீதும் இராணுவம் சுட்டு அந்த இரு இளைஞர்கள் அவ்விடத்திலேயே இறந்தனர். ஆனால் சிங்கள இராணுவத்தின் இத்தகைய மிரட்டல்களைக் கண்டு கொஞ்சமும் பயப்படாமல் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் 21 குண்டுகளை வெடிக்க வைத்து வீராங்கனை இந்திராவுக்கு இராணுவ ரீதியான அஞ்சலி செலுத்தினர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரான திரு. பிரபாகரன் அவர்கள் கீழ்க்கண்ட அஞ்சலி அறிக்கையை வெளியிட்டார். புதிய பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுதாபமும், ஆறுதலும் அதில் தெரிவித்திருந்தார். இந்த அறிக்கை தமிழீழம் எங்கும் துண்டு பிரசுரங்களாக வழங்கப்பட்டது.

"அன்னை இந்திராகாந்தி கொடிய கொலைஞர்களால் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு, நாங்கள் ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியுமுற்றோம். மனித சமூகத்துக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமான இக்கொலை பாதகச் செயலை நாங்கள் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

ஒடுக்கப்பட்ட மனித குலத்தின் ஒளி விளக்காகவும் பாரத தேசத்தின் உன்னத ஆத்மாவாகவும் திகழ்ந்த ஒப்பற்ற பெருந்தலைவரை நாம் இழந்து நிற்கிறோம். உங்கள் குடும்பமும் இந்திய மக்களும் உலகமும் இந்த ஈடு செய்ய முடியாத பேரிழப்பால் அடைந்திருக்கும் ஆழ்ந்த துயரத்தில் நாங்களும் பங்குகொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திராகாந்தி உலக அமைதிக்காகவும் மனித சுதந்திரத்துக்காகவும் அயராது போராடிய வீராங்கனை ஆவார். தீர்க்கதரிசனத்தோடும் பூரண அர்ப்பணிப்போடும் இந்தியாவை சோசலிஷப் பாதையில் நிர்மாணம் செய்ய அயராது உழைத்தார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் பேராதிக்கச் சதி வலைப்பின்னலையும் அவர் முழுமூச்சாக எதிர்த்து வந்தார். நாடுகளின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலகம் எங்கும் நடைபெற்ற தேசீய விடுதலைப் போராட்டங்களை அவர் முன்நின்று ஆதரித்துவந்தார்.

ஆதரவற்ற நிலையில் துயருறும் தமிழ் ஈழ மக்களின் மீது அன்னை இந்திரா எப்போதும் அனுதாபமும் அக்கறையும் காட்டிவந்து இருக்கிறார்.

சிங்கள அரசாங்கம் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்க மறுத்துவருவதை அவர் எப்போதுமே கண்டித்தார். தமிழ் ஈழ மக்களின் மீதான இனப் படுகொலையை நிறுத்தியாக வேண்டும் என்று அரசியல் ராஜதந்திர வழிகளில் அவர் இலங்கை அரசை நிர்ப்பந்தித்தார்.

இந்தியாவின் நல்லெண்ண அனுசரனையின் கீழ், தமிழ் மக்களின் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குத் தனிப்பட்ட முறையில் பெரும் அக்கறை செலுத்தினார்.

தமிழ் ஈழ மக்களின் பெருங்காவலராகத் திகழ்ந்தார். அவரது தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எங்கள் நாடே அழிந்துபோய் இருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீக வலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார்.

தமிழ் மக்கள் அன்னை இந்திராவை என்றும் அன்புடனும் நன்றியுடனும் பெருமதிப்புடனும் நினைவுகூர்வார்கள்.

தேசீய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள் எந்த உன்னத இலட்சியங்களுக்காக அன்னை இந்திரா காந்தி வாழ்ந்து, போராடி இறந்தாரோ அந்த இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வீர்கள் என்று நம்புகிறோம்.''

**தம்பி பிரபாகரனின் இந்த அறிக்கை தமிழீழ மக்களின் உண்மையான மன உணர்வுகளைப் பிரதிபலித்தது.**





# 64. வீரமே ஆரம் - தியாகமே அணி

ஈழப் போர்க்களத்தில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளின் வீடுகளுக்குச் சென்று வீரப் புதல்வர்களை ஈன்றெடுத்த பெற்றோர்களைத் தரிசித்து அவர்களுக்கு ஆறுதல் கூறும் புனிதப்பணியினையும் எனது சுற்றுப் பயணத்தில் மேற்கொண்டிருந்தேன்.

விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் முதலாவது களபலியான பெருமைக்குரியவன் சங்கர். அவனது பெற்றோரைச் சந்திக்க நான் சென்றேன்.

**சங்கர்** என்றும் சுரேஷ் என்றும் அழைக்கப்பட்ட அவனது உண்மையான பெயர் செ. சத்தியநாதன் என்பதாகும். 20 வயதிலேயே விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் சேர்ந்து தலைமறைவு வாழ்க்கை நடத்தியவன். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ''தாக்குதல் பிரிவு'' த்தலைவனாக விளங்கியவன்.

நெல்லியடியில் சிங்களப்படைகள் மீது புலிகள் நடத்திய கொரில்லாத் தாக்குதலை சங்கர் முன்னின்று நடத்தினான். சாவகச்சேரி போலீஸ் நிலையத்தின்மீது கொரில்லாப் போர்த் தாக்குதல் நடத்தி அடைந்த வெற்றியிலும் சங்கருக்குப் பங்குண்டு. பொன்னாலைக்குண்டு வெடிப்பு நிகழ்ச்சியிலும் அவன் பிரதான பங்கேற்றவன். இப்படிப்பல்வேறு களங்களில் முன்னின்று போராடிய சங்கர் விடுதலைப் புலி இயக்கத்தின் சார்பில் முதலாவது களபலியாகும் பெருமையையும் அணைத்துக் கொண்டான்.

அவனிருந்த முகாமைச் சிங்களப் படைகள் சுற்றி வளைத்துக் கொண்டு சரமாரியாகச்சுட்டுத் தள்ளினார்கள். சங்கர் படுகாயமடைந்த போதிலும் கூட மதில் தாண்டிப் பாய்ந்து புலிப்படையின் மற்றொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகாமை நோக்கித் தப்பிச் சென்றான். படுகாயமடைந்த நிலையில் அவன் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டான்.

மதுரையில் அவனுடைய உயிரைக் காக்க நாங்கள் பெரும் முயற்சி செய்தோம். ஆனாலும்கூட அந்த மகத்தான வீரனின் உயிரை எங்களால் காப்பாற்ற முடியவில்லை. சாகும் தறுவாயில் கூட அவன் தன் பெற்றோர்களையோ மற்றவர்களையோ நினைக்க வில்லை. ''தம்பி! தம்பி! என்றுதான் அந்த வீரனின் உதடுகள் முணுமுணுத்தன. தன்னுடைய தலைவனின் மடியிலேயே இறுதி மூச்சை விட விரும்பினான். அவ்விதமே தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் மடியில் அவனுடைய விழிகள் நிரந்தரமாக மூடிக் கொண்டன. அந்த வீரத்திருமகனின் களை பொருந்திய முகத்தில் பிரபாகரனின் விழிகளிலிருந்து பெருகிய நீர் வீழ்ந்து முத்து முத்தாகச் சிதறியது. மதுரையில் அவனது உடலுக்கு இறுதிக் கிரியை செய் தோம்.

கடந்த காலத்தைப் பற்றிய இந்நினைவுகள் என் உள்ளத்தில் அலைமோத சங்கரின் வீட்டிற்குள் நுழைந்தேன். அவனுடைய தந்தை திரு. செல்வா சந்திரன் அவர்களையும் தாய் திருமதி பரமேஸ்வரி அவர்களையும் சந்தித்த போது என்னுடைய கண்கள் கலங்கின. அவர்களுக்கு ஆறுதல் சொன்னேன். சங்கரின் இறுதிக்காலத்தைப் பற்றிய விவரங்களையும் தெரிவித்தேன். சங்கர் அவர்களது மூன்றாவது பிள்ளை. அவனது குணச்சிறப்புகள் பற்றியெல்லாம் அவர்கள் சொன்னார்கள்.

சங்கரின் தந்தை தீவிரமான தேசபக்தர். தமது வீட்டிற்கு அருகாமையிலுள்ள அகதிகள் குடியிருப்புக்கு என்னை அழைத்துச் சென்று அவர்களின் துயரங்களை விளக்கிச் சொன்னார். மகன் இறந்த துக்கத்தைக்கூடப்பொருட்படுத்தாமல் அகதிகளுக்கான புனர்வாழ்வில் தம்மை முழுமையாக அவர் அர்ப்பணித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து மனம் நெகிழ்ந்தேன்.

## சுதன்

1985-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதி சிங்களவரிடம் போராடி வீரமரணமடைந்த விடுதலைப்புலி சுதன் என்பவரின் இல்லத் திற்குச் சென்றிருந்தேன். பதினெட்டே வயதான சுதனின் பெற்றோர் வயதானவர்கள். அவனுடைய தந்தை திரு. அருணாசலம் என்பவரை யும் அவனுடைய தாயையும் பார்த்தேன். அந்த வயதான பெற்றோ ருக்கு அவன் ஆறாவது குழந்தை. மூத்த புதல்வர்களுக்கெல்லாம் திருமணமாகி அவர்களெல்லாம் குழந்தைகுட்டிகளுடன் வாழ்கின்றனர்.



நான் சென்றபோது ஒட்டுமொத்தமாக அந்தக் குடும்பமே அங்கே கூடிவிட்டது. பெற்றோர், அண்ணன்மார்கள், அண்ணிமார்கள், அக்காமார்கள், அத்தான்மார்கள் அத்தனை பேருக்கும் செல்லக் குழந்தையாக விளங்கியவன் அவன். அவனைப் பிரிந்த அதிர்ச்சியி லிருந்து அந்தக் குடும்பம் இன்னும் மீளவில்லை. அவர்களுக்கு ஆறுதல் சொன்னேன். ஒரு மகனை நாட்டுக்காக இழந்துவிட்ட அந்தப் பெற்றோர் இன்னொரு மகனையும் இயக்கத்திற்கு அர்ப்பணித்திருப்ப தாகக் கூறியபோது நான் நெஞ்சம் நெகிழ்ந்தேன். சுதனின் அக்காமார் களும் அண்ணிமார்களும் தங்கள் குழந்தைகளைச் சுட்டிக்காட்டிச் சொல்லியதை என்னால் என்றும் மறக்க முடியாது. ''எங்கள் குழந் தைகளைக் காப்பாற்றுவதற்காக சுதன் சாகவில்லை, எமது நாட்டி லுள்ள குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகவும் எம்மைப் போன்ற ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவதற் காகவும் அவன் தனது இன்னுயிரைத் தியாகம் செய்திருக்கிறான். புலிப்படை இளைஞர்கள் எங்களுக்காகச் சாகிறார்கள், அவர்களுக்காக எந்தத் தியாகத்தையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்'' என்று அந்தப் பெண்கள் உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டபோது இறந்துபோன சுதன் புன்னகை வடிவில் காட்சி தருவதுபோல எனக்குத் தோன்றிற்று.

## வாசன்

தமிழீழத்தில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது நான் சென்ற வேனைப் பெரும்பாலும் ஓட்டியவர் இன்ஜினியர் என்று அழைக்கப் பட்ட புலிப்படை வீரராவார். சேறானாலும் சகதியானாலும் அடர்ந்த காட்டுப் பாதையானாலும் குண்டும் குழியுமாக இருக்கும் சாலையானா லும் வாகனத்தை அவர் ஓட்டும் சாமர்த்தியத்தைப் பார்த்து நான் வியந்தேன்.

இன்ஜினியர் என்று சக தோழர்களால் செல்லமாக அழைக்கப் படும் அவர் ஒரு ஏரிக்கரையின் சரிவில் வாகனத்தை மேலே ஏற்றியும் கீழே இறக்கியும் ஓட்டிய விதம் கண்டு எல்லோரும் அதிசயித்தோம்.

சிங்கள இராணுவ முகாம்களின் அருகேயுள்ள கிராமங்களுக்கும் எல்லையோரப்பகுதியிலுள்ள சில இடங்களுக்கும் வேன் அல்லது ஜீப் மூலம் செல்வது அபாயகரமானது. மோட்டார் சைக்கிள் மூலம் அந்த இடங்களுக்குச் சென்று வர வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது தன்னுடைய தோளில் இயந்திரத் துப்பாக்கியை மாட்டிக் கொண்டு என்னையும் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டிய வீரர் இன்ஜினியர் ஆவார். அவருடன் தனியாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல இடங்களுக்குச் சென்றேன். அவருடன் பேசிக் கொண்டேபோவது
ஒரு சுவையான அனுபவமாக இருந்தது.

புலிப்படையின் தாக்குதல் பிரிவு லெப்டினண்டாக இருந்த
**வாசனைப்** பற்றி அவரும் மற்றுந் தோழர்களும் பல செய்திகளைக்
கூறினார்கள். வாசன் **எந்தஅளவுக்குப்** புலிப்படை இயக்கத் தோழர்
களின் மனதைக் கவர்ந்தவன் என்பதற்குச் சான்றாக, இயக்கம் நடத்தும்
கடைகள், அவர்களின் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றிற்கு
வாசனின் நாமம் சூட்டப்பட்டுள்ளதை நான் பல இடங்களில் பார்த்தேன்.

வாசனின் அண்ணனான இன்ஜினியரும் மற்றுந்தோழர்களும்
மறைந்த மாவீரன் வாசனை பற்றிய சுவையான நினைவுகளை
எனக்குச் சொன்னார்கள்.

இயக்கத் தோழர்கள் வாசனைச் செல்லமாக **பூதம்** என்றும்
**முரடா** என்றும் அழைப்பார்கள். அவனின் வீரமும் **அனுபவமுமே**
அவனுக்கு இப்பெயர்களைத் தேடிக்கொடுத்தன. குருநகர் பகுதியில்
அரசியல் வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்ட வாசன் தனது குண
நலன்களாலும், தொண்டினாலும் அப்பகுதி மக்களுக்குள் ஒருவனாக
அம்மக்களோடு பின்னிப் பிணைந்து விட்டான்.

யாழ்ப்பாணத் தளபதி கிட்டு என்னைக் குருநகர்ப் பகுதிக்கு
அழைத்துச் சென்ற போது அப்பகுதி மக்கள் வாசன் மீது எத்தகைய
மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் நேரில் பார்த்தேன்.

சிங்கள இராணுவ வெறியரான **பிரிகேடியர் ஆரியபெருமு**
என்பவனைப்பழிவாங்க வாசன் சபதம் செய்தான். இரவும் பகலுமாக
அவனைத் தேடித் திரிந்தான். இறுதியில் 'கட்டுவன்' என்ற இடத்தில்
வைத்து பிரிகேடியர் ஆரியபெருமு மீது வெடிகுண்டு வீசித் தாக்கி
அவனைச் சாகடித்தான். ஒரு உயர்தரச்சிங்கள அதிகாரி இவ்வாறு
படுகொலை செய்யப்பட்டதைக் கண்டு சிங்கள இராணுவம் கதி
கலங்கியது. ஆனால் தமிழீழ மக்களைக் கொன்று குவித்த ஒரு
வெறியன் ஒழித்துக்கட்டப்பட்டதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சியடைந்
தார்கள். அதைப் போலப்பலோலி விமான நிலையத்தில் விமானப்
படை விமானம் மீது அவன் நடத்திய தாக்குதலும் யாழ் போலீஸ்
நிலையத்தின் மீது அவன் நடத்திய தாக்குதலும் புகழ் பெற்றவை.
இப்படிப்பல தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்திச்சிங்கள இராணுவத்
திடமிருந்து ஏராளமான ஆயுதங்களைப் பறித்து எடுத்தவன்**லெப்டினன்ட்**
வாசன்.



ஒரு நாள் குருநகர்ப்பகுதியில் அவனிருந்த மாடி வீட்டை இராணுவம் முற்றுகையிட்டது. யாரோ ஒரு துரோகி செய்த துரோகத் தனத்தினால் வாசனின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்ட சிங்கள இராணுவம் அதைச் சுற்றி வளைத்துக் கொண்டது. தன்னந்தனி யாகச்சிக்கிக்கொண்ட நிலையிலும் வாசன் கொஞ்சமும் அஞ்சவில்லை பல சிங்கள வீரர்களைச் சுட்டுத்தள்ளி, வீட்டின் கூரையை உடைத்து வெளியேறி அங்கிருந்து குதித்துத் தப்பி ஓடும் போது சிங்களச் சிப்பாயின் ஒரு குண்டு அவன் வயிற்றில் பாய்ந்தது. இரத்தப் பெருக்கெடுத்து ஓடும் நிலையிலும் அவன் தப்பி ஓடினான். அவன் சுயநினைவை இழக்கத் தொடங்கியபோது அவனது தோழர்கள் உதவிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அபாய நிலையிலிருந்த வாசனை எடுத்துச் செல்ல அருகிலிருந்த வாகனம் ஒன்றைக் கேட்டபோது அதன் உரிமையாளர் கொடுக்க மறுத்து விட்டார். எவ்வளவோ கெஞ்சியும் இரக்கமற்ற அந்த மனிதர் தன் வாகனத்தைக் கொடுக்க மறுக்கவே வாசனைத் தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்குத் தோழர்கள் ஓடினார்கள். ஆனாலும்கூடச்செல்லும் வழியிலேயே தன் தோழர்களின் அன்புக்கரங்களில் மாவீரன் வாசன் உயிர் துறந்தான்.

## செல்லக்கிளி

யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலி என்ற பகுதியில் நாங்கள் சென்று கொண்டிருந்தபோது ஒரு இடத்தில் எங்கள் வேன் நிறுத்தப் பட்டது. தளபதி கிட்டு கீழே இறங்கும்படிக்கூறினார். எல்லோருமாக இறங்கினோம்.

''அண்ணா! இந்த இடத்தில்தான் செல்லக்கிளி விரமரணம் அடைந்தான்'' என்று சொல்லிவிட்டு அந்த வீரஞ்செறிந்த நிகழ்ச்சியை விவரித்தார்.

''1983-ம் ஆண்டு ஜுன் மாதம் 23-ம் தேதி தமிழீழ வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்ட நாள் ஆகும். மாதகல் இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாண நகருக்குச் செல்லும் நோக்குடன் ரோந்து வந்துகொண்டிருந்த சிங்கள இராணுவ வண்டிகள் இந்த இடத்திற்கு வந்தபோது செல்லக்கிளியின் தலைமையில் 10 விடுதலைப்புலிகள் தங்கள் தாக்குதலைத் தொடங்கினர். **அந்த 10 வீரர்களில் தலைவர் பிரபாகரனும் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.** இயக்கத்தின் தலைவரான பிரபாகரன் மற்றவர்களுக்கும் அனுபவப் பயிற்சி ஏற்படவேண்டும் என்று கருதியதனால் அந்த தாக்குதலுக்கான தலைமையைச் செல்லக்கிளியிடம் ஒப்படைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேகமாக முன்னால் வந்த இராணுவ ஜீப் வண்டி விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கிச்சரியான நேரத்தில் வெடித்த தால் மேலே தூக்கி எறியப்பட்டுக்கீழே விழுந்து சிதறியது. கீழே விழுந்த சிங்கள வீரர்கள் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டுத் தப்பி ஓட முயன்றனர். பின்னால் வந்த இராணுவ டிரக்கு வண்டிகளிலிருந்து சிப்பாய்கள் பீதியினால் வண்டிக்குள்ளேயே பதுங்கினார்கள். விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் சீறி வெடித்தன. தமிழீழத்தில் முதல் தடவையாக அதிக அளவு சிங்கள இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர். 13 சிங்கள அரக்கர்களை வீழ்த்திய வெற்றிக்களிப்போடு தனது மறைவிடத்தில் இருந்து வெளிப்பட்டான் செல்லக்கிளி. அதே நேரம் சிங்களச்சிப்பாய் ஒருவன் சுட்ட குண்டு செல்லக்கிளியின் இருத யத்தை ஊடுருவிச் சென்றது. வெற்றிக்கனியை ஈட்டியவீரன் எதிர் பாராதவிதமாக வீரமரணம் அடைந்தான்.

13 இராணுவத்தினரை வீழ்த்தியதோடு மட்டுமல்ல ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றிய விடுதலைப்புலிகளின் உற்சாகம் செல்லக் கிளியின் மறைவுச் செய்தியை அறிந்ததும் மறைந்தது. இயக்கத் தலைவர் பிரபாகரன் பேரதிர்ச்சி அடைந்தார்.

நிகழ்ச்சி நடந்த அந்தப் பகுதியில் செல்லக்கிளி மாண்ட இடத் தையும், தலைவர் பிரபாகரன் மறைந்திருந்து தாக்கிய இடத்தையும் எனக்கு நண்பர்கள் காட்டினார்கள்.

செல்லக்கிளியைப் பற்றிய பல விவரங்களைத்தளபதி கிட்டுவும் லிங்கமும் எனக்குத் தெரிவித்தார்கள். கல்வியங்காடு என்ற கிராமத்தில் ஏழைவிவசாயக் குடும்பத்தில் பிறந்த செல்வநாயகம் ஆரம்பக் கல்வி யைக்கூடத்தொடரமுடியாத நிலையில் வேன்சாரதியாகப் பணியாற்றி னான். புலிகள் இயக்கத்தில் சேர்ந்த பின்னர் அதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டான். திறமையான சாரதியான செல்லக்கிளி காட்டுப்பாதைகளை அறிந்து ஓட்டுவதில் அதிசயிக்கத் தக்க ஆற்றல் பெற்றிருந்தான். ஆரம்ப காலங்களில் காடுகளில் இயக் கத்திற்கான முகாம்களை அமைக்கும் வேலைகள் அவனது தலைமை யில்தான் நடைபெறும்,

அப்படி ஒருமுறை அந்த வேலையில் ஈடுபட்டிருந்தபோது ஒரு நாள் எதிர்பாராமல் இரண்டு பெரிய கரடிகள் அவனைத் தாக்கின. அவற்றில் ஒன்றைத் தனது கோடாரியால் வெட்டிக்கொன்றான் செல்லக்கிளி. மற்றொரு கரடியை உடன் இருந்தவர்கள் சுட்டுக் கொன்றார்கள். இயக்கத்தையும் அவனையும் பிரித்துப்பார்க்க முடியாத



அளவுக்குத்தன்னை இயக்கத்திற்கு அவன் அர்ப்பணித்திருந்தான். அவனுக்குச் சொந்தமான இரண்டு மாடுகளை விற்றுக் கிடைத்த பணத்தில்தான் புலிகள் இயக்கத்திற்கான முதல் துப்பாக்கி வாங்கப் பட்டது. இயக்கத்தின் பல்வேறு முக்கியத்தாக்குதல் நிகழ்ச்சிகளில் அவன் பெரும் பங்கு வகித்தான்.

விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை எப்படியோ உளவறிந்து போலீஸ் அதிகாரி பஸ்தியான்பிள்ளை குழுவினர் முற்றுகையிட்டபோது செல்லக்கிளியும் அவனது தோழர்களும் நிராயுதபாணிகளாக இருந் தார்கள். இயந்திரத் துப்பாக்கி, வெடித்துப்பாக்கி, கைத்துப்பாக்கி சகிதம் வந்திருந்த போலீஸார் மீது மின்னல் வேகத்தில் பாய்ந்து ஆயு தங்களைப் பறித்தெடுத்தான். போலீஸ் அதிகாரி பஸ்தியான்பிள்ளை உட்படம்பலர் சுட்டு விழ்த்தப்பட்டனர். போலீஸார் கொண்டுவந்த ஆயுதங்களாலேயே அவர்களைச் சுட்டு வீழ்த்தியதுடன் அவர்கள்வந்த வாகனத்தையும் எடுத்துக்கொண்டு செல்லக்கிளி தன் தோழர்களுடன் தப்பிச் சென்றான். செல்லக்கிளியின் இந்த வீரசாகசம் அனைவரையும் வியக்கவைத்தது.

செல்லக்கிளி என்றும் அம்மான் என்றும் சந்திரன் என்றும் தனது தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டான். ஆரம்ப காலங்களில் தம்பி பிரபாகரனோடு செல்லக்கிளி எங்கள் வீட்டில் தங்கியிருந்த நாட்களை நான் நினைத்துப் பார்த்தபோது என் விழிகளில் நீர்த்திரை யிட்டது.

செல்லக்கிளி வீரமரணம் அடைந்த இடத்தில் நின்று அவனுக்கு அஞ்சலி செலுத்திவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தேன்.

## பண்டிதர்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் **பண்டிதர்** என்ற **இரவீந்திரனுக்கு** முக்கியமான இடமுண்டு. தனது ஒப்பற்ற வீரத்தி னாலும் அளப்பரிய தியாகத்தினாலும் வரலாற்றில் அழியாத முத்திரை யைப் பொறித்தவன் அவன். தலைவர் பிரபாகரனின் வலதுகரமாக விளங்கியவன்.

மறைந்த அந்த மாவீரனின் சொந்த ஊரான 'கம்பர்மலை' என்ற கிராமத்திற்கு நான் சென்றிருந்தேன். பண்டிதரின் எளிய வீட்டிற்கு நான் சென்றேன். அந்தச் சின்னஞ்சிறிய வீட்டில் பண்டிதரின் தாயை யும் சகோதரரையும் பார்த்தேன். கண்ணீரும் கம்பலையுமாக அந்த அம்மையார் காட்சிதந்தார். சுவரில் மாட்டப்பட்டிருந்த பண்டிதரின் படங்களைப் பார்த்தபோது எனது நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்நாட்டில் பண்டிதர் என்னோடு தங்கியிருந்த அந்த நாட்கள் என்
நினைவுக்கு வந்தன.

விடுதலைப்புலிகள் இயக்கம் முளைவிட்ட நாளிலிருந்து அந்த
இயக்கத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு தலைவர்
பிரபாகரனின் ப ரி பூ ர ண நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்ந்தவன்
பண்டிதர். இயக்கத்தின் நிதி மற்றும் ஆயுதப் பொறுப்புகளை ஏற்றுத்
திறம்பட நிர்வகித்து வந்தவன் அவனே. பண்டிதர் என்றும் தாகூர்
என்றும் இயக்கத் தோழர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட அவனின்
உண்மைப் பெயர் இரவீந்திரன் என்பதாகும். தலைவர் பிரபாகரனின்
சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலை
என்பது அவன் பிறந்த கிராமமாகும். விடுதலைப்புலி இயக்கத்தின்
முதல்களப்பலியாக வீர மரணமடைந்த சங்கரின் பள்ளித் தோழன்
பண்டிதர். 1977-ம் ஆண்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து
இயக்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தான்.

வறுமையில் வாடிய குடும்பம் அவனது குடும்பம். இரவீந்திரன்
ஒன்றரை வயதுக் குழந்தையாக இருந்தபோதே அவனது தந்தை
காலமாகிவிட்டார். தனி ஒரு. ஆளாக நின்று தனது குழந்தைகளை
வளர்க்க அ ந் த ஏழைத்தாய் படாதபாடுபட்டார். இரவீந்திரன்
இளமைப்பருவத்தைப் பற்றிக்கூறிய அந்தத் தாய் "இந்த வீட்டில்தான்
இயக்கமே பிறந்தது" என்று சொல்லி அழுதார். "பிரபாகரனும்.
இரவீந்திரனும் சங்கரும் மற்றவர்களும் இந்த அறைக்குள்தான் கூடிக்
கூடிப் பேசுவார்கள். ஏதோ சிறுபிள்ளைகள் பேசுவதற்கு எத்த
னையோ விஷயம் இருக்கும் என்று நான் அலட்சியமாக இருந்தேன்
போகப் போகத்தான் எனக்கு விஷயம் புரியத் தொடங்கியது. பிள்ளை
களின் முடிவுகண்டு பதறிப்போனேன். ஆனாலும் என்மகன் என்னைத்
தேற்றினான். மெல்லமெல்ல அவன் வழிக்கு என்னைக் கொண்டு
போனான்" என்று அந்த வீரத்தாய் மனம் கசியக் கூறினார்.'

சுவரில் மாட்டப்பட்டிருந்த பண்டிதரின் படத்திற்கு மேலாக
**வீரபாண்டிய கட்டபொம்மன், நேதாஜீ, பகத்சிங்** போன்றவர்களின்
படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அந்தத்தியாகத் தலைவர்களின் வாழ்க்
கையைப் பின்பற்றிப்பண்டிதரும் வீர சொர்க்கம் அடைந்துவிட்டான்.
அந்தப் படங்களை நான் பார்ப்பதைக் கண்ட அவனுடைய தாயார்
"ஐயா! அந்தப் படங்கள் எல்லாம் என்மகன் கொண்டுவந்து மாட்டிய
படங்கள்" என்று சொன்னார். நேதாஜியையும், பகத்சிங்கையும்
இந்திய நாட்டு இளைஞர்கள் மறந்துபோயிருக்கலாம். ஆனால் ஈழ
நாட்டு இளைஞர்களோ அவர்களை மறக்கவில்லை. அவர்களின்



தியாக வாழ்வைப் பின்பற்றி அவர்களின் உண்மை வாரிசுகளாக
இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தாய்க்கு ஆறுதல் கூறினேன். ஆனால் அவர் அழுது
கொண்டே சொன்னார் "அவன் சாவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு
முன்பாக அவனை நான் பார்த்தது. இரண்டாண்டு காலமாக அவனை
நான் கண்ணாலே காணவில்லை" என்று சொல்லிச் சொல்லி அவர்
அழுதபோது அவரைத் தேற்றும் விதம் எனக்குத் தெரியவில்லை.

அருகிலிருந்த அவரது சகோதரர் இன்னொரு நிகழ்ச்சியைக் கூறி
னார். "இரவீந்திரன் யாருக்கும் பயப்படமாட்டான். ஆஸ்துமா
நோயினால் அவன் அவதிப்பட்டபோதிலும்கூட உறுதி வாய்ந்த
உள்ளம்கொண்டவன். 'புலோலியில்' அவன் ஒருமுறை சைக்கிளில்
போய்க்கொண்டிருந்தான். அப்போது எதிர்பாராமல் மூன்று சிங்கள
இராணுவ வெறியர்கள் குறுக்கிட்டனர். அவர்களுடைய கைகளில்
இயந்திரத் துப்பாக்கிகள் மின்னின. நில்! என உத்தரவிட்டார்கள்
இரவீந்திரன் ஒருகணம் நின்றான், மறுகணம் அவனுடைய கைத்
துப்பாக்கி மின்னி வெடிக்கத் தொடங்கியது. சிங்களச் சிப்பாய் ஒருவன்
நெற்றியில் குண்டு பாய்ந்து குருதி வெள்ளத்தில் வீழ்ந்தான். மற்ற
வர்கள் ஓடி ஒளிந்தார்கள்".

இத்தகைய வீரம் நிறைந்த தனது சகோதரன் சாகாவரம் பெற்
றவன் என்று நம்பியிருந்த அவர் தலையில் இடி வீழ்ந்ததுபோலப்பண்டி
த ர் இறந்த செய்தி வந்தபோது அவர் நிலைகுலைந்துதான்போனார்.
அந்தத் தாய்க்கும், அந்தச்சகோதரனுக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு நான்
கனத்த நெஞ்சத்தோடு புறப்பட்டேன். வழியில் தோழர்கள் பண்டிதர்
இறந்த நிகழ்ச்சியை எனக்கு விவரமாகச் சொன்னார்கள்.

1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் தேதியன்று காலை நாலு
மணிக்கு 'அச்சுவேலி' கிராமத்திலிருந்த புலிகளின் பாசறையைச் சிங்கள
இராணுவம் சுற்றி வளைத்துக்கொண்டது. இரவீந்திரனும் மேலும்
14 விடுதலைப் புலிகளும் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தனர்.

அச்சுவேலி கிராமத்தை இதற்கு முன்பு பல தடவை இராணுவம்
சல்லடைபோட்டுத் தேடியிருக்கிறது. ஆனாலும் இந்தப் பாசறையை
அது கண்டுபிடித்ததில்லை.

யாரோ ஒரு துரோகி கொடுத்த தகவலின்பேரில் 500-க்கு
மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் டிரக்குகளில் வந்திறங்கி அந்த
ஊரையே வளைத்துக்கொண்டனர். பண்டிதர் இருந்த வீட்டைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுற்றி மூன்று வியூகங்கள் வகுக்கப்பட்டன. துப்பாக்கி வேட்டுகள் அந்தப்பாசறையை நோக்கிப் பாய்ந்தன. சிங்கள இராணுவம் சுற்றி வளைத்துக்கொண்டது என்பதை அறிந்த பண்டிதர் மனம் கலங்கவில்லை. அவரும் அவரது தோழர்களும் எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள். 12 மணி நேரம் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரை வைத்துக்கொண்டு 500-க்கு மேற்பட்ட சிங்கள இராணுவ வீரர்களை எதிர்த்துப்பண்டிதர் நடத்திய இந்தப் போர் ஒரு ''வீரகாவியம்'' ஆகும். தன்னுடன் இருந்த விடுதலைப்புலிகளில் 10 பேரைத் தப்பிச் செல்லுமாறு பண்டிதர் ஆணையிட்டார். முதலில் அவர்கள் தயங்கினாலும் பண்டிதரின் ஆணையை மீற முடியாமல் பத்திரமாகத் தப்பிச் சென்றனர். தன்னுடைய உயிருக்கே அபாயம் சூழ்ந்திருந்த அந்த வேளையில்கூட அந்தப் பாசறையிலிருந்து ஒரு வயதான தாயையும் இரண்டு சிறுவர்களையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதில் அவர் கவனம் செலுத்தினார். இறுதியில் எதிரிக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்திவிட்டு அவரும் உடன் நின்ற நான்கு வீரர்களும் வீரமரணத்தைத் தழுவினார்கள்.

பண்டிதர் கொல்லப்பட்ட செய்தியைச்சிங்கள தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி சொல்லிச்சொல்லிக்கொக்கரித்தார். பிரபாகரனின் வலது கரத்தை முறித்து விட்டதாக சிங்கள இராணுவம் இறுமாப்புடன் கூறியது.

பண்டிதரின் மரணச் செய்தி வந்தபோது தலைவர் பிரபாகரன் அவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்தது என் நினைவுக்கு வந்தது. 1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதி சென்னையில் அவரும் நானும் சந்தித்தபோது அவர் சொன்னார், ''பண்டிதரின் இழப்பின் மூலம் ஒரு உண்மையான வீரத் தோழனை நான் இழந்துவிட்டேன் இறுதிவரை எமது இயக்கத்தின் மரபுக்கு ஏற்பப் போராடி வீரமரணம் அடைந்தான்'' என்று நெஞ்சம் நெகிழக்கூறினார். இணைபிரியாத தோழனை இழந்துவிட்ட துடிப்பும் இந்தச் சாவிற்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற கொதிப்பும் அவரிடம் இருந்ததை நான் பார்த்தேன். இந்நிகழ்ச்சியை நான் என்னுடன் பயணம் செய்த தோழர்களிடம் கூறியபோது அவர்கள் சொன்னார்கள். ''பண்டிதர் இறந்த நாலு மாதங்களில் அவருடைய சாவுக்குப் பழிவாங்கப்பட்டது'' என்று சொல்லி அந்த நிகழ்ச்சியையும் எனக்கு விவரித்தார்கள்.

அச்சுவேலியில் புலிகளின் பாசறையைச் சுற்றி வளைத்து கேப்டன் இரவீந்திரனைக் கொலை செய்த சிங்கள இராணுவத்திற்குத்



தலைமை தாங்கியவன் **மேஜர் சிறில்லால் மெண்டிஸ்** என்பவன். அவன் தமிழர்களைக் கொலை செய்யும் வெறி பிடித்தவன் வங்காலை அன்னம்மாள் தேவாலயப்பாதிரியான பஸ்தியான் என்பவரைச் சுட்டுக் கொன்றவன். இத்தகைய கொடியவனை விடுதலைப் புலிகள் இயக்க இளைஞர்கள் குறிவைத்தனர்.

**9.5.'85** அன்று வல்வெட்டித்துறை மக்களைக்கொன்று குவிக்க மேஜர் மெண்டிஸ் ஏராளமான இராணுவ வாகனங்களுடன் வந்தான். அவன் ஜீப் ஒன்றின் முன் ஆசனத்தில் அமர்ந்திருக்கப் பின்னால் 5 இராணுவ சிப்பாய்கள் இருந்தனர். இராணுவம் திடீரென வந்து விட்டதால் அதை எதிர்த்துப் போராட வல்வெட்டித் துறையில் அச்சமயத்தில் போதிய விடுதலைப் புலிகள் இருக்கவில்லை. **ஜெயம்** என்ற ஒரு இளைஞன் மட்டுமே இருந்தான். மேஜர் மெண்டீஸ்சைப் பார்த்ததும் கொதித்து எழுந்தான். தன்னை அழித்துக் கொண்டாவது அந்தக் கொலை பாதகனைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்தான். யாருக்காகவும் எதற்காகவும் அவன் காத்திருக்கவில்லை. கையில் கைக்குண்டுகளை எடுத்துக் கொண்டு விரைந்து வந்துகொண்டிருந்த அந்த ஜீப்புக்கு முன்னால் பாய்ந்து ஓடினான். சிங்களச்சிப்பாய்கள் அவனைக் குறி வைத்துச் சுட்டார்கள். குண்டுகள் அவன் உடலைச் சல்லடையாகத் துளைத்த போதிலும் அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் ஜீப்புக்கு முன்னால் போய் நின்று குறி தவறாது கைக்குண்டை வீசினான் விடுதலைப்புலி ஜெயம். சிங்கள வெறியன் மெண்டிஸின் உடல் சதைசதையாகப் பிய்ந்து சிதறியது. ஜீப்பில் வந்த ஏனையச்சிங்களச் சிப்பாய்களும் துடிதுடித்துச் செத்தனர். குருதி வெள்ளத்தில் வீரன் ஜெயமும் வீழ்ந்து வீரச்சாவை அணைத்துக் கொண்டான். ஜெயத்தின் இந்த வீரச்செயலைக் கண்டு அஞ்சி நடுங்கிய சிங்களப் படையினர் பின்வாங்கி ஓடினார்கள்.

இருபதே வயது நிரம்பிய இளைஞர்ஜெயத்தின் வீரமும் தியாக உணர்வும் ஈழ நாட்டு மக்களுக்கு எத்தகைய ஊக்கத்தை அளித்திருக்கின்றன என்பதை நான் நேரில் பார்த்தேன். பண்டிதரின் மரணத்திற்கு ஜெயம் பழிவாங்கிய விதத்தைக்கண்டு அனைவரும்ம மகிழ்ந்தனர். விடுதலைப்புலிகள் நினைத்தால் எதையும் செய்வார்கள் என்ற நம்பிக்கையை ஈழமக்களுக்கும் விடுதலைப்புலிகளை நினைத்த மாத்திரத்தில் சிங்கள வெறியர்களுக்குக் குலை நடுக்கத்தையும் இந்நிகழ்ச்சி ஏற்படுத்தி விட்டது.

வீரமே ஆரமாகவும் தியாகமே அணியாகவும் பூண்டு தங்கள் நாட்டின் விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இந்த இளம் வீரர்களைப் பற்றிய துயரந்தோய்ந்த நினைவுகளுடன் என் பயணத்தைத் தொடர்ந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 65. புலிப்போத்து

தமிழீழச்சுற்றுப்பயணத்தில் மிக முக்கியமான நாள். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உத்வேகமூட்டிய மாவீரர் பலரை ஈன் றெடுத்த வீரமண்ணுக்குச் சென்றேன். தமிழீழ விடுதலைப் போர் வர லாற்றில் வல்வெட்டித்துறை மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக் கிறது. சிங்கள வெறியர்களால் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி போன்ற தியாக சீலர்கள் பிறந்தபூமி வல்வெட்டித்துறையாகும்.

தமிழீழ மக்களின் இதயங்களில் என்றும் நீங்காத இடம்பெற்றுள்ள விடுதலைப் புலிகளின் தானைத்தலைவன் அருமைத்தம்பி **பிரபாகரன்** பிறந்த ஊரும் வல்வெட்டித்துறையேயாகும். எனவே இந்த ஊருக்குச் சென்றபோது எனக்கு ஏற்பட்ட மனக்கிளர்ச்சியை விவரிக்கவே இயல வில்லை. தம்பி பிரபாகரனின் வீட்டுக்குச் செல்லவேண்டுமென்று நான் கூறியபோது லிங்கமும் பொட்டும் மற்றவர்களும் திடுக்கிட்டுவிட்டார் கள். அதைக்கண்டு எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்னவென்று கேட்டபோது ''அண்ணா! தலைவரின் வீட்டிலிருந்து சுமார் 100 அடி தூரத்தில்தான் இராணுவ முகாம் இருக்கிறது. அங்கு நாம் சென்றால் இராணுவத்திற்கு எப்படியாவது தெரிந்துவிடும். இந்த ஆபத்தான சூழ்நிலையில் அங்குச்செல்வது உசிதமாக இருக்காது'' என்று அவர் கள் கூறினார்கள்.

என் மனமோ அவர்கள் சமாதானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இவ்வளவு தூரம் வந்துவிட்டுப் பிரபாவின் வீட்டைப் பார்க்காமல் போவதா? என்று என்மனம் குமைந்தது. என் முடிவை



அவர்களிடம் சொன்னேன். அவர்களும் வேறு வழியில்லாமல் அரை குறை மனத்தோடு ஒப்புக்கொண்டார்கள்.

நாங்கள் வந்த வாகனங்கள் வெகு தொலைவில் நிறுத்தப்பட்டு விட்டன. இரண்டு இரண்டு பேராக அனைவரும் பிரிக்கப்பட்டுச்சிறிது நேரம் இடைவெளிவிட்டு அனுப்பப்பட்டார்கள். இறுதியாக நான் லிங்கம், பொட்டு ஆகியோர் சென்றோம். பிரபாகரன் வீடு இருந்த தெருமுனையை நாங்கள் அடைந்தபோது எதிர்முனையில் இராணுவ முகாம் நன்கு தெரிந்தது. சிங்கள இராணுவ வீரர்கள் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்ததையும் பார்த்தேன். பிறகு ஒவ்வொருவராக நடந்து மெதுவாகப்பிரபாவின் வீட்டை அடைந்தோம்.

தலைவர் பிரபாகரன் மீது இருந்த ஆத்திரத்தையெல்லாம் அவர் வீட்டின்மீது சிங்கள வீரர்கள் காட்டியிருந்ததைப் பார்த்தேன். அந்த வீடு கொளுத்தப்பட்டும் தகர்க்கப்பட்டும் கிடந்தது. வீட்டை அடியோடு நாசம் செய்த சிங்கள வெறியர்கள்முன் கதவை மட்டும் பூட்டி சீல் வைத்துவிட்டுச் சென்றிருந்தார்கள்.

நம்முடைய தோழர்கள் பூட்டை உடைத்துக் கதவைத் திறந்து விட்டார்கள். நாங்கள் உள்ளே போனோம். வீட்டிலிருந்த பொருட்கள் எரிந்தும் கரிந்தும் கிடந்தன. வீட்டின் கூரை முழுவதுமாக நாசமாகிக் கிடந்தது. எல்லா அறைகளிலும் கரிக் குவியல்களைப் பார்த்தேன். ஒரு அறையில் கீழே கிடந்த ஒரு பொருள் என்னைக் கவர்ந்தது. குனிந்து அதை எடுத்தேன். பிளைவுட்டில் செய்யப்பட்ட முருகனின் திருவுருவம் அது. சற்றுச்சேதமாகியிருந்த அதை எடுத்து வைத்துக் கொண்டேன். அலமாரியொன்றில் பள்ளிக் குழந்தைகளின் புத்தகம் ஒன்று கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். பிரபாகரனின் சகோதரி மகளின் பாடப் புத்தகம் அது. அந்த வீட்டில் வேறு எந்தப் பொருளும் உருப்படியாக இல்லை. இந்த இரண்டையும் எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக அந்த வீட்டைவிட்டு வெளியேறினோம்.

(தமிழ்நாட்டுக்கு நான் திரும்பியதும் இந்த இரண்டு பொருட் களையும் தம்பி பிரபாகரனிடம் நான் காட்டிபோது பழைய நினைவு களால் அவர் முகம் மலர்ந்தது. ''இது எங்கே கிடைத்தது உங் களுக்கு'' என்று அவர் என்னிடம் கேட்டபோது ''உங்கள் வீட்டிலிருந் துதான் எடுத்துவந்தேன்'' என்று சொன்னேன். அந்த முருகனின் படம் அவருக்கு எத்தனையோ பழைய நினைவுகளை ஊட்டியது போலும் அதையே பார்த்துக்கொண்டிருந்தார். 14-வது வயதில் வீட்டைவிட்டுப் போராளியாக வெளியேறிய அவருக்கு அந்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருட்கள் குடும்ப நினைவை எழுப்பிவிட்டனவோ என்னமோ, சில நிமிடங்களில் தன்னிலைக்கு வந்த அவர் "அண்ணா! இது எங்கள் வீட்டுப் பொருட்கள்தாம். உங்களிடமே இருக்கட்டும்" என்று கூறி அதை என்னிடமே திருப்பிக் கொடுத்தார்.)

வல்வெட்டித்துறையில் நான் இருந்தபோது ஒரு பெரியவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 83 வயதான அந்தப் பெரியவர் தமிழரசுக் கட்சியை உருவாக்கிய ஆரம்ப காலத் தலைவர்களில் ஒருவ ராவார். அவரை நான் சந்தித்தபோது அந்தத் தள்ளாத வயதிலும் அவருக்கு இருந்த நினைவாற்றலைக் கண்டு நான் வியந்தேன். மறைந்த பெருந்தலைவர் காமராசருடன் தான் நெருங்கிப் பழகியிருப்பதாகவும் அவர் கூறினார். தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு திருமணத் தின்போது தலைவர் காமராசருடன் வந்திருந்த என்னைச் சந்தித்ததை யும் நினைவுபடுத்தினார்.

மறைந்த தலைவி இந்திராவை நான் காப்பாற்றிய நிகழ்ச்சி பற்றி யும் 1983-ம் ஆண்டில் நான் நடத்திய **தியாகப்பயணம்** குறித்தும் அவர் பெருமையாகப் பேசியபோது எனக்கே கூச்சமாக இருந்தது. அவருடைய பேரர்கள் புலிகள் இயக்கத்தில் இருக்கிறார்கள். அவரு டைய துணைவியார், புதல்விகள், பேரக் குழந்தைகள் ஆகிய எல்லோரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் வீட்டி லேயே அன்றைக்கு விருந்துண்டோம். ஜெயவர்த்தனாவின் நோக்கங் களையும், சூழ்ச்சிகளையும் பற்றி அவர் தெளிவாகவே பேசினார். ஜெயவர்த்தனாவை இந்திராகாந்தி புரிந்து கொண்ட அளவுக்குப் புதிய பிரதமர் ராஜீவ்காந்தி புரிந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

பெரியவரும் அவரது குடும்பத்தினரும், மற்றும் வல்வெட்டித் துறையில் நான் சந்தித்த பலரும் பிரபாகரனின் இளம்பருவம் பற்றிய பல சுவையான செய்திகளைக் கூறினார்கள். அவற்றைக் கொண்டு ஒரு தனி நூலே எழுதலாம். இருப்பினும் சிலவற்றை மட்டும் இங்குக் கூற விரும்புகிறேன்.

சிங்கள இராணுவத்தைக் கதிகலங்க அடித்து விரட்டி அவர் களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கும் பிரபாகரன் தமது சிறுவயதில் பெற்றோரின் செல்லப் பிள்ளையாக விளங்கினார். 12 வயதுவரை தாமாக சோறு உண்ணத் தெரியாமல் வளர்ந்தவர். அந்த வயதிலும் அவரது தாய்தான் அவருக்குச் சோறு ஊட்ட வேண்டும். அரசு அதிகாரியான அவரது அப்பாவிற்கு அவர்மீது மிகவும் அன்பு. எங்குப்



போனாலும் தமது செல்ல மகனையும் அவர் அழைத்துக் கொண்டு போவார். அப்பாவும் அவரது நண்பர்களும் ஆங்கில மொழியில் பேசிக் கொள்வதைப் பார்த்துப் பிரபாகரனுக்கு மிகுந்த எரிச்சல் வரும். எல்லோரும் தமிழர்களாக இருந்தும் இப்படி ஆங்கிலத்தில் பேசுகிறார் களே! என அந்தச் சிறுவயதிலும் வருந்துவது வழக்கம்.

அப்பாவுடன் வெளியே செல்லும்போது சிங்களப் போலீஸ் காரர்கள் அப்பாவித் தமிழர்களை அடித்து இம்சிப்பதையும், உதைப் பதையும் பார்த்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தார். இந்த நிகழ்ச்சிகள் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்தி விட்டன.

பிரபாகரன் இறை உணர்வு மிக்கவர். பக்தி சிரத்தை மிகுந்த குடும்பத்தில் பிறந்ததனால் மட்டுமல்ல, **தமிழ்க் கடல் கிருபானந்த வாரியாரின்** பக்திச்சுவை சொட்டும் பைந்தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்டுச் சிறுவன் பிரபாகரன் பக்திப் பரவசமானான். வல்வெட்டித் துறையிலுள்ள சிவன் கோயிலுக்குத் தர்ம கர்த்தாவாக இருந்த பிரபாகரனின் தந்தை ஒவ்வொரு ஆண்டும் கிருபானந்தவாரியாரை அழைப்பது உண்டு. அவரும் தவறாமல் வந்து சொற்பொழிவு நிகழ்த்துவார். தந்தையுடன் முன்வரிசையில் அமர்ந்து அவரது சொற் பொழிவைச் சிறுவன் பிரபாகரன் இடைவிடாமல் கேட்பான். அவரது ஆழ்ந்த தமிழ் அறிவும், பக்திச் சுவை சொட்டச்சொட்ட அவர் சொல்லும் புராணக் கதைகளும் அந்தச் சின்னஞ்சிறு உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன.

இளம் வயதில் பிரபாகரனுக்கு ஏற்பட்ட இறையுணர்வு இன்றள வும் அவரிடம் குடிகொண்டிருக்கிறது. தமது வீரப் போராட்டங்களைத் தொடங்குவதற்கு முன் ஒவ்வொரு தடவையும் இறைவனிடம் மனமுருகி பிரார்த்தனை செய்வார். குறிப்பாகப் பழனிமலையில் குடிகொண் டிருக்கிற பழனியாண்டவர் மீது அவருக்கு அளவற்ற பக்தியுண்டு. அடிக்கடி அங்குச்சென்று வழிபடுவதை நான் அறிந்திருக்கிறேன்.

பிரபாகரனின் இறையுணர்வு மற்ற மதத்தவருக்கு எதிரான வெறி யுணர்வாக ஒருபோதும் மாறியதில்லை. அவர் இயக்கத்தில் இந்துக்கள், கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகிய சகல சமயத்தினரும் இரண்டறக் கலந்துள்ளனர். அவரவர்களின் சமயங்களுக்கு ஏற்ப வழிபாடுகளை நடத்திக்கொள்ள அவர்கள் பரிபூரண உரிமைபெற்றுள்ளதை நானே நேரில் பார்த்தேன். யாழ்ப்பாணத்தில் நான் தங்கியிருந்தபோது **சரஸ்வதி பூஜை** வந்தது. நான் தங்கியிருந்த முகாமில் புலிப்படை இளைஞர்கள் ஒன்றுகூடித் தங்களின் ஆயுதங்கள் அனைத்தையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எண்ணெய் இட்டுத் துடைத்துச் சுத்தம்செய்து ஆயுதபூஜை நடத்தி வழிபடுவதை நேரில் பார்த்தேன். அதில் நானும் கலந்துகொண்டேன். அனைவருமே அவ்வழிபாட்டில் கலந்துகொண்டதை நான் பார்த்தேன். அதைப் போலவே புலிப் படையைச் சேர்ந்த கிருஸ்தவ இளைஞர்கள் சிலருடன் நான் தங்கியிருந்தபோது அவர்கள் தங்கள் மத ஆசாரத்திற்கேற்ப முழங்காலிட்டு இறைவனை வழிபடுவதையும் நான் பார்த்தேன். மதவேற்றுமைகளுக்கோ, சமயக்காழ்ப்புணர்ச்சிகளுக்கோ புலிகள் இயக்கத்தில் அறவே இடமில்லை. இதற்கு எடுத்துக்காட்டாகப்பிரபாகரன் தனது நெருங்கிய தோழன் **சார்லஸ் அன்றனி** (சீலன்) என்பவரின் பெயரைத்தனது புதல்வனுக்கு இட்டிருக்கிறார். தன்னுடைய உற்ற தோழனை எந்த அளவுக்கு அவர் நேசித்தார் என்பதை மட்டும் இது காட்டவில்லை. மத வேறுபாடுகளுக்கு அப்பால் மனித நேயத்துடன் அவர் விளங்குகிறார் என்பதையே இது காட்டுகிறது.

பிரபாகரன் ஏழாவது படிக்கும் சிறுவனாக இருந்தபோது அவனும், அவனுடைய நண்பர்களும் ஒன்றாகப் படிக்கப்போவார்கள். சிறுவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பெரியவர்கள் நினைக்க இந்த வீரச் சிறுவர்களோ வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். வெடிமருந்துகளைக் கொண்டுவந்து அரைத்து வெங்காய வெடிகள் செய்து அதை வெடிப்பார்களாம்.

ஆரம்ப காலத்தில் கைக்குண்டுகளைப்பிரபாகரன் தானே தயாரித்தபோது எதிர்பாராதவிதமாகக்குண்டு வெடித்து அவரது ஒரு காலில் எரிகாயம் ஏற்பட்டது. சிகிட்சைக்குப் பின்னர் அந்த இடம் கருமையாக மாறியது. அதனால் **கரிகாலன்** என்ற பெயரும் பிரபாகரனுக்கு அமைந்தது.

10-ம் வகுப்பு வரையிலும் பிரபாகரன் படித்தார். அதன் பின்னர் விடுதலைப் போராளியாக வீட்டைவிட்டு வெளியேறிவிட்டதால் படிப்பைத் தொடரவில்லை. ஆங்கிலமொழியை முழுமையாகத்தாம் படிக்கவில்லையே என்ற வருத்தம் அவர் உள்ளத்தில் இப்போதும் உண்டு.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் பள்ளிக் கல்வியை முடித்தபிறகு மேற்படிப்புக்குச் செல்லச்சிங்கள அரசின் தரப்படுத்துதல் கொள்கை தடையாக இருந்தது. எனவே அந்த இளைஞர்கள் கப்பல்களில் வேலைசெய்யச் சென்றனர். 10-ம் வகுப்புப் படிப்பை முடித்த பிரபாகரனுக்கு எதிர்காலம் என்ன? என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது. தனது வயதையொத்த இளைஞர்களைப் போலத்தாமும் கப்பல்களுக்கு வேலைசெய்யச் செல்வதா? அல்லது



தமிழர்களின் விடுதலைப் போருக்குத் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துக்கொள்வதா? எனச் சிந்தித்தார். இறுதியில் தாயகத்தின் விடுதலைக்காகப் போராடுவதுதான் தமது தலையாய கடமை என்று முடிவுசெய்தார்.

அவர் இந்த முடிவு எடுக்கக் காரணமாக இருந்தது **தமிழ் மாணவர் பேரவை** என்ற **அமைப்புத்தான்** தமிழ் மாணவர்களைக் கிளர்ந்தெழச் செய்த பெருமை இப் பேரவைக்கே உண்டு. 1970-ம் ஆண்டில் இப்பேரவை உருவானது. இதை உருவாக்கியவர்களான **சிவகுமாரன், தங்கத்துரை, சத்தியசீலன்** ஆகியோரோடு **பிரபாகரன்** முன்னின்றார்.

சிங்கள அரசு கொண்டுவந்த தரப்படுத்தல் திட்டத்திற்கு எதிராக மாணவர்களை ஒன்றுதிரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டங்களைத் தமிழ் மாணவர் பேரவை நடத்தியது. ஈழத்தமிழ் மாணவர்கள் மத்தியில் மாபெரும் சக்தியாக இப்பேரவை வளர்ந்தது. ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலமே சிங்களரது பிடியிலிருந்து தமிழர்கள் விடுதலை பெற முடியும் என்பதை மெல்லமெல்லத் தமிழ் இளைஞர்கள் உணர இப் பேரவையே வழிகாட்டியது எனலாம்.

**உரும்பராயைச்** சேர்ந்த **பொன்னுத்துரை சிவகுமாரன்** தமிழீழத்தில் ஆயுதப் போராட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்தான். 1971-ம் ஆண்டு உரும்பராய் வந்த சிங்கள அமைச்சர் ஒருவரின் காரை நோக்கிக் குண்டுவீசினான். தமிழர்களுக்குத் தொடர்ந்து துரோகம் செய்துவந்த யாழ் மேயர் துரையப்பாவின் காருக்குள் குண்டு வைத்தான். ஆனால் துரோகி துரையப்பா அப்போது தப்பினார். கார் சுக்குநூறாகியது. இந்நிகழ்ச்சிகளின் விளைவாகச் சிவகுமாரனை போலீஸ் கைது செய்தது.

சிறையிலிருந்து மீண்ட சிவகுமாரன் ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டான். 1974-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின் கடைசி நாளன்று எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் சிங்களப் போலிஸார் கூட்டத்திற்குள் புகுந்து தடியடி நடத்திக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். மின்கம்பிகளைச் சுட்டு வீழ்த்தியதனால் மின்சாரம் பாய்ந்து 10 தமிழர்கள் மாண்டனர். இச்சம்பவத்தின் போது அல்லோல கல்லோலப்பட்டு ஓடிய மக்களுக்குத் தொண்டனாக நின்று பாதுகாப்பு அளித்தான் சிவகுமாரன்.

10 தமிழர்களைக் கொலை செய்த சிங்கள இன்ஸ்பெக்டர் **சந்திரசேகரரவைத்** தீர்த்துக்கட்ட உறுதி பூண்டான் சிவகுமாரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டான். ஒருநாள் போலீசாரை எதிர்த்துப் போராடிய போது அவனிடமிருந்த தோட்டாக்கள் தீர்ந்து விட்டன. சிங்களப் போலீசாரிடம் உயிரோடு பிடிபடுவதில்லை என்ற கொள்கைக்கு ஏற்ப **சயனைடு** என்னும் நஞ்சுண்டு தன் உயிரை நீத்தான் சிவகுமாரன். அவனது இந்த வழியையே விடுதலைப் புலிகளும் பின்பற்றி வருகின்றனர்.

சிவகுமாரன் விட்ட பணியினைப் பிரபாகரன் தொடர்ந்தார். தமிழர்களுக்குத் தொடர்ந்து துரோகம் புரிந்துவந்த யாழ் மேயர் துரோகி துரையப்பாவுக்குத் தக்க தண்டனையை விதிக்க வேண்டுமென்று சிவகுமாரன் விரும்பினான். அவனது அந்த விருப்பத்தினை பிரபாகரன் நிறைவேற்றி வைத்தார். 1975-ம் ஆண்டில் துரோகி துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். இதுவே தமிழீழப் போராட்டத்தின் முதலாவது வெற்றிகரமான தாக்குதலாகும்.

தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான **அஞ்சா நெஞ்சர் இராசரத்தினம்** ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலமே தமிழீழம் மலர முடியும் என்ற முடிவுக்கு வந்தார். இளைஞர்களுக்கு புதிய உத்வேகத்தினை அவர் கொடுத்தார்.

**தாமிரவருணி புதிய புலிகள்** என்ற பெயருடன் ஒரு இரகசிய இயக்கத்தைத் தொடங்கும்படி இளைஞர்களுக்கு ஆலோசனை கூறினார். இலங்கைத் தீவின் பழமையான பெயர் தாமிரவருணி என்பதாகும்.. பிறகு இதே பெயரைத் திருத்தித் **தமிழீழ விடுதலைப் புலிகள்** என்ற பெயரிட்டார் பிரபாகரன். புலிகள் இயக்கம் பிறந்த சுருக்கமான கதை இதுதான்.

1971-ம் ஆண்டில் தனது 17 வது வயதில் வீட்டைவிட்டு வெளியேறினார். 15 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வீடு திரும்பவில்லை. அவரது உற்ற சகாக்கள் பலரது கதையும் அப்படியே. சங்கர் தனது 20-வது வயதிலும், சீலன் தனது 18-வது வயதிலும், செல்லக்கிளி தனது 21-வது வயதிலும், பண்டிதர் தனது 19-வது வயதிலும், கிட்டு தனது 18-வயதிலும், சுப்ரமணியம் தனது 22-வது வயதிலும் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிப் பிரபாவுடன் சேர்ந்தனர். புலிகள் இயக்கத்தில் உள்ள மற்றத்தோழர்களும் அப்படியே தமது இளம் பருவத்தில் வந்தவர்கள்தாம்.

சின்னஞ்சிறிய பிராயத்தில் இவர்கள் உள்ளத்தில் விடுதலைத் தீ பற்றியெரிந்தது. இனிமை நிறைந்த இளம் பருவத்தில் இளைஞர்களுக்கு ஏற்படும் கனவு வாழ்வைப்பற்றி அவர்கள் ஒருபோதும் எண்ணிப் பார்த்ததில்லை. தங்கள் வாழ்வின் வசந்த காலங்களை அவர்கள் தொடர்ந்து காடுகளிலும், மலைகளிலும் கழித்துவருகிறார்கள்.





# 66. சரித்திர சாதனை

1954-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் தேதி பிறந்த "தம்பி" **பிரபாகரன்** அவர்களுக்கு இப்போது 33 வயதாகிறது. இந்த இளம் வயதில் அவரின் சாதனை பிரமிக்கத்தக்கது.

பழைமையும் பெருமையும் மிக்க தமிழர் வரலாற்றில் ஆயுதப் புரட்சி என்பது இதுவரை நிகழ்ந்ததில்லை. இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வேளையில்கூடத் தமிழகத்தில் ஆயுதப் புரட்சி நடைபெறவில்லை. ஆனால் வெளிநாட்டில் சிங்கப்பூரில் நேதாஜீ சுபாஷ்சந்திர போஸ் இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஆயுதப் புரட்சிக்கு அறைகூவல் விடுத்தபோது சிலிர்த்தெழுந்தவர்களில் பெரும்பான்மையோர் சிங்கத் தமிழர்களே என்பது வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் முக்கிய பொறுப்புகளை வகித்தவர்கள் தமிழர்கள். இராணுவ வீரர்களிலும் மிகப்பலர் தமிழர்களே யாவர். தமிழர்களின் துணையுடன் நேதாஜி தொடங்கிய ஆயுதப் புரட்சி மகத்தான வெற்றிபெற்றிருக்கும். ஆனால் இரண்டாம் உலகப் போரின்போது ஏற்பட்ட திடீர்த்திருப்பங்களினால் இம்முயற்சி முளையிலேயே கருக்கப்பட்டுவிட்டது.

நேதாஜி தலைமையில் இந்தியாவின் பிறபகுதி மக்களுடன் சேர்ந்து நின்று தமிழர்கள் பங்குபெற்ற ஆயுதப்புரட்சி இது. ஆனால் முதன்முதலாகத் தமிழர்களே நடத்தும் ஆயுதப்புரட்சிக்கு வித்திட்டு அதற்குத் தலைமைதாங்கியிருப்பவர் "தம்பி" பிரபாகரன் ஆவார்.

உலகில் தமிழனுக்கென்று ஒரு தனிநாட்டினை அமைக்கும் திருப்பணிக்காகத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக்கொண்டுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தியாகப்படை ஒன்றை அமைத்து அதனை வழிநடத்திச் செல்கிற பிரபாகரன் தமிழர் வரலாற்றில் இதுவரை யாரும் கண்டும் கேட்டறியாத அற்புத சாதனையைப் புரிந்திருக்கிறார்.

விடுதலைக்காகப்போராடிய பல்வேறு நாடுகளில் பல தலைவர்கள் இத்தகைய விடுதலைப் படைகளை அமைத்தது உண்டு. ஆனால் அவர்களுக்கெல்லாம் ஏதேனும் ஒரு நாடோ அல்லது பல நாடுகளோ உதவிபுரிந்தன. இந்தியாவின் மாபெரும் தலைவரான **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்** ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியாவை விட்டு வெளியேறினார். அந்த நிலையிலேயே அவர் உலகம் அறிந்த தலைவர். ஜெர்மனியும் ஜப்பானும் அவருக்கு உதவிசெய்ய போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தன. இந்திய மக்களின் மாபெரும் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட அவருக்கு உலகத்தில் இரண்டு பெரிய வல்லரசுகள் என்னென்ன உதவிகள் தேவையோ அந்த உதவிகளைச் செய்து கொடுத்தன. பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தில் பணியாற்றி ஜப்பானியர்களால் சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த இந்தியப் போர்வீரர்களை மீட்டு அவர்களைக்கொண்டு இந்திய தேசிய இராணுவத்தினை நேதாஜி சிங்கப்பூரிலே உருவாக்கினார். இந்த இராணுவத்திற்குத் தேவையான ஆயுதங்கள், மற்ற உதவிகள் ஆகியவற்றை ஜப்பான் கொடுத்தது. நேதாஜியின் சுதந்திர அரசை ஜப்பான், ஜெர்மனி இத்தாலி மற்றும் நட்பு நாடுகள் அங்கீகரித்தன.

நேதாஜியை தனது வழிகாட்டியாகக் கொண்டிருக்கிற அருமைத் தம்பி பிரபாகரனை நேதாஜியுடன் ஒப்பிட முடியாது. வயதிலும் சிறியவர், அனுபவத்திலும் சிறியவர். நேதாஜியைப் போன்ற பெரிய தலைவராக உருவாகி அதற்குப் பின்னர் அவர் இந்தப்போராட்டத்தைத் தொடங்கவில்லை. இளைஞனாக இருந்தபோது தன்னுடைய பதினாறாவது வயதில் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கினார்.

நேதாஜிக்கு உலக வல்லரசுகள் துணை புரிந்தன. அருமைத் தம்பி பிரபாகரனுக்கு திக்கற்ற தமிழ் இளைஞர்கள் மட்டுமே துணை நிற்கின்றனர். வேறு எந்த நாடும் எந்த வல்லரசும் அவருக்கு உதவி புரிய முன்வரவில்லை, ஆனால் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் அள்ளி அள்ளித்தரும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கக்கூடிய சிங்கள இராணுவத்தை ஓடஓட விரட்டியடிக்கிற விடுதலைப் படையை பிரபாகரன் உருவாக்கிய விதம் கற்பனைக்கு எட்டாதது. கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாதது.



இதை எப்படி அவர் சாதித்தார்? இன்னமும் புரியாத புதிர்தான். தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும் இன்னும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் தருகிற சிறுசிறு உதவிகளைப்பெற்று அவற்றைக்கொண்டு ஆயுதங்கள் வாங்கி தனது போராட்டத்தை அவர் தொடர்ந்து நடத்துகிறார். சிங்களப் படையினருடன் மோதி அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்களைப் பறித்தும் தம் பலத்தைப் பெருக்குகிறார். இராணுவ பலம் மிக்க ஒரு எதிரியை எதிர்த்து மனோபலத்தைத் தவிர வேறு பலம் இல்லாமல் போராடிவரும் அவரது துணிவுக்கு ஈடு இணையேயில்லை.

தமிழீழத்தில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது ஒரு உண்மை எனக்குத் தெளிவாகப் புரிந்தது. தமிழீழ விடுதலைப் போரின் முன்னணிப் படையாக விடுதலைப் புலிகளின் இயக்கம் திகழ்கிறது. அரசியல் அறியாத சிறுவர்களாக அவர்களைக் கருதுவதும், வலிமை பொருந்திய சிங்கள இராணுவத்தை வெல்ல இவர்களால் முடியாது, இவர்கள் முயற்சி வெறும் தற்கொலைக்கு ஒப்பாகும் என்றெல்லாம் சிலர் பேசி வருவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நான் நேரில் கண்டேன்.

வியட்நாம் விடுதலைப் போராட்டத்தை அந்நாட்டு மக்கள் உறுதியாக நடத்தியதைப் போல தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகள் வீறுகொண்டு நடத்துகிறார்கள். இதை ஒரு மக்கள் போராட்டமாக மாற்றிவருகிறார்கள். மக்களின் துணையோடு தங்கள் விடுதலைப் போராட்டத்தை அவர்கள் விரிவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் வீரப் போராட்டத்தின் விளைவாகச் சிங்கள இனவெறி ஆட்சியின் அத்திவாரம் ஆட்டம் கண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைமையில் நடக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலம்தான் தமிழினம் தன்னை முழுமையாக உணரத் தொடங்கியுள்ளது. ஜாதி, மதம், கட்சி போன்றவற்றால் பிளவுபட்டுக் கிடந்த ஈழத்தமிழ் இனம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினால்தான் ஒன்றுபட முடிந்திருக்கிறது. உலகம் பூராவிலும் உள்ள தமிழர்களுக்கு எழுச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டுகிற ஒரு போராட்டமாகவும் அவர்களை ஒன்றுபட வைக்கிற ஒரு போராட்டமாகவும் இப்போராட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 67. இளந் தேசியத் தலைவன்

எந்தவொரு நாட்டின் விடுதலைப் போராட்டமும் தகுந்த தேசியத் தலைமையின் வழிகாட்டல் இன்றி வெற்றி பெற்றதில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் இது பொருந்தும். இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முற்றிலும் தகுந்த தேசியத் தலைமையை விடுதலைப் புலிகளின் இயக்கம் **தம்பி பிரபாகரன்** வடிவத்தில் தந்துள்ளது. தமிழீழ மக்களும் இதை மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதற்கான அடையாளத்தை நான் சென்ற இடங்களில் எல்லாம் பார்த்தேன்.

தம்பி பிரபாகரன் அவர்களைத் தமிழீழ மக்கள் தங்களது தவப்புதல்வனாகக் கருதுகிறார்கள். மனமார நேசிக்கிறார்கள். சிங்கள அரக்கர்களின் கொடுமைகளில் சிக்கித் தவித்து அடிமை இருளில் கரைந்து கொண்டிருந்த தங்களின் வாழ்வில் தோன்றிய நம்பிக்கை நட்சத்திரமாக அவரைக் கருதுகிறார்கள்.

தமிழீழ மக்கள், தங்கள் நாடு முழுமையாக விடுதலை பெற்றால் ஒழியத் தங்களுக்கு வாழ்வில்லை என்பதை **உணர்ந்திருக்கிறார்கள்.** அற வழியில் அதை அடைய முடியாது என்பதைக் கடந்த 30 ஆண்டுக்கால அனுபவம் அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. சமரசப் பேச்சுக்கள் அவர்களைச் சுதந்திர மனிதர்களாக்காது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு இழப்பு, இவ்வளவு அழிவு, இவ்வளவு தியாகத்திற்குப் பின் இனி ஒருபோதும் பின்வாங்க முடியாது. விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஐயந்திரிபற உணர்ந்திருப்பதோடு அவ்வாறு செய்வதற்குத் தகுதியானவர் பிரபாகரனே என்பதையும் அறிந்திருக்கிறார்கள்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என வள்ளுவர் வாக்கின் பொருளை நன்குணர்ந்த ஈழ மக்கள் தங்கள் தாயக விடுதலை என்னும் அரிய செயலை முடிக்கத் தக்கவன் பிரபாகரனே என்பதைத் தெளிந்து தேர்ந்து அவர் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தமது சொந்த உறுப்பினர்களைக்கூடக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத இயக்கங்களையும் தலைமைகளையும் கண்டு மனம் வெறுத்துப்போன மக்கள் அவற்றோடு புலிகள் இயக்கத்தை ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்த பிறகே இத்தகைய முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

கட்டுப்பாடு, ஒழுக்கம், இவற்றோடு தியாகமும், வீரமும் நிறைந்த இயக்கமாகப் புலிகளைக் கருதுகிறார்கள். நான் சென்ற இடங்களில் எங்கும் எவரும் புலிகள் மீது ஒரு சிறு குற்றச்சாட்டுகூடக் கூறவில்லை.

மக்களால் வளர்க்கப்படும் மக்கள் இயக்கமாகப் புலிகள் இயக்கம் வளர்ந்திருக்கிறது. மக்களின் ஒத்துழைப்போடு தங்கள் போராட்டத்தை மக்கள் போராட்டமாகப் புலிகள் மாற்றி வருவதை நான் கண்டேன்.

புலிகள் வேறு ! மக்கள் வேறு அல்ல. இருவரும் இரண்டறக் கலந்து மக்களே புலிகள் ! புலிகளே மக்கள் என்ற நிலை உருவாகி வருவதை என்னால் உணர முடிந்தது.

இதனைப் பிரபாகரன் எப்படிச் சாதித்தார் என்பது ஒரு புரியாத புதிர்தான். 1983ஆம் ஆண்டுக்கு முன் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரை மட்டுமே கொண்டிருந்த இயக்கத்தை மூன்றே ஆண்டுகளில் பல ஆயிரம் பேர்களைக் கொண்ட ஒரு வலிமைவாய்ந்த விடுதலைப் படையாக மாறிய ஒரு அற்புத சாதனையை அவர் எப்படி சாதித்தார்? என்பது வியப்புக்குரிய ஒன்றுதான்.

பிரபாகரனின் தலைமையில் விடுதலைப் புலிகள் சிங்களப் படையினரைப்பல இடங்களில் முறியடித்துத் தங்கள் மண்ணின் பல பகுதிகளை மீட்டிருப்பது உலகெங்கும் ஒரு தனி மரியாதையைத் தேடித்தந்துள்ளது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிமைச் சேற்றில் நெளியும் புழுக்களாகத் தமிழர்களைக் கருதியவர்கள் இன்று அவர்கள் புலிகளாக மாறி உறுமுவதைக்கண்டு கிலி கொண்டு நடுங்குகின்றனர். விடுதலைப் புலிகளின் வீரத்தினாலும் தியாகத்தினாலும் தமிழினமே தலைநிமிர்ந்துநிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு வழிவகுத்தவர் பிரபாகரனே.

அவரால் பயிற்றுவிக்கப்பட்ட பல இளைஞர்கள் தமிழீழத்தின் பல பகுதிகளில் தளபதிகளாக விளங்குகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பாக இதே இளைஞர்கள் தமிழகத்தில் அடைக்கலம் புகுத்திருந்த போது இருந்த நிலையையும் இப்போது தமிழீழத்தின் காவலர்களாக அவர்கள் காட்சிதருவதையும் போர்க்களத்தில் சாகசங்கள் பலபுரிந்து சிங்களப் படைகளுக்குச் சிம்மசொப்பனமாக விளங்குவதையும் கண்டு நான் திகைத்துப் போனேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தளபதிகளானாலும் வீரர்களானாலும் அல்லது சார்பு அமைப்புகளைச் சேர்ந்தவர்களானாலும் அனைவருமே தியாகத் திருவுருவங்களாக விளங்குவதையும் தங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக அவர்கள் இருப்பதையும் கண்டு இவர்களை இவ்வாறு உருவாக்கிய தம்பி பிரபாகரனின் பேராற்றலை எண்ணி வியந்திருக்கிறேன்.

களத்தில் விரமரணமடையும் தங்கள் தோழர்களுக்காகக்கண்ணீர் சிந்துவதோடு அவர்கள் நிற்பதில்லை. மாய்ந்த தோழர்களின் இடத்தை உடனே நிரப்புகிறார்கள். அவர்களின் கரங்களிலிருந்து நழுவும் ஆயுதங்களையும் பதாகைகளையும் உயர்த்திப்பிடிக்கிறார்கள். தொடர்ந்து போராடுகிறார்கள், போர்க்குணத்தோடு புலிகள் வளர்கிறார்கள், போர்க்குணத்தோடு சாகிறார்கள்.

வெற்றிகளில் மயங்குவதோ! தோல்விகளில் துவளுவதோ இழப்புகளில் கலங்குவதோ அவர்களிடம் காணப்படாத குணாம்சங்களாகும். தம்பி பிரபாகரன் தமது தோழர்களுக்கு இவற்றைத்தான் ஊட்டி வளர்க்கிறார்.

போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் ஆளானாலும் அவற்றால் அவர் கவரப்படுவது இல்லை. ஏனெனில் அதற்கு அவருக்கு நேரம் இல்லை. தமிழீழ விடுதலை என்னும் இலட்சியத்தில் அவர் உறுதியாக ஊன்றி நிற்பதால் அவரை எப்படியும் அழித்துவிட பல தீயசக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளன. அவரைப் பற்றி அவதூறுகள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. அவரது வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்களும் மோதித் தோற்றவர்களும் புழுதியை வாரி இறைக்கின்றனர்.



ஆனால் தமிழீழத்தின் தேசியத் தலைவனாக மலர்ந்து வரும் பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் இவற்றை அலட்சியம் செய்துவிட்டுக்கருமமே கண்ணாகச் செயல்பட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் நடத்தும் இந்தப் போராட்டம் ஈழமண்ணை விடுவிக்கும் போராட்டம் மட்டுமல்ல.

உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களின் உரிமைகளைக் காக்க நடக்கும் போராட்டமுமாகும்.

இந்துமாக்கடல் பகுதியில் எந்தவொரு ஏகாதிபத்தியத்தின் அடிச்சுவடும் பதியவிடாது தடுக்க நடக்கும் போராட்டம் இது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

தென்னாசியப் பகுதியில் சோசலிசப் புரட்சிக்கு வித்திடுகிற போராட்டமும் இதுவே.

தாங்கள் சிந்தும் இரத்தத்தினால் ஈழ மண் சிவந்துகொண்டே இருந்தாலும் வங்கக் கடல் செங்கடலானாலும் பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்களின் இலட்சியக் கனவு நிறைவேறும் வரை போராடுவார்கள். தமிழீழத்தின் சுதந்திரக் கொடியை ஏற்றும்வரை தொடர்ந்து போராடியே தீருவார்கள் என்பதை நேரில் கண்டுணர்ந்தேன்.

இதைத் தவிர வேறு வழி அவர்களுக்கு இல்லை. தமிழீழ மக்கள் அவர்களுக்கு இட்டிருக்கிற கட்டளை இது. அதை மீற அவர்களால் இயலாது. ஏனெனில் அவர்கள் மக்களின் காவலர்கள் மட்டுமல்ல சேவகர்களும்கூட.

பட்டுப்போயிற்றே என நாம் அஞ்சும் அளவுக்குத் தொய்ந்து கிடந்த தமிழர் தேசிய உணர்வுக்குத் தமது குருதியைப் பாய்ச்சித் துளிர்க்க வைத்த பெருமை பிரபாகரனையும் விடுதலைப்புலிகளையுமே சாரும். அவர்களின் தியாகத்தால் மீண்டும் துளிர்த்துள்ள தமிழர் தேசிய உணர்வு தழைத்தோங்கி ச்செழித்துக் கொழித்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

www.tamilarangam.net



# ஈழப்புலிகளுக்கு இதயமடல்

(தமிழர் வரலாற்றில் மகத்தானதொரு திருப்பத்தினை ஏற்படுத்தியிருக்கிற ஈழ விடுதலைப் போராட்டத்தை நேரில் காணும் பெரும் பேறு பெற்ற என்னுடைய அனுபவங்களை விவரிக்கும் இந்த நூலின் இறுதிப் பகுதியாக இதை எழுதுகிறேன். களத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கிற விடுதலைப் புலிகளுக்கு எனது இதயத்தைத் திறந்து காட்டும் மடல் இது.)

வீரமே ஆரமாகவும் தியாகமே அணியாகவும் பூண்ட மான மறவர்களே !

வணக்கம். அலைகடல் நம்மைப் பிரித்தாலும், உள்ளத்தாலும் உணர்வாலும் வரலாற்றுப் பூர்வமான உறவாலும் நாம் ஒன்றுபட்டிருக்கிறோம். ஈழ மண்ணில் உங்களோடு நான் கழித்த ஒவ்வொரு கணப்பொழுதுமே மயிர்க் கூச்செறியச் செய்தவை. அந்த நாட்கள் புல்லரிக்க வைத்த நாட்களாகும். நினைவிலகலாத அந்த நாட்களை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

ஓ! வீரமும் தியாகமும் துயரமும் துன்பமும் பின்னிப் பிணைந்த நாட்களாக அவை காட்சி தருகின்றன. சிங்கள அரக்கரின் கொடுமைகளுக்காளாகிக் கதறித் துடிக்கும் மக்களை ஒரு கரத்தால் அரவணைத்துக் கொண்டு மற்றொரு கரத்தால் ஆயுதம் தாங்கிப் போராடிச் சிங்கள அரக்கர்களை ஓட ஓட விரட்டும் வீரம் பொலிந்த உங்களின் திருமுகங்கள் என் கண் முன்னே தோன்றிப் புன்னகைக்கின்றன.

சிங்கள ஆக்ரமிப்பாளனின் பிடியிலிருந்து தமிழர்களின் தாயகத்தின் ஒவ்வொரு அடி மண்ணையும் மீட்டு நீங்கள் வெற்றிக்கொடி



நாட்டும்போது வழி நெடுகச்சாய்ந்த வீரப்புலிகளை நினைத்து நெஞ்சம் நெகிழ்கிறேன். உங்களது வெற்றிப் பாதையின் நெடுகிலும் வீழ்ந்து விட்ட அடலேறுகள்தாம் எத்தனை! அவர்கள் வீழ்ந்தாலும் உங்களது வெற்றிக் கொடி வானுற ஓங்கிப் பறக்கிறது. விடுதலையை நோக்கி உங்கள் நாடு தொடர்ந்து முன்னேறுகிறது.

மாபெரும் புரட்சி வீரனான **சேகுவரா** கியூபா தலைவர் **பிடல் காஸ்ட்ரோ**வுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட ஒரு வாசகம் என் நினைவுக்கு வருகிறது. "**ஓர் உண்மையான புரட்சியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் ஒன்று வெற்றியடைகிறார்கள் அல்லது வீர மரணமடைகிறார்கள்**". சேகுவேராவின் இந்த வீர வாசகங்களுக்குச் சரியான எடுத்துக்காட்டுகளாகத் திகழும் விடுதலைப்புலிகளே! உங்களை நினைக்கிறேன். நெஞ்சம் சிலிர்க்கிறேன்.

ஈழத் திருநாட்டினைச் சுடுகாடாக்கச் சிங்கள இராணுவம் இடைவிடாது முயற்சி செய்து கொண்டிருக்கிற வேளையில் அதனை எதிர்த்து உறுதியோடு நீங்கள் போராடும் போது உங்கள் அருகே நானும் உலாவ முடிந்ததை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

எரிந்தும்-கரிந்தும், இடிந்தும்—தகர்ந்தும் நாசமான ஊர்களும், நரவேட்டையாடும் சிங்கள ஓநாய்களும் வேதனை தாங்காமல் ஓலமிடும் மக்களும் இவற்றின் நடுவே இருள் சூழ்ந்து கிடக்கும் ஈழ நாட்டிற்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக நீங்களும் காட்சி தருகிறீர்கள். உங்களுடன் கழித்த அந்த நாட்கள் உண்மையிலேயே பிரகாசம் மிக்கவை. அந்தப் பிரகாசத்தில் பல உண்மைகளை நான் கண்டேன்.

பாசமும்-நேசமும் நிறைந்த உங்களை மிகக் குறுகிய காலத்திலேயே நான் முழுமையாகப் புரிந்துகொண்டேன்.

வீரக் கொடியோடு-தியாகக் கொடி மிளிர நீங்கள் நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டம் உங்களுடைய தாயகத்தை மட்டுமே மீட்டெடுக்கும் போராட்டம் என்று நான் நினைக்கவில்லை. உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களின் தன்மானத்தை மீட்டெடுக்க நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நேரில் கண்டேன்.

தமிழர் வரலாற்றில் உங்களது போராட்டத்திற் கிணையான ஒரு போராட்டம் இதுவரை நிகழ்ந்ததில்லை. பல நூற்றாண்டுகால இடைவேளைக்குப் பின்னர் முதன்முறையாகத் "**தமிழன் தனது உரிமை காக்க ஆயுதம் தாங்கிப் போராடுகிறான்**" என்பது உங்களது **போராட்டத்தின் மூலம்தான் வெளிப்பட்டுள்ளது.**

எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழனின் வீர உணர்வும் விடுதலை உணர்வும் இரண்டறக் கலந்து ஈழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மண்ணில்தான் பீறிட்டு எழுந்திருக்கின்றன. தமிழகத்தில்கூட இந்த உணர்வு இன்னமும் ஏற்படவில்லை. தாய்த் தமிழகத்தில் ஏற்பட்ட தடுமாற்றங்கள் சேய்த் தமிழகத்தில் ஒருபோதும் உருவாகவில்லை. இந்தத் தலைமுறையைச் சேர்ந்த ஈழநாட்டு வீர இளைஞர்கள் மாயைகளில் மயங்காமல் கொஞ்சமும் தடுமாறாமல் தங்கள் குறிக்கோளை நோக்கி முன்னேறினர்; இன்னமும் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளே! நீங்கள் நடத்தும் இந்தப் போராட்டம் மேலும் மேலும் முன்னேறிச் செல்லுமே தவிர ஒருபோதும் பின்வாங்காது என்பதை கோபுரத்தின் மீது நின்று நான் கூவுவேன்.

நான் உணர்ந்த இந்த உண்மையை உலகம் பூராவிலுமுள்ள தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லுவேன். உங்களுடைய வீரஞ் செறிந்த போராட்டத்திற்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு தமிழனையும் அடிபணிந்து வேண்டிக்கொள்வேன். உங்களது மகத்தான போராட்டத்திற்குப் பின்னே ஈழ நாட்டு மக்கள் எப்படி அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பதை உலகம் அறியச் செய்வேன். தங்குதடையின்றி உங்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெறவும் நீங்கள் உங்கள் இலட்சியத்தில் இறுதி வெற்றிபெறவும் ஈழத் திருநாடு உருவாகவும் என் பணி தொடரும்.

வீரப்புலிகளே ! இன்னும் உங்களிடம் எவ்வளவோ சொல்ல விரும்புகிறேன். ஆனால் கூச்சம் என்னைத் தடுக்கிறது. காரணம் நீங்கள் செயல் வீரர்கள். சொல்லடுக்குகளில் உங்களுக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லை என்பது எனக்குத் தெரியும். என் உள்ளத்தின் உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தும் சக்தி அந்தச் சொல்லடுக்குகளுக்குக் கிடையாது என்பதையும் நானறிவேன். ஆனாலும் ஒரு வார்த்தை; **இந்தத் தலைமுறையைச் சேர்ந்த உங்களது வீரத்தினாலும் தியாகத்தினாலும் தமிழனுக்கு விமோசனம் கிடைக்காவிட்டால் பிறகு ஒருபோதும் அது கிடைக்கவே கிடைக்காது. உங்களைப் போன்ற வீரமும் தியாகமும் மிக்க இன்னொரு தலைமுறை இனிப்பிறக்கப் போவதும் இல்லை. இது சத்தியம்.**

நான் எந்த அளவுக்கு உங்களைப் புரிந்து கொண்டிருக்கிறேனோ அதற்கு மேலாக நீங்களும் உங்கள் **தலைவர் தம்பி திரு. பிரபாகரன்** அவர்களும் என்னைப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். புரிந்துகொண்டுள்ள இதயங்களுக்கு நடுவே வெறும் பேச்சு அர்த்தமற்றது. தமிழ்ச் சமுதாயம் இதுவரை பெற்றெடுத்திராத தன்னிகரில்லா ஒரு வீரத் தளபதியைத் தம்பி பிரபாகரன் வடிவத்தில் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்



பொற்கோட்டு இமயத்தில் தமிழனின் வீரத்தை நிலைநிறுத்திய சேரன் செங்குட்டுவனின் படைத் தளபதியாக விளங்கியவன் **வில்லவன் கோதை.** உத்தரபாரதத்தின் ஏகச்சக்ரவர்த்தியாக விளங்கிய ஹர்ஷவர்த்தனரையே தோற்கடித்த பெருமைக்குரியவன் சாளுக்கிய மன்னன் புலிகேசி, அத்தகைய ஆற்றல்மிகு வீரனான புலிகேசியை முறியடித்த நரசிம்மப் பல்லவனின் படைக்குத் தளபதியாக விளங்கியவன் **பரஞ்சோதி.** அசோகச் சக்ரவர்த்தியினால் வெல்ல முடியாத கலிங்கத்தை வென்ற குலோத்துங்க சோழனின் படைத் தளபதியாக விளங்கியவன் **கருணாகரத் தொண்டமான்.** வரலாறு கூறும் உண்மை இது. தமிழரின் போர்த் திறமைக்கும் படை நடத்தும் பேராற்றலுக்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்கிய வீரத்தமிழ்த்தளபதிகளான **வில்லவன் கோதை, பரஞ்சோதி, கருணாகரத்தொண்டமான்** ஆகியோருக்குப் பின் நெடுங்காலமாகத் தமிழ்க்குலத்தில் ஒரு வீரத்தளபதி தோன்றவில்லை என்ற குறையைப் போக்கிய பெருமை **வீரத்தளபதி பிரபாகரன்** அவர்களையே சாரும்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மகத்தான ஒரு வீரத்தளபதியைத் தமிழினம் கண்டிருக்கிறது. தளபதி பிரபாகரன் தலைமையில் உங்களது விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றே தீரும் என்பதில் எனக்குக் கொஞ்சமும் ஐயமில்லை.

விடுதலைப் புலிகளே! வீரமிக்க தோழர்களே! வெற்றிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுங்கள்.

நீங்கள் **ஒவ்வோர்** அடி முன்னேறும் போதும் உலகில் உள்ள ஏழுகோடித் தமிழர்களும் தங்கள் இதய மலர்களைத் தூவி உங்களை வாழ்த்துகிறார்கள் என்பதை மறவாமல் தொடர்ந்து முன்னேறுங்கள்.

நீங்கள் எழுப்பும் வெற்றிச் சங்கநாதம் தமிழ்க் குலத்தின் புகழை இசைக்கும் கீதமாகும்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த தமிழ்க்குடியினரை எலிகள் என இகழ்ந்தவரை நடுநடுங்க வைத்திருக்கும் புலிகளே! உலகம் உங்களை உணரும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

ஏகாதிபத்தியங்களின் அடிமைத் தளையிலிருந்து தங்களை விடுவிக்கப் போராடிக் கொண்டிருக்கும் பாலஸ்தீனிய அராபியர்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

நமீபிய ஆப்பிரிக்கர், தென் அமெரிக்க நாடுகளின் மக்கள் ஆகியோரின் வீறுகொண்ட விடுதலைப் போராட்டங்களுக்குக் கொஞ்சமும் குறைந்த தல்ல உங்களது விடுதலைப் போராட்டம் என்ற உண்மையை மற்ற நாடுகள் விரைவில் உணரத்தான் போகின்றன.

வியட்நாமிய மக்களைப்போல, வங்க மக்களைப்போலத் தமிழீழ மக்களும் விடுதலைபெற்ற மக்களாக மாறப்போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

உங்களது அளப்பற்கரிய வீரத்தினாலும் எண்ணற்கரிய தியாகத்தினாலும் பெருமித உணர்வைப் பெற்றுள்ள உலகத் தமிழர்களின் சார்பில் உங்களை வாழ்த்துகிறேன்.

முன்னேறுக! முன்னேறுக! தொடர்ந்து முன்னேறுக!
வெற்றிபெறுக! வெற்றிபெறுக! பரிபூரண வெற்றிபெறுக!







## பிற்சேர்க்கை - 1

(கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் முரசொலி
4—11—85 இதழில் தீட்டிய கடிதம்)

# நெடுமாறன் மேற்கொண்ட நெஞ்சைக் குலுக்கிய பயணம்

உடன் பிறப்பே,

அக்டோபர்த்திங்கள் 13-ஆம் தேதியன்று வேலூரில் நடைபெற்ற தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு (டெசோ) நடத்திய பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் நண்பர் நெடுமாறன் அவர்கள் கலந்துகொள்ள இயலவில்லையென்று கூறி, அவருக்குப் பதிலாக காமராஜ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நண்பர் கிள்ளிவளவன் அவர்கள் கலந்துகொண்டார்கள். தி. மு. க., தி. க., காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளின் சார்பில் கோவை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற "டெசோ" பேரணிகளில் கலந்துகொண்ட அவர், வேலூர்ப் பேரணியில் கலந்துகொள்ள இயலாமற்போன காரணத்தை நான் ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது என்றாலும்கூட எனது ஐயத்தை உறுதிப்படுத்தும்வண்ணம் அக்டோபர் 13-க்குப் பிறகு 10-10-85 என்று தேதியிட்டு எழுதப்பட்ட அவரது கடிதம் எனக்கு வந்துசேர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதில் உள்ள வாசகங்கள் வருமாறு :—

"அன்புள்ள தலைவர் கலைஞர் அவர்கட்கு,

வணக்கம். உங்கள் கரங்களில் இக்கடிதம் தவழும்போது நான் தமிழ் ஈழ மண்ணில் இருப்பேன். தமிழீழ மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தை நேரில் காணவும் அவர்களின் துயரங்களைப் பகிர்ந்துகொள்ளவும் அவர்களுக்கு உறுதுணையாகத் தமிழகம் நிற்கிறது என்ற உறுதியைக் கூறி ஆறுதல் அளிக்கவுமே செல்கிறேன். நமது 'டெசோ' இயக்கம் தமிழ்நாட்டில் தமிழ் ஈழத்துக்கு ஆதரவாக ஏற்படுத்தியுள்ள மகத்தான எழுச்சியினை அவர்களுக்கு விளக்கிக் கூறுவேன். நலமுடன் திரும்புவேன் என நம்புகிறேன். ஒரு வேளை எனக்கு ஏதேனும் நேர்ந்துவிடுமானால் அதற்காகக் கலங்க வேண்டாம். தமிழீழ மக்கள் விடுதலை பெறுவதற்காகத் தமிழ்நாட்டு மக்களும் உயிர்த் தியாகம் புரியத் தயாராகிவிட்டார்கள் என்பதை உலகம் உணர அது வழி வகுக்கும். 'டெசோ' இயக்கத்தை மேலும் வளருங்கள். ஏனெனில் "தமிழீழம்" காணப் போராடும் விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்கும் நமது 'டெசோ' இயக்கத்தைத் தவிர உற்ற துணைவன் உண்மையான துணைவன் வேறு யாருமில்லை. பேராசிரியர் அவர்களுக்கும் மற்றுமுள்ள தோழர்களுக்கும் எனது வணக்கம்.

அன்புள்ள,

**நெடுமாறன்.**

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் என் நெஞ்சம் கனத்துப் போய்விட்டது. ஏன் ? கடிதம் முழுவதையும் ஒரேயடியாகப் படிக்க முடியாமல் கண்களில் நீர்த்திரைகள் விழுந்து தடுத்தன. அன்றிரவு முழுவதும் எனக்கு உறக்கமேயில்லை, அதன் காரணமாக இரண்டு நாட்கள் உடல்நிலையும் பாதிக்கப்பட்டது.

அவர் திரும்பித் தமிழ்நாடு வந்து சேர்ந்துவிட்டார் எனக் கேள்விப்படும் வரையில்...இன்னும் சொல்லப்போனால் நவம்பர் முதல் நாளிரவு அவர் என்னை வந்து சந்திக்கிற வரையில் என்னுள்ளத்தில் அமைதியே இல்லை.

எந்தப் பிரச்னை பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும் அல்லது சிந்தித்துக் கொண்டிருந்தாலும் அவரது நினைவே நிழலாடிக் கொண்டிருந்தது என் நெஞ்சில்.

அதன் விளைவுதான் உடன்பிறப்பே ; இந்த வாரம் **(8.11.85)** தேதியிட்ட குங்குமம் இதழில்கூட "சங்கத்தமிழ்" தொடரோவியம் தீட்டிட, நான் "நெடுநெல் வாடை"யெனும் சங்க இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்தது :



மதுரை நக்கீரனார் எழுதிய 'நெடுநல் வாடை தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியன்; போர்க்களத்தில் காயம்பட்ட வீரர்களைப் பாசறையில் கண்டு ஆறுதல் வழங்கிடும் காட்சியினை எடுத்துக்காட்டி, "அகம், புறம்" எனத் தமிழர்கள் வகுத்துக்கொண்ட வாழ்க்கை நெறியின் மாட்சியை விளக்குகின்ற பெருமைமிக்க இலக்கியமன்றோ?

அந்த மதுரைப் புலவன் நக்கீரன்; நெடுஞ்செழியப் பாண்டியனுக்காக மட்டும் பாடவில்லை-- இதோ இந்த மாவீரன் நெடுமாறனுக்காகவும் பாடியுள்ளான் போலும் என்ற உணர்வுடன்தான் இந்த இதழ்க்குங்குமத்திற்காகக் கடந்த வாரம் நெடுநல் வாடையை அடிப்படையாக வைத்து 'சங்கத் தமிழ்' எழுதித் தந்தேன்.

"வலியதோர் வாள்வீரன் தோளில்--தன்
வலக்கையினைத் தோழமையுடன் போட்டுக் கொண்டு
மழைத்துளிகள் வீழ்கின்ற நள்ளிரவில்
மாவீரர் பலர் காயமுற்றுப் படுத்திருக்கும்
பகுதியெலாம் சென்று பார்த்தான் — அவரைப்
பரிவுடனே நலம்கேட்டு நன்றி கூறி அரவணைத்தான்
பகல்போதில் பகைவர்களின் படையழித்து விரட்டும்போது
பழுதுபட்ட கால், கை, உடல்களுடன் படுகின்ற
துயரமெல்லாம்
பறந்தனவாம் தம்தலைவன், பனிப்பார்வை பட்டதாலோ ;
காதலனைத் தேடிப் பேரரசி கலங்குகின்றாள் ; அவனோ
கடமையினை ஆற்றுதற்குக் கால்கடுக்கச் சுற்றுகின்றான்
பாசறையை !"

இந்த இதழ்க்குங்குமத்தில் நான் தீட்டியுள்ள 'சங்கத்தமிழ்'ப்பகுதியில் சில வரிகள் இவை !

என்னைச் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக உரையாடிய நண்பர் நெடுமாறன் அவர்கள் இருபத்து மூன்று நாட்கள் இலங்கைச் சுற்றுப்பயணம் பற்றி விரிவாக விளக்கிய போது பாசறைப் படை வீரர்களை அன்றொரு நாள் பாண்டிய மன்னர் பார்வையிட்ட நிகழ்ச்சி குறித்த 'நெடுநல்வாடை' தான் என் நினைவைத் தழுவிக் கொண்டது !

அந்தப் பயணம் குறித்த வீடியோப்படக்காட்சியினைச் செய்தியாளர்கள் மட்டுமல்ல; நானும் தம்பி முரசொலி மாறனும் நண்பர் ஆற்காடு வீராசாமியும் கண்டபோது எத்தனை முறை கண்ணீர் வடித்தோம் என்பதை எண்ணிச் சொல்ல முடியாது! ஆம் ; நீர்வீழ்ச்சிக் கண்களுடனே அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தோம்; வீடியோவில் :



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெஞ்சுறுதியுடனும், நிலை மாறாத் தமிழ் உணர்வுடனும் நெடுமாறன் மேற் கொண்ட இந்தப் பயணம், அவரை ''மாவீரன்'' என்ற பட்டத்திற்கு முற்றிலும் தகுதியுடையவராகவே ஆக்கிவிட்டது!

மாற்று முகாமிலே—அல்லது எதிர் முகாமிலே இருக்கின்ற உடன் பிறப்புகள் கூட உண்மையான தமிழ் உணர்வுடன் செயல் படும்போது அந்த இன உணர்வுக்கு வெளிப்படையாகப் பாராட்டு வழங்குவது ஒரு வேளை அவர்களுக்கு ஏதாவது தீங்கினை ஏற்படுத்துமோ என்ற காரணத்தால் இதயச் சுவர்களுக்குள்ளேயே வாழ்த்துக்களை எழுதிக்களிக்கிற நான், நம்மிலே ஒருவராக ஆகிவிட்டவரும்—நமது ''டெசோ'' இயக்கத்தின் காவலர்களில் ஒருவராக இருப்பவருமான எனது நண்பர் நெடுமாறனைப் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் ஒரு சிறிதும் தயக்கமில்லாத உணர்வைத்தான் இக் கடித வாயிலாக வெளிப்படுத்தியுள்ளேன்.

இலங்கையில் இடிந்து பாழடைந்து கிடக்கின்ற தமிழர்தம் இல்லங்கள் — அகதிகளாக அலை மோதும் தமிழ்த் தாய்கள், குழந்தைகள் — போர்க்களமாகவே எப்போதும் காட்சி தந்து கொண்டிருக்கும் தமிழர் வாழ் பகுதிகள் — வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள் என முழக்கி, கிளம்பிற்றுக்காண் தமிழ்ச்சிங்கக் கூட்டம், கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை என்ற புரட்சிக் கவிஞரின் உணர்ச்சி வரிகளுக்கு உருவம் கொடுத்துக்கொண்டு படைக்கலன்களுடன் விடுதலை முழக்கமிடும் போராளிகளின் பாசறைகள் — இவற்றையெல்லாம் மாவீரன் நெடுமாறனின் விழிகள் வழியாக நானும் பார்த்தேன்!

''எங்களுக்குத்தமிழ் ஈழம் தவிர வேறு எதுவும் தேவையில்லை'' என்று இளஞ்சிறார், சிறுமியர் முதல் எழுபது எண்பதை நெருங்கிய முதியோர் வரையில் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னதை நெடுமாறனின் செவிகள் வாயிலாக நானும் செவிமடுத்தேன்!

இந்திராகாந்தி காட்டிய அக்கறைகூட இன்றையப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கைத் தமிழர் பிரச்னையில் காட்டவில்லை என்பதை இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் ஒரே குரலில் ஒலிப்பதை நெடுமாறன் மேற்கொண்ட சுற்றுப் பயணம் எடுத்துக் காட்டுகிறது!

''எங்களுக்குத் தனிநாடு கிடைக்க எங்கள் போராளிகளை ஊக்கப்படுத்துங்கள்! அவர்களை நிர்ப்பந்தித்துப் பிரச்னையைத் தீர்க்க முயலாதீர்கள்! தனித்தமிழ் நாடே எங்கள் இலட்சியம்! உங்களால்



முடியாவிட்டால் எங்கள் தலையில் குண்டுகளைப் போட்டு இலங்கைத் தமிழ் இனத்தையே அழித்து விடுங்கள்!''

இந்தச் செய்தியை இந்தியாவுக்குச் சொல்லுங்கள் என்று இலங்கைத் தமிழினத் தாய்மார்கள் நெடுமாறன் அவர்களிடம் அழுது புலம்பியவாறு சொல்லுகிற காட்சியை, இருதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டுதான் பார்க்க முடிந்தது!

**''போர் நிறுத்தம்'' என்பதை இலங்கை அரசு தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு நூற்றுக்கணக்கான புதிய இராணுவத்தளங்களை அமைத்து வருகிறது; தமிழ் இனத்தை அடியோடு அழிக்க.**

தெரிந்தோ, தெரியாமலோ இலங்கை அரசின் இந்தச் சதிக்கு இந்திய அரசு துணைபோய்க் கொண்டிருக்கிறது.

மாவீரன் நெடுமாறன் அவர்கள் மேற்கொண்ட இந்த நெஞ்சை நெகிழவைக்கும் சுற்றுப்பயணம், நாம் இதுவரையில் 'டெசோ' இயக்கத்தின் சார்பில் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் சரியானவைதாம் என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்துகிறது என்பதுதான் உண்மை.

இந்த உண்மை கண்டு; இந்திய அரசு - இலங்கையில் ''தமிழ் ஈழம்'' அமைத்திட தக்க வழி காண முன்வர வேண்டுமேயல்லாமல் — ''எப்படி இலங்கைக்குப் போனார் நெடுமாறன்?'' என்ற ஆராய்ச்சியில் நேரத்தை வீணாக்கக் கூடாது.

இந்த வேண்டுகோளை இந்திய அரசுக்கு விடுத்துத்தீரமிக்க இந்தப் பயணத்தை மேற்கொண்ட மாவீரன் நெடுமாறன் அவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் — அவரும் இணைந்துள்ள 'டெசோ' இயக்கத்தின் சார்பிலும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிற்சேர்க்கை - 2

உண்மை 15--11—85 இதழில் தமிழர் தளபதி திரு. கி. வீரமணி அவர்கள் எழுதிய கடிதம்

# நெருப்பில் நீந்தினார் நெடுமாறன்

''அருமைச் சகோதரர் வீரமணி அவர்கட்கு,

வணக்கம். இக்கடிதம் உங்கள் கரத்தில் கிடைக்கும்போது நான் தமிழீழ மண்ணில் இருப்பேன்.

தமிழீழ மக்களின் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தை நேரில் காணவும் அவர்களின் துயரங்களைப் பகிர்ந்துகொள்ளவும் ஆறுதல் கூறவும் செல்லுகிறேன்.

நலமாகத் திரும்புவேன் என நம்புகிறேன். வேறு ஏதேனும் எனக்கு நேர்ந்துவிடுமானால் அதற்காகக் கலங்காதீர்கள். யாசித்தும் பெறமுடியாத களச் சாவை உங்களின் உடன்பிறவாச் சகோதரன் பெற்றால் அதற்காக மகிழ்ச்சி அடையுங்கள்.

தமிழீழப் போராளிகளுக்கும் மக்களுக்கும் உற்ற துணைவனான நமது ''டெசோ'' இயக்கத்தை மேலும் வளருங்கள். அந்தக் கடமையை நீங்களும் கலைஞர் அவர்களும் மற்றவர்களும் கட்டாயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.

அன்புள்ள,

**நெடுமாறன்.**



மேலே காட்டிய கடிதம் திடீரென ஒரு நண்பர் மூலம் நான் வெளியூர்ச் சுற்றுப்பயணத்திற்குப் புறப்படுகையில் 18-10-85 அன்று இரவு எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தில் நான் ரயிலில் ஏறும்போது கிடைத்தது.

அதைப் படித்தபோது என் நெஞ்சு கனத்தது. கண்கள் கலங்கிய நிலையில், மாவீரன், எனது சகோதரனுக்கு ஒன்று ஆகிவிட்டால், அவர் வரலாற்றில் இடம்பெறுவார். ஆனால், தமிழ்நாட்டில் இன மான உணர்வுடன் தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளுக்குத் தன்னை ஒப்படைத்துக்கொள்ளத் துடிக்கும் தமிழின மான மறவர் ஒருவர் இல்லாவிட்டால்...... என்ற சிந்தனையுடன் கவலை தோய்ந்த நெஞ்சுடன் பயணம் செய்தேன்.

இதை முற்றிலும் பரம ரகசியமாகவே வைத்தேன். நெஞ்சுக்குள்ளே என்னையும் அறியாத ஓர் அழுத்தம்! என்ன செய்வது! என்று வருவார் என்ற பதைப்புடன் கவலை தோய்ந்த நாட்கள் ஓடின.

**பேட்டியைக் கண்டேன் :**

அவரது 'பேட்டி' என்ற செய்தியைத் திருச்சிச் சிறையில் படித்த பிறகே நிம்மதிப் பெருமூச்சினை விடமுடிந்தது.

இடையில் ஓர் நாள் கலைஞர் அவர்களைச் சந்தித்தபோது எங்கள் கவலையை பரிமாறிக்கொண்டோம்—நாங்கள் இருவரும்.

23 நாள்கள்—1500 மைல்கள் கடலில், காட்டில், அவர் செய்தது வெறும் பயணமா? அல்ல. அல்ல. துணிச்சலின் இமாலயச் சாதனை.

நெருப்பாற்றில் நீந்திக் கரை சேர்ந்த நெடுமாறானாகவே புடம் போட்டு தியாகத்தில் மிளிருகின்றார்.

***மெய் சிலிர்த்தோம்!***

விடுதலைப் புலிகள் புடை சூழ, அவர்களது பாதுகாப்புப் படையுடன் அவர் சென்று முகாம்களையும் மன்னார் முதல் வல்வெட்டித்துறை வரை முக்கியப்பகுதிகளிலும் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர் அளவளாவிடும் காட்சி கண்டு (வீடியோ மூலம்) மெய் சிலிர்த்துப் போனோம்!

ஈழத்துச் சகோதரிகளும் இளம் விதவைகளும் தமிழ் ஈழம்தான் தங்களது தாகம் என்பதைக் குறிப்பிடுகையில் கல்லும் கரையும். ஆனால் நமது மத்திய அரசோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓர் முதியவர் விவசாயி. அவரிடம் சில கேள்விகள் கேட்கிறார் அவர் 'பனிச்' 'பனிச்சென' பதில் கூறுகிறார்!

**''எங்கள் கவலை''**

இப்படி நாங்கள் அவதியுறும்போது இந்தியப் பிரதமர் உதவிட வேண்டாமா? எங்களுக்கு வேறுயார் உதவிடுவர்? பேச்சுவார்த்தையால் என்ன பயன்? உதவி செய்யாவிட்டாலும் பிள்ளைகளுக்கு ''பொடியன்களுக்கு'' புலிகட்கு உபத்திரவம் செய்யாமலாவது இருக்க மாட்டார்களா என்பதே எங்கள் கவலை என்கிறார்!

ஓர் குடிசை வீட்டு முன்பு இப்பேட்டி! அவரது துணைவியார் அன்பொழுக இவரைச் சாப்பிட அழைக்கிறார். திரு. நெடுமாறன் நன்றி கூறிவிட்டு, ''மறுமுறை வரும்போது சாப்பிடுகிறேன் எனக்கு வேறு ஒரு வீட்டில் உணவு தயாராகியிருக்கிறது அம்மா'' என்கிறார்! உடனே அந்த அம்மையார்,

''மறுமுறை நீங்கள் வரும்போது நாங்கள் எங்கே அய்யா உயிரோடு இருக்கப்போகிறோம். எனவே இப்போது ஒருவேளை எங்களுடன் சாப்பிடுங்கள்'' என்கிறார் கண்ணீர் பொங்க, கண்கள் குளமாகிய நிலையில் உடனே அங்கேயே சாப்பிட அமர்ந்துவிடுகிறார் நெடுமாறன்!

**சுருதி பேதம் இல்லை!**

எப்படிப்பட்ட நிலை! கோயில் அர்ச்சகர்கள் முதல் கிறிஸ்துவப் பாதிரிகள், முஸ்லீம்கள் எல்லாம் சுருதி பேதம் இன்றி ஓர் கருத்தையே கூறுகின்றனர். தமிழ் ஈழம் தான் ஒரே பரிகாரம். இனிமேல் சிங்களவர்களுடன் ஒத்துவாழவே முடியாது என்பதுதான் கண்கூடான நிலை என்கின்றார்!

**300 கல் கடல் பயணம்!**

முல்லைத் தீவிலிருந்து திரிகோணமலைக்கு 300 மைல் கடல் வழியாகப் பயணம் செய்துள்ளார்!

திரிகோணமலையிலிருந்து மக்களை இராணுவம் மிகவேகமாக வெளியேற்றிக்கொண்டு இருக்கிறார்களாம்! ராணுவ குவியல் எங்கும்!!

கூனித்தீவு என்ற இடத்தில் ஒரு ஹெலிகாப்டரை ''303 துப்பாக்கி'' மூலம் ஒரு விடுதலைப்புலி சுட்டு வீழ்த்தினாராம்! அதன் சில பாகங்களை எடுத்து வந்திருக்கிறார் மாவீரன் நெடுமாறன்.



சந்திரனில் இறங்கியவர் சந்திரக்கல் கொண்டு வந்து நமக்குக் காட்டினர்!

மாவீரன் நெடுமாறனோ நமது வீரவேங்கைகளாம் விடுதலைப் புலிகளின் வீரத்தின் சான்றினை விளக்கிடச் சுடப்பட்டு வீழ்த்தப்பட்ட சிங்கள இராணுவ ஹெலிகாப்டரின் பாகத்தைக் காட்டுகிறார் நமக்கு!

நெருப்பாற்றில் நீந்தாமல் இது எப்படிச் சாத்தியமாகும்!

அவரது பயணம் ஒரு புதுமை நீச்சல்! எதிர் நீச்சல்! நெருப்பாற்று நீச்சல்!

அவர் வாழ்க!

அவர் பணி வெல்க!!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழப் பயணத்தின் போது
கண்ணை இமை காப்பதுபோல
என்னைக் காத்த வீரர்கள்

| | |
|---|---|
| யாழ்த்தளபதி கிட்டு | * கேப்டன் லிங்கம் |
| வவுனியாத்தளபதி மாத்தையா | பொட்டு |
| * மன்னார்த்தளபதிவிக்டர் | * கிறிஸ்டி |
| * முல்லைத்தீவுத்தளபதி லாரன்சு | * லலித் |
| * நெடுங்கேணித்தளபதி சபா | * ஜீவன் |
| * மூதூர்த்தளபதி கணேஷ் | * அர்ச்சனா |
| சூசை | சாந்தமணி |
| காசி | ஜஸ்டின் |
| வாசன் | இரவீந்திரன் |
| ஜெயம் | இன்ஜினியர் |
| சந்திரன் | மாறன் |
| தர்மா | நரேஷ் |
| பரண் | மகேஷ் |
| குட்டி | |

* இந்தக் குறி இடப்பட்டவர்கள் இன்று இல்லை. வீரமரணமடைந்து விட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்